



மனித தெய்வம்

தவத்திரு. பிரம்மச்சாரி ராமசுவாமி அடிகளார்

வாழ்க்கை வரலாறு



தொகுப்பாசிரியர்

V. வெங்கடரமணன்



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
கொடியேற்றுதல் - உடன் சுவாமிகள்



ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் பழைய தோற்றம்

ஓம் ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

மனித தெய்வம் தவத்திரு
பிரம்மச்சாரி இராமசாமி
அடிகளாரின்
வாழ்க்கை வரலாறு

தொகுப்பாசிரியர்:

வி. வெங்கடரமணன்

ஸ்ரீராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை,
திருச்சி.

முதற் பதிப்பு : அக்டோபர் 2002

சமர்ப்பணம்

தவத்திரு பிரம்மச்சாரி ராமசுவாமி அவர்களை
தடுத்தாட் கொண்ட
பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின்
பொற்பாதங்களுக்கு.

பதிப்புரிமை : "திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடில் ஸ்தாபகர் தவத்திரு பிரம்மச்சாரி இராமசாமி நினைவு தர்ம காரிய அறக்கட்டளை"
கெம்பநாயக்கன்பாளையம்,
சத்தியமங்கலம் வட்டம்
ஈரோடு மாவட்டம்

விலை : ரூ 100/=

அச்சிட்டோர்: ராஜேந்திரா ஆர்ட் பிரிண்டர்ஸ்
கன்னார்பாளையம் சாலை
காரமடை – 641 104
தொலை பேசி : 04254 – 272301

10.09.2002

முன்னுரை

குடில் ஏற்பட்டு 53 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர் பேரருளால் குடில் சுவாமிஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும் என்ற எண்ணம் 04.03.1999 குடில் சுவாமிஜியின் நினைவு நாள் அன்று மனதில் ஆஸ்ரமத்திற்கு உதயமானது. இக்கருத்தை கூட்டத்தில் கூறினோம். சிறிது நேரம் கழித்து நாம் ஆஸ்ரமத்தில் அமைதி இல்லத்தில் அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். முன்னாள் மாணவர் ஆசிரியர் காந்தி அவர்கள், ஆரம்பப்பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் இரமணன் அவர்கள், ஆகியோர் அமைதி இல்லத்திற்கு வந்தார்கள். நாங்கள் இருவரும் ஆஸ்ரமத்தில் அமர்ந்து குடில் சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது பற்றி பேசினோம். இரமணன் அவர்கள் சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதுகிறேன் என்று கூறியதாக காந்தி அவர்கள் எம்மிடம் கூறினார்கள்.

குடில் சுவாமி சமாதியடைந்த அறையில் இரமணன் அவர்கள் ஒரு டைரி, சுவாமி பயன்படுத்திய பேனா இவற்றை குடில் சுவாமியின் திருவடியில் (பாதத்தில்) அர்ப்பணம் செய்து சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்கினார்.

இவ்வரலாற்றில் குடில் சுவாமியின் பிறப்பு, சுவாமியின் ஊர், அவர்கள் குடிலுக்கு வருமுன் எங்கு என்ன செய்து கொண்டிருந்தார்? அதற்கு பின் தபோவனம் வந்து, அதன்பின் 1949 ல் குடிலுக்கு வந்து ஐந்தாண்டுகள் தவவாழ்க்கை வாழ்ந்து 1.6.1954 இல் தாய் தந்தையற்ற ஐந்து அனாதைக் குழந்தைகளைக் கொண்டு ஆஸ்ரமத்தை ஆரம்பித்தார்கள். குடில் வளர்ச்சிக்காக நங்கவரம் பண்ணையார் திரு. ரெங்கநாத ஐயர், ஜஸ்டிஸ் மகாராஜன் அவர்கள், மக்கள் கலெக்டர் திரு. ஆர். எஸ். மலையப்பன் அவர்கள், திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமி அவர்கள், ஆகிய நால்வரும் குடில் வளர்ச்சிக்கு நான்கு தூண்களாக இருந்து சுவாமியோடு சேவையாற்றினர்.

1975 வெள்ளிவிழாவுடன் குடில் தன்னிறைவு பெற்றது. சுவாமியின் வாழ்க்கை வரலாறு நூலை ஆஸ்ரமமே வெளியிட வேண்டும் என்று தீர்மானித்தோம். ஆனால் ஆடிட்டர் அவர்கள் பொதுப்பணத்திலிருந்து நூல் வெளியிட இயலாது என்றும் சுவாமிக்காக வசூல் செய்துதான் வாழ்க்கை வரலாறு நூலை வெளியிட வேண்டும் என்று ஆடிட்டர் அவர்கள் கூறினார்கள். அதனால் சுவாமி அவர்கள் அவதரித்த கே.என்.பாளையத்தில் ஆரம்பித்த "திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ணகுடில் ஸ்தாபகர் தவத்திரு பிரம்மச்சாரி இராமசாமி நினைவு தர்ம காரிய அறக்கட்டளை" சுவாமியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுகிறது.

இந்நூலில் குடில் சுவாமியின் அன்பர் சிக்காரம்பாளையம் திரு. சி. என். இராமசுவாமி அவர்கள் சுவாமியைப்பற்றியும் குடிலைப்பற்றியும் 60 ஆண்டுகளாக நன்கு அறிந்திருப்பவர். அவர் இந்நூலை குறைந்த செலவில் வெளியிட பொறுப்பேற்றார். இந்நூல் உருப்பெறக் காரணமாய் இருந்த முன்னோர் திரு. சி. யு. நஞ்சப்ப சுவாமிகள் அவர்களை நான் நினைவு கூறக் காரணம் ஒன்று உண்டு. பெரியவர் அவர்கள் சுவாமிஜியை சித்பவானந்த சுவாமியிடம் அனுப்பாது இருந்திருந்தால் இன்று இக்குடில் எனும் அழகிய கல்வி நிலையம் உருவாகி இருக்குமா? பெரியவர் அவர்களை சுவாமிஜி எப்போதும் மதித்துப் போற்றுபவர். தமக்கும் பெரியவருக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பினை குடில் வெள்ளிவிழா மலரிலே, “ எமக்கும் திரு. நஞ்சப்ப சுவாமிகளுக்கும் உள்ள தொடர்பு ஸ்ரீசைதன்யத் தொடர்பாகும்.” எனக் குறிப்பிட்டுள்ளார்கள். வாழையடி வாழையாகத் தொடர்கிறது தொடர்பு.

அவர்தம் அருந்தவப்புதல்வர் திரு. சி. என். ஆர் அவர்களும், அன்னாரின் மைந்தர் திரு. சி. என். ஆர். இராசேந்திரன் அவர்களும் குடிலுக்கு ஆற்றும் சேவை பாராட்டுக்குரியது. திரு. சி. என். ஆர். அவர்கள் அணிந்துரை நல்கியதற்கும், இராசேந்திரா பதிப்பகத்தார் சிறப்பாக அச்சிட்டு பதிப்பித்து உரிய காலத்தில்
“நூல்” வெளி வர செய்தமைக்கும் குடில் சார்பாகப் பெரிதும் போற்றுகின்றேன். குரு மகாராஜின் அருளும் ஆசியும் உண்டாகுக.

சுவாமியின் பிறந்தநாளன்று 18.10.2002 பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அருளாலும் குடில் சுவாமிஜியின் ஆசியினாலும் இந்நூல் வெளியிடப்படுவது பொருத்தமானதாகும்.

குடில் அன்பர்களின் கட்டுரைகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன.
அனைவரும் படித்து திருவருள்பயன் பெறுவீர்களாக!

“ ஏட்டுப் படிப்பை மட்டும் கற்றோமே
ஏழைக்கு இரங்கும் அன்பைப் பெற்றோமா?
நாட்டில் நலிந்தவர்க்காய் அழுதுருகும்
இராம கிருஷ்ணர் தம் கருணை தொழுதிடுவோம்”

திருவருள் துணை
அன்புள்ள
பிரம்மசாரி துரை

ஸ்ரீராமகிருஷ்ண குடில்
திருப்பராய்த்துறை அஞ்சல்
திருச்சி – 639 115

அணிந்துரை

குருவே துணை

"பாரத நாடு பழம்பெருநாடு" – புண்ணிய பூமி. புத்தர், பரமஹம்சர், பக்த ராமதாஸர், அண்ணல் காந்தி போன்ற மகான்கள் அவதரித்த சிறப்பு மிக்க நாடு பாரதம். நலிந்தோர்க்காக அழுதுருகிய மகான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் அடிபோற்றி வாழ்ந்த மகான் தவத்திரு பிரம்மச்சாரி இராமசாமி அடிகள்.

குருவடிவாகி குவலயந்தன்னில் திருவடி வைத்த மகான் பிரம்மசாரி இராமசாமி அடிகள் ஆவார். மக்கட் சமுதாயம் நலம் பெறவும், வளம் பெறவும் இறைவனே குருவாக எழுந்தருளும் புனிதபூமி நம் பாரத பூமி. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களை இதயத்தில் ஏந்தி, சுவாமி விவேகானந்தரின் பாதையில் வீறுநடை பயின்று அண்ணல் காந்தியடிகளின் நிர்மாணக் கொள்கைப் பிடிப்போடு குருவாகத் திகழ்ந்தவர் பிரம்மச்சாரி இராமசாமி அடிகள் ஆவார்.

" ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுளர், அவர்களுக்குக் கஞ்சி இல்லை, கந்தையில்லை, கடைத்தேற வழியுமில்லை. அவர்களுக்கு உதவி செய்ய எவர்தான் முன் வருவார்களோ? அவர்களைத் தான் புனித ஆத்மாக்கள் என்பேன். ஏனையோரை துராத்மாக்கள் என்பேன்." என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கினைப் பொன்னே போல் போற்றியவர். தன் வாழ்வின் இலக்கு ஏழை, எளிய மக்களாகிய தரித்திர நாராயணர்களின் மேன்மைக்கு சேவை செய்வதே எனக் கொண்டு வாழ்ந்தவர் அடிகள்.

" வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்பது திருவள்ளுவரின் வாக்கு. அவ்வாக்கிற்கேற்ப, ஏழை மக்களின் சேவையே தூய சேவை எனத் தேர்ந்து, ஓர்ந்து 50 ஆண்டுகள் சேவைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தவர் தியாகச் செம்மல் அடிகள். அவர் பிறந்த நாளில், அன்னாரின் பூர்வாசிரமம், சேவை பற்றியும், இலங்கை, மலேயா பயணக்கட்டுரைகளையும், பற்பல பெரியோர்களின் புகழாரங்களையும் ஒருங்கே தொகுத்து " மனித தெய்வம் தவத்திரு பிரம்மச்சாரி இராமசாமி அடிகளாரின் வாழ்க்கை வரலாறு" எனும் நூலினை வெளியிடுவது பொருத்தமான, போற்றுதற்குரிய, அரிய செயலாகும். இந்நூலினைக் கண்டு எல்லை இல்லாத ஆனந்தம் அடைந்தேன்.

இந்நூலினை ஸ்ரீராமகிருட்டிண குடிலின் முன்னாள் ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர் திரு. வெ. வெங்கடரமணன் அவர்கள் தொகுத்து வழங்கி உள்ளார். இதைப் படிக்க படிக்க இதிகாசங்களைப் படிப்பது போன்று மனம் களிபேறுவகை எய்தியது.

அன்னாரின் தொகுப்பு நூல் உதயம், இலட்சியம், விசுவரூபம், சுவாமிகளின் ஒலிநாடா பேச்சு, பத்திரிக்கைச் செய்திகள், அரசியல்

பிரமுகர்களின் கண்ணோட்டத்தில் குடில், விழாக்கள், வெளிநாட்டுப் பயணங்கள், அமரத்துவம் எனும் ஏழு பெரும் பிரிவுகளில், பல சிறு உட்பிரிவுகளும் தலைப்பிற்கு ஏற்ப செய்திகளைத் தாங்கி ஒரு காவிய கட்டுக்கோப்பைப் போல் நின்று நூலிற்கு அழகினைத் தருகின்றது.

தொகுப்பாசிரியர் அவர்கள் சுவாமிஜியின்பால் பேரன்பு கொண்டவர். சுவாமிஜியின் கருத்துக்களை அவரது மொழியிலேயே ஆங்காங்கு இணைத்திருப்பது அழகுக்கு அழகு சேர்க்கிறது.

நூல் எளிய இனிய தமிழ் நடையில், தெள்ளிய நீரோடை போல் தெளிந்த கருத்துக்கள், சொல்லழகும்,கருத்தாழமும், செய்தித் தொகுப்பும் படிப்போரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

உபநிடதங்கள், பகவத்கீதை, கடோ உபநிஷத், திருமூலரின் திருமந்திரம், பாரதியாரின் கருத்துக்கள், ஔவையாரின் முதுமொழிகள், நேருஜியின் கடிதச் செய்திகள், பல மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், நீதி அரசர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், வங்கி மேலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோரின் கருத்துக்களை ஆங்காங்கே நூலில் தொகுத்துத் தந்திருப்பது தொகுப்பாசிரியரின் படைப்பாற்றலை பிரதிபலிக்கிறது.

இறுதியில் எட்டாம் தொகுதியில் பல சான்றோர்கள், ஆன்றோர்கள், அலுவலர்கள், நீதி அரசர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், மாநில ஐ.ஜிக்கள் போன்றோர் தம் புகழாரக் கட்டுரைகளும் இத்தொகுப்பு நூலிற்கு அழகு சேர்க்கின்றன.

இங்கு நான் படித்த ஒன்றைச் சொல்ல வேண்டும். இராமசாமி அடிகளின் பண்பு நலத்தை தெளிவாக விளக்கும் அவரது பயணக்கட்டுரை. ஒரு சமயம் குடிலின் வளர்ச்சி நிதிக்காக இலங்கை, மலேயா சென்றிருந்தார். மலை உச்சியில் ஏறி நின்று வடதிசை நோக்கி தன் பார்வையைச் செலுத்துகின்றார். அப்போது அவரது மனத்திரையில் குடில் குழந்தைகள் விளையாடும் காட்சி தெரிகிறது, “ அப்பா! குழந்தைகளே! காவிரிக்கரையில் நீங்கள் எல்லாம் ஆனந்தமாக விளையாடிக் களிப்பது என் கண்முன்னே காட்சியளிக்கிறது” என்று எழுதுகிறார். இதன் மூலம் அடிகளின் உடல் இலங்கையில் இருந்தாலும், உயிரும், உள்ளமும் குடிலில் குடிகொண்டு இருந்தது தெளிவாகத் தெரிகிறது. இது ஒன்றே போதும் அன்னாரின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதை அறிய.

தொகுப்பாசிரியர் அவர்கள் முனைவர் பட்டத்திற்கு ஆய்வுக்கட்டுரை எழுதுவது போல் சுவாமிஜியின் வாழ்வைச் சித்தரித்துக் காட்டி இருப்பது போற்றுதற்குரிய செயலாகும். அன்னாருக்கு எனது அன்பும் ஆசியும் உரித்தாகுக!

குடிலில் படித்த மாணவர்களில் பலர் தற்போது பல துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களுள் கல்வி கற்கும் காலத்திலிருந்தே பிரம்மச்சாரி

துரைசாமி அடிகளார், சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பள்ளிப்படிப்பு முடிந்த பின் ஆசிரமவாசியாக சேர்ந்து சுவாமிகளிடம் தீட்சை பெற்று சிறப்பான முறையில் சேவையாற்றி வருகிறார்கள்.

சுவாமிகள் இறைநிலை அடைந்தபிறகு பிரம்மச்சாரி அவர்கள் குடிலின் நிர்வாகப் பொறுப்பை 5.3.1999 முதல் ஏற்று குருதேவரின் அருளாசியாலும் சுவாமிகளின் திருவருட் சக்தி கொண்டும் சிறப்பாக நடாத்தி வருகிறார்கள்.

இந்நூல் சிறப்புற அமைய முன்னுரையும், ஆசியும், அருளும் வழங்கி இருப்பது தொகுப்பிற்கு மணிமகுடமாகத் திகழ்கிறது. அன்னாரின் அடிமலர்கள் போற்றுகின்றேன்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கு ஏற்ப எல்லோரும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

அன்பன்,
சி.என். ராமசாமி

5.10.2002
முருகானந்த நிலையம்,
சிக்காரம்பாளையம்.

மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி துணை

பதிப்புரை

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாம் தலை" — குறள்

(அறிவு ஆற்றல் ஆகியவற்றில் தம்மைக்காட்டிலும் சிறந்த பெரியவராய் இருப்பவரோடு உறவு கொண்டு அவர் வழி நடப்பது மிகப்பெரும் வலிமையாக அமையும்.)

பண்டைய கோவை மாவட்டத்தின் சத்தியமங்கலம் தாலூகாவில் உள்ள சிறிய ஊர். கடம்பூர் மலைக்குக் கீழ் பெரும்பள்ளம் அணை. அணையை ஒட்டி அமைந்துள்ள இயற்கை அன்னை களிநடம் புரியும் சிற்றூர்தான் கெம்பநாயக்கன்பட்டி. தற்போது கெம்பநாயக்கன்பாளையம் பேரூராட்சியாக வளர்ந்து உள்ளது. ஆன்றோர் பலர் வாழ்ந்த நல்லூர். அவ்வூரில் அவதரித்தவர் குடில் சுவாமிகள். குடில் சுவாமிகளை எனது தாத்தா அவர்களுடன் சந்தித்து இருக்கிறேன். புன்னகை தவழும் மலர்முகம். இனிமையான பேச்சு. அன்பான உபசரிப்பு. அன்னையின் கருணையுள்ளம் படைத்த ஆன்மீகச் செம்மல் தவத்திரு. பிரம்மசாரி இராமசாமி அவர்கள்.

தவத்திரு. அடிகளாரின் வாழ்க்கை வரலாற்று நூலை அச்சிட்டுப் பதிப்பிக்க வாய்ப்பளித்த குடில் தலைவர் தவத்திரு. பிரம்மசாரி துரை சுவாமி அவர்களுக்கு எனது பணிவான வணக்கமும் நன்றியும் உரித்தாகுக!

சுமார் நானூற்று ஐம்பது பக்கம் கொண்ட நூலைத் தொய்வின்றி படிப்போர் மனம் கொள்ளும் வகையில் ஆக்கியுள்ளார் தொகுப்பாசிரியர் திரு. வெ. வெங்கடரமணன் அவர்கள். அன்னாரின் அரும்பணியைப் பெரிதும் போற்றி எனது கனிவான நன்றி. "நூல்" அச்சிட உதவி புரிந்த என் அன்பு நண்பர் த. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் மற்றும் என்னுடன் தோளொடு தோள் நின்று இரவு பகல் பாராது, அயராது உழைத்த அச்சகத் தோழர் தமக்கும் என் இனிய நன்றி.

இந்நூலைப் படித்துப் பிழைத்திருத்தம் செய்து சரி பார்த்தும்; நூல் சிறப்பாக அமைய ஆலோசனைகள் கூறியும் உதவிய குடிலின் முன்னாள் மாணவரும் எனது நடுநிலைப்பள்ளி ஆசிரியருமான திரு. எஸ். காந்தி எம்.ஏ., பி.எட்., அவர்களை பெரிதும் பாராட்டுகிறேன். அன்னாருக்கும் எனது மனமுவந்த நன்றி.

மேலும் இந்நூல் பல பதிப்புகள் வெளிவர திருவருள் துணை புரியுமாக!

குரு மகராஜ் துணை!

அன்புள்ள,
சி.என்.ஆர். இராஜேந்திரன்
இராஜேந்திரா பதிப்பகம்

காரமடை
9.10.2002

ஓம் ஸ்ரீராமகிருஷ்ணாய நம:

பொருளடக்கம்

1. துவக்கஉரை

ஓம் ஸ்தாப காயச தர்மஸ்ய
சர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய
ஸ்ரீராம கிருஷ்ணாயதே நம:

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பதம் பணிந்து துவக்க உரையை துவக்குகின்றேன்.

5.6.1956. எனது வாழ்விலே இந்நாள் ஒரு புனிதமான நாளாகும். சுவாமிஜி அவர்கள் எனது எதிர்கால வாழ்விற்கு ஆசியளித்த திருநாளாகும். ஆம். அன்றுதான் குடில் சுவாமிஜி அவர்களின் நல்லாசிகளுடன், குடிலைச் சார்ந்த ஸ்ரீராமகிருஷ்ணவித்யாலயம் ஆரம்பப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டேன்.

அன்றிலிருந்து 1988 அக்டோபர் முடிய நீண்ட நெடிய காலமான 32 ஆண்டுகள் தலைமை ஆசிரியனாக பணியாற்றிய பின் ஒய்வுபெற்றேன். அரசு முறைப்படி எனது பணிக்குத்தான் ஒய்வு தரப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து குடிலின் அன்பராக, என்னால் இயன்றவரை சேவை செய்து வருகின்றேன்.

வாழ்வெனும் தொடர்ஓட்டத்தில் அவ்வப்போது கிடைத்த அனுபவங்கள், பணியின் தொடர்பாக சுவாமிஜியுடன் ஏற்பட்ட எத்தனை எத்தனை ஆலோசனைகள், விவாதங்கள் ஆகிய அனைத்தும் எனக்கு பெருவிருந்தாக அமைந்தன. இவைகளைக் காட்டிலும் மண்ணில் மனிதன் மனிதனாக வாழ அவ்வப்போது அவர் வழங்கிய ஆன்மீக எடுத்துக்காட்டுகள், பக்திபூர்வமான எடுத்துக்காட்டுகள் என்னை புனிதப்படுத்தின என்றால் அது மிகையாகாது.

பள்ளிப்பணியில் அவரால் இடப்பட்ட உத்தரவுகளை செயல்முறைக்கு கொண்டுவரும்போது எதிர்ப்பட்ட சிக்கல்கள், அதன் காரணமாக ஏற்பட்ட முடிச்சுக்களை அவிழ்க்கமுடியாத நேரங்களில், சுவாமிஜி அவர்களே கண்இமைக்கும் நேரத்தில் அம்முடிச்சுக்களை அவரே அவிழ்த்துக்காட்டி புன்முறுவல் வெளிப்பட என்னைப்பார்க்கும் பார்வை எனது ஆயுள் பரியந்தம் மறக்க முடியாத ஒன்று. சுருக்கமாக சொல்லப்போனால் ''சகல கலாவல்லவர்'' என்ற பட்டம் சுவாமிஜி அவர்களுக்கு முழுமையாகப் பொருந்தும்.

குடிலில் பணியாற்றிவந்த காலகட்டத்தில் அவரது தூய்மை, தர்மநெறி, தன்னலமற்ற தூயஉணர்வு, பக்திநெறி,எளிமை, அனாதை மக்கள் சேவையே நாராயண சேவை என்பதில் தளர்வடையாத உள்ளம் கொண்டவர். குருகுலத்தில் படிக்கும் முதல்வகுப்பு மாணவர்களை கண்டுவிட்டால் அவர் கண்களில் கருணை வெள்ளம் காணலாம். அனாதைகளை தெய்வாம்சமாகக்

கருதும் மிக உயர்ந்த பண்பாடு ஆகியவற்றைக் காணலாம். அவரது பல்வேறு தோற்றங்களைக் கண்டு பெருமிதம் அடைந்த ஆன்றோர்களும், அன்பர்களும் ஏராளம்..... ஏராளம். புனிதக்கோயிலாக போற்றப்படும் குடிலில் ஆசிரியனாக பணியாற்றும் வாய்ப்பை நல்கிய ஈசனுக்கு இதயபூர்வமான நன்றியை சமர்ப்பிக்கின்றேன். மனிதனாக பிறந்துவிட்டால், துன்பங்கள் தாக்காத வாழ்வை எதிர்பார்க்க முடியுமா?

பொழுது விடிந்தால் 99 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ம் தேதியாகும். அதிகாலை மணி 5. கரூரிலுள்ள எனது இல்லத்தின் கதவு தட்டப்பட்டது. ஏதோ இனம்புரியாத கலக்கம் மனதை வாட்டுவது போல உணர்ந்தேன். கதவைத் திறந்தேன். குடில் ஆசிரியர் திரு. ராஜலிங்கம் நின்றிருந்தார். ஏதோ ஒரு விபரீதமான செய்தியுடன் வந்துள்ளார் என என் உள்மனம் கூறியது. “ ஐயா, இரவு 11.40 க்கு குடில் சுவாமிஜி இறைவனடி சேர்ந்துவிட்டார்” எனக்கூறியதைக் கேட்ட நான் அதிர்ந்து போனேன். ராஜலிங்கத்துடன் உடன் கரூர் பஸ் நிலையம் சென்று பஸ் ஏறி 7.30 மணி அளவில் குடிலை அடைந்தேன். சுவாமிஜியின் ஸ்தூலஉடலை தகனம் செய்ய காவிரிக்கரைக்கு எடுத்துச் சென்றதாக அறிந்து, அடங்காத துயரத்துடன் காவிரிக்கரையில் உள்ள கிழபுர தென்னந்தோப்பை அடைந்தேன்.

43 ஆண்டுகளாக கண்டும், பேசியும் வந்த திருவுருவம் சிதையில் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டேன். ஞானிகள் இருந்தாலும் இறந்தாலும் அவர்களது முகமண்டலம் அன்றலர்ந்த தாமரையின் மென்மையை ஒத்த குழந்தைகளின் வதனத்தை பிரதிபலிக்கும் என கேட்டறிந்த உண்மையை அன்று நிதர்சனமாக கண்டேன். சுவாமிஜியாக நான் பார்த்த அவர், இன்று ஞானியாக எனக்கு மௌனமாக காட்சி தந்து கொண்டிருந்தார். உலகைக் கண்டது போதும் என்ற முடிவிற்கு வந்தவராக தோற்றமளிக்கக் கண்டேன். கண்கள் மூடியிருந்தன. வெளேரென்ற முகம். நெற்றி நிறைய நீறு, படுத்து உறங்குவது போன்றே இருந்தது. ‘ சடலம் ’ என நினைக்கத் தோன்றவில்லை. முன்பு கண்ட அதே திருமுகத்தைத்தான் இன்றும் கண்டேன். மரணத்தின் சாயை சிறிதுகூட படியாத நிலை. பகவான் பரமஹம்ஸரின் உத்தம மைந்தருக்கு மரணத்தின் சாயை எவ்வாறு படிய இயலும்? மனதால் குருமகராஜை தியானித்த வண்ணம் நின்றிருந்தேன். கண்கள் குளமாயின. குருகுல மாணவர்கள் சாமி ...... சாமி ..... என அழுதவண்ணம் இருந்தனர். அனைவர் முகத்திலும் சொல்லொணாத்துயரம் மண்டிக் கிடந்தன. சடலத்திற்கு நெருப்பு மூட்டும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சுவாமியை வலம் வந்தேன். சற்று ஒதுங்கி நின்றேன்.

குடிலின் மூத்த பிரம்மசாரி துரை அவர்கள் மும்முறை சிதையை வலம் வந்தார். எரியூட்டினார். மலரை ஒத்த மென்மைத் தன்மை கொண்ட

சுவாமிஜியின் உடல் சிறிது சிறிதாக மறைந்தது. நெருப்பின் செந்நாக்குகள் நாலாபுறமும் ஓங்கி உயர்ந்து "நீங்கள் கண்டது போதும். இனி நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" எனக் கூறுவதைப் போல அக்னிதேவனின் செஞ்சுடர் கரங்கள் மெல்லமெல்ல சுவாமிஜியை அணைத்தன. தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டன. தீக்கனல் நாலாபக்கமும் சுழன்று சுழன்று பரவின. சுவாமிஜியின் ஆத்மா பரமனின் பதம் அடைய குருகுலக் குழந்தைகள் இடைவிடாமல் "ரகுபதிராகவ" நாமத்தை தோத்தரித்த வண்ணம் கைகூப்பி நின்றிருந்தனர்.

அனைத்தும் முடிந்தன. மனித சரீரத்தின் நிலையாமை குறித்து அறிவுசால் ஆன்றோர்கள் கூறி வந்தது நினைவிற்கு வந்தது.

"குடிலின் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது".

துக்கத்தின் நிலையை மாற்றும் சக்தி காலத்திற்குத்தான் உண்டு. நாட்கள் உருண்டோட ஓட மனதின் பாரம் சிறிது சிறிதாக குறையலாயிற்று. அடிக்கடி குடிலுக்கு சென்று வருவேன். மூத்த பிரம்மசாரி துரை அவர்கள் குடிலின் பொறுப்பை ஏற்று சுவாமிஜியின் ஸ்தானத்தில் அமர்ந்தார். சுவாமிஜியை தகனம் செய்த இடத்தில் அவரது நினைவாக " நினைவு மண்டபம்" கட்டப்பெற்றது. **4.3.2000** அன்று நினைவு மண்டபத்தின் திறப்புவிழா. குடிலுக்கு சென்றேன். குடில் தலைவர் பிரம்மசாரி துரை அவர்கள் மண்டபத்தை திறந்து வைத்தார். நினைவு மண்டபத்தின் மத்தியில் அழகாக உருவாக்கப்பட்ட தாமரைப்பீடத்தின் அடியில் சுவாமிஜி அவர்களின் அஸ்திக்கலசம் வைத்து மூடப்பட்டது.

அன்பர்கள் அனைவரும் ஆஸ்ரமம் திரும்பினார்கள். பகவானின் பிரசாதம் அருந்திவிட்டு ஒவ்வொருவராக வெளியேறிய வண்ணம் இருந்தனர். நானும் கரூருக்கு புறப்பட்டுச் செல்ல சுவாமியின் அனுமதியை பெற ஆஸ்ரமத்தின் திண்ணையில் ஏதேதோ நினைவுகள் உள்ளத்து ஊஞ்சலில் ஆட்டம் போட அமர்ந்திருந்தேன். குடிலின் முன்னாள் மாணவர் திரு. காந்தி M.A,B.Ed., சுவாமியுடன் பேசிவிட்டு வெளியே வந்தார். நேராக என்னிடம் வந்தார், " அண்ணா. முடிவு செய்துவிட்டோம். அமரரான சுவாமிஜியின் வாழ்க்கை வரலாற்று நூல் எழுதப்பட வேண்டும். நீங்கள்தான் அதை எழுதப்போகிறீர்கள்.குடிலுக்கு பொக்கிஷம் பணம் காசு அல்ல. அவரது தூய சேவையை வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ள அவரது வரலாற்று நூல்தான் குடிலுக்கான மாபெரும் பொக்கிஷம். வாருங்கள் சுவாமியிடம் போவோம்."

இருவரும் சுவாமியிடம் சென்றோம். அவரும் என்னைப்பார்த்து 'ஆஸ்ரமத்தின் நெடுநாளைய அன்பர் நீங்கள். 43 ஆண்டுகள் குடிலோடு தொடர்புடைய நீங்கள்தான் சுவாமிஜியின் வரலாற்று நூலை எழுதும் பணியை ஏற்க வேண்டும்" எனப்பணித்தார். சிலநொடிகள் என்னால் பேச முடியவில்லை. கிடைத்தற்கரிய நாகமாணிக்கம் கிடைத்தது போல பெருமகிழ்ச்சியடைந்தேன்.பெரும்பாக்கியம் என சுவாமியிடம் கூறி

வெளிவந்தேன். கிட்டத்தட்ட ஓராண்டு காலம் மனதால் சிந்தித்து சிந்தித்து குறிப்புகள் எழுதிக் கொண்டேன். பின் அவைகளைத் தொகுத்து மாபெரும் நெறியாளர் சுவாமிஜியின் வரலாற்றை தொகுக்க ஆரம்பித்தேன். 2002 ஜனவரி முதல் தேதி கற்பதரு நாளன்று சுவாமிஜியின் சரிதத் தொகுப்பை எழுதி முடித்து முற்றுப்புள்ளி வைத்தேன். பிரம்மசாரி துரை சுவாமிகள் அவர்களிடம் படித்துப்பார்க்க தொகுப்பை அவரிடம் கொடுத்து வந்தேன்.

இந்த வரலாற்று தொகுப்பு நூலை எழுத எனக்கு உதவியாக இருந்தவைகள்:

1. குடிலின் வெள்ளிவிழா மலர்
2. சுவாமிஜியின் வெளிநாட்டுப் பயணங்கள்
3. இன்றைய குடில் தலைவர் கூறிய நிகழ்வுகள்
4. விழாக்களின்போது சுவாமிஜி பேசிய கேசட் உரைகள்
5. குடிலின் வருடாந்திர அறிக்கைகள்
6. ஜஸ்டிஸ் மகராஜன், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் குடிலைப்பற்றி எழுதிய தொகுப்புகள்.
7. பத்திரிக்கைகளின் கண்ணோட்டம்.
8. கட்சித் தலைவர்களின் கண்ணோட்டம்.
9. சுவாமிஜி அவர்களின் பிறந்த ஊரான கெம்பநாயக்கன் பாளையத்திற்கு குடில் பிரதர் திரு. கருப்பையா அவர்களுடன் சென்று சேகரித்த நிகழ்ச்சிகள்.
10. குடில் முன்னாள் மாணவர் திரு. காந்தி அவர்கள் தொகுத்தளித்த நிகழ்ச்சிகள்.
11. கோவை சிக்காரம்பாளையத்தின் ஆன்மீகத்திருவருட் செல்வர் உயர்திரு C.N. ராமசாமி அவர்கள், குடிலின் மானேஜர் உயர்திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கு எழுதிய கடிதங்கள்.
12. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிக்கையில் உள்ள மேற்கோள்கள்.
13. கெம்பநாயக்கன்பாளையத்து அன்பர்கள் சுவாமிஜியை குறித்துக் கூறிய செய்திகள்.
14. தபோவனத் தலைவர் அமரர் தவத்திரு சித்பவானந்த சுவாமிகளின் நூற்றாண்டு விழா ஒட்டிய நிகழ்ச்சியில் பேச டாக்டர் திரு. கனகராஜ் அவர்களுக்கு அமரரான குடில்சுவாமிஜி அவர்கள் எழுதிக்கொடுத்த சிற்றுரையின் தொகுப்பு.
15. அமரரான குடில் சுவாமிஜியைப் பற்றிய அன்பர்களின் புகழ்மாலை.

குடில் பணியில்
V. வெங்கடரமணன்
முன்னாள் ஆ. பள்ளி தலைமையாசிரியர்.

2. பராய்த்துறை நாதனே போற்றி

பாரதநாடு முழுவதும் பெயர்பெற்ற திருவருட் ஸ்தலம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருக்கோவிலும், சமயபுரம் மாரியம்மன் ஆலயமும், திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் ஆலயமும், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவிலும், தாயுமானவர் திருச்சன்னதியும் ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் புனித பிருந்தாவனமும், வயலூர் சுப்ரமணிய சுவாமி கோயிலும் கூடிய பல திருத்தலங்கள் தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சிராப்பள்ளியில் உள்ளன.

ஆன்மீகத்திலும் அருந்தமிழ்செல்வர்கள் பலர் வாழ்ந்ததினால், கல்வி கேள்விகளில் சிறப்பான ஒரு இடத்தை பெற்றும் விளங்குகின்ற இந்நகருக்கு மற்றுமோர் சிறப்பும் உண்டு. காவிரி நதி பாய்ந்து மண்ணைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையை இங்கு காணலாம். சரித்திர காலம் முதற்கொண்டு சிறப்பாக பேசப்படுகின்ற நகரமும் இதுவேயாகும்.

இந்நகருக்கு மேற்கே 16 கி.மீ. தொலைவில் அகண்ட காவிரிக்கரை ஓரமாக அமைந்துள்ள சிற்றூர் திருப்பராய்த்துறை எனும் பாடல் பெற்ற ஸ்தலமாகும். வேளாண் பெருமக்கள் வாழும் ஊர். எங்கு நோக்கினும் நெல், வாழை, தென்னை, மாந்தோப்புகள் நிறைந்த ஊர். இங்கு கோயில் கொண்டுள்ள ஈசனுக்கு பராய்த்துறை நாதர் எனவும், அம்மைக்கு பசும்பொன்மயிலாம்பிகை என்ற திருநாமம் கொண்டு திகழும் திருக்கோயில் இதுவாகும். பரந்த மதிற் சுவருக்குள் உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட அழகான ஆலயம். இதன் தென்புறத்தே காணப்படும் அழகுற அமைந்த திருக்குளம் காண்போரை மெய்மறக்கச் செய்யும்.

அன்றாடம் காவிரியில் அதிகாலைப் போதினில் நீராடி உடல் மாசை அகற்றி கீழ்திசையில் செக்கச் சிவந்த வானத்தில் உதித்து மெல்லென மேலெழும் ஆதவப்பெருமானை கண்ணாரக் கண்டு சென்னிமேல் இருகை கூப்பி வணங்கிவிட்டு, மனதின் மாசினைக் களைய சிவநாமாவளி கூறிக்கொண்டே பராய்த்துறை நாதன் திருக்கோயிலை வலம் வந்து, ஆலயத்திற்குள் சென்று அம்மையப்பனை வணங்கிவிட்டு அகமும் முகமும் மலர இல்லம் ஏகும் அருளாளர்களைக் கொண்ட ஊர் இது.

ஊர் நாடிவரும் சாதுக்களுக்கும் பரதேசிகளுக்கும் அமுதிட்டு, ஆடைதந்து வரவேற்பு நல்கி, உளம் மகிழ்ந்து அவர்களை அனுப்பும் இல்லறத்தார்கள் நிறைந்த ஊர் இது. சொல்லொணா மேன்மைகள் கொண்டது இத்திருத்தலம். தாருகாவன ரிஷிகளும், மாதபசிகளும் யாகம், ஹோமம் செய்து தவமியற்றிய திருத்தலம் இது. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், மாணிக்கவாசகரும், அருணகிரி நாதரும் இப்புனித மண்ணில் கால் பதித்து,

உடலும் உள்ளமும், ஊனுருக அம்மையப்பனை பாடிச் சென்றிருக்கிறார்கள்.

ரிஷிகள் செய்த மாதவத்தாலும்,சிவனடியார்கள் திருப்பாதங்கள் பட்டதாலும், இத்தலம் தெய்வீக மணம் வீசும் திருத்தலமாக விளங்கியது. இத்தலத்தில்தான் ஆன்மீகத்திருப்பணியும், தரித்திர நாராயண சேவையும் ஒருங்கே நடைபெற, தெய்வத் திருவருளால் புனிதம் வாய்ந்த இப்பராய்த்துறையில், ஆதவனின் எல்லைக்கோடான கீழ்த்திசையில் ஒரு ஆஸ்ரமமும், மேல் திசையில் ஒரு ஆஸ்ரமமுமாக மனிதகுல சேவைக்கென இரு ஆஸ்ரமங்கள் தோன்றின.

வரப்போகும் பகுதிகளில் இவைகளைப்பற்றி "விரித்துக் கூற போதிய அறிவையும் ஆற்றலையும் தந்தருள்வாய் இறைவா" என பராய்த்துறை நாதனை உளமுருக பிரார்த்தித்து வரலாற்றை எழுத அவன் துணையோடு ஆரம்பிக்கிறேன்.

5. இயற்கை சிதறலும், தெய்வீகச் சிதறலும்

உலகின் தோற்றமும், அண்டத்து ரகஸ்யங்களும் அளவிட்டு கூறமுடியாதவை. பலகோடி ஆண்டுகளாக வான்வெளியில் வலம் வந்து கொண்டிருந்த சூரியனின் ஒரு பகுதி வெப்பமிகுதியின் காரணமாக சிதறியது. வெடித்துச் சிதறிய அப்பகுதிதான் பூமி. அளவிட முடியாத வெப்பத்தின் காரணமாக பூமி கொதித்துக் கொண்டிருந்தது. பல லட்சக்கணக்கான ஆண்டுகள் கழிந்தன. சிறிது சிறிதாக பூமியின் வெப்பம் தணியலாயிற்று. புல், பூண்டு, தாவர இனங்களும், ஊர்வன, பறப்பன, நீரில் வாழ்வன,நிலத்தில் வாழ்வன போன்ற விலங்கினங்களும் பறவை இனங்களும், இதர உயிர்ப்பிராணிகளும் பூமியில் தோன்றின. இவ்விதமாக புவியில் நிகழ்ந்த மாற்றங்களை புவியியல் வல்லுனர்கள் " இயற்கைச் சிதறல்" என்கின்றனர். மற்றோர் வகை சிதறலும் உண்டு. ஆண்டவனின் ஆதேசத்தினால் இச்சிதறல் உருவாகிறது. இதைத்தான் " தெய்வீகச்சிதறல்" என்கிறோம். இது எவ்வாறு எனக் காண்போம்.

பரந்து கிடக்கும் இப்பூமியில், நம் பாரதம் ஒரு சிறிய பகுதியாகும். இதர நாடுகளை காட்டிலும் பாரதத்திற்கு ஒரு தனிச்சிறப்புமுண்டு. தவச்சீலர்களும் ஞானிகளும், தபோதனர்களும், சித்தமகா புருஷர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இங்குதான் அவதரித்தார்கள். மக்கள் உய்ய ஆன்மீக நெறிகளை போதித்தார்கள். எனவே " பாரதம் ஒரு புண்ணிய பூமி" என அழைக்கப்படலாயிற்று.

"உலக நாடுகளுக்கு ஆத்மபோதம் புகட்டி நல்வழிகாட்டி ஞானத்தை புகட்டும் ஆற்றல் பாரதத்திற்கு மட்டுமேயுண்டு." என சுவாமி விவேகானந்தர்

பாரதத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இறைவனின் திட்டம் எதுவோ அதுவே சாட்சாத்காரம் பெற்ற இறையன்பர்கள் மூலம் செயல்படுகின்றன. மனிதகுலம் மேன்மையுற அவ்வப்போது ஆண்டவன் மஹாத்மாக்களை புவிக்கு அனுப்பி வைக்கின்றான். ஈஸ்வர அனுக்ரகத்தால் இத்தகைய அருளாளர்கள் ஆங்காங்கே தோன்றி தன்னலமற்ற சேவை மூலம் மனித குலத்தை தெய்வீக நிலைக்கு உயர்த்துகின்றனர்.

வங்கத்தில் பகவான் ராமகிருஷ்ணரும், தென்னகத்திலே வடலூர் வள்ளலாரும், திருவண்ணாமலையில் ரமண மகரிஷியும் மற்றும் பற்பல ஞானயோகிகளும் பாரதம் முழுவதும் ஆங்காங்கே இறைவனின் எண்ணத்திலிருந்து உதயமான "தெய்வீக சிதறல்" களாவார்கள். இவ்வாறாக ஆண்டவனின் அருட்சக்தியால் உந்தப்பட்ட இரு ஜீவாத்மாக்கள் இரு வெவ்வேறான ஸ்தலங்களில் தோன்றின. மனித குலத்திற்கு சேவை செய்வதே தாம் பிறந்ததின் லட்சியமாகக் கொண்டு, அந்த இரு ஆன்மயோகிகளும் இரு வெவ்வேறான ஸ்தலங்களில் தோன்றினர். ஆண்டவனின் ஆதேசம் இருவரையும் ஒரே இடத்தில் சேர்த்து வைத்தது. இருவரும் ஒன்றாக இணைந்து செயல்புரிவது "அவனது" திருவருள் திட்டத்தில் இல்லை போலும். சேர்ந்தவர் பிரிந்தனர். எத்தகைய தெய்வீகத்திருவிளையாடல் அது. அந்த திருவிளையாடலின் முடிவு? காணத்தானே போகிறோம்.

4. புண்ணிய பூமி கெம்பநாயக்கன்பாளையம்

நம் முன்னோர்கள் பூமியை, புனிதமண் எனவும், புண்ணிய பூமி எனவும், நதிகளை புண்ணிய நதிகள் எனவும், மகான்களாலும் தவசிரேஷ்டர்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்கள் உள்ள இடங்களை புனித ஸ்தலங்கள் எனவும், விண்ணளாவ ஓங்கி நிற்கும் மலைகளை புண்ணிய மலைகள் எனவும், மரங்களை புனித விருட்சங்கள் என்றும் போற்றினர். அவைகளை ஆராதித்தனர். மண்ணையும், நதிகளையும், பூமியையும், மரங்களையும், மலைகளையும் "புண்ணியமான" என்ற அடைமொழி சேர்த்து வணங்கி வந்த காரணம் என்ன?

மலையிலே பிறப்பெடுத்து சமவெளி நோக்கி ஓடிவரும் ஆற்று நீரில் பற்பல மூலிகைகளின் சத்தும், பலவகை தாதுப்பொருள்களும் கலந்து வருகின்றன. மனிதனின் உயிர் இயக்கத்திற்கு தேவையான தூய நீரையும் நதிகள் தருகின்றன. இக்காரணங்களினால் நதிகளை நம்முன்னோர்கள் புண்ணிய நதிகள் எனக்கருதி வழிபட்டனர்.

இந்து சாஸ்திரங்களும் புராணங்களும், வேதங்களும் மலைகள்

இறைவனின் உறைவிடங்கள் ஆகும் என பறை சாற்றுகின்றன. ஆகவே தெய்வ சான்னித்யம் கொண்ட மலைகளை நமது முன்னோர்கள் போற்றி வணங்கி வந்தனர்.

மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் மரங்கள் தருகின்றன. இவைகள் மனிதனுக்கு உணவாக காய்களையும், பழங்களையும் தருகின்றன. பல மரங்கள் மனிதனது நோய் தீர்க்க மூலிகைகளையும், அதன் பட்டைகள், வேர்கள், சாருகள் மருந்தாகவும் பயன்படுகின்றன. இக்காரணங்களால் மரங்களை புண்ணிய விருட்சங்கள் எனப் போற்றி பாதுகாக்கின்றோம்.

பொதுவாக நோக்குமிடத்து மனிதனின் இகவாழ்விற்குத் தேவையான அனைத்தையும் எவைகள் தருகின்றனவோ அவைகளை புனிதமெனக் கருதினர் நம் முன்னோர். புனிதர்கள் பிறந்ததின் காரணமாகவும் சில இடங்கள் புண்ணிய பூமியென பாராட்டப்படுகின்றன. உதாரணமாக ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூர், ரமண மகரிஷி உலாவிய திருவண்ணாமலை இன்னும் பலவற்றையும் புனித பூமியாகக் கருதுகிறோம்.

இந்த வகையிலே தரித்திர நாராயண சேவைக்காகவே ஆண்டவனின் அருட்கிருபை பெற்ற ஓர் ஒளி நட்சத்திரம் பூமியிலே தோன்றியது. தோன்றிய இடம் கெம்பநாயக்கன்பாளையம். பிற்காலத்தில் பிரம்மசாரி ராமசாமி என்ற புனிதமான நாமம் தாங்கி இல்லறத்தை துறந்து துறவற முறையிலே அனாதை மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்த பெரும் மகான் பிறந்த கெம்பநாயக்கன்பாளையம் ஓர் புண்ணிய பூமி என்றால் அது மிகையாகாது. அத்தகைய இடத்தின் புனிதத்தை பின்னால் காண்போம்.

5. காரமடையில் ஓர் இரவு

குடில் சுவாமிஜி அவர்கள் இருந்த காலத்தில் அவரது சொந்த ஊர் எது? பெற்றோர்கள் யார்? திருப்பராய்த்துறைக்கு வருமுன்னர் அங்கு அவர் என்ன செய்து கொண்டிருந்தார் போன்ற வினாக்களுக்குரிய விடையை எவராலும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆஸ்ரமவாசிகளும் அன்பர்களும் எத்தனையோ முறை சுவாமிஜியிடம் கேட்டிருக்கின்றனர். " மக்கள் தொண்டிற்கென வந்தபின் முந்தைய நிலைபற்றிய விசாரம் தேவையற்ற ஒன்று" எனக் கூறிவிடுவார்.

அவர் அமரரான பின் அவரது முந்தைய வாழ்க்கையை தெரிந்து கொள்ள அன்பர்களும் பலரும் பெருமுயற்சிகள் செய்து தகவல் சேகரிக்க ஆரம்பித்தனர். முக்கியமாக சிக்காரம்பாளையம் திரு. C.N. ராமசாமி என்பவர் கொடுத்த தகவல். . . . தற்போதைய ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலம் வட்டத்தைச்

சேர்ந்த கெம்பநாயக்கன்பாளையம் தான் சுவாமிஜி அவர்கள் பிறந்த ஊர் என்றும், அவர் பிறந்த வருடம் 1911 என்றும் தெரிய வந்துள்ளது. கெம்ப நாயக்கன்பாளையத்திற்கு நேரில் சென்றால் சுவாமிஜி அவர்களைப் பற்றிய முழுவிவரங்களையும் சேகரிக்கலாம் என குடில் முன்னாள் மாணவரும், தற்போது ஆசிரியப்பணி புரிந்துவரும் திரு. காந்தி குடிலுக்கு கடிதம் எழுதியதன் பேரில் கெம்பநாயக்கன்பாளையம் செல்வதென முடிவாயிற்று. முன்னாள் மாணவரான காந்தி ஏற்கனவே கெம்பநாயக்கன்பாளையம் சென்று சேகரித்த விஷயங்களை தனது டயரியில் எழுதியுள்ளார். அதை குடில் சுவாமி பிரம்மசாரி துரை அவர்களுக்கு நேரில் வந்து கொடுத்து சென்றார். மீண்டும் ஒருமுறை கெம்பநாயக்கன்பாளையம் சென்று வந்தால்தான், சேகரித்த விஷயங்கள் முழுமையடையும் எனவும் கூறிச் சென்றுள்ளார்.

பிரம்மசாரி கருப்பையாவுடன் என்னையும் கெம்பநாயக்கன்பாளையம் அனுப்புவதென குடில்சுவாமி தீர்மானித்தார்கள். 30.09.2000 அன்று நானும் பிரம்மசாரி கருப்பையாவும் பேருந்தில் கரூர் வழியாக கோவை சென்று அங்கிருந்து காரமடை சென்று, திரு. காந்தியை சந்தித்தோம். கெம்பநாயக்கன்பாளையத்தில் அமரரான குடில்சுவாமிஜியின் இளமைக்கால நண்பரான திரு. மாணிக்கம் செட்டியாருடன் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டோம். “நாளை காலை தங்களை சந்திக்க வருகிறோம். சுவாமியைப் பற்றிய தகவல்கள் சேகரிக்க தங்கள் உதவி தேவை” என பிரம்மசாரி கருப்பையா போனில் செட்டியாரிடம் பேசினார். செட்டியார் அவர்கள் “ சாமி . . . தவிர்க்க முடியாத ஒரு காரணத்தால் நான் நாளையதினம் தாராபுரம் சென்றே ஆக வேண்டும். ஊர் திரும்ப இரவாகிவிடும். தாராபுரம் பயணத்தை ஒத்திப்போடவும் முடியாத சூழ்நிலை. நான் இல்லையே என யோசிக்க வேண்டாம். என் நண்பர் முருகன் அடிமை K.T. பழனிசாமி உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தருவார். தயங்காமல் நாளையதினம் கெம்பநாயக்கன்பாளையம் வந்து விடுங்கள்” என கூறி முடித்தார். செட்டியார் ஊரில் இல்லையே என்ற கவலை மறைந்தது.

உற்சாகம் தொற்றிக் கொண்டது. நாளைய தினம் சுவாமிஜி அவர்கள் பிறந்த மண்ணை பார்க்கப்போகின்றோம் என்ற நினைவு ஆனந்தத்தில் ஆழ்த்தியது. இரவு உணவிற்குப் பின் அமர்ந்தோம். திரு. காந்தி அவர்கள் தனது குறிப்புக்களின் விரிவாக்கத்தை சொல்லச்சொல்ல குறித்துக் கொண்டேன். பின் படுக்கையில் படுத்தேன். ஏனோ தூக்கம் வரவில்லை. சுவாமிஜி அவர்களின் உற்ற நண்பரை பார்க்க முடியவில்லையே என்ற எண்ணம் எழுந்து மனதிலே ஊசலாடியது. கெம்பநாயக்கன்பாளையம் சென்றபின் ஊர் மக்கள் அவரைப்பற்றிக் கூறியதை, இந்த இடத்தில் குறிப்பிடுவது அவசியம் என நினைக்கிறேன்.

கெம்பநாயக்கன்பாளையத்தில் எந்தவொரு நற்காரியமும் செட்டியார்

அவர்கள் இல்லாமல் நடப்பதில்லை. முழுமையான ஈடுபாடு கொண்டு முன்னின்று செய்து முடிப்பார். பார்ப்பதற்கும் பழகுவதற்கும் எளிமையானவர் எனத் தெரிய வந்தது. அவரது மனம் உயர்ந்திருப்பது போல ஆளும் உயரமானவர்தான். "எனது ஊரைச் சேர்ந்த தனதருமை நண்பர் ராமசாமி அவர்கள் எத்தகைய உயர்ந்த மனிதர், அவரது சேவை எப்பேர்ப்பட்டது என்பது குடிலுக்கு வந்தபின்தான் தெரிய வருகிறது. அத்தகைய மாபெரும் மனிதருக்கு இளமைக்கால நண்பராக இருந்தது பற்றி பெருமிதமடைகிறேன்" என சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் கூறிக் கூறி மகிழ்ந்துள்ளார் செட்டியார் அவர்கள்.

6. புண்ணிய பூமியை தரிசித்தோம்

1.10.2000 அதிகாலை 5.30 மணிக்கே எழுந்து விட்டோம். பல்துலக்கி குளியலை முடித்துக் கொண்டோம். காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டோம். எங்களோடு கெம்பநாயக்கன்பாளயைம் வரஇருந்த திரு C.N. ராமசாமி அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். நாங்கள் புறப்பட இருந்த வேன் இன்னமும் வரவில்லை. எதிர்பார்த்திருந்த சிக்காரம்பாளையம் திரு C.N. ராமசாமி அவர்களும் வந்து சேர்ந்தார். அவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

ஆன்மீக அன்பர்களைப் பார்ப்பதும் அவர்தம் உரைகளை கேட்பதும் உள்ளத்திற்கு உவகை தரும் விஷயங்கள் அல்லவா?

சிக்காரம்பாளையத்தில் வாழ்ந்த பேரறிஞரும் நல்வாழ்க்கைக்கு தேவையான அறிவுரைகள் கொண்ட பலநூல்களை எழுதியவரும், ஆன்மிகத்தில் பெரும் நாட்டம் கொண்டவரும், காந்தியத்தில் மிக்க ஈடுபாடு உடையவரும் விவசாய வித்தகருமான பெருநிலக்கிழார் திருவாளர் பிரம்மஸ்ரீ C.U.நஞ்சப்பா அவர்களின் திருக்குமாரர்தான் C.N. ராமசாமி அவர்கள் ஆவார். குடில் சுவாமிஜியின் நெருங்கிய நண்பர். இங்கு இவரைப்பற்றி கூறுவது பொருத்தமாக இருக்கும். திருவாளர் சிக்காரம்பாளையம் C.N. ராமசாமி அவர்கள் தூய கதராடையில் காட்சி தரும் எளிய மனிதர். மிகப் பெரிய ஆன்மீக வாதி. பற்பல கோயில்களுக்கும் சென்று ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய முறையில் ஆன்மீகக் கருத்துக்களைக் கொண்ட சிறுசிறு புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக தந்து வருகின்றார். தற்போதைய பள்ளி, கல்லூரி மாணவமணிகள்தான் நம்நாட்டின் எதிர்காலத்தூண்கள் என்பதில் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளார். அவர்களுக்காகவே சிறந்த நன்னெறிகள் கொண்ட சிறுசிறு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இதுவரை பல ஆயிரம் மாணவமணிகளை சந்தித்துள்ளார். அறநெறிச்சாரம் நிறைந்த

புத்தகங்களையும்,நாட்டுப்பற்றின் அவசியத்தையும் விளக்கும் சிறுநூல் தொகுப்புகளையும் இலவசமாகவே வழங்கியுள்ளார். மென்குரலில் அவர் கூறும் அறவுரைகள் கேட்போரை பிணைக்கும் தன்மை வாய்ந்தவை. பள்ளி மாணவர்களை எங்கு கண்டாலும் நின்று விடுவார். தனது கைப்பையில் கைவிட்டு, மாணவர்களுக்கு நல்வழிகாட்டும் மூதுரைகள் அடங்கிய சிறுசிறு ஏடுகள் எடுப்பார். மாணவர்களை ஆசீர்வதித்து நெற்றியில் நீறு பூசி மனதிற்குள் ஜெபித்து அப்புத்தகங்களை அவர்களிடம் தருவார். 'நன்றாகப்படி, நிமிர்ந்து நில், நாட்டிற்கு உழைப்பாயாக" எனக்கூறி அனுப்புவார். அவரது உரைகளை கேட்ட மாணவர்கள் தாங்கள் நிச்சயம் வாழ்வில் உயர்வோம் என்ற நம்பிக்கையோடு அப்பெருமகனாருக்கு வணக்கம் தெரிவித்து செல்வார்கள்.

இத்தகைய பண்புகளை தன்னகத்தே கொண்ட பெரியார் ஒருவர் எங்களோடு வருவதை நாங்கள் பெரும் வாய்ப்பாக கருதினோம். சிறிது நேரத்தில் வேனும் வந்துவிட்டது. புறப்பட்டோம். காரமடையிலிருந்து 40 கிமீ தூரத்தில் கெம்பநாயக்கன்பாளையம் உள்ளது. அன்னூர் சத்தியமங்கலம்,புஞ்சை புளியம்பட்டி வழியாக மதியம் 11 மணி சுமாருக்கு கெம்பநாயக்கன்பாளையம் போய்ச் சேர்ந்தோம்.

அன்பர் திரு.K.T. பழனிசாமி அவர்கள் கன்னிகா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் தனது தோழர்களுடன் எங்களுக்காக காத்திருந்தார்.

வேனிலிருந்து இறங்கினோம். தரையில் கால்பட்டதும் மெய் சிலிர்த்தோம். எங்கள் சுவாமிஜி பிறந்த மண்ணில் கால்பதித்தோம். ஆனந்தம் அடைந்தோம். மண்டபத்தில் பிரவேசித்தோம். அன்பர்கள் கூடியிருந்தனர். பழங்களும் தேநீரும் தந்து உபசரித்தனர். திரு.K.T. பழனிசாமி அவர்களும் இதர அன்பர்களும் சுவாமிஜி கெம்பநாயக்கன்பாளையத்தில் இருந்தபோது அவர் ஆற்றிய பணிகளை பெரியவர்கள் மூலம் கேள்விப்பட்டதை கூறினார்கள். கிட்டத்தட்ட 1 மணி நேரம் பேசப்பட்டது. அவர்கள் கூறியவற்றை குறிப்பெடுத்தேன். இனிவரும் பகுதிகளில் அன்பர்கள் கூறியதை விரிவாகக் காணலாம்.

கெம்பநாயக்கன்பாளையத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டம். பேரூராட்சி நடந்து வரும் ஊர் இது. நீர்வளம், நிலவளம் மிகுந்தது. எங்கு பார்த்தாலும் கண்களுக்கு குளிர்ச்சி தரும் பசுமை. ஆங்காங்கே குடியிருப்புகள். விவசாயப் பெருங்குடி மக்களின் கடுமையான உழைப்பால், நெல்லும் வாழையும், கரும்பும், அமோகமான விளைச்சலை தந்தன. ஊரை சுற்றி மேற்குமலைத்தொடர் சூழ்ந்துள்ளது. வானளாவ உயர்ந்த மலைமுகடுகளைக் கொண்ட மலைத்தொடர். அம்மலையின் மையப்பகுதியில் வெண்மேகங்கள் தவழ்ந்து செல்லும் காட்சி அதியற்புதம். மலையரசன் தனது இடுப்பில் வெண்மேகங்களையே ஆடையாக அணிந்திருக்கிறானோ என மனமயக்கத்தை ஏற்படுத்தும். பசுமை . . . பசுமை . . . பசுமை . . . கண்களுக்கு பெருவிருந்து. இந்த அமோகமான பசுமைக்கு காரணம் 4 கி.மீ தொலைவிலுள்ள பெரும்பள்ளம் என்னுமிடத்தில் கட்டப்பட்ட

அணையாகும். இதில் தண்ணீரை தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

பூமித்தாய் மிகமிக மென்மையானவள். கருணை உள்ளம் கொண்டவள். கடும் உழைப்பால் அவளை ஆராதிக்கும் மக்களை அவள் என்றுமே கைவிட்டதில்லை. உழைப்பால் தன்னை மகிழச் செய்யும் தன் மக்களுக்கு வஞ்சனையின்றி வாரிவாரித் தரும் அன்னையவள். அந்த அன்னையின் அரவணைப்பில் ஆனந்தம் காணும் அவ்வூர் மக்கள் பாக்கியசாலிகள்.

இவ்வூரில் பெருமாள் கோயில், முருகன் கோயில், கன்னிகா பரமேஸ்வரி கோயில், மாரியம்மன் கோயில், ஆனைமுகத்தான் ஆலயம் என ஆலயங்கள் பல உண்டு. இக்கோயில்களில் சுவாமிஜியின் தொடர்பை அதிகமாகப் பெற்றது முருகன் கோயில். சிறிய கோயில் தான். ஆனால் சிரிக்கும் முகத்துடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் முருகனைக் கண்டுவிட்டால் நமது மனம் அவனுள்ளே லயித்துவிடும். எவ்வளவு நேரம் அவனை பார்த்து நின்றாலும் சலிப்பு தோன்றுவதில்லை. முருகனடிமை திரு K.T. பழனிசாமியின் பராமரிப்பில் இவ்வாலயம் வெகு நன்றாக உள்ளது. அவரிடம் முருகன் என்று கூறினாலே ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது. வாய்க்கு வாய் அனைத்தும் என்னப்பன் அருள் என்று கூறுவார். எப்படி எப்படியோ வாழ்ந்த அவரது வாழ்க்கையில் முருகன் குறுக்கிட்டு தன்னை முழுவதுமாக ஆட்கொண்ட அவன் கருணையை எண்ணி வியக்கின்றார். அவருக்கு எல்லாமே முருகன்தான். தழுதழுத்த குரலில் அவர் கூறும்போது நாமும் நெகிழ்ந்து போகிறோம்.

சுவாமிஜி அவர்கள் அடிக்கடிஅங்கு வருவாராம். மணிக்கணக்கில் கண்மூடி தியானத்திலிருப்பாராம். ஊர் மக்கள் தங்கள் வீட்டு இளைஞர்களிடம் “நீ ராமசாமியைப் போல வரவேண்டும்” என அடிக்கடி அவரை முன் உதாரணமாகக் காட்டி அறிவுரை கூறுவார்களாம்.

திரு. பழனிசாமி அவர்கள் கண்மூடி முருகனை தியானித்துவிட்டு முருகனுக்கு பயபக்தியோடு கற்பூர ஆரத்தி காண்பித்து நமக்கும் காட்ட கற்பூர ஜோதியை கண்களில் ஒற்றிக் கொண்டு புறப்பட்டோம். ஓர் அன்பர் இல்லத்திலே மதிய உணவிற்காக ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களின் அன்பும் உபசரிப்பும் எங்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. மதிய உணவு உண்டபின் காரமடை புறப்பட்டோம்.

7. கெம்பநாயக்கன்பாளையம் - பெயர் காரணம்

இவ்வூருக்கு இப்பெயர் வர சரித்திர ரீதியான காரணம் ஏதேனும் உண்டா? என முருகனடிமை திரு. பழனிசாமியை கேட்டபோது அவர் கூறியதாவது:

ஏதோ சில அரசியல் காரணங்களுக்காக தெலுங்கு நாட்டின் மக்களின்

ஒரு பிரிவினர் தத்தம் பகுதிகளை விட்டுவிட்டு ஒவ்வோர் இடமாக குடிபெயர்ந்து இறுதியில் தமிழ்நாட்டிற்குள் நுழைந்தனர். அவர்களே 'நாயக்கர்' இனத்தவர்கள். கோவை மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் குடியேறினர். ஆடுமாடுகளை மேய்த்தும் விவசாயப்பணிகளை செய்தும் வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தவை.

ஒரு சமயம் அவர்கள் வாழ்ந்த பகுதியில் பெரும் பஞ்சம் ஏற்படவே நாயக்கப்பரம்பரை மக்கள் பிழைப்பை நாடி குடிபெயர்ந்தனர். மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம் வழியாக வந்த இவர்கள் இந்த இடத்தை தேர்ந்தெடுத்தனர். அப்பகுதியில் உள்ள காடுகளின் ஒரு பகுதியை அழித்து விளைநிலமாக்கியும், குடியிருப்புகளை கட்டியும் வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்களின் கால்நடைகளுக்கு தேவையான புல்வெளிகள் மலையடிவாரங்களில் ஏராளமாக இருந்தன.

அக்கால மக்களின் வாழ்க்கை முறை, நடைமுறை, சட்டதிட்டங்களுக்கு ஏற்ப தங்கள் கூட்டத்திற்கு ஒரு தலைவனை தேர்ந்தெடுத்தனர். இவர்கள் தேர்ந்தெடுத்த தலைவன் பெயர் கெம்பநாயக்கன். ஆற்றல் மிக்க தலைவனாகத் திகழ்ந்தான். தங்கள் தலைவனது ஆணைக்கு மக்கள் கட்டுப்பட்டனர். தங்கள் நல்வாழ்விற்கு வித்திட்ட, அத்தலைவனைப் போற்றிப்புகழ்ந்தனர். அத்தலைவன் மறைந்தபோதிலும் தங்கள் பகுதிக்கு கெம்பநாயக்கன்பாளையம் எனப்பெயர் சூட்டினர். காலங்காலமாக வந்த இப்பெயர்க்காரணத்தை கூறி முடித்தார் பழனிசாமி.

அன்று மண்டபத்தில் கூடியிருந்த அன்பர்கள் விவரம்.

திருவாளர்கள்

1.	K.R. மாணிக்கம் செட்டியார்	சுவாமிஜியின் நண்பர்
2.	K.K. ராமசாமி	சுவாமிஜியின் உறவினர்
3.	K.B. லிங்கேசன்	,, ,,
4.	P. தேவணன்	கிராமகூட்டுறவு சங்க உதவி செயலாளர்
5.	K.V. ஜெயராம் மூர்த்தி	தொ. வே. கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர்
6.	K.T. பழனிச்சாமி	,, ,,
7.	K.A. பழனிச்சாமி	,, ,,
8.	K.S. பரமசிவம்	,, ,,
9.	K.V. சாம்ராஜ்	,, ,,
10.	K.K. கிருஷ்ணமூர்த்தி	,, ,,
11.	K.V. பெரியசாமி	,, ,,
12.	K.A. சுப்புரத்தினம்	மண்டப பொறுப்பாளர்
13.	K.T. தங்கவேல்	பேரூராட்சி முன்னாள் தலைவர்.

இவர்கள் வந்திருந்து எங்களுக்கு வரவேற்பு கொடுத்தமைக்கு எங்களது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்தோம். இனி நாயக்க மக்கள் தமிழ்நாட்டிற்குள் வந்த வரலாற்றைப் பார்ப்போம்.

கி.பி. 1310 ம் ஆண்டில் முகம்மதிய மன்னன் வாள்முனையில் முகம்மதிய அரசை பரப்பி வந்த காலமது. மன்னன் அலாவுதின் கில்ஜியின் கட்டளைப்படி அவனது தளபதி மாலிக்காபூர் என்பவன் தெற்குநோக்கி படையெடுத்து வருகின்றான். அவனது பார்வை முதலில் தெலுங்குதேசத்தின் மீது படிந்தது. வாரங்கல்லிற்கு வருகின்றான். நெல்லூர் பகுதியிலுள்ள மக்களை படைகொண்டு விரட்டியடிக்கின்றான். அவ்வாறு தமிழ்நாட்டிற்குள் வந்த மக்கள்தான் நாயக்கர்கள் எனப்படும் தெலுங்குமொழி பேசும் மக்கள்.

கி.பி. 1785 ம் ஆண்டு மைசூரில் திப்புசுல்தான் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலேயரை நாட்டிலிருந்து விரட்ட தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு ஆங்கிலேயருடன் போராடி வந்தான் திப்பு. திப்புவுக்கு எதிராக சில இனமக்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர். இதனால் வெகுண்ட திப்பு அவர்களை நாட்டை விட்டு விரட்டி அடித்தான்.

கன்னட மொழி பேசும் 'படுகர்' என்ற இனமக்கள் மைசூரைவிட்டு தமிழகத்திலுள்ள நீலகிரி மலைப்பகுதியில் தங்கினர். கன்னடமொழி பேசும் மற்றோர் இனம் "குறும்பர்" ஆகும். இவர்கள் தமிழ்நாட்டின் உட்பகுதிக்கு சென்று குடியேறினார்கள்.

மூன்றாவது பிரிவாக இன்னொரு இனமக்கள் நீலகிரி மலையைக் கடந்து மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் குடியேறினார்கள். இவர்கள் கன்னட மொழிபேசும் 'ஒக்கலிகர்' இனமக்களாகும். தமிழ்நாட்டிற்குள் மைசூர்பகுதியில் இருந்து வெளியேறிய மக்களின் வரலாறு இதுவாகும்.

இந்த சரித்திர பின்னணியை நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது நண்பரும் குடில் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றும் சரித்திர பட்டதாரி ஆசிரியரான திரு M. சிவரத்தினசாமி அவர்களே எழுதிக்கொடுத்த குறிப்பின் விரிவாக்கம் இதுவாகும்.

கெம்பநாயக்கன்பாளையத்து அன்பர்கள் கூறியவைகளை மனதிலே ஏற்றுக் கொண்டேன். மறவாமல் இருக்க குறிப்புகளாகவும் எழுதிக் கொண்டேன். சாதாரண ஒரு குடியில் பிறந்த குடில் சுவாமிஜி அவர்கள், எதிர்காலத்தில் அவர்மேற்கொண்ட தன்னலமற்ற தரித்திர நாராயண சேவையின் காரணமாக மஹான் என்ற நிலையை எட்டிப்பிடித்தார். மக்கள் அனைவராலும் போற்றப்பட்டார். அப்பேர்ப்பட்ட உத்தமபுருஷரின் வாழ்க்கை சரிதம் வரும் பகுதிகள் எழுத ஆரம்பித்து விட்டேன்.

8. அவனியில் பிறந்த அருட்குழந்தை

கெம்பநாயக்கன்பாளையம் இயற்கை சூழல் நிறைந்த ஒரு அற்புதமான சிற்றூர். இங்கு வாழும் மக்களில் ஒருவர்தான் வெள்ளேகவுடர். கன்னட மொழி பேசும் 'ஒக்கலிக' இனத்தைச் சேர்ந்தவர். இனிய பண்பாளர். யாரிடமும் அதிர்ந்து பேச மாட்டார். பணிகளில் சிறந்தது கல்வி கற்பிக்கும் பணி என்பதை நன்கு உணர்ந்த பெருமகனார் இவர். குடும்பத்தை சேர்ந்த நிலம் சிறிது இருப்பினும் அதன் வேளாண்மையை கவனிக்க ஆட்களை நியமித்தார். தன் உள்ளத்தில் வேரூன்றிப்போன கல்விப்பணியை தொடர்ந்தார். தாத்தப்பள்ளி என்னும் அருகிலுள்ள ஊரில் திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியராக பணியாற்றி வந்தார். இவரது பக்திநெறியும், சுயநலமற்ற தொண்டும் அப்பகுதி மக்களைக் கவர்ந்தன. கிராமத்து மக்களின் நன்மதிப்பை பெற்று வளமான வாழ்க்கை நடத்திவந்தார். இறைவன் திருவருளால் இவருக்கு வாய்த்த இல்லறத் துணைவியார் கருணை உள்ளமும், ஏழைகள் பால் அன்பும் கொண்ட உத்தமியாக இருந்தார். இவரது பெயர் சென்னம்மாள். எல்லா வகைகளிலும் கணவனுக்கேற்ற உத்தமபத்தினியாக திகழ்ந்தார். இத்தகைய இனிய தம்பதிகளுக்கு மூன்று பெண் குழந்தைகள் ஈசனருளால் பிறந்தன. மனநிறைவோடு அக்குழந்தைகளை வளர்த்தனர். அகிலாண்டேஸ்வரியின் அம்சமாகவே நினைத்து அப்பெண் குழந்தைகளை வளர்த்து வந்தனர். இருப்பினும் மனதிலே ஒரு ஏக்கம். குலம் காக்க ஒரு ஆண்மகவு இல்லையே என்று. இந்த நல்லவரை ஈசன் அதிகமாக சோதிக்கவில்லை. விரைவில் சென்னம்மாள் கருதரித்தார். வெள்ளேகவுடரின் மகிழ்ச்சி சொல்லத்தரமன்று. ஊரிலுள்ள ஆலயங்கள் அனைத்திற்கும் செல்வார். இம்முறை ஆண்மகவு பிறக்க வேண்டும் என ஈசன்முன் நெடுநேரம் நின்று வேண்டுவார். சென்னம்மாளும் அப்படியே. மனதில் ஈசனை நிறுத்தி அல்லும் பகலும் ஒரு ஆண் மகவுக்காக வேண்டி வந்தாள். கருவிலிருப்பது ஆண்குழந்தையாக இருக்க வேண்டும் என நோன்புகள் பலவற்றை ஏற்றார்.

ஊராரும் உற்றம் சுற்றமும் ஒன்று கூடி மகிழும் அந்த இனிய சமயமும் வந்தது. 18.10.1911 ம் தேதியில் சென்னம்மாளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். உற்றமும் சுற்றமும் நண்பர்களும் சூழ கோலாகலமாக மகன் பிறந்த நாளை வெகுவிமரிசையாக கொண்டாடினர்.

நல்லோரை கூடிவந்த ஒரு நன்நாளில் அனைவரும் மகிழ தமது ஆண்மகவுக்கு இராமசாமி என்ற திருநாமம் சூட்டி மகிழ்ந்தார் வெள்ளேகவுடர். ஏழை எளியவர்கள் மனம் மகிழ அன்னதானம் செய்தார். இவ்வாறாக தம்மகனின் பெயர் சூட்டு விழாவை இனிதே நடத்தினார்.

ராமசாமியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். எலுமிச்சை நிறம். நீண்ட கை கால்கள், சற்றே நீலம் கலந்த கண்கள். தன் பிஞ்சுக் கரங்களை தரையில் ஊன்றி தவழ்ந்து வரும் அழகைக் கண்டு பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இப்பருவம் கடந்து எழுந்து நின்று சிறு நடை நடக்க முயன்றான். கைக்கு எட்டும் அனைத்துப் பொருட்களும் அவனது கையில் சிக்கி படாதபாடு பட்டன. எடுப்பான். தூக்கி எறிவான். கை கொட்டிச் சிரிப்பான். அவனது மழலைப் பேச்சையும் சிரிப்பையும் கண்ட அவனது பெற்றோர்கள் ஆனந்தத்தின் எல்லையை தொட்டு விட்டனர். இவன் உடைப்பதற்காகவே குயவனாரிடம் சொல்லி பற்பல சிறுசிறு களிமண் பொம்மைகளை கொண்டு வருவார் வெள்ளேகவுடர். நொடியில் அவைகள் அனைத்தையும் அடித்து நொறுக்கி விடுவான் ராமசாமி.

அவனது வயது நான்காயிற்று. நடை என்பதை அவனிடம் காணமுடியாது. ஒரே துள்ளல்தான். மான்குட்டி ஓட்டம். சுறுசுறுப்புக்கு அளவேயில்லை. முத்துப்போல வரிசையாக உள்ள பச்சரிசிப்பற்களை திறந்து காட்டி சிரித்தால் மயங்காதவர் எவருமில்லை. அடிமேல் அடிவைத்து அவன் நடந்துவரும் அழகே தனி. அதைப் பார்த்து பார்த்து மாய்ந்து போவார்கள் தம்பதியினர். சில வேளைகளில் சம்மணம் போட்டு அமர்வான். பெரியவர்களைப் போல கண்மூடி அசையாமல் இருப்பான். அதைக் காண்பவர்கள் அதிசயித்துப் போவார்கள்.

ஆண்டவனின் ஆதேசத்தை முற்றிலுமாகப் பெற்று பிறந்த குழந்தையல்லவா அவன்? கண்மூடி அமர்ந்திருக்கும் அந்த பிஞ்சு உள்ளத்தில் என்னென்ன எண்ண அலைகள் ஓடிக்கொண்டிருக்குமோ? யாரே அறிவார்? தந்தையுடன் ஆலயங்களுக்கு செல்வான். அவனுள் குதித்து கும்மாளமிடும் ஆட்ட பாட்டங்கள் அனைத்தும் ஆலய வாசல் வரையில்தான். ஆலயத்தினுள் சென்று விட்டால் ஒரே மௌனம். அங்கு குடிகொண்டிருக்கும் ஆண்டவனை பார்த்த வண்ணம் நின்றிருப்பான். கோயிலில் தந்த திருநீற்றை மகனது நெற்றி முழுவதும் பூசி அதன் மத்தியில் சந்தனப்பொட்டு வைப்பார். அதற்குள் சிறு அளவில் குங்குமம் வைப்பார். வேல் தாங்கிய முருகனே வருவது போல இருக்கும் ராமசாமியின் தோற்றம். வருடங்கள் உருண்டோடின. வயதும் ஆறாயிற்று. உள்ளூர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ராமசாமி சேர்க்கப்பட்டான்.

திருவிழாக் காலங்களில் நண்பர்களுடன் ஆலயமே கதி என இருப்பான். எவ்வளவு வற்புறுத்தி அழைத்தாலும் வீட்டிற்கு செல்லமாட்டான். பசி வந்த போது இல்லம் ஏகுவான். சாப்பிடுவான். அடுத்த கணம் சிட்டாகப் பறந்து ஆலயத்திற்கு வந்துவிடுவான்.

இனிமையாக ஓடிக்கொண்டிருந்த வெள்ளேகவுடரின் வாழ்க்கையில் விதி குறுக்கிட்டது. நோயில் படுத்த அவரது துணைவியார் நோய் தீராமலே

இறைவனடி சேர்ந்து விட்டார். வெள்ளேகவுடர் பெரும் சோகத்தில் ஆழ்ந்துவிட்டார்.

காலம் அவரது துயரத்தை ஆற்றியது. தானே தாயாகவும், தந்தையாகவும் இருந்து ராமசாமியை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். ஆரம்பப்பள்ளி படிப்பு முடிந்தவுடன் ராமசாமி சத்தியமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டான். தன் மகன் நன்கு படித்து பிற்காலத்தில் பெரிய மனிதனாக வரவேண்டுமென்று இறைவனிடம் தினமும் அவனது தந்தை வேண்டுவார்.

பிற்காலத்தில் அனாதை மக்களின் சேவைக்காக இல்லறத்தை துறந்து துறவறத்தை ஏற்று ஆன்மீக நெறியில் ஆஸ்ரமம் ஒன்றினை அமைத்து மகத்தான காரியங்களை சாதிக்கப்போகும் அடிகளாராக தன்னருமை மகன் மகோன்னத நிலையில் விளங்கப் போகிறான் என்பதை அப்போது வெள்ளேகவுடர் அறியவில்லை. வருடங்கள் பல உருண்டன. ராமசாமியும் வாலிபப் பருவம் எய்தினார்.

9. தன்னலமற்ற தியாகியும் ஆனார்

சத்தியமங்கலம் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதித் தேர்வை வெற்றிகரமாக முடித்தார் ராமசாமி. தமிழில் சிறப்பாக தேறினார். நாயன்மார்கள் வரலாற்றை முழுவதுமாக கற்றார். நேரம் கிடைத்த போதெல்லாம் பற்பல ஆன்றோர்கள் தமிழில் எழுதிய நூல்களை கற்றார். உலக வாழ்வில் நாட்டம் குறைந்தது. பல வருடங்கள் உருண்டன. வாலிபப்பருவம் எய்தினார் ராமசாமி. தனிமையை அதிகமாக விரும்பினார். கோயில் வளாகங்களில் கண்மூடி தியானிப்பார். அவரது மனதில் தனது பணி யாது? என்ற சிந்தனை எழுந்தது. ஏழை எளிய மக்கள்பால் அவர் மனம் கசிந்து உருகியது. அம்மக்களுக்குச் சேவை செய்வதே தம் லக்ஷியமாகக் கொண்டார்.

கிராம மக்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்காக மனுக்களை எழுதுவார். சம்மந்தப்பட்ட அதிகாரிகளை போய்ப் பார்ப்பார். அவர்களிடம் அம்மக்கள் படும் துயரத்தினை எடுத்துக்கூறுவார். மக்கள் குறைகளை தீர்ப்பது அரசின் கடமை என மிக உருக்கமாக எடுத்துக் கூறுவார்.

இவ்வாறாக மக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே பாலமாக இருந்து செயல்படுவதில் அதிக அக்கரை காட்டினார் ராமசாமி. ஏழைகளுக்கான நிவாரண உதவிகளை அரசிடமிருந்து பெற்று மக்களுக்கு பயன்படுமாறு பணி செய்து வந்தார். மகாத்மாகாந்தியின் அகிம்ஸா நெறிகளும் அவரது பிரம்மசர்ய வாழ்வும் இவரை வெகுவாக கவர்ந்தன. மகாத்மாகாந்தியை தனது தலைவராக ஏற்றுக் கொண்டு விட்டார். தீவிர காந்தி பக்தராக மாறினார். மக்கள் பணி போக கிடைத்த நேரங்களில் காந்தீய பணிகளில் கவனம் செலுத்தினார். நூல் நூற்றல், கதராடை தயாரித்தல், மக்களிடையே

காந்தீய கருத்துக்களை எடுத்துக் கூறுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டார்.

இவரது சிந்தனை முழுவதும் மக்கள் நலனைப்பற்றியதாகவே இருந்தது. அரசிடமிருந்து இவர் பெற்றுத் தரும் நிவாரணத்தால் ஏழை மக்கள் அடையும் சந்தோஷத்தைக் கண்டு இவர் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார்.

அடிக்கடி ஹரிஜன சேரிக்குச் செல்வார். அம்மக்களிடையே சுத்தம், சுகாதாரம் குறித்து அறிவுரை கூறுவார். பசுவதை செய்வதையும், பசு மாமிசம் சாப்பிடுவதையும் உடனே நிறுத்துமாறு வேண்டுகோள் விடுப்பார். ஹரிஜனக் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புமாறு வற்புறுத்துவார். சுற்று வட்டார கிராமங்களுக்குச் சென்று மக்களிடையே மகாத்மா காந்தியைப் பற்றி கூறுவார். காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றியும் அதன் நிர்மாணப் பணிகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுவார். ஆங்கில அரசிடமிருந்து இந்தியா விடுதலை பெற வேண்டும் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்வார். ராட்டையில் நூல் நூற்பது பற்றியும், கதராடை அணிவது பற்றியும் எடுத்துரைப்பார்.

அன்றாடம் தம் பணி முடிந்ததும் தமது அறைக்குச் சென்று விடுவார். தேவாரம், திருவாசகம், நாலடியார், திருக்குறள், ராமாயணம், மகாபாரதம், ஆன்மீக நூல்கள், தேசியத் தலைவர்களின் வரலாறு ஆகியவற்றை மிகவும் ஆழ்ந்து படிப்பார். படித்ததைப் பற்றி சிந்திப்பார். சீர் தூக்கிப் பார்த்து மனதிலே இருத்திக் கொள்வார். ஹரிஜனக் குழந்தைகளுக்கு தலையில் எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுவார். அக்குழந்தைகளின் உடைகளை துவைத்து சுத்தம் செய்வார். ஹரிஜன சேவை ஹரிக்கு செய்யும் சேவை என விளக்கம் தருவார். சேரியிலுள்ள பெரியவர்களுக்கு நல்லபல அறிவுரைகளை எடுத்துக் கூறுவார். அவைகளைக் கைக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வார். அம்மக்களும் இவரை அன்புடன் 'கதர் ஐயா' என அழைப்பார்கள். ஆனால் ராமசாமியின் இச்செயல் ஊர் மக்களில் ஒரு சாராரின் மனச்கசப்பை அதிகரிக்கச் செய்தது. " இவன் சாதி என்ன? அவர்கள் ஜாதி என்ன? தீண்டத்தகாத அவர்களுடன் இந்த ராமசாமி இப்படி கூடி குலாவுகிறானே" என குமுறிய அவர்களுக்கு மனம் திறந்த ஒரு புன்முறுவலைத்தான் பதிலாகத் தந்து சென்று விடுவார். இவரது ஹரிஜனத் தொடர்பால் குடும்பத்தாரும் இவரை வீட்டிற்குள் அனுமதிக்க மனம் இசைந்த போதிலும், ஜாதிக் கட்டுப்பாடு காரணமாக இவரை வீட்டில் ஏற்க முடியவில்லை. ராமசாமியும் வீட்டைத் துறந்து வெளியில் இருப்பதென முடிவெடுத்தார். தனியாக ஒரு ரூம் (அறை) எடுத்துக் கொண்டார். தனக்கு ஆகாரம் கொண்டு வர ஒரு ஹரிஜன சிறுவனை அமர்த்திக் கொண்டார். ஊர் மக்கள் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் தன் வழியிலே தனது பணியைத் தொடர்ந்தார். இவரது சேவை மனப்பான்மையைக் கண்டு மகிழ்ந்த பலரும் அவ்வூரில் இருந்தனர். அவர்களின் ஆதரவு இவருக்கு கிட்டியது. கிராமத்தில் இவரை "ரூம் ராமசாமி" என்றே அழைத்து வந்தனர்.

அரசாங்கத்திற்கு மனுக்கள் மேல் மனுக்கள் அனுப்பியும், பலமுறை தக்க

அதிகாரிகளைக் கண்டு பேசியும் கிராமத்திற்கு அரசு ஆரம்பப் பள்ளியும், கிராம பஞ்சாயத்து சபையும், கூட்டுறவு சங்கம் ஒன்றையும் செயல்பட வழி வகுத்தார். இதனால் மக்களின் மகிழ்ச்சி அளவு கடந்து ஓங்கின. நாளுக்கு நாள் ராமசாமியின் பெயரும் புகழும் ஓங்கின. இவ்வளவு பணிகளுக்கிடையேயும் கிராம முன்சீப், கிராம கர்ணம், நில சர்வே ஆகிய தேர்வுகளை எழுதி முதன்மையாக தேர்ச்சி பெற்றார். கிராம முன்சீப் பதவியை வகித்தார். கைக்குத்தல் அரிசியிலுள்ள ஊட்டச்சத்துக்களைப் பற்றி மக்களிடையே பிரசாரம் செய்தார். மக்களுக்கு தட்டுப்பாடில்லாமல் கைக்குத்தல் அரிசி கிடைக்கத் தக்க வழிவகைகளையும் செய்தார். கிராம விவசாயத்தை மேம்படுத்த ஊரில் ஒரு அணை அவசியம் என ராமசாமி உணர்ந்தார். நீரை தேக்கி விவசாயம் மேற்கொண்டால் நல்ல விளைச்சலை காணலாம், கிராமப் பொருளாதாரமும் உயரும், விவசாயிகளும் வளம் பெறுவார்கள் என திடமாக நம்பினார். கிராமத்திற்கு அருகே உள்ள '***பெரும்பள்ளம்***' என்ற இடத்தில் இயற்கையாகவே எதிர்எதிராக உள்ள இரண்டு மலைப்பகுதிகளை இணைத்து அணை கட்டலாம் என அதற்குற்ற வரைபடங்களையும், நில சர்வே செய்த விபரங்களையும் ஒரு மனுவில் குறிப்பிட்டு அன்றைய ஆங்கில அரசுக்கு அனுப்பி வைத்தார். கெம்பநாயக்கன் பாளையத்தில் ராமசாமி இருந்தவரை அணை கட்டப்படவில்லை. அவர் அவ்வூரை விட்டு வெளியேறிய பின் 1988 ஆம் ஆண்டில் பெரும்பள்ளத்தில் அணை கட்டப்பட்டது. வெள்ளேகவுடர் பெற்ற அருமை குமாரர் ராமசாமி காங்கிரஸ் தியாகியாகவும், தன்னலமற்ற தொண்டராகவும், லட்சிய புருஷராகவும் அனைவரும் போற்றும் வண்ணம் ஊரில் வலம் வரத் தொடங்கினார்.

அந்நாளில் தேசிய இயக்கத் தலைவர்கள் பலர் அடிக்கடி கோவைக்கும், கோபிக்கும், சுற்று வட்டார கிராமங்களுக்கும் வருவார்கள். நாடு சுதந்திரம் பெற வேண்டியதின் அவசியத்தைப்பற்றி மக்களிடையே கூட்டம் போட்டு எடுத்துரைப்பார்கள். தேசியத் தலைவர்கள் வந்து விட்டால் ஓய்ச்சல் ஒழிவின்றி, அவர்களுக்கான சகல உதவிகளையும் செய்து தருவார் ராமசாமி. அவர்களும் ராமசாமியின் குணநலன்களையும், தன்னலமற்ற சேவையையும், காந்தீயத்தில் அவருக்குள்ள திடமான நம்பிக்கையையும் வானளாவப் புகழ்ந்து பேசி மகிழ்வார்கள். இத்தனை பணிகளுக்கு இடையிலும் ஊர்க்கோவில் திருவிழாவில் ராமசாமி நாடகம் போடுவார். அதில் தாமும் பங்கேற்று, உயர்வான கருத்துக்களை எல்லாம் பாமர மக்களும் புரிந்து கொள்ளுமாறு கூறுவார். அடுத்து கெம்பநாயக்கன்பாளையம் மாரியம்மன் கோவில் திருவிழா நாடகத்தில் ராமசாமி நடித்ததை இனிக் காண்போம்.

சத்தியமங்கலத்தில் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே நாடகத்தில் நடிப்பதை பெரும் வாய்ப்பாக கருதி நாடகத்தில் பங்கேற்று

வந்தார். படிப்பறிவில்லாத, நாகரீகம் சிறிதுமற்ற கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு காந்தீயக் நெறிகளையும், நாட்டின் சுதந்திரத்தையும், வாழும் வழிமுறைகளையும் அம்மக்களுக்கு விளக்க எவ்வளவு கூட்டங்கள் போட்டு எடுத்துரைத்தாலும் அம்மக்களுக்கு புரிய வைக்க முடியாது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறார் ராமசாமி. அம்மக்கள் பேசும் கிராமிய மொழியிலே நாடகங்கள்போடுவதின் மூலம் அம்மக்கள் ஓரளவாவது புரிந்து கொள்வார்கள் என்பதை தெரிந்து வைத்திருந்தார். கெம்பநாயக்கன்பாளையத்தில் அவ்வப்போது நடைபெறும் கோயில் திருவிழாக்களில் கட்டாயம் ராமசாமி நாடகம் போடுவார். ஏதாவதொரு நல்ல கருத்தை நாடகத்தின் மூலம் மக்கள் மனதிலே புகுத்தி விடுவார். இதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

10. மாரியம்மன் கோவிலில் மகத்தான நாடகம்

கெம்பநாயக்கன்பாளையம் மாரியம்மன் கோவிலில் வருடாவருடம் ஊர்மக்கள் கூடி திருவிழா நடத்துவார்கள். ஊரே விழாக்கோலம் பூண்டு விடும். ஒவ்வொரு வீட்டிலும் விருந்தினர் கூட்டம். பெண்கள் பயபக்தியோடு கோவிலுக்கு வந்து அம்மனை தரிசித்து செல்லுவார்கள். விழாக்காரியங்களில் ஆண்கள் பங்கு கொண்டு அங்குமிங்குமாக ஓடியாடி காரியங்களை செய்யும் அழகே தனிதான். நெற்றியிலே நீறும் குங்குமம் வைத்துக் கொண்டும் உடம்பெங்கும் சந்தனம் பூசிக்கொண்டு விழாவில் கோலாகலமாக கலந்து கொள்வார்கள் ஆண்மக்கள். அம்மன் நன்றாக அலங்கரிக்கப்பட்டு வீதிஉலா நடக்கும். சிறப்பான முறையில் சிறப்பு பூசனைகள் நடைபெறும். கோயில் வளாகமே முழுவதிலும் சிறுவர் சிறுமிகளின் ஆட்ட பாட்டங்கள் கண்களுக்கு பெருவிருந்தாக அமையும். ஊரே தேவலோகம் போல் காட்சியளிக்கும்.

வழக்கம்போல் இவ்விழாவில் ராமசாமியின் நாடகம் நடைபெற்றது. 'தனக்குத்தானே பேசிக்கொள்ளல்' என்ற நாடக உத்தியின்படி மேடையில் மக்களை நோக்கி பேசுகிறார். " ஏ. . . ராமசாமி. . . நீ இப்போ இந்த துறவி உடையில் இருக்கிறான். என் மனதில் நான் நினைத்திருக்கும் காரியம் நல்லவிதமாக நிறைவேறினால் இந்த ஊரிலேயே நான் இருப்பேன். எனது எண்ணங்கள் நிறைவேறாமல் போனால் எனது வாழ்நாள் முழுவதும் துறவியாகவே வாழ்வேன். இவ்வூரை விட்டும் வெளியேறிவிடுவேன்." நாடகத்தில் அவரது உள்ளத்தில் தோன்றிய எண்ணங்கள் தான் என்ன? அதை நாடகத்தின் மூலம் தெளிவாக்கியுள்ளார்.

"ஜாதி இந்துக்கள் ஹரிஜன மக்களையும் தம் உடன்பிறந்த சகோதரர்களாக மதிக்க வேண்டும். மக்கள் நேர்மையை கடைப்பிடிக்க வேண்டும். நியாயத்திற்கு தலை வணங்கும் மனப்பக்குவம் அனைவருக்கும் வர வேண்டும். நல்ல எண்ணங்கள் நல்ல லட்சியங்கள் மக்களிடையே உருவாக

வேண்டும். சட்டதிட்டங்களை மீறும் மனோபாவம் மக்களிடமிருந்து நீங்க வேண்டும். மனிதனை மாய்க்கும் மதுப்பழக்கம் அறவே ஒழிய வேண்டும். நல்ல பழக்கவழக்கங்கள், சீரிய சிந்தனைகள், நல்ல எண்ணங்கள் ஒரு மனிதனை தேவனது நிலைக்கு கொண்டு செல்லும் வழிகளாகும்.'' என்பதை நாடகத்தின் மூலம் வெளியிட்டார். பலரும் பாராட்டினார்கள். ஆனால், இவரது எண்ணங்களுக்கு நேர்மாறாக மக்களின் மனோபாவம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. இவற்றை கண்ட ராமசாமி மிகவும் மனம் நொந்து போனார். இம்மக்களை திருத்தவே முடியாதா என பலமுறை சிந்தித்தது உண்டு.

ஊரின் "கிராமப் பஞ்சாயத்து" நீதிமன்றத்திற்கும் இவரே தலைவராக இருந்து வந்தார். பல வழக்குகளை விசாரித்து நல்லமுறையில் தீர்ப்பளிப்பார். இவரது நெருங்கிய நண்பர் ஒருவர் பெரும் குடிகாரர். இவரிடம் ராமசாமி, பக்குவமாக குடியால் வரும் கேடுகளை பலதடவைகள் எடுத்துக்கூறியும், அவரது குடும்பம் அநியாயமாய் நசித்துப் போய்விடும் என எச்சரித்தும், பயனற்றுப் போய்விட்டது. தமது வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு அந்த நண்பர் குடியிலிருந்து மீளுவார் என்ற நம்பிக்கையில் பல தடவைகள் அவரது வீட்டிற்குச் சென்று குடியால் அழிந்த குடும்பங்களைப் பற்றிக்கூறுவார். மணிக்கணக்கில் பேசுவார். எவ்வளவு முயற்சித்தும் ராமசாமியின் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராயிற்று. " இந்த எனது ஒரு நண்பரையே மதுப்பழக்கத்திலிருந்து திருத்த முடியவில்லையே, அப்படியிருக்க ஊர்மக்களை எவ்வாறு திருத்தப் போகிறேன் என வேதனையில் ஆழ்ந்துவிடுவார்.

குடிப்பழக்கம் என்ற வேதாளம் மரத்திலிருந்து இறங்குவது போல போக்குக் காட்டி மீண்டும் மரத்தில் ஏறிவிடும் என ஹாஸ்யமாக தமது நண்பர்களிடம் கூறுவார். மனதிற்கு வேதனை தரும் விஷயங்களும், உற்சாகத்தை தரும் விஷயங்களும் மாறி மாறி வருவதைக் காண்பார். மனதை ஒருமுகப்படுத்த முருகன் கோவில் வளாகத்திற்கு சென்று தியானத்தில் ஆழ்ந்து விடுவார். என்றாவது ஒரு நாள் மக்கள் தீயபழக்கத்திலிருந்து விடுபடுவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தார். அமைதி அடைந்தார். வெகுவிரைவில் அவரது மன அமைதிக்கு பாதகம் விளைவிக்கும் செயல் ஒன்று கெம்பநாயக்கன்பாளையத்தில் தீயவர்கள் சிலரால் அரங்கேற்றப்பட்டது.

கிராம மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே ஈடுபடுத்திக் கொண்டு தன்னலம் சிறிதுமில்லாத சேவை செய்து வந்த ராமசாமிக்கா கிராமத்தில் விரோதிகள் உள்ளனர் என அறிந்தால் ஆச்சரியமாக உள்ளதல்லவா? அந்த நாளில் ஜாதி இந்துக்கள் ஹரிஜன மக்களை மிகவும் வெறுத்து ஒதுக்கி வைத்த காலம் அது. நாயினும் கேடாக அவர்களை நடத்தி வந்தனர். ராமசாமிக்கு அம்மக்கள்பால் அதிக ஈடுபாடு உண்டு. அவர்கள் நலனில் அக்கரை காட்டி ஆதரவு கொடுத்து வந்தார். இச்செயல் ஜாதி இந்துக்களின் விரோதத்தை அவருக்கு சம்பாதித்துக் கொடுத்தது.

11. மரக்கடத்தலால் விளைந்த வேதனை

கெம்பநாயக்கன்பாளையத்து மணியகாரராகவும் ராமசாமி இருந்து வந்தார். அரசுப்பணியாதலால் தமது காரியங்களில் மிக்க கவனமாக இருந்தார். கண்ணும் கருத்துமாக மணியகாரர் வேலையை பார்த்து வந்தார். சொல்லாலோ செயலாலோ மிகச்சிறிய தவறுகூட நேரக்கூடாது என்பதில் சர்வ ஜாக்கிரதையாக இருந்து வந்தார்.

திரு. மாணிக்கம் செட்டியார், திரு. முத்துசாமிக்கவுண்டர், திரு. காளியண்ணன் ஆகியோர் இவரது உற்ற நண்பர்கள் மட்டுமல்லாமல் இவரது பணியில் இவருக்கு உறுதுணையாகவும் இருந்து வந்தனர். எப்பணியானாலும் ராமசாமி இவர்களுடன் கலந்து பேசியே முடிவெடுப்பார். கிராம மணியகாரர் பதவியில் பணப்புழக்கம் இருக்க வாய்ப்பு அதிகமாதலால் நீறு பூத்த நெருப்பாக இருந்து வந்தார். சிறு தவறு நேர்ந்தாலும் சம்மந்தப்பட்ட ஊழியர்களை கடுமையாக கண்டிப்பார்.

இவ்வூரில் அரசுக்கு சொந்தமான ஏராளமான மரங்கள் புறம்போக்கு நிலத்தில் வாட்டசாட்டமாக வளர்ந்து நின்றன. மதிப்பு மிக்க மரங்கள். அவ்வூர் S.K. கவுடர், கரீம்பாய் ஆகிய இருவரும் திட்டம் தீட்டினர். இம்மரங்களை வெட்டி கடத்திச் சென்று விற்றால் ஏராளமான பணம் கிடைக்குமாதலால் அதற்கான தக்க சமயத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர். கோவை கலெக்டர் ஆபீசுக்கு ராமசாமி சென்றிருந்தார். இதுவே சரியான தருணம் என மேற்படி இருவரும் புறம்போக்கு நிலத்திலுள்ள மரங்களை வெட்டி வண்டிகளில் ஏற்றிச் சென்றுவிட்டனர். கலெக்டர் ஆபீஸ் பணி முடிந்ததும் ராமசாமி ஊர் திரும்பினார். நடந்த சம்பவம் அறிந்தார். பெரும்கோபம் கொண்டார். எப்படியாவது மரக்கடத்தலை தடுக்க உறுதிபூண்டார். தாமதமின்றி செயல்பட்டார். ராமாண்டி பண்டாரம் என்பவரை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவிநாசி அருகாமையிலுள்ள காளியூர் குடிக்காடு என்னுமிடத்தில் மரம்கொண்டு சென்ற வண்டிகளை மடக்கிப்பிடித்தார். அவிநாசி நீதிமன்றத்தில் S.K.கவுடர், கரீம் பாய் ஆகிய இருவர் பேரிலும் அரசு மரங்களை வெட்டிக்கடத்தியதாக வழக்குப் பதிவு செய்தார். வழக்கு நடந்தது. ராமசாமிக்கே வழக்கு சாதமாக முடிந்தது. நியாயம் வென்றது என்ற களிப்பில் இருந்தார்.

ஆனால் இது நீடிக்கவில்லை. மேற்படி தீர்ப்பை எதிர்த்து கரீம்பாய், கவுடர் கோஷ்டி கோவை மேல்கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். வழக்கும் தொடர்ந்தது. கரீம் பாய் கோஷ்டிக்காக ஈப்பன்துரை என்ற ஆங்கிலேய வக்கீல் வாதாடினார். கிரிமினல் வழக்குகளில் வாதாடுவதில் பெரும் வல்லமை பெற்றவர் இவர். இவரது சாமர்த்தியத்தை கண்டு மக்கள் இவரை 'எட்டுக்கை வக்கீல்' என அழைத்தனர். வழக்கின் முடிவைக் கூற "பென்ச்" அமைக்கப்பட்டது. கவுடர் வகையறாவினர் நேர்மைக்கு மாறாக நடந்தும், கையூட்டு கொடுத்தும் வழக்கின்

போக்கையே மாற்றிவிட்டனர். வழக்கின் முடிவு கவுடர் கோஷ்டிக்கே சாதமாகஅமைந்து விட்டது. அவர்களுக்கே தீர்ப்பு வழங்கப்பட்டது. நியாயத்திற்கு கிடைத்த தோல்வி கண்டு அதிர்ந்து போனார் ராமசாமி. சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தார். மற்றொரு அவமானத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை அவருக்கு எதிராக உருவாயிற்று.

12. தோட்டா லைசென்சால் விளைந்த கேடு

ஆங்கில அரசு ஆட்சி செய்து வந்த அந்த நாளில் கிராமங்களில் கிணறு வெட்ட பாறைகளை தகர்க்கும் வெடி மருந்து தோட்டாக்களுக்கான லைசன்ஸ் தரும் அதிகாரம் கிராம மணியகாரரிடம் இருந்தது. புதிதாக கிணறு வெட்டவோ அல்லது வெட்டிய கிணற்றில் பாறைகளை தகர்த்து மேலும் ஆழபடுத்தவோ விரும்பும் விவசாயிகள் கிராம மணியகாரரிடமிருந்து தோட்டா லைசென்ஸ் பெற மனுக்களை தருவார்கள். மனுக்களை பரிசீலித்த மணியகாரர் ராமசாமி சம்மந்தப்பட்ட நபருக்கு தோட்டா பெற்றுக் கொள்ள லைசென்ஸ் தருவார். இதற்காக ஒவ்வொரு மனுவுக்கும் இரண்டணா (அந்நாளில் 24 பைசா) வசூலிப்பார். இவ்வாறு வசூலிக்கும் பணத்தில் சோப்பு,சீயக்காய், எண்ணெய் வாங்கி ஹரிஜன குழந்தைகளை நீராட்டி, தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். ஊரார் அனைவரும் இதனை அறிவார்கள்.

ஒரு நாள் தனது தோட்டத்து கிணறை ஆழப்படுத்த கொண்டம்மாள் என்பவள் தோட்டா லைசென்ஸ் பெற மணியகாரரிடம் மனுக் கொடுத்தாள். அதை பரிசீலித்த ராமசாமி, அப்பெண்ணிடம் இரண்டணா தருமாறு கேட்டார். அப்பெண்மணி பணம் தர மறுத்தாள். மணியகாரர் கையூட்டு கேட்பதாக சத்தம் போட்டாள். கண்டபடி ஏசினாள். அவரை தியாகி என்றும், தொண்டர் என்றும் மக்கள் கூறுவதெல்லாம் வெளிவேஷம் என குற்றம் சாட்டினாள். அதிர்ந்த போன ராமசாமி அப்பெண்ணிடமிருந்து இரண்டணா பெறாமலே தோட்டா லைசென்ஸ் கொடுத்தனுப்பி விட்டார். இதையறிந்த அவரது நண்பர்களும் ஊர் மக்கள் பலரும் துக்கத்தில் ஆழ்ந்த ராமசாமியை தேற்றினார்.

இதில் குறிப்பிடத் தக்கது என்னவென்றால் அப்பெண்ணும் ஹரிஜன குலத்தை சேர்ந்தவள். தன் இன குழந்தைகளுக்காகத்தான் அவர் வசூலிக்கும் பணத்தை செலவிடுகிறார் எனத் தெரிந்தே அவள் இவ்வாறு அவரை ஏசியிருக்கிறாள். அவளாகவே இவ்வாறு நடந்து கொண்டாளா? அல்லது எவரின் தூண்டுதல் பேரில் அவ்வாறு நடந்து கொண்டாளா? என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். தம்மீது பொறாமை கொண்ட சிலரது வேலையாகவும் இது இருக்கலாம்” என ராமசாமி தீர்மானித்தார். இதை இப்படியே விட்டு விடுவதுதான் நல்லது என பேசாமலிருந்து விட்டார். இவற்றையெல்லாம் கண்ட ராமசாமியின் உள்ளத்தில் பெரும்புயல் வீசிற்று.

மக்களுக்கு நல்லது செய்தாலும் குற்றம் காணுகிறார்களே என மனம் வெதும்பினார். பலநாள் சிந்தனைக்கு பின் ஒரு முடிவிற்கு வந்தார். என்னதான் நேர்மையாகப் பணியாற்றினாலும் இந்த சமூகத்தில் நேர்மைக்கும், நாணயத்திற்கும், மரியாதைக்கும், நியாயத்திற்கும் இடம் இல்லை என முன்பே குறிப்பிட்டுள்ள மரக்கடத்தல், தோட்டா லைசென்ஸ் போன்ற விவகாரங்களில் நேரிடையாகக் கண்டார். மணியகாரர் பதவியை விட்டு விடுவதுதான் இதற்கு சரியான வழி என தீர்மானித்தார். உடனே மணியகாரர் பதவியையும் ராஜினாமா செய்தார்.

மணியகாரர் பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்னால் பலநாள் சிந்தித்தார். நண்பர்களிடம் ஆலோசனை கேட்டார். நண்பர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் ராமசாமியின் எண்ணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ராஜினாமா செய்யக்கூடாது என வற்புறுத்தினர். ஆனால் ராமசாமியின் இதயத்தில் ஏற்பட்ட ரணம் ஆறவில்லை. மனம் வெதும்பினார். பதவி இருப்பதால் தானே இந்த பிரச்சனை? 'இப்பதவியின் மூலம் நான் எனது நலனிற்காக பணம் சம்பாதிக்கிறேன் என்றல்லவா ஆகிவிட்டது.'' என மிக்க வேதனையுற்றார் ராமசாமி. பதவியில்லாமலேயே ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்ய இயலுமே என்ற திடமான முடிவிற்கு வந்தார். பதவியை விட்டு விலகாதீர்கள் எனக்கூறிய அன்பர்கள் அனைவருக்கும் தக்க சமாதானம் கூறி அவர்களை தன்வழிக்குத் திருப்பினார்.

13. அரசியல் ஈடுபாடும் நிர்மாணப்பணிகளும்

1930 ம் ஆண்டு 20 வயதை நெருங்கிக் கொண்டிருந்தார் ராமசாமி. இந்த வயதிற்குள் பலதரப்பட்ட அனுபவங்கள், பலதரப்பட்ட மக்கள் மனோபாவம், உலகத்தின் நடைமுறைகள், மேல் மட்டத்தில் இருக்கும் மக்களின் மனப்பாங்கு ஆகிய அனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனியென புரிந்து கொண்டார். இதன் காரணமாக அவரது மனதும் ஒரு பக்குவ நிலைக்கு வந்துவிட்டது. குடும்பத்தாரும், உற்றம் சுற்றத்தாரும் எவ்வளவோ வற்புறுத்தியும் இல்லற வாழ்வில் ஈடுபட மறுத்துவிட்டார். இடையிடையே எத்தனை தோல்விகள் ஏற்பட்டாலும், அவமரியாதை ஏற்பட்டாலும், ஏச்சும் பேச்சும் குறுக்கிட்டாலும் எதையும் பொருட்படுத்தாமல் தாமரை இலை தண்ணீர் போல் வாழ்ந்து வந்தார். எது ஏற்படினும் மனித குலத்திற்கு சேவை செய்வதே தாம் பிறந்ததின் பயனாகக் கருதினார். மக்கள் சேவையோடு அரசியலிலும் தீவிரமாக ஈடுபட்டார். முன்பைவிட இன்னமும் தீவிரமாக காந்திய நெறிகளில் மனதை செலுத்தினார். கிராமந்தோறும் அடிக்கடி சென்று மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணினார். நூற்றுக்கணக்கான கிராம மக்கள் ராட்டையில் நூல் நூற்றனர்.கதராடை அணிய ஆரம்பித்தனர். கள்ளுண்ணாமையை அறவே

ஒழிக்க முடியாவிட்டாலும் ஓரளவு ராமசாமிக்கு வெற்றி கிடைத்தது. ஹரிஜனங்களில் பலர் பசுவதை செய்வதையும், பசு மாமிசம் சாப்பிடுவதையும் நிறுத்தி விட்டனர். இவையெல்லாம் அவருக்கு புதுவேகத்தினை ஊட்டின.

காந்தீயக் கொள்ளைகளை பத்து கூட்டங்களில் பேசுவதை விட, ஒரு நாடகத்தின் மூலம் நல்ல பல கருத்துக்களை மக்கள் மனதிலே புகுத்த முடியும் என்பதில் வெகுவாக நம்பிக்கை கொண்டிருந்தார். ஊர்த்திருவிழா ஒன்றில் ஜீவகாருண்யத்தை விளக்கும் நாடகம் ஒன்றை போட நினைத்தார். அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் ராமசாமி வெகுமும்மரமாக செய்து வந்தார். அந்நாடகத்தில் தாமும் நடித்தார். இந்நாடகத்தில் அவரது தோழர் மாணிக்கம் செட்டியார் தாய் வேடம் அணிந்தார். அவரது மகனாக ராமசாமி நடித்தார். திருவிழாவை முன்னிட்டு வீட்டிற்கு வந்த உறவினர்களுக்கு விருந்து வைக்க கோழி ஒன்றை தாயார் (மாணிக்கம் செட்டியார்) கொண்டு வந்து, அதன் கழுத்தை திருகிக் கொல்லும் வேளையில் மகன் (ராமசாமி) இதைப் பார்த்து விட்டார். பாய்ந்து வந்து அன்னையின் கையிலுள்ள கோழியை பிடுங்கி வெளியிலே வீசி விட்டார். கோழி பிழைத்தது. மகன் தாயாரை நோக்கி " அம்மா என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய். உயிர்க் கொலை செய்யலாமா? அது பெரும் பாவமல்லவா? அதன் உயிரை போக்கடித்து நம் வயிற்றை வளர்ப்பது எவ்வளவு கேவலம். ஜீவன்களிடம் கருணை காட்ட வேண்டும். அவைகளை வதம் செய்யக்கூடாது என்பதை நம்மூருக்கு வந்த காந்தீயத் தலைவர்கள் கூறியதை மறந்து விட்டாயா அம்மா? இனிமேல் நம் வீட்டில் சைவ உணவுதான் தயாரிக்க வேண்டும். செய்வாயா அம்மா? என உருக்கமாக தாயாரிடம் கூறுவதாக நாடகம் அமைந்திருந்தது.

இன்னொரு சமயம் "தீண்டாமை" என்னும் நாடகத்தில் ராமசாமி ஊர் மக்களைப் பார்த்து " அன்பர்களே நம்மோடு இருக்கும் ஹரிஜனங்களும் நம் சகோதரர்களே. அவர்கள் ஹரி (மகாவிஷ்ணு)யின் ஜனங்கள் என்ற உயரிய அந்தஸ்தை கொடுத்து ஹரிஜனங்கள் என்று மகாத்மா காந்தியால் அழைக்கப்பட்டனர். நம்மைப் போல அவர்களும் மனிதர்களே. அவர்களை கேவலப்படுத்தலாமா? நம் உடம்பில் ஓடும் ரத்தம்தானே அவர்கள் உடம்பிலும் ஓடுகிறது. அவர்களின் உழைப்பை ஏற்றுக்கொள்ளும் நாம், அவர்களை ஏற்றுக் கொள்ள மறுப்பது எந்த விதத்தில் நியாயம்? ஒரு மனிதன் இன்னொரு மனிதனை தீண்டத் தகாதவன் எனக்கூறுவது எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல. ஆண்டவன் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமம். ஆறறிவு படைத்த மனிதன் தீண்டாமையை ஒழிக்க பாடுபட வேண்டும். மகாத்மாவும் இதைத்தான் கூறுகிறார். அனைவரும் அவர்வழி நடப்போம் என்று இன்று சபதம் எடுப்போம்" எனக் கூறி முடிக்கின்றார்.

நாட்டு வைத்தியத்தில் ராமசாமி நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்ப்பார். ஒற்றை மாட்டுவண்டியில்

கிராமங்கள் தோறும் செல்வார். நோய்களால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு வைத்தியம் செய்வார். நோயிலிருந்து விடுபட்ட மக்கள் அடையும் ஆனந்தத்தைக் கண்டு இவர் மட்டில்லா மகிழ்ச்சி கொள்வார். ஏழை மக்கள் தங்களை காப்பாற்ற வந்த தெய்வம் என இவரைப் போற்றி புகழ்ந்தனர். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நோயாளிகள், ஏழை ஹரிஜனங்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரை வண்டியில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார். இச்சேவை செய்வதில் நேரம் காலம் எதுவும் பார்க்கமாட்டார். கூலித்தொழிலாளர்கள், ஏழை விவசாயக் கூலிகள்,ஹரிஜனப் பெண்கள், வயதான பெரியவர்கள் கூலிவேலை நிமித்தம் கெம்பநாயக்கன்பாளையத்திற்கு அருகிலுள்ள தாசம்பாளையம் என்ற கிராமத்திற்கு செல்ல சரியான பாதை வசதி கிடையாது. அன்று கூலி கிடைத்தால்தான் அன்று உணவு என்ற நிலையிலுள்ள அம்மக்கள்மேட்டிலும் பள்ளத்திலும் குண்டும் குழியுமான கற்கள் நிறைந்த, இருபுறமும்முட்செடிகள் நிறைந்த ஒற்றையடிப்பாதையில் நரக வேதனைப்பட்டுக் கொண்டு வயிற்றுப் பிழைப்பிற்காக சென்று வரும் அம்மக்களின் நிலை ராமசாமியின் கண்ணில் ரத்தக் கண்ணீரை வரவழைத்தது.

கிராமமக்களிடையே இந்நிலைமையை எடுத்துக்கூறி அவர்கள் ஒத்துழைப்புடன் இரு கிராமங்களுக்கும் இடையே நல்ல பாதையை அமைத்துக் கொடுத்தார். இதே போல் ஊருக்கு சற்று ஒதுக்குப்புறமாக உள்ள முருகன் கோவிலுக்கு மக்கள் சென்று வர சரியான பாதை ஒன்றையும் அமைத்துத் தந்தார். அந்த நாளில் கோவைக்கும், கோபிக்கும் காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி வருவார்கள். அப்போதெல்லாம் ராமசாமி அத்தலைவர்களை காண்பார். கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை செய்வார். தலைவர்கள் பேசியபின் இவரும் பேசுவார். ஒரு சமயம் கொங்கர்பாளையம் என்னும் ஊரில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார். அப்போது ராஜாஜி தாம் எழுதிய "தம்பீ வா" என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா நடந்தது. அப்புத்தகத்தில் உள்ள அருமையான கருத்துக்களை புகழ்ந்தும், இளைஞர்களுக்கான 'வழிகாட்டி நூல்' என்றும் அக்கூட்டத்தில் ராமசாமி பேசினார். தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்களான திரு. மாதவ மேனன், திரு. கக்கன், திருமதி. குட்டியம்மாளு அம்மாள், திரு. சிவ சண்முகம் பிள்ளை ஆகியோர்களை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

கிராம மக்களுக்கு அரசால் ஆகவேண்டிய காரியங்களைப் பற்றி கோவை கலெக்டர் ராயப்பாவிடம் அடிக்கடி சென்று பேசுவார். தன்னலமற்ற தியாகி ராமசாமியிடம் கலெக்டர் ராயப்பா அவர்கள் மணிக்கணக்கில் பேசி மகிழ்வார். காங்கிரஸ் தலைவராக கோபிசெட்டிபாளையத்தில் திரு. லக்ஷ்மண ஐயர் பெரும்பங்கு வகித்தார். அவர் கெம்பநாயக்கன்பாளையம் ராமசாமிதான் எங்களின் ஒப்பற்ற தலைவர் என குறிப்பிட்டுள்ளார். கோபியில் ராமசாமி,

ஐயருடன் சேர்ந்து ஆற்றிய பணிகள் மகத்தானவை. அத்தகைய போற்றத்தக்க சேவையைக் காண்போம்.

14. கோபியில் வலம் வந்த ராமசாமி

"கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்ற மூதுரைக்கேற்ப கெம்பநாயக்கன்பாளையத்து தியாகசீலர் ராமசாமியும் கோபிசெட்டிபாளையத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த லக்ஷ்மண ஐயரும் ஒருவருக்கொருவர் ஐக்யமாயினர். ராமசாமியை தம் தலைவர் என்றும் அரசியல் குரு என்றும் ஐயர் வெகுவாகப் பாராட்டி பேசுவார். ஒத்த பணியில் இருவரும் இருந்தமையால் இவர்களிடையே நட்பும், தொடர்பும் நாளுக்கு நாள் வளரலாயிற்று.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து அடிமை பாரதத்தை விடுவிக்கும் தியாக வேள்வியில் தங்களது உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அர்ப்பணித்த லட்சோபலட்ச தியாகிகளிடையே தமிழ்நாட்டில் கெம்பநாயக்கன்பாளையத்தில் ராமசாமி அவர்களும், கோபிசெட்டிபாளையத்தில் லக்ஷ்மண ஐயர் அவர்களும், மகாத்மா காந்தியின் தேசீய விடுதலை இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட தேச பக்தர்கள் ஆவார்கள்.

இன்றைய பாரதத்தின் இளைஞர்களுக்கு, உலக அரங்கிலே தங்களது நாடு சுதந்திரமான மாபெரும் ஜனநாயக நாடாக வீர நடை போட்டு வருகின்றது என்பது மட்டுமே தெரியும். பாரதத்தின் பார்புகழும் விடுதலைக்கதையைப் பற்றியும் அக்கதையின் தீரமிக்க கதாநாயகனான மகாத்மா காந்தியைப் பற்றியும் முழுமையாக அறியமாட்டார்கள். பாரதத்தின் விடுதலை சுலபமாகவா கிடைத்தது? சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை பணிய வைத்த பாரத மக்கள் கைக்கொண்ட தியாகத்தை அளவிட்டுத்தான் கூறமுடியுமா? பாரத மக்களின் தியாக வரலாற்றை இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்நாட்டின் விடுதலைக்காக தம் முன்னோர்கள் தந்த "விலையை" இன்றைய இளைய சமுதாயம் புரிந்து கொண்டால்தான் எதிர்கால பாரதத்தின் தீரமும் விவேகமும் பேராற்றலும் மிக்க "காப்பாளர்களாக" வரமுடியும்.

1931 லிருந்து 1940 வரை கெம்பநாயக்கன்பாளையத்து மக்கள் தொண்டரும் செயல் வீரருமான ராமசாமி, கோபி ஐயருடன் இணைந்து தேசீய இயக்கத்தில் பணியாற்றியது அவரது வாழ்வின் முதற்கட்ட வரலாறு ஆகும். பகவான் பரமஹம்ஸரால் ஆட்கொள்ளப்பட்டு தேசீய இயக்கத்திற்கு நேர்மாறான ஆன்மீக உணர்வுடன் தரித்திர நாராயணர்களின் சேவைக்காக துறவாஸ்ரமம் கைக்கொண்டு தம்மையே அப்பணிக்கு ஈந்தது அவரது வாழ்வின்

இரண்டாவது கட்ட வரலாறு ஆகும். இங்கு அவரது முதற்கட்ட வாழ்க்கை வரலாறு விவரிக்கப்படுகிறது. இந்த நாட்கள் காங்கிரஸ் இயக்கத்தின் விடிவெள்ளி காணும் எழுச்சி மிக்க சம்பவங்களால் பின்னப்பட்டதாகும்.

கோபி ஐயரின் வரலாறும் அற்புதமான கட்டங்களை கொண்டதாகும். தேசிய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக கலந்து கொண்டதின் காரணமாக ஆங்கில அரசு அவரை பல்லாண்டுகள் சிறையிலடைத்தது. இது ஐயரின் முதற்கட்ட வரலாறு ஆகும். நாட்டு விடுதலைக்குப்பின் இன்று, அமைதியாக, தன்னை நாடிவரும் ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்து வருகின்றார். இங்கு அவரது முதற்கட்ட வாழ்வின் நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன.

அடிக்கடி கோபிக்கு சென்று ஐயரை சந்தித்து பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ராமசாமி. விடுதலை இயக்கத்தைப் பற்றி மணிக்கணக்கில் இருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள். ஐயர் குடும்பத்தார் ராமசாமியிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தனர். தங்களது குடும்பத்தில் அவரையும் ஒருவராகக் கருதி உபசரித்து மகிழ்ந்தனர். ஐயரின் குழுவிற்கு இவரே தலைவர், வழிகாட்டி மற்றும் ஆலோசகராகத் திகழ்ந்தார். போராட்டங்களை மிகவும் ஆலோசித்து திட்டமிட்டுத் தருவார். அவற்றை வெற்றிகரமாக நடத்திக் காண்பிப்பார் ஐயர். இருவரையும் ராம லட்சுமணர் என்றே மக்கள் கருதினர். காந்தீயப் பிரச்சார கூட்டம் நடத்த ஐயர் திட்டமிடுவார். தகவல் உடனே ராமசாமிக்கு எட்டும். அவரும் கோபி வந்துவிடுவார். இரவு முழுவதும் இரு தலைவர்களும் பேசி முடிவிற்கு வருவார்கள். பிரச்சாரக்கூட்டம் பற்றிய நோட்டீஸ் வாசகத்தின் நகல் தயாராகிவிடும். தொண்டர்கள் ஒன்று கூடி வாசகத்தை தனித்தாளில் எழுதுவார்கள். போலீசாரின் கெடுபிடிகளுக்கு பயந்து அச்சாபீஸ் முதலாளிகளும் இவர்களுக்கு நோட்டீசை அச்சடித்துத்தர முன்வரமாட்டார்கள்.தொண்டர்களின் உற்சாகம் தலைவர்களையும் பற்றிக் கொள்ளும்.

ராட்டைச் சின்னம் பதித்த மூவர்ணக் கொடிகளை நீண்ட குச்சிகள் உச்சியில் கட்டிக் கொண்டு தொண்டர்படை வரிசைக்கு நான்குபேர்களாக வீரநடை போட்டு கிராமங்களை நோக்கிச் செல்லும். பாரதியின் எழுச்சிமிக்க "நெஞ்சு பொறுக்குதில்லையே" "எந்தையும் தாயும்" "வந்தே மாதரம்" "சொந்த நாட்டினிலே அடிமையாக" "சதையை துண்டு துண்டாக வெட்டிடினும்" ஆகிய பாடல்களை ஐயர் உரத்துப்பாடுவார். தொண்டர்கள் தொடர்ந்து பாடுவார்கள். கிராமத்தை அடைந்தவுடன் "போஸ்டர்கள்" வீட்டுச்சுவர், கோயில் சுவர், மரங்களில் ஒட்டப்படும். இவர்களின் குழுவில் பொன்னம்பலக்கவுண்டரும், நரசிம்மனும் இன்னும் பலரும் பெரும் பங்கு வகித்தனர்.

கோபி மிராசுதாரர்களிடம் ஹரிஜனங்கள் படும் அவதியைக் கண்டு அந்தக் கொத்தடிமை நிலையிலிருந்து அவர்களை விடுவிக்க ராமசாமி தீர்மானித்தார். அவர்களுக்கு வேலைக்கேற்ற கூலியில்லை. முழுவயிற்று சோற்றை அவர்கள்

என்றுமே கண்டதில்லை. சுகாதாரம் என்பது அறவே இல்லை. சிறைக்கைதிகளை விட கேவலமாக நடத்தப்பட்டார்கள். இரு தலைவர்களும், பலநாள் யோசித்தார்கள். எப்பாடுபட்டாகிலும் இவர்களின் மனவேதனையை போக்கி இம்மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க தீர்மானித்தனர்.

போலீசாரின் கவனம் இவர்கள் மீது இருந்தமையால், பகல் நேரத்தில் இவர்கள் கூடிப்பேச மாட்டார்கள். ஊருக்கு அடுத்துள்ள மயானத்தில் ஒரு கோடியில் உள்ள ஒரு வீட்டில் இரவு 10, 11 மணிக்கு மேல் தலைவர்களும், தொண்டர்களும் கூடுவார்கள். பல விஷயங்கள் இவ்வீட்டில்தான் ஆலோசிக்கப்படும். பொதுமக்கள் இந்த வீட்டை 'பேய்வீடு' என்றழைப்பது வழக்கம்.

கோபி மிராசுதாரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த ஹரிஜனங்களைப் பற்றிய விவாதங்கள் இவ்வீட்டில்தான் நடந்தது. இறுதியில் ராமசாமியும், ஐயரும் ஒரு முடிவிற்கு வந்தனர். நிலச்சுவான்தார்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து ஹரிஜனங்களை அவர்கள் பிடியிலிருந்து விடுவிப்பது என முடிவாயிற்று. தனம் மனம் படைத்த மக்களை அணுகினர். ஹரிஜனங்கள் புழுவை விட கேவலமாக நடத்தப்படுவது பற்றியும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பது மக்கள் அனைவரின் கடமை என்றும் பிரச்சாரம் செய்தனர். இரு தலைவர்களின் பேச்சிலும் மனதை பறிகொடுத்தனர். தங்களால் இயன்ற பணத்தை கொடுத்தனர். இந்த தீவிரமான வசூலின் காரணமாக போதுமான தொகை சேர்ந்தது.

'பேய் வீட்டில்' தலைவர்களும் தொண்டர்களும் கூடினர். நிலச்சுவான்தார்களை சந்தித்துப் பேச ஒரு நாளைக் குறிப்பிட்டனர். அந்த நாளும் வந்தது. தொண்டர்கள் சூழ ஐயரும் ராமசாமியும் மிராசுதார்களை சந்திக்கப் புறப்பட்டனர். தாங்கள் வந்திருப்பதின் நோக்கத்தைப் பற்றி நிலச்சுவான்தார்களிடம் பேசினர். ஹரிஜனங்களை கொத்தடிமையிலிருந்து விடுவிப்பது அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை என்றும், அவர்கள் நெஞ்சிலே படுமாறு ஐயரும், ராமசாமியும் எடுத்துரைத்தனர். இத்தலைவர்களின் பேச்சு பலனளித்தது. மிராசுதாரர்களிடையே, தன்னலமற்ற இவ்விரு தேசத் தியாகிகளின் வேண்டுகோள் பெரும்மாற்றத்தை ஏற்படுத்தியது. ஹரிஜனங்களை தங்களது பிடியிலிருந்து விடுவிக்க சம்மதம் தெரிவித்தனர்.திருவாளர்கள் கோபி ஐயரும், ராமசாமியும் தருவதாகக் கூறிய ஈட்டுத்தொகையை மிராசுதாரர்களே பெற மறுத்துவிட்டனர். இந்நிகழ்ச்சி காரணமாக இவ்விரு தேசத்தலைவர்களும் அனைவராலும் பாராட்டப்பெற்றனர்.

"ஜாதியில் பள்ளன் என்றும் பறையன் என்றும், அடிமை என்றும் இனி எவனுமில்லை" எனப் பாடிய பாரதியின் வாக்கு கோபியில் கடைப்பிடிக்கப்பட்டு விட்டது. எவ்வளவுதான் மக்களுக்காக பாடுபட்டாலும், அவ்வப்போது நிகழ்ந்த சில நிகழ்வுகள் ராமசாமியை பெரிதும் பாதித்தன. வெகுவாக மனம்

கலங்கினார். மக்களில் கணிசமான பேர்களைக் கொண்ட ஒரு கூட்டம் ஆங்கில அரசுக்கு ஆதரவு காட்டினர். தேசியத் தலைவர்களை கேவலப்படுத்தினர். தேசீய இயக்கக் கூட்டங்கள் நடைபெறாமல் தடுத்தனர். ஏராளமான கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பாடுபடுவதால் என்ன பயன் என மனம் வெறுத்த ராமசாமி சந்நியாசம் பூண்டு வெளியேறிவிடலாம் என்ற முடிவிற்கு வந்து விட்டார்.

"விவேகம் இல்லாத மக்கள், சிந்திப்பது என்பது என்னவென்றேயறியாத மக்கள், சுதந்திர உணர்வை புரிந்து கொள்ள முடியாத மக்கள், காந்தீயத்தைப் பற்றி அறவே கேள்விப்படாதவர்கள் இம்மக்கள். என்றாவது ஒரு நாள் காலம் நிச்சயம் இவர்களை மாற்றும். தங்களது அறியாமையை எண்ணி வெட்கப்படும் நாள் வரும். தைரியமாக இருக்கவேண்டியது நாம்தான். நம் சேவை தொடர வேண்டும்" என கோபி ஐயர் பலவாறாகக் கூறி ராமசாமியை சமாதானப்படுத்துவார்.

ஒரு சமயம் கெங்கர்பாளையத்தில் ராஜாஜி கலந்து கொள்ள இருக்கும் ஒரு கூட்டத்தை ராமசாமி ஏற்பாடு செய்தார். ராமசாமியும் ஐயரும் அதில் பேசினர். " தம்பீ வா" "ஊருக்கு நல்லது" " இதையும் படி" என்ற சிறிய நூல் தொகுப்புகள் கூட்டத்தில் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு பின்தான் ராமசாமியின் வாழ்விலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்றிருந்தவர், ஆன்மீக சேவைக்கு திருப்பப் பட்டார். தக்க இடத்தில் அதைப் பற்றிய செய்திகள் விளக்கப்படும்.

கோபி ஐயரின் கண்ணோட்டத்தில் ராமசாமியைப் பற்றி அவர் கூறியதோடு, இத்தலைப்பை முடித்துக் கொள்வோம். " இளைஞர் ராமசாமி சாதாரண மனிதர் அல்லர். பார்ப்பதற்கு எளிமையாக காட்சிதரும் அவரிடம் அளப்பறிய ஆற்றல் ஒளிந்து கொண்டிருப்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். தலைமைப் பொறுப்புக்குரிய குணநலன்கள் அனைத்தையும் பெற்றிருந்தார். அவரே எங்கள் தலைவர். மறுபேச்சு பேசாமல் அவர் வழி நடப்போம். ஹரிஜன மக்களை தன் உடன்பிறந்தவர்கள் என்றே நினைத்து வந்தார். காந்தீய இயக்கத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். ஒழுக்க சீலர். நேர்மையானவர். சொல், செயல், நடத்தை, வாழ்வு ஆகிய அனைத்திலும் சத்திய உணர்வோடு செயல்பட்டார். அரிதினும் அரிதான மனிதராக திகழ்ந்தவர்" என கோபி ஐயர் ராமசாமியை போற்றிப் பாராட்டி இருக்கிறார்.

15. பராய்த் துறையில் வலம் வந்த உத்தம ஞானி

1940 ம் வருடம் திருப்பராய்த்துறை சிவாலய கும்பாபிஷேகம் நடந்த போது, அத்திருத்தலத்திற்கு சிவனடியாரைப் போல, கனலை ஒத்த காவியுடை தரித்த சுவாமிகள் ஒருவர் வருகை தந்தார்.நடுத்தர வயது. மாநிறம். ஆஜானுபாகுவான மேனி. மிடுக்கான நடை. வயது 42. பார்ப்போரின் இதயங்களை ஊடுருவிச் செல்லும் கண்கள். அருளை அள்ளித் தரும் திருமுகம் கொண்டவராக காட்சி தந்தார்.

மக்கள் கூட்டம் அவரைக் காண அலைமோதிற்று. தெய்வத் திருவருளை பூரணமாக பெற்றவர் இவர் என பார்த்த மாத்திரத்தில் பராய்த்துறை வாசிகள் கண்டு கொண்டனர். அவரை வணங்கி நீறு பெற்று ஆனந்தம் எய்தினர். பராய்த் துறையில் ஆஸ்ரமம் ஒன்றினைத் தோற்றுவித்து ஆன்மீகக் கல்வி போதிக்கும் பள்ளி ஒன்றினையும் ஆரம்பிப்பதே அவரது நோக்கமாக இருந்ததை அறிந்த மக்கள், தங்கள் ஊருக்கு கிடைத்த பேறை எண்ணி எண்ணி ஆனந்தமடைந்தனர். இவர் யார் என்பது அம்மக்களுக்கு வெகுவிரைவில் புரிந்தது.

அப்பெருமகனார் இளமையிலிருந்தே ஆன்மீக வழிகளில் நாட்டம் கொண்டிருந்தார். உயர்நிலைக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் கற்றபின் இவரது மனம் துறவறத்தை நாடியது. ராமகிருஷ்ண மடத்துத் துறவிகளிடம் அதிகமான தொடர்பு வைத்திருந்தார். பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் பூரண சரணாகதியடைந்தார். இவரது விருப்பத்தை அறிந்த குடும்பத்தாரும், இவர் துறவியாவது குறித்து மட்டில்லா மகிழ்ச்சியடைந்தனர். இவரும் பேலூர் சென்றார். அங்கு சிவானந்த சுவாமிகள் இவருக்கு துறவாஸ்ரமம் அளித்தார். இவரது தீட்சா நாமம் சுவாமி சித்பவானந்தர் என்பதாகும். 1923 ஆம் ஆண்டிலே தீட்சை பெற்ற இவர் பேலூர் மடத்திலும், ஊட்டி ராமகிருஷ்ண மடத்திலும் அரும் பணியாற்றி வந்தார். பேலூர் தலைமை மடம் இவரை வெளிநாடு செல்ல வேண்டுமென்று பணித்தது. ஆனால் சித்பவானந்தரோ தமிழக மக்களுக்கே தம் சேவை அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் வெளிவந்து விட்டார். திருப்பராய்த்துறையின் மேன்மைகளை முற்றிலுமாக அறிந்த இவர் தமது ஆன்மீகப்பணிக்கு இத்தலம்தான் ஏற்றது என்ற முடிவிற்கு வந்தார்.

முன்னேற்பாட்டின்படி சித்பவானந்தசுவாமிகளின் மெய்யன்பர் வக்கீல் ராமநாதன் செட்டியார் அவர்களும், சிவாலய தர்மகர்த்தா திரு. அருணாசலம் செட்டியார் அவர்களும் சுவாமிகளை அன்போடு வரவேற்று சிவாலய வளாகத்தினுள்ளே தங்கியிருக்க ஏற்பாடுகளை செய்தனர். ஆலயத்தின் 'காம்பவுண்டிற்குள்' வலது மூலையிலுள்ள நெட்டுக் கட்டடத்தில் சுவாமிகள் தங்கினார்கள். கோவை மாவட்டம் சிக்காரம்பாளையம் பெருநிலக்கிழாரும், ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவரும், தூய காந்தி பக்தரும் தேசீய

காங்கிரஸ் இயக்கத்தில் அதிக நாட்டமுடையவரும் இல்லற ஞானியுமான உயர்திரு C.U. நஞ்சப்பா அவர்கள் சித்பவானந்த சுவாமிகளின் மற்றொரு மெய்யன்பர் ஆவார். அடிக்கடி கோவையிலிருந்து வந்து சுவாமிகளை சந்திப்பார்.

சுவாமிகளின் திட்டத்திற்கும் ஆன்மிகப்பணிகளுக்கும் அவருக்கு உதவியாக ஒரு பிரம்மசாரி தேவை என்பதை நஞ்சப்பாஅவர்கள் உணர்ந்து கொண்டார்.

வெகுவிரைவில் அதற்கான ஏற்பாடுகளை செய்து தக்க பிரம்மசாரி ஒருவரை அனுப்புவதாக ஒருசமயம் திருப்பராய்த்துறை வந்திருந்த நஞ்சப்பா சித்பவானந்த சுவாமிகளிடம் கூறி விடைபெற்றுச் சென்றார். சித்பவானந்த சுவாமிகளின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு மிகவும் ஏற்ற பிரம்மசாரி யார் என மனதிற்குள்ளே அசை போடலானார் நஞ்சப்பா அவர்கள். ஏதோவொரு தெய்வீக சக்தி அவரது மனதில் வேலை செய்ய கெம்பநாயக்கன்பாளையம் காந்தீயத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பிரம்மசர்யத்தில் பெரும்பற்று கொண்ட ராமசாமியின் ஞாபகம் இவரது நினைவுக்கு வந்தது. ராமசாமியை அழைத்து வர ஏற்பாடுகளை செய்து முடித்தார் நஞ்சப்பா அவர்கள். ராமசாமியும் நஞ்சப்பா அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப சிக்காரம்பாளையம் வந்து பெரியவரை சந்தித்தார்.

திருப்பராய்த்துறையில் சுவாமி சித்பவானந்தர் தொடங்கி இருக்கும் ஆன்மீகப்பணிகளுக்கு, அவருக்கு உதவியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார் நஞ்சப்பா அவர்கள். ராமசாமியும் தமது ஒப்புதலை மனப்பூர்வமாக தெரிவித்து திருப்பராய்த்துறைக்கு விரைவில் செல்லுவதாக கூறி பெரியவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

தேசத்தொண்டனாக இருந்த ராமசாமி, பிரம்மசாரி ராமசாமி அடிகளாக மாறினார். தேசிய இயக்கம் அவரை வாழ்த்தி வழியனுப்பியது. ஆன்மீக உலகு இருகை விரித்து அவரை அணைத்தும் கொண்டது. எந்தவொரு நோக்கத்திற்காக ராமசாமி படைக்கப்பட்டாரோ அந்த நிலை சிறிது சிறிதாக ராமசாமி அடிகளை நோக்கி வரத்தொடங்கியது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என ஏழைமக்களுக்கு தொண்டு புரிந்து வந்த ராமசாமி ஆன்மீக வாழ்க்கையில் நுழைவதற்கு மூலகாரணமாக இருந்தவர் சிக்காரம்பாளையம் பெருமகனாரான நஞ்சப்பா அவர்களே என்றால் அது மிகையாகாது.

விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மனித வாழ்க்கையில் சில திருப்பங்கள் அவ்வப்போது நிகழ்ந்து விடுகின்றன. இதை விதியின் விளையாட்டு என்றும் கூறலாம். அந்த விதியின் விளையாடல் எவ்வாறெல்லாம் வேலை செய்து ராமசாமி அடிகளாரை புடமிட்ட தங்கம் போல் மாற்றியமைத்தது என்பதை போகப்போக விரிவாகக் காணலாம்.

16. பிரம்மசாரியின் லட்சியப் பயணம்

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு காரண காரியங்களுக்காக ஆண்டவனால் படைக்கப்பட்டு பூமிக்கு அனுப்பப்படுகிறான். படைத்த படைப்பின் ரகசியம் பிறப்பின் போது உலகிற்கு தெரிவதில்லை. காலம் கனியக்கனிய எந்தவொரு லட்சியத்திற்காக அவன் அனுப்பப்பட்டானோ அது நிறைவேறும் காலம் வந்தவுடன் அந்த மகா சக்தியின் அருளாசி அந்த மனிதனுக்கு கிடைத்து விடுகிறது. மக்கள் இனத்திற்கு தொண்டாற்றி அவர்களை மேல்நிலைக்கு உயர்த்த தோன்றிய மகான்களும், மாபெரும் சாதனைகளை சாதித்த சாதனையாளர்களும் இம்முறையில்தான் பரம்பொருளின் ஆதேசம் பெற்று உயர்ந்த மனித ஆத்மாக்களாக பூமியிலே அவதரிக்கின்றனர்.

அந்த மகாசக்தியின் அருளமுதம் கிடைத்த மாத்திரத்தில் அப்புனித ஆத்மா தனக்கிட்ட பணியை நிறைவேற்ற, குகையிலிருந்து புறப்பட்ட சிங்கத்தின் புதிய சிலிர்ப்போடு சக்தி பெற்ற மகாபுருஷனாக வலம் வர ஆரம்பிக்கின்றான். அந்த வகையில் கெம்பநாயக்கன்பாளையத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த ராமசாமி ஆத்மஞானி கோவை நஞ்சப்பா அவர்களின் ஆன்மீக வழிகாட்டலுக்கு அடிபணிந்து சோழ நாட்டின் புனித பூமியான திருப்பராய்த்துறை நோக்கி தனது பயணத்திற்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தார்.

எதிர்காலத்தில் தமிழகத்திலே மாபெரும் சாதனை ஒன்றினை நிறைவேற்றப்போகும் ராமசாமி அவர்களுக்கு குருவின் ஆசீர்வாதம் வேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ, திருவருள் சுவாமி சித்பவானந்தரிடம் கொண்டு சேர்த்தது என்பதாக மட்டும் யூகிக்க முடிகிறது.

உலக வழக்கப்படி ஊரை விட்டுச்செல்லும் முன்பாக சில காரியங்களை செய்து முடித்தார் ராமசாமி. லிங்கம்மாள் என்ற பெண்மணியிடம் பட்ட கடனை, தம் நெருங்கிய நண்பரான கந்தசாமிக் கவுண்டர் மூலம் வரவு செலவை நேர் செய்தார். மேலும் யார் யாருக்கு எவ்வளவு தொகை தரவேண்டுமோ அவ்வளவையும் கொடுத்து முடித்தார். அது நாள் வரை தன்னுடன் வைத்திருந்த கடிதங்கள், அரசு ஆவணங்கள் எழுத்துத் தொகுப்புகள் ஆகிய தம்மைக் குறித்த பலவற்றையும் கிழித்து அருகேயுள்ள பாழுங்கிணற்றில் போட்டு விட்டார். அவரது இச்செயலுக்கு எதுதான் காரணமாக இருக்க முடியும்?

பிற்காலத்தில் ஒரு காலகட்டத்தில் துறவாஸ்ரம வாழ்க்கை வாழ வேண்டிய நிலை ஏற்படும் என அவரது உள்ளுணர்வு எச்சரித்ததோ என்னவோ, அதன் காரணமாகவே தமது ஊரில் தம் சம்பந்தப்பட்ட 'சுவடு' எதுவும் இல்லாமல்

செய்துவிட்டே திருப்பராய்த்துறைக்கு புறப்பட்டார். நதிமூலத்தையும் ரிஷி மூலத்தையும் எவரும் ஆராயக்கூடாது என்பதற்காக ராமசாமி இம்முடிவிற்கு வந்திருக்கலாம்.

உற்ற நண்பர்களிடம் விடைபெற்றார். ஹரிஜன மக்கள் இவர் பிரிவை தாங்க மாட்டாமல் கதறியழுதனர். சிறந்த ஒரு காந்தியத் தொண்டரை பிரியப் போகிறோமே என ஊர்மக்கள் கவலையுற்றனர். துக்கம் ஒரு பக்கம் பொங்கி எழுந்தாலும் ஒரு மாபெரும் நற்காரியத்திற்கு உதவிபுரிதல் வேண்டும் என்ற எண்ணத்தோடு ராமசாமி புறப்படுவதால் அம்மக்கள் கலங்கிய நெஞ்சோடு அந்த உத்தம மனிதருக்கு விடை கொடுத்தனர். தமது உடம்பையும், உணர்வுகளையும் செம்மையாக வளர்த்த கெம்பநாயக்கன்பாளையத்து மண்ணை வணங்கினார். அம் மண்ணை தம் விரல்களால் தொட்டு நெற்றியிலே பொட்டாக அணிந்தார். சொல்லவொண்ணாத ஒரு உணர்வு விரல்கள் மூலம் இதயத்தினுள் புகுவதை உணர்ந்தார். ஒரு நொடி கண்மூடி தியானித்தார்.

கையசைத்து ஊர்மக்களிடம் விடைபெற்றார். நிர்மலமான வானத்தில் ஆதவன் பவனிவந்து கொண்டிருந்தான். சற்றும் எதிர்பார்க்காத நிலையில் சில நீர்த்துளிகள் வானிலிருந்து ராமசாமியின் சிரசிலே வீழ்ந்தன. ஆதவனும் வானமும் அந்த பிரம்மசாரியை வாழ்த்தி வழியனுப்பியது என்றே நினைக்கத் தோன்றியது. அவரது பாதங்கள் லட்சியப்பயணத்தில் அடிஎடுத்து வைத்தன.

17. குருவும் சீடரும்

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசித்திங்கள் முதல் நன்னாளன்று திருப்பராய்த்துறையில் புண்ணிய தீர்த்தமான காவிரி நதியில் நடக்கும் துலாஸ்நானம் மிகமிக விசேஷம். மாவட்டத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் ஏராளமாக இங்கு கூடுவார்கள். பராய்த்துறை நாதருக்கு விசேஷமான வந்தனை வழிபாடுகள் நடக்கும். கோலாகலமாக நடக்கும் இவ்விழா ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

1940 ம் ஆண்டில் திருப்பராய்த்துறையில் நடக்கவிருக்கும் துலாஸ்நான நிகழ்ச்சிக்கு சில நாட்கள் முன்னதாகவே கெம்பநாயக்கன்பாளையம் பிரம்மசாரி ராமசாமி திருப்பராய்த்துறை வந்தடைந்தார். உயர்திரு. நஞ்சப்பா அவர்கள் கொடுத்த அறிமுகக் கடிதத்தை சுவாமி சித்பவானந்தா அவர்களிடம் கொடுத்தார். அகமும் முகமும் மலர சுவாமிகள் பிரம்மசாரியை வரவேற்றார். தாம் மேற்கொண்ட பணியைப்பற்றி முழு விபரங்களையும் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்தார். அவரது பணிகளில் தாமும் மனப்பூர்வமாக இணைந்து செயலாற்றவும் ஒப்புக் கொண்டார்.

திருப்பராய்த்துறையில் ஆஸ்ரமம் கட்டும் திட்டத்தை சுவாமி சித்பவானந்தா தொடங்கி வைத்தார். மக்களின் பேரார்வமும் மெய்யன்பர்களின்

பெரு முயற்சியாலும் ஆஸ்ரமக் கட்டடம் மளமளவென உயர்ந்தது. சுவாமி அவர்கள் அடிக்கடி வெளியூர் பிரயாணம் மேற்கொண்டு கட்டட நிதி வசூல் செய்தார். கட்டட வேலைகளை பிரம்மசாரி ராமசாமி கவனித்து வந்தார். கட்டடம் சிறிது சிறிதாக உயர்ந்தது. தாம் உருவாக்கப் போகும் ஆஸ்ரமத்திற்கு என்ன பெயர் சூட்டுவது என்ற சிந்தனையில் ஆழ்ந்தார் சுவாமிகள்.

புராதானமாக அந்நாளில் திருப்பராய்த்துறையில் தாருகாவன ரிஷிகள் வேள்விகள் செய்தும் தவம்புரிந்தும் வந்தனர். வனம் சூழ்ந்த பகுதியில் தபோதனர்களால் வேள்விகள் நடத்தப்பட்டதை உணர்ந்த சுவாமிகள் தம் ஆஸ்ரமத்திற்கு 'தபோவனம்' என்ற அடைமொழியுடன் கூடிய "ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்" என்ற திருநாமத்தை சூட்ட மனதிலே தீர்மானித்தார்.

சுவாமிகளோ உதயசூரியனின் செவ்வண்ண நிறத்தில் கனலையொத்த காவியாடை அணிபவர். பிரம்மசாரியோ பௌர்ணமி நிலவை ஒத்த தூய வெண்மையான கதராடை அணிபவர். இவர்கள் இருவரையும் ஒரு சேரக் காணும் அன்பர்கள் சூரியனும் சந்திரனும் ஒன்றாக உலா வருவதைப் போலுள்ளது என சிறப்பித்து மகிழ்வார்கள்.

இறைவன் அருளாலும் அன்பர்கள் ஆதரவாலும் ஆஸ்ரமக் கட்டடம் முழுமையாகக் கட்டப்பட்டு கட்டடம் திறப்புவிழாவிற்கு தயாரானது. திறப்புவிழாவிற்கான ஒரு குறிப்பிட்ட நாள் சுவாமிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்நாளில் "ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்" என்ற பெயரில் ஆஸ்ரமத் திறப்புவிழா நடைபெற்றது. அன்று மாலை வரையில் வரும் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றது. ஆஸ்ரமத்தின் அனைத்துப் பணிகளிலும் பிரம்மசாரி ராமசாமி சித்பவானந்த சுவாமிகளுக்கு எல்லாவகையிலும் உறுதுணையாக இருந்தார். ஆஸ்ரமத்தில் குருதேவருக்கென்று கட்டப்பட்டுள்ள ஆலயத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் திருஉருவப்படங்கள் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. பகவானின் பூஜையை பிரம்மசாரி மேற்கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆராதனையில் ஈடுபட ஈடுபட அவரது உடலும் உள்ளமும் குருதேவரின் பாத கமலங்களில் சரணடைந்தது. பூசனை முடிந்து தியானத்தில் அமர்வார். பக்திப் பெருக்கால் அவரது விழிகளின் ஓரத்தில் நீர் முத்துக்கள் கோர்த்து நிற்கும். பின்னர் தியானம் கலைந்து எழுவார். பரமனை வணங்கிவிட்டு பின் ஆஸ்ரம வேலைகளை கவனிக்கத் தொடங்குவார். ஆஸ்ரம நிர்வாகத்திற்கு தேவையான நிதியை திரட்ட சித்பவானந்த சுவாமிகள் தமிழகம் எங்கும் சுற்றுப்பிரயாணம் செய்வார். போகுமிடங்களில் சுவாமிகள் பக்தர்களின் கூட்டங்களில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். பரமார்த்திக விஷயங்களை குறித்து உரையாடுவார். மக்களிடையே கீதை, தாயுமானவர் பாடல்களுக்கு விளக்கம் தருவார்கள்.

இவரது கீதை விளக்கத்தை கேட்ட அறிஞர்கள் சித்பவானந்த சுவாமிகளின் பெருமையை உணரலானார்கள். இவர் ஓர் கற்றறிந்த மேதை என்பதை விரைவில் புரிந்து கொண்டனர். குருமகராஜின் பேரருளால் சிறுகச்சிறுக நிதி சேர்ந்தது.

கிட்டத்தட்ட 9 ஆண்டுகாலம், அதாவது 1940 லிருந்து 1949 வரை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தில் குருவோடு இணைந்த சீடராக பிரம்மச்சாரி ராமசாமி இருந்து வந்தார். 9 ஆண்டு காலம் தபோவனத்தில் ஆன்மீக வாசம் செய்து வந்த பிரம்மசாரிக்கு ஈஸ்வரனின் ஒரு சோதனையை ஏற்க வேண்டிய நிலை உண்டாயிற்று. தபோவனத் திருத்தொண்டில் ஒன்றாகக் கலந்து பணியாற்றிய பிரம்மசாரி ராமசாமி தபோவனத்தை விட்டு விலக வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

அனைத்தும் அவன் செயல். அவன் அருளால் நடப்பது அனைத்தும் நன்மைக்கே என்பதில் பிரம்மசாரி ராமசாமி உறுதியாக இருந்தார். எதற்கும் கலங்கவில்லை. இது பகவான் பரமஹம்ஸதேவரின் கட்டளை என மகிழ்வோடு ஏற்றார். எது நடந்தாலும் அது ஆண்டவனின் அருட்கிருபை என தபோவன ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறும் படலத்தை மனமுவந்து ஏற்றார். மகிழ்வோடு வெளியேறினார்.

ஆரம்பித்து வைப்பவனும் அவனே. முடித்து வைப்பவனும் அவனே என தன்னை நாடி வந்த மக்களிடம் தெளிந்த மனதுடன் கூறினார்.

9 ஆண்டு காலம் தெள்ளிய நீரோடை போல ஓடிக்கொண்டிருந்த பிரம்மசாரியின் வாழ்க்கையில் சுழல் ஏற்பட என்ன காரணம்?

எந்த நேரத்தில் எப்படியெல்லாம் ஆண்டவனின் திருவிளையாடல் அரங்கம் ஏறும் என்பது எவர் அறிவார்?

18. காவிரிக் கரையில் பரமஹம்ஸர் ஆலயம்

இறைவனின் திட்டம் சாட்சாத்காரம் பெற்ற இறையன்பர்கள் மூலம் செயலாக்கப்படுகிறது. தபோவனம் விட்டு வெளியேறிய பிரம்மசாரி ராமசுவாமி அவர்களை திருப்பராய்த்துறையைவிட்டு வெளியேற மெய்யன்பர்கள் சம்மதிக்கவில்லை. அவர்மீது அன்பைப் பொழிந்து ஆதரவுக்கரம் நீட்டினர். அவரை அங்கேயே இருக்க வைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பகவான் பரமஹம்ஸரால் ஆட்கொள்ளப்பட்ட பிரம்மசாரி அவர்கள் திருப்பராய்த்துறை கிராமத்திற்கு மேற்கே சிறிது தூரத்தில் உள்ள மாந்தோப்பு ஒன்றிற்கு குடிபெயர்ந்தனர். இங்கிருந்து கொண்டு ஏதோ ஒரு மாபெரும் காரியத்தை சாதிப்பதற்கான அழைப்புதான் இந்த இடமாற்றமோ?

மக்கள் நலனைக் கருதியும் மனித சமுதாயத்திற்கு ஏதாவது ஒரு தொண்டாற்ற வேண்டும் என்ற பிரதிக்ஞை ஒன்றை பிரம்மசாரி அவர்கள் மேற்கொண்டார். அனைத்திற்கும் ஆண்டவனின் அருட்கிருபை வேண்டுமல்லவா? எனவே முதலில் பகவான் பரமஹம்ஸருக்கு ஆலயம் ஒன்றினைக் கட்ட முற்பட்டார். அவ்வூர் மக்கள் தங்களது முழு ஆதரவையும் நல்கினார்கள்.

மனித வாழ்வில் இறைவனின் சித்தம் எந்த நேரத்தில் எப்படி செயல்படும் என்பதை துல்லியமாக தீர்மானிக்க எந்த தீர்க்கதரிசியாலும் கூற முடியாது அன்றோ? நேற்றுவரை ஆஸ்ரம வாசம். ஆனால் இன்றோ அடர்ந்த புதர்கள், செடிகொடிகள், மண்மேடுகள் பாம்புப் புற்றுகள், மாமரக்கூட்டத்தினிடையே பறவை ஜாதிகளின் இன்னிசை கூக்குரல் காதில் விழ, பலவகை ஜீவராசிகளுக்கிடையில் துணிக்கூடாரத்தில் ஆளரவமில்லாமல் தனிமை வாசம்.

எத்தனை வேறுபாடு. அன்று இருந்தது அந்த நிலை. இன்று இருப்பதோ இந்த நிலை. ஆண்டவன் பிரம்மசாரி அவர்களை புடம் போட்ட தங்கமாக ஜொலிக்கச் செய்ய தீர்மானித்து விட்டானா? பொறுத்திருந்து பார்ப்போம்.

வாழ்க்கை துணிக்கூடாரத்தில், அங்குதான் பரமஹம்ஸருக்கு பூஜை. காட்டுப்பூக்கள் அலங்காரம். தியானம், தவம் அனைத்தும் அங்குதான். அவரது உணவும் அங்கே. உறக்கமும் அங்கேதான். எப்படி வாழ்ந்தவர் இப்படி வாழ்கிறாரே என ஊர் மக்களுக்கோ ஆறாத்துயரம். இன்மொழிகளால் அவர்களுக்கு ஆறுதல் கூறுவார் பிரம்மசாரி அவர்கள்.

என்னதான் கடும்புயல் வீசினாலும், பெருமழை பெய்தாலும், வெள்ளம் கரைபுரண்டாலும் உயர்ந்து நிற்கும் பாறையை இவைகளினால் என்ன செய்து விட முடியும்?

பிரம்மசாரி ராமசாமி அவர்களின் நிலையும் இதைப்போன்றதே. அவரது நெஞ்சத்தில் கலக்கம் என்பது அறவேயில்லை. கலங்கியது மக்கள்தான். அவரைப் பொறுத்த மட்டில் விளையாட்டு ஒன்று ஆண்டவன் மேற்பார்வையில் நடந்து முடிந்துள்ளது அவ்வளவுதான்" என கேட்கும் அன்பர்களுக்கு புன்முறுவலுடன் விடை தருவார். அவரது சகிப்புத் தன்மையையும் நெஞ்சாற்றலையும் கண்டு அன்பர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

"இந்நிகழ்வுகளையெல்லாம் கண்டு ஆண்டவன் அங்கே சிரித்துக் கொண்டிருக்கிறானா?" என பிரம்மசாரி அவர்களை பார்க்கவரும் பாமரர்கள் கூறவார்கள். அவர்கள் நிலைக்கேற்ப வெளிவரும் விளக்கம் இது. ஆண்டவனின் லீலா விநோதங்களில் இதுவும் ஒன்று என அறிஞர்கள் கண்ட விளக்கம் இது. பிரம்மசாரி அவர்கள் இதைப்பற்றி நினைப்பது என்ன? அவரிடமிருந்து எந்த விளக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது. அவரது மௌனமே இதற்கு விடையாகும்.

நம்மைவிட உயர்ந்த பரம ஞானியின் நிலையில் பிரம்மசாரி அவர்கள்

இருந்தபடியால், ஒருவேளை இறைவனின் அந்தக் கள்ளச்சிரிப்பிற்கான காரணத்தை அவர் அறிந்திருப்பாரோ? அதனால்தானோ என்னவோ தம் வாழ்வில் நடந்து முடிந்ததை ஆண்டவனின் விளையாட்டு என அதன் உண்மை உணர்ந்து வர்ணித்தாரோ?

மக்களிடத்திலே அவர் கொண்ட அன்பு, கருணை, பாசம் முன்பை விட இப்போது அதிகமாக அவரது முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அடர்ந்த வனம் போன்ற மாந்தோப்பில் இயற்கை சூழலில் அந்நாளைய ரிஷிகள் வாழ்ந்தது போல வாழ்க்கையைத் துவக்கினார் சுவாமிஜி அவர்கள். (இனி பிரம்மசாரி ராமசுவாமி அவர்களை இத்தொடர் முழுவதிலும் சுவாமிஜி என்றே குறிப்பிடுகின்றோம்)

சுவாமிஜி இருந்து வந்த மாந்தோப்பில் பலவகை நாட்டு மரங்கள், முட்செடிகள், புதர்ச்செடிகள் அடர்ந்த மண்மேடுகள் காணப்பட்டன. இடையிடையே வைரம் பாய்ந்த பெரிய பெரிய வில்வமரங்கள் சிலவும் காணப்பட்டன.

பகவான் பரமஹம்ஸர் வில்வமரங்களையும், தும்பைச் செடிகளையும் கண்டு விட்டால் தெய்வீக பரவச நிலைக்கு போய்விடுவார். எனவே தோப்பிலிருக்கும் வில்வமரங்களைக் கொண்டே ஆஸ்ரமமும் பரமஹம்ஸருக்கு கோவிலும் கட்டுவதென சுவாமிகள் தீர்மானித்தார். அதற்கான திட்டம் உருவாயிற்று. தேவையற்ற மரங்களும், புதர்ச்செடிகளும், மண்மேடுகளும் அகற்றப்பட்டன. கட்டப்போகும் பகவானின் ஆலயத்திற்கு அரணாக மாமரங்களே நின்று கொண்டிருந்தன. உயிரோடு உணர்வும் தாவரங்களுக்கும், மரங்களுக்கும் உண்டு என பகவான் பரமஹம்ஸர் கூறுவார். "மரங்களை மனதார நேசியுங்கள். அவைகளும் உங்களை நேசிக்கும் அவைகளிடமிருந்து நீங்கள் விரும்பியதை அவைகள் தாராளமாக உங்களுக்குத் தரும்" என்பார்.

அங்கு உருவாகப்போகும் பரமஹம்ஸரின் ஆலயத்தை தாங்களும் கண்டு களிக்கலாம் என அம்மரங்கள் தங்களது சலசலக்கும் பாஷையில் கூறுவதையும், பரமஹம்ஸரின் தரிசனத்திற்காகவும் பொறுமையாக காத்து நின்றன என்பதையும் பக்தி நிறைந்த உள்ளங்கள் உணர்ந்து விடுகின்றன.

சுவாமிஜி அவர்களும் மரம்,செடிகளை வளர்ப்பதிலும் பகவானின் ஆராதனை அர்ச்சனைக்கு மலர்களைத் தரும் மலர்ச்செடிகளை பராமரிப்பதிலும் மிக்க கவனம் செலுத்துவார். இவைகளுக்கு நீர் ஊற்றுவதையும் பகவானுக்கு செய்யும் அபிஷேகமாக நினைத்து பக்தி சிரத்தையுடன் செயலாற்ற வேண்டும் என்பார்கள். அவர் தொட்டு நட்டவை அனைத்தும் ஒன்றுக்கு பத்தாக பலனைத் தந்தன என்பதை அவரது வாழ்வில் நிதர்சனமாக உணரலாம்.

ஒரு உத்தமமான நாளில் சுவாமிஜி அவர்கள் உள்ளத்திலே உணர்ச்சி பொங்க, கண்களில் நீர் மல்க, பகவான் பரமஹம்ஸரை உளமார பிரார்த்தித்தார். நல்லோரையில் மெய்யன்பர் சிலர் சூழ சுவாமிஜி அவர்கள் குருதேவரின்

ஆலயத்திற்கு அஸ்திவாரமிட்டார். கட்டட வேலைகள் துவங்கப்பட்டன. அன்பர்கள் அவ்வப்போது வந்து சென்றனர். அவர்களிடம், பகவான் பரமஹம்ஸருக்கு அமையப்போகும் ஆலயம் பற்றி விவரிப்பார். வெளியிலிருந்து மரங்களை வாங்காமல் தோப்பிலுள்ள வில்வமரங்களையே உபயோகிக்கத் திட்டமிட்டார். "ஈஸ்வராம்சத்தை தன்னுள்ளே கொண்டிருக்கும் வில்வமரம் கடவுளுக்கு மட்டுமே உகந்த மரம். ஆக தங்களது திட்டம் மிகமிகச் சிறந்ததே" என அன்பர்கள் பரவச பாவத்துடன் கூறுவார்கள். மற்ற நாட்டு மரங்களைக் கொண்டு செங்கல் சூளை தயாரிக்கப்பட்டு செங்கல் அறுக்கப்பட்டன.

கடவுளுக்கு உகந்த மரத்தை ஆலயம் கட்ட சுவாமிஜி பயன்படுத்துவதை அறிந்த அக்கம்பக்கத்து மாந்தோப்பு உரிமையாளர்கள், தங்கள் தோப்பிலுள்ள வில்வ மரங்களை இலவசமாக வெட்டிக்கொள்ளுமாறு சுவாமிஜிக்கு வேண்டுகோள் விடுத்தனர். பரமஹம்ஸரின் அருளாசியாலும் அன்பர்களின் தொடர்ந்த பேராதரவாலும் ஆலயவேலை தங்குதடையின்றி மளமளவென நடந்தேறியது. வெகுவிரைவில் ஆலயவேலை முடிந்துவிடும் என அன்பர்கள்சுவாமிஜியிடம் கூறுவார்கள். " நானா அவனுக்கு ஆலயத்தை கட்டுகிறேன். அவனது இருப்பிடத்தை அவனே கட்டிக் கொள்ளுகிறான்" என அன்பர்களிடம் சொல்லிச்சொல்லி குழந்தை போல் சிரித்து மகிழ்வார்.

1949 ம் ஆண்டில் ஒரு நன்னாளில் ஆஸ்ரமக் கோவிலில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர், அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் திருஉருவப்படங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இலவசமாக பக்கத்து தோப்பில் குடியிருந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆஸ்ரம கோவிலுக்கே சுவாமிஜி வந்துவிட்டார்.ஆஸ்ரமத்தின் கிழக்கு முகமாக உள்ள அறைதான் பகவானின் இருப்பிடம். தெற்கு நோக்கியுள்ள அறையில்தான் சுவாமிஜியின் வாசம் தொடங்கியது.

தாம் ஏற்படுத்திய ஆஸ்ரமத்தின் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சான்னித்தியம் முழுமையாக இருக்கிறது என சுவாமிஜி திட உறுதி கொண்டிருந்தார். ஆஸ்ரமம் அவருக்காக அன்றி மனிதருக்காக அல்ல என திடமாக நம்பினார். எனவே ஏற்படுத்திய ஆஸ்ரமம் "அவருடையதே" என்பதற்கிணங்க ஆஸ்ரமத்திற்கு "ஸ்ரீராமகிருஷ்ண குடில்" என்ற திருப்பெயரைச் சூட்டினார்.

தமக்காக ஆலயம் கட்டிய தமது பக்தரின் வாழ்க்கையில் பரமஹம்ஸ தேவர் எவ்வாறெல்லாம் திருவிளையாடல்களை நடத்தினார் என்பதை போகப்போக கண்டு மகிழலாம்.

நாடுபாதி நங்கவரம் பாதி என பேரும் புகழும் பெற்ற நங்கவரம் பண்ணையாரின் தொடர்பை முதன்முதலாக சுவாமிஜிக்கு ஏற்படுத்திக் கொடுத்தவரே குருதேவர் அன்றோ.

19. ஐந்து ஆண்டுகள் தனித்தவம்

இறைவனின் திருவருளைப் பூரணமாகப் பெற பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருப்பாதங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். பகவானின் முன்பாக ஒரு பிரதிக்ஞையை மேற்கொண்டார் சுவாமிஜி. வடக்கே காவிரியை தாண்டாமலும் தெற்கே கரூர் – திருச்சி சாலையை ஐந்தாண்டுகளுக்கு மிதிப்பதில்லை என்றும் ஒரு கடுமையான விரதத்தை மேற்கொண்டார்.

1949 முதல் 1954 வரை ஆகிய ஐந்தாண்டு காலத்தை பரமஹம்ஸரின் ஆலயம் உருவான மாந்தோப்பிலேயே அதன் எல்லையை மீறாமல் தனி ஒருவராக இதயத்திலே குருமகராஜின் நினைவு ஒன்றையே இருத்தி வேறு நினைவுகள் ஏதுமின்றி வாழலானார். ஆண்டவனின் குழந்தைகளான பறவை ஜாதிகளும், அணில் கூட்டங்களும், கீரிப்பிள்ளை வர்க்கங்களும், முயல் இனங்களும், உடும்புகளும் ஆஸ்ரமத்தை வலம் வரும்.

சில வேளைகளில் இவைகள் சுவாமிஜியின் அருகில் வரும். அன்பு ததும்ப அவைகளை பார்த்த வண்ணம் நிற்பார். கண்ணிமைக்கும் நேரத்தில் ஓடிவிடும். சில நேரங்களில் சுவாமிஜியின் அருகில் வராமல் சற்று தொலைவிலேயே நின்று தங்களின் சின்னஞ்சிறிய கண்களால் குறுகுறுவென பார்த்து நிற்கும். அடுத்த நொடியில் குதித்து கும்மாளமிட்டு ஓடிவிடும். அவ்வேளைகளில் எல்லாம் ஆண்டவனின் படைப்பில் எத்தனை விதமான ஜீவன்கள் என மெய்மறந்து போய்விடுவார் சுவாமிஜி. இவைகள் மட்டுமா சுவாமிஜிக்கு துணை நின்றன. அண்டத்திற்கே படியளக்கும் அந்த சுடலை நாயகனாகிய பரமேஸ்வரரின் திருவாபரணமாக அவரது கழுத்தையலங்கரிக்கும் நல்லபாம்பும் கூட அவ்வப்போது தலை காட்டும். தனது படத்தை நன்கு விரித்து, தனது சிறிய கருப்புக் கண்களால் ஆலயத்தின் முன்னே நிற்கும் சுவாமிஜியை பார்த்த வண்ணம் நின்று ஆடும். புன்சிரிப்பு தவழ சுவாமிகளும் அதை பார்த்த வண்ணம் நின்றிருப்பார். இன்றைக்கு சுவாமிஜியை தரிசித்தது போதும் என்ற நினைப்பில் சரசரவென்று ஊர்ந்து சென்று மறைந்துவிடும்.

கடும் மழையிலும், காற்றிலும் பனியிலும் தமக்கு பரமஹம்ஸரும் பரமஹம்ஸருக்கு தாமும் துணையாக சுவாமிஜியின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. அவ்வப்போது சுவாமிஜியை பார்த்துச் செல்ல அன்பர்கள் வருவார்கள். சுவாமிஜியின் நலம் குறித்து பேசுவார்கள். பின் சென்றுவிடுவார்கள். அதுவரை மனிதர்களின் பேச்சால் கலகலத்துக் கொண்டிருக்கும் மாந்தோப்பில் பின்பு அமைதி குடி கொண்டு விடும்.

சுவாமிஜியை பார்க்க ஒரு நாள் காலையில் நங்கவரம் பண்ணையாராகிய ராமநாதய்யர் அவர்கள் வந்திருந்தார். சிறந்த பக்திமான். சாதுக்களிடமும் அடியார்களிடத்தும் விசுவாசம் கொண்டவர். திருப்பராய்த்துறைக்கு மேல்புறம்

உள்ள தோப்பில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர் ஒருவர் ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்து வருகிறார் என்பதை அறிந்த பண்ணையார் அவர்கள் சுவாமிஜியை பார்த்துச் செல்ல அன்று வந்திருந்தார். சுவாமிஜியும் பண்ணையாரை அன்போடு வரவேற்றார். தமது காமநாயக்கன்பாளையத்து பங்களாவிற்கு வரவேண்டுமென்று சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார் பண்ணையார். ஐந்தாண்டு காலம் தோப்பின் எல்லையை விட்டு வெளியேறுவதில்லை என்ற தமது பிரதிக்ஞை முடிவுறும் 'நாளில்' முதல்முதலாக அவரது பங்களாவிற்கே வருவதாக பண்ணையாரிடம் வாக்களித்தார். அன்போடு விடை கொடுத்து பண்ணையாரை அனுப்பி வைத்தார் சுவாமிஜி.

எதிர்காலத்தில் சுவாமிஜி அவர்கள் ஏற்கப்போகும் மனித சமுதாய தொண்டிற்கு தேவையான உதவிகளை செய்து தர தனம், மனம் நிறைந்த மெய்யன்பர் ஒருவரை அன்று குருதேவர் சுவாமிஜிக்கு கோடிட்டு காட்டிவிட்டார்.

20. பதினெட்டு மணி நேர வேலைத்திட்டம்

தாம் ஏற்படுத்தியிருக்கும் ஆஸ்ரமத்தின் நிர்வாகத்திற்கும் உழவாரப்பணிக்கும், ஆன்மீகப் பணிக்கும் மற்ற இதர வேலைகளுக்காகவும் விரிவான ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கிக் கொண்டு அதன்படி செயலாற்றினார் சுவாமிஜி.

முதலாவதாக பகவானின் புனித கைங்கர்யத்திற்கு தேவையான மலர்களுக்காக, செம்பருத்தி, நந்தியாவட்டை, துளஸி ஆகிய செடிகளை பயிரிட்டு ஒரு அழகான நந்தவனத்தை உருவாக்கினார். மலர்வனத்தின் அருகாமையிலேயே உரைகிணறு ஒன்றும் தோண்டப்பட்டது.

அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 10 மணி வரை உள்ள 18 மணி நேர காலத்திற்கு செயலாற்ற வேண்டிய வேலைத்திட்டம் ஒன்றினை வகுத்துக் கொண்டார். அதன் பிரகாரம் காரியங்களை கவனித்து வந்தார். சுவாமிஜியை பார்க்க வரும் அன்பர்கள், அவரது ஒரு நாளைய 18 மணி நேர வேலைத் திட்டத்தை கேட்டதும் வியந்து போனார்கள். அவர்களிடம் " ஒவ்வொரு மனிதனும் குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு 16 மணி நேரமாவது பயன்தரத்தக்க பணிகளை செய்து கொண்டே இருக்க வேண்டும். மகாத்மா காந்தியும், பண்டித ஜவஹர்லால் நேருவும், இந்திராகாந்தி அம்மையாரும், வினோபாஜியும் பாரத நாட்டிற்காக உழைத்த நல்லோர்கள் ஆவார்கள். இவர்கள் ஒரு நாளைக்கு உழைக்க எடுத்துக் கொண்ட நேரம் எவ்வளவு தெரியுமா? 20 மணி நேரமாகும். நெப்போலியன் தனக்கு 24 மணி நேரமும் போதவில்லையே என வருத்தப்பட்டான்.

எப்பணி செய்யாமல் உண்டு, உறங்கி, சோம்பித் திரியும் மனிதனின்

உள்ளத்திலே ஆயிரம் தீய நினைவுகள் தோன்றும். எந்த ஒரு மனிதன் ஒரு நாளில் எவ்வளவு அதிகமான நேரத்தை சத்காரியங்களை நிறைவேற்றுவதிலும், சத்விஷயங்களை குறித்து நல்லோர்கள் கூட்டத்தில் பேசுவதிலும் செலவழிக்கின்றானோ அவன் மனித சமுதாயத்திலே நிச்சயம் ஒரு நல்ல உயர்வைப் பெறுவான்" என சுவாமிஜி கூறுவார்கள். அன்பர்கள் அவைகளை ஆவலோடு கேட்டு ஆனந்தமாகத் திரும்பிச் செல்வார்கள்.

சுவாமிஜியின் 18 மணிநேர வேலைத்திட்டம் என்ன என்பதை அறிய ஆவல் எழுவது உண்மைதான்.

சுவாமிஜி அதிகாலை 4 மணிக்கு எழுந்திருப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். காலையிலும் மாலையிலும் காவிரி நதியில் குளிப்பார். கோயில் துப்புரவு முடிப்பார். பூஜா பாத்திரங்களை துலக்கி வைப்பார். அடுத்து ஆஸ்ரமத்தை சுற்றியும், மலர் வனத்தையும் சுற்றியும் துடைப்பம் கொண்டு பெருக்குவார். பூஜைக்கான மலர்களை மெதுவாகப் பறிப்பார். அதன்பின் பூஜையை பக்திஉணர்வோடு செய்து முடிப்பார். பக்திமேலீட்டால் சில வேளைகளில் அவரது விழியோரங்களில் நீர் முத்துக்கள் அரும்பி நிற்கும். ராட்டையில் நூல்நூற்பார். பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணிதேவியார் வாழ்க்கை சரித்திரம், ஆழ்வார்கள், நாயன்மார்கள் வரலாறு ஆகியவற்றை படிப்பார். சகஸ்ரநாம பாராயணம் முடித்து ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடுவார். காலை மாலையில் உடற்பயிற்சி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பொதுவாகக் கூறுமிடத்து துடைப்பம் எடுத்து துப்புரவு செய்வது முதல் புஷ்பம் தொடுத்து பூசணை செய்வது வரை " ராம்–ராம்" என்ற தாரக நாம ஜெபத்தை இடைவிடாது உள்ளத்திலே ஜெபித்த வண்ணம் அவரது தினசரி வாழ்க்கை நடந்து வந்தது.

ஒருநாளில் பெரும்பங்கு நேரத்தில் பகவான் குருதேவரின் திருஉருவத்தை நெஞ்சிலே இருத்தி தியானத்தில் அமர்வார். ஆடாமல் அசையாமல் எவ்வித புறஉணர்வும் தோன்றா வண்ணம் செப்புச்சிலை என மணிக்கணக்கில் அமர்ந்து விடுவார். தவத்தின் காரணமாக ஆற்றல் மிக்க சக்தியொன்று சிறிது சிறிதாக அவரது மெய்தனில் உறையத் தொடங்கியது. பார்ப்போரை வசீகரிக்கச் செய்யும் ஒரு வசீகர ஒளி அவரது முக மண்டலத்தில் உருவாகத் தொடங்கியது. நினைத்ததை சாதிக்கும் மனோவலிமை அவருள்ளே தோன்றலாயிற்று.

ஆழ்நிலை தியானம் சிறிது சிறிதாக கலைந்து புறஉலகின் நினைவு சுவாமிஜிக்கு வரும். கன்னங்கள் வழியே கண்ணீர் வழியும். பகவானின் திருஉருவை நோக்கியவாறே அமைதியாக அமர்ந்திருப்பார். பின் எழுவார். நமஸ்கரிப்பார். பகவானை நோக்கி " ஏ பரப்பிரம்ம ஸ்வரூபியே உன்னில் நான் அடைக்கலம். உமக்கு உகந்த பணி எதுவோ அதை எமக்கு காட்டியருள்வாய். அதன் வழி செல்கிறேன்" என உளமாற பிரார்த்திப்பார்.

பிரார்த்தனை செய்யச் செய்ய அவரது மனதிலே அசாதாரணமான அமைதி

குடிகொண்டு விடும். இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் குருதேவர் தன்னை சோதிப்பார் என அடிக்கடி அவரது திருவடிகளின் கீழ் அமர்ந்து தனக்குத் தானே கேட்டுக் கொள்ளுவார். பின் மனம் தெளிந்து எழுவார். எதற்கும் ஒரு காலம் வரும் என தன்னைத்தானே தேற்றிக் கொள்வார்.

தன்னைப் பார்க்க வரும் அன்பர்களிடம் தமது உள்ளத்து பெட்டகத்திலே பூட்டி வைத்திருக்கும் எதிர்காலத் திட்டங்களை எல்லாம் விரிவாகக் கூறுவார். அவைகளை கேட்ட அன்பர்கள் அசந்து போய்விடுவார்கள். மக்கள் சமுதாயத்தின் மேன்மைக்காகவே சுவாமிஜி அவர்கள் பாடுபடப் போகின்றார் என்பதை புரிந்து கொண்ட அன்பர்கள், சுவாமிஜியின் திட்டங்கள் அனைத்திற்கும் தங்களது உதவி நிச்சயம் கிடைக்கும் என உறுதி கூறுவார்கள். சுவாமிஜியும் மனமகிழ்வோடு அவர்களோடு அளவளாவி பின்விடை கொடுத்தனுப்புவார்.

21. நல்வழி காண எப்பணி ஏற்பது ?

பிரம்மசாரி ராமசுவாமி அடிகளார் அவர்கள் தமக்கு நல்வழி காட்டக் கூடியவர் பகவான் பரமஹம்ஸர்தான் என்ற முடிவிற்கு வந்தார். அவரது மலரடிகளே சரணம் என கண்ணீர் உகுத்த வண்ணம் பகவானின் பாதத்தில் தலைவைத்து தியானித்து எழுவார். வேறு சிந்தனைகள் ஏதுமின்றி சதா மனதிலே பகவானை தியானித்து வருகின்றார்.

அகவாழ்வில் துறவு வாழ்க்கை வாழ்வதே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு பகவானுக்கு திருத்தொண்டு புரிந்து வந்தார். அவரது உள்ளத்திலே அடிக்கடி ஒரு கேள்வி எழும். “ இந்த ஜீவனின் அகவாழ்வு தீர்மானிக்கப்பட்டு விட்டது. இக வாழ்வில் எந்தத் தொண்டை மேற்கொள்வது? என சிந்தித்த வண்ணம் இருப்பார். “எல்லாம் அவன் காட்டும் வழி” என பகவானின் கட்டளையை நாடி தியானத்திலமர்ந்து பிரார்த்தனை செய்வார்.

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாக தீர்மானித்துக் கொண்டார். தாம் மேற்கொள்ளப் போகும் சேவையானது ஜாதி, மத, இன, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாயும் மக்கள் சமுதாயம் முழுமைக்குமாய் பொருந்தியதாக அத்தொண்டு அமைய வேண்டும்” என்பதுதான் அவரது பிரார்த்தனையாக அமைந்தது.

நேரம் கிடைத்த போதெல்லாம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சரித்திரம், சுவாமி விவேகானந்தரின் சரித்திரம் ஆகியவற்றை பாராயணம் செய்வார்.சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம் தான் சுவாமிஜியின் தொண்டை நிர்ணயம் செய்தது. தமது சேவை எதுவென தெள்ளத்தெளிவாக உள்ளங்கை நெல்லிகனியென விளங்க வைத்தது.

சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் பேலூர் மடத்திலமர்ந்து ருக்வேதம் வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஒருவர் "சுவாமி உங்கள் வேதம் அனாதைகள் படும் அல்லல்களைத் தீர்க்க ஏதாவது வழிகளை சொல்லுகிறதா? எனக்கேட்டு விட்டு வெளியேறினார். அவரது மொழிகளை செவிமடுத்த சுவாமிகளின் உள்ளம் சொல்லொணா வேதனை அடைந்தது. கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடிந்தது. வேத நூலை மூடி வைத்தார். மறைவிடம் சென்றார். மனம் ஆறுதல் அடையும் வரையில் விக்கி விக்கி அழுதார்.

அவரது நெஞ்சத்தின் கருணை காரணமாக பிறந்தது ஒரு அனாதை விடுதி. தமது சகோதர சீடர்களில் ஒருவராகிய சுவாமி அகண்டானந்தர் என்பவரை மூர்ஷிதாபாத் மாவட்டம் மொகுலா சர்கசி என்னும் ஊர்களுக்கு அனுப்பி வைத்து இரண்டு அனாதைக் குழந்தைகளுடன் முதன்முதலில் ஒரு அனாதை விடுதி ஆரம்பித்தார். பல அனாதை குழந்தைகள் சேர்ந்தார்கள். அதில் இரு முஸ்லீம் குழந்தைகளும் உண்டு. அவர்களுக்கெல்லாம் நவீனக் கல்வியுடன் பிற்கால வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஏற்பட கைத்தொழில் கல்வியும் போதிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் நடந்த இந்த நிகழ்ச்சி பிரம்மசாரி ராமசுவாமி அவர்களின் மனதிற்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. பகவான் பரமஹம்ஸரே தமது சேவை, மனிதகுலத்திற்கு இதுதான் தேவை என்பதை இன்னதென காட்டிவிட்டதாக உளம் பூரித்தார்.

22. சேவையின் விளக்கம்.

இன்றைய மக்கள் சமுதாயத்தில் அன்றாட வாழ்க்கைக்கே அல்லலுறும் ஏழை மக்களின் எண்ணிக்கைதான் மிக மிக அதிகமாக உள்ளது. ஏழ்மை காரணமாகவும் வாழ வழி தெரியாத காரணத்தாலும், தாங்கள் பெற்ற மக்களை காப்பாற்ற இயலாமல் கைவிட்டு விடுகின்றனர். நாயினும் கீழான நிலையில் அக்குழந்தைகள் உணவின்றி, உடையின்றி, தங்க நிழலின்றி அல்லற்பட்டு அலைகின்றார்கள்.

"பெரும் பணச்செலவு செய்தும், படாடோபமாகவும், காண்போர் வியந்து உங்களை பாராட்டும் வகையில் நீங்கள் ஆலயங்களில் செய்யும் வந்தனை வழிபாடுகளும் உங்களுக்கு முக்தியை அளிக்காது. வெளியில் வந்து பாருங்கள். ஒட்டிய வயிறும், குழிவிழுந்த கண்களும், மெலிந்த உடலுமாக போதிய உணவின்றி தினம் தினம் செத்துப்பிழைக்கும் ஏழைவர்க்கத்தாருக்கு உங்கள் செல்வம் பயன்படட்டும். அவ்வாறு செய்தால் இறைவனின் நினைவு வட்டத்திற்குள் நீங்களும் பிரவேசம் செய்து புனித நிலை அடைவீர்கள்" என பரமஹம்ஸர் ஏழைகள் பால் உருகிச் சொன்ன வார்த்தைகள் இவை.

எனவே இன்றைய சமுதாயத்திற்கு ஏற்ற சேவை அனாதைகளுக்காக செய்யப்படும் சேவைதான் என்பதற்கான காரணத்தை சுவாமிஜி விளக்கமாக தெரிவிக்கின்றார். "உணவளித்து உடையளித்து, உறையுள் அளித்து, மேலாம் கல்விதனையும் அளித்து அந்த அனாதை மக்களின் துயர் நீக்கி அவர்களிடம் மெய்யன்போடு உறவாடுவது கோயிலில் உள்ள கடவுளுக்கு புஷ்பம் சாத்தி வணங்குவதைக் காட்டிலும் ஒருவிதத்தில் மேலானது" என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.

"இக் கலியுகத்தில் மிகமிக அரிய சாதனை ஒன்றிருக்கிறது. மற்ற யுகங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த தபோ முறைகளும், யோக சாதனைகளும் இக்கலிகாலத்தில் பின்பற்றக் கூடியதாக இல்லை. இக்கலிகாலத்தில் நாம் கைக்கொள்ளக் கூடிய உயர்ந்த சாதனையானது தக்கவர்களுக்கு தான தருமங்கள் செய்வதேயாகும். தானங்களில் உயர்வானது "ஆத்ம தானம்" அதற்கடுத்தது "அறிவுதானம்" அதற்கு அடுத்தது "அன்னதானம்" என வேதவ்யாச முனிவர் அருளியுள்ளார்.

இதைக் கருத்தில் கொண்ட சுவாமி விவேகானந்தர் "முதலில் அன்னதானம் அடுத்தது வித்யாதானம் அதற்கடுத்தது ஞானதானம் என முறைப்படுத்தியுள்ளார். இம் மூன்று தானங்களும் ஒருவனை உண்மையான லட்சியவாதியாக்குகிறது. இந்த மூன்று வகை தானங்களும் சிறப்பாக நடக்க தக்க ஏற்பாடுகள் தம் மடத்தின் மூன்று கிளைகள் வாயிலாக நடைபெறும்" என்று கூறியுள்ளார்.

ஆகவே மனித குலத்திற்கு தேவையான ஆத்ம தானம், அறிவுதானம், அன்னதானம் ஆகியவை குறித்து இரு முனிவர்களும் கூறியுள்ளார்கள். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் புனித நாமத்தால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண குடில் ஆஸ்ரம் சார்பில் இம்மூன்று தானங்களும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இனி இத்தானங்களின் விளக்கம் என்னவென்பதை பார்ப்போம்.

மனிதகுலத்திற்கு சேவை செய்ய தன்னலமற்ற துறவிகளை உருவாக்குவதே ஆத்மதானத்தின் லட்சியமாகும். வித்யாலயம் ஒன்றினை ஏற்படுத்தி அனாதை குழந்தைகளுக்கு கல்வி போதிப்பது அறிவுதானமாகும். குருகுலம் என்ற பெயரில் உணவு விடுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அக்குழந்தைகளுக்கு உணவிடுதல் அன்னதானமாகும். இம்மடத்தின் மூன்று கிளைகள் வாயிலாக இம்மூன்று தானங்களும் தொடரப்படும்" என்பதே சுவாமிஜியால் முடிவு செய்யப்பட்ட சேவையாகும்.

23. அனாதை இல்லங்கள் தேவைதானா?

அனாதை இல்லங்கள் நாட்டிற்கு தேவையா? என்ற கேள்விக்கு சுவாமிஜியே விடை கூறியுள்ளார். அவர் கூறியுள்ளதை செவிகொடுத்துக் கேட்போம்.

“சிறுபான்மையோரான துறவியர் கூட்டத்தை தவிர, பெரும்பான்மையோரான மக்கள் மணம்புரிவதும் மக்களை பெற்றெடுப்பதும் உலக தர்மமாக இருந்து வருகிறது. பணக்காரர்களும் நடுத்தரவர்க்கத்தவர்களும் தங்கள் நிலைக்கேற்ப மணம் புரிந்து மக்களை ஈன்று பாதுகாக்கவும் செய்கின்றனர். மூன்றாவது வர்க்கத்தினரான ஏழை மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்ட போதிலும், தங்கள் நிலையறியாது ஒரு உத்வேகத்தால் உந்தப்பட்டு மணம்புரிந்து கொள்ளுகின்றனர். மக்களையும் அதிக அளவில் பெறுகின்றார்கள்.

“ ஆனால் நடப்பது என்ன? பெற்ற மக்களை காப்பாற்ற” வழியின்றி, சிறிது வயது வந்ததும் அவர்களை பிச்சை எடுக்குமாறு விரட்டுகின்றனர். பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் இதை விட மோசமான நிலைக்கு போய்விடுகின்றனர். யாரோ ஒருவன் பெற்றெடுக்கின்றான். வளர்க்க வழியில்லை. ஊருக்கும் உலகத்திற்கும் அக்குழந்தை பாரமாகிவிடுகின்றனர். அக்குழந்தைகளுக்கு தெரிந்தது ஒன்றேதான். தங்கள் வயிற்றுப் பசியை தீர்த்துக்கொள்ள பிச்சை எடுப்பது என்ற முடிவிற்கு வந்துவிடுகின்றனர். இத்தகைய குழந்தைகள் ஒன்றாக இணைகின்றனர். ஒரு பிச்சைக்கார வர்க்கம் உருவாகிவிடுகின்றது. அவர்களுக்கு ஏற்படும் குணநலன்கள் யாவை? ஏற்படும் அனுபவங்கள் எத்தகையவை? அவைகளைக் குறித்து சற்று ஆராய்ந்து பார்த்தோமானால் கிடைக்கும் விடை நம்மை திகைக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது. பொய் பேசுதல், திருடுதல், ஆபாச வார்த்தைகளை கற்றுக் கொள்ளுதல், கெட்ட சகவாசம் அதனால் வரும் தீயோர் தொடர்பு ஆகிய விரும்பத்தகாத சமூகத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய குணநலன்களை பெற்று விடுகின்றனர். அவர்களின் தவறுகளை எடுத்துச் சொல்லி திருத்த பெற்றோர்களும் இல்லை. உறவினர்கள் உதவுவதும் இல்லை. எனவே இன்று சிறுவர்களாக இருக்கும் அவர்கள் நாளை சற்று வயது வந்தவர்களாக வளர்ந்தவுடன் சமூகத்தின் மாபெரும் தீயசக்திகளாக மாறிவிடுகின்றனர். எத்தகைய ஆபத்தான வழியில் செல்லவும் அவர்கள் அஞ்சுவதில்லை”

“ ஒரு குரோத உணர்வோடு இவர்கள் சமூகத்தைப் பார்க்கின்றனர். பணக்காரர்களையும், சுகபோக வாழ்வில் இருப்பவர்களைக் கண்டும் இவர்கள் பொறாமைப் படுகின்றனர். பொறாமை கோபத்தை உண்டு பண்ணுகிறது. கோபம் காரணமாக அவர்கள் மனம் மாறுகிறது. பணக்காரர்களுக்கு எதிரான

துவேஷத்தை தன்னுள் வளர்த்துக் கொள்ளுகிறான். சமூகவிரோதிகளாக மாறி விடுகின்றனர். இத்தகைய ஒரு கூட்டம் வளர்வது நாட்டிற்கு நல்லதல்லவே. இவர்களையும் நாட்டின் நற்குடி மக்களாக மாற்றுவது அரசாங்கத்தின் கடமையல்லவா? மக்களுக்கும் இதில் பங்குண்டல்லவா?

"வெளிநாடுகளில் அரசாங்கமும் தனிப்பட்ட பிரமுகர்களும் ஒன்றுபட்டு அனாதைகள் என்ற சொல்லிற்கே இடமின்றி பார்த்துக் கொள்ளுகின்றனர். இதனால் மிகப்பெரிய அளவிலான ஜனத்தொகையை கொண்ட இந்தியாவில் பல காரணங்களினால் இப்பிரச்சனை தற்போது உச்ச நிலைக்கு வந்துவிட்டது. நல்வழி காண வேண்டிய கட்டாயம் உருவாகி வருகின்றது."

"இத்தகைய இளம் தலைமுறையினர் நாட்டிற்கு பயன்தரத்தக்க வகையில் வளர்க்கப்பட வேண்டும். ஜீவாதார வசதிகள் அனைத்தும் தரப்பட வேண்டும். பிற்காலத்தில் நாட்டின் நல்மகனாய் வாழ அவர்களிடம் சிறப்பான மனிதநேயம் காட்டப்படவேண்டும். அவர்களுக்கான கல்வி வெறும் ஏட்டுப்படிப்போடு நில்லாமல் தொழிற்கல்வியோட தரப்படவேண்டும். அவர்களிடம் அன்பு காட்ட வேண்டும். தாங்களும் இவ்வுலகில் மனிதனாக வாழ இயலும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு உற்ற வழி யாது? இவர்களை பொறுப்புடன் யார் பார்த்துக் கொள்வார்கள்? மக்கள் சேவையே மகேசன் சேவை என நினைக்கும் துறவிகள் ஏற்படுத்தியுள்ள அனாதை இல்லங்களில் இவர்களை வளர்ப்பதின் மூலமாகவே தீர்வு காண இயலும். அரசாங்கம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு காரியத்தை இத்தகைய துறவியர் பொறுப்பேற்று செய்து வருவதால், இவர்களுக்கு பக்கபலமாக மக்கள் சமுதாயம் துணை நிற்க வேண்டும். அரசாங்கமும் இத்தகையவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அனாதை இல்லங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தார்மீக சிந்தனையுடன் செய்துவரல் வேண்டும்.

24. அனாதை மக்கள் சேவைக்கு பொருளீட்டல்

துறவிகளாயினும், நாடாளும் வேந்தர்களாயினும், தன்னலமற்ற மக்கள் சேவைக்கு பொருள் வேண்டும். பொருளைக் கொண்டுதான் உலக காரியங்களை செய்தாக வேண்டும். சேவைக்கு பொருளீட்டுவதின் முக்கியத்துவத்தைப் பற்றி சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுவதாவது.

" நம் நாட்டு ஏழைமக்கள், அனாதை மக்கள் பட்டினி கிடப்பதை பார்க்கும் போது கிராமம் கிராமமாகச் சென்று, சாதனையாலும் புலனடக்கத்தினாலும் கிடைத்த ஆற்றலினால் பணக்காரர்களுடைய மனதை திருப்பி அவர்களிடமிருந்து பணத்தை திரட்டி ஏழைகளுக்கு தொண்டு புரிவதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வருகிறது. உயிர் வாழ்ந்திடினும் சரி பட்டினி கிடக்க நேர்ந்திடினும் சரி கடவுளை நம்பி

முழுமனதுடன் காரியத்தில் பிரவேசிப்பனாக. நரகத்தில் இடர்பட்டாலும் சமூக சேவை செய்வதையே பெரும்பேறாக கருதுகின்றோம். நிதி திரட்டுவதிலும் நேர்மையைக் கடைபிடிக்க வேண்டும். பொது நன்மைக்கு நிதி திரட்டுவோர் தம் உள்ளத்திலிருந்து அகங்காரம், ஆணவம், கோபம் ஆகிய மாசுகளை களைய வேண்டும்.

"பரந்த எண்ணம் இல்லாதவர் உள்ளத்திலும் அதை மறந்திருப்பவர் உள்ளத்திலும், தான தருமங்கள் செய்யக்கூடிய பரந்த எண்ணம் வருமாறு செய்வதே பொதுநலத்தொண்டனின் தலையான கடமையாகும்."

"இத்தகைய மேலான சத்தியக் கருத்துக்களையெல்லாம் தமது சேவைக்கு பயன்படும் வண்ணம் மனதிலே ஏற்றுக் கொண்டார் சுவாமிஜி. இவ்வாறாக அனாதை மக்கட்சேவைக்காக பலதரப்பட்ட கருத்துக்களையும், செயல்பாடுகளையும் தம்முள்ளே இருத்திக் கொண்டார். தமது இந்த சேவையைத் துவங்க ஆண்டவனின் கட்டளையை எதிர்நோக்கி தனித்தவ நிலையில் உறுதியாக ஈடுபட்டு வந்தார்.

25. ஐந்தாண்டு கால தவம் முடிவுற்றது

சுவாமிஜி அவர்கள் 1949 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஐந்தாண்டு கால தனித்தவ நிலை முடிவிற்கு வந்தது. செயற்கரிய ஒரு மாபெரும் வேள்வி செய்து முடிக்கப் பெற்றது. ஐந்தாண்டு கால தவநிலையின் சாதனை காரணமாக அவரது உள்ளும் புறமும் ஒளிர்ந்திட, மேற்கொண்ட சேவையின் சிகரத்தை எட்டவல்ல மகாசக்தியின் ஆற்றலோடு வெளிவந்தார். 1949 ம் ஆண்டில் தனித்தவ நிலையை ஆரம்பித்த காலத்தில் நங்கவரம் பண்ணையார் திரு. ரங்கநாத அய்யர் சுவாமிகளை சந்தித்து தம் மாளிகைக்கு வருகை தருமாறு வேண்டினார். தமது லட்சியம் நிறைவேற தாம் மேற்கொண்ட 5 ஆண்டுகால தவநிலை முடிந்தவுடன் முதலில் அவரது பங்களாவிற்கே வருகை தருவதாக சுவாமிஜி வாக்களித்திருந்தார். அதன்படி முதன்முதலாக காமநாயக்கன்பாளையம் பண்ணையார் பங்களாவிற்குள், குருதேவரை மனதிலே ஸ்மரித்த வண்ணம் காலடி எடுத்து வைத்தார்.

பண்ணையாரும் அவரது குடும்பத்தாரும் சுவாமிஜிக்கு மகத்தான வரவேற்பளித்தனர். பங்களா முழுவதும் தோரணங்கள், வாழை மரங்கள் கட்டியும், தென்னங்குருத்து மடல்கள், தென்னை ஓலைகளால் அலங்கார தோரணங்கள் கட்டப்பட்டும் விழாக்கோலமாக காட்சியளித்தது.

பண்ணையார் அவர்களிடம் தாம் அனாதைக் குழந்தைகள் சேவையில் ஈடுபடப் போவதாக சுவாமிஜி கூறினார். சுவாமிஜியின் ஒவ்வொரு சொல்லும் பண்ணையாரை காந்தம் போல் ஈர்த்தது. அவர் மேற் கொண்டுள்ள அனாதை மக்களின் சேவையில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு பண்ணையார்

வேண்டுகோள் விடுத்தார். நடப்பது அனைத்தும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பேரருள் எனக்கூறி அவரது வேண்டுகோளை அன்புடன் ஏற்றார் சுவாமிஜி.

அன்பு மனங்கள் இரண்டும் ஒன்றாயின.
ஒரு பிடி அவல் குசேலரை பகவான் கிருஷ்ணருடன் பிணைத்தது.
ஒரு கை மலர்கள் மார்க்கண்டேயனை பகவான் பரமேஸ்வரிடம் பிணைத்தது.
நாரத மகரிஷியின் உபதேசம் பிரகலாதனை பாற்கடல் வாசனுடன் இணைத்தது.
சுவாமிஜியின் அனாதை மக்கள் சேவை பண்ணையாரை பகவான் பரமஹம்ஸரின் பேரருளில் இணைத்தது.


குடில் சேவைக்கு பண்ணையார் மேற்கொண்ட முயற்சியில் பொருள் சிறிது சிறிதாக குவியலாயிற்று. பண்ணையார் 5 ஏக்கரா நஞ்சை நிலத்தை குடிலுக்கு தான சாசனமாக எழுதி வைத்தார். அக்காலத்தில் இந்த நிலத்தின் மதிப்பு ரூ 25,000/= ஆகும். மேலும் குடிலுக்கு நிதி திரட்ட பிரயாணம் சென்று வர, தமது காரை பண்ணையார் இரண்டாண்டு காலத்திற்கு குடில்சேவையில் ஈடுபட கொடுத்துதவினார். தாமும் சுவாமிஜியுடன் கூடவே சென்று தம் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் இதர பண்ணையார்கள் ஆகியோர்களிடம் குடிலைப் பற்றியும் அதன் சேவைகளைப் பற்றியும் அதற்காக தமது வாழ்வையே அர்ப்பணித்த சுவாமிஜி அவர்களது காரியங்களைப் பற்றியும் எடுத்துக்கூறி நன்கொடை வசூலில் மனமுவந்து தீவிரமாக ஈடுபட்டார். இவ்வாறாக பண்ணையார் மூலமாக ரூபாய் 30,000/= நிதி கிடைக்கப்பெற்றது.

ஆஸ்ரமத்தின் பால் பேரன்புகொண்ட அன்பராக பண்ணையார் இருந்து வந்தார். குடில்சேவை துவக்கப்பட்ட ஆரம்பநிலையில் நங்கவரம் பண்ணையார் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் சொல்லத்தரமன்று. இவரது ஆதரவுதான் குடில்சேவைக்கு முதன்முதலில் கிடைத்த தனிப்பட்ட பிரமுகரின் ஆதரவாகும். இவரைப் பற்றி சுவாமிஜி கூறியிருப்பதாவது. "பண்ணையார் என்ற படாடோபம் சிறிதுகூட இல்லாதவர். அற்புத மனிதர். குழந்தை மனம் படைத்தவர்."


இதிலுள்ள முக்கியத்துவம் யாதெனில் மேற்படி பண்ணையார் குடும்ப வரலாற்றிலேயே இது மாதிரி கைங்கர்யங்களில் ஈடுபடுவது, இன்னொருவருடன் சேர்ந்து பிரயாணம் செய்வது, தாமே முன்னின்று நன்கொடை வசூல் செய்து தருவது போன்ற வழக்கம் கிடையாது. அனைவரும் போற்றிப் புகழக்கூடிய ஜமீன்தாரராக இருந்து வந்தவர் வாழ்க்கையில் இப்படி ஒரு அற்புதமான தொடர்பு குடில்சேவை நிமித்தம் ஏற்பட்டிருக்கிறது என்றால் என்னென்பது?. இது யாருடைய செயல்? பகவான் பரமஹம்ஸரின் பூரண அருள் பண்ணையாருக்கு கிடைத்து விட்டது என்பதுதான் இதற்குற்ற

விடையாகும். சுவாமிஜியின் அரும்சேவைக்கு பக்கபலமாக குருதேவர் இருந்து கொண்டு அதற்குற்ற நபர்களை அவ்வப்போது காட்டி அருள்புரிகின்றார் என்பதற்கு நங்கவரம் பண்ணையார் திரு. ரங்கநாதய்யர் அவர்களே சாட்சியாக இருக்கின்றார்.

தாம் ஏற்றுக் கொண்ட அனாதை மக்கட்சேவையில் அல்லும் பகலும் தமக்கு உறுதுணையாக குருதேவர் இருப்பதை பூரணமாக உணர்ந்து கொண்டார் சுவாமிஜி அவர்கள். தாம் ஏற்றுக் கொண்ட சேவையைப் பற்றியும், தமிழக மக்கள் இச்சேவைக்கு செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றியும் ஒரு விரிவான அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.



குடில் ஆஸ்ரமத்தோற்றம்
(1949)



ராமவாய்த்தலை – கிருஷ்ணவாய்த்தலை – கால்வாய்கள் முன்
வரவேற்பு மண்டபம்




ஆஸ்ரம அலுவலகத்தில்
"சுவாமிஜியின்" திருவுருவம்.

திருச்சி – கோவை
நெடுஞ்சாலையில் அமைந்துள்ள
"குருதேவர் சிலை"




"முப்பெரும் மனித தெய்வங்கள்"



சுவாமிகள்— எம்.ஜி. ஆர் அவர்கள் – வாரியார் சுவாமிகள்



புதுவை ஆளுநருக்கு கதர்மாலை அணிவிக்கும் பிஞ்சுக்கரங்களுடன்
"நூல்" தொகுப்பாசிரியர் வெ. வெங்கடரமணன் அவர்கள்



குடில் ஆண்டுவிழா சுவாமிஜி முன்னிலையில்
கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் உரையாற்றுகிறார்.



“அன்பர்கள் இல்லத்தில்”
அன்பர்களுடன் சுவாமிஜி

1. தமிழகத்திற்கு தன்னிலை விளக்கம்

தாம் ஏற்றுக்கொண்ட சேவையைப்பற்றி நாட்டின் அனைத்து மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். அது அவர்களின் தார்மீகக் கடமை என சுவாமிஜி கூறியிருக்கிறார்.

" அன்பார்ந்த தமிழக மக்களே! பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நற்கருணையாலும், நல்லாசியினாலும் எம் உள்ளத்திலே பிரதிபலித்த மார்க்கம் ஏழை அனாதைச் சிறுவர்களுக்கு தொண்டு புரிவதேயாகும். இதுவே இப்பிறவியின் லட்சியம் என முடிவு செய்யப்பட்டது. பகவானின் பெயரால் ஏற்படுத்திய ஆஸ்ரமத்தின் திருநாமம் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்பதாகும். இந்நிலையம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசுவாமி விவேகானந்தர் ஆகிய இரு பெரும் மகான்களின் லட்சியங்களுக்கேற்ப ஆத்ம தானம், அறிவு தானம், அன்னதானம் ஆகிய மூவகைகளில் தமிழக மக்களுக்கு சேவை செய்ய உறுதி மேற்கொள்ளப் பெற்றன."

" ஆத்ம தானமவாவது, பயிற்சியின் மூலம் தன்னலமற்ற சேவையில் ஈடுபட இளம் வாலிபத்துறவிகளை தயார் செய்வதாகும்."

" அறிவு தானமாவது, பெற்றோர்களற்ற அனாதைச் சிறுவர்களை நிலையத்தின் குருகுலத்தில் சேர்த்துக் கொண்டு, வித்யாலயம் மூலம் அவர்களது அறிவுக்கண்களை திறப்பதாகும்."

" அன்னதானமாவது குருகுலத்தில் சேர்த்துக் கொண்ட சிறுவர்களுக்கும், அவ்வப்போது ஆஸ்ரமத்தை நாடிவரும் சாதுக்களுக்கும் ஏழை மக்களுக்கும் உணவளிப்பதாகும்."

"ஏழைக் குழந்தைகளை கரையேற்றுதல் என்னும் கொள்கையில் யாருக்கும் எவ்வித வேறுபாடும் இருக்க முடியாதன்றோ. துறவியும் இல்லறத்தானும் நாட்டின் இரு பெரும் சக்திகளாகும். மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தங்களின் வாழ்க்கையை அவர்களுக்காகவே தியாகம் செய்து துன்பமிலாப் பெருவாழ்வை துறவியானவர் மக்களுக்கு காட்டுகிறார். அத்தகைய துறவிகளை இல்லறவாசிகள் போற்றிப் பாதுகாப்பது அவர்கள் கடமையாகும். துறவியின் சேவையும் இல்லறத்தானின் கடமையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாத தன்மை கொண்டது. இல்லறத்தானும் துறவியும் ஒரு வட்டத்தின் இரு முனைகளாகும்."

" சுவாமி விவேகானந்தர் இல்லற அன்பர்களுக்கு கூறுவதாவது; உங்கள் அன்பை குறுக்காதீர்கள். விசாலமாய் விரித்து விடுங்கள். குடும்பத்தார் பேரிலுள்ள அன்பை மற்ற நலிந்தோர்க்கும் பரவவிடுங்கள். அதுவே உங்களுக்கும் உலகிற்கும் முன்னேற்றம் உண்டு பண்ணும்."

" இப்போது ஏற்றுக்கொண்டுள்ள வாழ்க்கையும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சரணாகதியடைந்த துறவு வாழ்க்கையும், கர்ம யோகத்தை அடிப்படையாகக்

கொண்டது. இதுவரையில் உலக நடைமுறையிலே பற்பல பயிற்சிகளை ஈந்தான் ஈஸ்வரன். ஆழ்ந்த ஆத்ம சாதனத்தில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் மனப்பண்பாட்டையும் பெற்று அதன் மூலம் “ அவன்” காட்டியருளும் பணியில் ஈடுபட முன் வந்துள்ளோம்.”

“ இது நித்திய வழிபாடாக தொடர்ந்து நிகழ்ந்து வரலாயின. ஏற்றுக் கொண்டுள்ள சேவையின் நிமித்தம் தமிழ்நாட்டு மக்களிடம் இந்த சேவைக்காக பொருளீட்டுவது என்பது மிகவும் அவசியமாயிற்று.”

“ இறுதியாக நீ பணி செய்யப் பிறந்தவன். தரித்திர நாராயணர்களின் சேவையே உனது பணி. அவர்களே தெய்வம் என்ற பகவானின் ஆதேசம் திட்டவட்டமாக கிடைத்தது. உலகிற்கு எமது நிலை விளக்கப்பட்டு விட்டது. இச்சேவைக்கு தமிழக மக்களின் அன்பும் ஆதரவும் நிச்சயம் உண்டு என்பதில் கடுகளவு கூட சந்தேகம் கிடையாது. இறைவன் சித்தம். நடப்போம் அவன் காட்டிய வழியில்”.

2. அன்பான வேண்டுகோள்

மேலே கண்ட தலைப்பில் தனம், மனம் படைத்த அன்பர்களுக்கு 1953 – 55 ம் வருட ஸ்தாபன அறிக்கையில் சுவாமிஜி அவர்கள் எடுத்துச் சொன்னது. கீழே தரப்பட்டுள்ளது.

“ இவ்வுலகில் நாம் வெற்றி பெறுகிறோம் என்றால் அது நம் திறமையால் அல்ல. ஈசனின் கருணையினால்தான் என்பதை உணர வேண்டும். நமது செயலாற்றும் திறமையும் இறைவனால் அளிக்கப்பட்ட சக்தியாகும். நம்மிடமுள்ள பலம், புத்தி ஆகியவை நமக்கு சொந்தமானது அல்ல. கடவுளால் அளிக்கப்பட்டவையே ஆகும். ஆகவே நாம் எப்போதும் கடவுளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய காரியங்களையே செய்தல் வேண்டும். கடவுளுக்கு எந்த காரியம் மகிழ்ச்சியளிக்கும் என்பதை நம் இதயத்தைக் கேட்டுக் கொள்ளலாம். அதன் மூலம் அதைத் தெரிந்து கொள்ளலாம்.

“ கல்வி கற்கத்துடிக்கும் ஒரு ஏழைச்சிறுவனுக்கு உதவி செய்தோமென்றால், ஈசன் உள்ளேயிருந்து நீ மிக நல்ல காரியத்தைச் செய்தாய் என்று அருளுணர்ச்சியூட்டுகிறார். இதே போல் பசியால் வாடும் ஒருவனுக்கு உணவளித்தால் ஈசன் உன்னிலிருந்து ஆறுதலளிக்கிறார். ஆண்டவனின் இருப்பிடம் சப்தபிராகாரத்திற்குள் அடங்கியுள்ள கோயில் என நினைக்கலாகாது. அவர் நம் இதயக்கோவிலில் இருக்கிறார். எனவே நம் வாழ்வு எல்லா மக்களின் நலனுக்காகத்தான் என்று நாம் எண்ணுவோமானால் நமது ஆற்றல் பெருகும். அவனது ஆசி நமக்கு கிட்டும்.

“ ஆகையால் இந்த சீரிய பணியில் சிறிய பெரிய அளவில் பங்கெடுத்துக் கொண்ட அன்பர்கள் அனைவரும் அகங்காரம் சிறிதுமின்றி இறைவனின்

பணிக்கு ஒரு கருவியாய் அமைய நமக்கும் சிறிது பாக்கியம் கிட்டிற்றே என்கிற வினையமான கருத்துடன் மேலும் தமது முயற்சியை ஆண்டவன் அருளுக்கிசைய தீவிரமாக்க வேண்டும். ஆண்டவனுக்கு சேவை செய்வது போல் ஆஸ்ரமத்திற்கேற்ற கண்ணியமான முறையில் ஒரு பிள்ளையை போஷித்து வருவதற்கு வருடம் சுமார் முன்னூறு ரூபாய் வீதம் செலவாகிறது. ஒரு பிள்ளைக்கு மாதம் 8 ரூபாய் என வருடத்திற்கு 96 ரூபாய் மட்டுமே அரசாங்கத்திலிருந்து இத்தகைய ஸ்தாபனங்களுக்கு மானியமாகக் கிடைக்கின்றது. மீதித் தொகையை பொதுமக்களிடமிருந்துதான் நன்கொடைகள் வாயிலாக வசூல் செய்ய வேண்டியுள்ளது. எனவே இச்சேவையில் மிகப்பெரும் சிரமம் இருப்பதால் திக்கற்ற குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு நாட்டில் இத்தகைய தர்மஸ்தாபனங்களை தோற்றுவிக்க யாரும் முன்வருவதில்லை.

" கட்டணங்கள் வசூலிக்கும் ஸ்தாபனங்களில் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் இருந்து வந்த போதிலும் அவற்றை நிர்வகிப்பதில் எவ்வித சிரமமும் இல்லை. ஆனால் குடில் ஸ்தாபனத்தின் நடைமுறை திட்டமானது முற்றிலும் தர்ம சேவையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் செலவைத் தவிர வரவிற்கு வழியே இல்லை. இத்தகைய தர்மஸ்தாபனங்களில் 10 குழந்தைகள் இருந்தாலும் முற்றிலும் இலவசமாக அவர்களை பராமரித்து வருவது என்பது எவ்வளவு பெரிய சோதனை என்பதை அனுபவித்து பார்த்தவர்களுக்கு மட்டுமே தெளிவாகும். இக்கருத்தை பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

" துன்ப எல்லைகளின் சோதனையை தாங்குவதும் அனுபவிப்பதும் துறவுக்கு பூஷணம்தான் என்றாலும், அச்சோதனையை தவிர்க்க விரைவது இல்லறத்தாரின் கடமையாகும் என்பதையும் மறந்து விடக்கூடாது. இது விஷயத்தில் மேல்நாட்டவர்களை ஓர் எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். அவர்கள் தாங்கள் ஈட்டிய செல்வத்தின் பெரும்பகுதியை குடும்பத்திற்காக தந்துவிடுவதில்லை. தேவையான குறிப்பிட்ட தொகையை குடும்பத்திற்காக தந்து விட்டு பெரும்தொகையை ஏழைக்குழந்தைகளை பராமரிக்கும் தர்மஸ்தாபனங்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். சந்ததி இல்லாத பெரும் பணக்காரர்கள் தங்களது ஆஸ்தி முழுவதையும் இத்தகைய தர்மஸ்தாபனங்களுக்கே எழுதி வைத்து விடுகின்றனர். அதனால்தான் உலகிலுள்ள கிருஸ்துவ மிஷினரிகளுக்கு கோடிக்கணக்கில் சொத்துக்கள் குவிந்திருப்பதும் அதைக்கொண்டு அவர்கள் அனாதைவிடுதிகளை ஏற்படுத்தி நடத்தி வருவதும் எளிதாக முடிந்து விடுகின்றது."

"தெய்வப்பற்றும், சமயப்பற்றும், நாட்டுப்பற்றும் ஏழைகள் பால் இரக்கமும் அன்பும் கொண்ட மிகுந்த பண்பாடுள்ள இந்தியர்கள், தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நம்மவர்கள், மேல் நாட்டவர்களைப் பார்த்து நம் நாட்டிற்கும் நமது புராதானமாக பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் ஒவ்வாத

எவ்வளவோ விஷயங்களை நவநாகரீக பழக்கவழக்கங்களை கற்றுக் கொள்வதைவிட, அவர்களுடைய அறச்செயல்களை பின்பற்றி ஒழுகினால் சமயத்திற்கும் நாட்டிற்கும் எவ்வளவோ நன்மையுண்டு. திக்கற்ற ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்வதே தெய்வ வழிபாடு என்பதை ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் கைக்கொண்ட சித்தாந்தமாகும். உலகிலுள்ள சமயங்கள் அனைத்திற்கும் சம்மதமான சித்தாந்தமும் இதுவேயாகும்."

" இந்த ஸ்தாபனத்திற்கு ஏற்கனவே ஆதரவு அளித்துள்ள அன்பர்களுக்கும் இனி ஆதரவு அளிக்க இருக்கும் அன்பர்களுக்கும், இந்த தர்ம ஸ்தாபனத்தின் தலை சிறந்த சேவையை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி சேவையில் ஈடுபாடு கொள்ளும்படி செய்வதும் ஒரு சிறந்த சேவையாகும்."

"தர்ம கைங்கர்யங்களில் ஈடுபாடு கொண்டவர்களும், சமூக சேவையில் நாட்டம் கொண்ட தொண்டர்களும், சங்கங்களும் சற்றே செவி சாய்ப்பார்களாக. குடில் என்பது என்ன? அங்கு என்ன நடக்கிறது? அனாதை மக்களின் சேவைக்கென அங்கு கைக்கொள்ளும் திட்டங்கள், முன்னேற்ற நடவடிக்கைகள் யாவை என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கும் பொது மக்களும், பள்ளிகளும், சேவா சங்கங்களும் இங்கு வந்து இங்கு நடைபெறும் குழந்தைகளின் வாழ்க்கை முறை, கற்பிக்கப்படும் கல்வி, ஒழுக்க நெறிகள், பாரதப்பண்பாடு, எப்பணி செய்யினும் அது இறைவன் பணியே என்ற சமநோக்கில் இயங்கும் முறையை கண்டு செல்ல இரு கரம் கூப்பி வாருங்கள், வாருங்கள் என அழைக்கின்றோம்."

"ஆகையால் அன்பர்கள் இந்த ஸ்தாபனத்தின் சேவை, நாணயம், தூய்மை ஆகியவற்றை நன்கு அறிந்து கொண்டு அவரவர்களால் இயன்ற நன்கொடைகளை நேரில் வந்தோ, செக் மூலமாக தபாலில் அனுப்பியோ, மணியார்டர் செய்வதின் மூலமாகவோ அனுப்பி வைத்து மகிழ்வோடு ஆதரவு நல்குமாறு கோருகின்றோம்."

" இப்பெரும்பணியில் பங்கு கொண்ட அன்பர்களே எளியோர்க்கிரங்கும் அன்பைப் பெறுவோமாக. அனைவர் மாட்டும் பகவான் ராமகிருஷ்ணரின் பேரருள் சுரந்து பெருகுமாக! "

"ஏட்டுப்படிப்பை மட்டும் கற்றோமே
ஏழைக்கு இரங்கும் அன்பைப் பெற்றோமா?
நாட்டில் நலிந்தவர்க்காய் அழுது உருகும்
ராமகிருஷ்ணர் தம்கருணை தொழுதிடுவோம்."

5. பத்து லட்சம் மைல் பிரயாணம்

கலெக்டர் மலையப்ப ஐயாவின் மனது சதாசர்வகாலமும் குடிலைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும். இன்று எந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யலாம்.

அடுத்த மாதம் எங்கு எந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யலாம், எவ்வளவு வசூல் எதிர்பார்க்கலாம் என்றெல்லாம் கணக்கு போட்ட வண்ணம் இருப்பார்.

அவரது பெயருக்கு ஏற்ப மலைபோல உயர்ந்த எண்ணங்கள் அவரது பரந்த மனதிலே தோன்றிய வண்ணம் இருக்கும். அடிக்கடி குடில் சுவாமிஜியிடம் தொடர்பு கொள்வார். முன் தகவல் சொல்லித்தான் குடிலுக்கு போகவேண்டும் என்றெல்லாம் நினைக்க மாட்டார். ஏதாவது திட்டம் மனதிலே தோன்றும். சுவாமிஜியும் ஆஸ்ரமமும் அவர் கண் முன்னே தோன்றும். உடனே குடிலுக்கு புறப்பட்டு விடுவார்.

திடீரென ஒரு நாள் அவருள்ளே ஒரு புதுயோசனை தோன்றியது. உடன் குடிலுக்கு புறப்பட்டு வந்தார். சுவாமிஜியை சந்தித்தார்.

" சுவாமி 1960 ம் ஆண்டு வரை திருச்சி மாவட்டம் ஒன்றில் தானே பஞ்சாயத்து வசூல் செய்து வந்திருக்கிறோம். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் செல்வோம். கலெக்டர்களை சந்தித்து அரசு ஆணைப்படி அப்பீல் கொடுப்போம். இப்போதுள்ள அனேக மாவட்ட கலெக்டர்கள் என்னிடம் பயிற்சி பெற்றவர்கள். நன்றாக ஒத்துழைப்பு தருவார்கள். பஞ்சாயத்து வசூலும் அமோகமாக நடக்கும்." என்றார் கலெக்டர் மலையப்ப ஐயா அவர்கள்.

அதற்கு சுவாமிஜி அவர்கள், "ஐயா பகவான் பரமஹம்ஸர் இந்த புதுத்திட்டத்தை குடிலின் மேன்மைக்காக தங்கள் உள்ளத்தில் புகுத்திவிட்டார்.அவனது திருவருளின் ஆணை இதுதான் என்றால் நடக்கட்டும். தங்கள் வார்த்தைகளுக்கு மறுவார்த்தையா சொல்லப் போகிறேன். குடிலின் நலனிற்காகத் தானே நீங்கள் பாடுபடுகிறீர்கள்" என்றார் சுவாமிஜி.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டக் கலெக்டர்களுக்கும் குடிலின் சேவை விளக்கம் தெரிவிக்கப்பட்டது. பஞ்சாயத்து வசூலுக்கான அப்பீல் எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்டன.

பெரும்பான்மையான மாவட்டக் கலெக்டர்கள் மலையப்ப ஐயாவிடம் பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் மலையப்ப ஐயாவையும் குடில் சுவாமிஜியையும் அன்புடன் வரவேற்றார்கள். தங்களை ஆசீர்வதிக்கும்படி மலையப்ப ஐயாவிடம் வேண்டி நின்றனர்.

இவ்வேளையில் குடிலின் ஜீவநாடியான பஞ்சாயத்து வசூலை, அதன் பின்னணியை சற்று விரிவாகப் பார்ப்போம். ஆரம்பத்தில் திருச்சி மாவட்டம் ஒன்றிலே தான் வசூல் வேலை நடைபெறும். திருச்சி மாவட்டத்தில் சுமார் 650 பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஒரு ஜில்லா பஞ்சாயத்து ஆபீசரும், 11 டிப்டி பஞ்சாயத்து ஆபீசர்களும் பஞ்சாயத்துக்களை நிர்வகித்து வந்தனர். எங்களுடன் 11 டிப்டி பஞ்சாயத்து ஆபீசர்களும் சுற்றுப்பயணம் செய்ய தேதிகளை ஒதுக்கித் தருவார் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர். அதன்படி வசூல் பிரயாணம் நடைபெறும்.

குடில் காரில் கட்டுசாத மூட்டையும், காவேரி தீர்த்த குடங்களும்

ஏற்றப்படும். கலெக்டர் ஐயாவும் சுவாமிஜியும் அந்தந்த வட்டார டிப்டி பஞ்சாயத்து ஆபீசர்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று பஞ்சாயத்துக்கு ரூ 50,= வீதம் வசூல் செய்யப்படும். சராசரியாக மாதத்தில் 20 நாட்கள் வசூல் யாத்திரை நடைபெறும். வருடத்தில் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் திருச்சி ஜில்லா ஒன்றையே சுற்றிச்சுற்றி வருவோம்.

சுவாமிஜி காரில் அமர்ந்தவுடன் அதிகம் பேசமாட்டார். பரமஹம்ஸர் சிந்தனையில் அவரது மனம் லயித்து விடும். வசூல் யாத்திரை என்றாலே கலெக்டர் ஐயாவிற்கு உற்சாகம் பற்றிக் கொண்டுவிடும். உரத்த குரலில் சிரித்துப் பேசிக் கொண்டே உடன் வரும் அதிகாரிகளிடம் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார். போகும் வழியில் ஆங்காங்கே கிடைக்கும் பழங்கள், சிற்றுண்டி ஆகியவைகளை தமது செலவிலேயே வாங்குவார். செலவு குடிலை சேர்ந்தது என எவ்வளவு முறை சுவாமிஜி வற்புறுத்திக் கூறினாலும் கலெக்டர் ஐயா அதற்கு செவி சாய்க்க மாட்டார். “குடிலுக்கு கொடுப்பது தான் எங்களது கடமை. குடிலிலிருந்து எடுத்துக் கொள்வதல்ல” என்பார் கலகலவென உரத்த குரலில் பேசும் அவரது பேச்சிற்கு சுவாமிஜியால் பதில் பேசவே இயலாது. பிரயாணம் முழுவதும் தமது பேச்சாலும், கலகலவென்ற சிரிப்பாலும் பிரயாணத்தின் சிரமம் தெரியாமல் செய்து விடுவார்.

ஒவ்வொரு பஞ்சாயத்து தலைவர்களும் இவர்களுக்காக காத்திருப்பார்கள். மலையப்ப ஐயாவிடம் இவர்களுக்கு பெருமதிப்பு உண்டு. பஞ்சாயத்து அலுவலர் ஒவ்வொருவரையும் தனித்தனியே விசாரிப்பார். அவர்களும் கலெக்டர் ஐயாவை தங்களது தந்தையென மதித்து வித்தியாசமின்றி உறவாடுவார்கள். உபசரிப்பு வெகுபலமாக நடக்கும். “அடுத்த கிராமத்திற்கு செல்லவேண்டும் நேரமாகின்றது” என உடன் வரும் பஞ்சாயத்து அதிகாரிகள் கூறினாலும் கலெக்டர் ஐயா நிதானமாக பேசி விடைபெறுவார்.

பிரயாணம் முழுவதும் வாடகைக்காரில்தான் நடக்கும். கார் வாடகைக்கென கணிசமான ஒரு தொகை தரவேண்டியிருந்தது. குடிலுக்கே சொந்தமாக ஒரு கார் வாங்க வேண்டுமென்று முடிவாயிற்று. அம்பாசிடர் கார் ஒன்று 1958 ம் வருடம் வாங்கப்பட்டது.

பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டபின் அனைத்து பஞ்சாயத்துகளும் கலெக்டரின் அதிகாரத்தின் கீழ்வந்தது. இதன்பின் தான் குடிலின் பஞ்சாயத்து வசூல் விஸ்வரூபம் எடுத்தது. கலெக்டர் ஐயாவுடன் சேர்ந்து ஒவ்வொரு வருடமும் சுமார் ஐந்து அல்லது ஆறு முறை தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பிரயாணம் செய்து அரசாணைப்படி நன்கொடை வசூல் செய்யப்பட்டன. வசூல் விஷயமாக 12 கலெக்டர்கள் 40 RDO க்களை எல்லாம் ஒவ்வொரு வருடமும் 5, 6 முறைகள் பார்த்து விடுவோம். இவ்வாறு 20 ஆண்டு காலம் தொடர்ந்து பஞ்சாயத்து வசூல் நடந்தது.

இந்த பஞ்சாயத்து வசூலுக்காக சுமார் 10 லட்சம் மைல் பிரயாணம்

செய்யப்பட்டது. பிரயாணச் செலவாக ரூபாய் 3 லட்சம் செலவிடப்பட்டது. காரிலேயே தொடர்ந்து 10 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்வது என்றால், நினைத்துப் பார்க்கவே மனம் அஞ்சுகிறது. கிட்டத்தட்ட 30 ஆண்டு காலத்திற்கு இந்தக் கார் பயணம் தொடர்ந்து நடந்தது.

உடலும் உள்ளமும் மிகமிக ஆரோக்யமான நிலையில் இருந்தாலன்றி இது நடைபெறாது. குடில்சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, பரமஹம்ஸர் பேரருள் உடனிருந்து காக்க இப்பெரும்வேள்வியில் சுவாமிஜியும், கலெக்டர் ஐயாவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். உடலை மறந்தனர். அவர்கள்முன் இருந்ததெல்லாம் குடிலின் தரித்திர நாராயணர்களின் சேவைக்கு போதுமான நிதி என்ற லட்சியம் ஒன்றேதான். அந்த லட்சியமே அவர்களின் உடலிற்கும், உள்ளத்திற்கும், “ ஜீவ அமிர்தமாக” இருந்து பாதுகாத்து வந்தது.

கலெக்டர் மலையப்ப ஐயாவின் பணி குடிலின் சரித்திரத்திலே இமயமென என்றும் வானளாவ உயர்ந்து நிற்கும். அவரது பெயரும், புகழும் என்றும் நிலைத்திருக்கும்.

4. உழைப்பே உயர்வுதரும் அளவுகோல்

உழைத்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் மனித இனத்திற்கு இரண்டு கைகளை ஆண்டவன் கொடுத்துள்ளான். குடிலின் உயர்விற்கு காரணமே உழைப்பு... உழைப்பு... உழைப்புதான். முன்னூறு இளம் சிறுவர்கள் தங்களின் இளம் கரங்களால் தோற்றுவிக்கப்பட்ட விந்தைச் செயல்களை குடிலுக்கு செல்பவர்கள் கண்டு மகிழலாம். இந்த உழைப்பின் ஆதாரகர்த்தா சுவாமிஜி அவர்களே ஆவார்கள்.

காவேரிப் படுகையில் கலெக்டர் மலையப்பன் அவர்கள் குடிலுக்கு 10 ஏக்கர் நிலத்தை “ அலியனேஷன்” மூலம் கிடைக்க ஏற்பாடு செய்தார். அந்த 10 ஏக்கர் நிலமும் 1960 ல் தான் குடிலுக்கு சொந்தமாயிற்று. அந்த நிலத்தில் சவுக்கு மரங்கள் நடப்பட்டன. பத்து இருபது உரைகிணறுகள் தோண்டப்பட்டன. இக்கிணறுகள் மூலம் சவுக்கு நாற்றுகளுக்கு நீர் ஊற்றப்பட்டது. இதற்கென எவ்வித பணியாட்களும் இல்லாமல், பள்ளியில்லா நாட்களிலும் பள்ளி முடிந்த பின் ஒரு மணி நேரம் குருகுல மாணவர்கள் முழு மூச்சுடன், உற்சாகமாக, ஆக்கபூர்வமான ஒரு பணியை செய்கின்றோம் என்ற எண்ணத்தில் சவுக்குத் தோப்பில் காரியங்களை அன்புமனத்துடன் கவனித்து வந்தனர்.

“தாவரங்களின் வளர்ச்சிக்கு நீரும், நிலமும்,உரமும், காற்றும் மட்டும் போதாது. அவற்றிடம் நமது மனமார்ந்த அன்பை நீர் ஊற்றும் போதும், களை எடுக்கும் போதும் மலர்ந்த முகத்துடன் நமது கரங்களால் அவைகளைத் தடவிக்

கொடுத்து தெரிவிக்க வேண்டும். நாம் காட்டும் அன்பை உணர்வுகள் மூலம் தாவரங்கள் புரிந்து கொள்ளும். ஒன்றுக்கு பத்தாக பலனைத் தரும். ஆகவே நம் குழந்தைகளைப் போல அவற்றிடம் அன்பைக் காட்டுங்கள்'' என தாவரவியல் வித்தகர் சர் ஜகதீஸ் சந்திரபோஸ் கூறியுள்ளார்.

குடில் குழந்தைகள் அவரவர்களுக்கு பிரித்துத் தரப்பட்ட விவசாயப் பணிகளில் உள்ளன்போடு மனதைச் செலுத்தி ஆசை ஆசையாக நீர் வார்த்து வந்தனர். 5 ஆண்டுகள் கழித்து சவுக்கு மரங்களை வெட்டி விற்றதில் சுமார் நாற்பதினாயிரம் ரூபாய்கள் கிடைத்தன. குடில் சிறார்களின் உழைப்பின் உயர்வை இதன் மூலம் அறியலாம்.

சவுக்குகளை வெட்டி விற்றபின் அந்த நிலம் சமன்படுத்தப்பட்டு, 1000 தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டன. வடிமுனைக் குழாய் இறக்கப்பட்டு, பம்ப்செட் மூலம் நீர் பாய்ச்சப்பட்டது. மேல்புறத் தோப்பிலும், புதுத்தோப்பிலும் நூற்றுக்கணக்கில் தென்னைகள் நடப்பட்டன. இவைகளின் பராமரிப்பு முழுவதும் குடில் மாணவர்களையே சாரும். வஞ்சகமற்ற அந்த பிஞ்சுகரங்களால் பராமரிக்கப்பட்ட அத்தென்னைகள் வானை நோக்கி செழிப்புடன் வளரலாயிற்று நஞ்சை பூமியில் நெல்லும் வாழையும் மாற்றி மாற்றி பயிரிடப்பட்டன. குடில் சிறார்களே இப்பணிகளையும் கவனித்து வந்தனர்.

இந்த விவசாய வேலையோடு சுற்றுப்புறத்தூய்மை, உணவு தயாரித்தல், பரிமாறுதல்,காய்கறி நறுக்குதல் போன்ற உணவு விடுதி சம்மந்தப்பட்ட காரியங்களையும் இவர்களே கவனித்து வந்தனர். கட்டடங்கள் பராமரிப்பு, வெள்ளையடித்தல், பெயிண்ட் அடித்தல் ஆகிய பணிகளையும், ஆஸ்ரம நிர்வாகப்பணிகளையும் இவர்களே கவனித்து வந்தனர். சுருக்கமாகச் சொல்வது என்றால் அன்றாட வாழ்வின் சகல வேலைகளையும் திறம்பட நடத்தி வந்தனர்.

இன்றைக்கு சுமார் 5000 தென்னை மரங்கள் குடிலில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ''பெற்ற பிள்ளைகள் சோறு போடாவிட்டால், வளர்த்த பிள்ளைகள் (தென்னம்பிள்ளைகள்) சோறு போடும்'' என்பது தமிழ்நாட்டில் வழங்கி வரும் மூதுரையாகும். இத்தென்னைகள் மூலம் கணிசமான பெருந்தொகை குடில் நிர்வாகத்திற்கு கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

குடிலின் தாரக மந்திரமே '' உழைப்பு'' என்பதாகும். அஞ்சலகத்திலும் குடிலுக்காக '' உழைப்பு'' என்ற சங்கேத மொழி பதியப்பட்டுள்ளது. '' உழைப்பே உயர்வு தரும்.'' உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? போன்ற முதுமொழிகளின் தாத்பர்யத்தை விளக்கும் வகையில் பிரம்மாண்டமாக காட்சி தருகிறது குடில்.

இத்தகைய உயர்ந்த நிலைக்கு முழுக்க முழுக்க சுவாமிஜி அவர்களின் மனதிலே தோன்றிய உழைப்பை அடிப்படையாக கொண்ட ஆக்கபூர்வமான திட்டங்களே ஆகும்.

5. குடில் சின்னம்

ஒவ்வொரு கல்வி நிலையங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும், வாணிபத் தலங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் ஒரு சின்னம் இருக்கும். ஆங்கிலத்தில் "டிரேட் மார்க்" எனப்படுகிறது. அந்த அளவில் குடிலுக்கும் ஒரு சின்னம் தேவை என்பதை உணர்ந்து தோற்றுவிக்கப்பட்டது தான் குடில் சின்னம்.

சுவாமிஜி அவர்கள் தனித்தவம் இயற்றிவரும் வேளையில், வேதவ்யாச முனிவர், சுவாமி விவேகானந்தர் ஆகிய உத்தம ஞானிகள் வலியுறுத்திய ஆத்ம தானம், அறிவு தானம், அன்னதானம் ஆகிய மூன்று தானங்களையும் உள்ளடக்கியது தான் குடில்சேவையாக மலரவேண்டும் எனத்தீர்மானித்தார்.

அதற்கேற்ப குடில் சின்னம் உருவாயிற்று. ஹம்சம்(அன்னப்பறவை) சூரியக்கதிர், நெற்கதிர் ஆகிய மூன்றும் இருக்கும் வண்ணம் குடில் சின்னம் தயாரிக்கப்பட்டது. அதைப்பற்றிய விளக்கம்: அதாவது அன்னப்பட்சி நடுவிலும், அதைச்சுற்றி சூரியக்கதிரும், சூரியக்கதிரைச் சுற்றி நெற்கதிரும் இருக்குமாறு சின்னத்திற்கு இறுதிவடிவம் தரப்பட்டது.

இச்சின்னம் இவ்வாறு ஏன் அமைக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தை சுவாமிஜி கொடுத்துள்ளார்கள்:

1. அன்னப்பறவை :

நீர் கலந்த பாலிலிருந்து நீர்வேறு பால் வேறாக பிரித்து, நீரை நீக்கி பாலை மட்டும் பருகும் அரிய ஆற்றலைப் பெற்றது ஹம்ஸப்பறவை(அன்னப்பறவை). இதன் கருத்தாவது பாலில் நீர் கலந்திருப்பது போன்று ஈசன் மாயையோடு இரண்டறக் கலந்திருக்கிறான். சாதாரண மானிடர்களுக்கு மாயையை நீக்கி ஈஸ்வரனைக் காணும் சக்தி இல்லை. பரமஹம்ஸர்கள் மட்டுமே அத்தகைய அற்புத சக்தியைப் பெற்றவர்கள். இதனால் தான் அன்னப்பறவைக்கு ஹம்ஸம் என்ற பெயரும் உண்டு.

2. சூரியக்கதிர்:

உலகின் காரிருளை நீக்குபவன் கதிரோன். கல்வியின்மை என்னும் அறியாமை இருளை அகற்றி அறிவுச்சுடர் பரப்பும் பணியைக் குறிப்பது தான் சூரியக்கதிர்.

3. நெற்கதிர் :

உடல் தரித்திருக்க உணவு மிகவும் அவசியம். உணவிற்காக தானிய வகைகள் அனேகமிருக்க அவற்றுள் தலை சிறந்த தானியம் நெல் ஆகும். இதைக் குறிப்பதுதான் நெற்கதிர்.

முன்னதாகக் குறிப்பிட்ட மூவகை தானங்களைப்பற்றி சற்று பார்ப்போம்.

1. ஆத்ம தானம் :

குடிலில் சேர்ந்து கல்வி பெறும் மாணவர்களிடையே இருந்து தகுதியான வர்களுக்கு ஆஸ்ரம வாழ்க்கை வாழ பிரம்மச்சாரி தீட்டை அளித்து தயார் செய்வது ஆத்ம தானம்.

2. அறிவு தானம் :

குடிலில் சேரும் மாணவர்களுக்கு கல்விப் பயிற்சி அளிக்க வித்யாலயம் மூலம் மேற்படி குழந்தைகளுக்கு கல்வியளிப்பது அறிவு தானம்.

3. அன்னதானம் :

குடிலில் சேரும் சிறார்களின் வயிற்றுக்கு உணவளித்தல் என்ற ஜீவாதாரக் கடமையை குருகுலம் மூலம் அவர்களின் பசிப்பிணியைப் போக்குதல் அன்னதானம்.

இம்மூன்று தத்துவங்களும் குடில் வாழ்க்கையில் இணைந்திருப்பதை நேரில் காண்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

6. ராமநாமம் கண்டேன். சிவ நாமம் காணவில்லையே

குடில் எல்லைக்குள் வரும் போதே சாலையின் இருமருங்கிலும் உள்ள மரங்களில் 'ராம் – ராம்' என்ற புனித நாமம் கொண்ட தகரத்தகடுகள் பதிக்கப்பட்டிருப்பதைக் குடிலுக்கு வரும் அன்பர்களும், சாலையில் போகின்றவர்களும் வருகின்றவர்களும் அறிவார்கள்.

ஒரு சமயம் ஆஸ்ரமத்தைச் சுற்றிப்பார்க்க வந்த கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் குடிலை சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார். ஆஸ்ரமத்தை சுற்றிக் காண்பிக்க அவருடன் பெரிய மாணவன் ஒருவனும் சென்றான். ஆஸ்ரமத்தின் பகுதிகள் அனைத்தைப் பற்றியும் அம் மாணவன் அவருக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தான். ஆஸ்ரமத்தின் தூய்மை, அவரவர்கள் காரியங்களை அவரவர்களே செய்து வருதல், இவ்வளவு பெரிய ஆஸ்ரமத்தில் அன்றாட காரியங்கள் அனைத்தையும் செய்து முடிப்பவர்கள் அங்கு பயிலும் மாணவர்களே என்பதைக் கேட்டு அந்தப் பேராசிரியர் பெரும் வியப்பில் ஆழ்ந்தார்.

"தன் கையே தனக்குதவி" என்ற மூதுரையின் விளக்கத்தை அவர் குடிலில் முழுமையாகக் கண்டு கொண்டார்.அந்தந்த வயதிற்கேற்ப, சக்திக்கேற்ப மாணவர்கள் செய்யும் வேலை அவரை மிகவும் மகிழச் செய்தது. ஒழுக்கத்துடனும், ஆன்மீக உணர்வுடனும், கட்டுக்கோப்புடனும் அவ்விளம் மாணவர்கள் சுவாமிஜி அவர்களால் சீரிய முறையில் வளர்க்கப்படுவது கண்டு பேரானந்தம் அடைந்தார்.

திடீரென அவர் உள்ளத்திலே சிறு பொறி தட்டியது. சுற்றுமுற்றும் பார்த்தார். சென்ற வழியிலேயே மீண்டும் சென்று பார்த்தார். எங்கு பார்த்தாலும் ராம நாமம் அவர் கண்களுக்கு தெரிந்தது. மனதிலே ஒரு சந்தேகம் உருவாயிற்று. ஓரிடத்தில் கூட சிவ நாமம் காணப்படவில்லை . ஆஸ்ரமத்தில் ஏன் இந்த வேறுபாடு? சிவநாமம் ஏன் ஒதுக்கப்பட்டுவிட்டது? சிவத்தை போற்றாதவரா இந்த சுவாமிஜி போன்ற எண்ணங்கள் அவர் மனதிலே அலை மோதியது. இதற்கான காரணத்தையறிய அவரது மனம் துடித்தது.

ஆஸ்ரமம் முழுவதையும் சுற்றிப்பார்த்த அவர் சுவாமிஜியை சந்திக்கச் சென்றார். மனதிலே தோன்றிய நெருடலை சுவாமிஜியிடம் கேட்க அவரது நா துடித்தது. சுவாமிஜி பேராசிரியரை அன்போடு வரவேற்று அமரச் செய்தார். அவரைப் பற்றி விசாரித்தார். பேராசிரியரும் தம்மைப்பற்றிக் கூறினார். தீர்த்தமும் பிரசாதமும் அவருக்கு வழங்கப்பட்டன.

தனது சந்தேகத்தை பேராசிரியர் சுவாமிஜியிடம் கேட்டு விட்டார். அந்த அன்பரை பார்த்த மாத்திரத்தில் அவர் சைவ சமயத்தில் பற்றுடையவர் என்பதும், சிவ ஆராதனை செய்து வருபவர் என்றும், அவரது வெளித்தோற்ற சைவச் சின்னங்கள் சுவாமிஜிக்கு புரிய வைத்தன. யார் எக்கேள்விகள் கேட்டாலும் சுவாமிஜியிடமிருந்து முதலில் நாம் காண்பது அவரது புன்னகையைத்தான். பேராசிரியரின் கேள்வியைக் கேட்டு சுவாமிஜி அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்.அவருக்கு விளக்கம் கூற ஆரம்பித்தார்.

" ஐயா. . . பொதுவாக ராம் என்ற சொல்லை பார்த்தாலும் கேட்டாலும் முதலில் நமக்கு தோன்றுவது வைஷ்ண சம்பிரதாயமும், தசரத ராமனும் தான். இந்த ஞாபகம்தான் மக்களிடையே வருகின்றது. இதை ஒரு குறையாக சொல்வதற்கில்லை. ஏனெனில் காலம் காலமாக அப்படி வழக்கத்தில் வந்திருக்கிறது. உபன்யாசகர்கள் மக்களிடையே ராமாயண காவ்யத்தை கூறி தசரத ராமனின் நினைவை மக்கள் மனதிலே பாறையில் செதுக்கிய எழுத்தாக பதிய வைத்துவிட்டார்கள். பல நூற்றாண்டுகளாக இந்த சம்பவம் மக்கள் மத்தியில் நடந்து கொண்டேயிருக்கிறது. அதனால்தான் "ராம்" என்ற எழுத்துக்களை பார்த்த மாத்திரத்தில் மக்கள் நினைவிற்கு தசரத ராமன்தான். ஆனால் உண்மை அதுவல்ல. இந்த 'ராம்' தசரத ராமனைக் குறிப்பதல்ல. குடிலில் பொறிக்கப்பட்டுள்ள 'ராம்' என்ற சொல் எந்த சம்பிரதாயத்தையோ, அவதார மூர்த்தி ராமனையோ குறிப்பிடுவது அல்ல. இந்த 'ராமா' என்ற சொல் தசரத ராமன் பிறப்பதற்கு பற்பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அனாதிகாலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது. அனாதியான சொல் இது.

காசியில் முக்தியடைந்தவர்களின் செவிகளில் பார்வதியும், பரமசிவனும் 'ராம்' என்ற தாரக மந்திரத்தை ஓதுகிறார்கள். அந்த ஜீவனுக்கு மோட்சம் சம்பவிக்கிறது என பகவான் பரமஹம்ஸர் கூறியுள்ளார். பார்வதியும் பரமேஸ்வரனும் கூறியது தசரத ராமனின் நாமத்தையா?

தசரதராமன் ஈஸ்வரனை லிங்க வடிவில் பூஜித்ததால்தான் அந்த ஸ்தலத்திற்கு ராமேஸ்வரம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று. ராமனுக்கு நாதன் ஈஸ்வரன் ஆனதால் ஊருக்கு ராமநாதபுரம் என்று ஈஸ்வரனை மையமாக வைத்து பெயர் வழங்கப்பட்டுள்ளது. சற்று சிந்தித்தால் நமக்கு ஒரு உண்மை தெரிய வரும்.

ராமேஸ்வரத்தில் தம்மை பூஜித்த தசரத ராமனின் பெயரையா ஈஸ்வரன், காசியில் முக்தியடைபவர்களின் செவிகளில் ஓதுவார்?

ஈஸ்வரனுக்கே தம்மை அர்ப்பணித்த அடியார்கள் ஒவ்வொரு மூச்சிலும் 'ராம்' என்ற பகவந் நாமாவை வாய்க்குள் சொல்லிக் கொண்டிருப்பார்கள் என நாயன்மார்கள் சரித்திரம் நமக்குத் தெரிவிக்கின்றது.

அவர்கள் பேச்சிலும் மூச்சிலும் கூறியது தசரதராமனின் நாமத்தையா?

"அந்தி மாலை உச்சி மூன்றும்
ஆடுகின்ற தீர்த்தமும் – சந்தி
தர்ப்பனங்களும் தபங்களும்
செபங்களும் சிந்தை மேவு ஞானமும்
தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராமவெனும் நாமமே"

என சிவவாக்கியர் என்ற பெரும் சிவஞானி பாடுகின்றார்.

பாடலில் இவர் குறிப்பிட்டிருப்பது தசரதராமனின் பெயரையா?. இல்லை இல்லை. சிந்தை மேவும் ஆத்மராமனையே"

'எனவே எந்த மந்திரத்தால் குடில் பரிணமிக்கின்றதோ அந்த நாமத்தை குடில் எல்லை முழுவதும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அந்த நாமத்தின் உள்ளே ஈசனும் உள்ளான்.

'குடிலை சுற்றிப் பார்ப்பதற்கென்றே பலதரப்பட்ட மக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலாசாலை மாணவ மாணவிகளும் வருடம் முழுவதும் வந்து கொண்டே இருக்கின்றனர். இங்குள்ள மாந்தோப்புகளும், தென்னந்தோப்புகளும், சோலைகளும் காவிரி நதியும் வருபவர்களின் புறக்கண்களுக்கு உவகையளித்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. அவர்களின் அகக்கண்களுக்கு பொன்மொழிகளும், அனாதிகாலம் தொட்டு வழங்கி வரும் ராமநாமமும், பகவான் பரமஹம்ஸர் நாமமும் குருதேவர் ஆலயமும் பெருத்த சாந்தியையும், ஆன்மீக உணர்வையும் பக்திச் சிந்தனையையும் அளிக்கின்றன.

"சாலையின் குறுக்கே வெள்ளிவிழா வளைவிலும், களஞ்சியத்தின் மேலும் "ஓம் ஸ்ரீராமகிருஷ்ணாய" என்ற பகவானின் புனிதநாமம் பார்த்த மாத்திரத்தில் சாலையில் செல்வோரும், வருவோரும் ஆகிய மக்கள் விரும்பியோ விரும்பாமலோ பகவானுடைய நாமத்தை கண்களால் பார்த்து மௌனமாக

மனதிலே உச்சரித்து செல்கின்றனர். இதுவே மறைமுகமான ஞானதானமாகும்.''

''கங்கை நீரில் தானே இறங்கிக் குளித்தாலும், யாராவது பிடித்துத் தள்ளி கங்கை நீரில் நனைந்துவிட்டாலும் கங்கையில் குளித்த பலன் உண்டு. அதுபோல ஒருவன் பகவந்நாமாவை தெரிந்து சொன்னாலும் தெரியாமல் சொன்னாலும் அதற்கான பலன் உண்டு என குருமகராஜ் கூறுகின்றார்.

பேராசிரியரான அந்த அன்பருக்கு சுவாமிஜியால் அளிக்கப்பட்ட விளக்கத்தின் மூலம் 'ராம' நாமத்தின் சரியான விளக்கத்தையும் அந்த நாமத்தில் ஈசனும் உறைகின்றான் என்ற தத்துவ விளக்கத்தையும், பெரும் உபதேசமாகக் கேட்டு ஆனந்தமாக திரும்பிச் சென்றார்.

7. மாலையும் விருந்தும்

வெளி உலகில் ஒரு விழா என்றால் முதலில் தெரிவது படாடோபமான, கோலாகலமான ஏற்பாடுகள்தான். பளபளக்கும் ஜரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய மேடை. வரும் முக்கிய பிரமுகர்கள் அமர விசேஷமான ஆசனம். ஆளுயர மாலை, வண்ண வண்ண நிறங்களில் மினுமினுக்கும் ஜரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய கண்கவர் பொன்னாடைகள், வண்ணவண்ண மின் விளக்கும் ஆகிய அனைத்து ஏற்பாடுகளையும் காணலாம். இன்றைக்கு விழா என்றால் இந்த நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது.

ஆனால் குடிலில் நடக்கும் விழாக்கள் முற்றிலும் வேறுபாடான முறையில் கொண்டாடப்படுகிறது. இங்கு நடக்கும் விழாக்களில் படாடோபமில்லை. பளப்பளப்பான சமாச்சாரங்கள் எதுவும் கிடையாது. தேடினாலும் ஆளுயர மாலை கண்ணில் படாது. ஜமுக்காளம் விரித்த தரைதான் அன்பர்கள் அமரும் சிம்மாசனம். விழாமேடை மிக எளியதாக எவ்வித அலங்காரமும் இல்லாமல் காட்சி தரும் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என வரையப்பட்ட திரைச்சீலைக்கு முன்னால் சுவாமிஜி அவர்களும் ஆஸ்ரம அன்பர்களும் அமர்ந்திருப்பார்கள்.

விழாவிற்கு வருகை தரும் ஜட்ஜ் மகராஜன், கலெக்டர் மலையப்ப ஐயா, வாரியார் சுவாமிகள் ஆகிய முப்பெரும் ஐயாக்களை வரவேற்று மாலை அணிவிப்பது முறையல்லவா? மாலை இருக்கும். ஆனால் அது பளபளப்பு மிக்க ஜரிகை வேலைப்பாடுகள் கொண்ட, மதிப்புமிக்க மாலையாக அது இருக்காது. குடில் மாணவர்கள் ராட்டையில் நூற்ற கதர்நூலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கதர் மாலையை குருகுலமாணவன் இவர்களுக்கு அணிவிப்பான்.

இத்தகைய முறையில்தான் குடில்விழா நடத்த வேண்டுமென்று சுவாமிஜி அவர்கள் முடிவு செய்ததற்கு காரணம் ஏதேனும் உண்டா? உண்டு. முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாபு ராஜேந்திர பிரசாத் ஆவார். அவர் பாரதத்தின் ராஷ்டிரபதியாக இருந்த காலத்தில் ரிஷிகேசத்திலுள்ள சிவானந்த

ஆஸ்ரமத்திற்கு அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒரு விழாவிற்கு பாபு ராஜேந்திர பிரசாத் சென்றார். படாடோபமான முறையில் கோலாகலமான பல நிகழ்ச்சிகளுக்கிடையே அவருக்கு மகோன்னதமான வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலை மரியாதைகள் வெகுவிமரிசையாக நடந்தன. சிறப்பான முறையில் விருந்து நடைபெற்றது. மாலையில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் உரையாற்றினார்கள். இறுதியாக அவர் குறிப்பிட்டது " இன்று இங்கு நடைபெற்ற ஆடம்பர வரவேற்பும், விழாவிற்கான ஏராளமான பணச்செலவும் என்னுள் ஒரு கருத்தை உருவாக்கிவிட்டது. அக்கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். வெளியுலகில் நடத்தப்பெறும் ஆடம்பரமான வரவேற்பு, மரியாதைகளை விடுத்து, எளிமையான முறையில் எவ்விதமான ஆரவாரமுமின்றி விழாக்களை நடத்தினால் நன்றாக இருக்குமே. இது போன்ற ஆஸ்ரமங்களில் நடக்கும் விழாக்களிலாவது, எளிமையான முறையை பின்பற்றலாமே." என தம் எண்ணத்தை குறிப்பிட்டார்.

ராஷ்டிரபதி பேசியதை தினசரிகளில் பார்த்தவுடன் அது குடில் சுவாமிஜிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. வினோபாஜி அவர்கள் குடிலுக்கு வந்தபோது அவருக்கு கதர்மாலை போட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. அது முதல் ராஷ்டிரபதியின் திட்டம் குடிலில் அமுல்படுத்தப்பட்டது. குடிலில் விருந்து என்றாலும் அது குழந்தைகளுக்குத் தானே தவிர வரும் பிரமுகர்களுக்கல்ல. குழந்தைகளின் விருந்தில் அவர்களும் கலந்து கொள்ளலாம்.

8. விருது வழங்கும் விழா

அமரரான திருச்சி கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள் குடிலின் நெடுநாளைய அன்பர். 'சிவாஜி பிரஸ்' என்ற அச்சகத்தின் உரிமையாளர். இவர் ஒரு நாள் போனில் சுவாமிஜியிடம் தொடர்பு கொண்டு பேசினார். அவர் பேசிய பேச்சின் சாராம்சம் குடிலுக்கு மேலும் ஒரு மேன்மை தரும் விஷயமாக இருந்தது. ஆனால் சுவாமிஜி அவர்கள் நேர்மாறான கருத்துக் கொண்டிருந்தார். அது என்னவென்று பார்ப்போமா?

கவிஞர் அவர்கள் தொலைபேசியில் "சுவாமி திருச்சியில் பல்லாண்டுகளாக இயங்கி வரும் ஜே.சி. சங்கத்தார், தன்னலமற்ற சேவைக்காக வழங்கப்படும் விருதை இவ்வாண்டு குடிலுக்கு வழங்கலாமென தீர்மானித்துள்ளார்கள்." என்ற தகவலை தெரிவித்தார்கள்.

அன்று மாலையே கவிஞர் அவர்கள் நேரில் குடிலுக்கு வந்தார். ஜே.சி. சங்கத்தின் சேவையைப் பற்றி சுவாமிஜியிடம் விவரித்தார்.

"சுவாமி.. ஒவ்வொருவருடமும் அந்தந்த பகுதிகளில் சிறப்பான வகையில்

மனிதகுல மேம்பாட்டிற்காக சேவை செய்துவரும் தனிநபர்களையோ அல்லது ஸ்தாபனங்களையோ தேர்ந்தெடுத்து விழா நடத்தி விருது வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் இயக்கம்தான் ஜே.சி. சங்கம். இவ்வாண்டில் அவர்கள் அனாதை மக்கள் தொண்டில் தலை சிறந்து விளங்கும் குடிலை தேர்ந்தெடுத்துள்ளார்கள். விரைவில் விழா நடத்தி விருதை வழங்க உள்ளார்கள் எனக் கூறி முடித்தார் கவிஞர்.

அவரது பேச்சிற்கு சுவாமிஜி அவர்கள் தந்த பதில்தான் சுவாரஸ்யமானதும், சிந்திக்க வேண்டியதும், நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் வலியுறுத்தியது.

" கவிஞரே, நீங்கள் கூறியதெல்லாம் சரிதான். சிறந்த சேவைக்காக இவ்வாண்டு குடிலை ஜே.சி. சங்கத்தார் தேர்ந்தெடுத்தது குறித்தும் மகிழ்ச்சி. அது அவர்களின் சிறப்பான செயல்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. குடிலுக்கு விருது கிடைக்கப் போகிறது என்ற உற்சாகத்தின் விளிம்பில் இருந்த காரணத்தால் நீங்கள் குடிலின் லட்சியத்தை மறந்து விட்டீர்கள். இம்மாதிரியான விருதுகள் எதனையும் பெறுவது என்பது குடிலின் லட்சியமும் அல்ல. சம்பிரதாயமும் அல்லவே. எனவே அவர்களிடம் பக்குவமாக அவர்களது மனம் கோணாதவாறு குடிலின் மறுப்பை தெரிவித்து விடுங்கள்;" என்றார்.

மேலும் கவிஞருடன் பேசுகையில் இது குறித்து சில விஷயங்களையும் சுவாமிஜி தெளிவுபடுத்தினார்.

" இக்காலத்தில் தர்மகாரியங்கள் நடத்தப்பட்டாலும், தன்னலமற்ற சேவை செய்யப்பட்டாலும் அதற்கென ஒரு விழா எடுத்து பிரபலஸ்தர் ஒருவரை தலைமை தாங்க வைத்து சேவையைப் பற்றி விரிவாகக் கூறியும், போற்றியும், சேவை பறைசாற்றப்படுகிறது. விளம்பரமின்றி இக்காலத்தில் எதுவும் மக்கள் மத்தியில் எடுபடுவதில்லை என ஆகிவிட்டது".

" ஓடும் நதிக்கும் பொங்கும் புனலுக்கும், நிமிர்ந்து நிற்கும் மலைக்கும், பெய்யும் மழைக்கும், ஒளிரும் ஆதவனுக்கும், தண்ணொளி வீசும் நிலவுக்கும் வானிற்கும், பூமிக்கும், அவைகள் மனிதகுலத்திற்கு ஆற்றி வரும் கோடானுகோடி நன்மைகளுக்கு பாராட்டும் சன்னத்தும் எப்படித் தேவையில்லையோ அது போல அவரவர்கள் ஏற்றுக்கொண்ட கடமைகளை அமைதியாக செய்துவர எத்தகைய பாராட்டும் விழாவும் தேவையில்லாத ஒன்று. எங்கு நல்லது நடந்தாலும் மக்கள் தாங்களாகவே தெரிந்து கொள்ளுவார்கள். அவர்களது மனதின் மாட்சியே மதிப்பற்ற விளம்பரமாகும்"

" ஏற்றுக் கொண்ட சேவையை பகவானின் பாதத்தில் முழுமையாக சமர்ப்பித்து படாடோபமின்றி அமைதியாக செய்துவர எத்தகைய பாராட்டும் விழாவும் குறுக்கிடவே கூடாது. மேலும் இவைகள் தேவையில்லாத ஒன்று என உணர்தல் வேண்டும். கொண்ட கடமையில் உறுதியாக நின்று எவ்வித

பிரதிபலனையும் எதிர்பாராமல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

கவிஞரை அன்போடு உபசரித்து தீர்த்தமும் பிரசாதமும் கொடுத்து அனுப்பி வைத்தார் சுவாமிஜி அவர்கள்.

9. ஒரு லட்சம் தர முன்வந்த பிரம்மசாரி

பெரிய படிப்பை முடித்து கைநிறைய பெரும் ஊதியத்தை பெற்று சுகபோகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்திலுள்ள இளைஞர்கள்தான் இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றனர்.

பிரம்மசாரிகளாக இருந்து இல்லறவாழ்வைத் துறந்து ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்து அத்தகையோரின் துயர் துடைப்பதே தாம் பிறந்ததின் லட்சியமாகக் கொண்ட இளைஞர்களும் சில பேர் உள்ளனர்.

குடிலில் பிரம்மசாரிகளாக சேர்ந்து அனாதைச் சிறுவர்க்கு சேவை செய்து தன் வாழ்நாளை பயனுள்ள வகையில் கழிக்க விருப்பம் தெரிவித்து, இளைஞர்களிடமிருந்து பல கடிதங்கள் குடிலுக்கு வரும். அத்தகைய உயரிய எண்ணம் கொண்ட இளைஞர்களின் கடிதங்களுக்கு சுவாமிஜி அவர்கள் எவ்விதம் பதில் கடிதம் அனுப்புகிறார் என்பதைப் பார்ப்போம்.

ஒரு சமயம் ஈரோடு மாவட்டத்திலுள்ள ஒரு ஊரிலிருந்து பணக்கார பண்ணையார் குடும்பத்தைச் சேர்ந்த படித்த ஒரு இளைஞரிடமிருந்து சுவாமிஜிக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதம் கனமாக இருந்தது. பல பக்கங்கள் எழுதியுள்ளார். அவரது கடிதத்தின் சுருக்கமான சாராம்சம் தரப்பட்டுள்ளது.

" அன்பார்ந்த சுவாமி அவர்களே! அடியவனின் நமஸ்காரத்தை சமர்ப்பிக்கின்றேன்.

குடில் ஸ்தாபனத்தை பற்றியும் அங்கு நடைபெறும் மகத்தான சேவை பற்றியும், ஸ்தாபனத்தின் நிறுவனரான தங்களைப் பற்றியும் பலர் மூலமாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

எனது உள்ளத்திலே எழும் எழுச்சியினை தங்கள் முன் வைக்க பெருமிதம் அடைகின்றேன். நான் ஒரு மிராசுதாரின் மகன். ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவன். பி.யூ.சி வரை (அன்றைய பி.யூ.சி படிப்பு இன்றைய +2 ஆகும்) படித்துள்ளேன். மேற்கொண்டு படிப்பைத் தொடருமாறு என் தகப்பனார் பலவாறாக நிர்ப்பந்திக்கிறார். எனக்கோ படிப்பில் நாட்டமில்லை. உலக வாழ்வில் நாட்டமில்லை. பிறந்ததின் பயன் பெரும் காரியங்கள் எதையாவது சாதித்து மனித சமுதாயத்திற்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே எனது பெரு விருப்பமாக உள்ளது. பெற்றோர் எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஆனால் நான் திடமாக உள்ளேன். தனி ஒருவனாக மக்கள் சேவை செய்வதைக் காட்டிலும் தங்களைப் போன்ற துறவிகள் ஏற்படுத்திய ஆஸ்ரமத்தில் சேர்ந்து பிரம்மசாரியாக இருந்து சேவை செய்ய விருப்பப்படுகின்றேன். அப்போது தான்

ஆன்மீகத்தில் நாட்டமும், இறை உணர்வும் தங்களைப் போன்றோரின் வழிகாட்டுதல் மூலமாகவே நான் பெற இயலும்.

என் குடும்ப சொத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் எனக்கு கிடைக்கும். அத்தொகையினை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். என் லட்சியம் நிறைவேற தாங்கள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்களின் அனுமதி கிடைத்ததும் குடிலுக்கு புறப்பட்டு வருகின்றேன்.

கிடைப்பது சாதாரண சிறிய தொகை அல்ல. ஒரு லட்சம் ரூபாய். மேலும் ஆஸ்ரம சேவையில் உதவியாக பணிபுரிய பிரம்மசாரி ஒருவரும் வருகின்றார். கிடைத்தற்கரிய சந்தர்ப்பம் இது என்றுதான், அந்த இளைஞனின் கடிதத்தை படித்ததும் மனதிலே எழும் எண்ணமாக இருக்கும்.

ஆனால் சுவாமிஜியோ இதை வேறுவிதமாகக் கையாள்கிறார். அந்த இளைஞனுக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தின் சாரம் மகத்தானது. மடங்களை நிர்வகிக்கும் சந்நியாசிகள் மனதிலே இருத்தி, செயல்படுவதற்கான அரிய ஆலோசனை இதுவாகும். இனி சுவாமிஜியின் கடிதத்தை பார்ப்போம்.

“ அன்பார்ந்த தம்பி! உமது கடிதம் கிடைத்தது. இன்றைய உலகில் மற்ற இளைஞர்களைப் போலல்லாமல் மாறுபட்டு துறவை ஏற்கும் மனநிலையில் மனம் செல்வதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி. இறைவன் துணை என்றுமுண்டு. பிரம்மசாரியாக குடிலில் சேர வேண்டுமென்ற உமது விருப்பத்தை தெரிவித்திருக்கிறீர். ஆனால் குடிலின் கொள்கை உமக்கு ஏற்றதாக இல்லையே”

“ குடிலில் சேர்ந்து படித்து பயிற்சிகளைப் பெறும் சிறுவர்கள் மட்டுமே, எதிர்காலத்தில் பிரம்மசாரியாக குடில் நிர்வாகத்தில் பங்கு பெறத்தக்க தகுதியுடையவர்கள். எக்காரணத்தைக் கொண்டும் வெளியார்கள் குடிலில் ஆஸ்ரம வாழ்க்கையை மேற்கொள்ளும் ஆஸ்ரமவாசி ஆகலாம் என்ற பேச்சிற்கே இடமில்லை. குடிலின் பிரம்மசாரிகளாக ஆவதற்குரிய விதிமுறைகள் இதுவேயாகும்.

சிறுவயதில் குடிலிலே சேர்ந்த ஒரு சிறுவன் குடிலின் லட்சியம், அதன் கொள்கைகள், அதன் நிர்வாக முறை ஆகிய அனைத்தையும் ஒவ்வொரு நாளும் கூர்ந்து கவனித்து வருகின்றான். வயது ஆக ஆக அதில் அவன் ஒன்றி விடுகிறான். பின்னால் அவன் ஆஸ்ரம பிரம்மசாரியாக தொண்டாற்ற வரும்போது அவனுக்கென தனிப்பட்ட பயிற்சி எதுவும் தரத் தேவையில்லை. அவனது பத்தாண்டு கால ஆஸ்ரம வாசத்தில் அனைத்தையும் தெரிந்து கொண்டு விடுகின்றான். அப்பழுக்கற்ற, சேவை ஒன்றையே மனதிலே கொண்ட தூய பிரம்மசாரியாகி விடுகின்றான்.

ஆனால் அனைத்து ஆஸ்ரமங்களிலும் குடிலைப் போன்ற விதிமுறைகள் இல்லை. வெளியார்களும் அத்தகைய ஸ்தாபனத்தில் பிரம்மசாரிகளாக

தங்களை இணைத்துக் கொண்டு சேவை செய்து வரலாம். அத்தகைய ஸ்தாபனங்கள் சிலவற்றின் முகவரிகள் தரப்பட்டுள்ளன. முயன்று பாருங்கள்."

" ஆனால் ஒன்று பணத்தைப் பற்றி எழுதியிருக்கிறீர். அதைப் பற்றிய அபிப்ராயங்கள் சிலவற்றை கூறவேண்டியுள்ளது. தான், தனது, செல்வம் போன்ற எண்ணங்கள் பிரம்மசாரிக்கு வரவே கூடாது. தூய தன்னலமற்ற சேவைக்கு இந்த எண்ணங்கள் எழவே கூடாது. துறவுக்கும் பொருளுக்கும் சம்மந்தம் வைக்கக்கூடாது. உண்மையாகவே இனி துறவு வாழ்க்கை தான் என நீங்கள் நினைத்து விட்டால், முதலில் நீங்கள் செய்ய வேண்டியது, உங்கள் கைவசம் உள்ள பணத்தை நல்ல அறப்பணிகளுக்கு பங்கிட்டு கொடுத்து விடுங்கள். எந்த ஆஸ்ரமத்திற்கு போய் துறவியாக ஆகின்றீர்களோ அங்கு பணத்தை கொடுத்தல் கூடாது. கொடுத்தால் நம் பணம் இங்கிருக்கிறது என மனம் எண்ணத் தொடங்கும். அந்த ஆஸ்ரமத் தலைவருக்கும் இவர் பணம் கொடுத்தவர், ம்றறவர்கள் கொடுக்காதவர்கள் என்ற பேத உணர்வு நாளடைவில் அவரது மனதில் எழக்கூடும். எனவே இது இருபாலருக்கும் நல்லதல்ல. அப்புறம் உங்கள் அபிப்ராயம் எதுவோ அதன்படி செய்யுங்கள்."

இதிலிருந்து சுவாமிஜி அவர்கள், பணம் கொடுத்து பொருட்கள் வாங்குவது போல அல்ல பிரம்மசரிய வாழ்க்கை. அக வாழ்க்கைக்கு தேவை பணம் அல்ல. தீவிர பிரம்மசரியமும், இறைஉணர்வும், தன்னலமற்ற சேவையே தேவை. பணம் வருகிறது என்பதற்காக துறவு நிலையில் உள்ளவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு, ஒரு ஆதர்ச புருஷராக சுவாமிஜி இருந்து வந்திருக்கிறார். கொண்ட கொள்கையில் எள்ளளவும் மாறாமல் இருப்பவர்கள் தான் மாபெரும் காரியங்களை சாதித்துக் காட்டியுள்ளார்கள் என பல வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டாய் உள்ளன.

10. பெருந்தலைவர் காமராஜருடன் ஒரு சோதனை

ஒரு நாள் அதிகாலையில் ஒரு பெரியவர் திருச்சியிலிருந்து ஒரு சிறுவனை அழைத்துக் கொண்டு குடிலுக்கு வந்தார். கடிதம் ஒன்றை சுவாமிஜியிடம் கொடுத்தார்.

அக்கடிதத்தை எழுதியவர் தியாகியும், காங்கிரஸ் தலைவருமாகிய திருச்சி T.S. அருணாசலம் அவர்கள். அக்கடிதத்தில், அப்பெரியவர் அழைத்து வந்த சிறுவனைப் பற்றி அவர் விரிவாக எழுதியிருந்தார்.

" நேற்று மாலை திருச்சி மதுரம் மைதானத்தில் முதன் மந்திரி திரு. காமராஜர் மாபெரும் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்திலிருந்து ஒரு சிறுவன் ஒடி வந்து காமராஜர் காலில் வீழ்ந்து வணங்கினான். "ஐயா, நான் ஏழைப் பையன். படிக்க வைக்க யாருமில்லை"

என்று சொல்லி அழுதான். காமராஜருக்கு வலதுபுறம் நானும், இடது புறம் திருச்சி சேர்மன் லூர்துசாமி பிள்ளையும் அமர்ந்திருந்தோம். காமராஜர் எங்கள் இருவரையும் பார்த்து " இந்தப் பையனை நான் அனுப்பியதாகக் கூறி குடிலில் சேர்த்து விடுங்கள்" என்றார். இரவு பையனை காங்கிரஸ் ஆபீஸில் படுக்க வைத்து காலையில் ஆஸ்ரமத்திற்கு அனுப்பியிருக்கிறோம்" என தியாகி அருணாசலம் எழுதியிருந்தார்.

திரு. காமராஜர் அவர்கள் முதன்மந்திரியாக இருந்த போதுதான் குடில் சேவை தொடங்கப் பெற்றது. அவர்தான் குருகுலக் கட்டடத்தை திறந்து வைத்தார். ஆரம்ப பள்ளியை ஆரம்பித்து வைத்தவரும் அவரேதான். குடில் வரலாற்றில் பிரசித்தி பெற்ற பஞ்சாயத்து நன்கொடை வசூலுக்கு ஆதாரமாக அமைந்த அரசாணையை பிறப்பித்தவரும் அவரே. அது மட்டுமல்லாமல் அன்றைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் மூலம் தேவஸ்தானங்கள், முனிசிபாலிடிகள் வருடாந்திர நன்கொடைகளை குடிலுக்கு வழங்க ஆணை பிறப்பித்தவரும் அவரே. திரு. காமராஜர் அவர்கள் குடிலுடன் இவ்வளவு ஈடுபாடு கொண்டவராக இருந்து வந்தார். அத்தோடு தமிழ்நாட்டின் முதன் மந்திரியும் ஆவார். இத்தகையவர் தான் குடிலில் சேர்த்துக் கொள்ளுமாறு ஒரு சிறுவனை அனுப்பியிருக்கிறார்.

சிறுவனை அழைத்து வந்த பெரியவரை விசாரித்ததில் அவர்தான் அச்சிறுவனின் தகப்பனார் எனத் தெரிய வருகிறது. குடிலில் தாய் தந்தை இருவரையுமிழந்த அனாதை சிறுவர்களை மட்டுமே சேர்ப்பது என்பது தான் விதி. குடிலில் சிறுவர்களை சேர்க்கும் விதிக்கு மாறாக உள்ள இச்சிறுவனை குடிலில் எவ்வாறு சேர்ப்பது? மனதில் திடீரென தளர்ச்சி ஏற்பட்டது. பையனோ பொருத்தமில்லை. அனுப்பி இருப்பவரோ தமிழ்நாட்டின் முதல் மந்திரி. குடிலின் வளர்ச்சியில் மிகமிக அக்கரை கொண்டவர். இப்போது ஒரு தர்ம சங்கடம். லட்சியத்தை கைவிடுவதா? முதலமைச்சரின் கோரிக்கையை மறுப்பதா? சிறிது நேரம் மனப் போராட்டம். குருமகராஜை தியானித்ததில் மனதில் ஒரு தெளிவு உண்டாயிற்று.

சிறுவனையும் பெரியவரையும் திருச்சி காங்கிரஸ் ஆபீசில் தங்கியிருக்கச் சொல்லிவிட்டு, பக்குவமாக இரு கடிதங்களை எழுதி ஒன்றை திருச்சி காங்கிரஸ் ஆபீசுக்கும், இன்னொன்றை முதலமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இரு கடிதங்களிலும் கண்டுள்ள வாசகங்கள்:

" அனுப்பி வைத்த சிறுவனுக்கு தந்தை இருக்கிறார். தாயும் தந்தையும் இல்லாத சிறுவர்களைத் தான் குடில் ஏற்றுக் கொள்ளுகிறது. தங்களுடைய அன்பும் ஆதரவும் ஆஸ்ரமத்தினுடைய லட்சியத்தை போற்றிப் பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும்.குடிலில் மாணவர்களை சேர்க்கும் விதிகள் அடங்கிய அச்சுத் தாள் ஒன்றினை அனுப்பியிருக்கிறோம். அதன்படி எவ்வளவு குழந்தைகள் நாட்டிலிருந்தாலும் அனுப்பி வையுங்கள். ஏற்றுக்

கொள்ளுகிறோம். தங்கள் அன்பும் ஆதரவும்"

எத்தகைய மனத்திட்பமும், கொண்ட கொள்கையில் பிடிப்பு, கொள்கைக்கு மாறானவைகளை எதுவரினும் ஏற்பதில்லை என்ற மன உறுதியும் இருந்தால்தான் சுவாமிஜியால் இத்தகைய கடிதம் எழுத முடிந்தது.

இதைக் காணுமிடத்து மஹாகவி பாரதியின் " அச்சமில்லை, அச்சமில்லை, உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை" என்ற அவரது வீர முழக்கம் நினைவிற்கு வருகின்றது.

11. திருச்சி கலெக்டருடன் ஒரு சோதனை

திருச்சியில் திரு. பாஷா I.A.S., அவர்கள் கலெக்டராக இருந்த சமயம் அவர் குடில் பெயரால் நிதி நிகழ்ச்சி ஏற்பாடு செய்து ஒரு லட்சத்திற்கு மேல் வசூல் செய்வார். குடிலுக்கு மட்டுமல்லாமல் இது பொதுவான வசூல். வசூலான தொகையில் குடிலுக்கு ரூ 25,000/= ராஜாஜி சானிடோரியத்திற்கு ரூ 25,000/= மாமூலாக வருடா வருடம் கொடுத்து விடுவார். திருச்சி மாவட்டத்திலுள்ள பல ஸ்தாபனங்களுக்கும் சிறு சிறு அளவில் பங்கிட்டு விடுவார்.

ஒரு நாள் சுவாமிஜி அவர்களும் மலையப்ப ஐயா அவர்களும், கலெக்டர் பங்களாவிற்கு சென்று திரு. பாஷாவை சந்தித்தனர். பேச்சு வாக்கில் மலையப்ப ஐயா அவர்கள், " ஏன் நீங்கள் குடில் பெயரைப் போட்டு மொத்தமாக வசூல் செய்து, எல்லோருக்கும் பங்கிட்டு கொடுக்கிறீர்கள்?" என அன்பு முறையில் புன்சிரிப்பு முகத்தில் தவழக் கேட்டார். கலெக்டர் பாஷாவும் மலையப்பா ஐயாவின் பேச்சைக் கேட்டு சிரித்து விட்டார். " என்ன ஐயா செய்வது? குடில் பெயரை போட்டு நிதி நிகழ்ச்சி நடத்தினால் தான் வசூலாகிறது. மக்களுக்கும் தெரிகிறது. சுலபமாக டிக்கட்டும் விற்க முடிகிறது." என்றார். அவர் திருச்சியில் கலெக்டராக இருந்த கால கட்டத்தில் குடிலுக்கு ரூ 65,000/= வழங்கியுள்ளார்.குடில் சேவையிலும், குடில் சுவாமிஜியிடத்திலும் மிக்க மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

அவர் ஒரு நாள் டிப்டி தாசில்தார் மூலம் 3 சிறுவர்களை குடிலுக்கு அனுப்பி வைத்தார். அந்த மூன்று சிறுவர்களில் ஒரு சிறுவன் தான் தாய் தந்தையரை இழந்தவன். குடில் விதிக்கு பொறுத்த மானவன். மற்ற இரு சிறுவர்களில் ஒருவனுக்குத் தாயும் மற்றொருவனுக்கு தந்தையும் இருந்தனர். இந்த விவரங்களையெல்லாம் டிப்டி தாசில்தாரிடம் விவரமாக விளக்கி கூறப்பட்டது.

அந்த வருடத்திய நிதி நிகழ்ச்சி முடிந்து அனைத்து வசூல் தொகையும், ஹரசூர் ட்ரெஷரியில் கட்டப்பட்டு விட்டது. ஒரு வாரத்திற்குள் வந்து குடில் பங்கான ரூ 25,000/= த்தை பெற்றுச் செல்லுமாறு கலெக்டரிடமிருந்து குடிலுக்கு தபால் வந்த நேரமது.

குடில் விதிக்கு உட்பட்டிருந்த ஒரு சிறுவனை மட்டும் ஏற்றுக் கொண்டு, மற்ற இரு சிறுவர்களையும் குடிலின் சேர்க்கை விதிகள் அடங்கிய அச்சுப்பாரத்தினையும் டிப்டி தாசில்தாரிடம் கொடுத்து, கலெக்டரிடம் விவரம் கூறுமாறு அன்பான முறையில் அனுப்பி வைக்கப்பட்டார்.

நான்கைந்து நாட்களுக்குப்பின் கலெக்டர் பாஷாவை அவரது பங்களாவில் சுவாமிஜியும் மலையப்ப ஐயாவும் சந்தித்தனர். சுவாமிஜி அவர்களே கலெக்டரிடம் அவர் அனுப்பிய குழந்தைகளில் ஒருவனை ஏற்றுக் கொண்டு மற்ற இரு சிறுவர்களை திருப்பி அனுப்பிய காரணத்தை சொல்ல ஆரம்பித்தார்.

அதைக் கேட்ட உடனே கலெக்டர், "சுவாமி அதைப்பற்றி ஒன்றுமில்லை. உங்களது லட்சியப்படி நடந்து கொண்டுள்ளீர்கள். வருத்தம் எதுவுமில்லை. என்றும் குடிலில் கோளாறு எதுவும் நிகழாது என்பதை நன்கு அறிவேன். உங்களது உயர்வான சர்வீசுக்கு ஆதரவு கொடுப்பது எங்கள் வேலை." என்று மனமும் முகமும் சிறிது கூட கோணாமல் புன்முறுவலுடன் கூறி முடித்தார். அந்த ஆண்டிற்கான குடில் பங்கு ரூ 25,000/= த்தை வாங்கி வந்தோம்.

குடிலின் சேவைக்கும் அதன் கொள்கைக்கும், லட்சியத்திற்கும் உயர்ந்த இடத்தை கொடுத்துப் பாராட்டிப் பேசிய கலெக்டர் திரு. பாஷா அவர்கள் ஒரு உயர்ந்த மனிதராக குடிலின் சரித்திரத்தில் இருந்து வருகின்றார்.

12. குடிலுக்கு வேண்டாம் அதிக மானியம்

1956 – 57 ம் ஆண்டில் குடிலில் 60, 70 அனாதைக் குழந்தைகள் படித்து வந்தனர். அப்போது அனாதை விடுதிகளில் தங்கிப் படிக்கும் குழந்தை ஒருவனுக்கு மாதம் ரூ 8 வீதம் அரசு மான்யம் கிடைத்து வந்தது. அது சமயம் அரசிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது.

" அனாதை விடுதிகளில் தங்கிப் படிக்கும் குழந்தைகளில், தாழ்த்தப்பட்ட குழந்தைகளை தனியாக பிரித்துக் காட்டி பட்டியல் பராமரித்து வந்தால் அந்த குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 12 வீதம் மானியம் அளிக்கப்படும்" என அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அதாவது அனாதை விடுதியிலேயே மேல்ஜாதி, கீழ்ஜாதி என இரண்டாகப் பிரித்து கணக்கு கொடுத்தால் நான்கு ரூபாய் அதிக மான்யம் பெறலாம். மேலும் அந்த அரசு சர்க்குலர் வந்த சமயத்தில் திருச்சி மாவட்ட நல அதிகாரியும் குடிலுக்கு வந்து மேல்கண்ட விதமாக பட்டியல் தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கமாக கூறி, " சுவாமி நான் சொன்ன வகைப்படி குடில் குழந்தைகளை பிரித்து பட்டியல் அனுப்புங்கள். அதிகப்படியான மானியத்தை குடிலுக்கு வழங்க பரிந்துரை செய்கின்றேன்" என்று கூறி முடித்தார்.

அவர் கூறிய அனைத்தையும் நிதானமாக கேட்டார் சுவாமிஜி. வந்த அதிகாரிக்கு ஆஸ்ரம முறைப்படி பிரசாதமும் தீர்த்தமும் கொடுத்த பின் பதில்

கூறலுற்றார். "ஐயா, குடில் பகவான் பரமஹம்ஸரின் பெயரால் இயங்கி வரும் ஒரு தெய்வீக ஸ்தாபனம். இங்குள்ள குழந்தைகள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்த பின் குருகுலத்தில் சேர்க்கப்படுகின்றனர். தெய்வீக நோக்கில் வாழ்ந்து வரும் புனிதமான குழந்தைகள் இவர்கள். சர்க்காரின் விதிமுறைகளுக்காகவும், இவன் அனாதை என்ற அத்தாட்சிக்காகவும், அரசு கணக்கு தணிக்கையாளரிடம் காண்பிக்க வேண்டி இருக்கின்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே இக்குழந்தைகளின் ஜாதிகள் பதிவேடுகளில் பதியப்படுகின்றன. இங்கு ரிக்கார்டு அளவில் மட்டுமே ஜாதிக்குறிப்புகள் இருக்கும். இங்கு சேரும் குழந்தைகள் பகவானின் குழந்தைகள் என்ற மனோபாவத்தின்படி வளர்க்கப்படுகின்றனர். ஜாதியை பற்றிய எண்ணமோ நினைவோ மனதில் எழுவதில்லை. ஆகவே அதிக மான்யம் அரசால் வழங்கப்படுகிறது என்பதற்காக இத்தெய்வீக பரிசுத்தமான கள்ளங்கபடமற்ற பகவானின் குழந்தைகளை பாகுபடுத்திக் காட்ட மனம் ஒருக்காலும் இசையாது. அரசு அதிகாரி நீங்கள். உங்களுக்கு வந்த உத்தரவின்படி ஆஸ்ரமத்திற்கு வந்திருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி." என பக்குவமாகக் கூறி வந்த அதிகாரியை வழியனுப்பி வைத்தார் சுவாமிஜி அவர்கள்.

வந்த அதிகாரி நிச்சயம் அதிர்ந்து போயிருப்பார். "அரசு அளிக்கும் அதிக மான்யத்தை வேண்டாம் என்கிறாரே இந்த சுவாமிஜி. இப்படியும் ஒரு மனிதரா?" என நிச்சயம் மனதிற்குள் வியந்து போயிருப்பார். மனிதனுக்கு மனிதன் சமம் வேறுபாடு இல்லை. ஏற்றத் தாழ்வுகள் இல்லை. மேலோன் தாழ்ந்தோன் என்ற உணர்ச்சி இல்லை என்ற சுவாமிஜியின் வாழ்வில் இம்மாதிரியான எடுத்துக் காட்டுகள் அனேகமுண்டு.

இவ்வேளையில் மகாகவி பாரதியின் பாடல்வரி ஒன்று நினைவிற்கு வருகிறது. "காக்கை குருவி எங்கள் ஜாதி" என மானிட வர்க்கமும் பறவை வர்க்கமும் ஈசன் படைப்பில் சமம் என எடுத்துக் கூறியதை எத்தனை பேர் உளமார நினைத்துச் செயல்படுவார்கள்? இந்த மானிட சமுதாயத்தில் வேரோடிப் போன உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி போன்ற ஏற்றத்தாழ்வுகள் சுவாமிஜி போன்றவர்களின் பெருமுயற்சியால் முழுதும் நீங்கும் காலம் ஒன்று நிச்சயம் வரும். காத்திருப்போம்.

தன்சொல்லை ஏற்று அதற்காகவே வாழ்வை அர்ப்பணித்து, மனிதருள் வேறுபாடு காணாத மனித உருவில் வந்த தேவனாக குடில் சுவாமிஜி இருக்கிறார் என மகிழ்வோடு நெஞ்சு நிமிர்த்தி "காக்கை குருவி எங்கள் ஜாதி" என அண்டம் முழுதும் கேட்குமாறு கர்ஜனைக் குரலில் பாடிக் கொண்டு வானுலகில் பாரதி உலவிக் கொண்டிருப்பான்.

13. தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு அமெரிக்க அப்பாக்கள்

தலைப்பே விசித்திரமாகத் தோன்றுகிறது அல்லவா? இதன் முழு வரலாறும் தெரியாத நிலையில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை சுவாமிஜி அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

திரு. மகராஜன் அவர்கள் புதுக்கோட்டையில் சப்ஜட்ஜ் பதவி வகித்து வந்தார். குடிலின் ஆரம்ப கால நண்பர். குடிலின் பொருளாதார நிலை உயர மிகவும் பாடுபட்டவர். சிறந்த தமிழ் வித்தகர். பேச்சாற்றல் மிகுந்தவர். ஆன்மீகப் பண்புகள் கொண்டவர். நேரம் கிடைத்த போதெல்லாம் குடிலுக்கு வருவார். சுவாமிஜியிடம் பேசிவிட்டுச் செல்வார். குடிலின் வளர்ச்சியில் இவரது பங்கு முதன்மையானது.

இவர் ஒரு சமயம் சுவாமிஜியிடத்தில், "சென்னையில் உள்ள கிளப்வாலா ஜாதவ் என்ற அம்மையாரை போய்ப் பார்த்தால் மேல் நாட்டு மானியம் குடில் குழந்தைகளுக்கும் கிடைக்கலாம். முழுவிபரம் தெரிந்து கொள்ள ஒருமுறை சென்னை சென்று வரலாமே" எனக்கூறி சென்னையில் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த திரு. ஐயாசாமி செட்டியார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி சுவாமிஜி வசம் கொடுத்து சென்னை சென்று வருமாறு கூறினார்.

சுவாமிஜி அவர்களும் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். சென்னைபிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டாக பணிபுரிந்து வந்த திரு. ஐயாசாமியை சந்தித்தார். சப் –ஜட்ஜ் மகராஜன் கொடுத்த கடிதத்தையும் அவரிடம் தந்தார். குடிலைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டார் செட்டியார் அவர்கள்.

ஜாதவ் அம்மையாரைப் போய்ப்பார்ப்பதற்கு முன்னால் அந்த மான்யம் பெறுவதற்கான சட்டதிட்டங்கள் எவையென செட்டியார் அவர்கள் சுவாமிஜியிடம் விளக்கமாக கூறி முடித்தார். செட்டியார் அவர்கள் சுவாமிஜியிடம் கூறியதின் சாராம்சம்:

அதாவது குடிலில் உள்ள ஒவ்வொரு குழந்தையையும் அமெரிக்காவிலுள்ள பல தனவந்தர்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்வார்கள். மாதம் ஒருமுறை இக்குழந்தைகள் " அன்புள்ள அப்பாவே! உங்களுடைய உதவியினால் உயிர் வாழ்ந்து, படித்துக் கொண்டிருக்கிறோம்" என்று அமெரிக்க அப்பாக்களுக்கு கடிதம் எழுத வேண்டும். குழந்தைகள் எழுதிய கடிதத்தையும், அதன் ஆங்கில நகலையும் ஒன்று சேர்த்து அனுப்பினால் மாதம் ஒரு குழந்தைக்கு ரூ 40/= வீதம் அந்த அப்பாக்கள் அனுப்பி வைப்பார்கள்.

செட்டியார் அவர்களிடமிருந்து விபரம் அறிந்த சுவாமிஜி ஜாதவ் அம்மையாரை சந்திக்கும் எண்ணத்தை கைவிட்டு ஆஸ்ரமம் திரும்பி விட்டார். குடிலில் புகலிடம் பெறும் ஒரு குழந்தைக்கு முதலில் முடியெடுத்து, எண்ணெய்

தேய்த்து, புது அரைஞாண் கயிறு அணிவித்து, காவிரியில் குளித்து, புத்தாடை அணிவித்து, நெற்றியில் நீறுபூசி, சந்தனத்திலகமிட்டு கோவிலில் பகவான் பரமஹம்ஸர் முன் நிறுத்தி பாத நமஸ்காரம் செய்வித்து " ஓம் ஸ்ரீராம கிருஷ்ணாய" என ஓதுவித்து, பகவானே உமது குழந்தையை நீரே காப்பாற்றுங்கள்" என்று அக்குழந்தையை பகவானின் பாதத்தில் அர்ப்பணம் செய்வதுதான் குடிலின் ஐதீகம்.

ஜாதவ் அம்மையாரின் மானியம் குறித்த நிபந்தனைகளை முன் கூட்டியே அறிந்து கொள்ளாததின் காரணமாக ஏற்பட்ட விளைவு தான் இது என சுவாமிஜி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அவர் " அமெரிக்க அப்பாவால் இந்தியாவில் ஒரு குழந்தை உயிர் வாழ்கிறது என நினைக்கும் போதே வேதனையும், தலைகுனிவும் மனதை வருந்தச் செய்கிறது" என குறிப்பிட்டுள்ளார்.

14. பகவானின் பாதத்தில்

ஒவ்வொரு ஆண்டும் குடிலில் சேரும் புதிய சிறுவர்களை, பௌர்ணமியன்று இரவு பூஜை முடிந்ததும் சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரம ஆலயத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் முன்பாக நிறுத்தி வைத்து ஆசிர்வதிப்பார். அவர்களை பகவானின் குழந்தைகளாக குருதேவரின் பாதத்தில் அர்ப்பணம் செய்வார். பக்திபூர்வமாக நடக்கும் இந்த நிகழ்ச்சியை முழுதுமாகக் காண்போம்.

" பௌர்ணமி இரவில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆலயத்தின் முன் புதிதாக சேர்ந்த மாணவர்களை அவர்களது உயரத்தின்படி வரிசையாக சுவாமிஜி அவர்கள் நிற்க வைப்பார்கள். கோயிலுக்குள் இருக்கும் திருநீற்று கிண்ணத்தை கையிலெடுத்து, நெற்றி நிறைய ஒவ்வொரு மாணவனின் நெற்றியிலும் பூசுவார். அப்போது அவர் ராம் . . . ராம் எனக் கூறிக் கொண்டேயிருப்பார்.

நெற்றியில் நீறுபூசியபின் பகவானின் முன்பாக சிறுவர்கள் நமஸ்கரித்து எழுந்து நிற்பார்கள். சுவாமிஜியும் பகவான் முன் நமஸ்காரம் செய்வார். பின் கோயில் முன் சிறுவர்களை அமர வைப்பார்கள். சிறிது நேரம் கண்மூடி தியானிப்பார். " ஈஸ்வரா, உனது குழந்தைகளை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். இவர்களைக் காப்பது உன் பொறுப்பு" என பகவானின் முன்னிலையில் கூறுவார். குழந்தைகளை பார்த்து " நீங்கள் இன்று முதல் பகவானின் குழந்தைகள் ஆவீர்கள். இனிமேல் உங்களுக்கு எக்குறையுமில்லை"

" நீங்கள் ஆஸ்ரமத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?. வரும் அன்பர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்பதைக் கூறுகிறேன்.

கவனமாகக் கேளுங்கள். கேட்பதோடு மட்டுமல்லாமல் பின்பற்றவும் வேண்டும்.

ஆஸ்ரமத்திற்கு அன்பர்களும், பொதுமக்களும், பள்ளி மாணவர்களும், வருடம் முழுவதும் வந்து கொண்டேயிருப்பார்கள். அவர்கள் உங்களிடம் எந்த ஊர், எந்த ஜாதி போன்ற கேள்விகளைக் கேட்பார்கள். இதற்கெல்லாம் ஆஸ்ரமத்தில் சிறிது கூட இடம் தரக்கூடாது. இங்கு எந்தப்பாகுபாடும், ஜாதி வித்தியாசமும் அறவே இல்லை. எனவே அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு "நான் ஆண்டவனின் குழந்தை. குடில் ஆஸ்ரமத்தில் வாழ்ந்து வருகிறேன்" என்று மட்டும் கூறுங்கள். உங்களிடமிருந்து இப்பதிலைக் கேட்டவர்கள் ஆஸ்ரமத்தில் இம்மாதிரியான கேள்விகளை கேட்கக்கூடாது என அவர்களாகவே தெரிந்து கொண்டு போய்விடுவார்கள்."

"நீங்கள் பெரும் பாக்கியசாலிகள். ஆஸ்ரமத்தில் சேர்ந்த நாளிலிருந்தே உங்களுக்கு கவலை என்பதே கிடையாது. நீங்கள் ஊரில் இருக்கும் போது உணவு, உடை, மற்ற வசதிகள், கல்வி ஆகியவற்றிற்காக கஷ்டப்பட்டிருப்பீர்கள். இம்மாதிரியான பிரச்சனைகள் எதற்கும் ஆஸ்ரமத்தில் இடம் கிடையாது.எல்லாவிதமான வசதிகளுடன் ஒரு குறையுமில்லாமல் பகவான் செய்து வைத்துள்ளார்."

"பள்ளியில் படிக்கும்போதும், குருகுலத்தில் வாழும் போதும் சக மாணவர்களுடன், நன்கு பழகி வரவேண்டும். சண்டை சச்சரவுகள் இருக்கக் கூடாது. நீங்களும் கெட்டு இன்னும் நான்கு பேரையும் கெடுக்கும் வண்ணம் எப்போதும் நடந்து கொள்ளக்கூடாது. வாழ்க்கையில் ஒழுக்கம் தான் ஜீவநாடி. ஆஸ்ரம பூஜைகளில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு அம்மையும் அப்பனுமாக இருப்பவர்கள் அன்னை சாரதாமணி தேவியும், பகவான் பரமஹம்ஸரும் ஆவார்கள். நம்மை நல் வழியில் அழைத்துச் செல்லும் அவர்களை மனதிலே தியானித்து ஒவ்வொரு காரியத்தையும் நல்ல முறையில் செய்து முடித்தல் வேண்டும். அனுதினமும் பக்தியோடு பகவானை வழிபட்டு வந்தால் உங்களுக்கு எந்தவிதமான இடையூறும் நேராது. உங்களுக்கென தரப்பட்டிருக்கும் வேலைகளை நல்லமுறையில் திருப்தியாக செய்து முடித்தல் வேண்டும். அரைகுறை வேலை என்பதே இருக்கக்கூடாது."

"ராம்" என்ற சொல் சொல்வதற்கு மிகவும் எளிமையானது. சுலபமானதும் கூட. ஆகையால் நீங்கள் எப்படிப்பட்ட பணியில் ஈடுபட்டிருந்தாலும் இந்த ராம நாமத்தை மனதிற்குள்ளே கூறிக்கொண்டே இருங்கள். எல்லாம் எளிதில் முடிந்து விடும்."

"அன்பார்ந்த குழந்தைகளே! நீங்கள் ஆஸ்ரமத்தில் சேர்ந்த நாளிலே உங்களுக்காக ரூபாய் ஆயிரம் ஒவ்வொருவருக்கும் பாங்கில் டெபாசிட் செய்யப்படும். நீங்கள் உயர்நிலைக் கல்வியையும் ITI தொழிற்பயிற்சியையும் முறையாக கற்றுத் தேர்ச்சிபெற்று, பின் நீங்கள் ஊருக்கு செல்லும் போது அந்தத்தொகை அதன் வட்டியுடன் உங்களுக்கு தரப்படும். இந்த டிபாசிட்

திட்டம் ஏன் ஏற்படுத்தப்பட்டது தெரியுமா?"

" அதாவது நீங்கள் படிப்பெல்லாம் முடித்து ஆஸ்ரமத்தை விட்டு வெளியுலக வாழ்க்கைக்கு செல்லும்போது பிறர் உதவியை எதிர்பார்க்காமல் உங்களுக்கு ஒரு நிரந்தர வேலை கிடைக்கும் வரையில் இத்தொகை நீங்கள் வாழ உதவுமல்லவா? அதற்காகத்தான் இந்தத்திட்டம் உங்களுக்காக உங்களின் எதிர்கால நலனிற்காக ஆஸ்ரமத்தில் வைக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் கண்ணும் கருத்துமாக படிப்பில் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறாக சுவாமிஜி அவர்கள் புதிய மாணவர்களுக்கு அறிவுரை கூறியபின், ஒவ்வொரு மாணவர் வாயிலும் இரண்டு மிட்டாய்கள் போடுவார். மிட்டாய்களை போடும்போது அவரது வாய் ராமநாமம் உச்சரித்த வண்ணமிருக்கும். அனைவருக்கும் மிட்டாய் கொடுத்துவிட்டுக் கூறுவார், "பிள்ளைகளே உங்கள் நாக்கில் மிட்டாய் இனிப்பது போல, உங்கள் வாழ்க்கை இனிமையாக நடத்திச் செல்ல வேண்டும். அது உங்கள் கையில்தான் இருக்கிறது."

" இன்று பௌர்ணமி. சந்திரன் பூரணமாக இருக்கும் நாள். இந்த பூரணமான நாளிலே ராம நாமத்தை சொல்லி உணவு விடுதிக்கு செல்லுங்கள். வடை, பாயசம், அப்பளத்துடன் பௌர்ணமி விருந்தை சாப்பிடுங்கள். குரு மகராஜை மனதால் நினைத்து வணங்கிவிட்டு படுக்கைக்கு செல்லுங்கள். ஆசிகள்." எனக்கூறி மாணவர்களை விருந்துண்ண அனுப்பி வைப்பார்.

இவ்வாறாக ஒவ்வொரு ஆண்டும், குடிலில் சேரும் புதிய மாணவர்களுக்கு சுவாமிஜி அவர்கள் பௌர்ணமி இரவில் வழங்கும் அறவுரைகள் பல்லாண்டுகள் அருகில் இருந்து கவனித்து வந்த ஆஸ்ரம பிரம்மசாரி கருப்பையா அவர்கள் கொடுத்த குறிப்புகள் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது.

15. நல் வாழ்க்கை உறுதிமொழி.

குடிலில் அதிகாலை 5 மணி பிரார்த்தனையின் போது குருகுல மாணவர்கள் ஏற்றுக்கொள்ளும் நல்வாழ்க்கை உறுதிமொழி பின்வருமாறு.

1. இறைவனுடைய அருளால் உயிர் வாழ்கின்றோம் என்ற தெளிவான நினைவுடன் இவ்வாழ்க்கையை இறைவனுக்கே அர்ப்பணம் செய்கின்றோம்.

2. இருக்கும் இடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாய் வைத்துக் கொள்வோம். உடலையும் உடையையும் தூய்மையாய் வைத்துக் கொள்வோம். துப்புரவே எங்கள் உயிர் நாடி.

3. கூடிவாழும் சகோதரர்களுக்குள் ஒருவருக்கொருவர் மனதால் கோப தாபம் கொள்ள மாட்டோம். வாயால் தகாத வார்த்தைகளை பேச

மாட்டோம். செயலால் கேடு செய்யமாட்டோம். அவரவர்களுடைய பொருளை அவரவர்களே நன்கு பாதுகாப்போம். அயலாருடைய பொருளை தீண்ட மாட்டோம். பிறர்க்கு உதவி சேவை செய்யவே நாங்கள் பிறந்திருக்கிறோம் என்று கருதுகிறோம்.

4. உழைக்காமல் உண்ணுவது பாபம் எனக் கருதுகிறோம். அவரவர்களுக்கு ஏற்பட்ட கடமைகளை அவரவர்கள் அலட்சியமின்றி பொறுப்புணர்ச்சியுடன் திருப்திகரமாக செய்து முடிக்கின்றோம்.

5. மானிட வாழ்க்கையின் தத்துவங்களைப் புரிந்து கொள்ளுவதில் கவனம் செலுத்துகின்றோம். புரிந்து கொண்ட மேலாம் தத்துவங்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் திடஉறுதி கொள்ளுகின்றோம்.

6. பொய் பேசுதல், திருடுதல் ஆகிய ஈனச்செயல்களை மனதார வெறுக்கின்றோம். நேற்று செய்த பிழை இன்று நிகழாமலும், இன்றைய பிழை நாளை நிகழாமலும் பார்த்துக் கொள்ளுகின்றோம்.

7. இந்த சரீரம் மட்டும் நாங்கள் அல்ல. குற்றங்குறையற்ற அந்த பரிசுத்தமான ஆத்மாவே நாங்கள் என்பதை உணருகின்றோம். இவ்வித தெய்வீக வாழ்க்கை வாழ இறைவன் நமக்கு துணைபுரிவாராக.

1. அன்பாகப் பேசுக
2. உண்மையே பேசுக
3. நன்மையே பேசுக
4. இனிமையாகப் பேசுக
5. மெதுவாகப் பேசுக
6. சிந்தித்துப் பேசுக
7. சமயமறிந்து பேசுக
8. சபையறிந்து பேசுக
9. பேசாதிருந்தும் பழகுக

நல்ல திடமான விதைகளை கவனமுடன் தேர்ந்தெடுத்து நட்டு பயிர் செய்தால், நிச்சயம் அது நல்ல பலனைத் தரும்.

அது போல கள்ளம், கபடு, சூது, வாது அண்டாத இளம் பருவத்திலேயே, சிறுவர்களுக்கு நற்போதனைகளை அனுதினமும் கூறிவந்தால் அவைகள் சிறுகச் சிறுக அவர்களின் மனதிலே பதியும்.

அவன் வளர வளர அனுதினமும் அவன் கூறிவந்த நல்ல உறுதிமொழிகள் அவன் உள்ளத்திலே பசுமரத்தாணி போல பதிந்துவிடும். நிச்சயமாக உலக அரங்கில் அவன் நல்மகனாக எதிர்காலத்தில் உலாவருவான்.

ஆகவேதான் ஆஸ்ரமத்தில் பயிலும் மாணவர்கள் நாட்டின் நல்ல குடிமகன்களாக வரவேண்டும் என்ற நோக்கத்தில் பலநாள் சிந்தனைக்குப் பின் அற்புதமான கருத்துக்களைக் கொண்ட நல்வாழ்க்கை உறுதிமொழியை சுவாமிஜி அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

16. பொன்னான வாழ்விற்கு பொன்மொழிகள்

ஆலயத்தில் வீற்றிருக்கும் நாதன், நாயகி தரிசனமும், ஞானிகளின் நல்லாசிகளும், அவதார புருஷர்களின் அருள் வாக்கும், ஆன்மீக அடியார்களின் உபதேசங்களும், சமய ஆச்சார்யார்களின் திருவாயிலிருந்து வெளிப்படும் பொன்மொழிகளும் எவர்களுக்கெல்லாம் கிடைக்கப்பெறுகின்றனவோ அவர்கள் பாக்யசாலிகள் ஆவார்கள். அவர்களின் வாழ்வும் வளம் பெற்று விளங்கும்.

வள்ளுவன் வழங்கிய " வாய்மை" கருத்து ஒன்றை மட்டும் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்த காந்திஜி அவர்கள் உலகமகாத்மாவாக போற்றப்பட்டார்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ஆன்மீக, பக்தி உபன்யாசங்கள் ஆயிரமாயிரம் மக்கள் மனதிலே புனித உணர்வை ஏற்படுத்தியுள்ளன. அருளாளர்களாகவும், நற்காரியங்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் பெருமகனாராக மாறியிருக்கின்றனர்.

எண்ணற்ற நாத்திகவாதிகளும், பாதைமாறிப் போனவர்களும் வடலூர் ராமலிங்க சுவாமிகளின் தரிசனத்தாலும், அவர் புகட்டிய ஜோதி தத்துவத்தை கைக்கொண்டும் தங்களது வாழ்வை செம்மைப்படுத்திக் கொண்டவர்கள் ஏராளம் ஏராளம்.

திருவண்ணாமலை ரமண மகரிஷியின் மோன தவத்தாலும், திருவருட் பார்வையாலும், திருக்கரத்தால் வழங்கப்பட்ட ஆசியாலும் ஈர்க்கப்பட்டு பல்லாயிரம் மக்கள் மேலாம் நிலையினை எய்தியுள்ளார்கள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திருவாயிலிருந்து வெளிப்பட்ட அமுத மொழிகள் மனிதனை தேவனாக மாற்றும் மந்திர சக்தி பெற்றவை. அதன் காரணமாக நாடெங்கும் லட்சக்கணக்கான ராமகிருஷ்ண பக்தர்கள் தெய்வீக நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பாதங்களே துணை என அவற்றைப் பற்றிக் கொண்ட குடில் சுவாமிஜி அவர்கள், பகவானின் அமுதமயமான பொன்மொழிகளின் ஆற்றலை நடைமுறையில் உணர்ந்தார்.

பகவான் குருதேவரின் பொன்மொழிகளை கண்களால் பார்த்தாலே, பார்த்தவர்கள் அருளாளர்களாகிவிடுவார்கள் என திடமாக நம்பினார். இக்கருத்தில் தான் பகவான் பரமஹம்ஸரின் பொன்மொழிகளை ஆஸ்ரமம் எங்கும் கண்ணில் படும்படியாக தகரப்பலகைகளில் எழுதி மரம்தோறும் பொருத்தி வைத்துள்ளார்கள் சுவாமிஜி அவர்கள்.

ஆஸ்ரம எல்லை முழுவதும் நூற்றுக்கணக்கான, பரமஹம்ஸரின் பொன்மொழிகளைக் காணலாம். அவைகளில் சிலவற்றை இங்கு கொடுத்துள்ளோம்.

1. பக்தனுடைய மனம் பகவானின் வரவேற்பறையாகும். ஆகவே மனதில் தூய்மை நிறைந்திருக்கட்டும்.

2. உனது வேண்டுகோள் மனப்பூர்வமாகவும் உண்மையாகவும் இருந்தால், இறைவன் கண்டிப்பாக கேட்பான்.

3. இறைவனின் நாமத்தை காதாரக்கேளுங்கள். வாயாற உரக்கக் கூறுங்கள். எல்லாப் பாவங்களும் தொலைந்து போகும்.

4. இடைவிடாது நீ எவ்விதமாக காட்டிக்கொள்ளுகிறாயோ அவ்விதமாகவே ஆகிவிடுவாய்.

5. மதத்தைப் பற்றி படிப்போர்கள் உண்டு. பேசுவோரும் பலருண்டு. அதன் சாராம்சமாகிய ஆண்டவனைக் காணவோ, அடையவோ முயற்சி செய்பவர் அரிதிலும் அரிது.

6. இறைவன் பேரில் நம்பிக்கை வை. அப்படி நம்பிக்கை வைத்தால் புனிதத்தலங்களுக்குக் கூட போகவேண்டியதில்லை. இருக்கும் இடத்திலேயே அவனது திவ்யதரிசனம் கிட்டும்.

7. எல்லா மனிதர்களின் இருதயத்திலும் ஈஸ்வரன் வாசம் செய்கின்றான். ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை.

8. இறைவன் திருநாமத்தை உச்சரிப்பதில் வெட்கப்படலாகாது. உரக்கக் கூறுங்கள். மனம் புனிதமாகும்.

9. பிறர் எதனை செய்ய வேண்டுமென்று நீ விரும்புகின்றாயோ அதை நீயே செய்.

10. ஒரு விநாடியாவது மனதை இறைவனிடம் வைத்திருந்தால் கண்டிப்பாக முக்தி கிடைக்கும்.

11. அடிக்கடி தனிமையில் சென்று இறைவனைக் கூவியழைக்க வேண்டும்.

12. யாரெல்லாம் கடவுளுக்காக அழுகின்றார்களோ அவர்கள் வடிக்கும் கண்ணீர் முற்பிறவிகளில் செய்த பாவங்களையெல்லாம் கரைத்துச் சென்று விடும்.

13. கொடுக்கும் சக்தி உன்னிடம் உள்ளது. ஆதலால் கொடு. அத்தோடு நிற்க. எதையும் பதிலாக விரும்பாதே. நினையாதே. கேளாதே.

14. பெயர், புகழ் எதையும் விரும்பாதே. ஏழைக்கு ஏழையாகவும், எளியோர்க்கு எளியவனாகவும் இருக்க ஆசைப்படு.

15. கடவுளை வழிபடுதல். உலகத்தவருக்கு சேவை செய்தல். இவையே பிறவி எடுத்ததின் பயன்.

16. உலகக் காரியங்களை செய்து வரும் போது ஒரு கையில் இறைவனது ஒரு பாதத்தைப் பற்றிக் கொள். காரியம் முடிந்தவுடன் அவரது இரு பாதங்களையும் பற்றிக்கொள்.

17. நீ தாய். நான் குழந்தை. இந்த அன்னை வழிபாடுதான் சாதனை வாழ்வின் முடிந்த நிலை.

18. எப்போதும் சுறுசுறுப்பாக பணிபுரிய வேண்டும். ஒரு போதும் வேலையின்றி சும்மா இருக்கக்கூடாது.

19. வேலை இன்றி சும்மா இருக்கும் போதுதான் பல்வேறு கெட்ட எண்ணங்கள் மனதில் முளைத்தெழுகின்றன.

20. உன்னுடைய நெஞ்சுக்கு துரோகம் செய்யாமல் கள்ளமில்லா உள்ளத்தோடு பிரார்த்தனை செய்.

21. எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது ஈஸ்வரன் இல்லாது போனால் மனிதன் வாழ முடியாது.

22. மரணத் தருவாயிலும் மறவாமலிருக்க, இருக்கும் காலத்திலேயே ஈஸ்வர சிந்தனை கொள்.

23. தினமும் வழிபாடு செய்யாத மனிதனின் மனம் மாசடையும்.

24. பகவானுடைய திருநாமத்தை உச்சரித்த வண்ணம் இருப்பவனுக்கு பாவம் ஏது? பயம் ஏது? பந்தம் எது?

25. பணத்தின் உதவியினால் பகவானைக் காணலாம் என எண்ணுவது முடியாத காரியம்.

ஆஸ்ரமத்திற்கு வரும் அன்பர்கள் மனதிலே ஆன்மீக உணர்வும், தெய்வ சிந்தனையும், கடவுளிடம் பக்தியும் ஏற்பட வேண்டும் என்பதில் சுவாமிஜி அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார். அதன் விளைவாக வைக்கப்பட்டது தான். பகவான் ராமகிருஷ்ணர் கூறிய பொன்மொழி பலகைகள் ஆகும்.

17. குடிலின் உடலுழைப்பு கல்வித்திட்டம்

சுவாமிஜி அவர்கள் தரித்திர நாராயணர்களுக்கு சேவை செய்வதே தமது லட்சியம் என்ற சித்தாந்தத்தின் காரணமாக குடிலை ஏற்படுத்தினார். பெற்றோர்களற்ற சிறுவர்களை சேர்த்துக் கொண்டு உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம் ஆகிய உயரிய ஐந்து தர்மங்களை மேற்கொண்டார். அப்போதே அவர் குருகுலத்தில் சேரும் சிறார்களுக்கு வெறும் கல்விமட்டும் இல்லாமல் அத்தோடு உடலுழைப்பையும் சேர்ந்த கல்வியை உருவாக்கினார். அதற்காக ஒரு ஆரம்பப்பள்ளியும், ஒரு உயர்நிலைப்பள்ளியும் குடிலில் செயல்பட்டு வருகின்றன.

பள்ளிப் பயிற்சியானது அங்கு பயிலும் குழந்தைகளை தன்னம்பிக்கையிலும், நல்லொழுக்கத்திலும், உடலுழைப்பில் நாட்டம் உடையவர்களாயும், சமூக சேவையில் ஆர்வமும், இறைவன் பால் பற்றும் கொண்டதாக அமைய வேண்டும். இதுவே, குடிலின் கோட்பாடாகும். குடிலில் முதன்முதலில் பள்ளி ஆரம்பித்த காலத்திலிருந்தே பள்ளியில்லா நேரங்களிலும்,

பள்ளி விடுமுறை நாட்களிலும் பிள்ளைகளுக்கு அவரவர் வயது, சக்தியை அனுசரித்து உடலுழைப்பு வேலைத்திட்டத்தை கொண்டு வரப்பட்டது. சிறிய அளவில் ஆரம்பித்த இத்திட்டம் இன்று உயர்நிலைப்பள்ளி வரையில் வளர்ந்து விஸ்வரூபம் கொண்டுள்ளது.

கல்வியுடன் உடலுழைப்பை இணைத்த போது ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அன்பர்களின் எதிர்ப்பு, ஆசிரியர்களின் எதிர்ப்பு, மாணவர்களின் எதிர்ப்பு தோன்றலாயிற்று. ஆனால் எமது மனம் மட்டும் சிறிதளவு கூட எதிர்ப்பைக் காட்டவில்லை. இதற்குமாறாக இத்திட்டம்தான் தலைசிறந்த திட்டம் என எமக்கு உணர்த்தியது. தெளிவைத் தந்தது. எதிர்காலத்தில் குடிலின் உடலுழைப்பு திட்டம் நாடெங்கும் பள்ளிகளில் வருவது உறுதி என்று எதிர்த்த அனைவருக்கும் தக்க பதில் கூறப்பட்டது. சில ஆண்டுகளாகவே ராஷ்டிரபதி, பிரதமர், கல்வி நிபுணர்கள் மற்றும் பலரும் குடிலைப் பற்றி அறியாதவர்களாக இருந்தாலும் உடலுழைப்போடு இணைந்த கல்விதான் சிறந்தது என்று சொல்லி வருகின்றனர். "பள்ளி நேரம் முடிந்ததும் வேலை. பள்ளியில்லா நாட்களில் வேலை" என்ற குடிலின் தாரக மந்திரத்தின் மகிமையை இன்று நாடே உணர்ந்து வந்திருக்கிறது.

இத்திட்டத்தை நாம் மட்டுமல்ல சுவாமி விவேகானந்தரே கூறியிருப்பதாவது:

" ஐஸ்வர்யத்திற்கு பெயர் போன இந்த பாரத நாட்டிலே மக்கள் உணவுக்காக ஏங்கும் நிலை இருப்பதை உங்கள் கண்களை திறந்து பாருங்கள். உங்களுடைய கல்வி இக்குறையைப் போக்குமா? நிச்சயமாக இல்லை. தங்களுக்குத் தேவையான உணவையும், உடையையும் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும்படி தொழில் செய்யுமாறு இந்த நாட்டு மக்களுக்கு நான் போதிக்கிறேன்."

நம் தேசப் பிதா கூறுவதாவது:

" ஆண்டவன் நமக்குத் தந்த கை கால்களைப் பயன்படுத்துவதற்கு தயாராகுங்கள். உணவிற்காக உழைக்கும் நோக்கத்தோடு தான் மனிதனை இறைவன் படைத்துள்ளான். நெற்றி வியர்வை சிந்தி நாம் உணவு தேடிக் கொள்ள வேண்டும் என்றுதான் இயற்கை வலியுறுத்துகிறது. உழைப்பின் கௌரவத்தைப் பற்றி சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். உழைப்பை வெறுக்குமாறு ஒருபோதும் நம் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கக் கூடாது. விவேகமான முறையில் பயனுள்ள உடல் உழைப்பு இருந்தால் அதுதான் அறிவை வளர்ப்பதற்கு மிகச்சிறந்த வழி. உடலும், உள்ளமும், ஆத்மாவும் இசைந்து வளர்ந்தால்தான் சிறந்த அறிவு உருவாக முடியும். சமூகத்திற்கு பயன்தரக்கூடிய உழைப்பின் மூலம் வளரும் அறிவினால் மக்களுக்கு மேலும் பலன் கிடைக்கும். உடல் உழைப்பு ஒரு அவமானச்சின்னம் என்ற கருத்தை அகற்ற வேண்டும்."

சென்னையில் நடந்த சர்வோதய மகாநாட்டில் சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. சுந்தரவடிவேலு அவர்கள் கல்வி குறித்து ஆற்றிய உரையின் சாரம்:

"உழைப்புத் திறன் சிறிதுமின்றி கல்விகற்றவர்களே சமுதாயத்திலிருந்து பெற்றது அதிகம். ஆனால் சமுதாயத்திற்கு கொடுத்தது குறைவு. படித்தவர்களிடம் உடல் உழைப்பு இல்லை. அறிவுச் சோம்பலும் வந்துவிட்டது.

" மார்க்கை வைத்து ஒரு மாணவனின் தரத்தை மதிப்பிடுவது தவறு. அவனது உடல் உழைப்புத்திறனை வைத்து தரத்தினை மதிப்பிடல் வேண்டும். ஒழுக்கத்தை வைத்து திறனை மதிப்பிடுதல் வேண்டும்."

" மாணவனை தேர்வில் வெற்றி பெறச் செய்வது முக்கியமல்ல. மனிதனாக்குவது தான் முக்கியமென்ற குறிக்கோளோடு நான்கு பள்ளிகளாவது நடைபெற வேண்டும்."

" நம் பிள்ளைகள் வெறும் புத்தகப் படிப்பாளியாக இருக்கிறார்கள். இது போதாது. அவர்களை பாடுபடுகிற பாட்டாளியாக்க வேண்டும். இங்கிலாந்து போன்ற மேநாடுகளில் 15 வயதிற்கு மேல் பிள்ளைகள் பாடுபட்டு பணிபுரிந்து சுயமாக சம்பாதிக்கிறார்கள். பெற்றோர்களை எதிர்பார்ப்பதில்லை. தாங்களாகவே வாழத் தொடங்குகிறார்கள். இங்கு இப்படி நடக்கக் கூடாதா?"

" உள்ளூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த புறம்போக்கு நிலங்களை பள்ளிகள் எடுத்துக் கொண்டு அவற்றில் உற்பத்தி செய்ய வேண்டும். வெறும் எழுத்தறிவை மூலதனமாக வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி செய்யும் நிலை இனி செல்லும்படியாகாது."

"தேர்வில் வெற்றி பெறச் செய்வது முக்கியமல்ல. மனிதனாக்குவதுதான் முக்கியம்" என்ற குறிக்கோளோடு நான்கு பள்ளிகளாவது நடைபெற வேண்டும் என்று கூறுகின்ற அன்பருக்கு . . " இதோ ஒரு பள்ளி. அவரது எண்ணப்படி குடில் இயங்கி வருகின்றது என ஆறுதல் கூறுகின்றோம்.

" மகாத்மாஜியின் வரலாற்றையும் கல்வி பற்றிய அவரது எடுத்துக்காட்டுகளையும் பல வருடங்களுக்கு முன்பே படித்தறிந்து, தெளிந்து மனதில் கல்வி என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என மனதிலே ஒரு முடிவு கட்டி வைத்தபடியால் யாருடைய எதிர்ப்பும் எவ்வளவு வலுவாக எங்கிருந்து வந்தாலும் மனம் துணிவோடு இருந்தது. எதிர்ப்பை கண்டு மனம் நகைத்ததே தவிர நைந்தும் தாழ்ந்தும் விடவில்லை. மேலும் கொண்ட முடிவில் உறுதியாக இருந்தது என சுவாமிஜி அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பே சீரிய தீர்க்கதரிசனத்துடன் குடிலில் நடைபெறும் கல்வி இப்படித்தான் இருக்க வேண்டும் என அறுதியிட்டு கைதேர்ந்த கல்வி நிபுணர் போன்று கூறியுள்ளார். உடல் உழைப்பே கல்வியின் வெற்றிக்கும் மனதின் தன்னம்பிக்கைக்கும் முதற்படி என தெளிவுற காட்டியுள்ளார். அவர் காட்டிய வழியில் தான் குடிலின் கல்வி உடலுழைப்பையும் கொண்டதாக இயங்கி வருவதை குடிலை அறிந்தவர்கள் அறிவார்கள்.

18. துறவிக்கு ஈஸ்வரன் அதிக சமீபத்தில் இருக்கிறான்

சுவாமிஜி அவர்களின் ஒழுக்க நெறியாலும், நாற்பதாண்டு கால தவ வாழ்வில் பெற்ற துறவு வாழ்க்கையாலும், அவரது உள்ளத்தில் ஊற்றெடுத்த துறவியின் அம்சங்களை தெள்ளத் தெளிவாக விளக்கி உள்ளார்.

" யத ஹரேவ வ்ரஜேத் தத கரேவ ப்ரவரஜேத்" என ஜாபாலோப நிஷத் முழங்குகிறது. எந்த நாளில் உலக வாழ்க்கை விஷயங்களில் வெறுப்புத் தோன்றுகிறதோ அந்த நாளில் துறவை ஏற்றுக்கொள்வாயாக.

துறவை ஏற்கும் நாள் எது? என எவ்வளவு துல்லியமாக கூறப்பட்டுள்ளது. துறவிக்கு அணிகலன் எது?. இப்பிறப்பின் சுகங்களையோ மறுபிறப்பின் சுகங்களையோ நாடாமலிருத்தல் அவசியம். தூல சரீரத்தின் தொடர்பாக விளங்கும் பெற்றோர். உற்றோர், உறவின்முறை, பெயர், புகழ், கீர்த்தி, ஜாதி, குலம், பதவி ஆகியவைகளைப் பற்றி அறவே மனதாலும் செயலாலும் பாராட்டாமலிருத்தல் அவசியம். இவைகளே துறவி ஒருவனுக்கு ஏற்பட்ட அணிகலன்களாகும்.

எந்த நேரத்திலும் உலக விஷயங்களை பற்றாமலிருக்க வேண்டும். பெண்ணாசையை முற்றிலுமாக துறந்தவன் உலகத்தையே துறந்தவனாகிறான். அவனுக்கு ஈஸ்வரன் வெகு சமீபத்திலிருக்கிறான் என பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் குறிப்பிட்டுள்ளார்.

துறவியானவன் சதா சாதகம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். தன் வைராக்யத்தில் அவன் நெருப்பென ஜொலிக்க வேண்டும். சிங்கக்குட்டி போல் சுறுப்சுறுப்பாக செயல்பட வேண்டும். கர்வ உணர்ச்சியோடு பாமர மக்களிடம் பழகக் கூடாது. மிகமிக தாழ்ந்த மக்களிடமும் நேச பாவம் பூண்டு பழக வேண்டும். அச்சமும் அடிமைக் குணமும் துறவியிடம் அறவே கூடாது. மித ஆகாரம், மித நித்திரை, மித வார்த்தை ஆகிய நியதிகளை தனது நித்திய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். நாவாசையை அடக்காதவன் வேறு எந்த ஆசையையும் அடக்க முடியாது. தன்னிடம் வந்து சேரும் பொருளில் தன் விஷயத்தில் லோபியைப் போன்றும் பிறர் விஷயத்தில் கர்ணனைப் போன்றும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் லட்சியம் பக்தி நெறியும் முக்தி பெறுதலும் ஆகும். அதன் மொழி வேதம். அதற்கு நெறி துறவு. ஆகையால் கண்ட கண்ட புத்தகங்களை அரைகுறையாகக் கற்று மேம்புல் மேய்வதைவிட நல்வாக்கியங்கள் கொண்ட சாஸ்திரங்களில் ஒன்றினை ஆழ்ந்து கற்று அதன் கருத்துக்களை துறவி ஒருவன் தனதாக்கிக் கொள்ள வேண்டும்.

அரிதாகக் கிடைத்திருக்கும் தற்போதைய மனிதப் பிறவியிலாவது ஈசனுக்காகவும் அவனுடைய அம்சமான தரித்திர நாராயணர்களின் சேவைக்காகவும் தன்னை அர்ப்பணம் செய்யக் கூடாதா? எவன் ஒருவன் துறவு

ஏற்கின்றானோ அவனது ஏழு தலைமுறை சந்ததியினர் நற்கதியடைகின்றனர்.

துறவியானவன் எந்தவொரு காரியத்தையும் இழிவானது இது என நினைக்கவே கூடாது. எக்காரியமாயினும் பரமனுக்குச் செய்யும் பணிவிடை என்ற நோக்கில் இருக்க வேண்டும். விவேகானந்தசுவாமிகள் கூட்டுதல், பெருக்குதல், கழுவுதல், துவைத்தல், கழிவறை சுத்தம், சமையலறை சுத்தம் ஆகிய பணிகளை எவ்வித வேறுபாடும் மனதாலும் காட்டாமல் தமது சகாக்களுடன் சேர்ந்து செய்வாராம். அம் மகானே அப்படி என்றால், நாம் எப்படி இருக்க வேண்டும்? இந்நினைவை துறவி சதா மனதில் வைத்திருக்க வேண்டும்.

பலபேர் சேர்ந்து முடிக்கும் பணியை, ஒருவனால் சமாளிக்கக் கூடிய மனத்திட்பத்தை துறவி ஒருவன் பெற்றிருக்க வேண்டும். தீட்டிய கத்தியின் விளிம்பில் நடப்பது போன்ற விழிப்புணர்ச்சியுடன் துறவி உலகில் வாழ்ந்து வர வேண்டும். இவைகளால் மட்டுமே துறவியின் ஆன்ம பலம் பாரெங்கும் பரவுகிறது. உலகில் வாழும் அவனது கைக்குள் உலகமே சரணடைந்து விடுகிறது.

19. துறவு ஏற்பது எதற்கு?

இன்றைய விஞ்ஞான யுகத்தில் பல காரியங்களை செம்மையாக செய்திட மனித சக்தியைவிட இயந்திர சக்தியை பெரிதும் நம்பும் காலமாக இருக்கிறது. காரணம் இயந்திரங்கள் உணர்வற்ற அஃறிணைப் பொருள்கள். அவைகளுக்கு மின் சக்தியை அளித்துவிட்டால் போதுமானது. அப்பழுக்கற்ற முறையில் வேலையை செய்து கொண்டேயிருக்கும்.

மேற்கொண்ட ஒரு பணியில் தவறு நேருமாயின் அதற்கான முதற்காரணம் அதை செய்து முடிக்கும் கர்த்தாவின் மனோபாவம், பந்த பாசம் தான். குடும்ப நிலையும், நலனும் தான். ஜாதி, மத, இன உணர்வுகள்தான் சேவையை பாதிக்கின்றன.

இயந்திரங்களுக்கு இவை எதுவும் கிடையாது. ஒரு விதத்தில் பார்த்தால் பற்றற்ற துறவிகள் இந்த யந்திரத்திற்கு ஒப்பாவார்கள். இவர்களிடம் பந்தம் இல்லை. பாசமில்லை, கொண்ட பணியினை சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும் என்ற ஒரு குறிக்கோள் மட்டுமே இவர்களிடம் இருக்கும்.

காந்திஜி ஒரு சமயம் " பாரத நாட்டின் நல்லாட்சி இல்லறத்தான் வசம் இருக்கக் கூடாது. பற்றற்ற முற்றும் துறந்த சந்நியாசிகளிடத்தில் தான் ஆட்சிப் பொறுப்பு இருத்தல் வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

சந்நியாசியிடத்திலே ஜாதி வேறுபாடு கிடையாது. இன வேறுபாடு கிடையாது. செல்வத்தை துச்சமாக மதிப்பவர்கள் அவர்கள். " சர்வம் ஏகம்"

என்ற எல்லாம் ஒன்றே என்ற நிலைமை எட்டியவர்கள் இவர்கள்.

" ஆத்மனோ மோக்ஷார்த்தம்
ஜகத் ஹிதாய ச"

தனது சுயமுக்திக்காகவும், உலகு நன்மைக்காகவும் பாடுபடுபவன் துறவி ஒருவனே. சந்நியாச வாழ்க்கைக்கு சரீர நிலையோ பிறப்பின் ஜாதியோ, இன உணர்வோ, தடைக்கற்களாக இருக்க முடியாது. உள்ளத்தின் பரிபக்குவ நிலையே துறவிக்கான இலட்சணமாகும். மனித குலத்தின் மீது அவனது கருணை ஆறாகப் பெருக வேண்டும். இவற்றோடு மன வைராக்கியமும் தன்னிகரற்ற பிரம்மசரியமும் வேண்டும்.

பகவான் கிருஷ்ணன் மாட்டிடையன்
கவி காளிதாசன் ஆட்டிடையன்
நபிகள் நாயகம் ஒட்டக இடையன்
இயேசு பிரான் தச்சுத்தொழிலாளி
ஆதி ராமாயணம் பாடிய வால்மீகி முனிவன் வேடன்
திருப்பாணாழ்வார் பறையர்குலம்
திருநாளைப் போவார் குறவர் குலக்கொழுந்து
திருமழிசை ஆழ்வார் வேடர்குல நாயகன்
கண்ணப்ப நாயனார் வேட்டைக்கார திண்ணன்
திருக்குறிப்பு நாயனார் சிவனடியார் துணிகள் துவைக்கும் ஏகாலி வர்க்கம்
மூர்க்க நாயனார் சூதாடி அடியார்க்கு அன்னமிட்டவர்

இவர்கள் அனைவரும் அனைத்திற்கும் அப்பாற்பட்டு மனித ஜாதிக்கு தன்னலமற்ற சேவை புரிந்ததின் காரணமாக உலகுள்ளளவும் உள்ளவர் ஆவார்கள். அப்பழுக்கற்ற சேவை புரிந்தமையால் அன்றும், இன்றும், என்றும் போற்றப்படுகின்றார்கள்.

நமது செயல்களில் ஏற்படும் பிழைகளும், தவறுகளுமே நமக்கு ஞானாசிரியர்கள். மீண்டும் இவ்வாறு நடக்க முடியாதவாறு தடுப்பவர்களும் இவர்களேதான். மரங்களும் கற்களும் பிழைகளுக்கு ஆட்படுவதில்லை. ஆனால் தவறும் இயல்புடையவன் மனிதன். அதிலும் புரிந்த தவறை அறிந்து திருந்தியவன் மண்ணில் தேவனாக வாழ்கின்றான்.

சர்க்கரையை சர்க்கரை பொம்மையாக்க மீண்டும் அனலில் இட்டு பாகாகக் காய்ச்சி அச்சில் வார்க்க வேண்டும். வகைவகையான சர்க்கரை பொம்மைகள் கிடைக்கின்றன. அது போல நல்லார்களும் வெவ்வேறு வித கூறுகளாக துன்பத்தால் உருக்கப்பட்டுத்தான் திருவடிவம் பெறுகின்றனர். பண்பாடுகளை அடைவதற்கு துன்பம் போன்ற ஆசான் வேறு எதுவும் துணைபுரிவதில்லை.

துயர் என்னும் தீயில் உருக்கித்தான் துறவென்னும் நிலை உருவாக வேண்டும். உண்மை துறவின்றி எவரும் பிறருடைய தொண்டில் தன் இதயம் முழுவதையும் ஈடுபடுத்த முடியாது. எனவே பற்றற்ற தொண்டிற்கு, அப்பழுக்கு காண முடியாத தொண்டிற்கு துறவு மிகவும் அவசியமே.

20. கோவை கிழாரின் தர்ம நெறி

குடில் சுவாமிஜியின் வாழ்வில் அவர் மேற்கொண்ட சேவையின் நிலை எதுவோ அதையே வற்புறுத்தி சமயப்பணியும் தமிழ் இலக்கியப் பணியும் ஆற்றி வரும் “ கோவை கிழார்” என அன்பர்களாலும், அறிஞர் பெருமக்களாலும் மதிப்போடும், மரியாதையோடும் அன்போடும் அழைக்கப்படும் திரு. சி.எம். ராமச்சந்திரன் செட்டியார் எது சேவை என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்று ஒரு மாதாந்திர சஞ்சிகையில் வெளிவந்தது. அதன் சில பகுதிகளை சுவாமிஜி அவர்கள் ஆண்டறிக்கையில் வெளியிடுவது அவசியமான ஒன்று எனத் தீர்மானித்ததின் பேரில் விவரித்துள்ளார்கள்.

“நமது தென்னாட்டில் எத்தனை கோயில்களும், மடங்களும், சங்கங்களும் உள்ளன. இவைகளை ஒட்டி எத்தனை சொத்துக்கள் இருக்கின்றன. இச்சொத்துக்களைக் கொண்டு வீண் ஆடம்பரத் திருவிழாக்கள் நடத்தப்பட செலவழிக்கப்படுகின்றது. மக்களின் உண்மையான சமய சேவைக்கு பயன்படுவதில்லையே. அநாதைகளுக்கு சேவா நிலையங்கள் ஏற்படுவது புதிதான ஒன்றல்ல. மிகப்பழமையான ஒரு தர்மமே ஆகும். 32 அறங்களில் அநாதை சேவை நிலையங்களை நிர்வகிப்பது என்பதும் ஒன்றாகும். முற்காலத்தில் ஆலயங்களை ஒட்டி பலவகையான சேவா நிலையங்கள் இருந்தன என்று கல்வெட்டு சாசனங்கள் கூறுகின்றன. ஆகவே கோயில் சொத்துக்களிலிருந்து அனாதை விடுதிகள் வைப்பது மிகச் சிறந்த சேவை என்று சொல்ல வேண்டும்.

நமது கிருத்துவ சகோதரர்கள் ஒவ்வொரு பெரிய ஊரிலும் பாடசாலைகள், வைத்திய சாலைகள், அனாதை விடுதிகள் வைத்து நடத்துகிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்துவக் கோயிலை ஒட்டியும் இவைகள் இருக்கின்றன. நமது கோயில்களை ஒட்டி எத்தனை சேவா நிலையங்கள் இருக்கின்றன.? அவர்களுடைய சேவைகளை நமது சேவைகளுடன் ஒப்பிட்டு பார்த்தால் நம்மிடம் ஆயிரத்துக்கு ஒன்று கூட இருக்கக் காணோம். ஆனால் ஆலயங்களோ ஆயிரம் மடங்கு அதிகம் இருக்கின்றன. ஆகவே நமது பண்பாடு எவ்வளவு கேவலமான தாழ்ச்சிக்கு வந்துவிட்டது. இதனை நாம் எப்போது நிவர்த்தி செய்து கொள்ளுவோம்?

அன்பர் இக்கட்டுரையில் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் பல வருஷங்களின் அனுபவப் பயனாய் எழுந்தவையேயாகும். அநேகம் கோயில்கள்,

மடங்களுக்கு அவர் சென்றிருந்த போதெல்லாம் ஆங்காங்கு நிகழும் நிகழ்வுகளை ஆராய்ந்து கவனத்தில் ஈர்த்து மனப்பெட்டகத்தில் வைத்துக் கொண்ட அரிய கருத்துக்களாகும்.

இது போன்ற அபிப்ராயங்கள் அனேக அறிஞர்களின் உள்ளத்திலே அடங்கிக் கிடக்கின்றன. அவைகள் எல்லாம் வெளிக்கிளம்பி செயல்படும்படியான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. சுபசூசகமான அறிகுறிகளும் தோன்றி வருகின்றன.

21. தேவனை எட்டிய பாதிரியாரின் பிரார்த்தனை

பள்ளி விழாக்களில் சுவாமிஜி கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறுசிறு கதைகள் மூலம் ஒரு அரிய உண்மையை எடுத்துக் கூறுவார். அம்மாதிரியான ஒரு விழாவில் ஆண்டவனிடத்தில் பக்தியும், தளராத நம்பிக்கையும், அவன் பாதங்களே நமக்கு கதி என்பதை எவன் தன்னுள்ளே சதாசர்வகாலமும் நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அவன் நினைத்தது நடக்கும் என்பதை கிருத்துவ பாதிரியார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை மாணவர்களுக்கு கூறியுள்ளார். இது ஒரு பத்திரிக்கையில் வெளி வந்தது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

அது வயல்கள் சூழ்ந்த சிறு கிராமம். விவசாய பணிகளைத் தவிர வேறு எந்தப் பணியும் செய்யத்தெரியாத எளியமக்கள் அவர்கள். விவசாயம் ஒன்றையே தங்களின் உயிர் மூச்சாக கருதி பாடுபட்டு வந்தனர். கடந்த ஒரு வருடமாக மழை என்பதே இல்லை. விவசாய பூமிகள் வறண்டன. மக்கள் கண்ணீர் வடித்தனர். ஒட்டிய வயிறும் உலர்ந்த உதடுமாக நடைப்பிணமாக அம்மக்கள் கிராமத்தில் திரிந்தனர்.

அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் இரண்டு விஷயங்கள் தான். ஒன்று அவர்களின் நிலம். இரண்டாவது தங்களை உய்விக்க வந்த பரமபிதாவின் ஆலய பூசனைகளை செய்து வரும் பாக்கியநாதன் பாதிரியார். அம் மக்கள் படும் துயரம் கண்டு பாதிரியார் தினமும் தேவனின் முன் மண்டியிட்டு கதறுவார்.

“ பரமபிதாவே... இம்மக்களை கோடீஸ்வரர்களாக ஆக்கி விடு என்றா வேண்டுகிறேன்? செல்வம் எதையும் நீ அவர்களுக்கு தர வேண்டாம். மழையை மட்டும் கொடு. உழைப்புக்கு அஞ்சாத அம்மக்கள் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்வார்கள். உன்னிடம் தளராத நம்பிக்கை கொண்ட இவர்களின் மனதை நோகடித்து விடாதே.”

தினமும் இவ்வாறாக பிரார்த்தனையை செய்து முடிப்பார் பாதிரியார். தேவனின் சொரூபத்தின் முன்னால் கண்கள் கலங்க இங்குமங்குமாக

தளர்நடை போட்டுக் கொண்டிருப்பார். ஆலய ஊழியர் ஒருவர் அவருக்காக உணவை கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றார். மக்களின் அவதிக்கு முன்னால் அவரது மனம் உணவை ஏற்க மறுத்தது. ஆலயத்திற்கு வெளியே வந்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் பாளம் பாளமாக வெடித்துக் கிடந்த விவசாய நிலங்களை கண்டார். மக்களுக்கு உயிர் கொடுக்கும் அந்த நிலங்கள் நீரில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக செத்துவருவதை பாதிரியாரால் உணர முடிந்தது. மீண்டும் ஆலயத்தினுள் ஓடினார். தேவன் முன் நின்றார். பார்க்க பார்க்க அந்த கருணை சொட்டும் முகம் சிறிது சிறிதாக விண்ணுக்கும் மண்ணுக்குமாக உயர்வதைக் கண்டார். கருணை காட்ட ஏன் இன்னும் தாமதம்? எதற்காக இந்தச் சோதனை? தேவனின் திருப்பீடம் முன்பாக நின்றார். தேவனது பாதம் முதல் சிரசு வரை பார்த்தார். பார்த்த கண்கள் கலங்கின. இரு சொட்டு சூடான கண்ணீர் அவரது பாதங்களில் வீழ்ந்தன. “ நான் பிரார்த்தித்தால் மழை நிச்சயம் வரும் என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஏதுமறியா மக்கள். என்னதான் அவர்கள் பாவம் செய்து விட்டார்கள்? இனி நான் உன்னிடம் கெஞ்சப்போவதில்லை. கட்டளையிடுகிறேன். அவர்களுக்கு நீ மழையை கொடுத்தே ஆகவேண்டும். இன்று இரவிற்குள் மழை பெய்தாக வேண்டும். இன்னமும் நீ இரங்காவிடில் இரக்கமற்ற உன்னைத் தாங்கிக் கொண்டிருக்கும் அப்பீடத்தில் என் தலை மோதும். சுக்கு நூறாக உடையும். இதுவே உன்னிடம் நான் செய்யும் கடைசி பிரார்த்தனை. என் உயிரை எடுத்துக் கொண்டாவது மழையைத்தா. உன் பாதங்களே சரணம்.” எனக்கூறி வெளியே ஓடி வந்தார். கால் முதல் சிரசு வரையில் அவரது திரேகம் ஆடிற்று. ஆலய மணி இருக்கும் இடத்தை நோக்கி ஓடினார். அவ்வாறு போகும் போதே தேவனை சிறிது நேரம் பார்த்தார்.

என்ன இது? இது உண்மையா? அல்லது பிரமையா? இவரை நோக்கி தேவன் சிரிப்பது போல் தோன்றியது.கண்ணை கசக்கிப் பார்த்தார். என்றும் காணாத ஒரு ஒளி தேவனின் நயனங்களிலே மின்னுவதாக கண்டார். ஒரே எட்டில் ஆலயமணியின் கயிற்றை பிடித்தார்.அடிக்கத் தொடங்கினார். மணியோசையைக் கேட்ட ஊர் மக்கள் என்னமோ ஏதோவென்று ஓடோடி வந்தனர். ஆலயத்தில் பெருங்கூட்டம் சேர்ந்து விட்டது.

மக்களைக் கண்ட பாதிரியார், “ என்னருமை மக்களே! நிச்சயம் உங்கள் கவலை தீரப்போகிறது. தேவனுக்கு இன்று இரவு முடிவதற்குள் மழை பெய்தாக வேண்டுமென கெடு வைத்துள்ளேன். எனக்கு வேறு வழி தோன்றவில்லை. எனது கண்ணீர் தவத்தை தேவன் நிச்சயம் ஏற்றுக் கொண்டிருப்பான். என் கண்ணீருக்கு பதிலாக வானத்து நீரை அவன் நம் அனைவருக்கும் காணிக்கையாகத் தருவான். இரவு பூஜையின் போது இன்று மழை நிச்சயம் என்ற உறுதியோடு ஆலயத்திற்கு வாருங்கள். விடியும் வரை தேவனின் நாமத்தை செபித்த வண்ணம் காத்திருப்போம். போய் வாருங்கள்.” மக்கள்

கலைந்தனர். பாதிரியாரும் தேவன் முன் அமர்ந்து செபிக்கத் தொடங்கினார். திடீரென மக்களின் கூச்சல் கேட்டது. பாதிரியார் மாலை மங்கி இரவு வந்ததை உணர்ந்தார். மக்கள் அனைவரும் வானத்தை அண்ணாந்து பார்ப்பதும் பாதிரியாரை பார்ப்பதுமாக இருந்தனர். சிலையென நின்றிருந்த பாதிரியாரின் கண்களில் ஒரு காட்சி தென்பட்டது. ஐந்து வயது சிறுமியவள். வெண்ணிற கவுன் அணிந்து தேவதை போல் நின்றிருந்தாள். அவளது பிஞ்சு விரல்கள் சிறுகுடை ஒன்றை பிடித்திருந்தது. குடையுடன் இரு கைகூப்பி தேவனை வணங்கிக் கொண்டிருந்தாள்.

இக்காட்சி பாதிரியாரை மெய்சிலிர்க்க வைத்தது. " இன்று இரவு மழை வரும் என்று சொன்ன எனது பேச்சை நம்பி இத்தனை பேர்களில் அந்தச் சின்னஞ்சிறிய ரோஜா மொட்டு மட்டுமே நம்பிக்கையுடன், குடையுடன் வந்திருக்கிறாள். கள்ளமிலா அச்சிறுமிக்காக மழையை தந்துவிடு. இச்சிறுமி முன் என்னை தலைகுனிய வைத்து விடாதே. இன்று மழை வராவிடில் அந்தத் தளிர் பாதிரியாரும் பொய் கூறிவிட்டார் என நினைத்து விட்டால் இந்த சரீரம் எடுத்து என்ன பயன்? மழையைத் தந்துவிடு . . . தந்துவிடு . . . தந்து விடு என உரக்கக் கூவிய வண்ணம் நெடுஞ்சாண் கிடையாக மேடையில் விழுந்து விட்டார். மக்கள் பதைபதைத்தனர்.

அக்கணத்திலே அண்டமே அதிரும்படியாக இடி முழக்கம் நிர்மலமான வானத்தில் கரிய மேகங்கள் கூடின. வானத்தை அளப்பது போல தென் திசையிலிருந்து வடதிசை வரை வெள்ளிக்கோடு போட்டது போல பளீரென மின்னல் வெட்டிச் சென்றது. வானம் பொத்துக் கொண்டது போல மழை கொட்ட ஆரம்பித்தது. மயங்கிக் கிடக்கும் பாதிரியாரின் கன்னத்திலே வீழ்ந்த மழைச் சாரல்கள் அவரது உதடுகளை நனைத்தன. அவரது நெஞ்சகத்தை நனைத்தது. உணர்வு பெற்றார். தேவனின் கருணையை எண்ணி வியந்தார். ஆடினார். ஓடினார். மக்கள் மத்தியில் சென்று கூத்தாடினார். விட்டு விட்டு மழை ஆதவன் உதிக்கும் வரை பெய்து கொண்டே இருந்தது.

அவரது கண்கள் அக்கூட்டத்தில் கள்ளமிலா ஒரு ஆத்மாவை தேடின. ஆம். . . அதோ அந்த சின்னஞ்சிறு குடை விரிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அத்திசை நோக்கி இருகை கூப்பினார். ஆலயத்தினுள் ஓடிச் சென்றார். தேவனின் பாதங்களை தம் கண்ணீரால் கழுவினார். பாதிரியாரின் தன்னலமற்ற பிரார்த்தனையும், நம்பிக்கையும் எந்த மகாசக்தியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அதே மகாசக்தி சுவாமிஜி அவர்களின் சேவையையும் ஏற்றுக்கொண்டு அருள் பாலித்த விந்தையை தமிழ்நாடே அறியும்.

22. நானா செய்கிறேன்?

குடிலைப் பார்த்து மகிழ்ந்த அன்பர்களும், சுவாமிஜியின் அளப்பரிய தொண்டினையும், அவரால் தோற்றுவிக்கப்பட்டு இமயமென நிமிர்ந்து நிற்கும் ஆஸ்ரமத்தைக் கண்டும், ஆயிரமாயிரம் மக்களும் சுவாமிஜிக்கு புகழாரம் சூட்டத் தவறவில்லை.

" பகவான் பரமஹம்ஸர் பேரருளால் குடிலின் வெள்ளிவிழா இனிதே முடிவுற்றது. குடில் சேவைக்கு சுமார் 20 வருட காலம் வெளிப்பிரயாணம் செய்து நிதி திரட்டிவந்ததற்கு ஓய்வு தருகின்றோம். கால் நூற்றாண்டில் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் குடில் சேவைக்கு வழங்கி இதை தமிழ்நாட்டின் அனாதை சிறுவர்களின் கேந்திரமாக ஆக்கிய தமிழக அரசு அதிகாரிகள், தனிப்பட்ட மக்கள், ஸ்தாபனங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் குருமகராஜின் அருள் உரியதாகப் பிரார்த்திக்கின்றோம்."

" குடில் அமைப்பின் இயற்கை அழகையும், துப்புரவையும், மலர்ச்செடிகளையும், பொன்னி நதிகரையையும் கண்டு மக்கள் பேரானந்தம் அடைந்து இதற்கு காரணமே நாம்தானென்று வானளாவ பாராட்டுகின்றனர். அவ்வாறு எம்மைப் பாராட்டுவது பொதுமக்களுக்கும், அன்பர்களுக்கும், பங்கு கொண்ட அதிகாரவர்க்கத்திற்கும், கடமையாக இருக்கலாம். ஆனால் நிலைமையையும் தெரிவித்துக் கொள்வது அவசியமாகின்றது."

" சுவாமி விவேகானந்தர் அமெரிக்க சுற்றுப்பிரயாணமெல்லாம் முடித்துக் கொண்டு இந்தியா திரும்புகின்றார். மேல் நாட்டில் கிடைத்த நிதியைக்கொண்டு பேலூரில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணஸரின் கோயிலையும் மடத்தையும் நிறுவினார். மடத்தின் திறப்புவிழா நடந்தது. அவ்விழாவிற்கு விவேகானந்தரின் தாயார் புவனேஸ்வரி மாதாவும் தமது தோழிகள் பலருடன் வந்திருந்தார். அவர் தம் குழுவினருடன் அழகான கட்டடங்களையும், தோட்டங்களையும், ஓடியாடிப் பார்த்து ஆனந்தப்பட்டு கொண்டிருந்தார். இதை எல்லாம் தூரத்திலிருந்து விவேகானந்தர் கவனித்துக் கொண்டிருந்தார். அன்னையை அழைத்தார். உன் மகன் இதையெல்லாம் செய்து முடித்துவிட்டான் என்று நீ கர்வம் அடைந்திருக்கிறாய். பரமஹம்ஸர் கருணை மட்டும் இல்லாதிருந்தால் உன்னுடைய மகனால் என்ன செய்திருக்க முடியும். ஆகையால் எல்லாம் உன்னுடைய மகனின் வேலை என்று கர்வப்படாதே. அனைத்தும் பகவானின் கருணையே" என்று தாய்க்கு எச்சரிக்கை செய்தாராம். சுவாமி விவேகானந்தரின் நிலையே இது என்றால் எம்முடைய நிலை என்ன?

" மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கய தேகிரீம்
யத் கிருபா தமகம் வந்தே பரமானந்த மாதவம்"

ஊமை வாய்ச் சாலக்காக பேசுவான். முடவன் மலையை தாண்டுவான். இதெல்லாம் யாருடைய கிருபையால் நடக்குமோ அந்த பரமானந்த

ஸ்வரூபியாகிய மாதவப் பெருமானை நமஸ்கரிக்கிறேன்.

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரே கூறுகிறார்:

“ ஈஸ்வரா உனது காரியத்தை நீயே செய்தருள்கிறாய். ஆனால் நான் செய்கிறேன்.'' என ஜனங்கள் கூறுகின்றனர்.

எனவே குடிலின் அனைத்துப் பெருமைகளுக்கும் பொறுப்பு அவரே. என்னுடையதல்ல,''

23. துருப்பிடித்து அழிவது மேலா? தேய்ந்து அழிவது மேலா?

தலைப்பில் கண்ட வினாவிற்கு சுவாமிஜி அவர்கள் கொடுத்துள்ள விளக்கம் மிகமிக அருமை. மனித சமுதாயம் எப்படி வாழ வேண்டும், பிரம்மசாரிகளும், துறவிகளும் எவ்வாறு தங்களது வாழ்க்கையை மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காக தியாகம் செய்யவேண்டும் என இங்கே குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஆயுதமோ அல்லது கருவியோ துருப்பிடித்து அழிந்து போவதை விட அதற்குற்ற பணியை செய்து செய்து தேய்ந்து தேய்ந்து இறுதியில் அவைகள் அழிவது மேலல்லவா?. இவ்வுடல் என்றாவது ஒரு நாள் அழிவது நிச்சயம். அதற்குள் இந்த உடலை, சந்தனக்கட்டையை தேய்ப்பது போல், உலகத்தின் மக்கள் ஊழியத்தில் தன்னை உரசிக் கொள்வதன்றோ பயன்தரத் தக்க செயலாகும். சந்தனத்தை தேய்க்கத் தேய்க்கத் தான் அதன் மணம் பரவுகிறது. மக்கள் குலம் அதை நுகர்ந்து ஆனந்தம் பெறுகிறது. சந்தனக் கட்டையை உரசாமல் போட்டு வைத்தால் அதன் மணத்தின் பயன் கிட்டாதல்லவா?

அதைப்போலவே நம்மை சந்தனமாக தேய்த்து மாந்தர்க்கு சேவை செய்து இறைவனடி அடைவதே சாலச் சிறந்ததாகும். அதனதன் பணியை செய்வதற்காகத்தான் தொழிற் கருவிகள் உருவாக்கப்படுகின்றன. அவைகளை முறையாக இயக்கும் போது மனித குலம் பயன்பெறத்தக்க சாதனங்களை உருவாக்கித் தருகின்றன. நாம் சேவை செய்யவில்லை என்றால் மனிதனாய் பிறந்ததின் பயன்தான் என்ன? அஃறிணை பொருட்களே ஆக்கபூர்வமாக உழைக்கும் போது உயரிய மனித ஜென்மம் எடுத்தவன் பிறர்க்கு உதவி செய்பவனாக இருக்க வேண்டாமா? மகாபுருஷர்களின் பெயர்களை பற்றிச் சொல்வதும், அவர்களை நினைப்பதும் எதற்காக?

அவர்கள் தம் உடலை மறந்து, உறக்கத்தை மறந்து, உலக நன்மைக்காக தங்களையே ஆகுதியாக தந்தார்கள். அதை என்றும் நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் உறங்கப் போகுமுன்னர் “ இன்று நான் இந்த உடலுக்காக எத்தனையோ காரியங்களை செய்தேனே. உலக

நன்மைக்காக, ஏழை எளியவர்கள் மேம்பாட்டிற்காக ஏதேனும் செய்தேனா? எவருடைய பசியையாவது தீர்த்து வைத்தேனா? நலிந்தோருடைய அழுத கண்ணீரை துடைக்க முயற்சி செய்தேனா? இவ்வகையில் நாட்டில் விவேகம் வாய்க்கப் பெற்ற அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஏற்கனவே இந்தக் குடில் நிலையத்தின் மூலம் இருந்து வரும் ஆஸ்திக்கும் இனிமேல் வந்து சேரும் ஆஸ்திகளும் ஆகிய அனைத்தும் பரமஹம்ஸருக்கே உரியவை. அவரை நாவார மனமாற வேண்டி தம்மை அர்ப்பணிக்கும் பிரம்மசாரிகள் சதா தம்மை சந்தனக் கட்டையாக நினைத்து செயல்பட வேண்டும். சேவைபுரிதல் வேண்டும். இந்நிலையத்தின் தேவைக்கானவற்றை பரமஹம்ஸரே பல ரூபங்களின் வாயிலாக அளிக்கிறார். அவைகளை ஒரு ரூபத்தின் வாயிலாக ஏற்கச் செய்கிறார். அனைத்தும் அவரது லீலாவினோதங்கள்.

அவரது ஏவலின்பேரில் வெளிப்பிரயாணம் செய்ய ஆஸ்ரமத்திலிருந்து செல்லும்போது அவரது மிகப்புனிதமான நாமாவளியை உச்சரித்துக் கொண்டு பல மக்களுடன் கலந்து கொள்ளப்படுகிறது. திரும்பி வரும்போது ஆங்காங்கே ஏற்பட்ட அனுபவபூர்வமாக அனுபவங்களை விருப்பு வெறுப்பின்றி சமநிலையில் ஏற்றுக் கொண்டு குருதேவரின் பொன்னடிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டு விடும். அவரது ஆக்ஞை எதுவோ அதை சிரமேற்கொண்டு தரித்திர நாராயண சேவை என்னும் வேள்வித் தீயில் எம் வாழ்வின் பலன் அர்ப்பணிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள நலிந்தோர் குழந்தைகளுக்கு இந்த ராமகிருஷ்ண குடில் ஒரு புனித யாத்திரை ஸ்தலமாக எதிர்காலத்தில் அமைவது உறுதி. ஆதி நாராயணனின் பொருளும் பொருந்த இணைந்தால், தரித்திர நாராயணர்களின் இருளும் இந்நிலையத்தின் மூலம் நீங்கட்டும்.

இந்நிலையம் எவ்வளவு தூரம் உயரவேண்டும் என்பது இறைவனின் இச்சையோ அந்தளவு உயரும். தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலிருந்து எவ்வளவு அனாதைக் குழந்தைகள் இந்நிலையத்தை நாடிவந்த போதிலும் அவர்கள் அனைவரையும் அரவணைத்து அடைக்கலம் கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்பதே எமது அவா. ஆயிரமாயிரம் தரித்திர நாராயணர்களுக்கு இடமளித்து அவர்கள் நல்வாழ்வு வாழ்வதை இந்த சரீரம் மறைவதற்குள் பார்த்து விட வேண்டும். இது விஷயத்தில் மஹாகுருதேவரின் அருளும் ஆசியும் துணையும் நிச்சயம் உண்டு என்பதில் தினையளவு சந்தேகமும்கூட இல்லை.

மற்றவர்களுக்கு இது நடைமுறையில் சாத்தியமா என மலைப்பாக இருக்கும். எமது அடிமனத்தின் ஆழத்தில் இத்தகைய தெய்வீகப் பேரவா குடிகொண்டுள்ளது. அது நடைபெறுவதற்குள் இச்சரீரம் மறைய நேரிட்டால் மறையட்டும். தோன்றிய எண்ணம் நாட்டில் நின்று நிலவும். காலத்தின் அளவு சரீரத்துக்கு மட்டும்தான். காரியங்கள் காலாந்திரத்தில் நடந்தேறிச் செல்லும்.

தனிப்பட்ட பிரமுகர்கள் ஒவ்வொரு தரித்திர நாராயணர்களை 'தத்து' எடுத்து இந்நிலையத்தில் படிக்க வைக்கலாம். இங்கு ' தத்து' என்றால் ஒரு சிறுவனுக்கு உணவு, உடை, கல்வி ஆகிய வருடாந்திர செலவை ஏற்பதாகும் என்பதே பொருள்.

தன் குழந்தையை நேசிப்பது இயற்கையின் தூண்டுதல். பிறர் குழந்தையை நேசிப்பது இறைவனின் தூண்டுதல். செல்வந்தர்களுக்கு இன்னொரு குழந்தை அதிகமாகப் பிறந்து விட்டால் நேசிப்பார்கள் அல்லவா? யாவற்றிற்கும் மனம்தான் காரணம். மனதிற்கு தன்னுடையது மாற்றானுடையது என்ற பேத உணர்வு இல்லை. மனிதன் பக்குவப்பட்டால் எல்லாம் சரியாய்விடும். பக்குவப்பட்ட மனிதனின் மனமும் பக்குவமடையும். தனவந்தர்கள் ஒரு குழந்தையை தத்து எடுப்பதின் மூலம் தங்களது இல்லத்தில் ' நாராயணனே' அந்தர்யாமியாக வாழ்ந்து வருகின்றான் என்ற மேலாம் பாவனையை பெற்று விடவேண்டும்.

குருமகராஜின் ஆசிகள் எதையும் சாதிக்கும்.

24. அன்னதானம்

இக்காலத்தில் உத்தமமான ஒரு ஆராதனை இருக்கிறது என்றால் அது யாது? ஏழ்மையாலும் வறுமையாலும் வேதனைப்பட்டு உழலும் ஏழை மனிதர்களை சிவத்தின் சொரூபமாக பார்த்து அன்னமளித்தலே ஆகும்.மேற்கண்ட கருத்தை சுவாமி விவேகானந்தர் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதே சாஸ்திரங்களின் முக்கியமான கோட்பாடாகும் என விவரித்து கூறியுள்ளார்.

பண்டிகை காலங்களிலும் கோவில்களிலும் ஏழை மக்களுக்கு ஏன் சாப்பாடு இடுகின்றனர்? அவ்வாறு அன்னமிடுவது சர்வ ஜீவராசிகளிடத்திலும் அந்தர்யாமியாய் விளங்குகிற ஈஸ்வரனுக்கு நிவேதானம் செய்வதேயாகும் என பகவான் ராமகிருஷ்ணர் பகருகின்றார்.

ஒரு சமயம் பேலூர்மடத்திற்கு சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த அந்தணப் பெருந்தகைகள் சிலர் வருகின்றனர். அவர்களின் வந்த நோக்கம் எதுவென சுவாமிகள் கேட்கின்றனர். அவர்கள் கூறியதாவது " சுவாமிஜி தங்களுடன் மதம், வேதம், சாஸ்திரங்கள் சம்மந்தப்பட்ட ஐயங்கள் சிலவற்றை தங்களிடம் பேசி தெளிவு பெறலாம் என வந்துள்ளோம்" என விடையளிக்கின்றனர்.

அவர்களின் நோக்கத்தை புரிந்து கொண்ட விவேகானந்த சுவாமிகள் அவர்களிடம், " ஐயன்மீர்!, நமது நாட்டிலுள்ள, கடையனான ஒரு மனிதனும் கூட கஞ்சிக்கு வழியின்றி கிடப்பதைக் கண்டு நான் சகியேன். அவனுக்கு அன்னமளிக்க முயல்வதுதான் நான் அறியும் மதம். ஏனையெல்லாம் பொய் மதம்

அல்லது போலி மதம்" என கண்களில் நீர் வழிந்தவண்ணம் கூறுகின்றார்.

மற்றோர் சமயத்தில் வேதாந்தம் பேச வந்த வேதாந்திகள் சிலரைப் பார்த்து, " அன்னம் இல்லாது மக்கள் அழுத வண்ணம் அலைகின்றனர். அவர்களின் கூக்குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா? வேதாந்தத்தை மூட்டை கட்டி வையுங்கள். பசித்த ஒருவனுக்கு ஒரு பிடி அரிசியாவது கொடுத்து சிறிதளவாவது அவனது பசியை போக்க முயற்சி செய்யுங்கள். முதலில் அவனது பசியை துடைத்துவிட்டு, அவனை தேற்றிவிட்டு வாருங்கள். வேதாந்தத்தைப் பற்றி வேண்டியவாறு விவாதிப்போம். வேதாந்தத்தின் முக்கிய கருத்தை, அதன் மைய சாரத்தை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். பலரது நன்மையை உத்தேசித்து தன்னுயிரை பரித்தியாகம் செய்ய வேண்டும். இதுவே வேதாந்தத்தின் சாரம்." என அவர்களிடம் கூறுகின்றார். இவ்வாறு கூறும் போதே அவரது நயனங்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னங்களை நனைத்தது.

அமெரிக்காவிலிருந்து விவேகானந்த சுவாமிகள் இந்தியாவுக்கு வந்தபோது, ராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதி அவர்களால் சுவாமிகள் வரவேற்கப்பட்டார். ராமேஸ்வரம் கோயிலில் கூடியிருந்த மக்களிடையே சுவாமிகள் உபன்யாசம் செய்தார்.

" விக்கிரகங்களை கடவுளாக போற்றி வணங்குவது போல, தரித்திர கோலத்தில் காட்சிதரும் மக்களையும் கடவுளாக பாராட்டி வணங்கி நிவேதனம் அளியுங்கள். இதுவே இக்காலத்தில் சிவபூஜையாகும்."

சுவாமிகளின் இவ்வுரையைக் கேட்ட மன்னரவர்கள் மனம் நெகிழ்ந்து ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்னமிட்டு வஸ்திரமும் கொடுத்தார்.

ஏழைகளுக்கு நீங்கள் என்ன கோரிக்கை விடுத்தாலும் அவையெல்லாம் அவர்கள் காதுகளிலே நுழையாது. எல்லாம் மண்ணோடு மண்ணாகிவிடும். ஆனால் நீங்கள் அவர்களுக்கு சாப்பாடு கொண்டு போய் கொடுத்தால் உங்களை தெய்வமாக அம்மக்கள் கொண்டாடுவார்கள். பசியை ஆற்றும் அன்னத்தின் சக்தி அளவிடற்கரியது என மகாத்மாஜி ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்வது குறித்து பேசியுள்ளார்.

கல்கத்தா மடத்தின் ஒருபக்கம் அன்னசத்திரம் ஒன்று நிறுவ வேண்டும். ஏற்படப் போகும் அன்ன சத்திரத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திரு. நாமம் வைக்கப்பட வேண்டும். அதற்கு தேவையான பொருள் தருமாறு வேண்டுகோள் விடுப்போம். வரும் வருவாய்க்கு தக்கவாறு சிறிய அளவில் ஆரம்பிப்போம். இதை நிர்வகிக்க ஆற்றல் வாய்ந்த பிரம்மசாரிகள் தயார் செய்யப்பட வேண்டும். அவர்கள் அன்னதானம் செய்ய தேவையான பொருட்களை எப்பாடுபட்டாயினும் யாசிப்பதின் மூலமாகவே சேகரித்து பணியை நடத்தும் முயற்சியுடையவர்களாக இருத்தல் வேண்டும். நாள் செல்லச் செல்ல சேவையின் மகத்துவம் அறிந்த மக்கள் தாங்களாகவே உதவி செய்வார்கள்.



1949 முதல் சுவாமிஜி
அவர்கள் வழிபட்ட
ஆஸ்ரமக் கோயில்

குடில் – ஆஸ்ரம
"அமைதி இல்லம்"
(1978)






குடில் – ஆஸ்ரமம் – 1949




திருச்சி – கோவை நெடுஞ்சாலையில் குடில் வளைவினைத் திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்களும் ஜஸ்டிஸ். எஸ். மகராஜன் அவர்களும் திறந்து வைக்கும் காட்சி



"பிரார்த்தனா மண்டபம்" குருதேவர் கருவறை.



புதுவை முன்னாள் ஆளுநர் மேதகு சீலம் அவர்களும் – அடிகளும்



வரவேற்பு மண்டபத்தில் புதுவை ஆளுநர் சீலம் – ஜஸ்டிஸ் மகாராஜன் அவர்களுடன் – சுவாமிஜி உரையாடும் காட்சி



பிரார்த்தனை மண்டபம்

சுயநலமற்ற சேவை தனக்கு தேவையானவற்றை தானே தேடிக்கொள்ளும். நற்கருமங்கள் செய்பவன் ஒருபோதும் துன்பப்படுவதில்லை. அன்ன சத்திரமானது உணவு கொடுப்போருடைய ஆரவாரமும், உண்பவர்களின் ஒலியும் ஆகிய இவற்றால் இரவு பகல் முழங்கிக் கொண்டிருக்க வேண்டும். அன்னத்திலிருந்து வடித்த கஞ்சியானது, இக்கங்கா நதியின் உள்ளே ஓடி அதன் நீரை வெண்மையாக்க வேண்டும். அத்தகைய அன்னதான சத்திரம் ஆரம்பித்து நடப்பதைக் காணும் போதுதான் எனது உள்ளத்திற்கு ஆறுதல் உண்டாகும். இது சுவாமி விவேகானந்தர் அன்னசத்திரம் ஏற்படுத்துவது குறித்து சக பிரம்மசாரிகளுடன் கலந்து பேசுவதையே குறிப்பிடுவதாகும்.

" விவேகானந்த சுவாமிகள் அவ்வப்போது அன்னதானம் பற்றியே குறிப்பிடுவார்கள். என்ன காரணம்? அன்னமில்லாத வயிறு அவனை மிருகமாக்கிவிடும். அவனுக்கு அன்னம் தான் தெய்வம். எனவேதான் குடிலில் முதலில் அன்னதானம் பின்புதான் அறிவுதானம். அதன்பிறகே ஆத்ம தானம்" என குடில் சுவாமிஜி அவர்கள் இவ்வாறாக தானத்தை வரிசைப்படுத்திக் கூறியுள்ளார்கள்.

1. மாரியெனப் பொழிந்த பஞ்சாயத்து நன்கொடை

மேற்கொள்ளப்பட்ட செயலில் தூய்மையும், புனிதமும் காணப்பெறின் அச்செயலில் வெற்றி நிச்சயம். சுவாமிஜி அவர்கள் மேற்கொண்ட சேவை மகத்தான ஒன்று அல்லவா? வாழ்க்கையில் ஏதுமின்றி தவிக்கும் அனாதைச் சிறார்களைக் காப்பாற்றி கல்வி தந்து நல்ல குடிமகனாக, அதுவும் அனைத்து வசதிகளையும், இலவசமாகவே செய்து தந்து நாட்டில் உலவவிடுவது என்றால் அது லேசான காரியமா? எதிர்ப்படும் இன்னல்கள் சோதனைகள் எத்தனை எத்தனை. சுவாமிஜியின் சேவையில் காணப்படும் தன்னலமற்ற பாங்கு, அக் குழந்தைகளை ஆண்டவனின் குழந்தைகள் என மனப்பூர்வமாக ஏற்று, தம் வாழ்வை அவர்களது வாழ்க்கைக்காகவே தியாகம் செய்த தியாக சீலரான சுவாமிஜியின் செயலில் தூய்மையும் புனிதமும் இருப்பதினால் அன்றோ, அவரது சேவை நாளுக்கு நாள் ஏறுமுகமாகவே காணப்படுகின்றது. அவரது சேவையின் இடையிடையே பிரச்சனைகள் தலை தூக்கும். அடுத்த கணமே ஆதவனைக் கண்டு கரையும் பனிபோல தலைதூக்கிய பிரச்சனைகள் மாயமாய் மறைந்து போகும். எதிர்பாராமல் ஒருவர் வருவார். பிரச்சனைகள் விலகும். அனைத்தும் அவன் செயல் என சுவாமிஜி மறுமொழி கூறுவார்.

குருதேவருக்கு மிகவும் உகந்த தரித்திர நாராயண சேவையில் ஈடுபட்டுள்ள சுவாமிஜியின் கைங்கரியத்தில் தொய்வு ஏற்பட ஆண்டவன் விட்டுவிடுவாரா? புனித சேவைக்குத் தேவையான அனைத்தும் அந்தந்த காலங்களில் நிறைவேற்றி வைக்க அதற்குரிய புண்ணிய ஆத்மாக்களை பகவான் அனுப்பி வைப்பார். சத்தியத்தின் உண்மையும் இதுவேயாகும். சத்திய நெறி காப்பவர்களுக்கு சத்தியமே உறுதுணையாக இருக்கும்.

குடிலின் பேரியக்கத்தில் தொண்டாற்ற அன்று ஒருவர் குடிலின் வாயிற்படியில் காலடி வைத்து வந்ததும் திருவருளின் செயலன்றோ. வந்தவர் ஒரு ஆன்மிகச் செம்மல். தர்ம காரியங்களில் பற்றும் ஈடுபாடும் கொண்டவர். டாம்பீகமில்லாத எளிய மனிதர். மேலும் ஓர் அரசு அதிகாரி அவர். மெத்தவும் படித்தவர். படித்தவர் என்ற கர்வம் சிறிதுமின்றி அடக்கமான பண்பாடு கொண்டவர்.

அவர்தான் 1953 – 54 ம் ஆண்டில் ஸ்தல ஸ்தாபன ரீஜினல் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த திருவாளர் T.M. ராமசாமி M.A (Contab) ஆவார். அவருடன் சுவாமிஜி சத் விஷயங்கள் குறித்தும், தரும நெறிகுறித்தும், குடில் சேவையைப் பற்றியும் விரிவாக உரை நிகழ்த்தினார். வந்த மெய்யன்பர் மனம் நெகிழ்ந்து போனார். தாய் தந்தையரை இழந்த அனாதைச் சிறுவர்களை தெய்வாம்சமாகக் கருதி தம் வாழ்வையே அர்ப்பணித்த சுவாமிஜி விஸ்வரூபம் எடுத்து பேரருள் பெற்ற ஞானியாக காட்சி தந்தார். அவரது சேவையைப் போற்றி

வணங்கி எழுந்தார். அடிக்கடி வரலானார். சுவாமிஜியுடன் பேசுவார். பின் புறப்பட்டு போவார்.

என்றும்போல் ஒரு நாளில் குடிலுக்கு வருகை புரிந்தார் அவர். சுவாமிஜி அன்போடு வரவேற்றார். குடில் பணிக்கு முதன்முதலாக தம் காணிக்கையாக ரூபாய் 100/= சுவாமிஜியிடம் கொடுத்தார். " தங்களிடம் ஒன்று கூற விரும்புகிறேன்" என்றார். "தாராளமாகக் கூறுங்கள்" என்றார் சுவாமிஜி.

" சுவாமி எனக்கு மிகவும் நெருக்கமாக உள்ள 60 பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து பஞ்சாயத்திற்கு ரூ 100 /= வீதம் ஆறாயிரம் ரூபாய்க்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். எனது மேலதிகாரியிடம் அனுமதி பெற்று விரைவில் தொகையுடன் வந்து தங்களை சந்திக்கிறேன்." என கூறிச்சென்றார்.

வெகு விரைவில் அவர் தமது மேலதிகாரியான திருவாளர் J. சிவானந்தம் I.A.S அவர்களையும் குடிலுக்கு அழைத்து வந்தார். சுவாமிஜியிடம் அறிமுகப்படுத்தினார். சுவாமிஜியும் அவரிடம் குடில் சேவையைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். திரு T.M. ராமசாமி அவர்களும் தமது மேலதிகாரியிடம், "குடில் சேவைக்கு பஞ்சாயத்துக்களின் நன்கொடை மிக்க உதவியாக இருக்கும்." என்றார். அதற்கு அவரது மேலதிகாரி " குடில் என்பது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம் அல்ல. பிள்ளைகளோ, பள்ளியோ,விடுதியோ எதுவுமில்லை. எனக்கும் சுவாமிஜியைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. இன்று பார்த்ததுதான். இந்நிலையில் நான் என்ன செய்வது? எல்லாம் சரியாக நடக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நல்ல காரியத்திற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன்." என நெற்றி நிறைய திருநீறும் கழுத்தில் ருத்திராக்ஷ மாலையும் அணிந்த அந்த I.A.S அதிகாரி உள்ளன்போடு கூறினார். அதற்கு T.M. ராமசாமி அவர்கள் " ஏழைப்பிள்ளைகள் சேருவார்கள். பள்ளியும், விடுதியும் கட்ட எதிர்கால திட்டம் சுவாமிஜியிடம் உள்ளது. தேவைப்படுவது நிதிவசதி ஒன்றுதான்.

குடில் சுவாமிஜியைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். எக்காரியத்தையும் சாதிக்கும் திறன் படைத்தவர் அவர் என்பதை நான் நன்கு அறிவேன். நாம் நினைத்ததற்கும் மேலாக காரியங்கள் நடக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை" என மேல்நாட்டில் பட்டம் பெற்ற குடிலின் அந்த மெய்யன்பர் கூறியதை உயர்திரு. சிவானந்தம் I.A.S அவர்கள் அப்படியே மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார்.

அன்றைய தினம் குடில் சேவைக்கு உயர்திரு நங்கவரம் பண்ணையாரை கோடி காட்டிய திருவருள் இன்று T.M . ராமசாமி அவர்கள் மூலம் உயர்திரு. சிவானந்தம் I.A.S அவர்களை சுவாமிஜி அவர்களின் தொண்டிற்கு உறுதுணையாக இருக்க வைத்தது.

அந்தத் திருவருளின் இயக்கம் இயங்கத்தொடங்கிவிட்டது. பஞ்சாயத்து நன்கொடைகள் வரத்தொடங்கின. இதற்குமூல காரணமாக இருந்து பாடுபட்ட திரு. ராமசாமி பின்னர் மதுரை முனிசிபல் கமிஷனராகவும், சென்னை ராஜ்ய

ஜாயிண்ட் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டராகவும் இருந்த சமயங்களில் எல்லாம் குடிலுக்கு வருவார். சுவாமிஜியை சந்தித்து செல்வார். தாம் ஆரம்பித்து வைத்தது பலமடங்கு பல்கிப்பெருகி வருவதைக்கண்டு எண்ணி, எண்ணி வியந்தார்.

திரு T.M. ராமசாமி அவர்கள் ஆரம்பித்து வைத்த பஞ்சாயத்து நன்கொடைகள் மூலம் கிடைத்த நிதியிலிருந்துதான் குடிலில் முதன்முதலில் குருகுலக் கட்டடம் கட்டுவதற்காக மேல்புறமுள்ள தோப்பு விலைக்கு வாங்கப்பட்டது. நங்கவரம் பண்ணையார் அவர்கள் வசூலித்துக் கொடுத்த நிதியிலிருந்துதான் குருகுலக் கட்டடம் கட்டப் பெற்றது. அனாதைச் சிறுவர்களும் சிறுகச் சிறுகச் சேர்த்தனர். திருவருளின் இயக்கம் இனியாரை குடிலுக்கு காட்டப் போகிறதோ? பொறுத்திருந்து பார்ப்போம்.

2. பெருமை மிக்க பெருந்தலைவர் காமராஜ்

1955 ம் ஆண்டில் முதன்முதலாக குடிலில் குருகுலக் கட்டடம் கட்டப்பெற்றது. கட்டடத்திறப்பு விழாவிற்கு அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு காமராஜரை அழைப்பதாக சுவாமிஜி தீர்மானித்தார். குடில் சேவையைக் குறித்த விரிவான விளக்கம் ஒன்று முதலமைச்சருக்குஅனுப்பி வைக்கப்பட்டது.

குடில் சேவையைக் குறித்து முழுமையாக தெரிந்து கொண்ட காமராஜர் அவர்கள் மகிழ்ந்தார்கள். குருகுலக் கட்டடத் திறப்புவிழாவிற்கு வருகை தர ஒப்புக் கொண்டார். சிறப்பாக கட்டடத் திறப்புவிழா நடந்தேறியது. திரு. காமராஜர் அவர்கள் சென்னை திரும்புவதற்கு வழியனுப்பி வைக்க சுவாமிஜி அவர்கள் காமராஜரை சந்தித்தார்.

திருவருளின் இயக்கம் உயர்திரு. காமராஜரை குடிலோடு இணைக்கும் செயலின் வித்து அப்போது ஊன்றப்பட்டு விட்டது.

மனம் பூரித்த காமராஜர் அவர்கள் சுவாமிஜியிடம் அன்போடு அளவளாவினார். பின்பு அவர் தம் குழுவினருடன் புறப்பட்டு போயிருக்கலாம். ஆனால் பகவான் பரமஹம்ஸரின் திருவருள் காமராஜர் அவர்களைப் பேச வைத்தது.

" சுவாமிஜி நீங்கள் சென்னைக்கு வந்தால் என்னை வந்து பாருங்கள்." என காமராஜர் அவர்கள் சுவாமிஜியிடம் கூற அதற்கு சுவாமிஜி அவர்கள், " திருவருள் விருப்பம் அதுவாயின் அவசியம் தங்களை சந்திக்கிறேன்." என காமராஜர் அவர்களிடம் மறுமொழி கூறினார்.

ஒன்றுபட்ட இரு உள்ளங்கள் விரைவில் சந்தித்து பேசும் காலம் வந்தது. சுவாமிஜி சென்னை பிரயாணத்திற்கு தயாரானார். சென்னை சென்றார்.

கோட்டைக்குச் சென்றார். திரு. காமராஜர் அவர்களை சந்தித்து பேசினார். "குடில் சேவைக்கு தாம் செய்ய வேண்டியது ஏதாவது இருக்கிறதா? எனக் கேட்டார். அதற்கு சுவாமிஜி , " பஞ்சாயத்து நன்கொடைகளோடு, தேவஸ்தான நன்கொடைகளும் கிடைத்தால் சேவைக்கு உதவியாக இருக்கும்." என்றார்.

இதைக் கேட்டவுடன் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அன்று ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருந்த திரு. ராமசாமி படையாச்சி அவர்களிடம் போன் மூலம் தகவல் சொன்னதின் பேரில் சென்னை ராஜ்யத்திலுள்ள தேவஸ்தானங்களும், நகரசபைகளும் குடிலுக்கு வருடாந்திர நன்கொடை வழங்கலாமென அதிகாரபூர்வ ஆணையைப் பிறப்பித்தார்கள். பஞ்சாயத்து அதிகாரிகள், யூனியன் சேர்மென்கள், நகரசபை கமிஷனர்கள், கலெக்டர்கள் ஆகிய அனைத்து அதிகாரிகளும் குடில்சேவையில் பங்கேற்று நன்கொடை வசூல் கைங்கர்யத்தில் பணியாற்றினார்கள்.

குடிலின் ஆரம்ப காலத்திலிருந்தே ஸ்தல ஸ்தாபன இலாகாவும் ரெவின்யூ இலாகாவும் தான் குடில் சேவைக்கு பலமிக்க அஸ்திவாரமாய் இருந்து வந்திருக்கிறது. எளிய மனிதராக, மக்கள் சேவையே ஆண்டவனுக்கு செய்யும் வந்தனை, வழிபாடுகள் என தூயமனத்துடன், கடமை வீரராக கருணை உணர்வோடு , அரசியல் வாழ்வில் நானிலம் போற்றும் துறவி வேந்தனாக பவனி வந்தார் உயர்திரு. காமராஜர். அப்பழுக்கற்ற தூயபிரம்மசாரியாக மக்கள் துயர் துடைக்க வந்த ஆபத்பாந்தவனாக விளங்கி வந்த காமராஜரை தரித்திர நாராயண சேவையே ஈசனுக்கு செய்யும் மிகப்பெரிய தொண்டு என துறவு வாழ்க்கையில் ஈடுபட்டு செயலாற்றி வந்த குடில் சுவாமிஜியின் தன்னலமற்ற தொண்டு கவர்ந்தது இயற்கை தானன்றோ? இனம் இனத்தை கண்டு கொண்டதில் ஆச்சரியமில்லை.

சுவாமிஜியை பார்த்த மாத்திரத்திலேயே, " இவர் ஒரு மகத்தான மனிதர்" என தெள்ளத் தெளிவான ஓர் சித்திரம் பெருந்தலைவர் இதயத்திலே பதிந்து விட்டது. இவரது தொண்டிற்கு உறுதுணையாக இருப்பதே தலையாய பணி என்ற முடிவிற்கு வரலானார் உயர்திரு. காமராஜர் அவர்கள். அதன் காரணமாகவே பஞ்சாயத்துக்கள், நகரசபைகள், தேவஸ்தானங்கள் குடிலுக்கு வருடாந்திர நன்கொடையை அளிக்கலாம் என சிறப்பாணை ஒன்று பிறப்பித்தார்.

நாட்டின் ஆதரவற்ற மக்களுக்கு வாழ்வளிப்பது அரசு ஆற்ற வேண்டிய பணி. அதை துறவி ஒருவர் ஏற்க முன் வந்திருப்பது தமிழ்நாட்டின் பாக்கியம் என குடில் சுவாமிஜியை வெகுவாகப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்.

ஒரு மகத்தான மனிதர் இன்னொரு மகத்தான மனிதலர புரிந்து கொண்டது குடில் வரலாற்றிலே குறிப்பிடத் தக்க அம்சமாகும். காமராஜர் அவர்களின் நினைவு என்றும் பசுமையாக குடில் மண்ணிலே இருந்து கொண்டே இருக்கும்.

5. தரித்திர நாராயணர் ஐவர்

சுவாமிஜி அவர்களின் ஆரம்பகால வாழ்க்கை கெம்பநாயக்கன்பாளையத்தில் நடந்து வந்ததை சற்று நினைவு கூர்தல் வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்போது அவர் 20 வயது இளைஞராக சிறந்த காந்தீயவாதியாக, காந்தீய இயக்கங்களில் பெரும்பங்கு பெற்ற காந்தீய தொண்டராக, கிராமத்து படிப்பறிவே இல்லாத ஏழை மக்களின் துயர் தீர்க்கும் தொண்டனாக, ஏழை எளிய மக்களின் நோயை தீர்க்கும் நாட்டு மருத்துவராக, மதுப்பழக்கத்தை ஒழிக்கும் பணியில் தீவிர ஈடுபாடு கொண்ட வீராவேசமிக்க இளைஞராக இருந்து வந்தார்.

பொது சேவையே நாட்டுக்கு நல்லது என்ற எண்ணத்தில் பொதுநல சேவை செய்து வந்தார். ஆனால் அனைத்துப் பணிகளிலும் அவரது உள்ளத்தை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டிருந்தது, "ஹரிஜன சேவை" மட்டுமே. அந்நாளில் ஹரிஜனங்கள் புழுவிற்கும் கீழாக மதிக்கப்பட்டனர். அவர்களும் நம்மவர்களே என்ற எண்ணத்தை மக்கள் மனதிலே பதித்து வந்தனர். தம் வாழ்வின் லட்சியம் ஹரிஜனங்களை மேம்பாடடையச் செய்வதே என்ற உறுதியில் இருந்தார்.

ஆனால் பிற்காலத்தில் பகவான் பரமஹம்ஸரால் ஈர்க்கப்பட்டு திருப்பராய்த்துறையில் ஆஸ்ரமம் ஒன்றை அமைத்து வாழும் வேலையில், பரமஹம்ஸருக்கு பிரியமான அனாதைகளை ரட்சிப்பது என்ற நிலைக்கு அவரது மனம் சென்றுவிட்டது. ஹரிஜனங்களுக்கு மட்டுமே சேவை செய்வது என்ற எண்ணம் மாறி அனாதைகளுக்கும் சேவை செய்வது என்ற நிலைக்கு வந்தார். அனாதை மக்கள் சேவையில் ஹரிஜனங்களும் அடக்கம் என்ற எண்ணம் அவருள் உதயமாயிற்று.

இவரது தனித் தவ நிலை 1954 ம் ஆண்டில் முடிவுற்றது. அந்த ஆண்டிலேயே அனாதை மக்கள் சேவையும் துவக்கப்பட்டது. 5 அனாதைச் சிறுவர்கள் குடிலில் சேர்க்கப்பட்டனர். அப்போது குடிலில் பள்ளிக்கூடம் இல்லையாதலால் அருகிலுள்ள பெருகமணி அரசு ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப் பட்டனர்.

காலம் காலமாக நம் முன்னோர்கள் 'பஞ்ச (ஐந்து)' என்ற எண்ணிக்கை முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.

பஞ்ச பாண்டவர்கள்	ஐவர்
பஞ்ச அமிர்தம்	ஐந்து
பஞ்ச உலோகங்கள்	ஐந்து
பஞ்ச பூதங்கள்	ஐந்து
பஞ்ச அக்ஷரங்கள்	ஐந்து

குடிலில் ஒரே நாளில் ஐந்து அனாதைச்சிறுவர்கள் சேர்ந்தனர். குடிலின் பணிகள் அனைத்தும் வெகு சிறப்பாக பரமஹம்ஸர் அருளால் நடக்கும் என்பதை கோடிட்டு காட்டத்தானோ என்னவோ ஒரே நாளில் ஐந்து தரித்திர நாராயணர்கள் குடிலில் காலடி எடுத்து வைத்தனர்.

இதுவும் இறைவன் திருவுளம் என மன மகிழ்வோடு அந்தச்சிறுவர்களை குருதேவர் ஆலயத்தின் முன் நிறுத்தி அவர்களை பகவானுக்கே அர்ப்பணம் செய்தார் சுவாமிஜி. போகப்போக அதே ஆண்டிற்குள் 23 சிறுவர்கள் சேர்ந்தனர்.

இறைவன் திருவருள் குடில்சேவைக்காக நங்கவரம் பண்ணையார் அவர்களையும், திரு. T.M. ராமசாமி M.A (Contab) அவர்களையும், திரு J. சிவானந்தம் I.A.S அவர்களையும் மாண்புமிகு காமராஜ் அவர்களையும் காண்பித்துக் கொடுத்தது போல இப்போது இவரை " மலையென நம்பலாம், இவர் சேவை குடிலுக்கு தேவை " என ஒருவரை சுட்டிக்காட்டியது.

இவரால் குடிலில் என்னென்ன சம்பவங்கள் நிகழ்ந்தன, குடிலின் நிலை எவ்வாறு வானளாவ உயர்ந்தது என்பதை அடுத்துப் பார்ப்போம்.

4. குருதேவரின் குடிலுக்கு குபேரன்அடிபணிந்தான்

மிகக் குறுகிய காலத்திலே குடிலுக்கு இத்தகைய மாபெரும் வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது? பலரால் எழுப்பப்பட்ட வினா இது. சுவாமிஜியைக் கேட்டால், " எல்லாம் அவன் திருவருள்." என ஒரு வார்த்தையில் கூறி முடித்துக்கொள்வார்.

மேல் கண்ட வினாவிற்கு சுவாமி விவேகானந்தரின் அற்புதமான விளக்கம் ஒன்றை விடையாகக் கொள்ளலாம்.

" உலகையே வெல்லத்தக்க சக்தியை நம்முள் உருவாக்குவது பிரம்மச்சர்யம் ஒன்றே. ஐம்புலன்களையும் தன்வயப்படுத்தி தவநிலையில் ஈடுபட்டு, தன்னலமற்ற சேவையில் எந்த ஜீவாத்மா ஈடுபடுகிறதோ, அந்தப் பரமபுருஷனுக்கு சித்திகள் பலவும் கிட்டும். ஞாலத்தை வளைக்க வல்ல பேராற்றல் வந்தடையும். நினைத்த காரியங்கள் வெற்றியாகவே முடியும்."

சுவாமி விவேகானந்தரால் மேலே கூறப்பட்ட தன்மைகள் அனைத்தையும் ஒருங்கே தம்முள் கொண்டவராக சுவாமிஜி அவர்கள் இருந்ததின் காரணமாகவே, அனைவரும் பாராட்டும் வண்ணம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பேரருள் பெற்ற இல்லமாக ஸ்ரீராமகிருஷ்ண குடில் உன்னத வளர்ச்சியைப் பெற்றது.

இதற்கேற்ப சுவாமிஜி அவர்கள் குடில் சேவையின் வசூலுக்கு சென்றவிடம் எல்லாம் சிறப்பான வரவேற்பு கிட்டியது. நன்கொடைகள் மளமளவெனக் குவிந்தன. நன்கொடைகளை வாரி வழங்கிய அன்பர்கள் குடில் சுவாமிஜியை ஒரு ஸ்தாபனத்தின் தலைவராக கண்டார்களில்லை. வணங்கத்தக்க, பாதபூஜை

செய்யத்தக்க திருவருள் குடிகொண்ட ஒரு சிவநேசச் செல்வராகவே கண்டனர். தங்களால் இயன்ற தொகையை அகமும் புறமும் மலர சுவாமிஜிக்கு பாத காணிக்கையாகத் தந்தனர்.

செட்டி நாட்டு சீமான்களை சந்திக்க வாரியார் சுவாமிகளுடன் குடில் சுவாமிஜியும் செல்வார். தூய வெண்மையான கதராடை அணிந்து, நெற்றியிலே நீறும் சந்தனமும் அணிந்து வரும் குடில் சுவாமிஜியின் தோற்றம் காண்போரை கவர்ந்திழுக்கும். பக்திபரவசத்தில் ஆழ்த்தும். எளிய உடையும் எளிய தோற்றமும், கள்ளமிலாப் புன்சிரிப்பும், ஒளிபொருந்திய கண்களும் காண்பவரை மெய் மறக்கச் செய்துவிடும். உடன்வரும் வாரியார்சுவாமிகளை வர்ணிக்க வார்த்தைகள்தான் ஏது? நாவிற்கு சக்திதான் ஏது?

உடல் முழுதும் நீறணிந்தும், கழுத்திலும் மார்பிலும் ருத்ராட்ச மாலைகள் அலங்கரிக்கவும், நவமணிமாலைகள் மார்பில் புரளவும், வெள்ளி சம்புடத்தில் சிறு சிவலிங்கம் இணைக்கப்பட்டு அவரது இதயகமலத்தில் அசைந்தாட, ஆன்றோர்கள் பெரும்பேறு பெற்றோர் என மகிழ்ந்த வண்ணம் கயிலை வாசனே பூமிக்கு வந்துவிட்டான் என மகிழ்ந்தனர் மக்கள். தெய்வபக்தி நிறைந்த செட்டி நாட்டு மக்கள் இதயத்திலே நீங்கா இடம் பிடித்தவர்தான் வாரியார் சுவாமிகள்.

பார்க்கும் செட்டி நாட்டு தனவந்தர்களிடம் வாரியார் சுவாமிகள் குடிலைப் பற்றியும், அனாதை சிறார்கள் சேவை பற்றியும், அச்சிறார்களை காப்பாற்றும் குடில் சுவாமிகளைப் பற்றியும் கூறி சுற்றி நின்ற அப்பெருமக்களை அர்த்தம் நிறைந்த பார்வையால் பார்ப்பார். அம்மக்கள் வாரியார் சுவாமிகளின் எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்டு வாரியார் சுவாமிகள் கூறும் தொகைக்கு காசோலை எழுதி தந்துவிடுவார்கள்.

இவ்விதமாக வாரியார் சுவாமிகளுடன் செட்டிநாடு முழுதும் நன்கொடை வசூலுக்கான யாத்திரை நடக்கும். அந்தந்த பகுதிக்கென குறிப்பிட்ட நாட்கள் வரை வசூல் நடக்கும். பின் குடில் சுவாமிகள் ஆஸ்ரமத்திற்கு வந்து சேருவார்கள்.

ஒவ்வொரு முறையும் நன்கொடைக்கான யாத்திரை சென்று வந்ததும், குருதேவரின் ஆலயத்திற்கு எதிரே அமர்வார். கண்மூடி தியானிப்பார். யாத்திரையின் போது நடந்த சம்பவங்கள் அவரது இதய கமலத்திலே ஒன்றன்பின் ஒன்றாக அலையென எழும்பும். குடில் சேவையின் நிமித்தம் பரமஹம்ஸர் எவ்வாறெல்லாம் தனம், மனம் படைத்த தனிகர்களிடம் விளையாடி இருக்கிறார் என்பது நினைவிற்கு வரும். அவரின் அருளை நினைத்து மெய் மறப்பார். கண்களில் நீர் சுரக்கும். "சர்வேஸ்ரா எல்லாம் உன் இச்சை" எனக் கூறி எழுவார்.

இவ்வாறாக குடில்சேவைக்கு லட்சம் லட்சமாக பொருள் குவிந்தன. இவற்றையெல்லாம் காணுமிடத்து செல்வத்திற்கே அதிபதியான குபேரன் கொஞ்சம் கொஞ்சமாக, குடிலையே தனது வாசஸ்தலமாக்கிக் கொள்ள வந்து

கொண்டிருந்தான் என்று கூறுவதிலும் ஒரு உண்மையிருப்பதை அறிந்து கொள்ளலாம்.

5. லாரியில் வந்த பொருட்கள்

அப்போதெல்லாம் குடிலின பொருளாதார நிலை அப்போதைக்கப்போது கிடைக்கும் நன்கொடைகளைச் சார்ந்தே இருந்து வந்தது. எதிர்பாராத நெருக்கடிகளும் சில நேரங்களில் தோன்றும். தோன்றிய வேகத்திலே மறைந்து விடுவதும் உண்டு குருதேவரின் அருளால்.

ஒரு நாள் பிற்பகல் வேளையில் குடிலுக்கு முன்பாக ஒரு லாரி வந்து நின்றது. டிரைவர் வண்டியை விட்டு கீழிறங்கி வந்து, " ஐயா லாரியில் சாமான்கள் வந்திருக்கின்றன. இறக்கிக் கொள்ளுங்கள்." என்றார்.

அவ்வேளையில்தான் பஞ்சாயத்து நன்கொடைகளும், வாரியார் சுவாமிகளின் நிதி வசூலும், கலெக்டர் ஐயாவின் கலைநிகழ்ச்சி வசூலும் சிறிது சிறிதாக வந்து கொண்டிருந்தது. பல கட்டடங்கள் குடிலில் உருவாகி வந்த நேரம் அது. ஒரு லாரி நிறைய பொருள் வரக்கூடிய நிலையில் குடிலின் பொருளாதாரம் இல்லை.எனவே வேறெங்கோ போகவேண்டிய பொருட்கள் தவறாக குடிலுக்கு வந்துவிட்டது என தீர்மானித்து விட்டார் சுவாமிஜி.

டிரைவரைக் கூப்பிட்டு, " அப்பா, இப்பொருட்கள் குடிலுக்காக வந்திருக்காது. கிழக்கே சற்று தூரத்தில் ஒரு ஆஸ்ரமம் இருக்கிறது அங்கு கொண்டு செல்" என்றார் சுவாமிகள். ஆனால் டிரைவரோ விடாப்பிடியாக வந்த சாமான்கள் குடிலுக்குத்தான். இறக்கிக் கொள்ளுங்கள் என பலமுறை கூறினார்.

சுவாமிஜி அவர்கள் டிரைவரிடம், " அப்பா. . குடிலுக்காக இவைகளை அனுப்பியது யார்?" எனக் கேட்டார். குடிலுக்கு இப்பொருட்களைக் கொண்டு செல் என கலெக்டர் மலையப்பன் ஐயா அவர்கள் சொன்னதாக டிரைவர் கூறி முடித்தார்.

அதன் பின்னர்தான் பொருட்கள் வந்தது குடிலுக்குத்தான் என்ற முடிவிற்கு வந்தார் சுவாமிஜி அவர்கள். பொருட்கள் இறக்கப்பட்டன. 40 மூட்டை அரிசி ஐந்து பேல் துணி, நான்கு பீப்பரய் பால்பவுடர் ஆகியவை இருந்தன. சுவாமிஜிக்கோ ஆச்சரியமான ஆச்சரியம். திடீரென எதிர்பாராமல் இவ்வளவு பொருள்களையும் கலெக்டர் ஐயா அவர்கள் எவ்வாறு அனுப்பினார்? என பலவாறாக யோசித்தும் சுவாமிஜிக்கு பொருட்கள் வந்த மர்மம் விளங்கவில்லை. உடனடியாக கலெக்டர் மலையப்ப ஐயாவை சந்தித்து கேட்க விரும்பினார் சுவாமிஜி அவர்கள். ஆனால் உடனடியாக திருச்சி சென்று கலெக்டரை சந்திக்க முடியவில்லை. முக்கியமான குடில்பணியை கவனிக்க வேண்டியிருந்ததால் சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரமத்திலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை. எனவே

ஒரு வாரம் கழித்து கலெக்டரை சந்திக்கலாம் எனத் திட்டமிட்டார்.

ஒரு வாரம் கழிந்த பின் சுவாமிஜி திருச்சி சென்றார். கலெக்டர் பங்களாவில் மலையப்ப ஐயாவை சந்தித்தார். கலெக்டருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. குதூகலத்துடன் குடில்சுவாமிகளுக்கு வரவேற்பளித்தார். சுவாமிஜியின் உடல்நிலை குறித்தும் குடில் குழந்தைகள் பற்றியும் குடில் பணிகள் செவ்வனேநடை பெறுகின்றதா? என்றெல்லாம் விசாரித்தார்.

கலெக்டரிடம் ஒருவாறாக பேசிமுடித்த பின் சுவாமிஜியே ஒரு லாரி நிறைய பொருட்கள் குடிலில் வந்திறங்கியதைக் குறிப்பிட்டார். அதைக் கேட்ட கலெக்டர் பலமாக சிரித்தார். "ஓ அதையா கேட்கிறீர்கள் சுவாமி. ஆண்டவனாகப் பார்த்து குடில் குழந்தைகளுக்காக அனுப்பப்பட்டது" என்றார். " அதெப்படி ஐயா" எனக் கேட்டார் சுவாமிஜி. கலெக்டர் கூறியது, " சென்ற வாரம் பெரும்புயல் புதுக்கோட்டை ஏரியாவை பலமாகத் தாக்கியதால், ஏம்பல் பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டது. வீடு இழந்து பொருள் இழந்து ஆயிரக்கணக்கான மக்கள் தவித்தனர். புயல் நிவாரணத்திற்காக அரசாங்கம் லாரிலாரியாக உணவுப் பொருட்களையும், துணிமணிகளையும் அனுப்பி வைத்தது. தேவைக்கு அதிகமாகவே பொருட்கள் வந்தன. எனவே ஒரு லாரியை குடிலுக்கு திருப்பி விட்டேன். இவ்வுதவிகளையெல்லாம் " புவர் பீப்பீள்" களுக்குத் தானே கொடுக்கின்றோம். குடில் குழந்தைகளைக் காட்டிலும் " புவர் பீப்பீள்கள்" யாரிருக்கின்றனர்?" என ஐயா அவர்கள் அவரது பாஷையில் பேசி கலகலவென சிரித்தார். மனமகிழ்வோடு சுவாமிஜிக்கு கலெக்டர் விடைகொடுத்தார். சுவாமிஜியும் குடிலுக்கு வந்து சேர்ந்தார்.

லாரி விளையாட்டை விளையாடியதும் குருமகராஜின் அருள் என பகவானை மனமாரப் பிரார்த்தித்து எழுந்தார் சுவாமிஜி அவர்கள். அவரது அருள் விளையாட்டு எவற்றையெல்லாம் சாதித்தது என போகப்போக கண்டுகளிக்கலாம்.

6. வளர்ந்தது குடில்

எப்போது பார்த்தாலும் "ஜே ஜே" என்று ஆஸ்ரம எல்லைக்குள் 300 அனாதைக் குழந்தைகளின் ஆனந்தக் கூக்குரல் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதே சுவாமிஜியின் பெருவிருப்பமாக இருந்தது.

அதற்கேற்ப குடிலில் சேரும் மாணவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் கொண்ட கட்டடங்கள் உடனடித் தேவையாக இருந்தது. முதலில் தேவையானது கட்டடங்களே என சுவாமிஜி தீர்மானித்தார்கள். செயலிலும் இறங்கினார். நன்கொடைகள் வரவர கட்டட வேலைகள் முடுக்கி விடப்பட்டன. பலவகையான பெரிய சிறிய கட்டடங்கள் உருவாயின.

1949 ல் பகவான் பரமஹம்ஸர் பேரருளால் ஸ்தாபனம் ஆரம்பித்த காலத்திலிருந்து, கிட்டத்தட்ட 35 ஆண்டு காலத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டடங்கள் கட்டி முடிக்கப் பெற்றன. அக் கட்டடங்கள் விவரம்.

1. ஆஸ்ரமம், ஆஸ்ரமக் கோயில்
2. குருகுல மாணவர் விடுதி
3. வித்தியாலயக் கட்டடங்கள்
4. குருகுல மாணவர் உணவு விடுதி
5. பிரம்மசாரிகள் தங்குமிடம்
6. விஞ்ஞானக் கூடம்
7. கலைக்கூடம்
8. மாணவர் விடுதி மேல்மாடி
9. மேல்நிலை நீர்த்தொட்டி
10. மருந்தகக் கட்டடம்
11. உடற்கழிவுப் பகுதி கட்டடம்
12. கலையரங்கம்
13. தையற்கூடம்
14. தோட்ட வீடு
15. முடிதிருத்தகம்
16. தோட்ட மேல்நிலை நீர்த்தொட்டி
17. அன்பர்கள் இல்லம்
18. வரவேற்பு மண்டபம்
19. இண்டஸ்ட்ரியல் கட்டடம்
20. பசுமடம்
21. தேங்காய் கூடம்
22. விவசாயக் கருவிகள் கிடங்கு
23. தனித்தவ இல்லம்
24. குடில் போக்கு வரத்து கட்டடம்
25. ராமகிருஷ்ணபுரம் ஆசிரியர் குடியிருப்பு
26. நெற்களஞ்சிய கட்டடம்
27. வெள்ளி விழா வளைவு
28. பயிற்சி மாணவர் (IT) தங்கும் இல்லம்
29. தியான மண்டபம்
30. பெயிண்ட் பாதுகாப்பு, பலகாரம் தயாரிப்பு அறைகள்.

இக்கட்டடங்கள் தவிர, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் உருவச் சிலையும், சுவாமி விவேகானந்தர் உருவச் சிலையும் நிறுவப்பட்டன.

ஆங்காங்கே செம்பருத்திச் செடிகளும், நந்தியாவட்டச் செடிகளும், பலவகையான குரோட்டன்ஸ் செடிகளும், விசிறி வாழை மரங்களும் நடப்பட்டன.

இவைகளால் ஆஸ்ரமத்திற்கு புதுப்பொலிவு உண்டாயிற்று. நூற்றுக் கணக்கான தென்னைமரங்கள் அதிகப்படியாக நடப்பட்டு, தென்னந்தோப்பு விஸ்திரிக்கப்பட்டது. ஆன்மீகக் கருத்துக்களும், ஞானிகளின் உபதேச மொழிகளும், தகடுப்பலகைகளில் எழுதப்பட்டு ஆஸ்ரமம் முழுவதிலும் காட்சியளிக்கும் வண்ணம் மரங்களில் பதியப்பட்டுள்ளது. அத்துடன் "ராம்ராம்" என்ற தாரகமொழி போர்டும் எங்கும் காணலாம். ஆஸ்ரமத்திற்கு வரும் அன்பர்களின் மனம் பண்போடு விளங்க இவை உறுதுணையாக இருந்தன.

கையிலே காசுமின்றி நாளைக்கென்று ஏதுமின்றி பகவான் பரமஹம்ஸரின் துணை ஒன்றையே பக்கபலமாகக்கொண்டு தனி ஒருவராக இருந்து ஆஸ்ரமம் அமைத்து, நூற்றுக்கணக்கான அனாதைச் சிறுவர்களுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை உருவாக்கியிருக்கிறார் சுவாமிஜி என்றால் அதற்கான அடிப்படைதான் என்ன? சுவாமிஜியே கூறுகிறார்.

" அந்தப் பரம்பொருளின் அருளைத்தவிர வேறென்ன இருக்க முடியும்? இத்தகைய மாபெரும் சாதனைகளை சாதிக்க ஒருவருக்கு வேண்டியது தூய பக்தி ஒன்றுதான். எது நேரினும் தளர்வடையாத மனமும் நம்பிக்கையும் இருந்தால் அவருக்கு வெகு அருகில் ஆண்டவன் இருக்கிறான். கூப்பிடும் குரலுக்கு வந்துதவக் காத்திருக்கிறான்,"

ஆண்டவன் இருக்கிறான் என்பது உண்மை. தக்கவர்களுக்காக, தக்க இடத்தில், தக்க நேரத்தில் அவனது திருவருளின் செயலாக்கம் நடைபெறத்துவங்கும்; என்பதற்கு உதாரணமாக நம் கண் முன்னே இன்று விஸ்வரூபமாய் காட்சியளிக்கும் "குடில்" என்னும் குருதேவரின் ஆலயம்.

7. நங்கவரம் பண்ணையாரின் தீபாவளி அன்பளிப்பு

அந்த வருடம் தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்த நேரம். சுவாமிஜி அவர்கள் தம் அறையில் அமர்ந்து கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது " கேட்" மாணவன் ஓடிவந்து " நங்கவரம் பண்ணையார் காரில் வந்திருக்கிறார்." என்ற தகவலை கூறிச்சென்றான்.

பண்ணையாரை வரவேற்க சுவாமிஜி தயாரானார். தம் அறையிலிருந்து வெளியே வந்தார். பண்ணையாரை வரவேற்று தம் அறையில் அமர வைத்தார். " ஐயா. . . நலம் தானே. திடீரென வந்திருக்கிறீர்கள். என்ன விஷயம்." என சுவாமிஜி கேட்டதற்கு, " சாமி. . எல்லாம் நலமே. குழந்தைகள் நலமா? சாமி . ..

நீங்கள் உடனே என்னுடன் குளித்தலைக்கு வரவேண்டும். கார் கொண்டு வந்துள்ளேன். புறப்படுங்கள்.'' எனப்பண்ணையார் அவசரப்படுத்தினார். எதற்காக என சுவாமிஜி எவ்வளவு கேட்டும், '' புறப்படுங்கள் சாமி. குளித்தலை சென்றால் நீங்களே புரிந்து கொள்ளுவீர்கள்.'' என்றார். அவரை நன்கு புரிந்து வைத்திருந்த சுவாமிகள், இனி எவ்வளவுதான் எதற்காக குளித்தலை போக வேண்டும் என்று கேட்டாலும் பண்ணையார் பதில் கூறமாட்டார் என புரிந்து கொண்ட சுவாமிஜி அவர்கள் பண்ணையாருடன் சென்று காரில் ஏறினார். காரில் போகும்போதே பண்ணையார் அவர்கள் சுவாமிஜியிடம் குடில்சேவையைப் பற்றி விரிவாகக் கேட்டுக் கொண்டிருந்தார். சுவாமிஜியும் குருமகராஜ் கிருபையால் அனைத்துக் காரியங்களும் நன்றாக நடைபெற்று வருகின்றன என்றார்.

குளித்தலையில் ஒரு பெரிய ஜவுளிக்கடையின் முன்னால் பண்ணையார் அவர்களின் கார் நின்றது. நங்கவரம் பண்ணையார் தம்கடைக்கு வந்ததை அறிந்த ஜவுளிக்கடை முதலாளி மனம் மகிழ்ந்து கடைக்கு வெளியே வந்து பண்ணையாரையும், சுவாமிஜியையும் வரவேற்று அழைத்துப் போனார்.

பண்ணையார் சுவாமிஜியிடம், '' சுவாமிஜி இந்த வருட தீபாவளிக்கு நான் வாங்கித் தரும் வேஷ்டி, அங்கவஸ்திரத்தை நீங்கள் அணிந்து கொள்ள வேண்டும்.'' எனக் கூறிவிட்டு, கடை முதலாளியிடம், '' 8 முழ பட்டு வேஷ்டியும், 4 முழ அங்கவஸ்திரமும் அகல ஜரிகைக்கரை உள்ளதாக வேண்டும்'' என்றார். முதல் தரமான பட்டு வேஷ்டியும் பட்டு அங்கவஸ்திரமும் பண்ணையாரிடம் காட்டப்பட்டன. பண்ணையாருக்கும் பிடித்துப் போயிற்று.

சுவாமிக்கோ தர்மசங்கடம். பண்ணையாரிடம் மெதுவான குரலில், '' ஐயா, தங்கள் அன்பிற்கும் பரந்த உள்ளத்திற்கும் நன்றி. ஒரு வேண்டுகோள். ஆஸ்ரம வாசிகள் பட்டாடைகளை உடுத்தக் கூடாது. எப்போதும் நான் கதர் வஸ்திரம் தவிர வேறு துணிகளை அணிவதில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆஸ்ரமத்திற்கு புதுத்துணி வாங்கித் தரவேண்டும் என்பதுதானே தங்கள் நோக்கம். அப்படி என்றால் ஒன்று செய்யுங்கள். ஆஸ்ரமக் குழந்தைகளுக்கு தீபாவளி நாளில் போட்டுக் கொள்ள காக்கிச் சட்டை, டிராயர் வாங்கிக் கொடுங்கள்'' என்றார் சுவாமிஜி.

பண்ணையாரும், சுவாமிஜியின் வேண்டுகோளை ஏற்றார். அந்த வருடம் குடில் குழந்தைகளுக்கு காக்கி சட்டை, டிராயர் தைத்து தமது அன்பளிப்பாக ஆஸ்ரமத்திற்கு கொடுத்து மகிழ்வுற்றார் பண்ணையார். தீபாவளியும் விமரிசையாக நடந்தது.

8. ஆஸ்ரம உண்டியல் காலி

ஆரம்ப காலத்தில் குடில் நன்கொடை வசூலுக்காக பலரை பார்த்துவர, அடிக்கடி வெளிப்பிரயாணங்களை மேற்கொண்டிருந்தார் சுவாமிஜி. பிரயாணமின்றி ஆஸ்ரமத்தில் தங்கியிருப்பது சொற்ப நாட்களே. திருச்சிக்கு போக அப்போது ரயிலிலோ அல்லது பஸ்ஸிலோ சென்றுவருவார் சுவாமிஜி. அன்றைய நாளில் திருச்சிக்கு செல்ல பஸ் கட்டணம் ஐந்தணா (அன்றைய 60 காசுகள்) ஒருநாள் திருச்சிக்கு செல்ல வேண்டியிருந்தது.

குளித்து முடித்து பரமஹம்ஸர் ஆலயத்தினுள் சென்று தியானித்து, நெற்றியில் நீறணிந்து சந்தனப்பொட்டு வைத்து வெளியில் வந்து, தம் அறைக்குச் சென்று உடைமாற்றி, அங்கவஸ்திரம் போர்த்தி குடையை எடுத்து வைத்துக் கொண்டார். காவித் துணி பையை எடுத்துக் கொண்டார். பர்சை திறந்து பார்த்த போது அது காலியாக இருந்தது. ஒரு மூலையில் காலணா நாணயம் மட்டும் இருந்தது. இம்மாதிரி சமயங்களில், பிரயாணத்திற்கு தேவையான பணத்தை ஆஸ்ரமக் கோவிலில் உள்ள உண்டியலைத் திறந்து எடுத்துக் கொள்வது வழக்கம். அன்றும் உண்டியலைத் திறந்து பார்த்தார். உண்டியலும் காலியாக இருந்தது. அன்று ஐந்தணா இல்லாமல் திருச்சிக்கு போக முடியாமல் போயிற்று.

பர்சையும் கோவில் உண்டியலையும் காலியாக இருக்கும்படி செய்து, இந்த பிரம்மசாரி என்ன செய்கிறார் பார்ப்போம் என குருதேவர் இந்த விளையாட்டை விளையாடினார் போலும் என நினைக்கத் தோன்றுகிறது அல்லவா.

தனது அருமை பக்தர் நேரம் காலம் பாராது ஊண் உறக்கத்தை மறந்து, அனாதை மக்களின் சேவைக்காக உடலையும் மறந்து உழைத்து வரும் இவருக்கு இன்று ஒரு நாளாவது ஓய்வில் இருக்கட்டும் என தீர்மானித்துத்தான் குருதேவர் காசில்லாத நிலையை உருவாக்கினார் போலும்."

சுவாமிஜி பிரயாண உடையை களைந்து சாதாரண உடைக்கு மாறினார். சிந்தனையோடு நாற்காலியில் அமர்ந்தார். அன்றைய பிரயாணம் தடைப்பட்டு போனதை எண்ணி எண்ணி மனம் அசைபோட்டது. அறையில் மாட்டப்பட்டுள்ள பரமஹம்ஸரின் படத்தின் மேல் அவரது கவனம் சென்றது. சிறிது நேரம் அப்படத்தையே உற்றுப் பார்த்தார். "இன்றைக்கு நான் பிரயாணம் போவது தேவரீருக்கு பிடிக்கவில்லை போலும். அப்படித்தானே" என மனதிலே கூறிக் கொள்வார். பின் வெகு ஜரூராக ஆஸ்ரம வேலைகளை கவனிக்க ஆரம்பித்தார்.

நாளைக்கு என்ன வழி என சுவாமிஜி என்றுமே சிந்திக்க மாட்டார். அவன் சித்தம் எதுவோ அதன்படிதான் நடக்கும் என்பார். குருதேவர் தமது பரமபக்தரை தவிக்க விடுவாரா? அவரை முழுவதுமாக சரணடைந்தவர்களுக்கு அவரே வழிகாட்டுவாரல்லவா? அவரது வழிகாட்டல் அன்றைய தபாலில் தெரிந்து விடும். அன்றைக்கு வந்த தபாலில் சில காசோலைகளும், சில மணியார்டர்களும் வந்திருக்கும்.

ஆண்டவனின் கருணையை எண்ணி எண்ணி ஆனந்தப்படுவார் சுவாமிஜி.

9. அனாதை விருதிகளை ஏற்க அழைப்பு

ஒரு நாள் இரவு 1 மணியிருக்கும். ஆஸ்ரமம் முழுவதும் நிசப்த நிலையில் உறங்கிக் கொண்டிருந்த வேளை. சுவாமிஜி அவர்கள் தம் அறையில் படுத்துக் கொண்டிருந்தார். சிறு சப்தம் கேட்டாலும் எழுந்துவிடும் பழக்கம் சுவாமிஜிக்கு உண்டு. ஆஸ்ரமத்தின் முன் வாயிலில் யாரோ ஒருவர் கூப்பிடுவது போன்ற ஒலி கேட்டது. சுவாமிஜி எழுந்து விட்டார். அறைக்குப் பக்கத்து வெராண்டாவில் படுத்திருந்த மாணவனை எழுப்பிப் பார்க்கச் சொன்னார். மாணவனுடன் ஒரு நபர் பாலத்தில் வருவது தெரிந்தது. சுவாமிஜி தம் ஆசனத்தில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

வந்தவர் குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆவார். சுவாமிஜி அவரை வரவேற்று தம் அறைக்கு அழைத்துச் சென்றார். வந்தவர் தாம் வந்த விஷயத்தை சுவாமிஜியிடம் கூறினார். "ஐயா O.P.R அவர்கள் என்னை அனுப்பி இருக்கிறார் (முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்) வடலூரில் உள்ள குருகுலத்தை உங்களிடம் ஒப்படைக்க ரெட்டியார் உத்தேசித்துள்ளார்.

குடிலுக்கு ஓடியாடி நன்கொடை வசூலிப்பது போன்ற சிரமம் வடலூர் குருகுலத்தை நிர்வகிப்பதில் அறவே இல்லை. குருகுல நிர்வாகத்திற்காக ஒரு லட்சம் ரொக்கம் இருக்கிறது. தேவையான கட்டடங்கள் உள்ளன. சகலவிதமான வசதிகளும் உண்டு. இவற்றை வைத்துக் கொண்டு குடிலைப் போல் வடலூர் குருகுலத்தை நடத்தி வரவேண்டும். இதைப் பற்றி பேச உங்களை அழைத்து வரச் சொன்னார்." என்று கமிஷனர் விபரம் கூறி முடித்தார்.

அதற்கு சுவாமிஜி அவர்கள், " அவரோ எல்லாவிதத்திலும் பெரியவர். குடில் நிர்வாகம் அவருக்கு பிடித்திருக்கிறது. ஆனால் எனது நிலையையும் பார்த்துக் கொள்ள வேண்டும். மனதிற்கு எல்லையில்லை. இங்கிருந்தே வடலூரை நினைத்துக் கொள்ள இயலும். ஆனால் சரீரத்தைக் கொண்டு காரியங்களை கவனித்து நிர்வகிப்பதின் எல்லை ஓரளவுக்கு உட்பட்டது. அகல கால் வைத்தால் அதுவும் சரியாக நடக்காது. இதுவும் சரியாக நடக்காது. இது தான் நடைமுறைச் சிக்கல். எனவே அவரிடம் நான் மிகவும் கேட்டுக் கொண்டதாகக் கூறுங்கள். குடிலையும் கவனித்துக் கொண்டு வடலூர் குருகுலத்தையும் நிர்வகிப்பது என்பது, ஆஸ்ரமத்திற்கு இயலாத ஒன்று. எமது நிலையைக் கூறி ஆறுதல் கூறுங்கள்." என கமிஷனரிடம் பதில் கூறி அனுப்பப்பட்டது. பின்னால் வடலூர் குருகுலம் பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நடந்து வருவதாக தகவல் அறியப்பட்டது.

இதே போன்ற வேண்டுகோள்கள் வேறு சில இடங்களிலிருந்தும் வந்தன. அவைகளைப் பற்றியும் சற்று பார்ப்போம். வாரியார் சுவாமிகள் குடில் சேவைக்கென ஒரு நிரந்தர நிதி ஏற்படுத்திவிட்டால், எக்காலத்திலும் குடில் சேவை சீரோடும் சிறப்போடும் நடைபெற எவ்வித சிக்கலும் இராது என்ற முடிவிற்கு வந்து அதற்கான ஏற்பாடுகளையும், சுவாமிஜியிடம் கலந்து பேசி அந்த நிதிக்கு "திருவருள் திட்ட நிரந்தர நிதி" என்ற பெயரும் சூட்டப்பட்டது.

இந்த திருவருள் திட்ட நிதிக்காக வாரியார் சுவாமிகளுடன் கோவை சென்று திரு G.D. நாயுடு அவர்களை சந்திப்பதென முடிவாயிற்று. அதன்படி கோவை சென்று G.D. நாயுடு அவர்களை சுவாமிஜியும் வாரியார் சுவாமிகளும் சந்தித்தனர். நாயுடு அவர்களும் இருவரையும் அன்போடு வரவேற்றார். குடிலின் வளர்ச்சி நிரந்தர நிதிக்காக ரூ 5,000/= நன்கொடை வழங்கினார். சுவாமிஜியிடம் நாயுடு அவர்கள், "எனது நெடுநாளைய விருப்பம் ஒன்றை உங்களிடம் கூறுகிறேன். நீங்கள் நடத்துவது போன்ற ஒரு அனாதாஸ்ரமம் நடத்த மனதிலே ஆசை இருக்கிறது. பணமும் நிறைய இருக்கிறது. வேண்டியது எல்லாம் விடுதியை சிறப்பாக நடத்த தக்க ஒரு நல்ல நபர்தான் தேவை" எனக் கூறினார். அதற்கு வாரியார் சுவாமிகள் நாயுடுவிடம், "ஐயா உங்கள் எண்ணம் உயர்வானதுதான். கோடி ரூபாய் சேர்த்து விடலாம். ஆனால் தன்னலமற்ற சேவை செய்யத்தக்க நல்ல ஆள் மட்டும் கிடைப்பது அரிதிலும் அரிது" என கூறினார்.

வாரியார் சுவாமிகளின் உரையைக் கேட்ட நாயுடு அவர்கள் அனாதை ஆஸ்ரமம் நடத்தும் தனது ஆசைக்கு அப்போதே முற்றுப்புள்ளி வைத்து விட்டார். நாயுடு அவர்களிடம் விடை பெற்றுத் திரும்பினார்கள்.

வேறொரு சமயம் 1961 ம் ஆண்டு கலெக்டர் மலையப்ப ஐயாவுடன் மலேசியாவிற்கு 40 நாள் பிரயாணம் சென்றிருந்தார் சுவாமிஜி அவர்கள். அங்கு திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரிடம் நன்கொடைக்காக சென்றனர். பிள்ளை அவர்கள் சிறப்பாக வரவேற்பளித்து பேசிக் கொண்டிருந்தார். அவர் சுவாமிஜியிடம், "சுவாமி இங்கு ஒரு அனாதை விடுதி நடத்த வேண்டுமென்று திட்டமிட்டுள்ளேன். அதன் பராமரிப்பிற்கென ஏழுலட்சம் பெறுமானமுள்ள ரப்பர் தோட்டத்தையும் விட்டிருக்கிறேன். அவ்விடுதியை நடத்தவல்ல தக்க ஒருவரைத் தேடிவருகிறேன். இதுவரை எவரும் கிடைக்கவில்லை. நீங்கள் இங்கு வந்து நடத்துங்கள். ரப்பர் தோட்டத்தை உங்கள் பெயருக்கு எழுதி வைத்து விடுகிறேன். தயவு செய்து எனது இந்த கோரிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்" எனக் கூறி முடித்தார். சுவாமிஜி அவர்கள் பிள்ளை அவர்களிடம் தமது இயலாமை குறித்து தெளிவாக அவரது மனதில் பதியுமாறு எடுத்துக் கூறினார். பிள்ளை அவர்களும் ரூ 3000/= கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

1966 ம் ஆண்டில் புதுச்சேரி மாநிலத்திலிருந்து கவர்னர், முதலமைச்சர், மாநில அமைச்சர்கள், சீப் ஜஸ்டிஸ், ஐ.ஜி, மேயர் மற்றும் பல பிரமுகர்கள்

குடிலுக்கு வருகை தந்தனர். குடிலின் அமைப்பை சுற்றிப் பார்த்துவிட்டு, " குடிலுக்கு உயிர் இருந்தால் அப்படியே தூக்கிச் சென்று, புதுவையில் வைத்து விடுவோம்." என புதுவை முதலமைச்சர் கூறினார். புதுவை கவர்னர் சுவாமிஜிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். " குடிலின் மேற்பார்வையில் புதுவையில் ஒரு அனாதை விடுதி ஆரம்பிக்க வேண்டும். வேண்டிய நிதியும், தேவையான பூமி, கட்டடங்களையும் புதுவை அரசே தரும். சுவாமிஜி அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும்." என்றார்.

அதற்கு சுவாமிஜி அவர்கள், " தொலைதூரத்தில் இருந்து கொண்டு இங்கு விடுதியை சிறப்பாக நடத்த முடியாது. அந்தந்த இடத்திலே இருந்து கொண்டு இரவும் பகலும் சுறுசுறுப்புடன் கவனித்தால்தான் விடுதியை சிறப்பாக நடத்திச் செல்ல முடியும்." என கவர்னருக்கு சமாதானம் கூறினார். குடில் நிதிக்காக புதுவையில் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ரூ 50,000 வரை வசூலாயிற்று.

1974 ஜூன் மாதம் வாரியார் சுவாமிகளுடன் வேட்டைக்காரன்புதூரில் திரு V.P. சபாபதி கவுண்டர் வீட்டில் சிலநாட்கள் தங்கியிருந்தனர். சுவாமிஜியும் வாரியார் சுவாமிகளும் குடில் நிரந்தர நிதிக்கான நன்கொடை குறித்து பேசினர். திரு. கவுண்டர் அவர்களும் ரூ 5000 வழங்கி மற்ற அன்பர்களையும் வழங்குமாறு செய்தார். புறப்படும் வேளையில் கவுண்டர் அவர்கள், " எங்கள் குடும்பத்தை சேர்ந்த ஒரு மடம் இருக்கிறது. நீங்கள் குடிலிலிருந்து ஒரு பிரம்மசாரியை அனுப்பி வைத்தால் அந்த மடத்தில் அனாதை விடுதி ஒன்றை நடத்தலாம்" என்றார். சுவாமிஜி அவர்கள், " அப்படி ஒரு பிரம்மசாரியை குடிலில் இருந்து அனுப்பி வைப்பது என்பது சாதாரணமான காரியமல்ல" என அதிலுள்ள சிரமங்களை எல்லாம் விரிவாக கவுண்டர் அவர்களிடம் கூறி முடித்தார்.

10. குருகுல மாணவர்களின் தினசரி வாழ்க்கை வேலைத்திட்டம்

வாழ்விலே மிகச்சிறந்த, உலகமே போற்றிப் புகழத்தக்க சாதனை புரிந்தோர் பலரது வாழ்க்கையை ஊன்றி கவனித்தால் ஒரு உண்மை தெரியவரும். அவர்கள் தங்களது வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் திட்டமிட்டு அதன்படி செயல்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் வெற்றியின் சிகரத்தை எட்டியவர்கள் ஆவார்கள்.

இதற்கு உதாரணமாக மாவீரன் நெப்போலியனைக் கூறலாம். ஒவ்வொரு நாளும் இரவில் சில மணி நேரங்களை இளைஞன் நெப்போலியன் வெட்ட வெளியில் பனியும் காற்றும் தாக்கும் நேரங்களில் கற்களும் பாறைகளும் நிறைந்த பகுதிகளில் தனது உடம்பை எவ்வளவு குறுக்கிக்

கொள்ள முடியுமோ அவ்வளவு குறுக்கிக் கொண்டு படுத்துறங்குவான். பல மணி நேரம் வெய்யிலில் குதிரைப்பயிற்சி மேற்கொள்வான். அவன் போட்ட திட்டப்படி இம்மியளவும் குறை ஏற்படாதவாறு செயல்படுவான். இதைக் கண்டு அவனது தோழர்கள் கேலி செய்வார்கள். அப்போது நெப்போலியன் அவர்களுக்கு, " நண்பர்களே, நிச்சயம் நான் ஒரு நாள் இந்த நாட்டின் மன்னனாவேன். அதற்கு நான் கடுமையாக உழைக்க வேண்டும். உடலையும் மனதையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். பல போர்களை சந்திக்க நேரிடும். அந்நேரங்களில் உறங்க நேரம் கிடைக்காது. சொகுசான மெத்தை தலையாணிகளும் கிட்டாது. எனவேதான் கிடைத்த இடத்தில் நினைத்தபோது தூங்கும் பயிற்சியை இப்போதிருந்தே திட்டமிட்டு செய்து வருகிறேன்." என்று கூறி முடித்தான் நெப்போலியன்.

இதையே அரசியல் மாமேதை சாணக்கியரும் வலியுறுத்துகின்றார். " அரசியல் வாழ்விலும் போர்க்களங்களிலும் போர் ஆயுதங்களும் போர் வீரர்களும் மட்டுமே வெற்றியை நிர்ணயிப்பது இல்லை. போரை சந்திக்கும் சரியான அணுகுமுறையும் திட்டமிட்ட போர்முறைகளும் வெற்றியை கொணர்கின்றது"

எனவே சரியான முறையில் திட்டமிடல் எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகின்றது.

பொருளாதார நிலை என்பது சிறிதுமில்லாமல் தன்னந்தனியனாக, பகவானின் துணை கொண்டு அசைக்க முடியாத மனோதிடத்துடன், அனாதைகளின் ஆலயமாம் குடில் என்னும் ஸ்தாபனத்தை உருவாக்கி இமாலய சாதனையை எட்டியிருக்கும் சுவாமிஜி அவர்களுக்கு இந்த சாதனையை எட்ட உறுதுணையாக இருந்தது அவரது திட்டமிடுதலும் அதன்படி செயல்படுவதும்தான்.

இதைக் கருத்தில் கொண்டுதான் குருகுல மாணவர்களின் அனுதின வாழ்விற்கான திட்டமிட்ட அவரது நிகழ்ச்சிகளின் தொகுப்பினை காணலாம்.

அதிகாலை மணி 5		துயில் எழுதல்
	5.00 – 5.15	அதிகாலை பிரார்த்தனை
	5.15 – 6.15	தினசரி வாழ்க்கை அலுவல்களை கவனித்தல்
	6.15 – 7.00	துணி துவைத்தலும் நீராடலும்
	7.00 – 7.15	காலை இறைவழிபாடு
	7.15 – 7.30	தலைக்கு எண்ணெய் தேய்த்தல்
	7.30 – 8.30	காலை தனிப்படிப்பு
	8.30 – 9.30	காலையுணவு
	9.30 – 9.45	பள்ளிப் பிரார்த்தனை
	9.45 – 12. 45	பள்ளிப் படிப்பு

மதியம்	12.45 – 1.00	இறைவழிபாடு
	1.00 – 2.15	மதிய உணவு
	2.15 – 4.30	பள்ளிப்படிப்பு, விளையாட்டு
	4.30 – 4.45	நாட்டு வாழ்த்து
மாலை	4.45 – 6.00	தினசரி வாழ்க்கை அலுவல் கவனித்தல்
	6.00 – 6.30	உடல் தூய்மை
	6.30 – 6.45	மாலைப் பிரார்த்தனை
	6.45 – 7. 45	இரவு தனிப்படிப்பு
	7.45 – 8. 45	இரவு உணவு
	8.45 – 9.00	மறுதினம் அணியும் உடைகள் சரிபார்த்தல்
	9.00	இறைவணக்கம் பாடி துயில் கொள்ளல்

குருகுலத்தில் பத்தாண்டு காலம் படிக்கும் ஒரு மாணவன் கட்டுப்பாடுடன் திட்டமிட்ட வாழ்க்கையில் வாழும்போது அவனது உடலும் உள்ளமும் ஒன்றி விடுகின்றன. அவனது எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதில் ஐயம் ஏதுமுண்டோ?

11. பத்து நாடகங்கள்

குடிலில் 1955 ம் ஆண்டில் ஆரம்பப் பள்ளி துவங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் அப்பள்ளியின் தலைமை ஆசிரியனாக பதவி ஏற்றேன். துறவிகள் ஏற்படுத்திய பள்ளி என்றாலே, ஏனோ எனக்கே காரணம் தெரியாத ஒரு பயம் இருந்து வந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல சுவாமிஜியை நன்கு புரிந்து கொண்டேன். அவரது அன்பும், கருணையும் நிறைந்த உள்ளத்தைத் தெரிந்து கொண்டு விட்டேன். மிகப்பெரிய தன்னலமற்ற, ஏழை, எளியவர்கள், அனாதைகள்பால் பேரன்பு கொண்டிருந்த அந்த சந்நியாசியின் கீழ் பணிபுரிவதை பாக்யமாகக் கருதி என் பணியில் தீவிரமாக ஈடுபட்டேன். காவியுடை உடுத்தாத சந்நியாசி அவர். தூய வெண்மை பளிச்சிடும் கதராடை அணிந்தவர். ஜோதி ராமலிங்க அடிகளாரின் மறுஉருவம் என்றே அவரைக் கூறலாம்.

வருடாவருடம் குடிலில் ஆண்டு விழா நடைபெறும். எவ்வித ஆடம்பரமோ படாடோபமோ இன்றி மிகவும் எளிய முறையில் ஆண்டு விழா நடைபெறும். சுவாமிஜி அவர்கள் குடிலின் திட்டங்கள், மாணவர்கள் சேர்க்கை, அந்த ஆண்டின் வரவு செலவு அறிக்கை, வந்த நன்கொடை விபரம் ஆகியவற்றை தொகுத்துப் பேசுவார். அதன்பின் குருகுல மாணவர்கள் பகவான்

ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணி தேவியாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சிற்சில பகுதிகளை எடுத்துக் கூறுவார்கள். இவ்வாறாக குடில் ஆண்டு விழா மாலை 3.30 மணியளவில் ஆரம்பித்து 5.00 அல்லது 5.30 மணிக்குள் முடிவுறும். இதுதான் வழக்கமான நடைமுறையாக இருந்து வந்தது.

பள்ளியின் ஆண்டுவிழாவென்றாலும் ஸ்தாபனத்தின் ஆண்டு விழாவென்றாலும் அங்கு பயிலும் மாணவர்கள் பங்கேற்கும் நாடகம் ஒன்று நடத்தப் பெற்றால் ஆண்டுவிழா மேலும் சிறப்பாக இருக்குமே எனப் பல தடவைகள் எண்ணியதுண்டு. ஆனால் சுவாமிஜி அவர்களிடம் எனது எண்ணத்தை கூறுவதற்கு மனதிலே ஒரு தயக்கம். சுவாமிஜி அவர்களின் சீரான திட்டத்தின் கீழ் நடந்து கொண்டிருக்கும் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் மாற்றம் செய்வதோ, வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகள் இடையே புதிய நிகழ்ச்சி ஒன்றை புகுத்துவதோ சரியா? என்ற எனது நினைப்பே என் தயக்கத்திற்கு காரணமாக இருந்தது. இருப்பினும் என் மனதின் ஒரு மூலையில் குடில் ஆண்டு விழாவில் மாணவர் நாடகம் நடத்தப் பெற வேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டேயிருந்தது.

எனது இந்த எண்ணம் சில வேளைகளில் என்னுள் உறங்கிக் கொண்டிருக்கும். சில நேரங்களில் அதற்கு விழிப்பு வந்துவிடும். அவ்வேளைகளில் சுவாமிஜியிடம் கேட்டு விடுவோம் என்ற உறுதியோடு இருப்பேன். ஆனால் அவரை சந்திக்கும் வேளையில் எனது நா எழாது. திரும்பி விடுவேன்.

எல்லாவற்றிற்கும் காலம் என்ற ஒன்று வர வேண்டும் என்ற எண்ணத்தில் எனக்கு நானே சமாதானப்படுத்திக் கொள்வேன். குடிலில் நாடகம் என்ற எனது எண்ணம் 1961ம் ஆண்டு வரை சுமார் 6 ஆண்டுகாலம் என் கற்பனையிலேயே வளர்ந்து வந்தது. ஒரு எதிர்பாராத திருப்பம் திருவருள் இயக்கத்தால் உருவாயிற்று. அப்போதெல்லாம் சுவாமிஜி அவர்கள் குடில் காரியத்தின் நிமித்தம் வாரத்தில் நான்கைந்து நாட்கள் திருச்சி போய் வருவார்கள். இரவில் ஆஸ்ரமம் திரும்பி விடுவார்கள். காரியம் முன்னதாகவே முடிந்து விட்டால் மதிய உணவிற்கே ஆஸ்ரமத்திற்கு வந்துவிடுவார்கள். ஒரு நாள் சுவாமிஜி அவர்கள் திருச்சிக்கு போய் காரியத்தை முடித்துக் கொண்டு மதியமே ஆஸ்ரமத்திற்கு திரும்பி விட்டார்கள். ஒரு மாணவனை அனுப்பி என்னை அழைத்து வரச் சொன்னார்கள். நானும் சென்று சுவாமிஜியைச் சந்தித்தேன். அவர் என்னைப் பார்த்து, “ரமணன் அன்பர் ஒருவர் நம் பள்ளி நூலகத்திற்கு பக்த விஜயம் என்ற இந்த புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். ஆஸ்ரமத்திற்கு வரும்போதே அங்கொன்றும் இங்கொன்றுமாக பக்கங்களை புரட்டிப் பார்த்தேன்.”

“புத்தகத்தின் பெயருக்கேற்றபடி அதன் உட்பொருளும் சிறப்பாகவே இருந்தன. பாரத நாட்டின் பக்த சிரோன்மணிகள் பலருடைய வாழ்க்கை வரலாறு

எழுதப்பட்டிருக்கிறது. புத்தகம் முழுவதும் தெய்வீக உணர்வு பக்கத்திற்கு பக்கம் இழையோடிக் கொண்டிருக்கிறது. முழுதும் பக்தி மயம். இவைகளை படித்தாலே மனம் ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வது உறுதி. இதிலுள்ள சில பக்தர்களின் வரலாற்றை நாடகமாக்கி குருகுல மாணவர்களால் ஆண்டுவிழாவில் நடத்தினால் அன்பர்களும், பொதுமக்களும் பெரிதும் மகிழ்ச்சி பெறுவார்கள். பக்திரசம் குறையாமல் நாடமாக ஆக்க முடியுமா?" எனக்கேட்டார்.

அந்த ஒரு நொடியில் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அனைத்தும் குருதேவரின் ஆசி என நினைத்துக் கொண்டேன். "நாடகமாக எழுதுகிறேன் சாமி" எனக்கூறி சுவாமிஜியிடமிருந்து, 'பக்த விஜயம்' நூலை பெற்றுக் கொண்டேன். எனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் மகாபாரதத்தை 'தர்மத்தின் வெற்றி' என்ற தலைப்பில் எழுதி முடித்திருந்தேன். அதைசுவாமிஜியிடம் கூறினேன். அவரும் இந்த வருடத்திய ஆண்டுவிழாவில் மகாபாரதத்தை நாடகமாகப் போடுங்கள்" என அனுமதியளித்தார்.

இவ்வாறாக குடிலில் குருகுல மாணவர்களின் நாடக அரங்கேற்றம் 1960 ம் ஆண்டில் மகாபாரதத்தின் மூலம் நடந்தேறியது. மேலும் பக்த விஜயத்திலிருந்து தேர்ந்தெடுத்த சில பக்தசிரோன்மணிகளின் வரலாற்றை நாடகமாக எழுதத் துவங்கினேன். கிட்டத்தட்ட 13 ஆண்டு காலத்திற்குள் பத்து நாடகங்களை எழுதி முடித்தேன். அந்த சமயத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், கலெக்டர் மலையப்பன், ஜஸ்டிஸ் மஹாராஜன் ஆகியோர்களின் தொடர்பு குடிலுக்கு ஏற்பட்டது. இவ்வாறாக இந்த முப்பெரும் பெரியோர்களின் தொடர்பால் வருடாவருடம் குடில் ஆண்டுவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வந்தது. வாரியார் சுவாமிகளின் மக்களை கவரும் உபன்யாசங்களும், ஜட்ஜ் மஹாராஜனின் தமிழாற்றல் மிக்க பேச்சும், கலெக்டர் ஐயாவின் கிராமியப் பேச்சும் விழாவிற்கு வருகை தரும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. வாரியார் சுவாமிகளின் உபன்யாசம் முடிந்ததும் குருகுல மாணவர்களின் நாடகம் நடைபெறும். இராமாயண நாடகம் ஆக்கம் பெற்றது. வாரியார் சுவாமிகள் எழுதிய கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு முருகன் அருள் என்ற நாடகம் இயற்றப்பட்டது. எழுதப்பட்ட 10 நாடகங்கள்:

1. மகாபாரதம்
2. இராமாயணம்
3. பக்த பிரகலாதன்
4. முருகன் அருள்
5. கர்ணன்
6. சித்தார்த்தன் (புத்தர் வரலாறு)
7. பக்த கபீர்தாஸர்
8. பக்த ராமதாசர்
9. பக்த புரந்தரதாசர்
10. சமர்த்த ராமதாசர்

மேலே கண்டுள்ள நாடகங்கள் ஆண்டிற்கு ஒன்றாக குடில் ஆண்டு விழாவில் நடைபெற்று வருகின்றது.

12. சுவாமிஜியின் திறன்மிகு நிர்வாக ஆற்றல்.

ஒரு ஸ்தாபனம் மென்மேலும் வளர்ந்து சீரான முறையில் சிறப்பாக செயல்பட்டு வருவதற்கு மூலகாரணம் அதனுடைய நிர்வாகம். நிர்வாக இயல் என்பது ஒரு தனிக்கலை. திறமையும், பொறுமையும், பேச்சாற்றலும், விஷயங்களை நுணுக்கமாக ஆராயும் தன்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் உடையவர்கள் எவர்களோ அவர்களே சிறந்த நிர்வாகிகளாகத் திகழ்கிறார்கள். அவர்களது தலைமையில் ஸ்தாபனம் உயரிய ஸ்தானத்தை பெற்று விடுகிறது.

ஏதாவது ஒரு பிரச்னை என்று வந்தால், அப்போதைக்கு அதற்கான தீர்வு கண்டால் போதாது. என்றைக்கும் அத்தீர்வு அத்தகைய பிரச்னைகளுக்கு பொருத்தமாக இருத்தல் வேண்டும். இதை மனதில் கொண்டுதான் சுவாமிஜி செயல்படுத்தினார்.

எந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் அரைகுறையாகத் தெரிந்து கொண்டு முடிவுகளை, சுவாமிஜி அவர்கள் என்றைக்குமே எடுத்ததில்லை. அந்த விஷயத்தைப் பற்றிய முழு விபரங்களைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுவார். பின் சம்மந்தப்பட்டவர்களிடம் அதைப்பற்றி நுணுக்கமாகப் பேசி அதன் பின்னர் முடிவு எடுப்பார். பள்ளிகளின் பிரச்னை என்றால் தலைமை ஆசிரியர்களிடம் கலந்து பேசுவார். ஆஸ்ரம நிர்வாக பிரச்சனை , மாணவர் பிரச்சனை என்றால் ஆஸ்ரம பிரம்மசாரிகளிடம் கலந்து பேசுவார். அரசு சம்பந்தப்பட்ட காரியங்களென்றால் ஸ்தாபன மானேஜரை கலந்து பேசுவார்.

எந்த ஒரு காரியத்திலும் அதற்கான தீர்வை உடனே சுவாமிஜி கூற மாட்டார். அனைவரின் அபிப்ராயங்களை கேட்டபின் தாமே சிந்திப்பார். தம்மனதிற்கு எது சரி என்று படுகிறதோ அதை செயல்படுத்த சம்மந்தப்பட்டவர்களிடம் ஆணையிடுவார். விஷயங்களை அணுகும் முறை, நுணுக்கமாக ஆராய்தல், சமயோசித புத்தி ஆகிய அனைத்து அம்சங்களிலும் சுவாமிஜி அவர்கள் கைதேர்ந்த வித்தராகவே தோற்றமளிப்பார். எவராலும் மறுப்பு சொல்ல முடியாதபடிக்கு அவரது அணுகுமுறை நியாயமானதாக இருக்கும்.

ஒவ்வொரு தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்துவிடும் பழக்கத்தை கைக்கொண்டிருந்தார். காலைக்கடன்களை முடிப்பார். உடல் நமக்கு கட்டுப்பட்டதாக இருக்க சில எளிமையான தேகப்பயிற்சிகளை மேற்கொள்ளுவார். நடந்தும், கைகால்களை வீசியும், அசைத்தும், குனிந்து நிமிர்ந்தும், தண்டால், பஸ்கி ஆகிய பயிற்சிகளில் அரைமணி நேரம் செலவிடுவார். பின் குளியல், தியானம் அனுஷ்டானங்களை முடிப்பார். காலை உணவு உட்கொண்ட பின் பத்திரிக்கையில் கவனம் செலுத்துவார். அன்றைய நாட்டு நடப்பு முழுவதையும் தெரிந்து கொள்ளுவார். மதியம் 12 மணி அளவில்

தமது அறையின் கதவைத் திறந்து வெளியே வருவார். வெராண்டாவில் நின்றவாறே சுற்றுப்புறங்கள் தூய்மையாக உள்ளதா என கவனிப்பார். எங்கேனும் சிறு குப்பைகள் இருப்பதைக் கண்டாலும் அதை அப்புறப்படுத்த ஆணையிடுவார்.

பிறகு அன்றை அலுவல்களில் கவனம் செலுத்த தயாராக ஆசனத்தில் சாய்வாக அமருவார். அவர் தங்கியிருக்கும் இல்லத்திற்கு அமைதி இல்லம் எனப்பெயர். தம்மை சந்திக்க அன்பர்கள் எவராது வந்திருந்தால் அவர்களை வரவழைத்துப் பேசுவார். ஆஸ்ரம மானேஜருடன் பேச ஒரு நேரம், பள்ளித் தலைமையாசிரியர்களிடம் பேச ஒரு நேரம், அலுவலக கணக்கருடன் பேச ஒரு நேரம், ஆஸ்ரம பிரம்மசாரிகளுடன் பேச ஒரு நேரம், மாணவர் தலைவர்களுடன் பேச ஒரு நேரம் என 12 மணியிலிருந்து 2 மணி வரை அவரவர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும். அவரவர்களுக்கு உரிய நேரத்தில் சுவாமிஜியைக் கண்டு பேசிச் செல்வார்கள்.

இந்நேர ஒதுக்கீட்டின்படிதான் அனைத்தும் நடைபெறும். மாற்றமே இருக்காது. “ காலம் என்பது கிடைத்தற்கு அரிதான பொக்கிஷம். அதை ஒவ்வொருவரும் நினைவில் வைக்க வேண்டும். காலத்தை மதிக்காதவன் வாழ்வில் வெற்றி என்பதே இருக்காது.” என அவ்வப்போது சுவாமிஜி கூறுவார்.

வந்தவர்கள் சொல்லவேண்டிய விஷயங்களை கோர்வையாக கூறுவார்கள். அவர்கள் கூறுவதை சற்றே தலை குனிந்து கவனமுடன் கேட்பார். அவற்றுக்கு என்ன செய்ய வேண்டும், அதை எப்படி செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும், எப்போது முடிக்க வேண்டும் என திட்டவட்டமாக கூறி முடிப்பார். அனைத்து காரியங்களும் அவர் கூறும் கெடுவிற்குள் முடித்தாக வேண்டும். காரியங்களின் தன்மைக்கு ஏற்ப கெடுவின் நாள் மாறுபடும்.

மாலை பூஜை முடிந்தவுடன் மாணவத்தலைவர்கள் சுவாமிஜியை சந்திப்பார்கள். அன்றைக்கு முடிக்கப்பட்ட பணிகளைக் குறித்து தகவல் கூறுவார்கள். அவர்களிடம் நாளைய தினம் அவர்கள் முடிக்க வேண்டிய காரியங்களை கூறி அனுப்புவார்கள். பின்பு ஆஸ்ரம பிரம்மசாரிகளுடன் பேசுவார்கள். நிர்வாகம் சம்மந்தப்பட்ட விஷயங்கள் அலசப்படும். கணக்கு வரவு செலவுகளுக்கு பொறுப்பான பிரம்மசாரி அவைகளைப்பற்றி பேசுவார். உணவு விடுதி பொறுப்பிலுள்ள பிரம்மசாரி அன்றைய காரியங்களையும், நாளைய காரியங்களையும் தெரிவிப்பார். சிறிது நேரம் பொது விஷயங்கள் பேசப்படும். இவ்வாறாக இரவு 10, 11 மணி வரை பேசி முடிப்பார்கள்.

ஒரு கைதேர்ந்த சிற்பி எவ்வளவு கவனத்துடன் சிலைகளை உருவாக்கு வாரோ, அந்தளவு கவனத்துடன் இம்மியும் குறை இருக்காதவாறு காரியங்கள் நடைபெறுவதில் சுவாமிஜி அவர்கள் மிக எச்சரிக்கையுடனும் கவனமுடனும் கண்காணித்து வருவார்.

கல்லையும் முள்ளையும் மண்மேடுகளையும் சமப்படுத்தி வலுவான பாதையாக மாற்றியபின் அதில் நடப்பதா சிரமம்?

குடிலில் போடப்பட்ட நிர்வாகம் என்னும் வலுவான பாதை, லட்சியத்தை எட்டும் பாதையாகும். வெற்றி காணும் பாதையாகும். இன்றைக்கு மட்டுமல்ல என்றென்றைக்கும், சுவாமிஜி அவர்கள் போட்டுத் தந்த பாதை சுகமான, வெற்றிக்கு வழிகாட்டும் பாதையாகும். இதுவே குடிலின் முன்னேற்றப் பாதையாகும்.

13. அனாதை மாணவர்களை சேர்த்தலும், திறன்மிகு குடில் அலுவலர்களும்

தாய், தந்தையற்ற அனாதை சிறுவர்களை குடிலில் சேர்த்து அவர்களுக்கு உணவு, உடை, கல்வி, உறையுள், வைத்தியம் ஆகியவற்றை தருவதே லட்சியமாகக் கொண்டவர் குடில் சுவாமி அவர்கள். இச்சிறார்களை மையமாகக் கொண்டதுதான் குடில் நிர்வாகம். முதலில் குடிலில் அனாதை சிறுவர்களை சேர்க்கும் வழிவகைகளை காண்போம்.

மாணவர்களை சேர்த்தல்:

தாய், தந்தை இருவருமேயில்லாத அனாதைச் சிறுவர்களை மட்டுமே குடிலில் சேர்க்கின்றனர். 7 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள சிறுவர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் 8 ம் வகுப்பு வரை சேர்க்கப்படுகின்றனர்.

சேர்க்கைக்கான விதிமுறைகள் :

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர் ஆகிய இருபெரும் மகான்களின் போதனைகளுக்கு ஏற்ப திக்கற்ற ஏழை எளிய அனாதை மக்கட் சமூகத்தை தெய்வாம்சமாகக் கருதி செயல் முறையில் சுமார் 45 ஆண்டுகளாக சேவை செய்து வருவது ஸ்ரீராமகிருஷ்ண குடில். இங்கு சிறுவர்கள் கல்வி கற்க ஆரம்ப உயர்நிலை பள்ளிகளும் தங்கியிருக்க குருகுலமும் இருந்து வருகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலத்தில் மதம், ஜாதி, இனம், கட்சி பேதமற்று மனித சமுதாயத்திலுள்ள தாய் தந்தை இருவருமற்ற ஏழை அனாதை சிறுவர்கள் மட்டும் சேர்க்கப்படுகிறார்கள். சிறுமிகள் சேர்க்கப்படுவதில்லை. பெற்றோர்களில் யார் ஒருவர் சரீரத்துடன் எங்கு எத்தகைய நிலையில் இருந்தாலும் அத்தகைய சிறுவர்களையும் சேர்ப்பதில்லை. அங்கஹீனம் தொத்து நோய் உள்ள சிறுவர்களும் சேர்க்கப்பட மாட்டார்கள். ஒன்று முதல் 8 ம் வகுப்புகள் வரையில் மாணவர்கள் வருடம் முழுவதும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அத்தகைய சிறுவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம், கல்வி மற்றும் அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கி, பண்பும் ஒழுக்கமும் பயிற்றுவித்து துடைப்பம் எடுத்து துப்புரவு செய்வது முதல் புஷ்பம் தொடுத்து பூசனை புரிவது வரை உழைப்பின் மூலம் வாழ்க்கை முறை பயிற்சியளிக்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்களை குடில் நிர்வாகத்தில் ஒருவருடம் நித்திய வாழ்க்கையில் பயிற்சியளித்த பின் திருச்சியிலுள்ள அரசினர் ஐ.டி.ஐ தொழிற்பயிற்சி முடித்தவுடன் வேலை வாய்ப்புக்குரிய தகுதியுடன் வெளியில் அனுப்பி வைக்கப்படுவார்கள். இங்கு சேர்த்து விட்ட மாணவர்களை படிப்பு, பயிற்சி, ஐ.டி.ஐ முடியும் வரை எக்காரணம் கொண்டும் இடையில் வெளியே அனுப்பி வைக்கப்படுவதில்லை.

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று ஐ.டி.ஐ.யில் சேர இயலாத மாணவர்களுக்கும், எட்டாம் வகுப்பிற்கு மேல் கல்வியில் தேர்ச்சி பெற இயலாத மாணவர்களுக்கும், இங்கு இத்தகைய மாணவர்களுக்கென்றே தொடங்கப் பெற்றுள்ள தையற் பயிற்சியளித்து குடில் செலவில் வெளியே வேலைக்கும் சேர்த்து விடப்படுவார்கள் அல்லது குடிலிலிருந்து அன்பளிப்பாக தையல் மிஷன் ஒன்றை வழங்கி சொந்தமாக தொழில்புரிய அனுப்பி வைக்கப்படுவார்கள்.

சிறப்பு அம்சம்

இங்கு சேர்க்கப்படும் சிறுவர்களுக்கு குடிலிலிருந்து ரூ 1000 டெபாசிட் செய்யப்படுகிறது. அவர்களது படிப்பு முடிந்து குடிலைவிட்டு வெளியே செல்லும் போது, டெபாசிட்டின் கூடுதல் தொகையை அன்பளிப்பாக வழங்கி அனுப்பி வைக்கப்படுவார்கள். இத்திட்டத்தின் சிறப்பம்சம் யாதெனில் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை, படிப்பு முடிந்த ஆரம்ப நிலையிலேயே பிறர் கையை எதிர்பார்க்கும் நிலை ஏற்படலாகாது என்பதுதான் இதன் நோக்கம்.

தாய் தந்தை இருவருமேயற்ற சிறுவர்களை இங்கு சேர்ப்பதாக இருந்தால் கீழே கொடுக்கப்பட்டுள்ள 6 கேள்விகளுக்கும் தனித்தாளில் பதில் எழுதி அனுப்பி வைத்தால் முறையான சேர்க்கை பாரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

1. சிறுவனின் பெயர்
2. வயது
3. சேர வேண்டிய வகுப்பு
4. தாய் தந்தையர் பெயர்
5. தாய் தந்தையர் இறந்த தேதி
6. பாதுகாவலர் முகவரி

மேற்கண்ட விதிமுறைகளுக்கேற்ப குடிலில் சேர்க்கப்படும் அனாதைக் குழந்தைகள் 7 பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றனர்.

1. முதல் தரம்
2. இரண்டாம் தரம்
3. மூன்றாம் தரம் A
   மூன்றாம் தரம் B
   மூன்றாம் தரம் C
4. நான்காம் தரம்
5. ஐந்தாம் தரம்
6. ஆறாம் தரம்
7. ஏழாம் தரம்

அவரவர்களின் வயது, உடற்கூறு, உடல்வலிமை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் பிரிக்கப்படுகின்றனர். அவரவர்களுக்கு ஏற்றவாறு பணிகள் பிரித்துத் தரப்படுகின்றன. இன்றைய தினம் குடில் இந்த அளவிற்கு எழில் மிகு கட்டடங்களுடன் காட்சியளிக்கிறது என்றால், இங்கு பயிலும் குருகுல மாணவர்களின் ஏற்றமிகு தளராத உழைப்பே காரணம். ஆயிரமாயிரம் தென்னை மரங்கள் நிமிர்ந்து நின்று குடிலின் பொருளாதாரத்தில் நிலையான பங்கு வகிக்கின்றது என்றால் அதற்கு மூலகாரணம் இவர்களே. பார்த்தவர்கள் வியப்புறும் குடிலின் துப்புரவிற்கு மூலகர்த்தாக்கள் இச்சிறார்களே. சீதாராமனின் ஆஞ்சநேயரது வானரப்படைகள் மானிட உருவில் குடிலில் ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு குடிலுக்கு ஒரு மகத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

மூன்று முத்தான ஆஸ்ரமவாசிகள் :

குடிலின் அன்றாடப் பணிகள்அனைத்தும் குடில் தலைவருக்கு அடுத்ததாக உள்ள மூன்று பிரம்மசாரிகள் பகிர்ந்து கொண்டு பணியாற்றுகின்றனர். மாணவர்களை அரவணைத்து செல்ல வேண்டிய நேரத்தில் அரவணைத்தும், கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும், அவர்களை வைத்து பணிபுரியும் பிரம்மசாரிகளின் நிர்வாகம் போற்றத்தக்க ஒன்றாகும்.

1. பிரம்மசாரி வீரசந்திரன் அவர்கள்:

குடிலின் பணித்திட்டங்களின் பொறுப்பாளர்களான மூன்று பிரம்மசாரிகளில் இவரே வயதில் மூத்தவர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மூதுரைக்கு ஏற்ப உணவு தயாரித்து வழங்கும் உணவு விடுதியின் பராமரிப்பு இவரைச் சார்ந்தது. சிறுசிறு கட்டட மராமத்துப் பணிகளையும் மேற் கொண்டுள்ளார். கட்டட வேலைகளில் தலைசிறந்த

கொத்தனாரைப் போன்ற வல்லவர் இவர். 1961 ம் ஆண்டில் குடிலில் சேர்ந்து படித்தவர். 1999 ம் ஆண்டில் பிரம்மசாரி தீட்சை பெற்றவர். ஆக்கப்பணிகளில் அதிக ஆர்வம் கொண்டவர். மலர்வனம் அமைப்பதில் பெருவிருப்பம் கொண்டவர்.

2. பிரம்மசாரி கருப்பையா அவர்கள்

குருகுல மாணவர்களின் படிப்பிற்கு பொறுப்பானவர் இவர். பள்ளி நேரங்களில் அடிக்கடி பள்ளி வளாகத்திற்கு சென்று கவனிப்பார். மாதாந்திர தேர்வுகளில் பின்தங்கியிருக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு என்ன வழி காணலாம் என ஆசிரியர்களுடன் கலந்து பேசி நல்ல ஒரு திட்டத்தை கொண்டுவருவதில் அதிக கவனம் செலுத்துவார். குடிலின் மருந்தகப்பிரிவின் பொறுப்பாளரும் இவரே. நோயுற்ற மாணவர்களை மிகக் கவனத்துடன் பார்த்துக் கொள்வார். ஸ்தாபன வரவு செலவு கணக்கை மேற்பார்வையிடுவார். 1980 ம் ஆண்டில் குடிலில் மாணவராக சேர்ந்தார். 1989 ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றார். திருச்சி அரசினர் தொழிற்பயிற்சி பள்ளியில் பயிற்சியை 1993 ல் முடித்தார். அதன்பின் பிரம்மச்சர்ய தீட்சை பெற்றார். எந்நேரமும் குடில் பணிகளில் தீவிர கவனம் செலுத்துபவர்.

3. பிரம்மசாரி செந்தில் அவர்கள்

குடில் பிரம்மசாரிகளுள் வயதில் இளையவர் இவரே. பொதுக்காரியங்கள், விவசாயப் பணிகள் ஆகியவற்றின் பொறுப்பாளராக பணிபுரிகின்றார். 1984 ம் ஆண்டில் குடிலில் மாணவராக சேர்ந்தார். திருச்சி அரசினர் தொழிற்பயிற்சி பள்ளியில் 1999ம் ஆண்டு முடித்தார். அதே ஆண்டில் பிரம்மச்சர்ய தீட்சை பெற்றார். குடில் பணிகளில் முழுக்கவனம் செலுத்தி சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

இவ்வாறாக மூன்று பிரம்மசாரிகளும் குடிலின் மேன்மை ஒன்றையே குறிக்கோளாக கொண்ட அரும்பணியாற்றி வருகின்றனர்

குடில் அலுவலர்கள்

திரு A. சதாசிவம். அலுவலக கணக்கர்

" தக்க பணிக்கு தக்க பாத்திரம் " என ஆன்றோர்கள் கூறுவார்கள். பணிக்கு தக்க நபர்களை தேர்ந்தெடுத்த பணியை ஒப்படைத்தால் பணி சிறக்கும். அந்த வகையில் அலுவலகக் காரியங்களை கவனித்து வருபவர்.

“குறுமுனி” உருவில் சக்கரமாக சுழன்று வரும் திரு. சதாசிவம் ஆவார். சதா–சிவமே என்று இராமல் சுறுசுறுப்புடன் தட்டெழுத்துப்பணி, வரவு செலவு கணக்குகள், கோப்புகள் பராமரிப்பு, அரசுத் தணிக்கை, மாணவர் சேர்க்கை ஆகிய பணிகளில் செவ்வனே கவனம் செலுத்தி வருபவர். அன்றைய பணி அன்றே முடியவேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பும் கவனமும் கொண்டவர் அமரர் சுவாமிஜி அவர்கள். குடிலின் நிதி வசூல் உச்சநிலையில் இருந்த போது மணியார்டர்கள், காசோலைகள், உண்டியல்கள் வந்து கொண்டே இருக்கும். உடனுக்குடன் அவைகளை கணக்கில் வரவு வைத்து, அன்றே அத்தொகைகளுக்கான இரசீதிட்டு அனுப்பி வைக்கும் அவரது வேகம் மிகுந்த பணியை அன்று கண்டவர்கள் அதிர்ந்து போவார்கள்.

குடிலின் வெளிக்காரியங்கள்:

குடிலின் ஆரம்பகாலத்திலிருந்தே குடிலின் வெளிக்காரியங்கள் கவனித்தல், தபால் போக்குவரத்து, கணக்கு வழக்குகள், குடிலைப் பற்றிய விளம்பர துண்டு பிரசுரங்களை வெளியிடுதல் இதர அவசியமான காரியங்களைக் கவனித்தல் ஆகிய பணிகள் அனைத்தையும் திருச்சி உறையூர் கஸ்தூர் பிரஸ் உரிமையாளர் திரு. தயாநிதி அவர்கள் கவனித்து வந்தனர். அடிக்கடி ஆஸ்ரமத்திற்கு வந்து செல்வார். பல்லாண்டுகள் அவர் மேல் குறிப்பிட்டுள்ள பணிகளை செவ்வனே கவனித்து வந்தார்.

குடிலின் மானேஜர்கள் : 1. திரு. சங்கரநாராயணன் 2. திரு. மீனாட்சி சுந்தரம் (ஒய்வு பெற்ற அரசு அதிகாரிகள்)

இரட்டையர்களாக’ இணைந்து அனைத்துப் பணிகளையும் கவனித்து வந்தனர். திருச்சி, சென்னை, மதுரை அரசு அலுவலகங்களுக்கும், நீதிமன்ற விவகாரங்கள் ஆகியவைகளை நேரம் காலம் கருதாமல் குடில் பணி ஒன்றையே கருத்தில் கொண்டு சேவை செய்து வந்தனர். இரு அய்யாக்களும் ஒருவர்க்கொருவர் அண்ணாச்சி, அண்ணாச்சி என அழைத்து அவர்கள் மேற்கொண்ட பணிகளைக் கண்டவர்கள் வியந்தனர்.

அரசு உயர் அதிகாரிகளாக இருந்து இருவரும் ஓய்வு பெற்றவர்கள். அதன் பின்னரும் குடிலில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். முதுமையை எட்டிப் பார்த்த போதிலும் அமரர் சுவாமிஜி அவர்களின் ஆசியாலும் அன்பாலும் இளைஞர்களைப் போல அதிதீவிரமாக பணிபுரிந்து வந்தனர். நெடுமாலென உயர்ந்த இரு அன்பர்களும் குடிலின் காரியங்களை சங்கரனும் சுந்தரமுமாக ஒருவர்க்கொருவர் கலந்து பணிபுரிந்து வந்த வேளையில் எதிர்பாராத விதமாக திரு. சங்கர நாராயணன் அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். அதன்பின்

திரு. மீனாட்சி சுந்தரம் ஒருவராகவே பணிகளை கவனித்து வந்தார். சில ஆண்டுகளுக்குப்பின் அவரும் முதுமை காரணமாக குடில் பணியிலிருந்து விலகிச் சென்றுவிட்டார்.

3. இவர்களை அடுத்து மானேஜராக தற்போது திரு. ஜெயபால் அவர்கள் பணியாற்றி வருகின்றார். இவர் அரசு உயர் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். அமரரான சுவாமிஜியிடம் பெரும் மரியாதையும் மதிப்பும் ஏன் பக்தியும் கொண்டவராக இருந்து வந்தார். அமைதியான குணம் படைத்தவர். தோற்றத்திலும் எளிமையானவர். படாடோபம் அற்றவர். இன்னும் பல சிறந்த குணநலன்கள் வாய்க்கப் பெற்றவர். எந்த நேரத்திலும் குடில் காரியங்களை சளைக்காமலும் சோர்வின்றியும் நிறைவேற்றப் புறப்பட்டு விடுவார். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களுக்கும் காரில் சென்று கிராமம் கிராமமாகப் போய் மக்களை சந்தித்து, " தாய் தந்தை இருவருமில்லாத அனாதைச் சிறுவர்களை குடிலில் சேர்த்து விடுங்கள்." என பிரசாரம் செய்தார். குடிலைப் பற்றிய துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே வினியோகித்தார். தனி ஒருவராக ஆயிரக் கணக்கான மைல்கள் தனது உடல் நிலையைப் பற்றி சிறிது கூட எண்ணாமல், குடில் சேவையே மகேசன் சேவையென்று எண்ணி அவர் செய்த சேவை மிகமிக போற்றுதற்குரியது. இன்றும் தொடர்ந்து குடிலுக்காக அரும் பணியாற்றி வருகிறார். பணியில் அவர் காட்டும் வேகம் போற்றுதற்குரியது.

மும்மூர்த்திகளின் முப்பெரும் பணி

குடிலிலே பயின்று, படிப்பு முடிந்தபின் தங்களை ஆதரித்து ஆளாக்கிய தாய்வீடான குடிலுக்கே பணிசெய்வது என்ற லட்சிய உணர்வோடு பணியாற்றி வரும் மூவரைப் பற்றிப் பார்ப்போம்.

1. திரு. ரங்கராஜன் : கார் டிரைவராகவும், வேன் டிரைவராகவும் குடிலில் பணியாற்றி வருகிறார். மறைந்த சுவாமிஜி அவர்களின் நன்கொடை வெளிப்பிரயாணங்கள் செல்லும் போதெல்லாம் காரின் சாரதி இவர்தான். கார் ஓட்டுவதில் வல்லவர். தமிழ்நாட்டையே காரில் வலம் வந்திருக்கிறார். ஆயிரமாயிரம் மைல்கள் சுவாமிஜியோடு பிரயாணம் செய்துள்ளார். இவரது காரோட்டும் திறமைப் பற்றி வாரியார் சுவாமிகள், " ரங்கராஜன் தான் டிரைவர் என்றால் இரவு முழுவதும் கூட பயமின்றி பிரயாணம் செய்யலாம். மிகச் சிறந்த டிரைவர் அவர்." எனப் புகழ்ந்துள்ளார். இரவு பயணங்களின்போது மறைந்த சுவாமிஜியும் வாரியார் அவர்களும் காரின் பின் இருக்கையில் சாய்ந்தவாறே தூங்கி விடுவார்கள். ரங்கராஜனின் ஓட்டுதலில் குடில் கார் வேகமாக விரைந்து சென்று கொண்டிருக்கும். தீடிரென வாரியார் சுவாமிகளுக்கு முழிப்பு வந்துவிடும். கார் செல்லும் வேகத்தை பார்த்ததும், " பக்தர்கள் ரங்கநாதா

எங்களை காப்பாற்று" என வேண்டுவார்கள். ஆனால் நாங்கள் ரங்கராஜா எங்களை பத்திரமாக குடிலில் சேர்த்து விடப்பா " என ஹாஸ்யமாக டிரைவர் ரங்கராஜனிடம் கூறுவார். காரின் வேகம் சற்று குறையும். வாரியார் விட்ட தூக்கத்தை தொடர்வார். கார் மீண்டும் வேகம் எடுக்கும். எவ்வளவு வேகமாக காரை ஓட்டினாலும் ஒரு நொடியில் காரை கண்ட்ரோல் செய்வதிலும் வல்லவர். கார் மட்டுமல்ல குடில் டிராக்டர் குடில் வேன் ஆகியவற்றிற்கும் இவரே சாரதியாவார். தனது பணியை கண்ணும் கருத்துமாக செய்து வருகிறார்.

2. திரு.சுப்பிரமணியன்

குடிலின் மின்வேலைகள் அனைத்தையும் சீராக பராமரித்து வரும் எலக்ட்ரீசியன் இவர்தான். மிகப் பரந்த குடில் பரப்பில் ஏறத்தாழ சிறிதும் பெரிதுமாக 25 கட்டடங்கள் உள்ளன. அனைத்திலும் மின் விளக்குகள், மின் காற்றாடி உண்டு. இது தவிர நீர் இறைக்கும் மோட்டார்கள் நான்கைந்து உள்ளன. மின் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் உபயோகிக்க ஜெனரேட்டர்கள் இரண்டு உள்ளன. இவைகளின் பராமரிப்பை ஒவ்வொரு நாளும் கவனிக்க வேண்டும். எவ்வித மனச்சலிப்புமின்றி தனது பணியை செவ்வனே செய்து வருகின்றார். மின் வினியோகத்தில் எப்போது கோளாறு வரும் என சொல்ல முடியாது. எங்கு என்ன கோளாறு ஏற்பட்டாலும் கவனித்து சரி செய்ய தயாராக இருப்பார். மின் பொருட்கள் வரவு செலவு இருப்பு ஆகிய விபரங்கள் எந்த நேரத்தில் கேட்டாலும் சரியான தகவல் உடனே கிடைக்கும். ஒரு பெரிய ஸ்தாபனத்தின் மின் ஓட்டத்தில் எப்போதும் கோளாறு எதுவும் நேராது பார்த்துக் கொள்வது என்பது கடினமான வேலை. எது நேரினும் சரி செய்ய தயாராக இருந்து வருகின்றார் இவர்.

3. திரு. துரை

300 சிறுவர்கள் படித்து வரும் குடிலின் உணவு தயாரிக்கும் பணி அனைத்தும் நீராவி மூலம் நிறைவேற்றப்படுகிறது. அதற்கான பெரிய பெரிய சிலிண்டர்கள் மூலம் நீராவி உண்டாக்கப்படுகிறது. இவைகள் சரியாக இருந்தால் தான் காலாகாலத்தில் உணவு தயாரித்து வினியோகிக்க முடியும். இந்த ஜீவநாடி பொறுப்பை இவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இது மட்டுமல்ல இவரது பொறுப்பு. குடிநீர்க்குழாய்கள் பராமரிப்பு போர்வெல் கிணறுகள் பராமரிப்பு ஆகியவற்றின் பொறுப்பாளரும் இவரே. தண்ணீர் சப்ளை எப்போதும் இருந்து கொண்டேயிருக்க இவர் மிகவும் பாடுபட்டு வருகிறார். கேட் வால்வு சரிபார்த்தல், துருப்பிடித்த குழாய்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய குழாய்களை பொருத்துதல். உணவும் தண்ணீரும் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதவை. இப்பேர்ப்பட்ட அரிய பணியை இவர் திறமையாக சமாளித்து வருகின்றார்.

விவசாயப் பணிகள்:

நங்கவரம் திரு. முத்தையா என்பவர் ஆரம்ப காலம் முதற்கொண்டு குடிலின் வெளி விவசாய வேலையை கண்ணும் கருத்துமாக பார்த்து வருகின்றார். பெருகமணி திரு. சின்னதுரை என்பவரும் பேட்டைவாய்த்தலை திரு. முத்துசாமி என்பவரும் தேவைப்பட்ட காலங்களில் ஆஸ்ரமத்தை கலந்து கொண்டு விவசாயப் பணிகளை செவ்வனே கவனித்து வருகின்றனர். குருகுல மாணவர்களும் இவர்களுக்கு உதவியாக தேவைப்பட்ட சமயங்களில் செல்வதுண்டு. குடில் மாட்டுப் பண்ணை கால்நடைகளை, கால்நடை வைத்தியர் திரு. கந்தசாமி அடிக்கடி வந்து பார்க்கின்றார். தேவையான ஆலோசனைகளையும் கூறுகின்றார். திருப்பராய்த்துறை அரசு கால்நடை மருத்துவரும் கவனித்து வருகின்றார்.

மாணவர் வைத்திய வசதி:

சிறுகமணி டாக்டர் திரு. ராமச்சந்திரன் குடில் மாணவர்களின் மருத்துவராக பல்லாண்டுகள் இருந்து வந்திருக்கிறார். பின்பு திருச்சி டாக்டர் திரு. ஜி. விஸ்வநாதம் அவர்கள் இலவச வைத்திய சேவை பார்த்து வந்தார். அவரது மறைவிற்கு பின் அவரது மைந்தர்கள் டாக்டர் ஜெயபால், டாக்டர் கனகராஜ் ஆகியோர் குடிலுக்கு வந்து மாணவர்களை பரிசோதித்து மருத்துவம் செய்து வருகின்றார்கள். திருச்சி பல் டாக்டர்களான திரு. கேசவராஜ் திரு. கருணாநிதி ஆகியோர் குடில் மாணவர்களுக்கு பல்சிகிச்சை அளித்து வருகின்றனர்.

மாணவர் கல்விப்பயிற்சி:

குடில் மாணவர்களின் கல்விக்காக 5 வகுப்புகள் கொண்ட ஆரம்பப் பள்ளி ஒன்றும் 6 முதல் 10 வகுப்புகளைக் கொண்ட உயர் நிலை பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. சில ஆண்டுகளாக தொடர்ந்து 10 ம் வகுப்பு அரசு தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி கிடைத்துள்ளது. இனி வரப்போகும் ஆண்டுகளில் 100 விழுக்காடு தேர்ச்சிபெற ஆசிரியர்கள் கடின முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பள்ளியின் சர்வசமயப் பிரார்த்தனை நடைபெறுகிறது. இந்த சர்வோதயாப் பிரார்த்தனையில் குரான், பைபிள், திருக்குறள், கீதை மற்றும் பல சமயப் பெரியோர்கள் கருத்துக்களும் வாசிக்கப்படுகின்றன. இப்பிரார்த்தனையில் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கு பெறுகின்றனர். மாதம் ஒரு முறை மாணவர் மன்ற கூட்டம் நடத்தப்படுகின்றது.

வெள்ளிதோறும் கொடிவணக்கம் நடத்தப்படுகிறது. ஆசிரியர்களின்

சிறப்புரைகள் இதில் இடம் பெறும். மேலும் சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி, சர்வோதய தினம், ஆசிரியர் தினம், குடியரசு தினம் இன்னும் பல விழாக்கள் நடைபெறுகின்றன.

குடிலின் ஒவ்வொரு பிரிவு நிர்வாகமும் நன்கு திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

14. வாரியார் சுவாமிகள் அருளுரை

'குடில்' என்ற சொல் ஒரு அருமையான தமிழ்ச் சொல். புலன்களை வென்றவர்கள், தவநெறியில் நின்றவர்கள் ஆகியோர் எளிமையாக வாழுகின்ற இடம் குடில். குடில் அன்பு மயமானது. அங்கு அருள் ஒளி வீசும். இன்ப நீர் ஊற்றெடுத்து ஓடும்.

" அன்பெனும் குடில்புகும் அரசே" என்று ராமலிங்க அடிகள் பாடுகின்றார். தொடர்பு உடையாருடன் பயன் கருதாமல் காட்டும் விருப்பம் அன்பு எனப்படும். தொடர்பு இல்லாதவர்கள் பால் காட்டும் விருப்பம் 'அருள்' எனப்படும். அன்பு என்ற பெண்மணி பெற்ற குழவி அருளாகும்.

ஆசையுடையவன்	விலங்கு
அன்புடையவன்	மனிதன்
அருள் உடையவன்	தெய்வம்

மனிதனை தெய்வமாக்கும் ரசவாதம் அருளுக்குண்டு. சோழவள நாட்டிலே திருப்பராய்த்துறை திருக்கோவிலுக்கு மேற்கே காவிரிக்கரையில், ஸ்ரீராமகிருஷ்ண குடில் விளங்குகிறது. சாந்தமே வடிவான உயர்திரு பிரம்மசாரி ராமசாமி அடிகளார் குடில் ஸ்தாபனத்தை ஏற்படுத்தி சிந்தைக்கும் எட்டாத விந்தையுடன் நடாத்தி வருகின்றார். இக்குடில் தாய், தந்தை இருவரும் இல்லாத திக்கற்ற சிறுவர்களுக்கு புகலிடமாக காட்சி தருகின்ற மாட்சிமை உடையது.

சிறந்த அறங்கள் ஐந்து எனப்படும். உணவு, உடை, உறையுள், கல்வி, மருந்து என்ற ஐந்தும் உயர்ந்த அறங்களாகும். இக்குடில் அனாதைகளான குழந்தைகட்கு உணவு கொடுத்து உறைவிடம் தந்து உடை வழங்கி, கல்வியை ஈந்து மருந்து நல்கி ஆதரிக்கின்றது. இது போன்ற உத்தமமான நிறுவனம் தமிழகத்தில் வேறு எங்கும் காணமுடியாது. இக்குடிலுக்குச் சென்றால் சிறு குப்பையோ அனுசிதமான பொருட்களோ எங்கும் காண முடியாது. தூய்மையும் வாய்மையும் இங்கு கைகோர்த்து களிநடனம் புரிகின்றன. இங்கே சிறிது நேரம் தங்கினால் மனதிற்கு பெரிய சாந்தி உண்டாகின்றது. உள்ளத்தில் உவகைத்தேன் ஊற்றெடுத்து பொங்கி வழிகின்றது. மெய் மறந்து நிற்கும் சமாதி நிலை கைகூடுகின்றது

ஆஹா. . . . எத்தகைய ஒரு அற்புத காந்தசக்தி இங்கே ஒளி விடுகின்றது. வடக்கே காவிரி நதி ஓடுகின்ற அழகும், தெற்கே இரு வாய்க்கால்கள் ஓடுகின்ற எழிலும் மா, தென்னை முதலிய தருக்களின் எழிலும் செடிகளும் கொடிகளும் பூத்துக் குலுங்குகின்ற பொலிவும் நம் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாக திகழ்கின்றன.

குடில் சுவாமிகளை பார்த்தால் பண்டை காலத்து மகாமுனிவர்கள் நமக்கு நினைவு வரும். இவர் இரவு பகலாக செய்யும் தொண்டு இமயமலையினும் உயர்ந்தது. அடியேன் பல ஆண்டுகளாக குடில்தொண்டில் ஈடுபட்டு குடில் சுவாமிகளுடன் பழகி வருகின்றேன். அவருக்கு சினம் வர ஒருநாளும் பார்த்ததில்லை. சாந்தத்தின் உறைவிடமாக அடிகளார் விளங்குகிறார். இவருக்கு அணிகலன்கள் எளிமை, அன்பு, அடக்கம், அருள், துப்புரவு, தெய்வபக்தி முதலிய நற்குணங்களாகும். இத்தகைய ஒரு புண்ணிய வடிவத்தை மண்ணிலும் விண்ணிலும் காண முடியாது. இவரது பெருமை எண்ணிலும் எழுத்திலும் அடங்காது. சேவையின் சிகரமாக திகழ்கிறார்.

இங்கே ஜாதி, மத, இனவேறுபாடுகள் இன்றி குழந்தைகள் பரமசுகத்துடன் வாழ்கிறார்கள். இவர்கள் அத்தனை பேர்களுக்கும் தாய் சாரதாமணி தேவி, தந்தை பரமஹம்ஸர். ஆஹா. இக்குழந்தைகள் பாக்கியசாலிகள். எத்தனையோ பிறவிகளில் புண்ணியம் செய்திருந்தால்தான் இக்குடிலுக்கு உதவுகின்ற வாய்ப்பு கிடைக்கும்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" என்கின்றார் தெய்வப்புலவர்.

திக்கற்றவர்களின் பசியைத் தீர்த்தால், அவனுக்கு சேம நிதியாக விளங்கும். ஆதரவற்ற குழந்தைகள் வயிற்றில் இடும் ஒவ்வொரு அன்னமும் ஒவ்வொரு தங்கப்பவுனாக நமக்கு வரும். இது முற்றிலும் உண்மை. இந்த அனாதைக் குழந்தைகட்கு செய்த அறத்தால் வரும் புண்ணியம் நம் குழந்தைகட்கு வந்து சேரும். கோயிலிலே ஒரு பாலசுப்பிரமணியரைப் பார்க்கலாம். இங்கே 300 பாலசுப்பிரமணியர்களை பார்க்கலாம். இக்குடிலுக்கு போய் சிறிது நேரம் தங்கி வந்தால் ஒரு 'டானிக்' சாப்பிட்டது போல் உள்ளத்துக்கும் உயிருக்கும் ஆக்கமும் ஊக்கமும் உண்டாவதை அனுபவத்தில் பார்க்கலாம்.

குடிலில் அன்பு மணம் வீசுகிறது. அருள்ஒளி படர்கிறது. தெய்வீக சக்தி நடம் புரிகின்றது. குடிலுடன் தொடர்பு கொண்டால் முக்தியும், சித்தியும், பக்தியும் விளையும். இக்குடிலின் நிரந்தர நிதியாக வழங்கிய அன்பர்கள் பரந்த உலகில் நிரந்தர இன்பம் எய்துவார்கள். வரந்தரும் தெய்வ அருளைப் பெறுவார்கள்.

பரமஞானியாகிய பட்டணத்து அடிகள் உண்மை ஞானிகள் எப்படி இருப்பார்கள் என்று நமக்கு கூற வருகின்றார். ஞானிகள் பளிங்கு போல் இருப்பார்கள். கங்கா ஜலம் போலிருப்பார்கள். வானம் போல் இருப்பார்கள் என்றெல்லாம் கூறவில்லை.

"சேய் போலிருப்பார் கண்டீர் உண்மை
ஞானந் தெளிந்தவரே."

என்கிறார். ஞானிகளுக்கு உவமை சேய் என்று கூறிய நுட்பத்தை சிந்தியுங்கள். குழந்தைகள் உள்ளத்திலே காமக் குரோதங்கள் இல்லை. இத்தகைய மாசற்ற குழந்தைகள் உண்டு உடுத்தி, கலை பயின்று, உவந்து உலாவி மகிழும் இடம் ஸ்ரீராமகிருஷ்ண குடில். இதற்கு இணை இதுவே தான்.

மலைகளில் சிறந்தது	இமயம்
தீர்த்தங்களில் சிறந்தது	கங்கை
மண்ணில் சிறந்தது	பிருந்தாவனம்
மணிகளில் சிறந்தது	ருத்திராட்சம்
மொழிகளில் சிறந்தது	தமிழ்
தர்மஸ்தாபனங்களில் சிறந்தது	ஸ்ரீராமகிருஷ்ண குடில்

இக்குடிலைத் தாங்கும் தூண்களாக உதவி புரிபவர்கள் பலர். கலெக்டர் திரு. மலையப்பன், நீதிபதி மகராஜபிள்ளை, சோமசுந்தர ரெட்டியார் இன்னும் பல அன்பர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இக்குடில் திங்களும் செங்கதிரும் உள்ள நாள்வரை நின்று ஓங்கும். இதனைக் கண்டால் மனத்துயரம் நீங்கும்.

நேரிசை வெண்பா

அன்றறிவா மென்னா தறஞ்செய் தருள்சுரந்தே
ஒன்றுமிலாச் சேய்கட் குதவுவதால் என்றுமுயற்
நன்றனைத்துஞ் செய்வதனால் நாதனருளால்
இமயக் குன்றமென வாழ்க குடில்

15. மலையென உயர்ந்த மலையப்பனுக்கு உயர்ந்த சிகிச்சை

குடில் எனும் பரமஹம்ஸ தேவரின் ஆலயத்தின் தூண்களில் ஒருவராக அங்கம் வகித்து பெருமையடைந்தவர் 'மக்கள் கலெக்டர்' என பாமரர்களால் அழைக்கப்பட்ட மலையப்பன் ஆவார். பெயரிலே மலை. ஆனால் மெலிந்த உடல். ஆனால் உள்ளத்து உறுதியிலே மெலிந்தவர் அல்லர். எடுத்த காரியத்தை முடிப்பதில் எஃகு மனம் படைத்தவர். குடிலோடு ஒன்றிப் போனவர். சுவாமிஜியின் பேரில் அளவற்ற அன்பு கொண்டவர். குடில் நன்கொடைக்காக

சுவாமிஜியுடன் பல்லாயிரம் மைல்கள் காரில் பிரயாணம் செய்தவர். அத்தகைய நல்ல மனிதருக்கு நோயைத் தந்து பார்ப்பதில்தான் 'அவனுக்கு' எவ்வளவு ஆனந்தம்.

மலையப்ப ஐயா அவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. தஞ்சை – திருச்சி மருத்துவ நிபுணர்கள் நன்கு பரிசோதித்து " புகழ்பெற்ற வேலூர் மருத்துவ மனையில்" ஒரு அறுவை சிகிச்சை செய்து கொண்டால் நல்ல பலனைதரும்" என ஆலோசனை கூறியதின் பேரில், ஐயா அவர்கள் வேலூர் சென்று பலவித பரிசோதனைக்குப் பின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அறுவை சிகிச்சைக்கான நாள் குறிக்கப்பட்டது. ஆனால் அவருக்கோ மனதிலே ஒரு கிலேசம்; அறுவை சிகிச்சை எப்படி முடியுமோவென்று. குடில் சுவாமிஜியின் ஆறுதலும் ஆசியும் கிடைத்தால் அறுவை சிகிச்சை நல்லபடியாக நடக்கும் என்பதில் தீவிரமாக இருந்தார்கள். அறுவை சிகிச்சை நடக்கும்போது குடில் சுவாமிஜி அவர்கள் அருகில் இருக்க வேண்டுமென்று விரும்பினார். தன் விருப்பத்தை கடிதம் மூலமாக முன் கூட்டியே தெரிவித்திருந்தார். சுவாமிஜி அவர்களும் மலையப்ப ஐயாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு வேலூர் சென்றார். மலையப்ப ஐயாவிற்கு சுவாமிஜியை பார்த்த உடன் பெருத்த ஆறுதல் உண்டாயிற்று. குறிப்பிட்ட நாளில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடுகள் நடந்தன. ஆபரேஷன் தியேட்டருக்கு போகுமுன்னர் ஐயா அவர்கள் சுவாமிஜியிடம் வந்தார்.சுவாமிஜியும் அவருக்கு அன்போடு ஆறுதல் கூறி, " குருமகராஜ் துணை இருப்பார். பயப்பட வேண்டாம். எல்லாம் நல்லபடியாக நடக்கும்" என ஆசிகூறி அனுப்பினார். சிலமணி நேரங்கள் அறுவை சிகிச்சை தொடர்ந்தன. சுவாமிஜிபேரிலும் அவரது ஆசிகள் நிறைந்த அன்புமொழிகளிலும் ஐயா வைத்திருந்த திடமான நம்பிக்கை வெற்றியைத் தந்தது. அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து முடிந்தது.

" நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறை தீர்ப்பு"

ஞானியின் பேரில் வைத்திருக்கும் பக்தியும் நம்பிக்கையும், ஆண்டவன் பேரில் வைத்திருக்கும் பக்தியும் நம்பிக்கையும் நிச்சயம் எக்காரியங்களிலும் வெற்றியைத் தரும். இதற்கு சாட்சியாக இங்கு காந்தியின் வாழ்வில், அவரது செவிலித்தாயார் மேற்கொண்ட ஒரு உத்தியைக் காண்பது பொருத்தமாக இருக்கும்.

காந்திஜி சிறுவனாக இருந்த போது மிகுந்த கூச்சமும் பயமும் உடையவராகத் திகழ்ந்தார். இருட்டைக் கண்டால் பயம். சூரியன் மறைந்த பின் வெளியே செல்ல பயப்படுவார். இவரது சுபாவத்தை அறவே மாற்ற அவரது செவிலித்தாயார் உறுதி பூண்டார்.

" காந்தி. . . நீ எதற்கும் பயப்படக்கூடாது. உன் மனதில் பயம் குடிகொண்டுள்ளது. மனதில் தைரியம் குடிகொண்டால் ப்யம் ஓடிவிடும். நீ

ராமபிரானை எப்போதும் மனதில் நினைத்துக்கொள். அவர் நாமத்தை விடாமல் ஜெபித்து வா. அவரிடத்தில் பக்தியும், நம்பிக்கையும் வை. ஸ்ரீராமனது ஆசியும் அருளும் உனக்கு நிச்சயம் கிட்டும். எக்காரியத்தை நீ தொடங்கினாலும் வெற்றி கிட்டும். எனவே ராமனை மறவாதே என ஒவ்வொரு நாளும் அந்த செவிலித்தாய் சொல்லிச் சொல்லி காந்தியின் மனதை மாற்றினார். காந்தியின் மனதில் ராமன் குடிபுகுந்து விட்டார். அச்சம் வெளியேறியது. கூச்சம் அறவே மறைந்தது. ராமன் பேரில் அவர் வைத்திருந்த பக்தியும் நம்பிக்கையும் அவரை உலகின் மகாத்மாவாக ஆக்கியதை பாரத மக்கள் அறிவர்.

16. மலையப்பனை தேடி வந்த அரசியல் பதவி

தமிழ்நாட்டில் 1962ம் வருடம் நடைபெற வேண்டிய தேர்தல் நெருங்கிவரும் வேளை. திரு. கல்யாண சுந்தரம் தொகுதியில் அவரை வெற்றிகொள்ளத் தக்க நபரை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறுத்த வேண்டும் என பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் திட்டமிட்டார்கள்.

திருச்சியில் அது சமயம் காங்கிரஸ் தியாகி திரு T.S. அருணாசலம் அவர்களுக்கு செல்வாக்கு அதிகம். காமராஜ் அவர்கள் கல்யாணசுந்தரத்திற்கு எதிராக யாரை நியமித்தால் வெற்றிகாண முடியும் என ஆலோசனை நடத்தினார். முடிவாக திரு. மலையப்பன் அவர்களை காங்கிரஸ் கட்சி சார்பாக நிறுத்த முடிவாயிற்று.

தியாகி அருணாசலம் அவர்கள் தஞ்சை சென்று திரு. மலையப்பன் அவர்களை சந்தித்து, " ஐயா, தலைவர் காமராஜர் அவர்கள் கல்யாணசுந்தரத்திற்கு எதிராக நீங்கள்தான் திருச்சி அசெம்பிளி வேட்பாளராக நிற்க வேண்டும் எனக்கூறி விட்டார். இதை தெரிவிக்கவே வந்துள்ளேன்." எனக் கூறி முடித்தார். இன்னும் இரு தினங்களில் பதில் சொல்வதாக கூறி மலையப்பர், அருணாசலம் அவர்களை அனுப்பி வைத்தார்.

உடனே குடில் சுவாமிஜியை தஞ்சைக்கு வருமாறு தகவல் அனுப்பினார். சுவாமிஜியும் தஞ்சை சென்றார். தனக்கும் திரு. அருணாசலத்திற்கும் இடையில் நடந்த பேச்சு முழுவதையும் கூறிமுடித்தார்.

அதற்கு சுவாமிஜி அவர்கள், " ஐயா... யாருக்கு எதிராக யாரை நிறுத்துவது என்பதில் மிகப்பொருத்தமாக தீர்மானித்து மிகச்சரியாக கணக்கிட்டிருக்கிறார். தங்களுக்கு தேர்தல் செலவு ஒரு பைசா இல்லாமல் எல்லாம் அவர்களே பார்த்துக் கொள்வார்கள். ஐயாவிற்கே வெற்றி என்பதும் உறுதி. உங்களுக்கே ஹரிஜன இலாகா மந்திரி பதவியும் கூட கொடுப்பார்கள். ஆனால் " மக்கள் கலெக்டர் மலையப்பன்" என்ற சொல் 5 வருட மந்திரி பதவியில் மறைந்து விடும். நீங்கள் மனதிற்கு பட்டதை அப்படியே

கூறிவிடுவீர்கள். சொன்னது எதுவோ அதை செயலாற்ற முனைவீர்கள். இதெல்லாம்தான் அரசியலில் சரிப்பட்டு வராது. பூசல்கள் நேரலாம். மனவேற்றுமை உண்டாகலாம். அதனால் உங்கள் மனநிலையிலும் உடல் நிலையிலும் பெரும் பாதிப்பு ஏற்படலாம். நீங்கள் நினைக்கிற படியெல்லாம் மக்களுக்கு அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியாது. பழம் தின்று கொட்டை போட்ட பெரும் அரசியல்வாதிகளுக்கு முன்னால் புதியதாக அரசியலுக்கு வந்திருக்கும் உங்களால் எதுவும் செய்ய இயலாது. எப்போதும் வெதுவெதுப்பான மனநிலையில் இருக்கவேண்டி நேரிடும். அதனால் உங்களது ஆரோக்யம் கெட வாய்ப்புண்டு." என சுவாமிஜி அவர்கள் தமது அபிப்ராயங்கள் அனைத்தையும் ஆணித்தரமாக கூறி முடித்தார். மலையப்ப ஐயா அவர்கள் சுவாமிஜியை வழியனுப்பி வைத்தார்.

இருதினங்கள் கழித்து தியாகி அருணாசலம் அவர்கள் மலையப்ப ஐயாவின் முடிவை கேட்டறிய தஞ்சை வந்தார். அவரிடம் காங்கிரஸ் சார்பாக வேட்பாளராக நிற்க தம்மால் இயலாது என்பதை அவரது மனம் கோணாதவாறு சொல்லியனுப்பினார்.

17. அருளுணர்வுமிக்க நீக்ரோ மகான்

ஏழை அடிமை நீக்ரோ சிறுவர்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து சேவை செய்தவர்தான் புக்கர் வாஷிங்டன். அவரது தியாகமும் சேவையும் அமெரிக்க நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்பாகவே அவரது வரலாறும், தியாக உணர்வும், புத்தகத்தின் வாயிலாக, படிக்கப் பெற்று மனதில் இருத்திக் கொள்ளப் பெற்றது. இந்தத் தியாகியின் வரலாறு ஈண்டு நினைவு கூறத் தக்கதாகும். படித்துப் பயன் பெறுவோமாக.

இன்றைக்கு சுமார் 90 வருடங்களுக்கு முன் அமெரிக்காவிலுள்ள டஸ்கிகி என்னும் சிற்றூர் ஒன்றில் புக்கர் வாஷிங்டன் என்னும் நீக்ரோ அடிமைச்சிறுவன், தனவந்தர்கள் வீட்டை சுத்தம் செய்தும், பாத்திரங்கள் கழுவியும், வீடு கூட்டியும், துணி துவைத்தும் கிடைத்த வருவாயைக் கொண்டு ஜீவனம் செய்து வந்தான். கைத்தொழில் பள்ளி ஒன்றில் படித்து வந்தான். ஒரு ஆசிரியனாக வருவதே அவனது குறிக்கோளாக இருந்தது. இடையில் சொல்லொணாத் துயரங்கள். அவ்வளவையும் பொறுமையாக சகித்துக் கொண்டான். இறுதியில் அவனது பொறுமைக்கான பரிசு கிடைத்தது. ஆம். புக்கர் வாஷிங்டன் ஆசிரியனாக பட்டம் பெற்று விட்டான்.

அவ்வூரிலேயே ஏழை நீக்ரோ சிறுவர்களுக்காக, ஒரு பாடசாலையை ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். ஒரு அடிமை நீக்ரோ பள்ளியைக் கட்டுவதாவது? அது நடக்குமா? என்றெல்லாம் வெள்ளை இன

மக்கள் புக்கரை கேலி செய்தனர். இடைஞ்சல்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் செய்து பார்த்தனர். எதற்கும் சளைக்காது கருங்குன்றமென புக்கர் நிமிர்ந்து நின்றார். தன் இனமக்களிடம் பிரச்சாரம் செய்தார். வாழ்வில் உயர கல்வி அவசியம் என அறிவுறுத்தினார். அவர்களும் ஒத்துழைத்தனர். தன்னிடம் இருந்த ஒரே சொத்தான கைக்கடியாரத்தை அடகு வைத்து 15 டாலர்களைப் பெற்றார் புக்கர். செங்கல் சூளை போட்டார். பள்ளி மாணவர்களும் அவருக்கு துணையாக வேலை செய்தனர். பள்ளிக்கட்டடம் சிறிது சிறிதாக எழுந்தது. தனம் மனம் படைத்தவர்களை அணுகினார். வசூல் செய்தார். ஏழை நீக்ரோக்களின் முன்னேற்றத்திற்காக இவர்படும் பாட்டைக் கண்ட தொண்டு கிழவி ஒருத்தி, “ அப்பா. . . புக்கர் . . . என்னிடம் எந்த சொத்துமில்லை. இப்போது என்னிடம் உள்ளது இந்த 12 கோழி முட்டைகள் தான். இதையா கொடுப்பது என என் மனம் கூசுகிறது. இருப்பினும் உமக்கு ஏதாவது தரவேண்டுமென்று என்மனம் கூறுகிறது. இவைகளை பெற்றுக் கொள்கிறாயா புக்கர்...” எனக் கேட்டவுடன், கண்ணில் நீர் மல்க புக்கர், “தாயே, இதைவிட உயர்ந்த தனம் ஏது? தாருங்கள்.” எனக்கூறி கோழி முட்டைகளை பெற்றுக் கொண்டார். சுருக்கம் மிகுந்துள்ள தனது மெலிந்த கைகளைத் தூக்கி புக்கர் சிரசில் வைத்து ஆசி கூறிச் சென்றாள் அம்மூதாட்டி. புக்கரின் மனம் சிலிர்த்தது. அம்மூதாட்டியின் ஆசியால் புத்துணர்ச்சி பெற்றார்.

இன்னொரு குடியானவன் “ அப்பா . . . புக்கர் நீ யாருக்காக இப்படி உழைக்கிறாய் என நான் உணர்கிறேன். இன்றைய கூலியாக எனக்குக் கிடைத்த இந்த கரும்புக்கட்டை பெற்றுக் கொள்.” என கொடுத்துச் சென்றான். இது மாதிரி அவ்வப்போது கிடைத்த பொருள்கள் நன்கொடை மூலம் கிடைத்த பணம் ஆகியவற்றைக் கொண்டு இரவு பகலாக உழைத்தும் ஒரு சில வருடங்களுக்குள் அவரது பள்ளி குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை அடைந்தது. நிதி குவியத் தொடங்கியது. ஒரு பேரதிசயம் நிகழ்ந்துள்ளதாகவே புக்கர் உணர்ந்தார்.

ஒரு நாள் தபாலில் 400 டாலர்கள் வந்தது. பின்னர் ஒரு நாள் 9000 டாலர்கள் வந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், முதலில் 400 டாலர் அனுப்பிய இரு தாய்மார்களே, யாரும் போய் அவர்களிடம் கேட்காமலே, ஏழைப்பிள்ளைகளை கைதூக்கி விடுவதை விட இவ்வுலகில் பெரிய தர்மம் வேறென்ன இருக்க முடியும் என்ற எண்ணத்தில் 9000 டாலர்கள் அனுப்பி உள்ளார்கள். இது மட்டுமா? தொடர்ந்து 14 ஆண்டுகளுக்கு வருடா வருடம் 9000 டாலர்கள் அனுப்பிக் கொடுத்தனர் அவ்விரு அன்னையர்கள். குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிடும் அத்தகைய தாய்மார்களால்தான் இத்தகைய தியாகத்தை செய்யமுடியும்.

அன்னை பராசக்தி ஆதரவற்ற தன்குழந்தைகளை எவ்வளவு ஆதரவுடன் அரவணைத்துக் கொள்ளுகிறார் என்பதற்கு அவ்விரு தாய்மார்களே

உதாரணமாகத் திகழ்கின்றனர்.

ஒரு பெரிய தனவந்தர் பெரிய தொகைக்கு உண்டியல் எடுத்து புக்கருக்கு அனுப்பினார். அவர் எழுதிய கடிதத்தில், "இவ்வளவு பெரிய தர்மகாரியத்தை எனக்கு காட்டியதற்கு என்னால் இயன்றதை தந்து பெறற்கரிய புண்ணியம் சம்பாதித்துக் கொள்ளும் பாக்யத்தை நீங்கள் எனக்கு தந்ததற்காக நான் உமக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்;" எனக் கூறி முடிக்கின்றார்.எப்பேர்ப்பட்ட வாசகங்கள் அவரல்லவோ மனித சிருஷ்டியில் ஓர் உத்தமபுருஷர்.

"எச்செயலையும் நாளைக்கு என ஒத்திப்போடாதே. நினைத்ததை உடனே செய்துமுடி." என்ற ஆன்றோர் வாக்கை நிரூபிக்கும் வகையில் புக்கரின் வாழ்வில் நடந்துள்ளது ஒரு நிகழ்ச்சி. ஒரு கனவான் டஸ்கிகி நிலையத்திற்கு எழுதிய கடிதம் புக்கர் கவனத்திற்கு வந்தது.

" உம்முடைய நிலையத்திற்கு பத்தாயிரம் டாலருக்கு ஒரு உண்டியல் எடுத்து இத்துடன் உங்களது உயரிய சேவைக்கு எனது பங்காக அனுப்பியுள்ளேன். இத்தொகையை என் மரணத்திற்குப்பின் உங்களது ஸ்தாபனத்திற்கு சேர்ப்பிக்க வேண்டும் என மரண சாசனம் எழுதி வைத்துவிட்டேன். இது சரிதானா என்ற எண்ணம் என் மனதில் பலமுறை தோன்றியது. குடும்பத்தாருடன் கலந்து பேசினேன். எனது எண்ணத்தை அவர்கள் பாராட்டினார்கள். நான் உயிருடன் இருக்கும் போதே நினைத்த தொகையை கொடுத்துவிடுவது தான் சாலச்சிறந்தது என்ற இறுதியான முடிவிற்கு வந்தேன். முன்பு ஒரு முறை நீங்கள் டஸ்கிகி நிலைய சேவையைப் பற்றி பேசிய பேச்சு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது."

உண்மையான சுயநலக் கலப்பு சிறிதுமற்ற தூய சேவைக்கு ஆண்டவனின் அருள் எப்படியெல்லாம் செயல்பட்டு தேவையான நிதியை கொண்டு வந்து சேர்க்கிறது என்பதற்கு மேலே கண்ட இரு அமெரிக்க தனவான்களே சாட்சியாக உள்ளனர்.

ஹண்டிங்ஸ்டன் என்னும் பெரிய பண்ணையார் வருடா வருடம் பெரும் தொகை ஒன்றை டஸ்கிகி நிலையத்திற்கு அளித்து வந்தார். அவரது ஆன்மா உள்ள வரையில் தொகையினை அனுப்பி வந்தார். தனது மரணத் தருவாயில் ஐம்பதினாயிரம் டாலர்களை புக்கருக்கு அனுப்பிய பின்னரே மரணமடைந்தார்.

தாழ்த்தப்பட்ட, அடிமைப்பட்ட நீக்ரோ கறுப்பு ஜாதியார்களுடைய அனாதைக் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக, அமெரிக்க வெள்ளை தனிகர்கள் அள்ளி, அள்ளி கொடுத்தார்கள் என்பதுதான் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய கருத்தாகும்.

புக்கர் வாஷிங்டன் ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை பார்த்தார். பள்ளி வேலைகளைப் பார்த்துக் கொள்வார். கிடைத்த நேரங்களில் பரோபகாரிகளிடம் சென்று நன்கொடை வசூலிப்பார். அப்போது சிலர் வரவேற்பார்கள். சிலர்

புறக்கணிப்பார்கள். இன்னும் சிலர் இவரை முன்னால் போகவிட்டு பின்னால் கேலி செய்வார்கள். இதைக்கண்டு புக்கரின் நண்பர்கள் வெகுண்டெழுவார்கள். அவர்களிடம் புக்கர், நம்முடைய பணி இன்னதென அவர்கள் அறியாத காரணத்தால்தான் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள். அனைவரும் அறியும் வண்ணம் நம் சேவை பரவவேண்டும் என அவ்வப்போது துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுவார் புக்கர்.

டஸ்கிகி நிலையம் ஆரம்பித்து 18 வருட முடிவில் அந்நிலையத்திற்கு 2300 ஏக்கரா பூமியும், 40 சிறிய பெரிய கட்டடங்களும், 3 லட்சம் டாலர் சொத்துக்களும், 2,15,000 டாலர் ரொக்கமும் இருப்பதாக ஆண்டறிக்கை வெளியிட்டார். 1100 ஏழைப்பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள் அளித்து 28 வகையான கைத்தொழில் பயிற்சிகளுடன் கல்வி போதிக்கப்பட்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். நாளடைவில் இவர் பெயர் மறைந்து, " நீக்ரோ மகான்" என்ற அடைமொழியால் சிறப்பிக்கப்பட்டார். உலகிற்கு அவர் விடுத்த ஊக்கம் செறிந்த உறுதிச் செய்தியாவது, " ஒருவர் ஒவ்வொரு நாளும் தன்னால் எவ்வளவு உழைக்க முடியுமோ அந்தளவு உழைத்தல் வேண்டும். பிறருக்கு பயன்படும் வகையில் பரிசுத்த வாழ்க்கை நடத்த வேண்டும். அத்தகைய உயரிய வாழ்க்கையில் சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஒருவர் இருந்து வந்தால், என்னுடைய வாழ்வில் எனக்கு கிடைத்த மாதிரி எதிர்பாரா உதவிகள் இடைவிடாது வந்து குவியும் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்."

நம் நாட்டில் பெரும்பாலோர் ஏழைமக்கள். சிறு பாலோர் உயர்தர, மத்திய தர மக்கள். கல்வி நிலையங்கள் பெரும்பாலும் உயர்தர, மத்தியதர மக்களுக்கே பயன்படுகின்றன. பாரத நாடு ஆதிகாலம் தொட்டு ஆறில் ஒரு பங்கு அறம் செய் என கூறி வந்துள்ளது. உணவு விடுதிகளில் (ஹாஸ்டல்) செல்வ நாராயணர்களுக்கு இடம் அளித்து அவர்களுக்காக ஏற்படும் விகிதாச்சார செலவை நிலையத்தை நிர்வகிப்போர் பாதியாகவும், அதிலுள்ள செல்வ நாராயணர்கள் பாதியாகவும் பகிர்ந்து கொள்ளலாம். அங்கு தங்கிப் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு கல்வியறிவு தந்ததாகும். இது பெரிய பாரமாகாது. நாட்டின் ஏழ்மை பாரத்தை குறைக்கும். புண்ணிய செயலாகவும் மிளிரும். ' மனமிருந்தால் மார்க்கமுண்டு' என தனவந்தர்களின் கவனத்திற்கு ஏழை அனாதை மாணவர்களின் அறிவுப்பசி நீங்கவும், வயிற்றுப்பசி நீங்கவும் சுவாமிஜி அவர்கள் வழியைக் காட்டியுள்ளார்.

இதை மனமுவந்து ஏற்கும் மனப்பக்குவம் கொண்ட அன்பர்கள் தமிழ்நாட்டில் இல்லாமலா போய் விடுவார்கள்.?

18. அரசு ஆணைகள் நான்கு

குடிலின் முன்னேற்றத்திற்காக இரவு பகல் எனப் பாராமல், சரீர நிலையை கவனியாது, அனாதை மக்கள் சேவையே உயிர் நாடி என நினைத்து பாடுபட்டார் குடில் சுவாமிஜி அவர்கள்.

ஸ்தல ஸ்தாபனங்கள், பஞ்சாயத்துக்கள், தேவஸ்தானங்கள், நகரசபைகள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றின் உபரிநிதியிலிருந்து குடிலுக்கு வருடாந்திர நன்கொடை வழங்க ஏதுவாக ஆணைகள் பிறப்பிக்க சுவாமிஜி அவர்கள் தமிழக அரசை அணுகியதின் பேரில் அரசும் ஆணைகளை பிறப்பித்தன. அவற்றின் விபரம்.

1. தேவஸ்தானங்கள் நன்கொடை:

எம்.எம்.நெ. 57998 ஆர். டபிள்யூ. வி/ 53–1 தேதி 28–8–1953. அரசு ஆணையின்படி தமிழ்நாட்டிலுள்ள தேவஸ்தானங்கள் தங்களது உபரிநிதியிலிருந்து (Surplus Fund) தாங்கள் விரும்பும் அளவுக்கு வருடா வருடம் குடிலுக்கு நன்கொடை வழங்கி வரலாம்.

2. நகர சபைகள் நன்கொடை :

ஜி.ஒ.எம்.எஸ். நெ. 286 தேதி 8.2.1967 அரசு ஆணையின்படி தமிழ்நாட்டிலுள்ள 1 வது பிரிவு நகர சபைகள் ரூ 300/= வீதமும் இரண்டாவது பிரிவு நகர சபைகள் ரூ 200/= வீதமும் மூன்றாவது பிரிவு நகர சபைகள் ரூ 150/= வீதமும் வருடா வருடம் குடிலுக்கு நன்கொடை வழங்கி வரலாம்.

3. கூட்டுறவு சங்கங்கள் நன்கொடை :

ந.க.எண் 68172/ 88 இ.1. தேதி 28.5.68 அரசு ஆணையின் படி தமிழ்நாட்டிலுள்ள எல்லா வகை கூட்டுறவு சங்கங்களும் தங்களிடமுள்ள பொதுநல நிதியிலிருந்து வரம்பில்லாமல் அவரவர்கள் விரும்பும் அளவிற்கு குடிலுக்கு நன்கொடை வழங்கலாம்.

4. பஞ்சாயத்து , பஞ்சாயத்து யூனியன் நன்கொடை :

எல்.டிஸ். நெ. 18018/68 தேதி 7.11.68 அரசு ஆணையின்படி தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்துக்கள் ரூ 50/= வீதமும், பஞ்சாயத்து யூனியன்கள் ரூ 100/= வீதமும் வருடாவருடம் குடிலுக்கு நன்கொடை வழங்கி வரலாம்.

19. சிண்டிகேட் பாங்க் சேர்மன் வருகை

1964 ம் வருடம் ஒருநாள் காலை 11.00 மணி அளவில் எதிர்பாராது சிண்டிகேட் பாங்க் சேர்மன் மணிபால் திரு. T.M.A. பாய் அவர்கள் குடிலுக்கு வந்தார். குடில் முழுவதையும் சுற்றிப் பார்த்தார். அவரது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியதை அவரது முகம் எடுத்துக் காட்டியது. "மரம் செடி மாமரங்களால் சூழப்பட்ட இந்த ஆஸ்ரமத்தில் ஒரிடத்திலாவது ஒரு சிறு குப்பையைக் கூடக் காணோமே. எவ்வளவு சுத்தமாக பராமரிக்கப்படுகிறது." என வியந்தார். சுவாமிஜியிடம் வந்தார். "சுவாமி ஒரு பெர்மிஷன் வேண்டும்" என்றார். சுவாமிஜியும் சரி என்றார். அடுத்த மாதத்திலே முன் தபால் எழுதி விட்டு குடும்பத்தாருடனும் 60, 70 பேர்களுள்ள ஒரு கூட்டத்துடன் வந்து சேர்ந்தார். அவர்கள் அனைவரும் நான்கு மாநிலத்தின் சிண்டிகேட் பாங்கின் மானேஜர்கள் எனத் தெரியவந்தது.

ஆஸ்ரமத் தோப்பில் அவர்களது காலை மாலைக் கூட்டம் நடந்தது.கடைசி நாள் திரு. பாய் அவர்கள் அந்த மானேஜர்களுக்கெல்லாம் சொன்னதாவது: "நம்முடைய வருடாந்திர கூட்டங்கள் எல்லாம் ஒவ்வொரு பெரிய நகரங்களில் ஏர்கண்டிஷன், பேன், மொசைக் போட்ட பெரிய பெரிய பில்டிங்குகளில் நடக்கும். ஆனால் இந்த ஆண்டு இங்கே ஏன் போட்டேன் தெரியுமா? நான் மணிபாலில் மெடிக்கல் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜ், அனேக ஆர்ட்ஸ் காலேஜ்கள், அதிகப்படியான ஆரம்ப, ஹைஸ்கூல்கள் எல்லாம் நடத்தி வருவது எல்லோருக்கும் தெரியும். எனக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை. கொஞ்சம் அனாதை குழந்தைகளையாவது வைத்து ஒரு அனாதை விடுதி நடத்த வேண்டுமென்று எண்ணி, சில ஆண்டுகளுக்கு முன்னால் 10, 20 பிள்ளைகளை வைத்த ஒரு அனாதை விடுதி ஆரம்பித்தேன். இரண்டொரு வருடங்கள் நடத்தினேன். அதில் ஏற்படும் பிரச்சனைகளைப் பார்த்து பார்த்து இது நமக்கு சரிப்பட்டு வராது என்று அனாதை விடுதியை மூடிவிட்டேன். இங்கு சென்ற மாதம் அகஸ்மாத்தாக வந்து பார்த்த போது என் மனதை கவர்ந்தது.

"எத்தனையோ பெரிய பெரிய ஸ்தாபனங்களை நடத்துகிறோம். ஆனால் ஒரு அனாதை விடுதியை நடத்த முடியவில்லையே. மனதில் ஆசையும் கையில் பணமும் இருந்தும் முடியவில்லையே. ஆனால் இங்கு இந்த சுவாமிஜி நிரந்தர வருமானம் இல்லாமல் அப்போதைக்கப்போது பலரிடம் நன்கொடைகள் வாங்கியும், கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கதாகாலட்சேபம் வைத்தும் வரும் வசூலைக் கொண்டு நூற்றுக்கணக்கான அனாதைக் பையன்களை காப்பாற்றுகிறார். இதை நான் மட்டும் பார்த்தால் போதாது. இந்த அற்புதத்தை என் குடும்பத்தாரும், பாங்க் மானேஜர்களும் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வருட மீட்டிங்கை இங்கே வைத்ததற்கு காரணம்." என உணர்ச்சி ததும்ப கூறி முடித்தார். ஆஸ்ரமத்திற்கு ரூ 3000/= நன்கொடையாக

பாய் அவர்கள் கொடுத்தார்கள். வருடாந்திர நெல் வாங்க சிண்டிகேட் பாங்கில் ரூ 50,000,= வரை O.D.ல் பணம் பெற ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார்.

குடிலை முன்பின் பார்த்திராத ஒரு பிரமுகர் ஒரே நாள் குடிலைப் பார்த்துச் சென்றவர் குடிலுக்கு இவ்வளவு செய்திருக்கிறார் என்றால் என்னென்பது. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. குடில் எங்கேயோ இருக்கிறது. மணிபால் எதோ ஒரு மூலையில் இருக்கிறது. ஆனால் தொடர்பு ஏற்பட்டு, குடிலின் சேவை அவரது காதுக்கு எட்டியிருக்கிறது. தன்னலமற்ற உண்மையான சேவைக்கு பரிந்துரை தேவையில்லை. விளம்பரம் வேண்டாம். நல்லோர் பணி நானிலமெங்கும் அதாகவே பரவும் என்பது நிதர்சனமாக விளங்குகிறது.

20. புதுவை கவர்னர் திருமிகு சீலத்தின் சீலம்

மலர் மலர்ந்தாலே அதன் வாசனை எங்கும் தானாகவே பரவும். வாசனையை வாவென்று எவரும் அழைக்கத்தேவையில்லை. கனி பழுத்தால் அதன் அழகும் தோற்றமும் வாசனையும் பறவைகளை கவர்ந்திழுக்கிறது. இதுவே இயற்கை நியதி. இயற்கை நியதிக்கு உட்பட்டதே இவ்வுலகு. இதில் நடைபெறும் சில நல்ல காரியங்கள் காலத்தின் இடைவெளி, தூரம் ஆகியவற்றையெல்லாம் கடந்து மனித இதயங்களை தொட்டு எழுப்பும்.

குடிலின் வரலாறும் இப்படிப்பட்டதே. குடிலின் எழுச்சி மிக்க தூதுவர், புதுவை சீப் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள். தமிழாற்றல் மிக்கவரும் ஆன்மீக நெஞ்சம் படைத்த பண்பாளரும் ஆவார். அவர் மூலம் புதுவை மாநிலம் குடிலை அறிந்து கொண்டது. அறிந்து கொண்ட குடிலை தெரிந்து கொள்ள முயன்றது அம்மாநிலம்.

1966 ம் ஆண்டில் ஒரு நாள். குடிலே விழாக்கோலம் பூண்டது. புதுவை மாநிலத்திலிருந்து வந்திருந்த அருளாளர்களின் திருக்கூட்டம். எங்கு நோக்கினும் மெய் மறந்து நின்றது அவர்களின் முகங்களில் தென்பட்டன. புதுவை மாநில கவர்னர் உயர்திரு. எஸ்.எல். சீலம் அவர்கள், முதலமைச்சர் மாண்புமிகு வி. வெங்கடசுப்பாரெட்டியார் அவர்கள், கல்வி நிதியமைச்சர் மாண்புமிகு ஏ.எல்.காங்கேயன் அவர்கள், அபிவிருத்தி துறை அமைச்சர் மாண்புமிகு பி. சண்முகம் அவர்கள்,சீப் ஜஸ்டிஸ் திரு. எஸ். மகராஜன் அவர்கள், மாநில ஐ.ஜி. திரு. பி. பரமகுரு அவர்கள், மேயர் திரு. என். சேதுராமன் அவர்கள் மற்றும் பல எம்.எல்.ஏ, எம்.எல்.சி, கவுன்சிலர்கள் தனிப்பட்ட பிரமுகர்கள் ஆகியோர் 60, 70 பேர்கள் புதுவையிலிருந்து குடிலுக்கு வருகை தந்தனர். மாநில நிர்வாக அதிகாரிகள் அத்தனை பேரும் குடிலுக்கு வந்ததினால் புதுவை மாநிலமே குடிலுக்கு விஜயம் செய்தது என்றால் அது மிகமிகப் பொருத்தமேயாகும்.

நாள் முழுவதும் குடிலில் தங்கினர். குடிலின் மாபெரும் லட்சியத்தையும்,

அப்பழுக்கற்ற துறவியான குடில் சுவாமிஜி அவர்களையும் கண்டு பேரானந்த மடைந்தனர். இத்தகைய ஒரு ஸ்தாபனத்தை வேறெங்கும் காண இயலாது என ஏகோபித்து கருத்து தெரிவித்தனர். மாணவர் கூட்டத்தில் பலரும் பேசினார்கள்.

கைதேர்ந்த மிருதங்க வித்வான் தனது வாத்தியத்திலே பல்வேறு மாறுபட்ட ஒலிகளை மின்னல் வேகத்திலே எழுப்பி நம்மை மகிழ்விப்பது போல புதுவை அறிஞர்கள் பலர் தங்களது ஆற்றல் மிக்க உரையை, தக்க பல உதாரணங்களுடன் குடில் சேவையை பாராட்டிப் பேசினார்கள். கவர்னர் திருமிகு சீலம் அவர்கள், " புதுவைக்கு சில மைல் தூரத்தில் இக்குடில் இருந்தால் ஞாயிறுதோறும் வந்து குடிலில் உட்கார்ந்து விடுவேன். சுவாமிஜி அவர்களின் அருளாற்றல் மிக்க உரையைக் கேட்டுக் கொண்டேயிருப்பேன்." என்றார். முதலமைச்சர் திருமிகு. ரெட்டியார் அவர்கள், " இந்தக் குடில் உயிருள்ள பொருளாக இருந்தால் அப்படியே பெயர்த்துக் கொண்டு போய் புதுவையில் வைத்துவிடலாமென்று தோன்றுகிறது" என்றார்.

" இமயம் ஒன்றுதான். அது அங்குதான் இருக்கும். அதுபோல குடிலும் ஒன்றுதான். அது இங்குதான் இருக்கும். " அதனதன் இடத்திலே தான் அவைகள் இருக்கும்". வேறெங்கும் காண முடியாது."

குடில் நிதிக்கு புதுவையில் வாரியார் சுவாமிகள் அவர்களின் ராமாயண உபன்யாசம் நடத்தவது என்ற முடிவுடன், சுவாமிஜி அவர்களிடம் பிரியாவிடை பெற்று புதுவைக்கு புறப்பட்டனர்.

21. கவர்னர் பெருமகனாரின் கடிதம்

ஒருநாள் காலையில் சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரமத்திலமர்ந்து வந்த கடிதங்களை பார்த்துக் கொண்டிருந்தார். அவற்றுள், " புதுவை கவர்னர்" என்று அச்சடித்த கவர் இருப்பதைக் கண்டார். உடனே அக்கவரை பிரித்துப் பார்த்தார்.

" அன்பார்ந்த சுவாமிஜி! எனது நமஸ்காரம். எனது மகள் பம்பாயிலிருந்து வந்திருக்கிறாள். அவளை அழைத்து வந்து ஆஸ்ரமத்தை காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். தங்களது விருப்பமும் சௌகரியமும் யாதோ? தெரிவிக்கக் கோருகின்றேன்."

தங்கள் அன்புள்ள
S.L. சீலம்

இம்மாதிரி ஒரு கடிதம் புதுவை கவர்னரிடமிருந்து. கவர்னரை அவரது மாநிலத்தில் பல இடங்களுக்கும் வரவேண்டுமென்று பலபேரும் வருந்தி அழைக்கின்றனர். அவருக்கோ போக நேரமில்லை. ஆனால் குடிலுக்கு குடும்பத்துடன் வர அனுமதி கோருகிறார். இது என்ன விந்தை! இறைவனின் திருவிளையாடலா?

" தங்களை வரவேற்க குடில் என்றும் தயாராக இருக்கிறது. தங்களது சௌகரியம் போல் தகவல் தெரிவித்து விட்டு வாருங்கள்." என சுவாமிஜியின் அன்புக் கடிதம் கவர்னருக்கு அனுப்பப்பட்டது.

கவர்னர் தம்பதிகள் தங்களின் அருமை மகளுடன் குடிலுக்கு வருகை தந்தனர். ஆஸ்ரமம் முழுவதையும் நன்கு சுற்றிப் பார்த்தனர். மனநிறைவுடன் திரும்பிச் சென்றனர்.

இந்த விந்தையை என்னென்பது!.

குடிலில் இறைவன் களிநடனம் புரிந்து காரியங்களை நிறைவேற்ற பற்பல விந்தைகளை அப்போதைக்கப்போது புரிகின்றான்.

சொர்க்கபுரியான பம்பாயில் காணமுடியாத காட்சிகளையா திருமிகு சீலத்தின் மகள் குடிலில் காணப் போகிறாள்? பார்க்கப் பார்க்கப் பரவசமடையும் காட்சிகள் பம்பாயில் ஏராளமாக இருக்கிறது. இருப்பினும் அம்மகள் குடிலுக்கு வந்திருக்கிறாளே. ஏன்? என்ன காரணம் இருக்க முடியும்?

அவளது உள்ளத்திலே மன அமைதியும் மறுமலர்ச்சியும் சாந்தியும் ஏற்பட ஆண்டவன் கட்டளை அவளை குடிலுக்குச் செல்ல பணித்தது என்பதைத் தான் கூற இயலும்.

22. பலபேர் கேட்கும் பலப்பல கேள்விகள்

எம்மிடம் பலபேர் பலப்பல கேள்விகளைக் கேட்கிறார்கள். அதில் அறிஞர்களும் உண்டு. அதிகம் படித்தவர்களும் இருக்கிறார்கள். ஐஸ்வர்யவான்கள், ஸ்தாபனங்களின் தாளாளர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களும் உண்டு. அவர்கள் கேட்ட கேள்விகளில் மாதிரிக்காக சில கேள்விகளை சுவாமிஜி அவர்கள் தந்துள்ளார்கள். அவற்றிற்கான பதிலையும் அவரே கூறியுள்ளார்.

1. உங்களுக்கு எப்படி இது மாதிரி அனாதை விடுதி ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று?

2. ஆரம்பத்தில் ஒன்றுமேயில்லாமல் இப்படி ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்க எப்படி உங்களுக்கு தைரியம் வந்தது?

3. இவ்வளவையும் குறுகிய காலத்தில் எப்படி சாதித்தீர்கள்?

4. எப்படி உங்களுக்கு மட்டும் அரசாங்கம், பெரிய பெரிய அதிகாரிகள், பெரிய மனிதர்கள் ஆதரவெல்லாம் கிடைத்தது?

" பெரும்பாலான கேள்விகள் இம்மாதிரியாகத்தான் இருந்தன. இவைகள் எல்லாவற்றிற்குமாக சேர்த்து எமது பதில் இதுதான்"

" தன்னை ஒரு சிறிதும் மிச்சமின்றி ஆண்டவனிடம் அர்ப்பணித்து ஒப்படைத்துவிட வேண்டும். சதா அவனுடைய நாமத்தை நினைத்தும், உச்சரித்தும் அவனது பணியன்றி வேறுபணி யாதுமில்லை என்றும்

அவனுக்காகவே வாழ்வன்றி நமக்கென்று வாழ்வில்லை என்ற நிலையில் உறுதியோடு நிற்கவேண்டும். ஒவ்வொரு நாளும் தன்னால் எவ்வளவு உழைக்க முடியுமோ அவ்வளவையும் அதாவது சுயநலம் கருதாது பிறர்க்கு பிரயோஜனகரமான பரிசுத்தமான வாழ்க்கையில் எத்தனை உயரம் செல்ல முடியுமோ அத்தனை உயரம் சென்று விட வேண்டும்.

அந்த உயர்ந்த வாழ்க்கையில் ஒவ்வொரு தினத்தையும் ஒருவர் நிரப்பி வந்தாரேயானால் அவர் யாராக இருந்தாலும் சரி அவருக்கு எம்முடைய வாழ்நாளில் கிடைத்த மாதிரி எதிர்பாராத உதவிகள் இடைவிடாது வந்து குவியும் என நான் பரிபூரணமாக நம்புகிறேன்." என சுவாமிஜி குறிப்பிடுகின்றார்.

" சதா ஈஸ்வர சிந்தனையும் பரிசுத்தமான எளிய வாழ்க்கையை கடைப்பிடித்தும் அணுஅளவேனும் சுயநலமின்றி பரோபகார சிந்தனை ஒன்றையே தனது உயிர் மூச்சாக கருதி வாழும் மாந்தர்க்கும், உடலை கவனிக்க நேரமில்லை. உறங்கவும் நேரமில்லை. உள்ள நேரம் அனைத்து அவனது சேவைக்கே என அர்ப்பணித்த சீலர்களுக்கும் ஆண்டவன் எப்போதும் அருகிலிருந்து அருள் பாலிப்பான். அவர்கள் நினைத்ததை செய்து முடிப்பார்கள் என்பதற்கு குடில் சுவாமிஜியின் வாழ்க்கையே ஒரு நிரூபணமாகும்.

23. பள்ளியில் மாணவர் மன்ற கூட்டம்

இன்றைய நம் கல்வி முறையானது மாணவன் சுயமாக சிந்தித்து தனது எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் அமையாதது துரதிர்ஷ்டமே. அந்தந்த வகுப்புகளுக்கு தரப்பட்டிருக்கும் புத்தகங்களில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளையும், கட்டுரைகளையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் முறையில் அமைந்துள்ளது. அவனது சுய சிந்தனைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பே இல்லை.

ஒரு மாணவன் கேள்வித்தாளில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு, ஏற்கெனவே அவன் மனனம் செய்து வைத்திருந்த பதில்களை எழுதிவிட்டால், குறைந்தபட்ச தேர்வு மதிப்பெண் பெற்று விடுகிறான். தேர்வில் வெற்றியும் பெற்று விடுகிறான். மேல்வகுப்பிற்கும் மாற்றப்படுகின்றான். இதுவே இன்றைய கல்வித்திட்டம்.

தான் மனனம் செய்தவற்றை மூளை அளவில் சேகரித்து, தேர்வு சமயங்களில் கொட்டி விடுகின்றான். மனத்தளவில் சிந்தித்து செயல்பட வாய்ப்பேதுமில்லை. இவற்றை போக்கவே பள்ளிகளில் மாணவர் மன்றக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. குடிலில் ஆரம்ப உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக மாணவர் மன்ற கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகின்றன.

பாட்டு, பேச்சு, ஓரங்கநாடகம், கவிதை கூறல், ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்த சுவாமிகள், சாதாமணிதேவியார் ஆகியோரது வரலாறு கூறல் ஆகிய அனைத்தையும் மாணவனே சிந்தித்து மேடையில் கூறும் அளவிற்கு தூண்டப்படுகிறான். அவனே சுயமாக சிந்தித்து, சிந்தித்ததின் மையக் கருத்தை அழகாக வெளியிடும் வாய்ப்பை அவனுக்கு தருவதாலும் ஆர்வமுடன் போட்டி போட்டுக் கொண்டு தனது படைப்பை வெளியிட துடிக்கின்றான்.

"சுயசிந்தனை, மனஓட்டம், அறிவின் தேடல், கருப்பொருளை விவரிக்கும் விதம் ஆகிய திறன்கள் மாணவர் மன்ற கூட்டங்கள் மூலம் வெளியாகின்றன. எனவே மாணவர் மன்றங்கள் மாணவனது சிந்தனையை தூண்டும் தூண்டுகோலாக அமைகின்றது.

மாணவர் மன்றங்களினால் மாணவன் பெரும்பயன் அடைகின்றான். ஒவ்வொரு மாணவனிடத்திலும் ஒரு தனித்திறமை ஒளிந்து கொண்டிருக்கிறது. அதனை வெளிக் கொண்டு வந்துவிட்டால், அவன் பிரகாசிக்க ஆரம்பிக்கின்றான். அவனிடத்திலே கற்பனை வளம் ஓங்குகிறது. தன்னம்பிக்கை மேலோங்குகிறது. மேடையில் பேசும் வாய்ப்பு தரப்படுவதால் அச்சம் அகல்கின்றது. சபைச்கூச்சம் போய்விடுகின்றது. நினைவாற்றல் பெருகுகின்றது. கவிதை இயற்றும் ஆற்றல் வெளிப்படுகின்றது. நடிப்புத்திறன், அழகாக அமைகின்றது. மேடைச்சொற்பொழிவு செய்யும் ஆற்றல் உண்டாகிறது.

குடிலின் இருபள்ளித் தலைமை ஆசிரியர்களும், சக ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களை வெகுவாக ஊக்குவித்து வருகின்றனர். இது மிக மிக வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. மாணவர்களும் மன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிறார்கள்.

விளக்கின் திரி தூண்டப்பட்டு விட்டால் அறை முழுவதும் வெளிச்சம் பரவுகிறது. மாணவர்களின் உள்மனத்திறமைகளை அறிந்து அவைகளை உசுப்பிவிட்டால், அவனது அறிவும் ஆற்றலும் இருட்டறைக்கு ஒளி தரும் விளக்கை ஒப்ப ஒளிதரும். அவனது அறிவும் ஆற்றலும் நாட்டுக்கு பயன்படும். அதை சாதித்துக் காட்டும் வகையில் ஆசிரியர் பணி இருத்தல் வேண்டும்.

24. அறக்கட்டளைகள்

குடில் சேவையில் பெரும்பங்கு வகித்து, அதன் வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்த பெரியோர்கள் கலெக்டர் திரு. மலையப்பன் அவர்கள், நங்கவரம் பண்ணையார் திரு. ரங்கநாத அய்யர், திரு. ஜஸ்டிஸ் மஹராஜன் அவர்கள், திரு. வாரியார் சுவாமிகள் ஆகியோர்களின் நினைவாக குடில் சுவாமிஜி அவர்கள் இருக்கும் போதே அவரவர்கள் பெயரில் அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்கள். அதிலிருந்து வரும் வட்டி குடிலில் பயின்று வரும்

புகலிடம்பெற்ற ஏழை அனாதைச் சிறுவர்களின் மேம்பாட்டிற்காக ஏற்கப்படுகிறது. தற்போதைய குடில் தலைமை பிரம்மசாரி அவர்கள் அமரரான குடில் சுவாமிஜியின் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

அறக்கட்டளைகள் விபரம்

1.	நங்கவரம் பண்ணையார் ரங்கநாதய்யர்	ரூ 1 லட்சம்
2.	கலெக்டர் மலையப்ப ஐயா	ரூ 1 லட்சம்
3.	ஜஸ்டிஸ் மஹராஜன்	ரூ 1 லட்சம்
4.	கிருபானந்த வாரியார் சுவாமிகள்	ரூ 2 லட்சம்
5.	பிரம்மசாரி ராமசுவாமிகள்	ரூ 5 லட்சம்

25. ஆண்டவனின் அற்புத லீலை

1967 ம் ஆண்டில் திருச்சி நேஷனல் காலேஜ் மைதானத்தில் மே மாதம் 6 ம் தேதி முதல் 24 ம் தேதிவரை ராமாயண விரிவுரையை குடிலின் நிதிநிக்ழ்ச்சிக்காக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நடத்தி வந்தார்கள். பகலில் அன்பர்களை அணுகி வசூல் வேலை நடைபெறும். இரவில் விரிவுரை நடத்துவதையும் வழக்கமாக கொண்டிருந்தார் வாரியார் அவர்கள். ஒரு லட்சம் வசூலாயிற்று. சுவாமிஜி அவர்களும் பகலில் ஆஸ்ரமக் காரியங்களை கவனிப்பதும், இரவில் ராமாயண விரிவுரைக்கு செல்வதெனவும் திட்டம் வகுத்துக் கொண்டார்.

ஒரு நாள் காலை சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரமத்தில் தம் அறையிலமர்ந்து வந்திருக்கும் தபால்களை பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு கவரில் திருச்சியில் குடில் கணக்கு வைத்திருக்கும் பாங்கில் ரூபாய் பத்தாயிரம் செலுத்தியதற்கான ரசீதும் கடிதம் ஒன்றும் இருந்தது. அக்கடிதத்தில், " குடில் சுவாமிஜிக்கு நமஸ்காரம். திருச்சியில் நடந்து வரும் கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ராமாயண விரிவுரையை தொடர்ந்து கேட்டு வருகிறேன். குடிலில் நடைபெறும் அனாதை மக்கள் சேவையைக் குறித்து சுவாமிகள் அடிக்கடி கூறுவதைக் கேட்டேன். மனதில் தோன்றுவதை உடனடியாக தாமதமின்றி செய்து விடவேண்டுமென்று நினைத்தேன். குடில் கணக்கு இருக்கும் பாங்கை தெரிந்து கொண்டு, குடில் சேவைக்கு எனது காணிக்கையாக ரூபாய் பத்தாயிரம் செலுத்தி ரசீதை இத்துடன் அனுப்பியுள்ளேன். தயவு செய்து பெற்றுக்கொண்டு அனாதைக் குழந்தைகள் சேவைக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். நமஸ்காரம். அன்புள்ள வி. கோதண்டபாணி."

அன்பர் வி. கோதண்டபாணி பம்பாயிலும் சென்னையிலும் லுங்கி வியாபாரம் செய்துவிட்டு தற்போது வியாபாரங்கள் அனைத்தையும் முடித்துக்

கொண்டு திருச்சி உறையூரில் ஆடம்பரமற்ற அடக்கமான முறையில் ஆன்மீக வாழ்க்கை நடத்தி வருகிறார் எனத்தெரியவந்தது.

வயலூர் முருகன் அருளை பூரணமாகப் பெற்ற வாரியார் சுவாமிகளின் புனித நாவிலிருந்து வரும் அருளுபதேச மொழிகள் கேட்போரது மனித உள்ளத்தை உயரிய நிலைக்கு திருப்புகிறது என்பதற்கு அன்பர் திரு. கோதண்டபாணி அவர்களே சாட்சியாக நிற்கிறார்.

ராமாயண விரிவுரை மேடையிலோ அல்லது வாரியார் சுவாமிகள் நிதி வசூலுக்கு அன்பர்களை நாடி வரும்போதோ தமது நன்கொடையை தந்திருக்கலாம். காத்திருக்கும் அந்நேரத்தில் எண்ணங்கள் அலை பாய்ந்து நன்கொடையின் மதிப்பைக் குறைக்கலாம். அல்லது நன்கொடை தருவதையே ஒத்திப் போடலாம் போன்ற எண்ணங்கள் மனதில் எழலாம். இதற்கு வழி தரக்கூடாது என்பதற்காகவே தான் குடில் கணக்கு வைக்கப்பட்டிருக்கும் பாங்கை நாடிச் சென்று தமது உள்ளத்திலே தோன்றிய தொகையை கால தாமதமின்றி கட்டிவிட்டார் அன்பர் கோதண்டபாணி.

இந்நாளிலும் இவரைப் போன்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதை ஆண்டவனின் லீலை என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும். சுவாமி விவேகானந்தர் கூறுகிறார், " உலகில் தான் பிறந்ததின் பயன் எது? கஞ்சிக்கும் வழியில்லாது புழுவென துடிக்கும் மனிதர்களை எவன் ஒருவன் கரையேற்ற முற்படுகின்றானோ அவனது முயற்சிகளுக்கும் லட்சியங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் ஈஸ்வரன் எந்த உருவிலாவது வந்து உதவி செய்வான்."

சுவாமி விவேகானந்தரின் இந்த உபதேசத்திற்கு உதாரணமாக குடிலைக் கூறலாம். பற்பல வகையான சோதனைகள் வரும். வந்த சுவடு தெரியாமல் அவைகள் மறைந்து விடும்.

26. அறம் வாழ்கிறது

குடிலின் வருடாந்திர நெல்தேவைக்காக அரசு நெல் பர்மிட்டின் பேரில் ஒவ்வோர் ஆண்டும் மொத்தமாக நெல் வாங்குவது வழக்கமாக இருந்து வந்தது.

பெரம்பலூர் தாலூகாவில் நெல் பெர்மிட்டின் பேரில் நெல்கொள் முதல் செய்ய ஆஸ்ரமவாசி ஒருவர் சென்றிருந்தார். அது சமயம் செட்டிகுளம் முன்சீப்பாக திரு. எம். பச்சைமுத்து என்பவர் குடிலில் நடைபெறும் சேவையைக் கேட்டறிந்தார். அவரது மனம் அனாதை சிறுவர்கள் பராமரிப்பில் ஒன்றி விட்டது. ஆன்மீக அன்பரான அவர் அகமும் முகமும் மலர திருவருள் திட்டத்தில் தன்னையும் ஒரு சந்தாதாரராக பதிவு செய்து கொண்டு அப்போதே ரூ 301,= ஐ அன்போடு வழங்கி மகிழ்ந்தார்.

இவர் தோற்றத்தில் எளிமையானவர். ஆனால் அவரது உள்ளமோ விசாலமானது. எப்போதும் கதர் ஆடை அணிவார். காந்தீயத்தில் பற்று

மிக்கவர். அவரது பேச்சினிலே நிதானம், அன்பு ஆகியவை நிறைந்திருக்கும். அவரது முகத்தில் புன்சிரிப்பு எப்போதும் இருந்து கொண்டிருக்கும். இவர்தான் செட்டிகுளம் முன்சீப் திருவாளர் பச்சைமுத்து என்பவராவார்.

அடுத்த வருடமும் அவரது சந்தா குறித்து ஆஸ்ரமத்திலிருந்து நினைவூட்டல் கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டது. அவரும் சந்தாவை அனுப்பிவிட்டு கடிதத்தின் மூலம் தனது எண்ணத்தை தெரிவித்திருந்தார். “ வருடா வருடம் நான் செலுத்தவேண்டிய திருவருள் திட்ட நன்கொடையை ஆஸ்ரமம் நினைவுபடுத்திய பின் நான் நன்கொடை அளிப்பது என்பது எனக்கு சரியாகப் படவில்லை. அது முறையும் ஆகாது. எனவே திருவருள் திட்ட நன்கொடை நிதிக்கு மொத்தமாக ரூபாய் பத்தாயிரம் வழங்கி விடுகின்றேன். அதன் வட்டி வருவாயிலிருந்து திருவருள் திட்டத்திற்கு என் சந்தாவை சேர்த்து விடுங்கள்” என தெரியப்படுத்தியிருந்தார்.

அந்த ஆண்டு நெல்கொள்முதலுக்கு சென்றிருந்த ஆஸ்ரமவாசியிடம் தனது பாங்க் பாஸ்புத்தகத்தையும் கையொப்பமிட்ட செக்கையும் கொடுத்து, “ பாஸ் புத்தகத்திலுள்ள தொகை முழுவதையும் ஆஸ்ரமமே எடுத்துக் கொள்ளட்டும்” எனக் கூறி முடித்தார்.

ஆஸ்ரமம் வந்த ஆஸ்ரமவாசி இவ்விபரத்தையெல்லாம் சுவாமிஜியிடம் கூறினார். பாஸ்புத்தகத்தை பார்த்த போது திருச்சி மத்திய கூட்டுறவு பாங்கியில் ரூ 13,774.62 பைசா இருப்பில் இருப்பது தெரியவந்தது. இதைக் கண்ணுற்ற சுவாமிஜி மௌனமானார்., சிறிது நேரத்திற்குப்பின் சுவாமிஜி ஆஸ்ரமவாசியிடம் , “ ஏனப்பா, அவரது நிலை என்ன? வேறு ஏதாவது பாங்கியில் கணக்கு வைத்துள்ளாரா?” எனக்கேட்டார்.

அவரது கேள்விக்கு ஆஸ்ரமவாசி, “ இல்லை சுவாமி. இந்த வங்கியில் ஒன்றில்தான் அவருக்கு கணக்கு இருக்கிறது. அவர் விவசாயம் செய்து வருகிறார். அத்துடன் கிராம முன்சீப் வேலையும் பார்த்து வருகிறார்.” என பதிலளித்தார்.

அதற்கு சுவாமிஜி, “ அவர் நமக்கு பத்தாயிரம் கொடுப்பதாகத்தானே நம்மிடம் கூறியிருந்தார். அதை மட்டும் செக்கில் எழுதி வாங்கிவிட்டு பாக்கித்தொகையை அவரது கணக்கிலேயே இருக்கட்டும். பாஸ் புத்தகத்தை அவரிடம் கொடுத்துவிடு. நல்ல தாராள மனம் படைத்த மெய்யன்பர் போலும்.” என்று கூறிமுடித்தார்.

“அறம் செய்ய விரும்பு” என்ற மூதுரை இக்காலத்தில் கடைபிடிப்பதென்பது சிரமமான காரியமாக உள்ளது. இருப்பினும் பாரத மண்ணில் பிறந்த பெரியோர்கள் மனதில் ‘அறம்,’ வறட்சியடையவில்லை; பசுமையானதாக இருக்கிறது என்பதற்கு அன்பர் செட்டிகுளம் பச்சைமுத்து நிதர்சனமாக சாட்சியாக இருக்கிறார்.

27. மனதிற்கு மற்றொரு தாக்குதல்

பகவான் பரமஹம்ஸரின் அருட்கிருபையால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனம், திருப்பராய்த்துறை கிராமத்தில் திருச்சி– கரூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதை அனைவரும் அறிவர்.

இப்பாதையானது நீர்வளமிக்க சோழநாட்டையும், நொங்கு மரங்கள் நிறைந்த வறட்சியை வரப்பிரசாதமாக பெற்ற கொங்கு நாட்டையும் இணைக்கும் முக்கியமான பாட்டையாகும். ஆகையால் எந்தக் காலத்திலும் ரயிலிலும் பஸ்ஸிலும் பிரயாணம் செய்ய முடியாத, தரித்திரத்தை மூலதனமாகப் பெற்ற பாமர ஏழை மக்கள் பாதசாரிகளாய் கிழக்கும் மேற்கும் நோக்கி போய்வந்த வண்ணமாக இருப்பார்கள்.

சில ஆண்டுகளாகவே தொடர்ந்து கொங்கு நாட்டில் மழை பெய்யாத காரணத்தால் அம்மாவட்டத்தின், அதிலும் கோவை மாவட்டத்தின் கிழக்கு பகுதியை சார்ந்த மக்கள் வறுமை மேலிட்டால் கூடை, முறம் தூக்கிக் கொண்டு, நீறும் சோறும் நாடி செழிப்பான சோழவள நாட்டை நோக்கி புறப்படலாயினர்.

பொன்னிவளநாடு புனலுடைத்து, சோழவளநாடு சோறுடைத்து, என்றெல்லாம் பொன்னிநாட்டில் வழங்கும் பழமொழிகளாகும். எனவே, இவை இரண்டும் கிடைக்கும் தஞ்சை மாநகரை புகலிடமாகக் கொள்ள மக்கள் கூட்டம் சாரி சாரியாக போய்க் கொண்டிருந்தது. அம்மக்கள் இடுப்பிலும், தோளிலும், எடுத்துச் செல்லும் இளம் சிறார்கள், கை பிடித்து இழுத்துச்செல்லும் சிறிது வயது வந்த பாலகர்கள்,தடியூன்றி தளர்நடை நடக்கும் தள்ளாத முதியோர் என இப்படியாக பல பரிதாபக் காட்சிகளை, ஆஸ்ரமத்தில் அமர்ந்திருக்கும் இக்கண்கள் காணும். சுலபத்தில் அக்காட்சிகளின் துயரம் மனதை விட்டு அகலாது. இதயத்தின் மையத்தில் துக்கத்தின் சின்னமாக பதிந்துவிடும். அந்த வடு மறைய நீண்ட நாட்களாகும்.

வரும் அக்கூட்டங்களில் சில ஆஸ்ரமத்திற்குள் நுழைந்துவிடும் சந்தர்ப்பங்களும் நேரிடுவது உண்டு. கால நேரத்தை அனுசரித்து ஆறுதல் மொழி புகன்று அவர்களை அனுப்பிவிடுவதும் நடக்கும். அவர்களும் போய் விடுவார்கள். ஆனால் அக்காட்சிகள் போகாது. மனதை பற்றிக் கொள்ளும். மனதையே சுற்றிச் சுற்றி வரும். அந்நேரங்களில் ஏற்படும் அவஸ்தை சொல்லி முடியாது. மனம் நைந்து நைந்து நெகிழும். கதகதக்கும் கண்களில் நீர் முத்துக்கள் கோர்த்துக் கொள்ளும். கண்களை துடைக்கக் கூட தோணாத நிலையில், பகவானின் கோயிலின் உட்புறம் சென்று மனம் சலிக்கும் வரையில் வேதனை முத்துக்களை சிந்தித்து விட்டு ஏதோ பரிகாரம் கண்டுபிடித்தது போல அப்போதைக்கு மனம் சற்று தெளிவடையும். அவன் தந்த பரிசு அப்போதைக்கு அதுதான்.

பின் ஆஸ்ரம அலுவல் அறைக்கு வந்து அமர்ந்தாய்விடும். இது மாதிரி மனதை பிடித்து உலுக்கும் துயரம் தோய்ந்த சம்பவங்கள் பலவற்றைக் கண்டிருக்கிறோம். பூர்வாஸ்ரமத்தில் இருக்கும் போதுஏற்பட்ட கடும் சோதனைகளையும் புன்முறுவலுடன் ஏற்று சகித்து நின்ற இந்த மனம் ஏன் இப்போது இந்தவித நிகழ்ச்சிகளால் தொய்வடைகிறது? இது அறியாமையா? அன்றி ஆண்டவன் சோதனையில் நிகழும் மாயையா? என ஒரு கணம் சிந்திக்க நேரிடும்.

பரப்பிரம்மமாகிய பரமஹம்ஸரே பாமர மக்களின் துயர்கண்டு கண்ணீர் உகுத்தாரே. இதுவும் அவன் தந்த மாயை தானோ?

இரும்பை ஒத்த நரம்பையும் கட்டுறுதி குலையாத சதையையும், எஃகு போன்ற மனஉறுதியையும் கொண்ட ஆஜானுபாகுவாய், சிம்மத்தின் தோற்றத்தில் திகழ்ந்த வீரத்துறவி விவேகானந்த சுவாமிகளும் எளியோர் துயர் கண்டு அவரது மனம் பனிபோல் உருகிற்றே. பலதடவைகள் தனியிடம் சென்று விம்மி விம்மி கண்கள் சிவக்க கதறிக்கதறி கண்ணீர் விட்டிருக்கிறாரே என இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி மனம் சிறிது நேரத்தில் அமைதியைத் தழுவும்.

“நெட்டிருப்பு பாரைக்கு (கடப்பாரை)
நெக்கு விடாப் பாறை
பசுமரத்தின் வேருக்கு
நெக்கு விடுமன்றோ”

இப்பாடல் நினைவுக்கு வரும். ஏதோ ஒரு காரியத்திற்கு இறைவன் எம்மை தயார் செய்து கொண்டிருக்கிறான் போலும்.

“சுற்றிலுமுள்ள ஏழை பாமர மக்கள் இவ்வாறு அவதியுறும் போது நமக்கு மட்டும் ஏன் அழகான ஆஸ்ரமம்? வேளா வேளைக்கு நல்லுணவு? இன்னும் இதர வசதிகள்? இக்கேள்வி மனதிலே அடிக்கடி பிறக்கும். ஆஸ்ரமத்தையும் தோட்டத்தையும் மற்ற பொருட்களையும் விற்று ஏழை மக்களுக்கு வழங்கிவிட்டு, அயோத்தி, பிருந்தாவனம், ரிஷிகேசம் அல்லது இமயமலை நோக்கி நடந்து விடலாமா? குருநாதா ஏன் இந்த உள்மனப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறாய்? சீக்கிரம் முடித்து வை. எமக்கொரு முடிவான திருவாக்கை கொடு என்று பரமஹம்ஸரிடம் முறையிட்டு கதறுவேன். பல நாட்கள் கண்ணீர் விட்ட வண்ணமிருப்பேன். ஆனால் எமது உள்ளம் மட்டும் பதறாதே. யாவற்றிற்கும் காலம் என்ற ஒன்று உண்டு”. அதுவரை பொறுமையாக இருப்பது தான் எமது நிலையாக இருந்தது. துயரங்கள் கண்டு மனம் கசியும் பிரார்த்தனையில் அமருவேன். தியானம் மனசை லேசாக்கும். ஆனால் இடையிடையே மனம் இமயமலை யாத்திரையை அசை போடும். இதற்கு இறுதி முடிவும் குருதேவர் அருளினால் மனதிலே தோன்றும். நீ

பனிமலை சென்றாலும் அங்கும் பத்து பேர் உம்மை கண்டு ஏங்கி நிற்பார்கள். நீ பணி செய்யப் பிறந்தவனே."

சிறிது நேரத்தில் மனம் லேசாகும். அவ்வேளைகளில் சுவாமிஜி அவர்கள் புத்தகங்களை படிக்க ஆரம்பிப்பார்கள். அவருக்கு மிகப்பிடித்த புத்தகம், "நீக்ரோ மகான் புக்கர் வாஷிங்டன்" என்ற புத்தகமாகும். அனாதை நீக்ரோ மக்கள் சேவைக்காக அவர்பட்ட துயரங்கள் சுவாமிஜியை சுண்டி இழுக்கும். நாடு வேறாயினும், சேவையை பொறுத்த மட்டில் அவரும் நாமும் ஒன்றுதான் என்ற மனநிலையில் மூழ்கிவிடுவார். அவரது வாழ்க்கை வரலாற்றை ஆண்டறிக்கை ஒன்றில் சுவாமிஜி அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

28. உள்ளவர்களிடம் உறவா?

ஒரு துறவி பணத்தை தேடலாமா? பணக்காரர்களுடன் உறவாடலாமா? இவ்வித கேள்விகள் மகாத்மா காந்தியிடமும் விவேகானந்த சுவாமிகளிடமும் அன்பர்கள் பலராலும் கேட்கப்பட்டன.

முதலில் ஸ்ரீராமகிருஷ்ணரை எடுத்துக் கொள்வோம். மண்ணேதான் பொன். பொன்னேதான் மண். மண்ணுக்கும் பொன்னுக்கும் வேறுபாடு இல்லை என்ற சங்கல்பத்துடன் மண்ணையும் காசு பணங்களையும் இரு கைகளில் மாற்றி மாற்றி ஒன்றாகக் கலந்து கங்கை நீரில் எறிந்து விடுவாராம். அது முதல் அவரையும் அறியாமல் நாணயம் அவரது உடம்பில்பட்டால் பொறுக்க முடியாத வலியை உணரும் நிலையை எய்துவிடுவாராம்.

ஒரு சமயத்தில் ஒரு மார்வாடி சேட் கொடுக்க வந்த பத்தாயிரம் ரூபாயையும், மதுர நாதர் கொடுக்க வந்த காளி கோவிலின் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஏற்க மறுத்தார். கொடுக்க வந்த அவர்களிடம் மிகவும் கடிந்து கொண்டார். அப்படிப்பட்ட பரபிரம்மமான பரமஹம்ஸர் " ஏழைமக்களுக்கு வயிறாற அன்னம் கொடு, தலைக்கு எண்ணெய் கொடு, உடுத்த வஸ்திரம் கொடு அவர்கள் நல்வாழ்விற்காக உனது பெட்டியில் உறங்கிக் கொண்டிருக்கும் பணத்தை எடுத்து செலவிடு. ஏழைகளுக்கு தராமல் சேர்த்து வைக்காதே." என்று ஜமீன்தார் மதுரநாதரை வற்புறுத்துவார். ஜமீன்தார் அவ்வாறு செய்ய தயங்கினால் கண்ணீர்விட்டு அழுவார். குழந்தை போல் கோபித்துக் கொண்டு திட்டுவார். இதிலிருந்து தெரிவது என்ன?

தன்னுடைய சரீரத்திற்கான செலவை காளிகோவிலில் பூஜை செய்வதற்கென கிடைக்கும் ஆறுரூபாய் சம்பளத்தில் முடித்துக் கொள்வார். அதற்கு மேல் பணத்தை சேர்த்து வைக்க அவர் ஒப்புவதில்லை. ஆனால் அதே நேரத்தில் தரித்திர நாராயணர்களுக்கு லட்சோபலட்ச ரூபாய் செலவழிக்கச் சொல்லுகிறார். காசைத் தொடாத ஆண்டி பிறரை செலவு செய்ய கட்டளை இடுகிறார்.

ஒரு சமயம் விவேகானந்த சுவாமிகளை சந்திக்க ஒருவர் வந்தார். அவர் சுவாமிகளிடம், " நீங்கள் முற்றும் துறந்தவராயிற்றே. ஆனால் ஏழைகளை மிகவும் நேசிக்கிறீர்களே. பாச பந்தத்தை துறந்த துறவிகள் இவ்வாறு செய்யலாமா? ஒரு வேளை மனிதாபிமானத்தின் காரணமாக ஏற்றுக் கொண்டாலும், மன்னர்களின் அரண்மனைகளில் வசிக்கின்றீர்களே! அரசர்களுடன் தொடர்பு வைத்திருக்கின்றீர்களே! உம்மை புரிந்து கொள்ள முடியவில்லையே" எனக் கேட்டார்.

சுவாமிகள் புன் முறுவலுடன் அவரை நோக்கி " அன்பரே உங்கள் சந்தேகம் நியாயமானதே. உங்கள் மனதில் இவ்விதமான எண்ணங்கள் தோன்றியதில் தவறேதுமில்லை. நான் முற்றும் துறந்த துறவிதான். ஏழைகளுக்கு ஏதாவது செய்வதை கடமையாகக் கொண்டுள்ளேன். கடமை மட்டுமல்ல. லட்சியமும் அதுதான். இதற்கு பணம் தேவைப்படுகிறதே. பரதேசியான என்னிடம் பணம் ஏது? என் கடமையை நிறைவேற்ற நான் மன்னர்களுடன் நட்பு பூண்டால்தான் முடியும். போகம் துய்க்கும் மேல் நாட்டிற்கு நான் சென்றதும் மதப்பிரசாரத்திற்கு மட்டுமல்ல. மதம் இருக்கட்டும் ஒரு புறம். அது எனக்கு அவ்வளவு முக்கியமல்ல.

எனது நாட்டு ஏழை மக்களின் வறுமைப்பிணியை நீக்க ஏதாவது ஒரு வழியை கண்டுபிடிக்கலாம் என்ற கருத்தில்தான் மேல் நாடு சென்றேன்" என உணர்ச்சி ததும்ப கூறினார். தனது கேள்வியின் அபத்தத்தையுணர்ந்த அந்த அன்பர் சுவாமிகளிடம் மன்னிப்பு கேட்டுச் சென்றார்.

சுவாமி விவேகானந்தரின் பேச்சும் மூச்சும், உணர்வும், சொல்லும், செயலும் தேடிய பொருள் ஆகிய அனைத்தும் ஏழை அனாதை மக்களுக்காகவே அர்ப்பணித்தார். அவர்களுக்காகவே வாழ்ந்தார்.

காந்தியடிகள் பிர்லா மாளிகையில் தங்குவதை பற்றி கேள்வி எழுந்தது. ஏழை மக்களின் தொண்டன், தரித்திர நாராயணர்களின் நண்பன் என்றெல்லாம் கூறிவரும் மகாத்மாஜி பிர்லா மாளிகையில் தங்குவதா? இது முரண்பாடான செயலன்றோ? எண்ணமும் செயலும் நேர் மாறாக இருக்கிறதே என்பதெற்கெல்லாம் மகாத்மாஜியே பதில் தந்துள்ளார்.

" என்னுடைய தரித்திர நாராயண சேவைக்கு பிர்லாவும், பஜாஜும் எவ்வளவு தூரம் அனுகூலமாக இருந்து வருவார்களோ அவ்வளவு வரைக்கும் அவர்களுடன் என் நட்பு நீடிக்கும். அவர்கள் மாளிகைகளில் என் பாதம் படும். அவர்கள் எனக்கு அனுகூலமாக இல்லை என்று தெரியும் அந்த நொடியில் அவர்களுடன் நட்பு முறிந்து போய்விடும்." என பொருள் பொதிந்த கருத்தை கூறியுள்ளார்.

இத்தகைய மகாத்மா ரயில் நிலையங்களிலும் பொதுக்கூட்டங்களிலும், தரித்திர நாராயணர்களின்துயர்களையும் அவர்களுக்கு தேவையானதை செய்து கொடுக்க, வெட்கமோ அவமானமோயின்றி தனது மேல் துண்டை

விரித்து பிச்சை ஏற்றார்.

அனாதை மக்கள் சேவைக்கென அவர்களது மேம்பாட்டிற்காக தம் வாழ்வை அர்ப்பணித்தவர் குடில் சுவாமிஜி அவர்கள். அவர்களுக்கு உண்டி, உறையுள், உடை, கல்வி, மருத்துவம் ஆகியவற்றைத்தர தனம் மனம் படைத்த தனவந்தர்களிடமிருந்து பொருள் பெறுவது கடமையும் கட்டாயமும் கூட. பொருள் தந்தவர்களும் இகபர வாழ்வில் மேன்மையுறுகின்றனர். துறவியர் கூட்டம் பெருவாரியான பணத்தை எந்த நிலையில் ஈட்டலாம் எந்த நிலையில் ஈட்டக்கூடாது எக்காரியத்திற்காக ஈட்டிய பொருளை செலவிட வேண்டும் என்றெல்லாம் ஒவ்வொன்றிற்கும் ஒரு வரையறை உண்டு. பிரபுக்களிடம் உறவாடலாம். ஆனால் அவர்களை உலகப் பற்றிலிருந்து மெல்ல மெல்ல விடுவிக்கவும் அதன் பயனாய் அவர்கள் உய்வடையவும் செய்ய தரும மார்க்கத்தில் அவர்களை வற்புறுத்தியாவது ஈடுபடச் செய்தாக வேண்டும்.

சுவாமிஜியின் ஆழ்மனதிலிருந்து தானம் கொடுத்தோர் உயரிய வாழ்வினை எட்ட வேண்டும். ஆன்மீக மார்க்கத்தில் நாட்டம் கொள்ள வேண்டும் என்றெல்லாம் சத்திய வாக்குகளாக வெளியாயின.

29. ஜட்ஜ் ஐயா

“செய் நன்றி மறப்பது நன்றன்று” என்னும் மூதுரைக்கு ஏற்ப, “ஜட்ஜ் ஐயா” என குடில் குழந்தைகளால் அன்போடு அழைக்கப்படும் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் குடிலுக்கு ஆற்றிய தொண்டினைப்பற்றி குடில் சுவாமிஜி அவர்கள் கூறியுள்ளதை பார்ப்போம்

“ஆஸ்ரமத்தின் மூன்று ஐயாக்களில் ஜஸ்டிஸ் மகராஜனும் ஒருவர். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டையில் அவர் நீதிபதியாக இருந்த காலத்திலிருந்து குடிலுடன் தொடர்பு கொண்டிருந்தார். குடில் சேவைக்கு தம்மால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவையும் மனமுவந்து செய்தார்கள்.

அவர் புதுக்கோட்டையில் இருந்த போது திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் சங்கீத கச்சேரி நடத்தி கணிசமான தொகையை குடில் சேவைக்கு வசூலித்துக் கொடுத்தார். அடுத்து திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களது நாட்டிய நாடக கலா நிகழ்ச்சியை குடில் நிதிக்காக நடத்தினார்.

அவர் கோயம்புத்தூரில் பணியாற்றும் போது ஒரு நாடகத்திற்கு ஏற்பாடு செய்து கணிசமான நிதியை குடிலுக்காக திரட்டினார். திரு. V.K.C. நடராஜன். I.A.S, ஜாயிண்ட் கலெக்டர் மூலமாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. புதுவையில் அவர் இருந்த காலத்தில் செய்த புதுமைதான் வரலாற்றுபுகழ் பெற்ற ஒரு சம்பவம். அதை நினைக்கும் போதெல்லாம் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இப்படி ஒரு நிகழ்ச்சி இதுவரை நடந்துள்ளதா? இனி மேலும் நடக்குமோ? என தீர்மானிக்க முடியவில்லை.

ஒரு மாநிலத்தின் ஆளுனர், முதன்மந்திரி, அனைத்து மந்திரிகள், தலைமை நீதிபதி, போலீஸ் ஐ.ஜி, நகர கவுன்சிலர்கள், எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள் மற்றும் புதுவை நகர பிரமுகர்கள் ஆகிய அவ்வளவு பேர்களையும் ஒரே சமயத்தில் குடிலுக்கு வருகை தருமாறு செய்தார்கள்.

அக்கூட்டம் நாள் முழுவதும் குடிலில் தங்கியிருந்து குடிலை முழுவதுமாக சுற்றிப் பார்த்து, சுவாமிஜி அவர்களின் மகத்தான சேவையை வெகுவாகப் பாராட்டிச் சென்றனர். குடிலின் வளர்ச்சி நிதிக்காக புதுச்சேரியில் குடிலுக்காக ஒரு நிதி நிகழ்ச்சி அமைய, இவர்களின் குடில் வருகை காரணமாயிற்று.

புதுவையில் குடில் நிதிக்காக வாரியார் சுவாமிகளின் ராமாயண விரிவுரை 10 நாட்கள் நடந்தன. ஆளுனர் தலைமை தாங்க அமைச்சர்கள் கூடியிருக்க, ஐ.ஜி அவர்கள் கூட்டத்தினரை வரவேற்க, வசூல் கணக்கை புதுவை செக்ரடேரியேட் கவனிக்க செலவுகள் போக ரூபாய் 50,000/= நன்கொடை வசூலாயிற்று.

இந்நிகழ்ச்சி குறித்து சிறிது யோசிப்போம். ஒரு மாநிலத்திலுள்ள தனியார் நடத்தும் அனாதை விடுதிக்கு இன்னொரு மாநில அரசே ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து நிதி வசூல் செய்து கொடுத்தது என்பது சரித்திரத்திலே கேள்விப்படாத ஒன்றல்லவா?

ஜஸ்டிஸ் மகராஜனின் மங்காத புகழுக்கு இப்புதுவை நிகழ்ச்சியும் ஆதி காரணமாக விளங்கும். அவர் பதவி ஓய்வு பெற்றதும், "நாம் இவ்வளவு காலமும் என்ன செய்தோம்" என்ற கேள்வி என்றைக்காவது அவரது மனதில் எழச்செய்யும். அது சமயம், " ஆம் செய்ய வேண்டியதை செய்திருக்கிறோம்' என்று குடிலுடன் தொடர்பு கொண்டதை மனதில் நினைத்து அவரது மனம் ஆறுதல் அடையும்.

அவர் பதவி வகித்த காலத்தில் அவர்களை உன்னிப்பாக பார்த்து வந்தவர்களுக்கு தெரியும். அப்பதவிதான் அவர்களால் சிறப்புற்றது என்று. அவர் ஓய்வு பெற்றதும், " ஐயோ பாவம் அவரில்லாமல் அப்பதவி ஏங்குகிறது" என்றாலும் அது மிகையல்ல. ஆனால் அவரோ விடுதலை அடைந்த பட்சி போல் ஆனந்தமயமாயினர்.

30. வாரியார் சுவாமிகள் என்ற மாமனிதர்

அந் நாளிலே செந்நாப்புலவரும், செந்தமிழ் வித்தகரும், உபன்யாச சக்கரவர்த்தி என போற்றப்படுபவரும், ஆன்மீகத்தில் பெரும் நாட்டம் கொண்டவரும், வயலூர் முருகன் பேரில் அளவற்ற பக்தி கொண்டவரும், சிவநேசச் செல்வராக மதிக்கப்படுபவரும், அப்பர் பெருமானின் மறு அவதாரம்

என போற்றப்படுபவரும், காண்போர் தலை வணங்கும் திருஉருவம் கொண்டவரும், கேட்போரை மயங்க வைக்கும் வெண்கல குரலுக்குடையவரும் தமிழ் மைந்தர்களின் நெஞ்சங்களில் எல்லாம் பவனிவருபவருமான மாமனிதரும் கொடை வள்ளலுமான திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆவார்கள்.

அவரது சொற்கள் வேதவாக்கு, அவரது கட்டளை ஆண்டவனின் கட்டளை, அவரது திருக்கரத்தால் திருநீறு பெறுவதே பெரும் பாக்கியம் என நினைப்பவர்கள் ஆயிரமாயிரம் மக்கள். அவரை வரவேற்று உபசரிப்பதே இல்லறத்தார்கள் தங்களது தலையாய கடமை என நினைத்து அவரை வரவேற்று உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி பெறுகின்றனர். ஆயிரமாயிரம் சீடர்கள் இவருக்கு உண்டு. இவர்களுக்கு வேறு மந்திரம் எதுவுமே தெரியாது. "வாரியார்" என்ற சொல்லே இவர்களுக்கு மந்திரமாக விளங்குகிறது.

தமிழகத்திலுள்ள நூற்றுக்கணக்கான ஆலயங்கள் இவரது உதவியால் புத்துயிர் பெற்று, கும்பாபிஷேகம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் மூன்று கால பூஜையும் நடைபெற்று வருகின்றது. தமிழ்மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் வாரியார் சுவாமிகள் சென்று தமது வெண்கலக் குரலால் பக்தி, புராண உபன்யாசங்களை நடத்தி ஆன்மீக உணர்வை அம்மக்களுக்கு உண்டாக்கியதில் வாரியார் சுவாமிகளுக்கு பெரும் பங்கு உண்டு. வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாமல், தம் உபன்யாசத்தின் மூலம் வசூலாகும் ஆயிரமாயிரம் பணத்தை பலவிதமான கோயில் திருப்பணிகளுக்கும், தர்ம காரியங்களுக்கும் தந்துள்ளார் வாரியார் சுவாமிகள்.

ராமாயண, மகாபாரத, கந்தபுராண, பெரிய புராண உபன்யாசங்களை உள்ளம் உருகி அவர் நிகழ்த்தும் போது உருகாத நெஞ்சமே கிடையாது. அவர் ஏற்றுக் கொள்ளும் தேவாலயத் திருப்பணிகளுக்கு லட்சக்கணக்கில் தமிழக மக்கள் வாரி வழங்கியதின் மூலம் தங்களை செம்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவரால் குடில்சேவை மேலும் செம்மையுறும் என எண்ணித்தானோ என்னவோ குருதேவரின் திருவருள் இரு சுவாமிகளையும் ஒன்றாக இணைய வைத்தது இறைவன் செயலேயாகும்.

குடில்சேவைக்கு லட்சம்லட்சமாக வாரியார் சுவாமிகள் தம் உபன்யாசங்கள் மூலம் நிதி திரட்டி தந்துள்ளார். குடில் சேவையில் வாரியார் சுவாமிகள் ஆற்றிய அரும்பணியை ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனாலும் கூற முடியாது.

அவர் நாள்தோறும் நடத்தும் விரிவுரையின் போது குடிலைப்பற்றி கூறுவதும் ஒரு அங்கமாகிவிட்டது. பிரிக்க முடியாத அளவிற்கு குடில் அவருடன் ஒன்றிவிட்டது. வெளியூர்களில் அவர் தங்க நேர்ந்த போதிலும் குடிலுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார். அதில், " உடல் தான் இங்கிருக்கிறது. உயிர் குடிலில் இருக்கிறது. இந்த உடலும் உயிரும் குடிலுக்கு அர்ப்பணம்" என்ற வரிகள் அதில் இருக்கும்.

ஒரு சமயம் குடிலுக்கு பொருளாதார நிலையில் பெரும் நெருக்கடி. அது சமயம் வாரியார் சுவாமிகள், " கவலைப் படாதீர்கள். எப்படிப் பார்த்தாலும் வருடத்தில் எனக்கு ஒரு லட்சம் வரை கிடைக்கும். எல்லாத் தருமங்களையும், திருப்பணிகளையும் நிறுத்தி விட்டு குடிலுக்கு கொடுத்துவிடுகிறேன்" என்றார். அதற்கு சுவாமிஜி அவர்கள், " ஐயா குடிலுக்கு இப்படித்தான் அடிக்கடி சோதனை வரும். வந்த சுவடு தெரியாமல் திருவருளினால் சரியாகிவிடும்." என்பார்.

வாரியார் மனதிலே வள்ளிமலையில் ஒரு அனாதாஸ்ரமம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அதை குடில் நிறைவேற்றிவிட்டதால் அதற்கு செய்யவேண்டியதை எல்லாம் இதற்கு செய்கிறேன் என வாரியார் சுவாமிகளே கூறியிருக்கிறார்கள்.

குடிலின் திருவருள் திட்ட மூலதன நிதியாக ரூபாய் பதினைந்து லட்சம் சேர்ந்து விட்டது. முழுக்க முழுக்க வாரியார் சுவாமிகளின் பெருமுயற்சியால்தான் இந்நிதி திரட்டப்பட்டது. வாரியார் ஐயாவுக்கு சிறப்பான முறையில் பாராட்டுத் தெரிவிக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் ஐயா அவர்கள் விரும்பினார்கள். இது விஷயம் பலவகையாக சிந்தித்து பார்க்கப்பட்டது. அவரது சேவைக்கேற்ப எந்தவகையான மரியாதையும் பாராட்டும் நடத்தலாம் என பல நாட்கள் சிந்தித்தார் சுவாமிஜி அவர்கள்.

பெரிய பெரிய மாலையா? கூடாது வகைவகையான வண்ண மலர் மாலைகள் அவரை அலங்கரித்துள்ளன. விலைமிக்க கண்கவர் பொன்னாடையா? வகைவகையான பொன்னாடைகள் அவர் அணியாததா? பாராட்டுப் பத்திரங்களா? அவரது இல்லத்தில் சுவற்றில் மாட்ட இடமில்லாமல் ஆங்காங்கே காணப்படுகின்றன. என்ன பட்டம் அவருக்கு கொடுக்கலாம் என்றால் ஏற்கனவே அவருக்கு கிடைத்த பட்டங்களையே அவர் போட்டுக்கொள்வதில்லை எனவே இவைகளை விட அவரிடம் இல்லாதது எது? எது செய்தால் அவர் மகிழ்ச்சியடைவார்? என்றெல்லாம் யோசிக்கப்பட்டது.

ஒருவருக்கு கொடுப்பது என்றால் அது அவரிடம் இல்லாததாக இருக்க வேண்டும். வாரியார் ஐயா அவர்களை தெய்வம் போல் கொண்டாடவும் பூஜிக்கவும் எவ்வளவோ பக்தகோடிகள் நாட்டில் உள்ளனர். அதிலெல்லாம் நாம் தலையிட வேண்டியதில்லை. வேறு என்ன செய்யலாம்? யோசித்ததில் விடை கிடைத்து விட்டது.

பல ஆண்டுகள் அவர் கூடவே இருந்து பார்த்ததில் உள்ளூர அவருக்கு இருந்த கவலை என்னவென்று தெரிந்து விட்டது. அதாவது இதுவரை தாம் எழுதிய நூல்கள் எல்லாம் தக்க சீரான நிர்வாகம் இல்லாததால் அச்சிட்டு

வெளியிட இயலவில்லை. லாபம் இல்லாமல் அடக்க விலைக்கு கொடுத்து நாட்டிலுள்ள மக்கள் பலரும் படிக்க வேண்டுமென்பது அவரது அவா. அதற்கு எதிர்காலத்தில் வசதி இல்லையே என்ற ஏக்கம் அவரிடம் இருந்து வந்தது. அவரது அந்த ஏக்கத்தை போக்குவதே குடில் வாரியார் சுவாமிகளுக்கு செய்யும் பெரிய பாராட்டாகும்.

ஒரு லட்ச ரூபாய் குடிலிலிருந்து, " வாரியார் அறக்கட்டளை" என்ற பெயரில் நிரந்தர வங்கி சேமிப்பில் வைத்து அதிலிருந்து வரும் வட்டியை சேர்த்து வைத்து எதிர்காலத்தில் நல்ல முறையில் திட்டமிட்டு அவரது நூல்களை நல்ல முறையில் பிரசுரித்து கல்லூரிகளிலும்,. உயர்நிலைப் பள்ளிகளிலும் இடம் பெறச் செய்வதாகும். அவரது நூல்கள் வாசக சாலையிலும் இருக்கும்படி எதிர்காலத்தில் முறைப்படி கவனிக்கப்படும்.

51. குடிலுக்கு பல்லாண்டு

குடிலுக்கு பல்லாண்டு கூறுகிறார் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள்

தெய்வத்தையே துணையாகக் கொண்ட தன்னலமற்ற பேரன்புக்கு எத்தகைய பேராற்றல் இருக்கிறது என்பதை ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

25 ஆண்டுகளுக்கு முன் மதிப்பாரற்று முடங்கிக் கிடந்த ஒரு ஓட்டை குடிசை விரிந்து பெருகி நாடெங்கும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் பல்கலைக் கோயிலாக இன்று நிமிர்ந்து நிற்கிறது. அன்று ஐந்து அனாதை குழந்தைகளுக்கு தாயாக இருந்த விடுதி இன்று முன்னூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் கண்கண்ட தெய்வமாகவும் இயங்குகிறது.

கால் நூற்றாண்டில் இவ்வற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய பிரம்மசாரி ராமசாமி ஒரு மாபெரும் துறவி. அஞ்சா நெஞ்சு படைத்த ஆன்ம வீரர். விளைவைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படாது முழு ஆர்வத்துடன் பணி செய்து கிடப்பதே தம் கடமை என்பதையுணர்ந்த கர்மயோகி அவர். மலை கலங்கினும் தான் கொண்ட கொள்கையில் நிலை கலங்காது உறுதியோடு நிற்கும் உத்தம சீலர். தன் உடலையும் உள்ளத்தையும், உயிரையும் மிச்சம்கிச்சம் வைக்காமல் திக்கற்றவர்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்ட ஏழைப்பங்காளர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரையே தன்னை ஆளும் தெய்வமாகக் கொண்ட அடியார். இந்தக்குடிலை நடத்துவதில்தான் அவருக்கு எத்தனை இன்னல்கள். எத்தனை எத்தனை இடையூறுகள். நெருக்கடிகள். அத்தனை இடுக்கண்களையும் பிரம்மசாரி சமாளித்த விதமே அலாதி.

“ பாரத்தை ராமகிருஷ்ணர் மேல் சுமத்தி விட்டு அவரின் அருள் வழி நிற்போம். எல்லா இன்னல்களும் விலகிவிடும்.” எனக்கூறுவார் அடிகளார். சொன்னபடியே எல்லா இடையூறுகளும் நீங்கி குடிலின் குறிக்கோள் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

குடிலின் தொடக்க காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. ஒவ்வொரு நாள் மாலை 4 மணி அளவில் அம்மையார் ஒருவர் வந்து நெல் குத்தி அரிசியாக்கிச் சென்றுவிடுவார். அதைக்கொண்டு குழந்தைகளின் பசியாற்றப்படும். ஒரு நாள் குத்துவதற்கு ஒரு நெல்கூட இல்லை. நெல் குத்த வந்த அம்மையாரை போகச் சொல்லியாய்விட்டது. இன்று என்ன செய்வது என சிந்தித்தார் பிரம்மசாரி.

சென்னையில் ராமகிருஷ்ண மடத்தை ஏற்படுத்திய ஸ்ரீராமகிருஷ்ணானந்தா சுவாமிகள் செய்ய நினைத்தது போல் நாமும் இன்று செய்ய வேண்டியதுதான் என தீர்மானித்தார். ஸ்ரீராமகிருஷ்ணானந்தர் செய்ய நினைத்தது என்ன? ஒரு நாள் மதியம் வெகு நேரமாகிவிட்டது. பகவான் ராமகிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்ய பக்தர்கள் எவரும் உணவுப்பொருட்கள் கொண்டு வந்து தரவில்லை. சுவாமிகள், “ குருதேவா இதுவரைக்கும் உணவுப் பொருள் வரவில்லை. கடற்கரை மணலை கொண்டு வருகிறேன். உமக்கும் நிவேதனம் செய்து நானும் அதையே உண்ணப் போகிறேன்,” எனக்கூறி எழுந்தார்.

என்ன ஆச்சரியம். கதவு தட்டப்பட்டது. பக்தர் ஒருவர் பெரிய தாம்பளத்தில் கோதுமை மாவு, நெய், காய்கறிகள் வைத்து, அத்தட்டை சுவாமிகள் பாதங்களில் வைத்து வணங்கி நின்றார்.

சுவாமிஜி மகிழ்வோடு அவைகளை பெற்றுக்கொண்டு சப்பாத்திகள் செய்து குருமகராஜ் படத்திற்கு முன் நிவேதனம் செய்து விட்டு தாமும் பசியாறினார். பகவானின் கருணையை எண்ணி எண்ணி வியந்தார்.

மேற்படி சம்பவத்தை நினைவிற்கு கொண்டு வந்த பிரம்மசாரி, குடிலில் இருப்பவர்கள் சிறு குழந்தைகள் ஆனதால் அருகிலுள்ள காவிரிநதிக்கு சென்று குடம் குடமாக காவேரி தீர்த்தத்தை கொண்டு வந்து குழந்தைகளுக்கு தந்து, பகவானுக்கும் நைவேத்யம் செய்வது என்று தீர்மானித்தார். இந்த முடிவிற்கு அவர் வந்த போது மாலை மணி 6 ஆகிவிட்டது. மெல்ல மெல்ல இருள் சூழ ஆரம்பித்தது.

அவ்வேளையில் தூரத்தில் ஒரு உருவம் மங்கலாகத் தெரிந்தது. சற்று அருகே வந்ததும் அந்த மனிதன் தலையில் ஒரு மூட்டை இருப்பது தெரிய வந்தது. அவர் ஆஸ்ரமம் அருகே வந்து தலை மேல் உள்ள மூட்டையை இறக்கி வைத்தார். என்ன என்று கேட்டதற்கு அந்த முதியவர், “ ஐயா இரண்டு வருடங்களுக்கு முன் ரங்கநாதபுரம் பிச்சு அய்யரிடம் குடிலைப்பற்றி பேசினீர்களாம். அவரும் நெடுநாளாக குடிலுக்கு உதவ வேண்டும் என்று

நினைத்தாராம். இன்று அணலைக்கு வந்த அவர் ஒரு மூட்டை நெல்லை என்னிடம் தந்து குடிலுக்கு கொண்டுபோய் கொடுத்துவிட்டு வா.'' என்று கூறி என்னை அனுப்பினார். வருகிறேன் எனக்கூறிச்சென்று விட்டார். மாணவன் ஒருவனை அனுப்பி அந்த அம்மையாரை வரச்சொல்லி, நெல்குத்தப்பட்டு அரிசியாக்கிவிட்டு சென்றார். அமுது செய்து பகவானுக்கு நிவேதனம் செய்து குழந்தைகள் உண்டனர்.

தற்போது குடிலின் பொருளாதார நிலை மிகச் செம்மையாக உள்ளது. இந்த வளத்திற்கு அடிகோலியது ஆயிரமாயிரம் தமிழக மக்கள். ஆடம்பரமான சேவையை தமிழக மக்கள் என்றும் ஆதரிப்பதில்லை. சேவை செய்பவர் ஒழுக்கசீலர், தன்னல நோக்கு இல்லாதவர் என்று தெரிந்துவிட்டால் நான் முந்தி நீ முந்தி என போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்வார்கள் தமிழ் மக்கள். இத்தகைய குடிலின் சிறப்பான நிலைக்கு காரணமானவர்கள் கலெக்டர் மலையப்பன், வாரியார் சுவாமிகள், தாப்பா ரெட்டியார், சித்திரைபுத்திரன் போன்ற உத்தம மனிதர்கள் ஆவார்கள்.

முரசைக் கொட்டினால் அதன் ஒலி ஒரு காத தூரம் கேட்கும். இடி இடித்தால் அதன் ஒலி ஒரு யோசனை தூரம் கேட்கும். ஆனால் ஒருவர் நன்கொடை கொடுத்தார் என்ற தகவலை தாழ்ந்த குரலில் ரகசியமாக சொன்ன அச்சொற்கள் வானமண்டலத்தையும் கடந்து மூவுலகத்திலுள்ளவர்களுக்கும் கேட்குமாம்.

> "கழிப்படு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
> இடித்து முழங்கியது யோசனையோர் கேட்பர்
> அடுக்கி மூவுலகும் கேட்குமே ஈண்டு
> கொடுத்தார் எனப்படும் சொல்"

இவ்வாறு கொடையின் உயரிய தன்மையை உலகு அறிய முழங்குகிறது நாலடியார். பொருளாதார நிலையில் ஸ்திரத்தன்மையை குடில் பெற்றுவிட்டதினால் பொருளுக்காக இனி பிரம்மச்சாரி அலைய வேண்டியதில்லை. அவரது நெறியை பின்பற்றி குடிலை நடத்தக்கூடிய சீலமும், பிரம்மசரியமும் ஒருங்கே இணைந்த துறவிச் சீடர்களை உண்டாக்குவதற்கு வேண்டிய வழிகளையும் பிரம்மசாரி அவர்களே வகுத்துக் கொடுக்க வேண்டும். இவற்றை எல்லாம் சாதித்து முடிப்பதற்காக இறைவன் பிரம்மசாரி அவர்களை பல்லாண்டு பல்லாண்டு வாழ்வித்து வாழ வைப்பானாக.

32. குருகுல மாணவர்களின் எதிர்காலமும் அன்பர்களின் கேள்விகளும்

ஆஸ்ரமத்தை நன்கு அறிந்த ஏராளமான அன்பர்களுக்கு அவ்வப்போது பலவித ஐயங்கள் தோன்றுவது உண்டு. அவற்றை அவர்கள் சுவாமிஜியிடம்

கூறுவார்கள். அவைகளுக்கான அவர் கொடுத்த பதிலை கீழே காணலாம்.

அன்பர்களின் கேள்வி:

குடிலின் சட்டதிட்டங்கள்படி பெற்றோர்கள் இல்லாத சிறுவர்களின் கல்விப்பயிற்சி முடிந்த பின் என்ன செய்யப் போகிறீர்கள்? குடிலிலேயே அவர்களை வைத்துக் கொண்டால் கூட்டம் பெருகிவிடுமே.

சுவாமிஜியின் பதில்:

படித்து முடித்து ஆளான அத்தனை பேரும் ஆஸ்ரமத்திலேயே தங்கிவிட மாட்டார்கள். உற்றார் சுற்றத்தார் அவனை பார்க்க வரும் வேளையில் பலவித ஆசை வார்த்தைகள் கூறிச் செல்வார்கள். அது அவன் மனதில் வேலை செய்து கொண்டே இருக்கும். படிப்பு முடிந்து அவர்களிடம் போய்விட்டால்தான் தனக்கு நல்லது என்ற எண்ணத்திலிருப்பான். இந்த ஒரு ஸ்தாபனம் இல்லாதிருந்தால் தான் ஒரு மனிதனாக உலகில் தலைகாட்ட முடியுமா? என்பதை அவன் அறிந்திருந்தாலும், பக்குவம் பெறாத இளம் வயதினர் ஆனதால் உறவினர்களுடன் இருக்கவே விரும்புவான். இது உலக இயல்பு. தான் படித்த ஸ்தாபனத்தில் தொண்டு செய்வது தனது கடமை என எண்ணுபவர்கள் நூறில் ஒன்றிரண்டு பேர்கள் தேறுவதே கடினம். எனவே இங்குபடிக்கும் அனைவர்களும் இங்கேயே தங்கி விடுவார்கள் எனப் பயப்படத் தேவையில்லை. இதுவே உங்களின் முதற்கேள்விக்கு எமது விடையாகும்.

அன்பர்களின் கேள்வி 2 :

படிப்பு முடிந்து வெளியேறும் மாணவன் தன்னை ஆளாக்கிய ஸ்தாபனத்திற்கு தான் சம்பாதிப்பதில் ஒரு குறிப்பிட்ட தொகையை தரவேண்டும் என்ற திட்டம் நல்லதல்லவா? அவ்வாறு செய்வீர்களா?

சுவாமிஜியின் பதில் :

ஓயாமல் உழைப்பதற்கே உமக்கு அதிகாரம். அதன் பயனை எதிர்பார்க்கும் உரிமை கிடையாது என பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியதை மறந்தால் சேவையின் புனித லட்சியம் மறைந்து விடும். நூற்றுக்கணக்கான மாணவர்களை படிக்க வைத்தது அவர்களை சேர்த்து விட்ட உறவினர்களின் நன்கொடையிலிருந்தோ அல்ல. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருணை ஒன்றையே துணையாகக் கொண்டு பலவகை முயற்சிகளில் செயல்பட்டு இந்த தர்மஸ்தாபனத்தை நடத்தி வந்திருக்கிறோம்.

ஸ்தாபனத்திலிருந்து படிப்பு முடிந்து வெளியேறிய மாணவர்கள் உலகின் சுதந்திர பிரஜைகள். ஆனால் தர்மநெறிக்கு மற்றவர்களை விட இவர்கள் அதிகமாக கட்டுப்பட்டவர்கள். இதை யாரும் மறுக்க முடியாது. எனவே படிப்பை முடித்து சென்றவர்கள் தங்கள் வருவாயில் ஆறில் ஒரு பங்கோ, அல்லது அதற்கு அதிகமாகவோ தரலாம். ஆனால் அது அவரவர்கள் விருப்பம். இதில்

குடிலின் வற்புறுத்தல் எதுவுமே கிடையாது. இதெல்லாம் மனிதப்பண்பாட்டின், "மன எக்ரிமெண்ட்" தவிர காகிதத்தில் எழுதிவாங்கும் அக்ரிமெண்ட் அல்ல. இதுவே தங்களது இரண்டாவது கேள்விக்கான எமது விடையாகும்.

அன்பர்களின் கேள்வி 3:

குடிலில் படிக்கும் மாணவர்களில் தக்கவர்களை தேர்ந்தெடுத்து தங்களைப் போன்ற துறவிகளாக்கி நாட்டின் பலபாகங்களிலும் சேவை செய்ய அனுப்பி வைக்கும் திட்டம் உள்ளதா?

சுவாமிஜியின் பதில் :

மூன்றாவதாக நீங்கள் கேட்டுள்ள கேள்வி மிகவும் முக்யத்துவம் வாய்ந்தது. எம்மிடம் சர்வோதய அன்பர் ஒருவர், " சுவாமி இந்த இருநூறு சிறுவர்களில் ஒருவனாவது உங்களைப் போன்ற வாழ்க்கைக்கு தயாராவது மிகமிக அவசியம். அவ்வாறு ஒருவன் வந்துவிடுவானேயானால் உங்களது லட்சியம் ஈடேறிவிடுமல்லவா?" என்றார்.

இந்த அன்பர் கூறியது சரியே. அந்நிலைக்கு வருவது என்பது சாதாரண விஷயமல்ல. செம்படவன் வலையிலிருந்து வெளியே குதித்து தப்பிய மீன்களைப் போல உலக ஆசாபாசங்களிலிருந்து விடுபடுபவன் எவனோ அவனே துறவுக்கு ஏற்றவன்.

காலையில் வீசும் காற்றைப்போல், அன்றலர்ந்த மலரைப்போல், இலைகளின் நுனியில் முத்துப்போல் பிரகாசிக்கும் களங்கமில்லாத பனித்துளியை ஒத்தவன் எவனோ அந்த பரிசுத்தமான ஆத்மாவானவன் கடவுள் சேவைக்கு உகந்தவன்.

பறவைகளால் கொத்தப்படாத கனிகளே பகவானுக்கு சமர்ப்பிக்க உகந்தவை. உலக இன்பங்களாலும் ஆசைகளாலும் தீண்டப்படாத மனம் உடையவன் எவனோ அவனே தொண்டிற்கேற்ற பாக்யவான்.

எனவே துறவு வாழ்க்கைக்கு அதிக கூட்டத்தை எதிர்பார்க்க முடியாது. யாருக்கெல்லாம் சரீர சிற்றின்ப ஆசை அற்றுப்போகிறதோ, யாருக்கெல்லாம் பிறருக்கு தொண்டு செய்யாமல் இருக்க முடியாது என்ற உணர்வு பிறக்கின்றதோ அத்தகையவர்களே துறவுக்கு ஏற்ற புனித ஜீவன்கள் ஆவார்கள்.

ஆண்டவனின் ஆதேசம் இங்கு பயிலும் மாணவர்கள் எவர்கள்பால் விழுகின்றதோ அவர்களே இந்த ஸ்தாபனத்திற்கு தொண்டு செய்யும் பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள்.

33. மக்கள் கலெக்டர் மலையப்பன்

மாவட்டங்களின் ஆட்சியாளர்களாக கலெக்டர்கள் பலபேர் இருந்திருக்கின்றனர். ஆனால் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்று, என்றும் நிலைத்த பெயருடன் ஆட்சி செய்து வந்த கலெக்டர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். கடமை உணர்வோடு மனிதாபிமான அடிப்படையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, அதே நேரத்தில் சட்டங்களின் உண்மையான கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து செயல்படும் அதிகாரிகளை மக்கள் மதிப்பர்.

ஏழை எளியமக்களின் குறைகளை அறிந்து அவர்களது மனோபாவத்திற்கு ஏற்றார்போல் அம்மக்களை அரவணைத்து அவர்களது குறைகளை செவிமடுத்து, அடுத்த கணமே அவர்களின் குறைகளைப் போக்க அதிகாரிகளுக்கு ஆணையிடும் கலெக்டர்களை மக்கள் என்றும் மறப்பதில்லை. அத்தகைய அதிகாரிகள் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களால் என்றும் மதிக்கப்படுகின்றனர்.

மக்களின் மனம் கவர்ந்த மாவட்டக் கலெக்டர்களில் முதலிடம் பெற்றவர் கலெக்டர் R.S. மலையப்பன் I.A.S., ஆவார். அனைவரும் இவரை, " மக்கள் கலெக்டர்" என்ற அடைமொழி சேர்த்து " மக்கள் கலெக்டர் மலையப்பன்" என அன்போடு அழைத்தார்கள்.

நெடிய உயரம் மாநிறம், மெலிந்த உடல்வாகு, புன்முறுவல் மாறாத முகம், தோற்றத்தில் எளிமை, உடையிலும் எளிமையானவர் மலையப்பன் அவர்கள். காந்தீயத்தில் பற்றுக் கொண்டவர். கதராடை அணிபவர். அனைவரிடமும் முகத்தில் சிரிப்பு மலர பேசுவார். அதிகாரிகளானாலும், இடைநிலை ஊழியர்களானாலும், கடைநிலை ஊழியர்களானாலும், பொதுமக்களானாலும் அனைவரும் இவருக்கு ஒன்றுதான். வித்தியாசம் பாராட்டமாட்டார். மாறாத புன்னகையுடன் அளவளாவுவார். இவரது சக அதிகாரிகள் இவரை தங்களின் மேலதிகாரி என்றே பார்த்தது கிடையாது. தந்தையாகக் கருதி பணியாற்றி வந்தனர். தங்கள் குறை தீர்க்கவந்த தெய்வம் என இவரை மக்கள் வணங்கி வந்தனர்.

இத்தகைய மாண்புகளைப் பெற்ற இம்மனிதரை குடில் சேவைக்கு கொண்டு வந்து சேர்த்தது, பரமஹம்ஸரின் பெருங்கருணையன்றோ!.

திருச்சி மாவட்டக் கலெக்டராக திரு. மலையப்பன் மூன்றாண்டுகள் பணிபுரிந்தார். குடிலைப்பற்றியும் அதன் சேவையைப் பற்றியும் உயர்வாகப் பலர் பேசினர். அதைக் கேட்ட மலையப்பன் அவர்கள் குடிலுக்கு வந்து சுவாமிஜியை சந்தித்தார். தன்னலமற்று ஏழைப்பிள்ளைகளுக்காக சுவாமிஜி செய்துவரும் சேவை கலெக்டரை பெரிதும் கவர்ந்தது. அன்றே ஆஸ்ரமத்தின் மெய்யன்பராக மாறிவிட்டார். சட்டரீதியாகவும், தார்மீக முறையிலும் என்னென்ன உதவிகளை செய்ய முடியுமோ அவ்வளவையும் குடில் அறப்பணிக்கு செய்தார். இவரது

காலத்தில் நடைபெற்ற சில நிகழ்வுகளைப் பார்ப்போம்.

திரு. மலையப்பன் அவர்கள் திருச்சி கலெக்டராக இருந்த காலத்தில், ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சியை குடில் சார்பில் நடத்துவார். ரூபாய் 25, 50, 100, 500 என மதிப்புக் கொண்ட புத்தகங்கள் அச்சடிக்கப்படும். ரெவின்யூ, ஹைவேஸ், பொதுப்பணித்துறை, சேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ், R.D.O., D.E.O., பாரஸ்ட் ஆபீஸ், லேபர் ஆபீஸ், சென்ட்ரல் எக்சைஸ் ஆகிய துறைகளின் தலைமை அதிகாரிகளை இவரே சந்தித்து டிக்கட் புத்தகங்களை கொடுத்து, குடிலின் தர்மகாரியத்திற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுப்பார். மகுடி இசையில் நாகம் மயங்குவது போல் மலையப்பன் அவர்களின் பேச்சிற்கு கட்டுப்பட்டு, குடில்பணியில் ஈடுபடுவார்கள்.

திருமதி K.B. சுந்தராம்பாள், திருமதி M.S. சுப்புலட்சுமி, ருக்மணி அருண்டேல், T.K.S. சகோதரர்கள், S.V. சகஸ்ரநாமம் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகளை குடிலின் சார்பாக நடத்தினார். அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் இவரே முழுப்பொறுப்பும் ஏற்றார். இரவு பகல் என்று பாராமல் பாடுபடுவார். குடிலுக்கு தட்டுப்பாடில்லாத நிதிவேண்டுமென்றால் பற்பல நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்காக திட்டமிடுவார். சுவாமிஜியிடம் கலந்து பேசுவார். நிகழ்ச்சிகளை நடத்துவார். சதா சர்வகாலமும் கலெக்டர் மலையப்ப ஐயா அவர்கள் குடிலுக்கு என்ன செய்யலாமென்றே நினைத்துக் கொண்டிருப்பார். ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வார். கணிசமான தொகை வசூலாகும். வசூல் கணக்கை சுவாமிஜி அவர்கள் மலையப்ப ஐயாவிடம் கூறுவார். கணிசமான தொகை சேர்ந்ததற்கு அவருக்கு தம் மகிழ்ச்சியை தெரிவிப்பார். ஆனால் கலெக்டர் ஐயாவின் மனம் அமைதி பெறாது, " இது போதாது சுவாமி. . இன்னமும் பெருந்தொகை வசூலாக வேண்டும்." என்பார். அடுத்த நிகழ்ச்சியில் பெரும்தொகை வசூலித்துத் தருவதாக சுவாமிஜியிடம் கூறிவிட்டுச் செல்வார். குடில் சேவையில் கலெக்டர் ஐயாவுக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் கண்டு சுவாமிஜி அவர்கள் சந்தோஷத்தில் மூழ்கிவிடுவார்.

ஒரு வருடம் புதுக்கோட்டை அரண்மனை மைதானத்தில் திருமதி. ருக்மணி அருண்டேல் குழுவினர் நடத்திய நாடக நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்கும் பொறுப்பாளர் கலெக்டர் ஐயா அவர்கள் தான். படு சுறுசுறுப்பாக காரியங்களை கவனித்து வந்தார். சுவாமிஜி அவரிடம், " ஐயா. . சற்று ஒய்வு எடுங்கள். அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்கள்" என்று எவ்வளவு கூறினாலும் கேட்கமாட்டார். சுவாமிஜியின் கைகளைப் பிடித்துக்கொண்டு, " நீங்கள் ஒய்வெடுங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று புன்முறுவலுடன் கூறிவிட்டு சென்றுவிடுவார்.

கலைநிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. ஒரு அதிகாரி வந்து சுவாமிஜியிடம் 25/= ரூபாய்க்கான செக் ஒன்றை கொடுத்துச் சென்றார்.


சுவாமிஜிக்கு முதலில் அது யார் கொடுத்த செக் என்று புரியவில்லை. விசாரித்ததில் கலெக்டர் ஐயா கொடுத்தது தெரியவந்தது. குடில் நிதிக்காக கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவரே அவர்தான். பணம் கொடுத்து மற்றவர்கள் நிகழ்ச்சிகளை பார்க்கும்போது தாமும் ஒரு டிக்கட் வாங்கித்தான் நிகழ்ச்சியை பார்ப்பது முறையானது என்ற முடிவிற்கு வந்தார் கலெக்டர் அவர்கள்.

குடில் நிதிக்கு ஆயிரமாயிரமாக வசூல் செய்து கொடுத்த அவர் டிக்கட் வாங்கித்தான் கலைநிகழ்ச்சியை பார்க்க வேண்டும் என்பதில்லை. நேர்மைக்கு ஒரு புது இலக்கணமே வகுத்துக் காட்டி விட்டார் கலெக்டர் ஐயா அவர்கள். வழக்கம் போல் சுவாமிஜி அவர்கள் கலெக்டர் ஐயாவிடம் அன்றைய வசூல் தொகையை சொன்னார். இருவரும் அன்றைய நிகழ்ச்சியைப் பற்றியே பேசி மகிழ்வார்கள். ஆனால் கலெக்டர் ஐயாவிற்கு அன்றைய நிதி வசூலில் திருப்தியிருக்காது.

உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுவார். கலெக்டர் ஐயா. சுவாமிஜி அவர்கள் கலெக்டர் ஐயாவிடம், " ஐயா இன்றைக்கு கிடைத்த நிதிவசூலும் அதிகத்தொகைதான். உங்கள் முயற்சி பெரும்பலனைத் தந்துள்ளது. நீங்கள் இருக்கும் போது குடிலுக்கு என்ன குறை வந்துவிடப்போகிறது. லக்ஷம் லக்ஷமாக வசூலித்துக் கொடுக்கப் போகிறீர்கள். குருமகராஜ் அருள் உங்களுக்கு நிச்சயம் இருக்கிறது. உங்களால் குடில் எவ்வளவோ உயர்ந்த நிலைக்கு வரப்போவதை நீங்களே காணப்போகிறீர்கள்." என பலவாறாக கூறி கலெக்டர் ஐயாவை பழைய நிலைக்கு சுவாமிஜி கொண்டு வருவார்.




காவிரிக்கரையில் அமைந்துள்ள
வரவேற்பு மண்டபம்



குடில் "பிரார்த்தனா – மண்டபம்" பின்புறத்தோற்றம்


ஸ்ரீராமகிருஷ்ண குருகுல விடுதி
திருப்பராய்த்துறை
திருச்சிராப்பள்ளி ஜில்லா
சென்னை ராஜ்ய அறநிலையப்பாதுகாப்பு அமைச்சர்
திரு. கே. வெங்கடசாமிநாயுடு
அவர்களால்
அஸ்திவாரக்கல் நாட்டப் பெற்றது.
21-10-1953.


ஸ்ரீராமகிருஷ்ண குருகுலம் மாணவர்கள்
மருந்தகம்.
திருப்பராய்த்துறை
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
திருச்சி டாக்டர்,
திரு. G. விஸ்வநாதன், M.B.B.S. அவர்களால்
திறந்து வைக்கப்பெற்றது.
29-12-1963.




கெம்பநாயக்கன்பாளையம் – ஆஸ்ரமக் குழந்தைகளும் அன்பர்களும்



16.01.1957 பூஜ்யஸ்ரீ விநோபா அடிகள் வித்யாலயக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி மாங்கன்று நடும் காட்சி (உடன்) ஆசிரியர் திரு. வெள்ளைச்சாமி மற்றும் குடில் மாணவர் மருதை (தற்போதைய கெம்பநாயக்கன்பாளைய அறக்கட்டளைத் தலைவர்)



திருச்சி – கோவை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள
தொழில் சேவா மையம்



குடில் – தொழிற்கூடம் (நிர்வாக அலுவலகம்)

1. 1966 காந்தி ஜெயந்தி

2.10.1966 காந்தி ஜெயந்தியன்று கொடியேற்றம் முடிந்தபின், சுவாமிஜி அவர்கள் மாணவர், ஆசிரியர்களடங்கிய கூட்டத்தில் பேசிய உரை.

இன்றைய தினம் காந்திஜியின் பிறந்த நாள். மகாத்மாவால்தான் நம் நாடு விடுதலை பெற்றது. சிறு குழந்தைகளுக்கெல்லாம், இப்போது சொன்ன வார்த்தைகள் புரியும். யார் மகாத்மா? யார் காந்தி? என்று கேட்பவர்களுக்கு அவரது வாழ்நாளிலே என்ன நடந்தது? என்பதைப்பற்றி சுருக்கமாக ஒரு நிகழ்ச்சியை சொல்லி விழாவை முடிக்கின்றோம்.

கேட்பதற்கு இது கதையல்ல. உண்மை சம்பவம். சில வருடங்களுக்கு முன் நம்மிடம் இருந்தவர்தான் காந்தி மகாத்மா. அவரது வாழ்நாளில் ஒரு நாள் நிகழ்ந்த நிகழ்ச்சியைத்தான் உங்களுக்கு சொல்லப் போகிறோம். கவனமுடன் கேட்டு மனதிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் கூட நாட்டு விடுதலை கிடைப்பதற்கு முன், மகாத்மாஜி நாட்டிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருப்பார்.ஒரு சமயம் வீர மராட்டிய பூமியிலே பயணம் மேற்கொண்டிருந்தார். அது சமயம் ஆஜானுபாகுவான ஒரு வாலிபர் காந்திஜியின் எதிரே வந்து நின்றார். பாபுஜியின் பாதங்களை தொட்டு நமஸ்கரித்து விட்டு, " சேவை செய்வதற்கு ஆவலாய் உள்ளேன்." என்றார். தான் யார்? தனது வரலாறு என்ன? தனது படிப்பு என்ன? தனதுகுடும்ப சூழ்நிலையின் பின்னணி என்ன? என்பவைகளைக் குறித்து அந்த இளைஞர் எதுவும் கூறவில்லை. காந்தியும் அந்த இளைஞனை கால்முதல் தலைவரை கூர்ந்து பார்த்தார். " சேவை செய்ய ஆவலாக இருக்கிறேன்" என இரண்டாவது தடவையாக காந்தியிடம் அவ்விளைஞர் கூறினார்.

காந்தியும் அவ்விளைஞரை பார்த்ததோடு சரி. மேற்கொண்டு அவரைக் குறித்த விவரங்கள் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை. சேவைக்கு தக்கவர் இவர் என்று அவரது மனதிலே தோன்றியது. கம்பீரமாக தோற்றம் அளித்த இளைஞனின் பார்வையில் ஒரு சக்தியிருப்பதை காந்தி கண்டார். கூரிய அறிவாற்றலை பெற்றவர் என்றும் கண்டு கொண்டார். பம்பாய் மாநிலத்தின் சர்வ சேவா சங்கத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி இளைஞரிடம் கொடுத்து அவரிடம் போகச் சொல்லி அனுப்பிவிட்டார். அந்த இளைஞரும் ஏதும் பேசாமல் கடிதத்தை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். காந்தியை சுற்றி இருந்தவர்களுக்கு இந்த சம்பவம் வியப்பையளித்தது.

காந்தி அக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறார்? எந்த வேலைக்காக எழுதியிருக்கிறார்? என்பதும் இளைஞருக்கு தெரியாது. கடிதம் எப்படி ஒட்டியிருந்தாலும் அதைப்பிரித்து பார்த்துவிட்டு, மறுபடியும் முன் மாதிரியே ஒட்டி விடக்கூடிய தந்திரங்கள் எல்லாம் இக்கால வாலிபர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. உரியவரிடம் சென்று கடிதத்தை கொடுத்தார்.

சர்வ சேவா சங்கத் தலைவரும் ஆங்குள்ள மற்றையோரும் திடகாத்திரமான உடலோடு கம்பீரமாக நின்று கொண்டிருந்த அவ்வாலிபனை பார்த்தனர். அத்தலைவர் இந்த வாலிபனை நமது தலைமை ஆபீசிலே நடக்கும் நூற்பு, நெசவு, சலவை, மூட்டை கட்டுவது, அந்தந்த இடங்களுக்கு அனுப்புவது ஆகிய காரியங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என கண்காணிக்கும் பணியில் நியமித்தார். கண்காணிப்பது மட்டுமல்லாமல் தானும் அப்பணியில் ஈடுபட்டார். நாள் முழுதும் கடினமான வேலை. ஆனால் இவ்விளைஞரோ அப்பணிகளை செய்வதில் பெரு மகிழ்ச்சியடைந்தார். தனது மேலதிகாரிகள் மெச்சும் வண்ணம் ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தார். சிறிய காரியம் என்றாலும் அதிக கவனம் செலுத்தி வந்தார். பம்பாய் நிர்வாகிகளுக்கு பரம திருப்தி ஏற்பட்டது.

ஓராண்டிற்குப்பின் பம்பாய் சர்வ சேவா சங்கத் தலைவர் காந்திஜியை சந்திக்க வேண்டியிருந்தது. காந்திஜியிடம் சென்றார். அவரைப் பார்த்த உடனே மகாத்மாஜிக்கு அவரிடம் தாம் அனுப்பிய இளைஞனின் ஞாபகம் வந்தது. "உம்மிடம் ஒரு ஆண்டிற்கு முன் ஒரு இளைஞரை அனுப்பினேனே அவர் எப்படி இருக்கிறார்" என வினவினார். சேவா சங்கத் தலைவரும், " அவருக்கு கொடுத்த பணியை நல்லமுறையில் செய்துவருகிறார்" என்றார். "என்ன பணி" என காந்தி கேட்டார். அதற்கு தலைவர், " மூட்டை கட்டும் பிரிவில் வேலை சரியாக நடக்கிறதா? என்பதையெல்லாம் மேற்பார்வை பார்த்து, ஆட்களிடம் வேலை வாங்குவது".

இதைக் கேட்டு மகாத்மாஜி திடுக்கிட்டு போய்விட்டார். " அவரைப் பற்றி தீர விசாரித்தீரா. . எனக்கே அவர் B.A., படித்தவர் என்பது பின்னால் தெரிய வந்தது. தலை சிறந்த ஒழுக்கசீலர். இந்நாளிலே B.A., படித்த வாலிபர்கள் சுயநலம் பேணி எத்தனையோ வேலைகளுக்கு சென்றுவிடுகின்றனர்.ஆனால் இவரோ அத்தகைய வேலைகளுக்கு போகாமல் நம்மிடம் வந்து சேவை செய்யும் ஆர்வத்தை தெரிவித்தார். அவரை வேறுபணியில் அமர்த்துங்கள். சேவா சங்கத் தலைவர் அவரை அப்பணியிலிருந்து விடுவித்தார். சேவா சங்கங்களின் கணக்குகளை மேற்பார்வையிடுவது, சங்க நிர்வாகிகளின் பணித்திறனை அறிந்து கொள்ளுவது, அகில இந்திய ரீதியில் நிர்மாணப் பணிகளை ஊக்குவிப்பது ஆகிய ஒரு நிலையிலே அவரை வைத்து, இறுதியில் மராட்டிய மாநில கதர் சேவா சங்கத்திற்கே தலைவராக வந்தார். காந்திஜியின் நிர்மாணப்பணியில் இதற்கும் மேலான பதவிஇல்லை.

அந்த வாலிபர் யார் என்று இன்னமும் , " சாமி சொல்லவில்லையே என்றுதானே நினைக்கிறீர்கள். அவர்தான், " அன்னாசாகிப் சஹஸ்ரபுத்தேவ்" என்பவராவார். காந்தியத்திலே இருப்பவர்களுக்கெல்லாம் இவரைப்பற்றி

தெரியும். சஹஸ்ரபுத்தேவ் என்றால் ஆயிரம் புத்திமதிகளுக்கு அதிபதி எனப்பொருள். புத்தன் என்பதற்கு என்ன அர்த்தம்? யாவும் கற்றவர், அறிந்தவர் என்பது பொருள். இளவயதில் பெற்றோர்கள் இட்ட பெயரை நிரூபிப்பதற்காக பின்னாளில் மாபெரும் உயரிய மனிதராகத் திகழ்ந்தார். சாகேப் என்ற பதத்திற்கு உயர்ந்த மனிதர் என்பது பொருள். மகாத்மாஜியிடம் சேர்ந்து அவர் இட்ட பணியை செய்வதே தவம் என நினைத்தார். சிறந்த யோக நிலையைப் பெற்றார். மகாத்மாஜி இவரைப் பற்றி கூறும்போது ' உலகத்து வாலிபர்களுக்கெல்லாம் இவர் முன் மாதிரியாக இருந்தார். அதற்கேற்ப வாழ்ந்தார்'.

அன்பார்ந்த குழந்தைகளே சகஸ்ரபுத்தேவின் வாழ்க்கை நமக்கு எதைக் கற்பிக்கிறது? தன்னலமற்ற சேவையே முன்னேற்றத்திற்கு ஆதாரம். எளிமையே வாழ்வின் வெற்றி. உழைப்பே மனிதனை உயர்த்தும் வெற்றிப்படிகள். ஆகவே குழந்தைகளே உங்களுக்கு புரிந்தமட்டில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தக்க பிராயம் வரும்போது நல்லவற்றை உங்கள் மனமே உங்களுக்கு உணர்த்தும். எல்லாம் கைவர குருமகராஜை இடைவிடாமல் பிரார்த்தியுங்கள். குருமகராஜுடைய அருள் நம்மைக் காக்கும்.

2. நவராத்திரி விழா

1977 ம் வருட நவராத்திரி விழாவில் பதிவு செய்யப்பட்ட சுவாமிஜி அவர்களின் சொற்பொழிவு.

அன்பார்ந்த குழந்தைகளே!

.இன்றைய நவராத்திரி விழாவில் ஒரு பாகம் சரஸ்வதிபூஜை, ஆயுத பூஜை இரண்டையும் சேர்ந்த விழாவாக நாம் ஆஸ்ரமத்தில் கொண்டாடுகிறோம். இவ்விழாவின் தத்துவம் என்ன? ஏன் கொண்டாடுகிறோம்? என்பதைப் பற்றி சிறிது சொல்லி விழாவை முடிப்போம்.

இவ்விழாக்களெல்லாம் எப்படி ஏற்பட்டது? ஆதி மனிதன் இருப்பிடமின்றி ஊர் நாடு என்பதில்லாமல் காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.மற்ற காட்டு மிருகங்களிடையே ஆதிமனிதனும் வாழ்ந்து வந்தான்.பலநூறு ஆண்டுகள் சென்றன. சுற்றுப்புறசூழ்நிலை தந்த அனுபவத்தால் சிலவற்றை அறிந்து கொண்டான். தங்களை பாதிக்கும் காற்று, மழை, ஆகிய இயற்கை சக்திகளை வழிபட ஆரம்பித்தான். பயத்தினால் அவர்களிடையே இந்த வழிபாடு வழக்கம் ஏற்பட்டது. பயம் என்பது இப்போதும் இருக்கிறது. திடீரென பலமாக இடிஇடிக்கும் போது பயந்துபோய் அர்ஜுனா அர்ஜுனா என்கிறோம் அல்லவா? குழந்தைக்கும் சொல்லிக் கொடுக்கிறோம்

அல்லவா? அர்ஜுனா என்பதால் இடியின் சப்தம் குறையுமா? காதுகளுக்கு கேட்காதா? மனதிற்கு தைரியத்தைக் ஊட்டவும் பயத்தை வெல்லவும் இவ்வாறு கூறப்படுகிறது. மற்றபடி இடிக்கும் அர்ஜுனனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ஆதியில் மனிதன் உணர்ச்சியற்று வாழ்ந்தான்.

காடுகளில் பிராணிகள் சுற்றி வருகின்றன. அங்கேயே குட்டிகளை ஈனுகின்றன. அவைகள் காலமானால் அந்தந்த இடத்திலேயே கிடப்பது மற்றவை போய்க் கொண்டிருக்கும். இதையெல்லாம் கண்டு வந்தான் ஆதிமனிதன். இறந்தவைகளைப் பற்றி துக்கமோ வருத்தமோ இல்லாத காலம். மெல்ல மெல்ல மனிதனின் அறிவு வளர்ச்சியடைய ஆரம்பித்தது. தான் எங்கிருந்து எப்படி வந்தான் என்பதை உணர்ந்தான். தாயின் வயிற்றிலிருந்து பிறப்பதை உணர்ந்தான். பெற்ற தாயினிடத்தில் பாசம் ஏற்பட்டது. தங்களை பாதிக்கும் இயற்கையை தெய்வமாக வழிபட ஆரம்பித்தான். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களினால்தான் உயிரினங்கள் வாழ்கின்றன என்பதை புரிந்து கொண்டான். ஐந்து பூதங்களையும் ஐந்து சக்திகளாக வழிபட ஆரம்பித்தான். இப்படியே மெல்ல மெல்ல கானக வாழ்வை விட்டுவிட்டு வளம் தரும் நதிக்கரைகள் ஓரமாக வாழவும் ஆரம்பித்தான். பின்பு சமவெளிக்கு வந்தான். அங்குள்ள இயற்கை பொருட்களைக் கொண்டே தான் வாழ ஒரு இருப்பிடம் அமைத்துக் கொண்டான். உணவிற்காக வேட்டையாடினான். விவசாயம் செய்தான். படிப்படியாக அவனது அறிவு மேலோங்கியது. ஐந்து சக்திகளையும் இரண்டாகப் பிரித்தான். நிலம் பூதேவி சக்தி என்றும் நீர்—கங்காதேவி சக்தி என்றும் பிரித்தான். மற்ற மூன்று சக்திகளையும் மும்மூர்த்திகளாக உருவகம் செய்து கொண்டான்.

ஐந்து சக்திகளிலே இரண்டைவிட்டு நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய மூன்று சக்திகளையும் மும்மூர்த்திகளாக அதாவது பிரும்மா, திருமால், ருத்ரன் எனப்பிரித்தான். பிரம்மா – படைத்தல். திருமால் – காத்தல். ருத்ரன்—துடைத்தல். இயற்கையை இப்படி தெய்வங்களாக மாற்றியபின் அவனது அறிவும் அனுபவமும் மேலும் வளர்ந்தன. இயற்கை உயிர்இனங்கள் அனைத்திலும் மனிதன் உட்பட ஆண், பெண் என இருபிரிவுகள் இருப்பதைக் கண்டு தாங்கள் வழிபட்டுவரும் தெய்வங்களுக்கும் தேவிகளை உருவாக்கினான். அதாவது பிரம்மனின் தேவி கலைமகள். திருமாலின் தேவி அலைமகள் (லட்சுமி). ருத்ரனின் தேவி – மலைமகள் (பார்வதி) இந்தவிதமாக சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்ற மூன்று பெண் சக்திகளையும் மும்மூர்த்திகளோடு இணைத்தார்கள்.

நாடு உயரவும்,விரோதிகளிடமிருந்த காக்கவும் போர்த்தன்மை கொண்ட வீரர்கள் முக்கியம். வீரத்தன்மை , பராக்ரமம் ஓங்க பார்வதி தேவியை வழிபட்டார்கள்.

தங்களின் வாழ்வு வளம் பெறவும் குடும்பம் செழிக்கவும் பொருளாதார

நிலை ஓங்கவும் தேவையான செல்வம்பெற லக்ஷ்மி தேவியை வழிபட்டார்கள்.

இன்னொரு கூட்டம் இந்த வளம் எல்லாம் நிலையானதல்ல. அழியும் தன்மை கொண்டது. என்றும் அழியாது நிலைத்து நிற்பதும் பெருமை தருவதும் கல்விதான். ஆகவே கல்விக்கு தேவதையான சரஸ்வதியை வழிபட்டனர்.

இதன் காரணமாகத்தான் முத்தேவியரையும் வைத்துத்தான் நவராத்திரிவிழா கொண்டாடப்படுகின்றது. நன்றாக ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும். இவைகள் யாவும் இயற்கையிலிருந்து தான் உண்டாயிற்று. மனிதன் தன் கற்பனைக்கேற்ப கடவுளர்க்கும் தேவிமார்களுக்கும் உருவத்தை உண்டாக்கினான். அந்த உருவங்களின் மீது தனது பக்தியை செலுத்தினான். தியானித்தான். மந்திரங்களினால் அர்ச்சித்தான். இவ்வாறு செய்ததினால் அந்த மூர்த்தங்களுக்கு ஒரு சக்தி உண்டாயிற்று. எவ்வளவுக்கெவ்வளவு அந்த மூர்த்தங்களிடம் நாட்டம் கொள்ளுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அதிலிருந்து சக்தி பிறக்கும். அதிலிருந்து உண்டானதுதான் விழாக்கள். தங்களது அன்பிற்கும் பக்திக்கும் உரித்தான தெய்வங்களை பெருமைப்படுத்துவதற்காகவே திருவிழாக்களை ஏற்படுத்தினான். அறிவார்ந்த பெரியோர்களும், ஞானிகளும், தவசித்தர்களும் சிந்தித்து சிந்தித்து ஒவ்வொரு மூர்த்தத்துக்கும் ஒரு சக்தியை தங்களின் தவவலிமையால் உண்டாக்கினார்கள்.

அந்த தவவலிமையால் உண்டாக்கிய சக்திகளை இன்றைக்கு யார் எதை வழிபடுகிறார்களோ அவர்களுக்கு அந்த தெய்வத்தினுடைய சாந்நித்யம் கிட்டுகிறது. மனிதமனம் எதில் ஊன்றுகிறதோ அதற்கேற்றவாறு பலன் ஏற்படுகிறது. மனிதனிடத்திலிருந்து எந்த வழிபாடும் அறவேயில்லை என்றால் மரம் வெறும் மரம்தான். கல் வெறும் கல்தான். அட்டை, காகிதம், கண்ணாடி ஆகியவை எல்லாம் சக்தியில்லாத அஃறிணை பொருளாகிவிடும். அந்த பிம்பத்தில் எந்த சக்தியும் உருவாகாது.

கடவுளை வழிபட வழிபட மனம் சச்சிதானந்த நிலையை அடைகிறது. இத்தகைய சக்தி பெற்ற மகான்கள் மனிதமனதிற்குள் தங்களது தவவலிமையால் சக்தியை புகுத்துகிறார்கள். அப்போது அவன் சச்சிதானந்த சொரூபியாகிறான். எனவே சக்தியை ஊட்டுவதற்கான செயலில் ஈடுபட வேண்டும். அந்தப் பெரும் செயல் நம்மிடத்தில் எப்போதும் வேலை செய்யும்.

சிறு சிறு அற்பப்பிரச்சினைகள் எல்லாம் எப்போது மனதைவிட்டு நீங்குகிறதோ அப்போது மனம் பிரகாசிக்கும். புளி மண் கொண்டு தேய்த்தால் பாத்திரத்திலுள்ள களிம்பு நீங்கும். பளிச்சிடும். ஒரு இரும்பினுடைய களிம்பை அதாவது துருவை உப்புக் காகிதம் கொண்டு நன்கு தேய்த்துவிட்டால் காந்தம் அதை இழுத்துக்கொள்ளும். அது போல யாருடைய மனம் துருப்பிடிக்காமல் இருக்கிறதோ அதாவது உலக கல்மிஷங்கள் அம்மனதை பற்றாமலிருந்தால்

ஆண்டவன் அந்த ஆத்மாவை தன்னிடம் இழுத்துக்கொள்வான்.

இத்தகைய விழா நாட்களிலே தியானிப்பதன் மூலம் நம்மை கல்மிஷமில்லா மனிதனாக மாற்றிக்கொண்டால் ஆண்டவன் நம்மை தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வான்.

இத்தகைய விழா நாளிலே அதிகமான ஒரு ஆகர்ஷண சக்தியை மனதிலே வரவழைத்துக்கொண்டு நம்மை முன்னேறச் செய்வதற்கு முயல வேண்டும். முடிந்தவரை முயற்சிப்பீர்களாக. இத்துடன் விழாவை முடிப்போம்.

குருமகராஜ் பேரருளினால் உங்களுக்கு எல்லாம் கிட்டும். பிரார்த்திப்போமாக!

5. சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி

20.01.1998 சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி அன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட சுவாமிஜி அவர்களின் உரை.

அன்பார்ந்த குழந்தைகளே!

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்திநாளான இன்று அவரது வாழ்நாளில் நடந்த ஒரு சம்பவத்தை உங்களுக்கு கூறி விழாவினை நிறைவு செய்வோம்.

அமெரிக்காவில் சுவாமிஜி இருக்கும் போது ஒரு மாணவன் வந்து அவரை வணங்கினான். அவரிடம் அவன், “ சுவாமிஜி அவர்களே உங்களைப் பின்பற்ற நினைக்கிறேன். உங்களிடம் அடைக்கலம் புகுகின்றேன்.” என்றான். அதைக்கேட்ட சுவாமிஜி அவர்கள் அந்த வாலிபனைப் பார்த்து, “ அப்படியா. . என்னைப் பின்பற்றுவதாக இருந்தால் சாகத்தயாராக வேண்டுமே.” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட அவ்வாலிபன் திடுக்கிட்டுவிட்டான்., “ சுவாமிஜி நான் தங்களைப் போல உலகில் பிரகாசமாக வாழ வேண்டும் என்பதற்காக அப்படிக் கேட்டேன். ஆனால் நீங்களோ என்னை சாவதற்கு தயாரா? என்று கூறுகிறீர்களே எனக் கூறிவிட்டு ஒரு நிமிடம் கூட தாமதியாமல் உடனே புறப்பட்டுவிட்டான்.

சில ஆண்டுகள் கழிந்தபின் சுவாமிஜி இரண்டாம் முறையாக அமெரிக்கா சென்றார். முன்பு சந்தித்த அந்த வாலிபன் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்திக் கொண்டிருந்தான். விவேகானந்தர் மீண்டும் அமெரிக்கா வந்திருப்பதை அறிந்த அவன் அவரை சந்திக்க வந்தான். சுவாமிஜியும் அந்த இளைஞனை அடையாளம் கண்டு கொண்டார். அன்போடு வரவேற்றார். அவன் அவரிடம் “ சுவாமிஜி அவர்களே சென்ற முறை தாங்கள் என்னிடம் கூறியதின் சரியான கருத்தை அப்போது நான் அறியவில்லை. நானும் கேட்டு தாங்களும் விளக்கியிருந்தால் என் வாழ்க்கை வேறாக சென்றிருக்கும். இப்போதுதான் தாங்கள் கூறிய தத்துவத்தின் கருத்து என்ன என்பதை தங்களை

சார்ந்தோரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன்" என்றான். அன்று சுவாமிஜி அந்த அமெரிக்க வாலிபனிடம் கூறிய கருத்தை சுருக்கமாக கூறி விழாவை முடிப்போம்.

" சாகத் தயாராக வேண்டும்"

மனிதர்கள் ஒவ்வொருவரும் எப்படி இந்த பிறப்பை எடுக்கின்றனர்? ஏன் எடுக்கின்றனர்? இதிலிருந்து விலகிக் கொள்ள மார்க்கம் உள்ளதா? என்பதற்கான உள்ளடக்கிய கருத்துக்களை வைத்துக் கொண்டுதான் சுவாமிஜி அந்த வாலிபனிடம் 'சாகத் தயாரா?' எனக் கேட்டிருக்கிறார். சுவாமிஜி கூறியது இந்த சரீரத்தை பற்றிய சாவு அல்ல. இந்த சரீரத்திற்கு எத்தனையோ பிறப்பு இறப்பு ஏற்கனவே எத்தனையோ முறை நடந்திருக்கிறது. இனியும் நடக்கப் போகிறது. ஏன் இப்படி நடக்கிறது? பிறப்பில்லாமல் இருப்பதற்கு இடையில் ஏற்படும் தடைகள் என்ன? மனிதனிடத்தில் உள்ள அறுவகை பகைகளை வென்றாகவேண்டும்.அறுவகை பகைவர்களையும் கொன்றாக வேண்டும். அதைத்தான் சாவு" என்கிறார்.

அந்த ஆறு பகைவர்கள் யார் யார்?

1.காமம் 2.குரோதம் 3.லோபம் 4.மோகம் 5.மதம் 6.மாச்சர்யம் ஆகியவைகளாகும். இந்த ஆறு பகைவர்கள்தான் மனிதனை விடுதலையாகாமல் என்றைக்கும் இந்த நிலையில் இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறார்கள். புரியாமல் இருக்கிறதா? விளங்கும்படியாக கூறுகிறேன்.

காமம்:

பொதுவாக காமம் என்று சொன்னாலே பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் தொடர்பு வைத்தே காமம் என்று சொல்லுகிறார்கள். அது மட்டும் காமம் அல்ல. பொதுவாக காமம் என்பது எதன் பேரில் ஆசை வைத்தாலும் அது காமமே. அதனால் தலையாய காமம் ஆண் பெண் உறவு பற்றியது. மற்ற எல்லாவகை ஆசைகளுக்கும் காமம் என்றே பெயர். இது மக்களை மிகவும் வாட்டுகிறது.

குரோதம்:

குரோதம் என்பது கோபத்தினுடைய சிறுசிறு அருவமாக அடங்கியுள்ளது. கோபமும் குரோதமும் ஆகிய இரண்டும் ஒன்றே. இரண்டும் மனிதனின் வெறியுணர்வை தூண்டும். மனிதன் செய்யும் பலவகை குற்றங்களுக்கு காரணம் குரோதம் தான். அவனை மீளா சங்கடத்தில் ஆழ்த்தி மீள முடியாமல் வாட்டுகிறது.

லோபம் :

கருமித்தனத்திற்கு பெயர் லோபம். இத்தன்மை உடையவனை லோபி என்கிறோம். தானே அனுபவிக்க வேண்டும். தன்னைச் சார்ந்தவர்களே அனுபவிக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி எந்த சிந்தனையும் இல்லாமலிருப்பது ஏழைகளுக்கு உதவுவது, தானதர்மங்கள் செய்வது என்ற உணர்வே இல்லாமலிருத்தல். இப்பிறப்பை ஒழிக்கவிடாமல் கஞ்சத்தனமும் ஒரு

தடையாக உள்ளது.

மோகம் :

தனக்கு எதுவெல்லாம் பிடித்தமானதாக இருக்கிறதோ அவைகளை அனுபவித்து விட வேண்டும் என்ற எண்ணம்; எப்பாடுபட்டாவது எவ்வளவு அவமானம் ஏற்பட்டாலும் தான் விரும்பியதை அடைந்தே தீருவது. அது தர்மமா? அதர்மமா? சாதகமா? பாதகமா? என்பதைப் பற்றியெல்லாம் யோசிப்பது இல்லை. இதுவும் பிறப்பை ஒழிக்க ஒரு தடையாக உள்ளது.

மதம், மாச்சர்யம் :

இரண்டும் கிட்டத்தட்ட ஒரே குணங்களைக் கொண்டது. பொறாமை, அழுக்காறு பெரியவர்கள் ஆலோசனைகளை அலட்சியப்படுத்துவது, மதம் பிடித்த யானை போல் எதற்கும் அடங்காமல் திரிவது. பாப காரியங்களில் ஈடுபடுவது. தன் போக்கிற்கே மற்றவர்களை இழுப்பது. பிறரின் உயர்வைக்கண்டு அழுக்காறு கொண்டு அதை அழிக்க முயலுதல். இவைகளும் பிறப்பை ஒழிக்க தடையாக உள்ள குணங்களாகும்.

ஆகவே நம்மிடையே உள்ள இந்த அறுவகை பகைவர்களையும் கொன்று விட்டால் மனிதன் இவ்வுலகிலே தேவனாக வாழலாம். மறுபிறப்பு இல்லாமல் வாழலாம். இன்றைய நாளில் விவேகானந்த சுவாமிகளின் ஜெயந்தி விழாவன்று நமது எண்ணங்களையும் சிந்தனைகளையும் புனிதப்படுத்துவோம். நல்வாழ்வு வாழ பிரார்த்திப்போம்.

4. சுதந்திர தினம்

15.08.1998 ஆம் நாள் சுதந்திர தின விழாவன்று சுவாமிஜி அவர்கள் மாணவர் கூட்டத்தில் பேசிய பேச்சு:

அன்பார்ந்த குழந்தைகளே! வருடாவருடம் சுதந்திர தினம் கொண்டாடுகிறோம். இவ்வருடம் 50 ஆண்டு முடிந்து பொன்விழா. அதற்கு மேல் வேறொன்றும் விசேஷமில்லை. இதை பல இடங்களில் பலவிதமாக கொண்டாடுகிறார்கள். நாம் இப்போது குடிலில் அந்த விழாவை எப்படி கொண்டாடலாம்? எந்த நிகழ்ச்சியை கூறினால் மற்றவர்களுக்கும் பயன் என சீர்தூக்கிப் பார்த்து இன்றைய சுதந்திர தினவிழாவில் பேசி முடிப்போம்.சுதந்திரம் கிடைப்பதற்கே ஆதாரபுருஷராக விளங்கிய மகாத்மா காந்தியின் வாழ்க்கையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் தனித்தன்மை பெற்றவை.

அதில் இப்போது, “ காந்தி ஒரு தொழிலாளி” என்பது பற்றி உங்களுக்குஒரு 20 நிமிடத்திலே விளக்கப்பட இருக்கிறது. தென்னாப்பிரிக்காவுக்கு காந்திஜி வக்கீல் தொழில் நிமித்தம் சென்றார்.

சென்றபின் அங்குள்ள இந்திய மக்களுடைய நிலைமையெல்லாம் பார்த்தபின் தன்னுடைய வாழ்க்கையை பலவிதமாக அமைத்துக்கொண்டார். சுமார் 20 ஆண்டு காலம் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தார். அங்கு அவருடைய வக்கீல் தொழில் எப்படியிருந்தது? நேர் மாறாக இருந்தது. இப்போது நடைமுறையில் உள்ள வக்கீல் தொழிலுக்கும், அங்கு அவர் நடத்திக் காட்டிய வக்கீல் தொழிலுக்கும் ஏகப்பட்ட வேற்றுமைகள். எப்படி?

தன்னை நாடி வருகின்ற கட்சிக்காரர்களுக்கெல்லாம் அறிவுரை கூறினார். வீணாக கோர்ட்டுக்கு வந்து செலவு செய்யாதீர்கள். காலத்தைப் போக்காதீர்கள். நீங்களே அப்பகுதியிலுள்ள பெரிய மனிதர்கள் சிலரை வைத்து, அவர்கள் மூலமாக சமரசம் செய்துகொள்ளுங்கள். அப்போது உங்களுக்கு வக்கீலுக்கு தரவேண்டிய கட்டணம், கோர்ட் கட்டணம், போகவர ஆகும் செலவுகூட வரும் மற்றவர்களுக்கு செய்யப்படும் ஊதாரித்தனமான செலவுகள் எல்லாம் குறையும். இதுதான் அவருடைய அறிவுரை.

அத்தோடு அவர் என்ன லட்சியத்தை கைக்கொண்டார்? எக்காரணத்தை முன்னிட்டும் பயிற்சியறை ஏற்படுத்துவது இல்லை என்ற முடிவிற்கு வந்தார். பயிற்சியறை என்றால் என்ன? ஒவ்வொரு வக்கீலுக்கும் ஒவ்வொரு அறை ஒதுக்கி இருப்பார்கள். அதில் தன் கட்சிக்காரர்களை வரவழைத்து,அவசியமாக சொல்லக்கூடிய உண்மைகளுக்கு புறம்பான கருத்துக்களை எல்லாம் அந்த வக்கீல் தனது கட்சிக்காரர்களுக்கு பலமுறை சொல்லிக் கொடுப்பார். பலமுறைகள் பயிற்சியளிப்பார். அதாவது கோர்ட்டில் பொய் பேசுவதற்கு பயிற்சி . எதிர்கட்சி வக்கீல் உன்னை விசாரிக்கும் போது நீ எப்படி பேச வேண்டும். எப்படி உண்மையை மறைத்து பொய் பேச வேண்டும் என்ற பயிற்சியெல்லாம் அந்த அறையில் நடக்கும். எப்படி கல்விக்கும், தொழிலுக்கும், வித்தைக்கும், விளையாட்டிற்கும் பயிற்சி உள்ளனவோ அதைப்போல பொய் பேசுவதற்கு ஒரு பயிற்சி.

தர்மத்திற்கும், நேர்மைக்கும் மாறான இம்முறையை காந்தி அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே அறவே நீக்கிவிட்டார். அவருக்காக ஒதுக்கப்பட்ட அறை அவர் உணவு உண்பதற்காகவும், சற்று ஒய்வெடுப்பதற்காகவும் பயன்பட்டு வந்தது. எந்தக் கட்சிக்காரனையும் தனியாக அழைத்து, ரகசியமாக பேசுவதும் கிடையாது. வந்த உடனே சொல்லிவிடுவார். “ என்னிடத்தில் வந்திருக்கிறீர்கள். நான் என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்? உங்களின் நியாயம் என்னவென்று சொல்லுங்கள். நியாயமன்றத்தில் அதை நான் எடுத்துச் சொல்லுகிறேன். வேறுவிதமாக நீங்கள் என்னை பயன்படுத்த நான் இடம் தரமாட்டேன்.” என்று தயைதாட்சண்யமின்றி சொல்லிவிடுவார். அதனால் தனக்கு ஏதாவது ஏற்பட்டாலும் சகித்துக் கொள்ளுவார்.

ஏழை மக்களுக்கு அநீதி ஏற்பட்டால் அதை சகித்துக் கொள்ளமாட்டார் .

ஒரு நாள் அவர் வீட்டில் இருக்கும் போது ஒருவர் வந்தார். கிழிந்த ஆடை. அதில் ரத்தம் தோய்ந்திருந்தது. இரண்டு பற்கள் தொங்கிக் கொண்டிருந்தது. வாயிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. வந்தவர் காந்தியிடம், " நான் ஒரு ஆங்கிலேயரிடத்தில் வேலை செய்து வருகிறேன். கோபத்தில் அவர் என்னை இப்படிச் செய்துவிட்டார்." என்று கூறி முடித்தார்.

காந்திஜிக்கு மனம் பொறுக்கவில்லை. அவரை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள ஒரு வைத்தியரிடம் சென்று சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். அத்துடன் டாக்டரிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்கிக் கொண்டார். உடனே அன்றே கோர்ட்டில் 'கேஸ்' தாக்கல் செய்தார். பாதிக்கப்பட்ட அம்மனிதனுக்கு மாற்றுத்துணி தந்து ஆகாரம் அளித்தார்.

என்ன ஆயிற்று? எவ்வளவு முடியுமோ அவ்வளவும் பார்த்தார். மற்ற தனது காரியத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்த அக்ரமத்திற்கு நீதிகிடைக்க வேண்டும் என்று வாதாடினார். கோர்ட்டில் அந்த ஆங்கிலேயனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இதற்காக சில வெள்ளையர்கள் காந்தியை தாக்கினர். ஆனால் அவர் கோர்ட்டுக்கு செல்லவில்லை. அவரது நண்பர்கள் இதை விட்டுவிடக் கூடாது. கோர்ட்டுக்கு செல்ல வேண்டும் என்றார்கள். அதற்கு காந்திஜி கூறியதாவது, " எனக்காக நான் கோர்ட்டுக்குப் போய் நேரத்தை போக்க விரும்பவில்லை. அந்த நேரத்தை மற்ற ஏழை மக்களுடைய சேவையில் பயன்படுத்தலாம்." என்று சொல்லிவிட்டார். காந்தி சாதாரண வக்கீல் அல்ல. மேல்நாடு சென்று பட்டம் பெற்ற பாரிஸ்டர். அந்நாளில் மேல்நாடு செல்லாதவர்களுக்கெல்லாம் 'கேஸ்கள்' குறைவாக இருக்கும். மேல்நாடு சென்று பட்டம் பெற்று வந்த பாரிஸ்டர்களுக்க கேசும் அதிகம். வருமானமும் அதிகம். ஆனால் தன்னுடைய பீஸ்(Fees) ஐ பற்றி காந்தி பேசவே மாட்டார். கட்சிக்காரர் கொடுப்பதை வாங்கிக் கொள்வார். " இப்போதைக்கு இதை வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த முறைவரும் போது கொடுக்கிறேன்" என்பார்கள். மறுபடியும் அவர்களிடம் பணத்தைப்பற்றி ஞாபகப்படுத்தமாட்டார்.

இப்படி தென்னாப்பிரிக்காவில் காந்தி இருந்த போது உலக சமாச்சாரங்களில் தன்னை எப்படி உயர்த்திக் கொள்ளுவது என சிந்தித்தார். ஆனால் அங்குள்ள இந்திய மக்களின் இழிவான நிலை, வறுமை நிலையைக் கண்ட போது, அவர்களின் உயர்விற்காக பாடுபட தீர்மானித்தார். மகாத்மாக்களின் பல நூல்களை படித்த காந்தி உடலுழைப்பின் உயர்வை அறிந்து கொண்டார். எந்த மனிதனாக இருந்தாலும் உழைக்காமல் சாப்பிடக்கூடாது. அவரவர்களின் வாழ்க்கைக்கு தகுந்தவாறு சிறிதளவாவது உடலுழைப்பில் ஈடுபடவேண்டும்.

ஆனால் மேல்த்தட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான காரியங்களை செய்து தருபவர்கள் மதிக்கப்படுவதில்லை. இவர்கள் கீழ்த்தரமானவர்கள் என நினைக்கும் மனோபாவம் மாறவேண்டும் என்கிறார் காந்தி. செருப்பு தைப்பவன்,

விவசாயக் கருவி செய்பவன், கட்டடம் கட்டுபவன், ஆசாரிகள் ஆகியோர்களுக்கு கூலி குறைவு. பேனாப் பிடிப்பவர்களுக்கு சம்பளம் அதிகம். இந்நிலை மாற வேண்டும். அவர்களும் சமூகத்தில் நன்கு வாழத்தக்கவாறு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்று காந்தி கூறுகிறார். இவ்விதமான சிந்தனைகள் பெருகப்பெருக தென்னாப்பிரிக்காவில் ஒரு ஆஸ்ரமம் அமைக்க திட்டமிட்டார் காந்தி. ஆஸ்ரமத்தின் பொது விதி உழைத்து சாப்பிடல் என்பதாகும்.

தனது கொள்கைகளுக்கேற்ப யாரெல்லாம் வருகிறார்களோ அவர்களை மட்டும் ஏற்றுக் கொண்டு ஆஸ்ரமம் நிர்வகிப்பது என்ற முடிவிற்கு வந்தார் காந்தி. மேல்நாட்டு ஆங்கிலேயர், ஆசியாவை சேர்ந்தவர்கள், பஞ்சாபிகள், இப்படி பல அறிஞர்கள் சேர்ந்தனர். ஜாதி, மத, இன வித்யாசமின்றி ஆண் பெண் அத்தனை பேருக்கும், ஒரே மாதிரி உணவு, ஒரே இடத்தில் தங்கல், இவர்களுக்கு சொந்தமாக ஒரு கட்டடம் தேவை என உணர்ந்தார். ஆஸ்ரமவாசிகளேகட்டுவது என தீர்மானித்தார். அவர்களுக்கு தெரிந்த வேலைகளை செய்ய ஆரம்பித்தனர். கட்டட வேலை நடக்கும் நேரத்தில், வேலை செய்பவர்களுக்கு நீலநிற உடை தரப்பட்டது. பல பைகள் வைத்து தைத்த நீல நிற கோட் ஒன்றை காந்தியும் அணிந்து கொண்டார்.

கோட்டின் பைகளில் ஒன்றில் கொறடு இருக்கும். ஒன்றில் சுத்தியல் இருக்கும். ஒன்றில் உளி இருக்கும். ஒன்றில் ஆணி இருக்கும். இது மாதிரி எடுத்துக் கொண்டு கட்டடத்தின் மேலே ஏறிவிடுவார் காந்தி. பல வேலைகளை செய்து முடிப்பார். ஒரு சமயம் காந்தி தென்னாப்பிரிக்காவில் சிலகாலம் சிறையில் இருக்க நேரிட்டது. சிறையிலுள்ள சிமெண்ட்தளம் பாளம்பாளமாய் சிதிலமாகிவிட்டது. மீண்டும் இதை பழையபடி அமைப்பது சிறை வார்டனுக்கு பெரும் வேலையாகிவிட்டது. பிகாஸ் கருவியை வைத்துக் கொண்டு கான்கிரீட்டை முழுவதுமாக உடைத்து, புதிதாக போடவேண்டும் என்பதை வார்டன் கைதிகளை கூட்டி வைத்து பேசிக் கொண்டிருந்தார். உடனே காந்தி பிக்காசை எடுத்துக்கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தார். அனைவரின் ஒத்துழைப்பும் கிட்டவே வேலை வெகுசுலபத்தில் முடிந்தது.

நூற்றுக்கணக்கான கைதிகளின் போர்வை படுக்கை கிழிசல் கிழிசலாக இருந்தது. தினமும் 9 மணி நேரம் வேலை பார்த்து யாவற்றையும் சரி செய்ய தீர்மானித்தார் காந்தி. தைப்பதற்கு தேவையான நூல், ஊசி, கத்தரிக்கோல் யாவற்றையும் வார்டன் காந்தியிடம் கொடுத்தார். கடுமையாக உழைத்து கிழிசல்கல் போர்வைகளை நல்ல போர்வைகளாக மாற்றினார். காந்திஜியின் இந்த உழைப்பு திட்டத்தைத் தான் குடில் ஏற்றுக் கொண்டுள்ளது. இங்குள்ள சிறுவர்களை வைத்துக்கொண்டு காரியங்கள் செய்யப்படுகின்றன.

சிறுபொருளைக்கூட வீணாக்க மாட்டார் காந்திஜி. சட்டையின் கை கிழிந்தால் அதை பனியனாக மாற்றி அணிவார். முதுகுப்பகுதி கிழிந்தால்

ஒட்டுப்போடுவார். போர்வை மிகவும் கிழிந்து விட்டால் அதை சிறிய சிறிய கைக்குட்டையளவாக கிழித்து தைத்து கால்களை துடைப்பதற்கு வைத்தும் கொள்ளுவார். ரொம்ப கிழிந்த துண்டுகளை ஒரு உறையில் போட்டு தலையணையாக்கிவிடுவார். ராட்டை நூற்கும் போது கிடைக்கும் பிஞ்சு கழிவுகளை தலையணைகளுக்கு பயன்படுத்துவார்.

இந்தவிதமாக உழைப்புத்தான் காந்திஜியின் மிகப்பெரிய வெற்றிக்கு வழிகோலாக அமைந்தது. வெறும் ஏட்டுப்படிப்பை மட்டும் படித்துவிட்டு, நேரிடையாக உழைப்பில் ஈடுபடுபவர்களை மேற்பார்வையிட்டு வேலை வாங்கும் இத்தகையோர்களுக்கு சம்பளம் அதிகம். நேரிடையாக உழைத்து உற்பத்தி செய்பவர்களுக்கு சம்பளம் குறைவு. நீதி என்று ஒன்றை சீர்தூக்கிப் பார்த்தால், மக்கள் வாழ்வதற்கு எவர்கள் நேரிடையாக உழைக்கிறார்களோ அவர்களுக்கு நிறைய சம்பளம் கொடுக்க வேண்டும். அதுவே நீதி. மற்றவர்கள் எல்லாம் அவர்களை அனுசரித்து வாழ்பவர்கள். அவர்களுக்கு அடுத்தபடிதான் ஊதியம் வழங்கப்பட வேண்டும். உழைப்பாளிகள் உழவர்கள், கைத்தொழில் புரிபவர்கள் இவர்களை அனுசரித்துத்தான் உலகம் இயங்குகிறது.

ஆஸ்ரமத்தில் பலவகையான விழாக்களை கொண்டாடுகிறோம். கிருஷ்ணரைப்பற்றி T.V.யில் இடைவிடாது காண்பிக்கிறார்கள். ஸ்ரீராமநவமி, விநாயகர் சதுர்த்தியும் கொண்டாடுகிறோம். இத்தெய்வங்களின் செயல்பாடுகள், அவர்கள் ஆற்றிய காரியங்கள் ஆகியவற்றை அறிந்து கொண்டு விழா கொண்டாடுகிறோம். முழுமனதோடு பக்திமார்க்கத்தில் ஈடுபட்டு செய்கிறோம். அன்றைய தினம் பூஜை, பஜனை செய்தல், பாகவதம் படித்தல், பகவானுக்கு நைவேத்யம் செய்து வணங்குகிறோம். ஆனால் இதையே செய்து கொண்டிருக்கக்கூடாது. அளவோடு செய்து நிறுத்திவிட வேண்டும்.

வாழ்க்கைக்கு உபயோகமான, வாழ்க்கையானது மேம்பட, அறிவு தூய்மை பெற, மனம் நெகிழ நம் கவனத்தை செலுத்துதல் வேண்டும். விழாக்களுக்கு தொடர்புடைய தெய்வங்களை பிரார்த்தித்துவிட்டு பின் செயலில் ஈடுபடவேண்டும். இதையே மகாத்மாஜியும் கூறுகிறார். ஐவகைச் செயல்களை கைக்கொள்ளுமாறு மகாத்மா அறிவுறுத்துகிறார். அவை (1) அஹிம்சா (2) சத்தியம் (3) ஆஸ்தேயா (4) அபரிக்கிரக (5) பிரம்மசர்யா இவைகள் தான் கைக்கொள்ளப்பட வேண்டும். இவைகளை எந்த ஆன்மீகவாதி கைக் கொள்ளுகிறானோ, அவன் அடைந்தது துறவு நிலையாகும். வெளிஉலகில் துறவுக்கு அடையாளமாக என்னென்ன உண்டோ அவைகள் இல்லாமலே, இருக்கும் நிலையிலேயே துறவை ஏற்பதாகும். மேலே கூறப்பட்ட இந்த ஐந்தும் முறையாக விளக்கப்படுகிறது. மாணவர்களுக்கு இவை விளங்காவிடினும், காது கொடுத்து கேட்டு வையுங்கள். கேட்கும் பெரியவர்கள் மனதிலே சுவீகரித்து நன்கு ஆராய்ந்து வைத்துக் கொள்ளுங்கள். முடிந்தவரை கடைப்பிடியுங்கள்.

5. விநாயக சதுர்த்தி

26.8.1998 அன்று விநாயக சதுர்த்திவிழா. விழாவின் போது சுவாமிஜி அவர்களின் பதிவு செய்யப்பட்ட பேச்சு.

அன்பார்ந்த குழந்தைகளே! இன்று விக்ன விநாயகனுடைய விழா. இவருக்கு விக்னேஸ்வரர் என்ற பெயரும் உண்டு. அதாவது விக்ன ஈஸ்வரன். ஈஸ்வரன் என்றால் தலைவன், மேலோன், சிறப்புடையோன், தனக்கு நிகரில்லாதவன் எனப் பொருள். விக்னம் என்றால் தடை, இடையூறு எனப்பொருள். இவைகளை அகற்றுபவர்தான் விநாயகர். அதனால்தான் இவரை விக்ன விநாயகர் என்றும் விக்னேஸ்வரன் என்றும் வணங்கி வழிபடுகின்றோம்.

உதாரணமாக குழந்தைகளுக்கு விக்னமாக இருப்பது எது? படிப்பு. படிப்பு வராத விக்னங்கள், தோஷங்கள் விநாயகரை வணங்கி வந்தால் விலகும். விக்னேஸ்வரன் என்பதற்கு கணக்கற்ற பொருள் உண்டு. அதே மாதிரி விநாயகர் உருவத்திலும் கணக்கற்ற வெவ்வேறான திருஉருவங்கள் உண்டு. உங்களுடைய அறிவுக்கு தகுந்த மாதிரி புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை சொல்லி இவ்விழாவை முடிப்போம்.

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாய பாத நமஸ்தே

மூஷிக வாகன : விநாயகருடைய வாகனம் மூஷிகம். அதாவது பெருச்சாளி. விநாயகர் பெருச்சாளியின் மீது அமர்ந்திருக்கிறார்.

மோதகஹஸ்தம் : மோதகம் என்றால் கொழுக்கட்டை. ஹஸ்தம் என்றால் கை. கொழுக்கட்டையை கையிலே வைத்திருக்கிறார். தத்துவ நோக்கில் கொழுக்கட்டை உருண்டை. உலகத்திற்கு உதாரணம். அதாவது விநாயகப்பெருமான் உலகை தமது கையில் தாங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு நான்கு மனிதக்கைகளும் ஒன்று விலங்கின் கை. அதாவது துதிக்கை. எனவே விநாயகனை ஐங்கரன் என்கிறோம். இதன் கருத்து மனிதனும் மிருகமும் சேர்ந்த அனைத்து உலகத்திற்கும் நாயகனாக இருக்கிறான்.

சாமர கர்ண: இன்னும் எவ்வாறு காட்சி தருகிறார் விநாயகர்?. சாமர கர்ணனாக இருக்கிறார். சாமரம் என்றால் முறம் என்று பொருள். கர்ணம் என்றால் காது. முறம் போன்ற காதுகளை உடையவர் என்பது பொருள். முறம் போன்ற பெரிய, காதுகளை உடையவராக விநாயகர் விளங்குவதால், உலகிலுள்ள அத்தனை ஒலிகளையும் தடங்கலில்லாது கேட்பவர் ஆகிறார்.

இவர் அறியாத விஷயம் எதுவுமில்லை. இன்னும் என்னவாக இருக்கிறார் விநாயகப் பெருமான்?

விளம்பித சூத்ர: சூத்ரம் என்பது பூணூல். விளம்பித என்றால் அசைந்து கொண்டே இருப்பதாகும். இதனுடைய அர்த்தம் என்ன? உலகம் எப்போதும் சஞ்சலத்திற்கு உள்ளானது. நிலையானது அல்ல. அசைந்து கொண்டே இருப்பது.

வாமன ரூப : இன்னும் என்னவாக இருக்கிறார் விக்னேஸ்வரர்? வாமன ரூப. அதாவது உருவத்தில் குள்ளமாக இருக்கிறார்.

மஹேஸ்வர புத்ர : அவர் குள்ளமாக இருந்தாலும் மஹேஸ்வரனின் புத்திரன் ஆவார். அகண்டாகாரத்தை அடக்கிய சக்தியினுடைய சொரூபமாக விநாயகர் தோற்றமளிக்கிறார். யாருக்கு விநாயகரின் அருள்கிட்டும்? யாரெல்லாம் அகங்காரம் உடையவர்களாகவும், ஆணவத்தைக் கொண்டவர்களாகவும் இருந்து வருபவர்களுக்கு விநாயகரின் அருள் கிட்டாது. தீய குணங்களை எல்லாம் நம்மிடமிருந்து அகற்றி அவனை வணங்கினால் அவனது அருள்கிட்டும்.

விநாயகர் பெருச்சாளியை வாகனமாக்கிக் கொண்டது ஏன்? பெருச்சாளி எப்போதும் இருட்டை விரும்பும் இயல்பு கொண்டது. மேலும் கடினமாக காணப்படும் பூமியையும் தனது விரல் நகங்களால் தோண்டி துளைக்கும் வல்லமை கொண்டது பெருச்சாளி. தத்துவார்த்தமான நோக்கில் இதை இனிக் காண்போம். " இருட்டு" என்பது மாயை. பெருச்சாளியின் துளைக்கும் சக்தி என்பது " ஆணவத்தை" குறிப்பதாகும். விநாயகப் பெருமான் மாயையையும், ஆணவத்தையும் அடக்கி வைத்திருக்கிறார் என உருவகப்படுத்துவதுதான் பெருச்சாளி வாகனம். எனவே விநாயகரை பக்தியோடு வணங்கினால் அவர் அருளால் மாயையும் ஆணவமும் நம்மிடமிருந்து விலகும்.

விநாயகருடைய வயிறு மிகப்பெரியது. மத்தள வயிறன் என்கிறோம். இவரது வயிற்றினுள் அகண்டாகாரம் முழுதும் அடங்கும். இத்தகைய மகத்தான இயல்புகளைக் கொண்ட விநாயகரை இந்த விநாயக சதுர்த்தி நாளன்று மனதார வேண்டிக் கொள்ள வேண்டும். நம் மனதிலுள்ள, மாசுகளை எல்லாம் அகற்றி இனிமேல் அத்தகைய மாசுகளுக்கு இடம்தரமாட்டோம் என்று தீர்மானித்து ஒரு பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும். சபதத்தை காக்கும் மனிதன் மேலோன் எனப்படுவான். எனவே சபதத்திலிருந்து நாம் தவறக்கூடாது.

இனி இப்படித்தான் வாழ்வேன் என்று மனதாற இறைவனுடைய சரணங்களை பற்றிக் கொண்டால் நம்மைக் காப்பாற்ற அவன் உதவி புரிவான். தன்னைப் புனிதப்படுத்திக் கொள்ளத்தான் இத்தகைய விழாக்களை மனிதன் கொண்டாடி வருகின்றான்.

அன்புக் குழந்தைகளே! நீங்கள் எல்லோரும் ஆண்டவன் அருளுக்கு

பாத்திரமாக வேண்டும். குருமகராஜை மனதிலே இருத்தி பிரார்த்தனை செய்யுங்கள்.

6. அன்னை சாரதாதேவி ஜெயந்தி

21.12.1997 ஸ்ரீ அன்னை சாரதாதேவி ஜெயந்தி விழாவன்று சுவாமிஜியின் பதிவு செய்யப்பட்ட சொற்பொழிவு

அன்பார்ந்த குழந்தைகளே!

இன்று அன்னையார் ஜெயந்தி. வருடா வருடம் அந்தந்த தேதி, திதி ஆகிய நாளில் அன்னையார் ஜெயந்தியை கொண்டாடி வருகிறோம். இதையடுத்து சுவாமி ஜெயந்தியும் பின் குருமகராஜ் ஜெயந்தியும் வரும். இவைகளை கொண்டாடும் நாட்களிலே ஏராளமான கருத்துக்களும், அறிவுரைகளும் கூறப்படுகின்றன. ஒவ்வொரு முறையும், ஏராளமான கருத்துக்களை கேட்டாய் விட்டது. மறுபடியும் மறுபடியும் அதே கருத்துக்களை கேட்பது எதற்காக? இத்தகைய விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் நடந்தாலும், நடத்தாமல் இருக்கக் கூடாது. பல ஆண்டுகள்தான் நடத்தியிருக்கிறோமே என்று விடவும் கூடாது.

ஒரு ஸ்தாபனம் ஒரு கல்விக்கூடம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. அவைகள் வரையறுக்கப்பட்ட விழாக்களை நடத்தியே ஆக வேண்டும். மாணவர்களுக்கு பத்தாண்டோ அல்லது பன்னிரெண்டு ஆண்டோ என்ற காலவரை வரையில் படித்தேயாக வேண்டும். அதே பாடங்கள், பள்ளிவிழாக்கள் மற்றும் பல பயிற்சிகள் பங்கு கொண்டே ஆகவேண்டும். ஆசிரியர்களும் அரசாங்கம் விதிக்கப்பட்ட 58 வயது வரையில் பணியாற்ற வேண்டும். இதையெல்லாம் உலகின் நடைமுறை. காலம் காலமாக நடந்து வருகிறது. எதையும் வேண்டாம் என ஒதுக்கித்தள்ள முடியாது. இரவுபகல் மாறி மாறி வருவது போல் இத்தகைய நிகழ்ச்சிகள் மனித வாழ்வின் முடிவுவரைக்கும் இப்படியேதான் நடந்து கொண்டிருக்கும்.

இதிலிருந்து யார்யாரெல்லாம் சிந்தித்து சிந்தித்து அதிலுள்ள நுண்ணிய கருத்துக்களை தன்வயம் ஆக்கிக்கொள்ளுகிறார்களோ அவர்களே பாக்யவான்கள். அன்னையார் அடிக்கடி கூறுவார். “ இந்த மனித சரீரம் எடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மனதில் தீயநினைவுகள் அடிக்கடி வந்து கொண்டிருக்கும். யாரெல்லாம் இத்தீய நினைவுகளுக்கு எருவிட்டு நீர்வார்த்து வளர்க்கின்றார்களோ அவர்கள் அபாக்யவான்கள். ஆனால் தீயநினைவுகளை தோன்றியகணமே தீயிட்டு பொசுக்கிறார்களோ அவர்கள் ஈஸ்வரானுக்கிரகம் பெற்றவர்கள். இத்தகையவர்கள் எதை அடைவதற்காக இப்பிறவியை எடுத்தார்களோ அத்தகைய பெரும்நிலையை

அடைகின்றார்கள்.

நீங்கள் சிறு குழந்தைகள். சாமி ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று மட்டும் புரியும் பருவம் உங்களுடையது. அதிகமான தத்துவ சாராம்சங்களை உங்களால் புரிந்து கொண்டு ஜீரணிக்க முடியாது. அதனால்தான் உங்களுக்கேற்ற முறையில் தினசரி இரண்டு வேளை பூஜை, சிறிது நேரம் கண்மூடி குருமகராஜை மனதில் நினைத்தல், நாமாவளிப் பாடல்களை பாடுதல். சிறிய சிறிய அறிவுரைகள் போன்ற நடைமுறை திட்டங்களிலிருந்து போகப்போக வயதாக வயதாக ஓரளவு புரிந்து கொள்வீர்கள். நீங்கள் தினமும் கூறும் உறுதிமொழிகள் ஆகியவைகள் எதிர்காலத்தில் நீங்கள் அறிந்து கொள்ளும் தத்துவ சாராம்சங்களுக்கு போடப்படும் பாதைகள் இவைகள். இவைகளெல்லாம் ஸ்தாபனத்தில் எதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது? உங்கள் வாழ்க்கையில் ஒரு சிறியதாவது ஒளியை ஏற்ற முடியுமா? என்று எவ்வளவோ சிரமப்பட்டு இந்த உறுதிமொழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மானிட வாழ்விலேதான் எத்தனை கலாச்சாரங்கள், எத்தனை மதங்கள், இருக்கின்றன. இவைகள் அனைத்தின் சாரங்களையும் பிழிந்து எடுத்து ஆஸ்ரம உறுதிமொழி எழுதப்பட்டுள்ளது. இதை நாம் மட்டும் சொல்லவில்லை. ஒரு மதத்தாருடைய குருமாரும் அவரது குழுவினரும் ஒரு சமயம் ஆஸ்ரமத்தை சுற்றிப் பார்க்க வந்திருந்தனர். அந்த பாதிரியார் உறுதிமொழி போர்டின் முன் அமர்ந்தார். பேனாவை எடுத்தார். காகிதத்தை எடுத்தார். வரிவரியாக மேலிருந்து கீழ்வரை ஒன்றுவிடாமல் எழுதிக் கொண்டார். இப்படியும் நடந்திருக்க முடியும் என லேசில் நம்பிவிட முடியாது. ஆஸ்ரம வாசிகளும் மாணவர்களும் யாரும் இதைப்பற்றி பெரிதாக நினைத்துக் கொள்ளவில்லை.

அப்போதெல்லாம் தினசரி அலுவலகம் சென்று வேலைகள் பார்த்து வரப்பட்டது. வேலை முடிந்து ஆஸ்ரமம் திரும்பும் போது தபாலில் ஒரு பார்சல் வந்தது. பிரிக்கப்பட்டது. குடிலின் உறுதிமொழிகள் அச்சிடப்பட்ட 2000 நோட்டீஸ்கள் அதில் இருந்தது. அன்று எழுதிச்சென்ற பாதிரியார் அச்சிட்டு நமக்கு அனுப்பியிருக்கிறார். பொதுவாக குடில் ஸ்தாபனம் ஒரு இந்து ஆஸ்ரமம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் குடில் இந்து ஆஸ்ரமம் அல்ல. மனித தர்மத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஆஸ்ரமம். இங்கு மதமோ, ஜாதியோ,இனமோ எதற்கும் சம்மந்தமில்லை. இதை தனிப்பட்ட மதத்தாரின் ஸ்தாபனம் என எண்ணாமல் அந்த பாதிரியார் உறுதிமொழியில் கண்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் மனித இனத்திற்கு உரியவை என உணர்ந்து ஜாதி, மத, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் அந்த நல்லவர் உணர்ந்து, இது அனைவருக்கும் போய்ச்சேரும் பொருட்டு நோட்டீசும் அடித்து வெளியிட்டுள்ளார்.

ஒரு சமயம் ஒரு தொண்டர் சுவாமி விவேகானந்தரிடம் , “ முஸ்லீம் அனாதை சிறுவர்களை நமது அனாதை இல்லத்தில் சேர்க்கலாமா?” என கேள்வி எழுப்பினார். அதற்கு விவேகானந்தர் பதில் அனுப்பினார். “ நமது குருதேவர் ஏதோ ஒரு சமூகத்தினருக்காகத்தான் அவதராம் எடுத்தார் என்பது மட்டுமல்ல உலகிலுள்ள மக்கள் சமுதாயம் முழுமைக்குமாக அவதாரம் எடுத்துள்ளார். ஆகையால் நீ எழுதியிருக்கும் அந்த இரண்டு முஸ்லீம்சிறுவர்களையும் ஆஸ்ரம அனாதை விடுதியில் சேர்த்துக் கொள்” என அத்தொண்டருக்கு கடிதம் எழுதினார்.

இதே மாதிரி ஒரு நிகழ்ச்சி அன்னையின் வாழ்விலும் நடந்துள்ளது. அன்னையைப் பார்க்க வேண்டும் என பேராவல் கொண்டு ஒரு முஸ்லீம் வாலிபன் அன்னையைக் காண பலமைல்கள் நடந்தே வந்தான். அவன் அன்னையை நமஸ்கரித்து பேச ஆரம்பித்தான். அவனுக்கு அப்போது தேவை உணவும் ஒய்வும் என்பதை அறிந்த அன்னை ஒரு பெண்ணிடம் அவனுக்கு உணவு படைக்குமாறு உத்தரவிட்டார். அந்தப் பெண் வந்திருக்கும் அவன் முஸ்லீம் என்பதால் சற்று தூரத்தில் இருந்து கொண்டே உணவுப் பதார்த்தங்களை அவனது இலையில் வீசிப்படைக்கின்றாள். இதைக் கண்ட அன்னை கோபம் கொண்டு அப்பெண்ணிடம் கடிந்து பேசி, தாமே அந்த முஸ்லீம் வாலிபன் அருகிலமர்ந்து அன்போடு பேசிய வண்ணம் உணவு படைக்கின்றார்.

இதைப் பற்றி குறிப்பிடும் போது அன்னை அவர்கள், “ மலர்கள் உருவத்திலும், வண்ணத்திலும், வாசனையிலும் வெவ்வேறாக இருந்தாலும், அனைத்தும் செடியில் பூத்தவைகள்,” எனக் கூறியுள்ளார். பூமியில் பிறந்தவர்கள் மொழி, மதம், இனத்தால் வேறுபட்டிருக்கலாம். ஆனால் எல்லோரும் ஆண்டவனின் குழந்தைகள் என்பதை எவ்வளவு அழகாக அன்னை அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் அன்னையார் கூறுகின்றார்., “ குழந்தைகள் எப்படி தாயாரை நாடி சுகம் பெறுகின்றதோ அதே போல மனிதன் ஆண்டவனை நாட முயற்சிக்க வேண்டும். பிறருடைய நலனிற்கு கேடு நேராமல் எக்காரியத்தையும் செய்து முடிக்க வேண்டும். பக்தி, தியானம், ஜபதபங்கள் செய்ய கானகம் போக வேண்டியதில்லை. மாதக் கணக்கில் கண்மூடி மெய்யடக்கி தவம் செய்யும் அவசியம் இல்லை. இரவு உறங்கப்போகும் போது கைகால் சுத்தி செய்து வேறு நினைவுகள் எதுவுமின்றி ஆண்டவனை நினையுங்கள். அதே போல் காலை எழுந்ததும் அவனை நினைத்து எழுங்கள். அதுவே போதும். உள்ளன்போடு அவனை நினைத்தால் அவனும் உள்ளன்போடு உன்னை நோக்கி வருவான்.” மேலும் அவர் கூறுகிறார்.

" பிறரிடம் உள்ள குற்றங்களை துருவித்துருவி பாராதே. அது உன் வேலையல்ல. முதலில் உன்னிடம் உள்ள குறைகளை களைவதற்கு முயற்சி செய்."

" இன்று ஒரு ஏழைக்கு உதவினால் அன்று நீ ஈஸ்வர ஆராதனை செய்தவனராகிறாய்." ஒரு சமயம் பக்தர் ஒருவர் அன்னையாரை பார்க்க வந்திருந்தார். சகலமும் கற்றுணர்ந்த பக்தர் அவர். அன்போடு அவரை வரவேற்று அவரிடம் அன்னை பேசிக் கொண்டிருந்தார். லௌகீக விஷயங்களும் ஆன்மீக விஷயங்களும் பேசப்பட்டன. பேச்சு வாக்கில் அவர், " தாயே நான் எவ்வளவு முயற்சித்தும் மனம் ஒன்றுபட்டு இறைவனை நினைக்க முடிவதில்லை. தியானத்தில் உட்காருவேன். ஆனால் மனம் கட்டுப்படுவதில்லை. பல விஷயங்களில் அலை பாய்ந்து கொண்டே இருக்கும். அனைத்தும் கற்ற பண்டிதர் என மற்றவர்கள் என்னை போற்றுகின்றனர். ஆனால் நான் கற்றவைகள் எனது மனதை ஒருமுகப்படுத்த உதவவில்லை. என்ன காரணம் தாயே".

அதற்கு அன்னையவர்கள், " அன்பரே ஒரே வகுப்பில் அருகருகே அமர்ந்து படிக்கும் இரு மாணவர்களில் தேர்வின் போது ஒருவன் உச்சமதிப்பெண்களை பெறுகிறான். இரண்டாமவன் தாழ்ந்த மதிப்பெண்களைப் பெறுகின்றான். இது அவன் படித்த பாடங்களின் குற்றமா? இல்லை. மனோபாவத்திலும் ஏற்றுக்கொள்வதிலும் காணப்படும் வேற்றுமைகளே காரணம். அதற்காக வருந்த வேண்டாம். ஆண்டவனை தியானிப்பதில் முழு மனதோடு ஈடுபடவேண்டும். விடாமல் முயற்சிக்க வேண்டும். நாளாக ஆக மனம் ஒருமைப்பாட்டிற்கு வந்துவிடும். நமது கர்மபலன்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். மனம் தூய்மை பெற வேண்டும். அதற்கு குடிபுக அவன் விரைவாக வருவான்." என்ற அன்னையின் பதிலால் மகிழ்ந்த அப்பண்டிதர் அன்னையை நமஸ்கரித்து சென்றார்.

குருமகராஜ் கூறுகிறார். " யாவரும் அவருடைய கடமைகளை ஈஸ்வர ஆராதனையாகக் கருதி செய்து வந்தால் அது அவனை அடையும்"

ஆகவே குழந்தைகளே! இன்று நாம் அகிலாண்டேஸ்வரியின் அம்சமான அன்னையாரின் விழாவினை நம் சக்திக்கு ஏற்றவாறு செய்து முடித்துள்ளோம். அன்னையாரின் அருள், குருமகராஜின் அருள் நம்மிடையே தோன்றும் துர்புத்திகளை அகற்றி அருள்பாலித்து காப்பாற்றுமாறு பிரார்த்திப்போமாக!.

7. ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

26.8.97 ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி. சுவாமிஜி அவர்களின்
பதிவு செய்யப்பட்ட உரை

அன்பார்ந்த குழந்தைகளே!

இன்றைய தினம் கிருஷ்ண ஜெயந்தி!. கிருஷ்ணர் அவதரித்த நாளை நாடு பூராவும் கொண்டாடுகிறார்கள். நிறையப் பேசப் போவதில்லை. ஒரே ஒரு சுலோகத்தின் கருத்தை மட்டும் கூறி முடிக்கலாம். அந்த ஒரு சுலோகத்தைப் பற்றி ஒரு மணி நேரமும் பேசலாம். அதையே 10 நிமிடத்திலும் பேசலாம். நேரத்தை பொறுத்தது அது. இன்று அரை மணி நேரத்தில் சுருக்கி முடித்துக் கொள்ளலாம்.

ஆண்டு தோறும் கிருஷ்ண ஜெயந்தியை குடிலில் கொண்டாடுகிறோம். உங்கள் அனைவருக்கும் தெரியும். அவரைப் பற்றி டி.வி. தொடரில் பார்த்தும் கேட்டும் வந்துள்ளீர்கள். சிறுவயதில் ஒரு சிறுவன் எப்படி ஓடியாடி இருப்பானோ அதைப் போலவே கிருஷ்ணரும் இருந்தார். காட்டில் மாடு கன்றுகளை மேய்த்தார். அவர் கடவுளின் அம்சம்தான். ஆனால் பிறந்தவர்தான். இவ்விதமாக தத்துவங்கள் ஏராளமுண்டு. ராமர் கிருஷ்ணர் என்றால் கடவுளுக்கு கடவுள். மனிதருக்கு மனிதர். கிருஷ்ணர் ஏன் வந்தார்.? எதை முடித்துச் சென்றார்? என்பதெல்லாம் ரொம்ப ரொம்ப ஆராய்ச்சிக்குரிய சமாசாரம்.

சுருக்கமாக உங்களுக்கு சொல்லுகிறேன். பரதன் என்ற அரசன் நம் நாட்டை ஆண்டு வந்தான். அதனால் பரத கண்டம் என்ற பெயர் நம் நாட்டிற்கு ஏற்பட்டது. இந்தியாவை அதனாலேயே பரத நாடு, பாரத நாடு, பாரதம் என்றெல்லாம் அழைத்தார்கள். துவாபர யுகத்தில் ஆண்டு வந்த அரசர்களிலே பாண்டவர்கள், கௌரவர் முக்கியமானவர்கள். திருதராஷ்டிர மன்னனின் புதல்வர்கள் துரியோதனாதிகள். திருதராஷ்ரனின் தம்பி தான் பாண்டு. இவர் மக்கள்தான் பாண்டவர்கள். சகோதரர்களிடையே குடும்பத் தகராறு ஏற்படுவது போல பாண்டவ, துரியோதனாதிகளிடையே ராஜ்யத் தகராறு ஏற்பட்டது. இவர்களுக்குள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தார். ஆனால் துரியோதனன் பாண்டவர்களுக்கு ஒரு சிறுகுடிசை கூட தரமாட்டேன் என்று சொல்லி விட்டான். அப்போது சமரசமா? யுத்தமா? என்ற பேச்சு வந்தது. கிருஷ்ணரின் சமரச முயற்சி தோற்றது. யுத்தம் என்ற முடிவு ஏற்பட்டது.

துரியோதனும் அர்ஜுனனும் கிருஷ்ணருடைய உதவியை நாடி துவாரகைக்கு சென்றனர். அப்போது கிருஷ்ணர் மஞ்சத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். அர்ஜுனன் கிருஷ்ணரின் கால்மாட்டில் நின்று கொண்டான். அவரது தலைமாட்டில் இருந்த ஆசனத்தில் துரியோதனன் அமர்ந்து கொண்டான். சிறிது நேரத்தில் கிருஷ்ணர் கண்விழித்தார். கால்மாட்டில் நின்றிருந்த அர்ஜுனனைத்தான் முதலில் பார்த்தார். "என்ன வேண்டும்?" எனக் கேட்டார். "யுத்தத்தில் நீங்கள் எங்கள் பக்கம் இருக்க வேண்டும்" என அர்ஜுனன் கேட்டான்.கிருஷ்ணரும் சரி என்றார். பின் தலைப்பக்கம் துரியோதனன் இருப்பதைப் பார்த்தார். "துரியோதனா உனக்கென்ன

வேண்டும் என கேட்டார். துரியோதனன், “ கிருஷ்ணா உங்களின் படை முழுவதும் எனக்கு வேண்டும்” என்றான். கிருஷ்ணரும் சரி என்றார்.

குருக்ஷேத்திரம் என்ற பெரிய பரப்பளவுள்ள பூமியில் சண்டை ஆரம்பிக்கப்பட்டது. ஒருபுறம் பாண்டவர் படை நிற்கிறது. எதிர் வரிசையிலுள்ள படைகளை அர்ஜுனன் பார்த்தான். பாட்டனார் பீஷ்மர், சகோதரர்களான துரியோதனாதிகள், ஆசிரியரான துரோணர், பெரியப்பன்மார்கள், சிற்றப்பன்மார்கள், உயிர்நண்பர்கள் ஆகியோர் எதிர்வரிசையில் இருப்பதைப் பார்த்தான். இவர்களைக் கொன்றுவிட்டா ராஜ்யம் பெறவேண்டும் என நினைத்தான். கலங்கினான் அர்ஜுனன். மனதை துக்கம் கவ்வியது. அம்பையும் வில்லையும் கீழே போட்டுவிட்டு, தானும் ரதத்தில் சாய்ந்துவிட்டான்.

இதைக்கண்டு சிரித்தார் கிருஷ்ணர். “ கோழையாகி விட்டாயே அர்ஜுனா. இதுதான் வில் வீரனுக்கு அழகா என இருவருக்கும் பலவிதமான சம்பாஷணைகள் நடந்தன. கிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணைதான் “ பகவத் கீதை” எனப்படுகிறது. பகவானால் அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் உபதேசிக்கப்பட்டது. உலகம் முழுவதும் எம்மதமும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் கிட்டத்தட்ட 350 மொழிகளிலே கீதை எழுதப்பட்டுள்ளது. 18 அத்தியாயங்கள் 700 சுலோகங்கள் கொண்டது தான் பகவத் கீதை. அர்ஜுனன் சோர்ந்து விட்டதினாலே, கிருஷ்ணர் அவனை தெம்பூட்டி விழிப்படைய பல அறிவுரைகளைக் கூறுகிறார். இந்த அறிவுரையானது இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் உலகமக்கள் அனைவருக்கும் ஏற்புடையதாக அமைந்துவிட்டது. கிருஷ்ணர் கூறிய அறிவுரை அர்ஜுனனுக்கு மட்டுமல்ல சிறியவர், பெரியவர், படித்தவர், பாமரன் ஆகிய அனைவருக்கும் பொருந்தும்.


கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார், “ அர்ஜுனா நீ யார்? இந்த உடம்பு தான் நீயா? இந்த உடம்பை வைத்துக் கொண்டுதான் உன்னை நீயாக எண்ணிக் கொண்டிருக்கிறாயா? எலும்பும்,நரம்பும், சதையும், ரத்தமும் இவைகளால் ஆன சரீரம்தான் நீ என்று நினைத்து கொண்டிருக்கிறாய். அறிவில்லாதவனே நான் கூறுவதை கவனமாகக் கேள். இவைகளால் ஆன உடம்பே நீ என நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதற்கும் மேலாக உன்னுள்ளே இருக்கிறதே அந்த ஆத்மா அது என்ன? உறவு முறை கொண்டாடி அழுது புலம்புகிறாயே அது எதுவும் இந்த ஆத்மா அல்ல. நீதான் அவர்களை அழிக்கிறாய் என நினைத்துக் கொண்டிருக்கும் எண்ணம் மாயையாகும். இது எதுவும் ஆத்மாவிற்கு கிடையாது. உலகிலுள்ள அனைத்தும் பரம்பொருளின் துகள்கள். உடம்பிற்கு ஏற்படும் எதுவும் ஆத்மாவை பற்றாது. ஆத்மா அழிவில்லாதது. பிதாமகரை எப்படிக் கொல்வேன்? ஆசாரியரை எப்படிக் கொல்வேன்? எனப்புலம்புகிறாயே. இந்த எண்ணம் வெறும் மாயை. உன்னால் அவர்களின் ஆத்மாவை அழிக்க முடியாது. அவர்களது உடம்பு, மட்டுமே




"குடில் பிரார்த்தனா கூடம் " முன்புறத்தோற்றம்




குடில் குருகுலம் – மாணவர் தங்கும் விடுதி
24.06.1955 அன்று திரு. கு. காமராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



குடில் ஆஸ்ரமம் (1949)
புதுப்பித்த பின்பு



தொழில் சேவா மையம் – பேட்டைவாய்த்தலை 1987



குடில் ஆஸ்ரமத் தோற்றம் (1949)



குருதேவர் சிலை – திறப்பு விழா
திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள்.


ஸ்ரீராமகிருஷ்ண குருகுலம் மாணவர்கள்
கலைக்கூடம்.
திருப்பராய்த்துறை.
கோவை மாவட்ட நீதிபதி
திரு. S. மஹாராஜன், B.Sc.B.L. அவர்களால்
திறந்து வைக்கப்பெற்றது.
29-12-1963.


ஸ்ரீராமகிருஷ்ண குருகுல விடுதி.
திருப்பராய்த்துறை.
திருச்சிராப்பள்ளிஜில்லா.
சென்னை ராஜ்ய முதல் அமைச்சர்
திரு. கு. காமராஜ் அவர்களால்
திறந்துவைக்கப்பெற்றது.
24-6-1955.


ஸ்ரீராமகிருஷ்ண குருகுல மாணவர் விடுதி
தையற்கூடம்
திருப்பராய்த்துறை
முன்னாள் திருச்சிஜில்லா கலெக்டர்
திரு R.S. மலையப்பன், I.A.S.,
அவர்களால்
திறந்து வைக்கப்பெற்றது
27-12-64


ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம்.
திரு C. சுப்ரமண்யம் அவர்களால்
திறந்து வைக்கப் பெற்றது.
23-12-60.

பாதிக்கப்படுகிறது. நீ பெருவீரன். க்ஷத்திரியனின் கடமையை செய்ய நீ போர்க்களம் புகுந்திருக்கிறாய். மீண்டும் கூறுகிறேன் அர்ஜுனா எந்த ஆத்மாவையும் உன்னால் கொல்ல முடியாது. உடலை மட்டுமே நீ மாய்க்கிறாய். நிலையற்ற இந்த உடம்பை வைத்திருக்கும் அவர்கள் பேரிலா நீ கலங்குகிறாய்? இந்த உடம்பால் மட்டுமே இவர் பெரியப்பா, இவர் துரோணாச்சாரியார், இவர்கள் சகோதரர்கள், இவர்கள் மதிப்பிற்குரிய குருமார்கள் என நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் இந்த உடம்பு அவர்கள் அல்ல. எனவே நீ அழியக்கூடிய இந்த உடம்பை மட்டும் நீ சிதைக்கிறாய். அவர்களது ஆத்மாவை அல்ல. எனக்கூறி தனது விஸ்வரூபத்தை காட்டுகிறார். அதைக்கண்ட அர்ஜுனனின் மாயை அகலுகின்றது. நிலையற்ற இந்த உடம்புகளை அழிப்பதின் மூலம் உனக்கு அவமானம் உண்டாகாது. பாவம் எதுவும் பற்றாது. எனப் பலவாறாக அர்ஜுனனுக்கு அறிவுரை கூறுகிறார். அவ்வுரைகள் அர்ஜுனனின் கலக்கத்தை போக்குகின்றன. போர் செய்ய நிமிர்ந்து நிற்கின்றான். காண்டீபத்தை கையில் எடுக்கிறான்.

இந்த உலகில் அவரவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அதாவது கர்மத்தை எவ்விதமான மனசஞ்சலமும் இன்றி செய்தே தீர வேண்டும் என்பதைத்தான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். குருமகராஜ் அருளால் இன்று சொல்வதும், கேட்பதுமாகிய நிகழ்ச்சி நடைபெற்று முடிவடைந்தது. அவரது அருளை அனைவரும் பெற்று மேன்மை பெறுவோமாக!

1. ராமகிருஷ்ண குடில்

4.5.1958 ம் தேதியிட்ட கல்கி வார இதழில் குடிலைப்பற்றி
பகீரதன் எழுதிய கட்டுரை

" தம்பி உன் பெயர் என்ன?"
" சௌண்டப்பன்."
" உன் தந்தையின் பெயர்?"
" ஸ்ரீராமகிருஷ்ணர்"
"என்ன பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரையா உன் தந்தை என்கிறாய்?"
" ஆமாம்" என்று நிதானமாக தலையை ஆட்டினான் அந்தச் சிறுவன்.
" உன் தாயார் பெயர்?"
" சாரதாமணி அம்மையார்"

இந்த பதிலைக்கேட்டதும் எனக்கு தூக்கி வாரிப்போட்டது. என்ன அதிசயமான பிள்ளை இது" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டே பைக்குள் இருந்து ஒரு வாழைப்பழத்தை எடுத்து சாப்பிடு என்று கொடுக்கப் போனேன். " எனக்கு வேண்டாம்" என்று பலமாக தலையாட்டினான்.

" நீ இந்த பழத்தை சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்" என அவனை வற்புறுத்தினேன்.

அதற்கு அந்தப்பொடியன் சொன்ன பதில், " அப்படியானால் நூற்றிஏழு வாழைப்பழங்கள் தாருங்கள்" என்றான்.

" நூற்றி ஏழு பழங்களா? அவ்வளவையும் நீ சாப்பிட்டு விடுவாயா? என்று கேட்டேன்.

" எனக்கு ஒன்றுதான். மற்ற பழங்கள் எல்லாம் என் சகோதரர்களுக்கு" என்றான்.

" என்னப்பா எல்லாம் ஒரே புதிராக இருக்கிறது. உனக்கு நூற்றி ஆறு சகோதரர்கள் இருக்கிறார்களா? அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்.

" இதோ இங்கேயிருக்கும் ராமகிருஷ்ண குடிலில்தான்" என்றான். அந்த சிறுவனின் முகத்தைப் பார்த்தேன். அடடா அது எத்தகைய முகம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் வளர்ந்து வரும் உயர்ந்த பண்புகள் எல்லாம் அந்த முகத்தில் பிரதிபலித்தன. என் மனக்கண்கள் முன்னால் பிரகலாதனும், துருவனும், மார்க்கண்டேயனும் தோன்றினார்கள். ஆமாம் அந்தப் பாலகனின் பால் வடியும் முக காந்தி அப்படி எல்லாம் என்னை மயக்கிவிட்டது.

இப்போது ஸ்ரீராமகிருஷ்ணரும் சாரதாமணி அம்மையும் தான் தன் பெற்றோர்கள் என சொல்லிக் கொள்ளுகிறான் அல்லவா? அந்த சிறுவன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அப்படிச் சொல்லிக்கொள்ள அவனுக்கு பெற்றோர்கள் கிடையாது. சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கும் போதே அவனைப் பெற்றெடுத்தவர்கள் மறைந்துவிட்டார்கள். அவன் அனாதையாகிவிட்டான். எத்தனையோ அனாதைகளைப் போலவே அவனும் வீதியில் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறான். தேம்பித் தேம்பி விம்மி விம்மி கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கிறான்.

இதயமுள்ள மனிதர் ஒருவர் அவனைப் பார்த்திருக்கிறார். தம்முடன் அழைத்து வந்து, திக்கற்ற குழந்தைகளுக்காக நடத்தி வரும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் சேர்த்துவிட்டார். அவனுக்கு இப்போது ஒன்பது வயதிருக்கும். அவன் இப்போது அழுது கொண்டிருக்கவில்லை. தான் அனுபவித்த கஷ்டங்கள் ஒன்றும் அவனுக்கு நினைவில்லை.

அனாதை பிள்ளைகள் அங்கு அன்னமிட்டு வளர்க்கப்படுகிறார்கள். கல்வி கற்பிக்கப்படுகிறது. நாட்டின் சிறந்த பண்பாடுகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. வெறும் ஏட்டுச் சுரைக்காய் கல்வி மட்டும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. வாழ்க்கைக்கான காந்திமகான் காட்டிய ஆதாரக்கல்வி இவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. நம் நாட்டின் உயர்ந்த ஆன்மீகக் கல்வியோடு விஞ்ஞான காலத்துக்கு வேண்டிய தொழிற்கல்வியும் கற்றுத் தரப்படுகிறது. நாட்டின் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் நம்பிக்கையுள்ள திட இதயத்தை அவர்கள் பெறும்படியான ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தரும் கல்வியை அல்லவா அவர்கள் பயின்று வருகிறார்கள்.

கவர்னர் அமைச்சர்கள் ராணுவ அதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் காங்கிரஸ் தலைவர்கள் நிர்மாணத் தொண்டர்கள் பலர் இந்த அருமையான ஸ்தாபனத்திற்கு சென்று பார்வையிட்டு தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்திருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்குள் பிரவேசிக்கும் போதே ஒரு உன்னத லட்சியங்கள் நிறைந்த புனிதமான உலகத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்ற உணர்ச்சிதான் உண்டாகிறது. ராமகிருஷ்ண குடில் கட்டடங்கள் காவி வெள்ளை அடிக்கப்பட்டு தோப்புகள் அடங்கிய பண்டைக் கால பாரத நாட்டில் வாழ்ந்த மகரிஷிகளின் ஆஸ்ரமங்களைப் பற்றி இதிகாசங்களில் படித்திருப்பதை நினைவூட்டி நம்மை மகிழ்விக்கின்றன. வெறும் கல்லும் சுண்ணாம்பும் கொண்டு கட்டிய கட்டடங்களை போலவே தெரியவில்லை.

கலையழகும் தூய்மையும் நம்மை எங்கோ கொண்டு சென்றுவிடுகின்றன. குடிலின் ஒருபுறத்தே அமைந்திருக்கும் புனிதமான ராமகிருஷ்ணர் ஆலயமும், ஆங்காங்கு சுவரில் மாட்டியிருக்கும் படங்களும் அழகுக்கு அழகு செய்வதாய் அமைந்துள்ளன.

ராமகிருஷ்ண குடில் வாழ்க்கைக்கு தேவையான சகல பயிற்சிகளும் தரப்படுகின்றன. துடைப்பம் எடுத்து துப்புரவு செய்தல், பூவெடுத்து மலர்மாலை

தொடுத்தல், ஈஸ்வர ஆராதனை, விவசாயம், மாட்டுப்பண்ணை பராமரிப்பு, உணவு சமைத்தல், நூற்றல், நெசவு நெய்தல், தையல் ஆகிய அனைத்து பயிற்சிகளும் வயதிற்கு தக்கவாறு அளிக்கப்படுகின்றன. உயிரையும் உள்ளத்தையும் , அறிவையும், ஆன்மாவையும், சிறைப்படுத்தியிருக்கும் மெக்காலே கல்வித்திட்டத்தில் ஊறி வளர்ந்தவர்கள் காந்திமகானின் கல்வித் திட்டத்தை அறிந்து கொள்ளுவது அவ்வளவு எளிதன்று. அதனை நடத்தி வைத்தல் என்பது அவர்களுக்கு மிகவும் கடினமான காரியம்.

காந்தி மகானிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டு அவர் பணித்த தொண்டுகளுக்கே உடல், பொருள் ஆவியை அர்ப்பணம் செய்தவர்களால் தான் காந்திமகான் வகுத்த கல்வித்திட்டத்தை அறிந்து நடத்தி வைக்க முடியும்.

அத்தகைய மகாத்மாவின் அத்யந்த சீடர்களில் ஒருவர் பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள். " பெறற்கரிய மானிடப் பிறவியை பெற்ற இப்பிறவியிலேயே கடவுளை அறியவேண்டும்." என்னும் பகவான் ராமகிருஷ்ணரின் கொள்கையை நன்கு உணர்ந்தார். ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுள். இவர்களுக்கு கல்வி இல்லை, கந்தையில்லை. முன்னேற்றம் அடைவது எப்படி என்பதே அவர்களுக்குத் தெரியாது. யாரொருவர் இவ்வேழைமக்களின் பொருட்டு நெஞ்சு புண்ணாக வருந்துகிறாரோ அவர்தான் மகாத்மா' என்ற விவேகானந்தரின் வாக்கை வாழ்வில் கடைபிடிப்பவர். இத்தகைய அருமைத் தொண்டர் ராமகிருஷ்ண குடிலை நடத்தி வருகிறார். இவருக்கு திரு. N.A., ரங்கநாதய்யர் அவர்களும், திரு. வை. நடேசபண்டாரம் அவர்களும் தோன்றாத் துணையாகவும் தோன்றும் துணையாகவும் இருந்து எல்லாவிதமான உதவிகளையும் அளித்து வருகிறார்கள்.

அனாதைகள் நல்வாழ்வுக்கு ஆயுள் முழுதும் வழிவகை செய்து தரும் உயர்ந்த திட்டத்தின் அடிப்படையில் ஸ்தாபனம் பணிசெய்து வருகின்றது.இது போன்ற உயர்ந்த லட்சியத்துடன் செயல்புரியும் ஸ்தாபனம் தமிழ்நாட்டுக்குள் ஏன் பாரத நாட்டிலேயே வேறெங்குமில்லை என்று துணிந்து கூறலாம். வீரத்துறவி விவேகானந்தரைப் போன்று ஏழை அனாதை மக்களிடம் அவர்களை தெய்வாம்ஸமாகக் கருதி பிரதிபலன் எதிர்பாராமல் சேவை செய்து வரும் பிரம்மசாரி ராமசுவாமி அவர்களை பார்த்து இரு கை கூப்பி கும்பிடத் தோன்றுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ண குடிலை விட்டுத் திரும்பும்போது இந்த மகத்தான ஸ்தாபனத்தை நடத்தி வரும் பிரம்மசாரி ராமசுவாமி அவர்களின் மகிமையை எண்ணி வியந்தேன்.

தமிழகத்தின் சிறப்புக்காக உகந்த முறையில் ஸ்தாபனத்தை சுவாமிகள் நடத்தி வருகிறார்கள். இந்த உயர்ந்த ஸ்தாபனத்திற்கு உதவியவர்களை

பாரபட்சமின்றி பிரம்மசாரி அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். இரக்கம் உள்ள இதயம் படைத்த நல்லோர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் பணத் தட்டுப்பாட்டிலேயே ஸ்தாபனம் நடைபெற்று வருகிறது என்பதை அறியும் போது மனதிற்கு நிம்மதி ஏற்படவில்லை.

இப்பேர்ப்பட்ட ஸ்தாபனத்தின் பொறுப்பை தனிமனிதரின் தலையில் சுமத்திவிட்டு மற்றவர்கள் அவரவர்கள் காரியங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா என எண்ணிப் பார்த்தேன். சர்க்கார் ஒருபுறம் கிடக்கட்டும். மக்கள் மனம் வைத்தால் எதுதான் நடக்காது? ஆகாத காரியமும் உண்டா?

நிலம் படைத்தவர்கள் நிலமாகவும், பணம் படைத்தவர்கள் பணமாகவும் பொருட்களைப் படைத்தவர்கள் பொருள்களாகவும் தாருங்கள் ஒப்புயர்வற்ற பிரம்மசாரி ராமசுவாமி அவர்களின் கரங்களை பலப்படுத்துவது தமிழ்நாட்டு மக்களின் தலையான கடமையாகும்.

இந்த ஸ்தாபனத்துக்கு உதவி செய்வதின் மூலம் மாபெரும் காரியத்தை சாதித்த மகிழ்ச்சியை அடையலாம். திக்கற்ற குழந்தைகளை காப்பாற்றிய பங்கில் கலந்து கொண்டு திருப்தியடையலாம். தமிழ்நாட்டின் உயர்ந்த நாகரீகத்தை போற்றிக் காப்பாற்றும் பணியில் கலந்து கொண்ட நல்லபெயரும் கிடைக்கும். தமிழ்நாட்டில் அவல நிலையில் திரியும் அனாதைக் குழந்தைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியே ஆகவேண்டும். அதற்காகவாவது, திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு உதவி புரியுங்கள்.

“ ஏட்டுப்படிப்பை மட்டும் கற்றோமே
ஏழைக்கிரங்கும் அன்பைப் பெற்றோமா?”

2. காக்கும் கரங்கள்- ராமகிருஷ்ண குடில்

திரு. ஏ. நடராஜன், திருச்சி வானொலி நிலையம்

1.1.1969 ல் மாலைமுரசு பத்திரிக்கையில் வெளியானது

“ கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை”

என்று ஔவையார் பாடியுள்ளார்.

பெற்றோரும் உற்றோருமின்றி வறுமையில் வாடும் அனாதைக் குழந்தைகள் காப்பாற்றுவார் இன்றி நல்ல சூழ்நிலை அவர்களுக்கு கிடைக்கப்பெறாத காரணத்தால் பிற்காலத்தில் பல்வேறு வகையான கேடுகளை செய்துவரும் சமூக நாச சக்திகளாக மாறிவிடுவதை தடுத்து அவர்களுக்கு நல்வாழ்வு தந்து ஆதரிக்கும் கரங்கள் அனாதை இல்லங்கள்தான்.

தமிழ்நாட்டிலே சிறப்பான முறையிலே இயங்கிவரும் அனாதை இல்லங்களில் திருச்சிமாவட்டம் திருப்பராய்த்துறையிலே உள்ள ஸ்ரீராமகிருஷ்ண குடிலும் ஒன்று. காவிரியாற்றின் தென் கரையிலுள்ள இச்சிற்றூரில் இனிய சூழ்நிலையில் குடில் அமைந்துள்ளது. எங்கு நோக்கினும் பசுமை. சாதாரணமாக சாலையில் செல்பவர்களுக்கு குடில் இருப்பதே தெரியாது. கரிகால் மன்னன் காவிரிக்கு எழுப்பிய கரையை கடந்து கீழிறங்கினால் பத்துப் பதினைந்து ஏக்கர் நிலப்பரப்பில் எழிற் காட்சிக்கு இருப்பிடமாய் திகழ்வதை காணலாம்.

இந்தக் குடிலுக்குத் தலைவர் பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள். அவர் தனி ஒரு ஆளாகத்துவக்கிய இந்த ஸ்தாபனம் ஆல்போல் பெருகி வளர்ந்துள்ளதை அனைவரும் அறிவர். ராமசாமி அவர்கள் ஒரு துறவி. தூய வெண்ணிற கதராடை அணிந்து புன்சிரிப்பு தவழ குடிலுக்கு வருபவர்களை அகமும் முகமும் மலர வரவேற்கிறார்.

“ நீங்கள் எப்படி இந்த சேவையை மேற்கொண்டுள்ளீர்கள்?” என்று கேட்டதற்கு அவர் சொன்னபதில்.

“ நாங்கள் துறவிகள். துறவிகளுக்கு ஒரு லட்சியம் வேண்டும். ராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் அழுதழுது கண்ணீர் வடித்துச் செய்த சேவை இந்த அனாதை மக்கள் சேவை. எனவேதான் அந்த சேவையை துவக்கினேன்.” என்றார். 6 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட பெற்றோர்களை இழந்த சுமார் 300 சிறுவர்கள் இங்கு இருக்கின்றார்கள்.

சீருடை அணிந்து அவர்கள் எறும்பு போல் சுறுசுறுப்பாக பணியாற்றும் பாங்கினை கண்டால் நாம் பரவசம் அடைகிறோம். முன்னூறு மாணவர்கள் வசிக்கும் குடிலுக்கு வேலையாட்கள் என்று எவரும் கிடையாது என்ற செய்தி வியக்க வைக்கிறது. கல்வி பயில்வது மட்டும்தான் இங்குள்ள மாணவர்களின் வேலையா?

இல்லை இல்லை. இந்தக் குடிலுக்குள் நடைபெறும் சகல காரியங்களையும் செய்வது இந்த மாணவர்கள் தான். உலக வாழ்க்கைக்கு தேவையான அனைத்துப் பணிகளையும் இங்கு செய்பவர்கள் இவர்களே. மாணவர்கள் பிற்காலத்தில் எவ்வித சோதனைகளுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு அனைத்துவகை பயிற்சிகளும் தரப்படுகின்றன. உழுது பயிரிடுவது முதல் உணவு தயாரிப்பது வரை இவர்களே மேற்கொள்ளுகின்றனர்.

உணவு பரிமாறப்படும்போது நாமெல்லாம் இலையிலுள்ளதை ஆவலுடன் எடுத்து வாயிலே போடுவோம். ஆனால் இங்கு மாணவர்கள் சாரிசாரியாய் உட்கார்ந்திருக்கிறார்கள். உணவு பரிமாறும் வேளையில் அவர்கள் அனைவரும் சேர்ந்து நாமாவளி பாடுகின்றனர். கடைசியாக உட்கார்ந்திருக்கும் மாணவன் தட்டில் எல்லா பதார்த்தங்களும் பரிமாறப்பட்ட பின்னர்தான் அனைவரும் சாப்பிடத் துவங்குகின்றனர்.

" ஏழை மக்கள்தான் நான் வணங்கும் தெய்வம்" "கஞ்சியற்றும் கந்தையற்றும் கல்வியற்றும் தவிக்கின்ற அந்த ஏழை மக்களை கைதூக்கிவிட நீங்கள் முன்வராவிடில் உங்களுக்கு முக்தி எவ்வாறு லபிக்கும்."

" நலிந்தோரது நன்மையை உத்தேசித்து தன்னுயிரை பரித்யாகம் பண்ண வேண்டும். இது தான் வேதாந்தத்தின் சாரமும் கடவுள் வழிபாடும்."

" கடவுளைத்தேட, நீங்கள் எங்கே போகிறீர்கள்? ஏழைகள் துன்பப்படுவோர்கள் பலகீனமானவர்கள் எல்லோரும் கடவுளர்கள் அல்லவா? அவர்களை ஏன் முதலில் நீங்கள் ஆராதிக்கக்கூடாது?

சுவாமி விவேகானந்தரின் இந்த மூன்று பொன்மொழிகளும் அவருடைய சிலையின் அடியில் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகள் காண்போரது கருத்தை கவர்ந்து சிந்திக்கத் தூண்டுகின்றன. இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் வெவ்வேறு பணியில் இருப்பதாகவும் டிசம்பர் மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆண்டுவிழாவிற்கு வருவதாகவும் மிக்க நன்றியுடன் இருப்பதாகவும் பெருமையுடன் தலைவர் குறிப்பிட்டார்.

" தம்பி உன் பெயர் என்ன?

" கணபதி"

" எந்த ஊர்?"

" ராமகிருஷ்ண குடில்"

" தகப்பனார் பெயர் என்ன?"

" ராமகிருஷ்ண பரமஹர்ஸர்"

" தாயார் பெயர்?"

" சாரதாமணி தேவியார்."

எந்த மாணவரிடமும் கேட்டாலும் இதே பதிலைத்தான் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல தனியாக ஒரு மாணவனுக்கு திண்பண்டம் கொடுத்தால் வாங்க மாட்டேன் என்கிறார்கள். 300 பேர்களுக்கும் கொடுத்தால்தான் வாங்கிக் கொள்வார்களாம். அவர்களின் சகோதர பாசத்தையும் கட்டுப்பாட்டையும் எண்ணி எண்ணி வியந்தோம்.

இங்குள்ள மாணவர்கள் கார் ஓட்டுகிறார்கள். கைவண்டி இழுக்கிறார்கள். பாடுகிறார்கள். விளையாடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் கருமமே கண்ணாக இருக்கிறார்கள். கலெக்டர் R.S. மலையப்பனும் புதுவை தலைமை நீதிபதி மகராஜனும், வாரியார் சுவாமிகளும் குடிலின் வளர்ச்சியில் மிகவும் அக்கரை கொண்டிருக்கிறார்கள். நேருஜியும் இந்திரா காந்தியும் குடிலுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் நன்கொடையளித்துள்ளார்கள்.

குடிலின் வளர்ச்சிக்கு உதவியவர்களை நினைத்து நினைத்து நன்றியோடு பாராட்டுகிறார் தலைவர் ராமசாமி அவர்கள். " சங்கருடைய அத்வைத கருத்து, மத்வர், ராமானுஜருடைய பக்திக்கருத்து, யேசுநாதருடைய சேவைக்கருத்து, இம்மூன்றையும் ஒருங்கே திரட்டி அமைந்தது ராமகிருஷ்ணருடைய சிந்தாந்தம்.

இந்த ஸ்தாபனத்தில் ராமகிருஷ்ணரின் சாந்நித்தியத்துடன் மகாத்மா காந்தியினுடைய கர்ம யோக கருத்தும் ஒருங்கே குடிகொண்டு உறைவதை காண்கின்றேன். மிகமிக மகிழ்ச்சி. இங்கிருந்து ஏராளமான தொண்டர்கள் நாட்டிற்கு சேவை செய்ய வெளியேறப்போகிறார்கள். இதனுடைய ஜோதி குறைந்தது 50 மைல் சுற்றளவில் உள்ள இடங்களுக்கு பரவியாக வேண்டும்" என ராமகிருஷ்ண குடிலை பார்த்துவிட்டு வினோபாஜி பாராட்டியுள்ளார்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை அனாதைக்குழந்தைகளே இல்லை என்ற நிலையை உண்டாக்குவதுதான் தமது கடமை என்று உளமாற குடில் தலைவர் விரும்புகிறார். இந்தக் குடிலை பார்த்தபின் நமக்குத் தோன்றுவதெல்லாம் இதென்ன வேளாண்மைப் பல்கலைக்கழகமா? தொழிற்கூடமா? கல்விக்கூடமா? இயற்கை எழிற்கூடமா? நற்பண்புகளின் உறைவிடமா?" என்பதுதான்.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" அனாதைகளுக்கு இரங்கி ஆதரவளிக்கும் கரங்களை வலுப்படுத்த வேண்டுவது நல்லிதயம் படைத்தவர்களின் கடமையாகும்.

3. பிரம்மசாரியின் குழந்தைகள்

1992 ம் ஆண்டு செப்டம்பர் மாத கலைமகள் இதழில்
எழுத்தாளர் தி.சா. ராஜு அவர்கள் எழுதிய கட்டுரை

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 16 கி.மீ. தொலைவில் கரூர் செல்லும் பாதையில் திருப்பராய்த்துறை என்னும் சிற்றூர் இருக்கிறது. அங்கு ஒரு தொன்மையான சிவாலயம். நான்கு சமயக்குரவர்களாலும், அருணகிரி நாதராலும் பாடல்பெற்ற திருத்தலம். நாயகர் தாருகாவனேஸ்வரர். "வன் பராய் முருகு ஒப்பனே" என்று உருகுகிறார் மாணிக்கவாசகப்பெருமான்.

வங்கத்தில் கமார்ப்புகூரில் பிறந்து தட்சினேஸ்வரத்தில் வசித்த ஓர் இல்லறத்துறவியின் பெயரில் இரண்டு மையங்கள் இங்கு செயல்புரிகின்றன. ஒன்றின் பெயர் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம். மற்றது ஸ்ரீராமகிருஷ்ண குடில். ராமகிருஷ்ண மத்திய கேந்திரத்தின் மேலாண்மை எதுவுமின்றி செயல்படும் மையங்களின் வரலாறு சுவையானது.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பரமஹம்ஸரின் உபதேசங்களினால் ஈர்க்கப்பட்டு கல்கத்தா உத்தர் பாராவிலுள்ள பேலூர்மடத்தில் சமயக்கல்வி பயின்றார். அது முடிந்ததும் அவருக்கு தீட்சை அளிக்கப்படுகிறது. அவரது புதிய பெயர் சுவாமி சித்பவானந்தர். சிலகாலம் மடத்தில் பணிபுரிந்து அவரை வெளிநாடு சென்று சமயப்பணிபுரிய வேண்டுகிறது மையம். ஆனால் அவர் இந்திய நாட்டிலே பணிபுரிய விரும்புகிறார். துறவிக்கு, இன, மொழி பற்று எதுவும் இருத்தல் கூடாது. அவர்

வெளிநாடு செல்லத்தான் வேண்டும் என்று மையம் ஆணையிடுகிறது.

மற்ற பற்றுக்களைத் துறந்தாலும் நாட்டுப்பற்றை துறக்க இயலவில்லை என்ற உண்மையைக்கூறி சுவாமி சித்பவானந்தர், காவிரிக் கரையிலுள்ள திருப்பராய்த் துறையில் தபோவனத்தை துவக்கினார். பல மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு சமயப்பண்பு இணைந்த கல்வியை அவர்களுக்குப் போதித்தார். இவரது தவவலிமையால் கவரப்பட்டு பல மாணவர்கள் சேர்ந்து பலனடைகின்றனர்.

சுவாமி சித்பவானந்தருக்கு பல அணுக்க தொண்டர்கள் இருந்தனர். அவர்கள் முறையாக தீட்சை பெறாதவர்கள் என்றாலும் இறைமார்க்கத்தில் நிற்கும் மெய்த்தொண்டர்கள். தூய்மையிலும் வாய்மையிலும் தீவிர பற்றுடையவர்கள். அவர்களில் ராமசாமி என்றொரு தொண்டர். அவர் சுவாமி விவேகானந்தரிடம் மிகுந்த பற்றுடையவர். வெற்று அனுஷ்டானங்களும் உபதேசங்களும் இந்த நாட்டிற்கு போதுமானவை அல்ல. அவர்கள் தேசப்பற்றும் உடையவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய நரம்புகளில் செயலாக்கம் நிரம்பித் துடிக்க வேண்டும்.

“நாயம் ஆத்மா பலஹீனேலப்யஹ” என்ற வீராவேச உரைகள் இவரை மிகவும் கவர்ந்தன.

தைத்ரீய உபநிடதம் அன்னை, தந்தை, ஆசான், அதிதி ஆகியோர் கடவுளுக்கு நிகர் என்று கூறுகிறது. அதற்கு பிற்சேர்க்கையாக “ தரித்ரோ தேவோபவ” வறியவர்களும் தரித்திர நாராயணர்கள் ஆவார்கள் என்ற நரேந்திரனின் கருத்து இந்த இளைஞரை மிகவும் கவர்ந்தது. தமது ஆசானிடம் பணிவுடன் கூறினார், “ நீங்கள் அளிக்கும் கல்வியும், வழிபாட்டுணர்வும் வறியவர்களையும் சென்றடைய வேண்டும்” எனக் கேட்டுக்கொண்டார். கொள்கையளவில் சுவாமி சித்பவானந்தர் அதை ஏற்றார். ஆனால் அதற்கான செயல்பாடு எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை.

பிரம்மசாரி ராமசுவாமி தமது குருவினிடமிருந்து பிரிந்தார். அதே ஊரில் 2 கி.மீ. மேற்கே தனியாக ஒரு குடிசை அமைத்தார். அதற்கு ராமகிருஷ்ண குடில் எனப் பெயரிட்டார். ஏழைக் குழந்தைகளுக்கு கல்விக்கண்ணை திறந்துவிட வேண்டும் என்ற கருத்தில் அவர் மிகவும் பிடிவாதமாக இருந்தார். அப்போதுதான் அவருக்கு இத்தகைய எண்ணம் உதித்தது. தாம் தொடங்கிய நிறுவனத்தில் தாய், தந்தை இருவருமற்ற பிள்ளைகளை சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி அனைத்தையும் இலவசமாக அளிக்க வேண்டும் என உறுதிபூண்டார். இந்தப்பணியின் பொருட்டு அவர் ஊர் ஊராக அலைந்தார். நிதி சேர்த்தார். பல நல்லோர்களை சந்தித்தார். அரசின் உதவியையும் நாடினார்.

இவரது ஜுரவேக ஆவேசத்தைக்கண்ட செல்வந்தர்கள் இவருக்கு உதவி புரிய முன் வந்தனர். திருச்சி மாவட்ட ஆட்சியாளர் திரு. மலையப்பன், ஜஸ்டிஸ்

திரு. மகராஜன் ஆகியோர் முழு ஆதரவு கொடுத்தனர். திருமுருக கிருபானந்த வாரியார் குடிலின் புனிதப்பணி குறித்து தாம் சென்ற இடங்களில் உரையாற்றினார். ஒவ்வொரு செல்வந்தரையும் ஒவ்வொரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளும்படி செய்தார். ஊர் ஊராகச் சென்று தெய்வச் சிந்தனையை வளர்க்கும் வேளையில் குடிலின் தூய பணிகள் குறித்து அழுத்தமாகக் கூறினார். ஒன்று பத்து, நூறு, ஆயிரம் என தொகை குவிந்தது. பல நல்லோர்கள் திருப்பராய்த்துறைக்கு வந்து அதன் நற்பணியை நேரில் கண்டார்கள். பூஜ்யர் வினோபாஜி வருகை தந்தார். ஜெயப்பிரகாஷும் நேரில் வந்து பாராட்டினார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் குடிலின் வளர்ச்சி அமோகமாக இருந்தது. மாணவர் தங்குமிடம், சமையற்கூடம், பிரார்த்தனை கூடம், உணவுச்சாலை, கழிப்பிடம், குளியலறைகள், பசுமடம், விளையாட்டுத்திடல், கலையரங்கம் என கட்டடங்கள் வளர்ந்து கொண்டே போயின. இவ்வளவுக்கும் ஆதாரம் பொதுமக்களின் உதவி.

இது ஒரு புனிதமான பணி என மக்கள் புரிந்து கொண்டுவிட்டதால் இரு கைகளாலும் வாரிவழங்கினர். ஒரே இரவில் கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்தி இரண்டறை லட்சம் ரூபாய் நிதி சேர்த்து அளித்தார் எம். ஜி. ஆர். வருகையாளரின் குறிப்பேட்டில் அவர், “ நான் உங்கள் மகன். தாங்கள் வேண்டும் உதவியை எப்போதும் அளிக்க தயாராக இருக்கிறேன்” என குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் குடிலிலுள்ள மரங்கள் எல்லாம் பேசுமே என்றார். நிறுவனத்திலுள்ள மரங்களில் எல்லாம் பரமஹம்ஸரின் பொன்மொழிகளை தகடுகளில் வரைந்து பொருத்தியிருக்கிறார்கள்.

பள்ளிப்படிப்பை முடித்த மாணவர்கள் தொடர்ந்து திருச்சியில் உள்ள தொழிற்பயிற்சி பள்ளியில் குடில் மாணவர்கள் சேர்ந்து படிக்கின்றனர். தொடர்ந்து பயிற்சியும் பணியும் பெறுவதற்கென்றே தொழில் மையம் ஒன்றும் குடிலில் திறக்கப்பட்டுள்ளது. குடில் மாணவர்களின் திறமையான மேற்பார்வையில் இந்த மையம் இழப்பின்றி செயல்படுகிறது. வாடிக்கையாளர்களின் நல்லெண்ணத்தையும் பெற்றுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக பிரம்மசாரி ஒரு புதிய கோட்பாட்டை கடைப்பிடிக்கிறார். குடிலின் செலவுகளுக்காக எத்தகைய நன்கொடைகளையும் ஏற்பதில்லை என்பதே அது. மக்கள் அளித்த தொகை அனைத்தையும் நியாயமான செலவுகள் போக மீதியை அரசாங்கப் பத்திரங்களில் முடக்கியிருக்கிறார். ஐயாயிரம் தென்னை மரங்களை வளர்த்து பலன்தரும் மரமாக்கி விட்டார். எனக்கு வேண்டியதெல்லாம் இன்னும் அதிக எண்ணிக்கையில் பிள்ளைகள். தொண்டு செய்ய மென்மேலும் வாய்ப்பு என்பதுதான். அந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று தற்போது நல்ல நிறுவனத்தில் உள்ள பழைய மாணவர்கள் பல ஆயிரங்களுக்கு காசோலை

அனுப்புகிறார்கள். அவற்றையெல்லாம் கண்டிப்புடன் திருப்பி கொடுத்து விடுகிறார் இந்த சாமி.

இனி எனக்கு நிதிஉதவி எதுவும் வேண்டாம் என்று மறுக்கும் தொண்டு நிறுவனம் இந்தியாவிலேயே இது ஒன்றுதான். சாமி தமது பிள்ளைகளுக்காக நிறைய செலவழிப்பார். ஆனால் பைசாவாரியாக கணக்கிருக்கும். வீண்செலவு என்று எதையும் காட்ட இயலாது. இந்த முதிர்ந்த வயதிலும் அவர் கடைப்பிடிக்கும் சிக்கனம் வியப்பிற்குரியது. " இந்தப் பிள்ளைகளுக்கு இத்தகைய புகலிடம் கொடுத்ததின் மூலம் அவர்களில் பலரை குற்றவியலிலிருந்து காப்பாற்றியிருக்கிறீர்கள்" என என் உரையாடலை துவக்குகிறேன்.

" இது ஒரு புதிய சீரான பாதை. சீரான பார்வையுமாகும்" குடிலை நான் நடத்துவதின் நோக்கம் இதுதான். என்றாலும் எவ்வளவு பாடுபட்டாலும் அவனை ஒரு சாதாரண குடிமகனாக மட்டுமே என்னால் ஆக்கிவிட முடிகிறது. அதற்கு மேல் அவனை உயர்த்த என்னால் இயலவில்லை."

" அவரது உள்ளக்கிடக்கையை நான் தெளிவாகவே புரிந்து கொள்ளுகிறேன். ஒரு மனிதனை உருவாக்குவதில் சூழ்நிலைக்கும் பாரம்பரியத்தும் சமபங்கு உண்டு என சமூக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சாமியால் நல்ல சூழ்நிலையை உருவாக்கமுடிகிறது. பாரம்பரியத்தை மாற்றுவது என் கையில் இல்லையே என்பது அவருடைய பிரலாபம்" " இந்த அளவிற்காகவாவது தொண்டுபுரிய இறைவன் ஆளாக்கிவிட்டானே என்று நான் நன்றி கூறுகிறேன்."

இத்துடன் அன்றைய உரையாடல் நிறைவு பெறுகிறது. அவர் கூறிய கருத்துக்களை பலநாட்களுக்கு அசை போடலாம். முக்தி நிலையை அடைவதற்கு பல சாதகர்கள் பற்பல வழிமுறைகளை மேற்கொள்ளுகின்றனர்.

மாமன்னன் அக்பர் ஆக்ராவிலிருந்து ஆஜ்மேருக்கு நடந்தே சென்றான். கரிப் நாவஸ் க்வாஜா மொஹினுத்தீன் சிஸ்தியின் உரை. நிலத்தில் அவனுக்கு ஆனந்த நிழல் கிட்டிற்று" என்று ஆயினி அக்பர் உறுதி செய்கிறது.

பல தவ சிரேஷ்டர்கள் கங்கோத்ரியை நோக்கி பயணிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு கயையிலுள்ள போதிமரம் அந்த நிலையை அளிக்கிறது.

அது எப்படி இருக்குமென்று மகாகவி நமக்கு விண்டு காட்டுகிறார்.

" என்னிடத்தே சக்தி எனதுள்ளத்திலும் உயிரிலும் நிற்கின்றாள்"

" இப்போது அவள் என்னுள்ளே நிறைந்திருக்கின்றாள்.

" இப்போது எனது உயிரிலே வேகமும் நிறைவும் பொருந்தியிருக்கின்றன.

" இப்போது எனது உடலிலே சுகமும் வலிமையும் அமைந்திருக்கின்றன."

" இப்போது என் உள்ளத்திலே தெளிவு நிலவுகிறது"

" இது எனக்குப் போதும்

" சென்றது கருத மாட்டேன். நாளை சேர்வது நினைக்க மாட்டேன்"

" இப்போது என்னுள்ளே சக்தி கொலுவீற்றிருக்கிறாள்.
" அவள் நீடூழி வாழ்க"
" அவளைப் போற்றுகின்றேன். புகழ்கின்றேன். வாய் ஓயாமல் வாழ்த்துகின்றேன்"
இந்தத் தெளிவைப் பெற உங்களுக்கு விருப்பம் உண்டா? காவிரிக் கரையிலுள்ள இந்தக் கருணை இல்லத்திற்குள் ஒருமுறை நுழைந்து திரும்புங்கள்.

உங்கள் சொல்லில், செயலில், இயக்கத்தில் ஒரு மின்னல் அடிக்கும். அது பூவாகச் சொரியும்.

4. அனாதைச் சிறுவர்களுக்கான புதிய உலகம்

1967 டிசம்பர் 27ம் தேதியன்று வெளியன்று " தினத்தந்தி' நாளிதழில் வெளியான கட்டுரை.

ஆதரவற்ற அனாதைச் சிறுவர்களை ஏற்று அவர்களை சிறந்த முறையில் உருவாக்கும் நிலையம் ஒன்று திருச்சி அருகே திருப்பராய்த்துறையில் அமைந்துள்ளது. ராமகிருஷ்ண குடில் என்பது அதன்பெயர்.

இதற்குள் சென்று பார்த்தவர்களுக்கு இது ஒரு புதிய உலகமாகவே இயங்கி வருவது தெரியும். 43 ஏக்கர் நிலத்தில் 13 ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது. தற்போது இங்கு 300க்கும் மேற்பட்ட சிறுவர்கள் வசித்து வருகின்றனர். கல்வி முதலான அனைத்தும் அவர்களுக்கு இலவசமாக வழங்கப் படுகிறது. புத்தகக் கல்வி தவிர நூற்பது நெசவு செய்வது விவசாய வேலைகளை கவனிப்பது. கார், டிராக்டர் ஒட்டுதல் முதலான பயிற்சிகளும் தரப்படுகின்றன. இங்குள்ள சிறுவர்களே பெரியவர்கள் வியக்கும் வண்ணம், காரியம் செய்து வருகின்றனர். நிலத்தை உழுவது, நிலத்தில் நடுவது, கதிர் அடிப்பது, போர் அடித்து நெல் குவிப்பது. மூட்டைகளாக அடுக்குவது ஆகிய யாவும் இவர்களாலேயே செய்யப்படுகின்றன.

கட்டடம் கட்டும் போது ஓரிரு தொழிற் கொத்தனார்களே இருப்பார்கள். அவர்களுக்கு உதவியாக சித்தாள்களாக மாணவர்களே உதவி செய்கின்றனர். உணவுவிடுதியில் காய்கறிகள் நறுக்குவது தக்க பக்குவத்தில் உணவுப்பொருட்களை அடுப்பில் ஏற்றி இறக்குவது ; பாத்திர சுத்தம், உணவு விடுதி சுத்தம் ஆகிய அனைத்தையும் செய்பவர்கள் இவர்களே. தங்கள் சகோதர மாணவர்களுக்கு காலம் தவறாமல் இவர்களே காலை, மதியம், இரவு மூன்று வேலைகளிலும் உணவு தயாரித்துவிடுகின்றனர். இங்கு தையற்கூடம்

உண்டு. வைத்திய சிகிச்சை பெற மருந்தகம் ஒன்றும் உள்ளது. தச்சுப்பட்டறை, மாட்டுப்பண்ணை, விளையாட்டு அரங்கம் ஆகிய எல்லாம் உண்டு.

கலைக்கூடத்தில் மாணவர்களே இசைக்கருவிகளை இசைத்து பக்திப் பாடல்களை பாடும்போது காதுகளில் தேன் பாய்கிறது. குடிலுடன் தொழில் மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. நீர் இறைக்கும் யந்திரம் தயாரிக்கப்படுகிறது. பெரிய மாணவர்கள் இங்கு பயிற்சி பெறுகின்றனர். குடிலின் இயக்கத்தை நேரில் பார்த்த பூமிதான இயக்கத்தலைவர் வினோபாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், மாநில கவர்னர், அமைச்சர்கள், தமிழக பிரமுகர்கள் ஆகிய அனைவர்களும் வியந்து பாராட்டியுள்ளனர். இத்தகைய பாராட்டுதல்களுக்கு காரணகர்த்தாவாக உள்ளவர்தான் பிரம்மசாரி ராமசாமி அடிகளார். சிரித்த முகத்துடன் அமைதியான எளிமையான தோற்றம் கொண்டவர், "உங்களால் எவ்வாறு இவ்வளவையும் செய்ய முடிந்தது?" எனக் கேட்டோம். அதற்கு அவர் " பகவான் ராம கிருஷ்ணரின் மீது நான் கொண்ட பற்று இந்தக்குடில் உருவாகக் காரணமாக இருந்தது." விவேகானந்தரின் அறிவுரைகளை உண்மையாக உணர்ந்து மனதால் ஏற்றுக்கொண்டு, தன்னலமற்ற சேவையை மேற்கொண்டு, தனக்கென வாழாமல் இருப்பவர்கள் எவராயினும் அவர்களால் இத்தகைய சாதனைகளை செய்து காட்ட இயலும்." என அடக்கத்துடன் பதிலளித்தார். 60 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் பிரம்மசாரி அவர்களின் நடைவேகத்தை பார்த்தால் அவரது சாதனைகளின் வேகம் புரியும்.

கல்விக் கோயிலான குடிலை அறம் குடிகொண்ட குடிலை, ஈசன் உறையும் குடிலுக்கு ஈடாக நினைத்து வணங்கத் தோன்றுகிறது. அங்கு பயிலும் 12 வயதான சிறுவன் ராஜாராமன் ராமனுக்கும் ராஜாவான அவன் களிப்புடன் கூறினான், "இதுதான் எங்கள் உலகம். இங்கு நாங்கள் எல்லா வேலைகளையும் பார்க்கின்றோம். குடிலை காவல் காப்பதும் கூட நாங்கள்தான். படிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஒருவர் மாற்றி ஒருவர் வெவ்வேறு வேலைகளை பார்த்துக் கொண்டிருப்போம். காலை 4.30 முதல் இரவு 9.30 வரையாரும் தூங்க மாட்டோம். ஓய்வெடுக்க மாட்டோம்." என பெருமையுடன் கூறி முடித்தான் ராஜாராமன்.

தமிழகத்தின் அனாதைச் சிறுவர்களின் மேம்பாட்டிற்காக கலங்கரை விளக்கமாக இருக்கும் ராமகிருஷ்ண குடிலின் மகத்தான சேவையை ஓசையின்றி செய்துவரும் பிரம்மசாரி அவர்களை வானளாவப் புகழ்ந்தாலும் அது மிகையாகாது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

5. தியாகமும் சேவையும்

திட்டம் இதழில் 1971 நவம்பர் 14 ம் தேதி வெளியான கட்டுரை கீழே தரப்படுகிறது.

குழந்தைகள் தெய்வத்துக்கு சமானம் என்பது எல்லா நாட்டிலும், எல்லா ஆன்றோர்களாலும் போதிக்கப்பட்ட உண்மை. எனவே குழந்தைகளை நல்லபடி பேணி வளர்ப்பது நம் கடமை. ஆனால் ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைக் கவனிப்பார் யார்?

அவர்களது நலம் பேணுவதும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதும் மக்கள் அனைவரின் பொதுப்பொறுப்பாகும். இந்த மகத்தான பொதுப்பொறுப்பை தன்னளவில் நிறைவேற்றி பாடுபடுகிறது திருப்பராய்த் துறையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண குடில்.

புண்ணிய நதியான காவிரி நதி தீரத்தின் தென்பகுதியில் புனிதமான தெய்வத்திருக்குடில் சேவை செய்து வருகின்றது. இங்கு கல்விக்கேற்ற ரம்யமான சூழ்நிலை உள்ளது. அனாதை ஏழைச்சிறுவர்கள் ஜாதி, மத, வகுப்பு அரசியல் வேற்றுமைகளையும் பாராட்டாமல் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்தக் குடில் தோன்றிய காலம் தொட்டு இதுவரை இங்கே கொண்டு வரப்பட்ட பெற்றோர்களை இழந்த அனாதைக் குழந்தைகளை திருப்பியனுப்பியது இல்லை.

இங்கு சேர்க்கப்படும் பிள்ளைகளுக்கு உயர்நிலைப்பள்ளி வரையிலான கல்வியளிக்கப்படுகிறது. இது தவிர பல்வேறுவகையான வாழ்க்கைக்கு தேவையான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் தங்களது ஜீவனத்திற்கு தக்கபணிகளை தன்னம்பிக்கை பெற்றுச் செல்கின்றனர். பலதொழில் பயிற்சி பெற்றமையால் இவர்களுக்கு வேலையும் விரைவில் கிடைத்துவிடுகிறது.

“ஏழைகளுக்கு நன்றாக உணவளியுங்கள். எல்லோருக்கும் உடை கொடுங்கள். தலையில் தேய்த்துக் கொள்ள எண்ணெய் கொடுங்க” என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறினார். ஏழைகளுக்காகவும், மெலியவர்களுக்காகவும் ஒருவன் தன் உயிரைக் கொடுத்தால் அதைவிடச் சிறந்த தியாகம் வேறில்லை. ஏழை எளியவர் சேவைதான் தெய்வத்துக்கு உண்மையான வழிபாடாகும். இதைத் தான் நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன என்றார் விவேகானந்தர்.

“என் சகோதரர்களில் மிகச்சிறந்த இவர்களுக்கு நீங்கள் என்ன உதவி செய்திருக்கிறீர்களோ அது எனக்கு செய்த உதவியாகும்.” என்றார் ஏசுபிரான்.

இந்தக் குடிலைப் போன்ற நிலையங்கள் நாடெங்கும் ஏற்படுமானால் சர்வோதய லட்சியம் நிறைவேறிவிடும் என்கிறார் ஸ்ரீஜெயப்பிரகாஷ் நாராயணன்.

இக் குடிலில் சேருகிறவர்கள் எல்லோரும் வாழ்க்கையின் லட்சியம், ' தியாகமும்' சேவையுமே' என்பதை உணரும்படி உருவாக்கப்படுகின்றனர்.

இங்கே ஏழை எளியவர்களிடம் நாம் தெய்வத்தை காண்கிறோம்.

6. அனாதைக் குழந்தைகளுக்கு அரிய வாய்ப்பு

1.6.1995 ' பாக்கியா' வார இதழில் வெளிவந்த கட்டுரை

அப்பா, அம்மா இல்லாத ஏழை அனாதை சிறுவர்கள் உங்களுக்கு தெரிந்து யாராவது இருக்கிறார்களா?

பரிதாபகரமான அந்தக் குழந்தைகளுக்கு நீங்கள் ஏதாவது உதவி செய்ய விரும்புகிறீர்களா?

உடனே ஸ்ரீராமகிருஷ்ண குடில், திருப்பராய்த்துறை , திருச்சி மாவட்டம் 639 115 என்ற முகவரிக்கு அந்தக்குழந்தையைப் பற்றிய விபரங்களை எழுதிப் போடுங்கள்.

அந்த நிமிடத்திலிருந்து இருண்டுபோன அந்த அனாதைக் குழந்தைகளின் வாழ்க்கையில் வெளிச்சம் பரவ ஆரம்பித்துவிடும். நீங்கள் சேர்த்த அனாதைச் சிறுவனுக்கு உணவு,உடை, இருப்பிடம், கல்வி, மருத்துவம் போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறது ராமகிருஷ்ண குடில். இந்த அமைப்பில் சேர்ந்தவுடன் அந்த சிறுவனுக்கு ஆயிரம் ரூபாய் சேமிப்பு நிதியாக போட்டு வைத்து விடுகிறது. அப்பா அம்மா ஓடியாடி சம்பாதிக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பத்தில் கூட ஒவ்வொரு குழந்தையின் பேரிலும் ஆயிரம் ரூபாய் வைப்பு நிதியாக போட்டு வைப்பதில்லையென்பது கண்கூடு.

அவனது பள்ளிப்படிப்பு முடிந்ததும் திருச்சி ஐ.டி.ஐ தொழிற்பயிற்சிக் கூடத்தில் அவன் சேர்க்கப்படுகிறான். இதற்கான குடில் மாணவர்களுக்காகவே சிறப்பாணை மூலம் 10 இடங்களுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். புரட்சித்தலைவர் அவர்கள் இந்த அமைப்பிற்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயினை ஒரு கலைநிகழ்ச்சியை நடத்திக் கொடுத்திருக்கிறார்.

ஒரு மாணவன் படிப்பை முடித்து வெளிவாழ்க்கைக்கு போகும்போது ஆரம்பத்தில் அவன் பெயரில் போட்ட ஆயிரத்தை பத்தாயிரமாக வங்கி அவன் கையில் கொடுக்கிறது. புரட்சித்தலைவரை போன்ற வள்ளல்தன்மை நிறைந்தவர்களால் இந்த அமைப்பிற்கு போதுமான பொருளுதவி கிடைத்து விட்டதால் இனி நன்கொடைகள் அனுப்பவேண்டாம் என்று இந்த ராமகிருஷ்ண குடில் அன்புக்கட்டளை இடும் நிலைக்கு வந்துவிட்டது.

பொது சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அமரர் வினோபாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், காமராஜர், அண்ணாதுரை, புரட்சித் தலைவர் போன்ற நல்லோர்கள் எல்லாம் இந்த அமைப்பான ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு

நேரில் வந்து இதன் நல்லபணிகளை பார்த்து மனமார பாராட்டி இருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் ஒரே லட்சியம் தாய் தந்தை இருவருமே இல்லாத அனாதைச்சிறுவர்கள் நாட்டில் இனி இல்லை என்ற நிலையை உருவாக்குவதுதான்.

இத்தகைய அரிய சேவையை தனது உயிர் மூச்சாக கருதி சேவை செய்து வரும் உத்தம ஞானியாம் பிரம்மசாரி ராமசாமி அவர்களை நடமாடும் தெய்வமாக தமிழ்நாடு வணங்கும் என்பதில் மாற்று அபிப்ராயம் இருக்க முடியாது அல்லவா?

7. யாருமிங்கு அனாதைகள் இல்லை. அனைவரும் ஆண்டவனின் குழந்தைகள்

7.6.1995 தேதியிட்ட ' தேவி ' வார இதழில் குடிலைப்பற்றி வெளிவந்த கட்டுரை தரப்பட்டுள்ளது.

திருச்சி கரூர் நெடுஞ்சாலையில் காவிரிகரை ஓரமாக உள்ள ஊர் திருப்பராய்த்துறை. இவ்வூரின் எல்லையிலிருப்பது ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்ற தாய்தந்தையரற்ற அனாதை சிறுவர்களுக்கான புகலிடம். ஜாதி மத பேதமின்றி அனாதைகளுக்கு அடைக்கலம் தந்து அவர்களுக்கு கல்வியறிவு புகட்டுகிறது.

சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் அழகிய கட்டடங்களை கொண்டு குடில் அழகிய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது. இதனை ஒரு புனித துறவியின் எண்ணத்தின் விளைவாக அவரது விடாமுயற்சியின் காரணமாக தோற்றுவிக்கப்பட்டது என்றால் வியக்காமல் இருக்க முடியவில்லை.பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவரது சீடர் விவேகானந்தர் ஆகியோரின் போதனைகள் அடிகளாரை ஈர்த்தன. இதன் காரணமாக வெளிப்பட்டதுதான் அனாதை மக்கள் சேவை.

1949 ம் ஆண்டு திருப்பராய்த்துறை வந்து சேர்ந்த சுவாமிகள், காவிரிக்கரையோரம் உள்ள ஒரு தோப்பில் தங்கி தியானத்தில் ஆழ்ந்தார். ஐந்தாண்டுகளுக்கு இத்தவநிலை நீடித்தது. சுவாமிகளின் திருஉருவைக்கண்ட அந்த கிராமமக்கள் அவருக்கு அங்கேயே ஒரு ஆஸ்ரமம் அமைக்க உதவி புரிந்தனர். ஆரம்பத்தில் 5 அனாதை மாணவர்களைக் கொண்டு முதலில் பள்ளி தொடங்கப்பட்டது.

இதன் பின்னர் மாணவர் அதிக அளவில் சேர ஆரம்பித்தனர். பொருளாதார வசதி அதிகம் தேவைப்பட்டது. அடிகளார் காமராஜரிடம் உதவி கோரி வேண்டுகோள் விடுத்தார். முதலமைச்சர் காமராஜரின் உத்திரவுப்படி ஊராட்சி ஒன்றியங்களின் உபரிநிதி இந்த குருகுலத்திற்கு கிடைத்தது.

இங்கு பள்ளிப்படிப்புடன் தொழிலும் கற்க வேண்டும் என்று சுவாமிகள் விருப்பம் கொண்டார். அதற்காக தொழிற்கூடம் ஒன்றும் கட்டப்பட்டது. 1967 ம் ஆண்டு தொழில் பயிற்சி தொடங்கிற்று.

அந்த விழாவிற்கு தலைமை வகித்தவர் அன்றைய சபாநாயகர் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார். மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிற்கூடத்தை தொடங்கி வைத்தார்.

மறைந்த பிரதமர்கள் நேருஜி, இந்திராகாந்தி, விஞ்ஞான மேதை ஜி.டி.நாயுடு, எம். ஜி. ஆர் ஆகியோரும் குடிலுக்கு நன்கொடையளித்துள்ளார்கள். ஆனால் 1974 ம் ஆண்டிற்கு பின்னால் சுவாமிகள் நன்கொடை பெறுவதை நிறுத்திக்கொண்டார்.

குடிலில் 5000 தென்னை மரங்கள் உள்ளன. தேங்காய்கள் மூலம் வரும் லட்சணக்கான ரூபாய் வருமானமும் ஏற்கனவே பெற்ற நன்கொடைகளும் போதுமானது என்று சுவாமிகள் நினைத்ததே இதற்கு காரணம்.

குடிலில் ஒன்று முதல் எட்டு வகுப்புகள் வரை அனாதை சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தற்போது 245 மாணவர்கள் படிக்கின்றனர். 500 சிறுவர்களை படிக்க வைக்க இயலும். ஆங்காங்கே அனாதை மாணவர்கள் இருந்தால் அவர்களை பொதுமக்கள் இங்கு அனுப்பி வைத்து உதவி செய்ய வேண்டும்.

2000 ம் ஆண்டில் குடிலில் 50 ம் ஆண்ட பொன்விழா நடக்க இருக்கிறது. அப்போது இந்தியாவிலுள்ள பலதமிழ் சங்கங்களுக்கும் இந்த விழாவில் கலந்து கொள்ள அழைப்பு விடுப்போம். அவர்கள் பகுதிகளில் உள்ள அனாதை சிறுவர்களை குடிலில் சேர்க்க ஆவன செய்யுமாறு அவர்களிடம் கோருவோம்.

அடுத்தபடியாக பிஜிஉட்பட பல உலக நாடுகளில் இருக்கும் அனாதை சிறுவர்களையும் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்வோம். பள்ளிப்படிப்பு வரை ஒரு மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் ஐ.டி.ஐ. பயிற்சிக்கு ரூபாய் 20 ஆயிரம் செலவாகும். ஒரு மாணவன் முதல் வகுப்பில் சேரும்போது அவனது பெயரில் ரூபாய் ஆயிரம் வைப்புத்தொகையாக பேங்கில் போடப்படுகிறது. அந்த மாணவன் ஆஸ்ரமத்தை விட்ட வெளியேறும் போது ரூபாய் 10 ஆயிரமாக பெருகிவிடும். ஆக ஒரு மாணவனுக்கு இந்த நிர்வாகம் எண்பதாயிரம் செலவு செய்யத் தயாராக இருக்கிறது என்றார் சுவாமி அவர்கள்.

இந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரைதான் இருக்கிறது. பிளஸ் டூ வகுப்பு வரை இருந்தால் அரசுப்பணிகளில் சேர அவர்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்குமே என்று சுவாமிகளிடம் கேட்கப்பட்டது.

அதற்கு சுவாமிகள் இந்தப்படிப்பு அவர்களுக்கு போதுமானது. இங்கு பல்வேறு பணிகளை கற்று, தொழில் கல்வியையும் கற்று வெளியேறும் இந்தக் குடிலின் குழந்தைகள் வேறு யாரிடமும் கைகட்டி நிற்பதை நான் விரும்பவில்லை. அவர்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதே என் எண்ணம். அதற்காக

ஊக்கமும் ஆக்கமும் தகுதியும் அவர்களிடம் உள்ளது. யாரும் இங்கே அனாதைகள் இல்லை. அனைவருமே ஆண்டவனின் பிள்ளைகள் என்றார் ராமசுவாமி சுவாமிகள். அவர்களுக்கு ஆவன செய்ய குடில் அன்பர்கள் பலருண்டு.

ஒரு சர்வோதய அன்பர், " எனக்கு ஏதாவது ஸ்தலத்திற்கு சென்று வரவேண்டும் எனத்தோன்றினால் குடிலுக்கு வந்து அடிகளாரிடம் பேசுவேன். ஒப்பற்ற ஓர் ஸ்தலத்திற்கு போய்வந்த நிம்மதி மனதிற்கு ஏற்பட்டு விடும். பகவான் ராமகிருஷ்ணரின் தெய்வீக சாந்நித்யம் குடிலில் உறைவதை மனதால் உணரலாம்.

இத்தகைய மகத்தான நிலையை உருவாக்கித் தந்த தவத்திரு அடிகளாரின் வாழ்வில் விதி தனது கரங்களை மெதுவாக நீட்டத் துவங்கியது.

8. பிறர்க்கென வாழும் பெரியோர்களால்தான் உலகம் நிலைத்திருக்கிறது

9.8.1967 அன்று கல்வி, தொழிலியல், அறநிலையப்பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய உரை. கிராம ராஜ்யம் பத்திரிக்கையில் வெளிவந்தது.

திருப்பராய்த்துறை அழகுமிக்க ஊர். அந்த அழகு மிக்க ஊரில் காவிரிக்கரையில் அழகான ஒரு சூழ்நிலையில் உருவாகி சிறந்த பணியாற்றிக் கொண்டிருக்கும், இக்குடிலை பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி.பலமுறை இதை பார்வையிட பல நண்பர்களால் நான் வற்புறுத்தப்பட்டு அந்நினைவால் நீண்ட நாட்களாக இக்குடிலை பார்வையிட வேண்டுமென்ற ஆவல் இதுவரை நிறைவேறாமலிருந்தது. இந்தப் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்ற போது கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பை அன்புக்கட்டளையாய் ஏற்றுக் கொண்டு பார்வையிட்டேன். பூரிப்படைந்தேன். மிக்க பெருமைப்படுகின்றேன்.

மகத்தான பணி :

திக்கற்றவர்களுக்கு தாய் தந்தை அற்றவர்களுக்கு வாழ்வு அமைத்துக் கொடுத்து அவர்களை ஆளாக்கும் பொறுப்பு மகத்தானது. இன்று அவர்கள் சிறுவர்கள். ஆனால் அவர்கள் நாளைய நல்ல குடிமக்கள். இச்சீரிய பணியை ராமசாமி அடிகளார் மிகச்சிறப்புடன் செய்து வருகின்றார். இன்றைய நிலையில் இச்சீரிய பணியை அரசு நினைத்தாலும் இந்த அளவிற்கு செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

உண்மை, தூய நோக்கம், நேர்மை, நாணயம் இவைகள் வேண்டும். இவைகளை செம்மையுற அமைத்துக்கொண்டிருக்கிறார் அடிகளார். நல்ல எண்ணம் சீரிய நோக்கம், நாணயம், நேர்மை இவைகளால்தான் பணியினை மிகச்சிறப்புடன் நிறைவேற்ற முடியும் என்பதற்கு இக்குடில் ஒரு உதாரணமாக

விளங்குகிறது. நான் சுற்றிப் பார்த்துக் கொண்டே வரும் போது ராமசாமி அடிகளார் மாணவர்களின் பணிகளை எல்லாம் விளக்கிக் கொண்டே வந்தார். தங்கள் தங்கள் காரியங்களை தாங்களே செய்து வருவார்களேயானால் உலகம் மிகச்சிறப்புடன் விளங்கும் என்பதற்கு இம்மாணவர்களின் உழைப்பு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

சிறந்த எடுத்துக்காட்டு :

இங்கு அவரவர் காரியங்களை அவரவர்களே செய்கின்றனர். கல்வி எப்படியமைய வேண்டும் என்பதில் மற்ற பள்ளிகளுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறதை எண்ணி பூரிப்படைகின்றேன்.

இந்த அழகான அமைப்புகளுக்கெல்லாம் எவ்வளவு செலவாயிற்று? என்று அடிகளாரிடம் கேட்டேன். இக்குடில் அனாதை மக்களின் சேவையை ஏற்றுக் கொண்டதிலிருந்து சுமார் 31 லட்சம் ரூபாய் செலவு என்று அவர் சொன்னார். எனக்கு மிக்க மகிழ்ச்சியை தந்தது. மிகச்சிறப்பான முறையில் இது அமையப் பெற்றிருப்பதை எண்ணி பெருமைப்படுகிறேன். அரசு இக்காரியங்களை செய்வதாக இருந்தாலும் 75 லட்சம் செலவாகும். அப்படிச் செலவு செய்தாலும் பயனில்லாத அளவில்தான் செய்யும்.

உண்மை கலையுணர்ச்சி, நேர்மை வேண்டும் :

இக்குடிலில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் மிக அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. இது மற்ற பள்ளிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு. இப்படி அமைய உண்மை வேண்டும். நேர்மை வேண்டும். கலையுணர்ச்சி வேண்டும். இவைகள் அனைத்தும் அடிகளார் அவர்களிடத்தில் குடிகொண்டிருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் நல்ல குடிமகனாக வரவேண்டுமானால் ராமசாமி அடிகளார் போன்றவர்கள் கையில் ஒப்படைக்கப்பட வேண்டும். திக்கற்ற தாய் தந்தையரற்ற குழந்தைகளுக்கு ராமசாமி அடிகளாரின் தொண்டு போற்றுதற்குரியது. தனக்கென வாழா அவர்களைப் போன்றவர்களால்தான் உலகம் நிலைக்கிறது. இதையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லி வைத்திருக்கின்றார்கள் புறநானூறு என்ற இலக்கியத்தில். அது

“ தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென
முயலுருண் மையானே” என்பதாகும்.

உலகம் நிலை பெற்றிருக்க காரணம்:

ஏன் இந்த உலகம் நிலைபெற்றிருக்கிறது? தமக்கென வாழா பிறர்க்கென வாழும் பெரியோர்கள் இல்லாமல் போய்விடுவார்களேயானால் இவ்வுலகமே அழிந்து விடும்.

நல்ல உழைப்பு அதன் துணையாக ஆற்றல் இவ்விரண்டையும் ஒருங்கே தரும் இந்த ராமசாமி அடிகளாருக்கு நான் மனமார்ந்த வணக்கத்தை செலுத்துகின்றேன். இங்கிருந்து படித்து வெளியேறும் மாணவன் தான் பிறந்த இடத்திற்கு சிறப்பையும், வளர்ந்த இடத்துக்கு சிறப்பையும் தான் பிறந்த இனத்திற்கு பெருமையும், உலக அரங்கிலே தன் நாட்டின் பெருமையும் நிலைநாட்டி சிறந்த உலகை உருவாக்க வேண்டும்.

இவ்வழகான சூழ்நிலை சிறப்புற அமைந்திருக்கும் இந்த சூழலை இன்னும் விரிவடைந்து எதிர்காலத்தில் கல்லூரியாக மாறக்கூடிய சூழ்நிலையும் இங்கு அமைந்திருப்பதால், அகில உலகிலும் உங்கள் ஆற்றல் வளர்ந்து சிறந்தோங்க வேண்டுமென விரும்புகிறேன். இதன் வளர்ச்சியில் தமிழக அரசு உறுதுணையாக இருந்து ஆவன செய்யும் என்று உறுதிகூறுகிறேன்.

கூட்ட முடிவில் புதுவைத் தலைமை நீதிபதி திரு. மகராஜன் அமைச்சருக்கு நன்றியுரை தெரிவித்தார்.

(25.08.1967 கிராமராஜ்யம் பத்திரிக்கையில் வெளிவந்தது)

9. குடில்

திரு. குமரி அனந்தன், "வாரியாரைக் கண்டகண்கள்" என்ற நூலில் குடிலைப்பற்றி எழுதிய கட்டுரை

கடல் தன் அலைகரங்களால் நுரைப்பூவை எடுத்து அர்ச்சனை செய்ய விவேகானந்தர் அமர்ந்த இடம் குமரிக்கடலின் பாறை.

இன்று அதில் எழிலும் ஏற்றமும் கொண்ட நினைவுச்சின்னம் தோற்றமளிக்கிறது. ஒருவர் அமர்ந்திருந்த இடத்தில் உலகின் பலதிசை மக்களும் வந்து அமர்கிறார்கள். தியானிக்கிறார்கள்.

அதைப்போல காவிரிக்கரையோரம் ஓலைக்குடில் அதிலமர்ந்து தமது எளிய தொண்டை தொடங்கினார் ராமசாமி அடிகள். இன்றோ பிரதமரிலிருந்து பாமரரும் போற்றும் ராமகிருஷ்ண குடில் எழுச்சியுற நிமிர்ந்து நிற்கிறது.

திருப்பூர் திரு. கந்தசாமி (O.K. TEX) அவர்களிடம் கார் பெற்று திருச்சி வந்தேன். திருச்சியிலிருந்து சிதம்பரம் போக வேண்டும். பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு, மறுநாள் தொடக்கம். திருப்பராய்த்துறை சென்று ராமகிருஷ்ண குடிலை பார்த்து அடிகளாரை சந்தித்து வாரியார் சுவாமிகளின் தொடர்பை அறிந்து திரும்பவேண்டும். நண்பர்கள் முருகானந்தமும், தியாகராஜனும் ரயிலடிக்கு சென்று பிற்பகல் 2 மணிக்கு திருப்பதி விரைவு வண்டியில் பயணச்சீட்டு வாங்கி வந்தனர். அண்ணன் தென்னூர் கிருஷ்ணனோடு திருப்பராய்த்துறை சென்றோம். அரசுப் பணியாற்றி ஒய்வு பெற்ற நிலையில் குடிலுக்காக ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் முன்னாள் அதிகாரிகள் இருவரும் வரவேற்றனர்.

சிலையைக்கண்டால் சாலையைக் காணோம்:

ராமகிருஷ்ணரின் பிரம்மாண்டமான திருஉருவம் சாலையில் இடப்புறத்து கட்டடங்களுக்கு மத்தியில் காட்சியளித்தது. குமரி மாவட்டம் மைலாடியில் செதுக்கியது. சாலையின் வலது புறத்துக்கு சென்றோம். வாய்க்கால் பாலம். அதைத் தாண்டி பழைய ஓலைக்குடில் இருந்த இடத்தில் அதே அளவான சிறுகட்டடம். ராமசாமி அடிகள் அதில் அமர்ந்து பணிகளைக் கவனிப்பார். அங்கிருந்து பார்த்தால் ராமகிருஷ்ணர் சிலை அந்த வளாகத்திற்குள் இருப்பது போலவே தெரிகிறது. இடையில் ஓடும் சாலை கண்ணுக்குத் தெரிவதில்லை. அந்த அளவு பீடம் அமைத்து அதில் ராமகிருஷ்ணர் சிலை காட்சியளிக்கிறது.

அடிகளார் மாணவர்களை காணச் சென்றிருந்தார். அதற்குள் வளாகத்தை சுற்றிப் பார்ப்போம் என்றார்கள். காவிதரித்து நின்றவை கட்டடங்கள் மட்டுமல்ல தென்னை மரங்களும்தான். செழித்து கொழித்து நிற்கின்றன. அடிமரத்து நிலம் நன்றாகக் கொத்தி கிளரப்பட்டிருக்கிறது. மரங்களுக்கு இடையில் தண்ணீர் செல்ல சிறுசிறு, நீர் செல்லும் பாத்திகள். நீண்ட ஓலைகளால் வீசிக் கொண்டேயிருக்கும் தென்னை மரங்களை அண்ணாந்து பார்த்தால் கொத்துக் கொத்தாக தேங்காய்கள். ஒரு கவிஞன் கூறியது போல சோற்றுப் பொட்டலங்களோடு நிற்கும் வழிப்போக்கனைப் போல காட்சியளித்தன. இந்த உவமை ஒருவகையில் உண்மையானது. ஏனெனில் வாழவகையற்றுத் திகைத்த எத்தனையோ பெற்றோரற்ற குழந்தைகளுக்கு இவை சோறு கொடுக்கின்றன. என் கையில் கொடுத்த அச்சிட்ட தாளைப் பார்த்தேன். சிறுவர்களை தேர்ந்தெடுக்கும் விதிகள் என்ற தலைப்பு.

காமராஜ் நட்ட மரம்:

நண்பர்கள் கைக்கெடியாரத்தை பார்த்துக் கொண்டே வந்தார்கள். ராமசாமி அடிகளாரை இன்னமும் பார்க்க முடியவில்லை. ஆனால் அவருடைய உள்ளத்தை அங்குள்ள மரங்களிலும், கட்டடங்களிலும் இடையிடையே காட்சி தரும் மாணவர் ஆசிரியர்களிடையே காண முடிந்தது. எனவே அவரை நேரில் கண்டு பேசும்பேறு கிடைத்தபோது ரயில் நேரத்தை சிந்திப்பதில் பயனில்லை என உணர்ந்தேன்.

நண்பர்களிடம் அப்போதே ‘ பகல்ரயிலை சிந்திக்க வேண்டாம். இரவில் பார்த்துக் கொள்ளலாம்’ எனக் கூறிவிட்டேன்.

பல தலைவர்கள் தங்கள் வருகையின் நினைவாக நட்ட மரங்கள் நிற்கின்றன. பெருந்தலைவர் காமராஜர் நட்ட மரம் என்ற அறிவிப்போடு உயர்ந்து நின்ற மரம் 24.6.1955 என்று நாளைக் காட்டிற்று.

அடிகளார் வந்து அவரது இருக்கையில் அமர்ந்துவிட்டதாக கூறினார்கள். உள்ளே போனோம். இமயப்பனியிலிருந்து அளவெடுத்து தைத்தது போன்ற வெள்ளாடை உடல் முழுவதையும் மறைத்திருந்தது. எளியவர்களுக்காக உருகும் குணம் அவர் தோற்றத்திலே வெளிப்பட்டது.

காமராஜர் அவர்கள் முதலில் இங்கு வந்தபோது, “ உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்.” என்று கேட்டார்.. “ சென்னைக்கு வருவதுண்டல்லவா” எனவும் கேட்டார். “ எக்மோரில் இறங்கி இந்த எண் பஸ்ஸைப்பிடித்தால் திருமலைப்பிள்ளை விடுதிக்கு வரலாம் என்றார்.

பஸ் எண், நிற்கும் இடம். இதெல்லாம் காமராஜ் சொன்னது எளியவர் எளியவருக்கு வழிகாட்டுவதாகவேயிருந்தது. ஆனால் அவர் வகித்த பதவி? முதல்வர் பதவி அவரது எளிமையை சிதைக்கவில்லை.

காமராஜரின் உடனடி நடவடிக்கை :

“ சென்றேன். பலர் மத்தியில் இருந்தார். என் பெயர் அட்டை உள்ளே சென்றதும் அழைத்தார். எங்களை தனிமைப்படுத்திக் கொண்டார்?. . நான் குடில் பற்றிக் கூறினேன் உதவும் வழி கேட்டார். சொன்னேன். ‘பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் நன்கொடையளிப்பதின் மூலம் உதவலாம்”.

வாரியார் சுவாமிகளைப்பற்றி கேட்டோம். அதற்கு அடிகளார், “ அவர் மும்மூர்த்திகளில் ஒருவர் “ ஆம். மாவட்ட ஆட்சித்தலைவர் R.S. மலையப்பன், ஜஸ்டிஸ் மகராஜன், வாரியார் சுவாமிகள் மூவருமே இந்த குடிலை வளர்ப்பதற்கு இடைவிடாது தொண்டு புரிந்தார்கள்.

வாரியார் – குடில் மாணவர்:

வாரியார் எந்த அளவு ஈடுபட்டிருந்தார் என்பதற்கு ஒரு சம்பவம் சொல்லுகிறேன். ஈரோட்டிலிருந்து சில அன்பர்கள் குடிலுக்கு வந்தார்கள். மரங்களிலிருந்து இளநீர் கொய்து சீவிக் கொடுக்க மாணவர்கள் தயாராயினர். சுவாமிகளோ தாமே அப்பணியைத் தொடங்கினார். வந்த அன்பர்களோ, “ இதென்ன சுவாமி நீங்கள் . . . என்று தயக்கத்தோடு தடுக்க முனைந்தார்கள்.

வாரியார் சொன்னார், “நான், இந்த குடிலின் மாணவன்” அவ்வளவு ஈடுபாடு சுவாமிகளுக்கு. தாப்பா ரெட்டியார்தான் வாரியார் சுவாமிகளை எங்களுக்கு அறிமுகம் செய்தார்கள். ஒரு மாணவனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவை வாரியார் சுவாமிகள் தந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் குடில் ஆண்டு விழாவிற்கு தவறாமல் வந்து சொற்பொழிவாற்றுவார்கள். பண்டித நேருவே, இதற்கு நன்கொடையளித்திருக்கிறார் என்பதை உங்களுக்கு சொல்ல வேண்டுமே எனக்கூறி சுவாமிகள் ஒரு கடிதத்தை கொடுத்தார்.

நேருவால் அனாதை ஆஸ்ரமம் – குடிலானது :

மடித்திருந்த கடித நகலை பிரிக்கும் போதே, ‘ குடில்’ என்று பெயர் வருவதற்கு காரணம் நேருதான். அதற்கு முன்பு அனாதை ஆஸ்ரமம் என்று பெயர் என்றார் அடிகளார். கடிதத்தை படித்தேன். மனித நேயத்தில் நேரு ஒரு மேரு என்பதை அக்கடிதம் எடுத்துக்காட்டியது. ஶ்ரீநகர் சாஸ்மாசாஹி’ என்ற இடத்தில் முகாமிட்டிருந்த போது ஜூலை 6 ம் தேதி 1960ல் எழுதிய கடிதம் அது.

Dear Brahmachariji

I have your letter of the 29th June. I am glad to know of the good work that your institution is doing. May I suggest that the word " Orphanage" should be used in connection with it; It has a bad psychological effect for the child to be reminded that he is an orphan.

கடிதத்தின் தமிழாக்கம்:

அன்புள்ள பிரம்மசாரி அவர்களே!

ஜூன் 29 ம் நாள் தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் நிலையம் ஆற்றி வரும் நல்ல தொண்டுபற்றி அறிந்து மகிழ்கிறேன். இது தொடர்பாக அனாதை இல்லம்" என்ற சொல்லை பயன்படுத்தக்கூடாது என்ற என் கருத்தை தெரிவிக்கலாமா? இச்சொல் அனாதை என்பதை நினைவூட்டி ஒரு தீய மனோநிலையை அக்குழந்தைகளிடம் விளைவிக்கும்.

(ஒ.ம்) ஜவஹர்லால் நேரு.

இக்கடிதம் வந்தவுடன் நேருவின் கருத்தை ஏற்றுக்கொண்டு குடில் என்று மாற்றினோம். ஆகஸ்ட் 19 ம் தேதி நேருவிடமிருந்து 5000 ரூபாய்க்கான காசோலை வந்து சேர்ந்தது.

வாரியார் சுவாமிகள் எங்கு சொற்பொழிவிற்கு சென்றாலும் இங்குள்ள பெற்றோர்களற்ற குழந்தைகளை மறப்பதில்லை. " திருவருள் திட்ட நிரந்தர நிதி" என்று வாரியார் சுவாமிகள் ஏற்படுத்தினார். குடில் குழந்தை ஒன்றுக்கு ரூ 5000 வீதம் 300 குழந்தைகளுக்கு 15 லட்சம் நிதி சேர்க்க திட்டமிட்டு செயல்பட்டனர். எல்லாம் வெற்றிகரமாக நடந்தது.

குழந்தைகளோடு தீபாவளி:

வாரியார் சுவாமிகள் தீபாவளிக்கு தவறாமல் வந்து குழந்தைகளோடு குழந்தையாக அன்றைக்கு திகழ்வார்கள். இப்பக்கம் எங்கு சென்றாலும் குடிலில்தான் தங்குவார்.

" வயலூரில் ஒரு முருகன். குடிலில் 300 முருகன்கள்" என்று வாரியார் சுவாமிகள் அடிக்கடி குறிப்பிடுவார்கள் என்று ஒரு அன்பர் கூறியது நினைவிற்கு வந்தது.

அடிகளார் தொடர்ந்தார். அப்போது வெளியே ஒருவர் தட்டில் சிறு இனிப்பு உருண்டைகள் ஏந்தி நின்றார். அடிகளார் ' என்ன?' என்றார்.

ரயிலுக்கு போகவேண்டுமாம். அதனால் இனிப்பாவது சாப்பிடட்டும் என்று"

" என்னது? இங்கே சாப்பிடாமல் போவதாவது இன்று அவர்கள் வந்திருப்பது அம்மாவின் பிறந்த நாளல்லவா? (சாரதாமணிதேவியார்)

“ சுவாமி. . நான் உள்ளே அடியெடுத்து வைக்கும் போதே இந்த ரயிலுக்கு போவதில்லை என்று முடிவெடுத்துவிட்டேன். குடிலில் சாப்பிட்டு விட்டுத்தான் செல்வோம்” என்றேன். “ சுவாமிகள் புன்னகைத்தவாறு தொடர்ந்தார்கள்.

வாரியார் சுவாமிகள் உடல் நலம் சரியில்லை. எனவே அவர்கள் வைத்தியம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினோம். வாரியாரோ அங்கே நிகழ்ச்சி. இங்கே நிகழ்ச்சி என்றே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

“ நாங்கள் மிக்க கண்டிப்புடன் மருத்தவம் பார்த்து உடலை சீர் செய்ய வேண்டும்.” என்று கூறிவிட்டோம். கோவையில் இருக்கும் கோட்டக்கல் ஆயுர்வேத வைத்யசாலைக்கு அனுப்பி வைத்தோம்”

முருகானந்தம் இடைமறித்தார். “ அப்போது கூட மிகவும் வற்புறுத்தி திருச்சி ஜோசப் கல்லூரிக்கு ஒரு நாள் அழைத்து வந்து திரும்பிக் கொண்டு விட்டோம்” என்றார்.

வற்புறுத்தினால் நிகழ்ச்சிக்கு சென்றுவிடும் இயல்பை எண்ணி சிரித்தவாறு அடிகளார் தொடர்ந்தார்.

வாரியார் சுவாமிகளுக்கு வேண்டி அத்தனை பொருட்களும் குடிலிலிருந்தே சென்றன. சமையல் உட்பட நம் குழந்தைகள்தாம். எல்லாம் எங்கள் மேற்பார்வைதான். உடல் ஓரளவு நலம் பெற்றது. மீண்டும் பழையபடியே இடைவிடாத சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். கடைசியாக குடிலுக்கு **17.11.1993** மாலை வந்திருந்தார்.

“ லண்டன், சுவிட்சர்லாந்து போவது பற்றி பேசினார். தீபாவளிக்கு வர முடியாமல் போகலாம். ஆண்டு விழாவிற்கு கண்டிப்பாக வந்து விடுவேன்.” எனக் கூறினார்.

நாங்களும் ஆவலோடு எதிர்பார்த்தோம். ஏனென்றால் இக்குடிலை வளர்ப்பதற்கு அவர் அரும்பாடுபட்டார். ஆனால் நிதி இனியாரும் அனுப்ப வேண்டாம் என்று நாங்கள் 1.4.75ல் இருந்தே அறிவித்து விட்டோம். அந்த அளவு நிதி சேர்ந்து விட்டது.

உலகில் இது ஓர் அற்புதம். அதைவிட அற்புதம் நிதி வேண்டாம் என்பது” என்றோம்.

பெற்றோர்களற்ற குழந்தைகளை பெற்றால் மகிழ்வோம் :

அனுப்பலாம். நிதியை அல்ல. பெற்றோரற்ற குழந்தைகளை. நீங்கள் எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம். பெற்றோர் இல்லாத குழந்தைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு சவாலாகவே யார் வேண்டுமானாலும் எத்தனை குழந்தைகளையும் அனுப்பலாம். இனிமேல் இந்தியாவின் எந்த மூலையிலிருந்தும் தமிழ்க்குழந்தைகள் வரலாம். அடுத்த கட்டம் உலகின் எப்பகுதியிலிருந்தும் தமிழ்க்குழந்தைகள் வரலாம்.

அடிகளாரின் மெல்லிய உடம்பின்உள்ளே ஓடும் கருணைக் கங்கையை

காண முடிந்தது. வாரியார் சுவாமிகள் வந்தால் தங்குவதெற்கென்று தனித்தவ இல்லம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வாரியார் இல்லையே என்ற ஏக்கம் அனைவர் நெஞ்சிலும் படர்ந்தது.

சாரதா அம்மையார் அவதரித்த புனித தினத்தில் நாங்கள் சென்றது இறைவன் திருஉளமே. இதற்கு முன்பு சிலமுறை முயன்று இப்போதுதான் கைகூடியது. அடிகளாரை நெஞ்சார வணங்கி விடை பெற்றோம். குடிலின் ஆன்மீகம் செய்யும் அற்புதங்கள் மனதில் கிளர்ந்தன. எங்களை உள்ளுக்குள்ளே தேடினோம். நாங்கள் கரைந்து போய் இறைவன் நாமமும் தொண்டுமே மேலோங்கி நின்றன.

வெளியே வந்தபோது உண்பதற்கு அழைத்துச் சென்றனர். சமைத்தவர்களும் மாணவர்களே. பரிமாறியவர்களும் அவர்களே. ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் போதனைகள் அட்டைகளில் பொறிக்கப்பட்டு மரங்களில் தொங்கின. தாளுண்ட நீரை தலையாலே மறக்காமல் தருகிறோம். அதை மட்டும் எடுத்துக் கொள்ளும் நீங்கள் நாங்கள் சுமக்கும் உபதேசங்களையும் எடுத்துச்சென்று பின்பற்றுங்கள் என்று கூறுவது போலிருந்தது.

சாலையை தாண்டி வந்தோம். அங்கே ராமகிருஷ்ணரின் கம்பீரமான சிலையின் பீடத்தில்

1836–1886

பிரதிஷ்டை செய்தல்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள்

திறப்பாளர் :

ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்

27–4–1975

குடில் வெள்ளிவிழா நிறைவு நாள்

என சிலையில் பொறித்திருந்த எழுத்துக்களை கண்டோம். எழுத்தில் இருப்பவர்கள் எழுந்து வரமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு காரில் ஏறினோம்..

10. துறவி ராமசாமி அடிகள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 31.12.1967 ம் தேதி
குடில் ஆண்டு விழாவில் ஆற்றிய உரை

நம்முடைய பெருமதிப்பிற்குரிய ராமசாமி அடிகள் அவர்கள் அரிய முறையில் அமைத்து எளிய முறையில் நடத்திக்கொண்டு வருகின்ற இந்த ராமகிருஷ்ண குடிலை இன்றைய தினம் காணுவதற்கென நல்ல வாய்ப்பு கிடைத்ததில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நான் மிகுந்த பரபரப்புள்ள அரசியல் சூழ்நிலையில் உள்ளவன் என்றாலும் என்னுடைய உள்ளத்தின் அடித்தளத்தில், இப்படிப்பட்ட அமைதியான சூழ்நிலையிலேதான் எனக்கு விருப்பமதிகம். இந்தக்குடிலை நான் கண்ட நேரத்தில், நான் எத்தகைய அமைதியான இனிய சூழ்நிலையை மனதில் வைப்பதற்குத் தேவை என்று நான் எண்ணுகின்றேனோ அப்படிப்பட்ட இனிய நல்ல சூழ்நிலை இங்கு அமைந்திருப்பது கண்டு முதலிலே மிக மகிழ்ச்சி அடைந்திருக்கின்றேன்.

எப்புறத்திலே பார்த்தாலும் பசுமை நல்ல விதத்திலே தெரிகிறது. பசுமைக்கு இடம் அளிக்கின்ற வாய்க்கால்கள், இன்னொரு புறத்திலே பசுமையை அள்ளித் தருகின்ற காவேரி. என்னே இத்தகைய அருமையான சூழ்நிலை இங்கு அமைந்திருக்கிறது.

இந்த இடத்தை தேர்ந்து எடுத்ததிலிருந்து ராமசாமி அவர்களுடைய மனப்பான்மையை நல்ல விதத்திலே நாம் புரிந்து கொள்ளுகிறோம். இத்தகைய அருமையான சூழ்நிலையில் 300 க்கும் மேற்பட்ட சிறார்கள், திக்கற்றவர்கள் பெற்றோர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டாலும் பெற்றோர்கள் அற்றுப் போய்விட்டதாலும் சமூகத்திலே அவர்கள் வாழ்வதற்கு வழியின்றி அலைந்து திரிகின்ற நிலையிலே இருந்து அந்த சிறார்களை காத்து அவர்களை குடிமக்களாக மாற்றியமைக்கின்ற பெரிய பொறுப்பினை ராமசாமி அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர்கள் உண்மையிலேயே அவர்களுடைய உள்ளத்தினுடைய பண்பாட்டினை நல்ல முறையிலே விளக்கி காட்டியிருக்கின்றார்.

இத்தகைய சீரிய முயற்சிக்கு தமிழகம் நல்லமுறையிலே உதவியளித்து வரும் என்பதனை முன்னதாகவே பேசிய நமது அன்பர் கிருபானந்த வாரியார் அவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் தமிழகத்தில் நல்ல காரியத்திற்கென்று நல்லோர்கள் மக்களை நாடுகின்ற நேரத்தில் இல்லை இல்லை என்று சொல்லுகின்றவர்கள் இல்லை என்றே சொல்லாம். ஆனால் கேட்டுப் பெறுவது என்பது உண்மையிலேயே வாரியார் அவர்கள் சொன்னபடி அதற்குத் தேவையான பொறுமைக்குணம், அதற்குத் தேவையான அமைதியான இயல்பு, அதற்குத் தேவையான பொறுப்புணர்ச்சி நிச்சயம் ஒரு சிலருக்குத்தான் அமைந்திருக்கின்றன.

அப்படிப்பட்ட இயல்புகளின் பிறப்பிடமாக இருக்கின்ற பிரம்மசாரி அடிகள் அவர்கள் இந்த சீரிய தொண்டில் வெற்றி பெற்றிருப்பது வியப்பிற்குரிய ஒன்று மட்டுமல்ல. மற்றவர்கள் பார்த்து பாராட்டி அவர்களும் தம்தம் துறையிலிருந்து பின்பற்றத்தக்க ஒரு சிறந்த இயல்பாகும். அவர் எடுத்துக் கொண்டிருக்கின்ற சீரிய முயற்சிகள் மேலும் பலவகையான வெற்றிகள் அளிக்கும் என்பதில் எண்னைப் பொறுத்தவரையில் ஐயப்பாடு ஏதுமில்லை.

நம் நாட்டில் அனாதைக் குழந்தைகள் காப்பாற்றுவாரற்று நல்ல சூழ்நிலை அவர்களுக்கு கிடைக்கப் பெறாததினாலே அவர்கள் பிற்காலத்தில் பல்வேறு வகையான கேடுகளை செய்து வருகின்ற சமூக நாசசக்திகளாக மாறி விடுவதை பார்க்கின்றோம்.

உணர்ச்சியை முழுமைப்படுத்தும் காரியத்தில் நண்பர் ராமசாமி அவர்கள் நல்ல முறையில் வெற்றி பெற்றிருக்கிறார் என்ற காரணத்திற்கான அவரை நான் போற்றுகின்றேன். என்னுடைய நன்றியறிதலான உணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இதற்கு இணை இதுதான். இவர்களுக்கோ மற்றவர்களுக்கோ தயக்கம் ஏற்படுத்த அல்ல. இந்த பிரச்சனையில் ஒரு சுவை இருப்பதாலே சொல்லுகிறேன். இப்படிப்பட்ட அமைப்புகள் நண்பர் ராமசாமியை போன்ற தன்னலமற்றவர்களாலேதான் நடத்திச் செல்ல முடியும்.

தன்னலமற்ற உழைப்பின் தாயகம் குடில், இத்தகைய அமைப்புகள் பாழ்படாமலிருக்க வேண்டுமானால் நாம் நம்முடைய நண்பர் ராமசாமியை பாராட்டுவதும், போற்றுவதும் மட்டுமல்ல, அவர்களைப் போன்ற சீரிய தொண்டாற்றுபவர்களே தொடர்ந்து நமக்கு கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகையால் இந்த சீரிய அமைப்பை தகுந்த முறையிலே அமைத்துக் கொடுத்து அதை நிர்வாகம் செய்து கொண்டு வருகின்ற நம் நண்பர் அவர்களுக்கு தமிழக அரசு மட்டுமல்லாமல் தமிழ்ப்பெருங்குடி மக்களும் முக்கியமாக உதவி செய்வார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. விஞ்ஞானக் கருவிகள் துணை கொண்டு மனித உழைப்பை பயன்படுத்துவோமேயானால் நல்ல முறையில் நாட்டிலுள்ள வறுமை நீக்கப்படுவதற்கு தக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதை சித்தரிக்கின்ற வகையில் நம் நண்பர் ராமசாமி அவர்கள் இந்தக் கல்விக்கூடத்திலே தொழிற்கூடத்தையும் இணைத்திருக்கின்றார்கள். அதில் அவர் அமைத்திருக்கின்ற குழாய்களுக்கு தேவையான சிறு சிறு இயந்திரக் கருவிகள் வெளியில் விற்பனையாவதன் மூலம் கிடைக்கக்கூடிய ஆதாயங்களைக் கொண்டு இந்த அமைப்பை நடத்திச் செல்வதற்கு ஒரு புதிய வருவாயை உண்டாக்கிக் கொள்வதோடு இதிலே பயில்கின்ற மாணவர்கள் பிற்காலத்திலே தொழிலறிவு பெறுவதற்கும் இங்கேயே அவர்களுக்கு பயிற்சி கிடைக்கின்றது. இந்தத் தொழிற்கூடத்தை திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பு எனக்கு இன்றைய தினம் அளிக்கப்பட்டதில் நான் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றேன். அதற்கு நம் தொழில்வித்தகர் திரு. ஜி.டி. நாயுடு அவர்கள் உடனிருப்பது இந்த விழாவிற்கு தனிச்சிறப்பு அளிக்கின்றது.

அரசாங்கத் தொடர்பேயில்லாத, அறநெறியில் பற்றுக்கொண்ட அன்பர்கள் இப்படிப்பட்ட அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது

அரசுக்குக்கூட ஒரு வழியில் துணையாக அமைகிறது. ஆகையால் நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி அவர்கள் சொன்னபடி அரசின் சார்பாகவும் அரசின் அமைச்சர்கள் சார்பாகவும் இந்த அமைப்புக்கு எந்தெந்த வகையிலான உதவிகள் செய்யப்பட வேண்டுமோ அவற்றிலே நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருவோம் என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய ஆசைகளை அடக்கிக் கொண்டு அடுத்த தலைமுறைக்கு வசதியை தேடிக்கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட மன அடக்கத்தை அப்படிப்பட்ட தன்னலமற்ற தன்மையை, உழைக்கின்ற தன்மையை, இந்தக்குடில் தருவதாலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்கள் இங்கு உழைப்புத் திறமையை பெறுகின்றார்கள். அதோடு அறிவுத்திறமையையும் பெறுகின்றார்கள்.

எந்தெந்த உணர்வுகள் தேவையோ அவற்றை தக்க முறையில் பெற்று நல்ல முறையிலே வாழுகின்ற மாணவர்களுக்கு என் நல்வாழ்த்துக்களையும் அவர்களுக்கு பயிற்சியளிக்கின்ற ஆசிரியர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும், இவற்றையெல்லாம் உருவாக்கித் தருகின்ற பிரம்மசாரி ராமசாமி அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எக்கட்சியினரும் ஏற்கும் குடிலின் சேவை:

சுவாமிஜி அவர்கள் கூறுகின்றார்கள் :

" குடிலின் அனாதை மக்கட்சேவை ஆரம்பித்த காலத்திலிருந்து மாநில ஆளுநர்கள், அமைச்சர்கள் ஐ.சி.எஸ், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், அதிகாரப் பற்றற்ற தனிப்பட்ட பிரமுகர்கள் ஆகியோர் குடிலுக்கு வருகை தந்துள்ளார்கள். கிட்டத்தட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்களும் இங்கு வந்துள்ளார்கள். அவர்களுடைய, குடிலைப்பற்றிய அபிப்ராயங்களை சுருக்கமாக இங்கு குறிப்பிடுகின்றோம்.

11. பூதானத்தலைவர் திரு. வினோபாஜி அவர்கள் :

" சங்கரரின் அத்வைத கருத்து, மத்வர், ராமானுஜருடைய பக்திக் கருத்து, இயேசு நாதருடைய சேவைக் கருத்து இம்மூன்றையும் ஒருங்கே திரட்டி அமைந்தது ஸ்ரீராமகிருஷ்ணருடைய சித்தாந்தம். ஆனால் இந்த ஆஸ்ரமத்தில் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சாந்நித்யத்துடன் மகாத்மா காந்தியினுடைய கருமயோக சக்தியும் ஒருங்கே குடிகொண்டு உறைவதைக் காண்கிறேன். ஆகையால் பொறுப்புகள் அதிகம். மிகமிக மகிழ்ச்சி"

12. சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள்:

" இந்த ஆஸ்ரமம் ஆனந்தமான, ரம்யமான ஆன்மிகத்துறை சூழ்நிலையில்அமைக்கப்பட்டுள்ளது.பழங்காலபாரதத்தில்குருகுலம் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கு அந்த குருகுலத்தை நேருக்கு நேராக பார்க்கின்றோம். இந்நாட்டின் எல்லாப்பள்ளிகளும் இதே முறையில் ஏற்பட்டிருந்தால் நாட்டிற்கு நன்மை வந்திருக்கும். சர்வோதயம் என்பது இதுதான்.

13. காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள்:

" எனக்கு ஏதாவது ஒரு சமயம் ஒய்வு கிடைக்குமானால் இந்த ஆஸ்ரமத்தில்தான் தங்குவேன்"

14. தி.மு.க. தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் :

" நான் வெதுவெதுப்பான அரசியல் சூழ்நிலையில் இருப்பவனாயினும், என்னுடைய அடிமனம் இத்தகைய ஆஸ்ரமத்தை போன்ற அமைதியை நாடுகிறது."

15.அ.தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள் :

" நான் உங்களுடைய மகன். என்னை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

16. தா.மு.க. தலைவர் திருமதி. சத்தியவாணி முத்து அவர்கள் :

" சுத்தம் எவ்வளவு மனநிம்மதியை அளிக்கிறது என்பதை இந்தக்குடில் மூலம் உலகுக்கே எடுத்துக் காட்ட முடியும்"

17.தி.க. தலைவர் திருமதி. மணியம்மை அவர்கள் :

" இங்கு வந்து போனாலே மனதிற்கு ஒரு அமைதி. அடிக்கடி வந்து போக அனுமதி அளிக்க வேண்டும்."

18.தமிழரசு கட்சித் தலைவர் திரு. ம.பொ.சி அவர்கள்:

" குடிலின் அமைதியும் அழகும் என்னை பெரிதும் கவர்ந்தன. பல ஆஸ்ரமங்கள், அகதிகள் விடுதிகளை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கு நான் கண்ட அமைதியும் அழகும் அங்கெல்லாம் காணவில்லை.

19. ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் சர்.பி.டி.ராஜன்


" இப்படியும் இங்கு ஒரு ஆஸ்ரமம் இருக்கிறதா?"

20. கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள்:

" இந்தப்பக்கம் கிடைக்கும் நிலமெல்லாம் குடிலுக்கே கொடுக்கலாம்"


21. பன்றிமலை சுவாமிகள் அவர்கள்:

" செல்வந்தர்களே! பேரின்ப பெருவாழ்வு கிட்ட சுலபமான வழி குடில் தர்மத்திற்கு தனம் தாருங்கள்."




1967 – " சுவாமி விவேகானந்தர்" சிலை திறப்பு விழாக்காட்சி






இலங்கை செல்லும் முன் விமானநிலையத்தில் சுவாமிஜியும் மக்கள் கலெக்டர் திரு. ஆர். எஸ். மலையப்பன் அவர்களும்




குடில்தொழில் மையத்தில் எந்திரங்களை இயக்கி வைக்கிறார்
கோவைத் தொழில் மேதை
திரு. ஜி.டி. நாயுடு அவர்கள் (1967)



குடில் மாணவர் கூட்டம் (வகுப்பு) சுவாமிஜி உரையாற்றுகிறார்.



கெம்பநாயக்கன்பாளையம் – ஆஸ்ரமம் – அறக்கட்டளை குழுவினருடன் குழந்தைகள்



குடில் உணவு விடுதி முன்உள்ள
ஆஸ்ரம நல்வாழ்க்கை உறுதிமொழி கல்வெட்டு



தொழிற்சாலை – முன்புள்ள “ சிகாக்கோ” (பிரசங்கநிலை) “ சுவாமிஜி”
உருவச்சிலை

குடில் விழாக்கள்

1. கற்ப தருநாள் :

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் நேரடி ஆசிகளை அவரது பக்தர்கள் பெற்ற திருநாளைத்தான் ராமகிருஷ்ண பக்தர்கள் "கற்பதரு நாள்" என்ற பெயரில் கொண்டாடுகின்றனர்.

ராமகிருஷ்ண மடங்களிலும், அவரது பெயரால் இயங்கி வரும் ஸ்தாபனங்களிலும், தொண்டு ஆஸ்ரமங்களிலும் இந்நாள் வெகுவிமரிசையாக கொண்டாடப்பெறும். இந்நாள் உருவான வரலாறு பக்திரசம் மிகுந்த அற்புதமான திருநாளாகும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தொண்டைப்புண்ணால் மிகவும் வருந்திக்கொண்டிருந்த நேரம். பேச முடியாத நிலை. அவரைச் சுற்றிலும் பக்தர்கள் துயரம் தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தனர். டாக்டர் அவர் அதிகம் பேசக்கூடாது, ஓய்வில் இருக்க வேண்டும் என அன்புக்கட்டளை இட்ட போதும், குருமகராஜ் அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல், பக்தர்களிடம் ஆன்மிக விஷயங்களை பேசிக் கொண்டு பரமானந்த நிலையில் இருந்தார். ஒரு ஜனவரி முதல் தேதி சிஷ்யர்களும் துறவிச்சீடர்களும், இல்லறச்சீடர்களும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை சூழ்ந்து அமர்ந்திருந்தனர். பரமஹம்ஸரோ அனைத்தையும் கடந்த மோன நிலையில் அமர்ந்திருந்தார். பக்தர்களும் இனம் புரியாத பரவச நிலையில் மூழ்கியிருந்தனர்.

தமது உடல் நிலை, வைத்தியர்களின் எச்சரிக்கை அனைத்தையும் மறந்தார் குருதேவர். திடீரென படுக்கையிலிருந்து எழுந்தார். பக்தர்களை சுற்றி சுற்றி வந்தார். ஆனந்தக் கூத்தாடினார். பக்தர்கள் ஒவ்வொருவரிடமும் வந்து அவர்களது தலையில் தம் கையால் தொட்டார். தொட்டதுதான் தாமதம். பகவானின் ஸ்பரிசம்பட்ட ஒவ்வொருவரும் அகக்கண் பார்வை பெற்றனர். கூத்தாட ஆரம்பித்தனர். அவரவர்களின் இஷ்ட தெய்வம் எதுவோ அத்தெய்வக் காட்சியை கண்டனர். மெய்மறந்த நிலையில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

இத்தகைய உயரிய ஆன்மநிலை பக்தர்களுக்கு கைவரப்பெற்ற நாள்தான் கற்பதரு நாளாகும். ஜனவரி முதல் நாளன்று இத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. குடிலிலும் இத்திருநாள் கொண்டாடப்படுகின்றது. ஆஸ்ரமத்தின் கோவிலில் பூஜை முறைப்படி நடக்கும். சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரமக் கோவில் முன் அமர்ந்திருப்பார். யாரையும் கண்ணால் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அவரது இதயம் முழுவதும் குருதேவரின் நினைவால் நிறைந்திருக்கும். வரிசை வரிசையாக ஆஸ்ரமக் குழந்தைகள்

நின்றிருப்பார்கள். ஒவ்வொருவராக சென்று குருதேவரை வணங்கிவிட்டு சுவாமிஜி முன் கைகளை ஒன்றாகச் சேர்ந்து குனிந்து நிற்பார்கள். பரமஹம்ஸரின் அருள் ஒவ்வொருவருக்கும் கிட்டுமாறு பிரார்த்தித்த வண்ணம் சுவாமிஜி அவர்கள் மாணவர்களின் குவிந்த கையில் பிரசாதமாக மைசூர்பா கட்டியை இடுவார்கள். இவ்வாறாக ஒவ்வொருவருக்கும் பிரசாதம் கிடைக்கும்.

நமக்காக சுவாமிஜி அவர்கள் குருதேவரிடம் வேண்டிக்கொள்ளும் நாள் ஜனவரி முதல் தேதியாகும். இத்தகைய புனிதம் வாய்ந்த நாளன்று சுவாமிஜி அவர்களின் திருக்கரத்தால் பிரசாதம் பெறுவது மிகப்பெறும் பாக்கியமாகும்.

ஆண்டுவிழா :

குடிலில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று ஆண்டுவிழா நடைபெறும். ஆண்டுவிழாவிற்கு 20 நாட்கள் இருக்கும்போதே விழாவேலைகள் ஆரம்பமாகும். அனைத்து கட்டடங்களும் வெள்ளை, காவி, பெயிண்ட் அடிக்கப்பட்டு புத்தம் புதிது போல் பொலிவுடன் காட்சி தரும். அத்தனை பணிகளையும் குருகுல மாணவர்கள் செய்து முடிப்பார்கள். அவரவர்களுக்கு தோன்றும் கலாரசனையோடு அலங்கரிப்பார்கள். ஒரு ஆண்டு விழாவில் ஆஸ்ரம அன்பர் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் குருகுல மாணவர்களின் செயல்திறனைக் குறித்து அவருக்கே உரித்தான நகைச்சுவை பாணியில் " அன்று அந்த அயோத்தியா ராமனுக்கு தொண்டு புரிந்த வானரக் கூட்டங்கள் வேறு எங்கும் போய்விடவில்லை. இன்று இந்த குடில் ராமனுக்கு (பிரம்மசாரி ராமசுவாமி) உதவிபுரிய குருகுல மாணவர்களாக அவதாரம் செய்திருக்கிறார்கள்" எனக்கூறி முடித்தார். அத்தகைய செயல்திறனை கொண்டவர்கள் குடில்மாணவர்கள்.

ஓர் ஆண்டு அருள்மிகு தாருகாவனேஸ்வரர் ரத ஊர்வலம் ரதவீதி வழியாக வந்து கொண்டிருந்தது. ஒரு முடக்கில் திரும்பும்போது எக்கச்சக்கமாக பள்ளத்தில் ரதத்தின் ஒரு சக்கரம் மாட்டிக் கொண்டது. தேர் நகரவில்லை. இதைக் கேள்விப்பட்ட குடில் சுவாமிஜி அவர்கள் ஆஸ்ரம பெரிய மாணவர்கள் அவ்வளவு பேரையும் அனுப்பி வைத்தார்கள். மக்களோடு இவர்களும் சேர்ந்து தேரை நகர்த்தும் பணியில் ஈடுபட்டனர். அதுவரை பள்ளத்தில் அழுந்திக்கிடந்த தேர்ச்சக்கரம் சிறிதுசிறிதாக மேலே வந்து பழைய நிலையில் நின்றது. தேரும் இழுக்கப்பட்டு அதனுடைய நிலையை அடைந்தது. பரமஹம்ஸரின் அருள் பெற்ற அவருக்கே அர்ப்பணிக்கப்பட்ட குடில் சிறார்களால் முடியாத காரியம் எதுவுமேயில்லை. எதையும் சாதிக்கும் பாலகர்கள் இவர்கள்.

ஆண்டு விழா நாளன்று பரமஹம்ஸரின் படம் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் வைக்கப்பட்டு கொடி மைதானத்தில் வைக்கப்படும். ஆஸ்ரமக்கொடியை சுவாமிஜி ஏற்றுவார். காலை 8 மணி அளவில் கொடி ஏற்றம்

முடிந்தவுடன் குருமகராஜ் சப்பரத்தை மாணவர்கள் சுமந்தவண்ணம் திருப்பராய்த்துறை சிவாலயத்தை நோக்கி ஊர்வலம் புறப்படுவார்கள். கோவிலில் வந்தனை வழிபாடுகளுக்கு பின், ஊர்வலம் குடிலுக்கு திரும்பிவரும்.

ஆஸ்ரமவிழாக்களுக்கென்றே கருத்து செறிவுமிக்க கொடியேற்ற பாடல் ஒன்றை அமரர் கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள் இயற்றித் தந்துள்ளார்கள். அப்பாடலின் உயரிய கருத்தினை அனைவரும் தெரிந்து கொள்ள முழுப்பாடலும் கீழே தரப்பட்டுள்ளது

ஆஸ்ரம கொடிப் பாடல் :

ஏற்றுவோம் கொடி ஏற்றுவோம்
ஏற்றி மெய்ப்பொருள் போற்றுவோம்
போற்றியே புகழ் பூண்ட நற்குடில்
புண்ணியக்கொடி ஏற்றுவோம் (ஏற்றுவோம்)

ஆதிகாரண மான செஞ்சுடர்
அதில் விளங்கிடும் அன்னமும்
மேதினிக் குயிர் வாழ்வளித்திடும்
மேன்மையான நெற் கதிருடன் (ஏற்றுவோம்)

இருள் கிழித்தொளி ஏந்திவந்தருள்
இருள கற்றிடும் தன்மையாம்
பரவிடும் சிறுபாலகர் இருள்
பாலனம் புரிவீர்களே (ஏற்றுவோம்)

பரமஹம்ஸரின் தயாநிதிக் குயிர்
பாரெல்லாம் குடில் ஆகுமாம்
பரவு கல்வியின் பாங்குணர்ந்திடும்
பரமஹம்ஸ பதாகையால் (ஏற்றுவோம்)

ஆதியானவன் தன்னையே
அனாதை என்பது வேதமே
ஆதியான் பணிசெய்யும் இக்குடில்
ஆர்க்கும் ஆலயம் ஆகுமே (ஏற்றுவோம்)

ஆண்டவன் உயிர் ஆன்ம கோடிகள்
யாவிலும் நிறை வானவன்
பூண்ட நல்லரும் புண்ணியத்தினால்
போர்த்த மானிடப்பிறவி (ஏற்றுவோம்)

சித்த சுத்தியும் செயலில் நேர்மையும்
சேர்ந்திடும் குடில் குருகுலம்
சத்தியம் பயில்கின்ற மாணவர்
சார்ந்த மெய்ப்பொருள் போற்றியே (ஏற்றுவோம்)

குருதேவரின் படஊர்வலம் சிவாலயம் போய்வந்தபின் காலை உணவு அளிக்கப்படும். பொதுத்துப்புரவுப்பணி நடக்கும். மதியம் 11 மணி அளவில் தியான மண்டபத்தின் மேல்மாடியில் குருதேவரின் ஆலயம் முன்பாக மாணவர்கள் வரிசையாக அமர்வார்கள். 1 மணிநேரம் பஜனை நடைபெறும். பஜனை முடிந்து சுவாமிஜி அவர்கள் தீர்த்தப் பிரசாதம் வழங்குவார்கள். அதன்பின் விழாவிற்கு வந்திருக்கும் அன்பர்களுக்கும் பொதுமக்களுக்கும் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும். பரமஹம்ஸரின் அருட்பிரசாதம் மதியம் 3 மணிவரை பரிமாறப்படும். ஆயிரக்கணக்கான மக்கள் பசியாறுவார்கள்.

மதியம் 3 மணி முதல் 5 மணி வரை அமரத்வநிலை எய்திய வாரியார் சுவாமிகளின் ஆடியோ கேசட் டி.வி.யில் போடப்படும். இது முடிந்த பின் சுவாமிஜி அவர்கள் விழாவை துவக்கி வைப்பார்கள். அதற்கு முன் குருகுல மாணவர் இருவர் விழா மேடையில் கடவுள் வாழ்த்தாக " எல்லா மதத்தினரும் "என ஆரம்பிக்கும் நாமக்கல் கவிஞர் இயற்றிய பாடலை மாணவர் பாடுவர். அப்பாடலின் உயரிய கருத்தினை அனைவரும் தெரிந்து கொள்ள முழுப்பாடலும் கீழே தரப்பட்டுள்ளது

எல்லா மதத்தினரும் கூடுவோமே
ஏகம் கடவுளென்று பாடுவோமே
நல்லார் உலகில் எங்கும் சொன்னது ஒன்றே
ராமகிருஷ்ணர் வாழ்க்கையினால் கண்டோமின்றே (எல்லா..)

இற்றைக்கு நூறாண்டு முன்னம் ஒருநாள்
இந்நாட்டின் தெய்வீகத் தன்மைகள் எல்லாம்
புத்தம் புது உருவில் தேவையறிந்தே
போந்ததென ராமகிருஷ்ண தேவர் பிறந்தநாள் (எல்லா..)

பள்ளிப் படிப்பெதுவும் இல்லாமலும்
பாடம் வேறொருவர் சொல்லாமலும்
வெள்ளம் பலநிறைந்த கடலேபோல்
வெவ்வேறு மதங்களுக்கு இடமுமானார் (எல்லா ..)

தானே நினைத் தறியும் படிப்பன்றோ
தன்னைத் தோற்றுவிக்க முடிப்பாகும்
ஊனோடு உயிர்கலந்த ஒழுக்கமன்றோ
உண்மை ராமகிருஷ்ணர் வழக்கமெல்லாம் (எல்லா ...)

ஏட்டுப் படிப்பை மட்டும் கற்றோமே
ஏழைக் கிரங்கும் அன்பைப் பெற்றோமா?
நாட்டில் நலிந்தவர்க்காய் அழுதுருகும்
ராமகிருஷ்ணர் தம்கருணை தொழுதிடுவோம் (எல்லா ..)

பின்சுவாமிஜியின்உரைஇடம்பெறும்.அந்தஆண்டின்வரவுசெலவுத்திட்டம் வாசிக்கப்படும். அது முடிந்தபின் மாலை 6 அல்லது 6.30 மணி அளவில் குருகுல மாணவர்களின் நாடகம் நடைபெறும். 8.30 மணி அளவில் நாடகம் முடியும். ஆண்டு விழா நிறைவு பெறும்.

மாட்டுப்பொங்கல் :

பாரத நாட்டில் பசுக்களை தெய்வாம்சமாகக் கருதி வழிபடுவது இந்துக்களிடையே வழிவழியாக வந்த பக்திநெறியாகும். பசுவை, பெற்ற அன்னைக்கு சமமாகக் கருதி போற்றி வழிபடுவது பாரதத்தின் உயரிய பண்பாடாகும்.அதனால்தான்பசுவை“கோமாதா”என்கின்றோம்.

எனவே குடிலில் பசுக்களை தெய்வாம்சமாகக் கருதி அவைகளுக்காக பசுமடம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. பசுக்களை பராமரிப்பது, குளிப்பாட்டுவது, ஆகாரம் அளிப்பது, மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வது ஆகிய அனைத்தையும் குருகுல மாணவர்களே கவனித்து வருகின்றனர். இப்பசுக்களுக்கும் அவைகளை அன்போடு அரவணைத்து பராமரிக்கும் ஆஸ்ரம மாணவர்களுக்கும் இடையே நட்பு இருக்கிறதே அதை வர்ணிக்க இயலாது. அவன் அதன் பெயரைச்சொல்லிக் கூப்பிட அது அவன் அருகில் ஒடி வந்து அவனை சுற்றிச் சுற்றி வந்து உராசும். அவனும் அதை தடவிக் கொடுக்க, அந்த உணர்வை கண்ணை மூடி அது அனுபவிக்கும். ஸ்ரீகிருஷ்ணனின் கோகுலம் நினைவிற்கு வரும். காவேரி, லஷ்மி,யமுனா, கங்கா, வேணி, பவானி, சரஸ்வதி இன்னும் பலப்பல பெயர்கள் கொண்ட பசுக்கள் பசுமடத்தில் ஒடியாடி வளையவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மாட்டுப்பொங்கல் வந்துவிட்டால் மாணவர்களுக்கு ஏக குஷி. அவனவன்

தனது பசுவை அலங்கரிப்பதில் போட்டிபோட்டுக் கொண்டு காரியங்களை கவனிப்பான். கோகுலத்து ஆயர்கள் பசுக்களை எவ்வாறு அலங்கரிப்பார்களோ மாட்டார்களோ நமக்குத் தெரியாது. ஆனால் குடிலில் பராமரிக்கப்படும் பசுக்களும் காளை மாடுகளும் பசுமடத்தில் சர்வாலங்காரத்துடன் கட்டப்பட்ட மணிகளின் கிண்கிணி மணியோசை காதில் வந்து விழ, தலைகளை ஆட்டிய வண்ணம் தலைநிமிர்ந்து அங்குமிங்கும் பார்க்கும் காட்சிகளை பார்ப்போர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தும்.

மாலை 5 மணி அளவில் பசுக்களுக்கு பூஜை ஆரம்பமாகும். சுவாமிஜி அவர்கள் வந்து ஒரிடத்தில் அமர்ந்ததும், மாணவர்கள் சாம்பராணிப்புகை காட்டி, அழகுக்கு அழகு செய்வது போல குங்குமம் மஞ்சளை பசுக்ளின் மேல் தடவி அழகு செய்வார்கள். ஒவ்வொரு பசுவுக்கும் முன்னாள் பொரிகடலை பொங்கல், வெல்லம், வைக்கப்படும். பூச்சரங்கள் பசுவின் கழுத்திலும், கொம்புகளிலும் சுற்றப்பட்டிருக்கும். பலவர்ண மணிகள் கொண்ட ஆரங்கள் கழுத்தை அலங்கரிக்கும். பூஜை முடிந்ததும் பசுக்களை தொட்டு நமஸ்கரிக்க ஒவ்வொருவராகச் செல்வர். அவரவர் இடத்திலமர்ந்து பொங்கல் பிரசாதம் அருந்துவார்கள்.

இவ்விதமாக மாட்டுப்பொங்கல் விழா இனிதே நடந்து முடிவுறும்.

சரஸ்வதி பூஜை:

சகலவிதமான கலைகளுக்கு ஆதார தேவதை இவளே. கலை உலகமே இவளது கடைக்கண் பார்வையில் இயங்குகிறது. தனியாக இவளை ஆராதிப்பதை விட, உலகம் உய்ய பயன்படும் தொழிற்கருவிகளுக்கு இடையில் இவளை அமர்த்தி பூஜிப்பதே உலக நன்மைக்கு ஏற்றதாகும். எனவே தான் நாடு முழுவதும் இவளது ஆராதனையை ஆயுத பூஜை தினத்தன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

குடிலிலும் இவளது பூஜை விமரிசையாக நடத்தப்படுகிறது. குடில் குருகுலக் கட்டடத்தில் மாவிலைத் தோரணங்கட்டி அழகு படுத்தி, நடுவில் பீடம் அமைத்து சரஸ்வதி படம் வைத்து மலர் அலங்காரம், வர்ண மின்விளக்குகள் அலங்காரம் கண்ணைப் பறிக்கும். விவசாயக் கருவிகள், தச்சு, கொத்தக்கருவிகள், மின் பராமரிப்பு கருவிகள், நாடகக் கலை சம்மந்தப்பட்டவைகள், மாணவர்களின் குறிப்பேடுகள், புத்தகங்கள், அலுவலக கணக்கு நோட்டுகள் ஆகியவை அலங்காரமாக அடுக்கப்பட்டு சந்தன, குங்கும பொட்டுகள் வைக்கப்பட்டு வண்ணவண்ண மலர்கள் தூவப்பட்டு மாலை 6.30 மணி அளவில் பூஜைநடைபெறும். சுவாமிஜியும் பூஜையில் கலந்து கொள்வார். சுண்டல், பொரிகடலை, பழம், தேங்காய் நைவேத்யமாக வைக்கப்படும். தூப, தீப, கற்பூர ஆரத்தி எடுத்து பூஜை முடிவுறும். நிவேதனப் பொருட்கள் வினியோகிக்கப்படும்.

விநாயக சதுர்த்தி :

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்தபடியாக ஆஸ்ரம மாணவர்களை அதிகமாகக் கவர்வது விநாயக சதுர்த்தி விழாதான். ஏனெனில் அவரவர்கள் கற்பனைத் திறமைக்கு ஏற்றவாறு களிமண்ணால் பலவகையான விநாயகர்கள் ஒரு சாண் உயரத்திலிருந்து 2,3 அடி உயரம் வரை தயாராகும். மாலையில் காவிரிக்கரையில் பூஜை ஆரம்பமாகும். ஆஸ்ரமக் கோவிலிருந்து விநாயகர் ஊர்வலம் காவிரி மைதானத்தை அடையும். தற்காலிகமாக அமைந்த மேடையில் விநாயகர் சிலை அமர்த்தப்படும். சுற்றிலும் பலவித விநாயகர்கள் அமர்ந்திருப்பார். குட்டை விநாயகர், குண்டுவிநாயகர், நின்ற விநாயகர், அமர்ந்த விநாயகர் என பலவகை விநாயகர்களைக் காணலாம்.

5.30 மணி அளவில் பஜனை பாடல்கள் நடைபெறும் சுவாமிஜி அவர்களும் கலந்து கொள்வார். உப்பு கார இனிப்பு கொழுக்கட்டைகள், பொரி, சுண்டல் நிவேதனமாக படைக்கப்படும். தூப, தீபங்கள் காண்பிக்கப்பட்டு பூஜை முடியும். மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவார்கள். பின் அனைத்து விநாயகர்களும் காவிரி நதியில் கரைக்கப்படும். இரவு மோதகங்கள், சுண்டல், பொரி, தேங்காய் பழங்கள் மாணவர்களுக்கு வினியோகிக்கப்படும்.

ஸ்ரீராமநவமி :

குடிலில் நடைபெறும் இதரவிழாக்கள் போலவே ஸ்ரீராமநவமியும், குருகுல மாணவர்களால் குதூகலமாகக் கொண்டாடப்பெறும்.

குருகுலக் கட்டடம் அலங்கரிக்கப்பட்டு ஸ்ரீராமபிரான் படம் நன்கு அலங்கரிக்கப்பட்டு அலங்கார சப்பரத்தில் வைக்கப்பட்டிருக்கும். மின் ஒளிவிளக்கு அலங்காரமும் வண்ணமலர் மாலைகள் சூட்டப்பட்டும் ஸ்ரீராமர்படம் அழகான தோற்றம் கொண்டிருக்கும்.

சுவாமிஜி அவர்கள் முன்னிலையில் மாணவர்களின் பஜனை நடைபெறும். மதியம் 4 மணி அளவில் பூஜை ஆரம்பிக்கப்படும். கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டு பூஜை நிறைவுபெறும். 5 மணிஅளவில் நைவேத்யமாக வைக்கப்பட்டிருக்கும் மாங்காய்த்துண்டுகள் , வெள்ளரித்துண்டுகள், பழங்கள், வேக வைத்த பாசிப்பருப்பு, நீர்மோர், பானகம் அனைவருக்கும் வினியோகிக்கப்படும்.

ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி :

குருகுல கட்டடத்தில் வழக்கம்போல் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி பூஜை நடைபெறும். குருகுல மாணவர் பஜனைக்குப்பின் சுவாமிஜி அவர்கள் முன்னிலையில் பூஜைநடைபெறும். தேங்காய் பழம், பழங்கள் நிவேதனம் செய்யப்பட்டு அனைவருக்கும் வினியோகிக்கப்படும்.

மகாசிவன் ராத்திரி :

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கைலாசபதியின் பூஜையை வெகு விமரிசையாக செய்வாராம். அன்று முழுவதும் அவர் நிஷ்டையில் ஆழ்ந்திருப்பார். அடிக்கடி சமாதிநிலை கைகூடும். சில மணிநேரங்களுக்குப்பின் அவருக்கு உலக நினைவு வரும்.

குடிலிலும் மகாசிவன்ராத்திரி பூஜை வெகுசிரத்தையுடனும், பக்தியுடனும் நடைபெறும். இரவு 6 மணிக்கு மேல் மஹாசிவன் ராத்திரிபூஜை ஆரம்பிக்கும். கொடி மைதானத்தில் அக்னி வளர்க்கப்பட்டு ஹோமம் நடைபெறும். சுவாமிஜி அவர்களும் கலந்து கொள்வார்கள்.

மாணவர்கள் பலகுழுக்களாக பிரிக்கப்படுவார்கள். ஒரு குழுவிற்கு பின் மற்றொரு குழுவாக மைதானத்தில் ஹோமகுண்டத்தின் முன் அமர்வார்கள். ஒவ்வொரு குழுவும், " ஓம் நமசிவாய" என்ற மூலமந்திரத்தை 108 முறை கூறுவார்கள். இதர மாணவர்கள் அவர்களோடு சேர்ந்து 'ஓம் நமசிவாய" என்ற சிவநாமாவளியை 108 முறை கூறுவர்.

அன்று உப்பில்லா ஆகாரம் மாணவர்களுக்கு பரிமாறப்படும்.

இரவு 8 மணிஅளவில் மகாசிவன்ராத்திரி பூஜை முடிவுறும்.

இதுதவிர பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஜெயந்தி சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி, ஸ்ரீசாரதா தேவியார் ஜெயந்தி விழாக்களும் வழக்கம்போல் முறை தவறாமல் நடைபெறும். முன்பே இவ்விழாக்கள்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவாமிஜி அவர்களின்
இலங்கைப் பயண - பிரயாணக்கட்டுரை

1959 ம் வருடம் ஜுன் மாத மத்தியில் தஞ்சையிலிருந்து கலெக்டர் ஐயா அவர்கள் ஒரு நாள் குடிலுக்கு எதிர்பாராத வகையில் வருகை தந்தார்கள்:

இவரது வருகையைக் கண்டவுடன் உளம்பூரிக்க முகத்தில் புன்சிரிப்பு தவழ சுவாமிஜி அவர்கள் விரைவாக வந்து ஐயாவின் இருகைகளையும் பற்றிக்கொண்டு" வாருங்கள் ஐயா" என அன்புடன் வரவேற்றார். தமது அறையிலுள்ள பென்ச்சில் கலெக்டர் ஐயாவை அமர வைத்தார்கள்.

"ஐயா! நலம்தானே. நேற்று இரவு மாணவர் வேலைத்திட்டங்களை கேட்டு முடித்த பின் படுக்கையை விரிக்கும் போது ஐயாவின் ஞாபகம் வந்தது. அப்போதே நீங்கள் விரைவில் குடிலுக்கு வருவீர்கள் என எனது உள்மனம் எனக்கு உணர்த்தியது. அதன்படியே வந்துவிட்டீர்கள். ஏதாவது முக்கியமான காரியமா?

" சுவாமி கடந்த ஒரு வார காலமாகவே குடில்நிதிக்கு இன்னும் என்ன செய்யலாம் என்ற எண்ணமே என் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தது. குடிலுக்கு இன்னமும் செய்ய வேண்டும் என்ற மன உந்துதல் என்னை தூங்கவிடவில்லை. என்படுக்கை அறையில் இந்திய தேசப்படம்

இருக்கிறதல்லவா?. அதையே பார்த்துக் கொண்டு கட்டிலில் படுத்தவாறே சிந்தித்தேன். மனதிற்குள் திடீரென ஒரு 'பொறி' தட்டியது. குமரி முனையின் கீழுள்ள இலங்கை கண்களில் பட்டது. நான் செய்யவேண்டியது என்னவென்று மனதிற்கு தெளிவாகப்பட்டது. என்னால் இருக்க முடியவில்லை. சுவாமிகளை காண உடனே புறப்பட்டு விட்டேன்.

"ஐயா, என்ன கூறுகிறீர்கள்?"

" சுவாமி நீங்களும் நானும் கடலைத்தாண்டப்போகிறோம். அதுவும் வெகு சீக்கிரமாக. ஏன் திகைத்து விட்டீர்கள்? புரியவில்லையா? குடிலின் நன்கொடை வசூலுக்கு இலங்கைக்கு செல்வதைத்தான் இவ்வாறு குறிப்பிட்டேன். இலங்கை வாழ் தமிழர்கள் கருணை மனம் படைத்தவர்கள். நாராயண சேவையை யார் எங்கு நடத்தினாலும், அகமும் முகமும் மலர அள்ளிக் கொடுக்கும் அருளாளர்கள். எனக்குத் தெரிந்த அன்பர்கள் அங்கு பலருண்டு. அவர்கள் மூலம் மற்றவர்களையும் அணுக ஏற்பாடு செய்யலாம். இதற்கான ஏற்பாடுகளை விரைவில் முடிக்கிறேன். முழுப்பொறுப்பும் என்னுடையது. இதை தெரிவிக்கவே வந்தேன்"

பலவாறாகச் சொல்லி சுவாமிஜி அவர்களை இணங்க வைத்துவிட்டார் கலெக்டர் ஐயா அவர்கள். மனமகிழ்வோடு புறப்பட்டுச் சென்றார். காரியங்கள் மளமளவென்று நடந்தது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருளால் குடில் சேவையின் நிமித்தம், கலெக்டர் ஐயாவின் முன்னேற்பாட்டின்படி நிதிவசூலுக்காக இலங்கைப் பயணத்தை மேற்கொண்டார் சுவாமிஜி அவர்கள். குடில் குழந்தைகளுக்காக சிலோனிலிருந்து தேதிவாரியாக எழுதப்பட்ட "பயணக்கட்டுரையை" இனி காண்போம்.

1.8.59 முகாம் : கட்டவாலா

அன்பார்ந்த குழந்தைகளே!

" இலங்கை பிரயாணக்கதையை சொல்லட்டுமா? எல்லோரும் கேளுங்கள்.

நானும் கலெக்டர் ஐயாவும் திருச்சி விமான நிலையத்திலிருந்து பகல் 1 மணிக்கு விமானத்தில் ஏறினோம். உல்லாசப் பயணத்தின்போது நீங்கள் பஸ்ஸில் 2 பேர் உட்காரும் சீட்டை பார்த்திருப்பீர்கள் அல்லவா. .. அதே மாதிரிதான் விமானத்திலும். ஆனால் தனித்தனியே அமர இடையில் ஒரு தடை இருந்தது. விமானத்தில் ஏறியதும் ஒரு ஆங்கிலோ இந்திய சகோதரி ஒவ்வொருவருக்கும் ஒரு காகிதப்பையை கொடுத்துச் சென்றார். அதில் சிறிதளவு பஞ்சும், சில மிட்டாய்களும் இருந்தன. பஞ்சை இரு காதுகளிலும் வைத்துக் கொண்டோம். விமானம் உயரப் பறக்கும் போது காது வலிக்காமலிருக்க பஞ்சு வைப்பதும், வாந்தி வராமலிருக்க மிட்டாயும்

தரப்பட்டன. ஒவ்வொரு சீட்டிலும் பெல்ட் இருக்கிறது. அதை எந்தெந்த சமயங்களில் கட்டிக்கொள்ள வேண்டும் என்பதை எரியும் சிவப்பு எழுத்துக்கள் சமிக்ஞை காட்டுகின்றன.

விமானம் தாழ்வான உயரத்தில் பறக்கும் போதுதான் தரைமட்டக் காட்சிகள் காணப்படுகின்றன. மேலே செல்லச்செல்ல விமானம் மேகத்தினிடையே பறக்கும்போது இவைகள் தெரியாது. விமானம் தாழ்வாகப் பறக்கும்போது உஷ்ணமும் உயரே செல்ல செல்ல குளிர்ச்சியும் ஏற்படுகின்றது. ஒவ்வொரு சீட்டுக்கும் மேலே இரண்டு காற்றுப்போக்கி குழாய் உள்ளன. அதை சௌகரியம் போல் திறந்தும் மூடவும் செய்து கொள்ளலாம். விமான ஓட்டி அறையில் இருவர் இருந்தனர். ஒருவர் விமானத்தை ஓட்டுகிறார். மற்றவர் வானிலை, சீதோஷ்ண நிலை, மேகநிலை, காற்றின் நிலை, போகும் பாதை குறித்த அறிவிப்பு, ஏதேனும் அபாயத்திற்கான அறிவிப்பும் ஆகிய விபரங்களை கருவிகள் மூலம் அறிந்து விமானிக்கு அடிக்கடி கூறிக்கொண்டே இருக்கிறார். அதன்படி விமானத்தை விமானி செலுத்துகிறார்.

விமான ஓட்டிக்கு முன்னால் பலப்பல ஸ்விச்சுகள் உள்ளன. சிறிதே நீட்டிக் கொண்டிருக்கும் பல முனைகள் உள்ளன. ஒன்றை இழுத்தால் விமானம் மேலே செல்லுகிறது. இன்னொன்றை அழுத்தினால் விமானம் கீழே இறங்குகிறது. வேகத்தை அதிகரிக்க ஒரு பொத்தானும், குறைக்க ஒரு பொத்தானும் உள்ளன. அன்பார்ந்த குழந்தைகளே! மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட இயந்திரங்கள் செய்யும் வேலையை பார்த்தீர்களா?. எல்லாம் விஞ்ஞானத்தின் விளைவு. பள்ளியில் விஞ்ஞான பாடத்தை அதிக கவ்னத்தோடு கற்று வரவேண்டும். தெரிந்ததா?

மதியம் 1.50க்கு யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் விமானம் இறங்கியது. இறங்கும் போது அவரவர்கள் சீட்டிலிருந்து விழுந்து விடாமலிருக்க பெல்ட் கட்டிக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாண பகுதி தென்னைகள் நிறைந்த சமவெளிப்பகுதியாக இருக்கிறது. வறண்ட பிரதேசம்தான். விமானத்தில் வந்த பயணிகளின் பெட்டிகளை இங்கு சோதனை போடுகிறார்கள். அனைவரின் பெட்டிகளும் சோதனை அறைக்கு போய்விடுகின்றன. தவறான வழியில் பொருட்களை கொண்டு சென்றால் அதிகாரிகள் அவைகளை கைப்பற்றுகின்றனர். அபராதமும் போடப்படுகின்றன. நம்முடைய பெட்டிகளில் துணிமணிகளைத்தவிர வேறு எதுவும் கிடையாதே. அதிகாரி வந்தார். பெட்டி சாவிகளை கொடுக்கத் தயாரானோம். ஆனால் வந்த அதிகாரியோ எங்களையும், எங்களின் பாஸ்போர்ட்களையும் பார்த்தார்.

“ எல்லாம் பர்சனல் மேட்டர்தானே... வேறொன்றுமில்லையே. ஆல்ரைட், ஆல்ரைட் என்று சொல்லிக்கொண்டே சோதனை போட்டதற்கான அறிகுறியாக சிகப்பு சாக்பீசால் “ பார்த்தாகிவிட்டது ” என ரெட் மார்க் செய்துவிட்டுச் சென்றார். மற்றவர்களின் பெட்டிகளை வெகு ஜரூராக

சோதனையிட்ட அவர்கள் எங்களின் பெட்டிகளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.திறந்து காட்டச் சொல்லியும் கேட்கவில்லை. " இவர்கள் நியாயவான்கள். தவறாக நடக்கமாட்டார்கள்." என தீர்மானித்து போய்விட்டார் அந்த அதிகாரி. இதனால்தானோ என்னவோ " அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற தமிழ்பழமொழி நினைவுக்கு வந்தது. தவறு செய்பவர்கள் முகமே தவறை காட்டிவிடும். குழந்தைகளே சிறிது சிந்தியுங்கள். நம்மிடம் களங்கம் இல்லாதபோது நமது கண்ணியம் காப்பாற்றப்படுகிறது. சோதனையும் நீக்கப்படுகிறது.

மீண்டும் மதியம் 2.50 மணிக்கு விமானத்தில் ஏறினோம். இலங்கையின் தலைநகரான கொழும்புவை நோக்கி விமானம் பறக்க ஆரம்பித்தது. விமானப்பணிப்பெண் அடிக்கடி வந்து பேப்பர்கள், டீ, காபி, பிஸ்கட் வேண்டுமா? என கேட்ட வண்ணம் இருந்தார். தேவைப்பட்டவர்களுக்கு தருவார். விஸ்கி போன்ற மதுபான வகைகளும் கேட்பவர்களுக்கு கிடைக்கும். நான் என்ன வாங்கியிருப்பேன் என நீங்களே யூகித்துக் கொள்ளலாம். என்ன ... நான் எதையுமே ஏற்கவில்லையே. மனதில் குரு மகராஜ் மகிமை, ஆஸ்ரமத்தின் நினைவு, உங்களின் ஞாபகம் மட்டுமே இருந்தன. இதைத்தவிர இந்த சரீரத்திற்கு வேறென்ன தேவையாய் இருக்கிறது?

விமானம் வெகு உயரத்தில், அதாவது 10, 12 ஆயிர அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது. காதுகளில் மட்டும் சிறிது வலி ஏற்பட்டது. சரீரத்திற்கு வேறு மாறுதல் எதுவும் தெரியவில்லை. கலெக்டர் ஐயாவுக்கு மட்டும் சிறிது மயக்கமும் வாந்தியும் ஏற்பட்டது. 4.20 க்கு கொழும்பு வந்து சேர்ந்தோம். கடலுக்கு மேலேதான் விமானம் அதிகதூரம் பறந்து வந்தது. கொழும்பில் சிலவற்றை மட்டும் பார்த்துவிட்டு 6 மணி சுமாருக்கு கண்டிக்கு புறப்பட்டோம். சிலோன் ஐயாவின் கார் விமான நிலையத்திற்கு வந்திருந்தது. சுமார் 80 மைல் பிரயாணம். சிலோன் ஐயாவின் பங்களா அனேகமாய் நம் குடிலை ஒத்திருந்தது. சுற்றிலும் தோட்டம். தனிவீடு. இதே மாதிரி தனித்தனி வீடுகள். தூரம் தூரமாக இருந்தன. உயரமான பிரதேசம். செழிப்பான பகுதி. ஊட்டியைப் போலிருக்கிறது. மார்கழி, தை மாதத்து குளிர் இருக்கிறது. இரவு உணவு அருந்தினோம். இங்கிருந்து தான் குடில் குழந்தைகளுக்கு முதல் கடிதம் எழுதுகின்றேன். இது ஒரு நாளைய பிரயாணக்கதை. இத்துடன் முடிந்தது. நீங்களும் மணியடித்து பரிமாறவும், சாப்பிடவும் போக வேண்டுமே. ஆனந்தமாய் சாப்பிட்டு இறைவணக்கம்பாடி உறங்கச் செல்லுங்கள். மற்றது நாளை... சரி... சரி... வரட்டுமா?

உங்கள் அன்புள்ள

சுவாமி

அன்பார்ந்த ராமமூர்த்தி,

வரும் கடிதத்தை எப்போதும் இரவு உறுதிமொழி முடிந்து அனைவரையும் உட்கார வைத்து ஆனந்தமான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு குழந்தைகளுக்குப் படித்துக்காட்டுங்கள்.

(இவர் சுவாமிஜிக்கு அடுத்தபடி குடிலில் பிரம்மசாரியாக இருப்பவர்.

அன்புள்ள

சுவாமி

5-8-59 . முகாம் : கட்டவாலா

அன்பார்ந்த குழந்தைகளே!

நேற்றுமுன்தினம் கடிதம் பார்த்திருப்பீர்கள். நாங்கள் தங்கியுள்ள பங்களாவுக்கு நான்கு மைல்தூரத்திலுள்ள கண்டி நகருக்கு சென்று டெலிபோன் மூலம் பலபேர்களுடன் பேசி, தேதிவாரியாக சந்திக்க திட்டம் வகுத்தோம். பகல் உணவு முடிந்து 18 மைல் தூரத்திலுள்ள " கெட்டகாவலே" என்னுமிடத்திலுள்ள பங்களாவில் வசிக்கும் பிரமுகரை சந்தித்துவிட்டு இரவு திரும்பி வந்து சேர்ந்தோம்.

2.8.59

எட்டு மைல் தூரத்திலுள்ள ' கிரிமெட்டியா' என்ற பங்களாவிற்கு சென்றோம். நம்நாடு சுதந்திரம் பெற்றபோது டில்லியில் வைஸ்ராயாக இருந்த லார்டு மவுண்ட் பேட்டன் பிரபு என்பவர் சிலோனில் தென்பகுதி ராணுவ தளபதியாக இருந்தபோது அடிக்கடி இந்த பங்களாவுக்கு வந்து தங்குவாராம்.இந்த பங்களா மாயா பஜார் மாதிரி அவ்வளவு ஆடம்பரமாக இருந்தது. எங்களின் பகல் உணவு இங்குதான் நடந்தது. அப்போது காவிரி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசையிழந்து திருச்சி சின்னையாபிள்ளை சத்திரத்துக்கு பின்புறம் சாலையோரம் அடுப்புபோட்டு சமைக்கும் மக்களைப் பற்றிய ஞாபகம்தான் வந்தது. ஒரு புறம் மகா ஆடம்பரமாக வாழ்க்கை. மறுபுறம் வாழ வகையறியா மக்கள் கூட்டம். இந்த ஆடம்பரமான பங்களாவை விட்டு வெளியே வருகிறவரைக்கும் அனைத்தையும் இழந்த பொதுமக்களின் ஞாபகம்தான் என் மனதில் நிறைந்திருந்தது. திரும்பி வரும் வழியில் தொழிலாளர் – முதியோர் அனாதை விடுதிக்கு போய்ப் பார்த்தோம். வயதானவர்கள் 12 பேர் இருந்தனர். இங்கு பிரமாதமாய் எதுவும் இல்லையென்றாலும், இத்தகைய சேவைகள் எந்த நாட்டில் எவ்வளவு சிறிய அளவில் நடந்த போதிலும் வரவேற்கத் தக்கதே.

3.8.59

இன்று 32 மைல் தூரத்திலுள்ள 'நக்கின்ஸ்' பகுதியிலுள்ள பங்களாவுக்கு சென்றோம். பகல் உணவு அங்கு முடிந்தபின் திரும்பி வரும்வழியில் ஒரு அற்புதக் காட்சி கண்டோம். உச்சியிலிருந்து மலை நீரோடைகள் வெகு

உயரத்திலிருந்து வெண்புகை பறக்க வழிந்தோடி பல அருவிகளாக வீழ்வதை பார்த்தோம். பார்க்க பார்க்க ஆனந்தம் குழந்தைகளே நீங்களும் கண்ணை மூடி நான் வர்ணித்ததை மனதில் நினைத்துப் பாருங்கள். நீங்களும் ரசிக்கலாம்.

கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3000 அடி உயரத்தில் நாங்கள் இருந்தோம். காரிலிருந்து கீழே குனிந்து பார்த்தால் அதளபாதாளத்தில் அருவிகள் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பாதைகள் வளைந்து வளைந்து சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும்.

சரி குழந்தைகளே... இந்த தேசத்தைப்பற்றி நீங்கள் சிறிதாவது தெரிந்து கொள்ள வேண்டாமா? இங்கு புத்தமதம் பிரதானமாக இருக்கிறது. அதைக் கடைபிடிப்பவர்கள் சிங்களவ இன மக்கள். இவர்கள் பேசும் மொழி சிங்களம். இங்குள்ள ஊர்ப்பெயரெல்லாம் சிங்கள மொழியில்தான் ஏற்பட்டிருக்கிறது. இங்கு தமிழர்கள் சிறுபான்மையினத்தவர்கள். இதில் சிலர்தான் எஸ்டேட் முதலாளிகளாகவும், வியாபாரிகளாகவும் உள்ளனர். ஏனைய 6,7 இலட்சம் மக்கள் கூலிக்காரர்களே. இங்கு டீ, ரப்பர்,கோக்கோ, தென்னை ஆகிய தோட்டங்கள்தான் அதிகம். இத்தோட்டங்களில் மேற்படி கூலிகள் வேலை செய்கின்றனர். இத்துடன் முடிக்கின்றேன். மற்றவை அடுத்த கடிதத்தில்.

உங்கள் அன்புள்ள,

சுவாமி.

5.8.1959 : முகாம் : கிரீன் லேண்ட்ஸ் கடற்கரை பீச்:

அன்பார்ந்த குழந்தைகளே!

தொடர்ந்து பேசலாம். கேளுங்கள். 3 ம் தேதி வரைக்கும் எழுதியிருந்தேனா... அப்புறம் 4–8–59 ம் தேதி சுமார் 80 மைல் தூரத்திலுள்ள கொழும்பு நகருக்கு சென்றோம். இதுதான் இலங்கை அரசின் தலைநகரம், கடற்கரை சூழ்ந்துள்ள நகரம். பெரிய ஹார்பர். பலதேசங்களுக்கும் வர்த்தக ஏற்றுமதி இறக்குமதி எல்லாம் இங்குதான். கவர்னர் ஜெனரல், மந்திரிகள், பார்லிமெண்ட், செக்ரடேரியேட் ஆகிய பெரிய பெரிய விஷயங்கள் இந்த நகரில்தான்.

சரி ... நாங்கள் கொழும்பு வந்தோமா...? கடற்கரை பீச் அருகிலுள்ள 'கிரீன் லேண்ட்ஸ்' என்ற ஒரு பெரிய ஓட்டலில் இரண்டு ரூம்கள் எடுத்தோம். இதற்கு ஒருநாள் வாடகை ரூ 37,= எல்லா வசதிகளும் உண்டு. தண்ணீர், வெந்நீர் எல்லாம் குழாயைத் திருகினால் வந்துவிடும். ஒரு ஸ்விட்சை அழுத்தினால் போதும் ஒரு ஆள் சாப்பாடு வகையறாவை தூக்கிக் கொண்டு மேல் மாடியிலுள்ள எங்கள் ரூமுக்கு ஓடி வருவான். எல்லாம் பணம் பண்ணுகிற வேலையப்பா. இதெல்லாம் அவசியம்தானா? வெளிநாட்டு பிரயாணம். ஆதலால் வேறு வழியில்லை. இந்த நகரிலேயே மரக்கறி உணவு ஹோட்டல் உயர்ந்த

ரகத்திலிருப்பது இது ஒன்றுதானாம். நம்முடன் வருபவர்களோ மிகப்பெரிய மனிதர்கள். என்ன செய்வது? வகைவகையாய் இலையில் பரிமாறுகிறார்கள். ஆனால் அந்த சாதம் இருக்கிறதே அப்பப்பா.... இலையிலிருந்து எழுந்து நின்று என்னை விரட்டுவது போல விரைத்து பார்க்கிறது. இதைப் பார்க்கும்போது தான் ஆஸ்ரம உணவு எவ்வளவு தூய்மையானது நயமானது எனத் தெரிகிறது. எவ்வளவு பெரிய இடமானாலும் ஆஸ்ரம உணவு போல் எனக்கு திருப்தி தருவதில்லை என்பதை அறிவீர்கள்.

அப்புறம் போகிற பக்கமெல்லாம் காபி, டீ, குளிர்பானங்கள் பிஸ்கட், பழம் எல்லாம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். காலை, மதியம், இரவு ஆக 3 வேளை உணவைத் தவிர இடையில் என்னை வற்புறுத்தாதீர்கள் என்று விநயமாய் கூறி தப்பித்துக் கொண்டேன். சிரிக்கிறீர்களா... பயல்களா... சிரியுங்கள் நன்றாக சிரியுங்கள். உங்கள் சுவாமி படும்பாட்டை பார்த்தீர்களா. மனிதன் உயிர்வாழ உணவே தவிர உணவுக்காக மனிதனல்ல என்பதை நீங்களும் இப்போது தெரிந்து கொள்ளுங்கள். உணவு விஷயத்தில் ஒன்று கூறுகிறேன். அரை வயிறு ஆகாரம், கால் வயிறு தீர்த்தம், கால் வயிறு காலியாகவே இருக்க வேண்டும். அப்போது தான் தெளிவான சிந்தனையும் சுறுசுறுப்பும் தொடர்ந்திடும்.

இங்கு எல்லாம் விலை அதிகம். ஒரு கப் பால் 40 சதம், ஒரு இட்லி 15 சதம், தோசை 30 சதம் ஒரு பூவன் பழம் 10 சதம். இங்கு எல்லாமே மும்மடங்கு விலை. சதம் என்பது நயே பைசாதான். இங்கு நாணயமெல்லாம் மஞ்சள் நிறம். அங்கு வெள்ளை நிறம். அவ்வளவுதான் வித்தியாசம்.

5.8.59

இன்று கொழும்பு துறைமுகத்தை பார்க்கச் சென்றோம். சென்னை துறைமுகத்தை விடபலமடங்கு பெரியது. உலக நாடுகளின் கப்பல்கள் எல்லாம் இங்கு வந்து போகின்றன. பின் கடைவீதிக்கு அழைத்துச் சென்றார்கள்.ஒரு கடைக்குள் புகுந்தோம். போய்கொண்டேயிருந்தோம். முடிவே கிடையாதோ என நினைத்தேன். ஒரு சிறு ஊர் மாதிரி அவ்வளவு பெரியதாக இருந்தது. உழைத்து சம்பாதிக்காத வர்க்கங்கள் பணத்தை வாரியிறைக்கும் இடமது.

அன்புக்குழந்தைகளே!

உங்கள் சுவாமி உங்களை விட்டுப்போய்விட்டார் என்றா நினைக்கிறீர்கள். இல்லை இல்லை நீங்கள் எல்லோரும் சதா சுவாமியின் காட்சியில் தானிருக்கிறீர்கள். எப்படி என்று சொல்லுகிறேன் கேளுங்கள். இது ரகசியமும்கூட. இருந்தாலும் உங்களுக்கு சொல்வதில் தோஷமில்லை. அதாவது திருஉருவக்காட்சி என்றும் எந்நேரமும் என் மனதில் தெள்ளத்தெளிவாக நிலை பெற்றிருக்கிறது. நினைத்துப் பார்த்துத்தான் அவரை மனதில் காண

வேண்டுமென்ற பிரச்சனை பலவருடங்களுக்கு முன்பேயே தீர்ந்துவிட்டது. குருமகராஜுக்கு அடுத்து ஆஸ்ரமத்தை நினைப்பேன். ஐந்தாம் தரம் முதற்கொண்டு முதல்தரம் வரையிலுள்ள குழந்தைகள் என் தோற்றத்திற்குள் வந்துவிடுவீர்கள். எனது காட்சி தோற்றத்திலிருந்து நீங்கள் ஒருபோதும் மறைந்திருப்பதில்லை. என்னிடம்தான் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களிடம்தான் நான் இருக்கிறேன். இப்போது சந்தேகம் தெளிந்ததா?

பொறுப்பு வகிக்கும் தலைமைக்குழந்தைகளே!

நான் வரும்போது உங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்துவந்த வேலைத்திட்டத்தை பொறுப்புடன் நிறைவேற்றுங்கள். குற்றமற தினசரிக் கடமைகளை முடித்து ஆனந்தமுடன் வாழுங்கள். சிறு தரக்குழந்தைகளையும், புதுக்குழந்தைகளையும் கவனமுடன் பார்த்துக்கொள்ளுங்கள். ஆஸ்ரம எல்லையிலுள்ள பெரியவர்களுடன் ஒத்துப்போங்கள். யாரும் என்னுடைய அதிருப்திக்கு ஆளாக மாட்டீர்கள் என்றும் புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்வீர்கள் என்றும் நம்புகிறேன்.

புதியதாய் வரும் 10 பேரை அதிகமாய் நான் வரும்போது காட்ட வேண்டுமே தவிர, நான்வரும்போது இருந்த 163 குழந்தைகளில் ஒருவன் ஓடிவிட்டான் என்ற பெயரைஏற்படுத்தக்கூடாது. இதில் சிறியவர்கள் பெரியவர்கள் எல்லோருக்கும் பொறுப்புண்டு. மற்றவை தொடரும்.

உங்கள் அன்புள்ள
சுவாமி

7.8.59 முகாம் : கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

தொடர்ந்து ஆரம்பிக்கலாமா....? ஆனந்தமாய்க் கேளுங்கள். எங்கே கலகலவென்று சிரியுங்கள். சிங்காரவேலும் சிரிக்கிற மாதிரி இருக்கிறதே.. சரி சரி நீங்கள் அனைவரும் சிரித்ததை என் மனக்கண்ணால் பார்த்துவிட்டேன்.

5.8.59 தேதி வரைக்கும் எழுதியனுப்பிவிட்டேன். 6.8.59 ம் தேதி காலையில் கொழும்பு கடற்கரை ஒட்டலிருந்து புறப்பட்டு கண்டி வந்து சேர்ந்தோம். கண்டியில் " பொட்டானிக்கல் கார்டன்" என்னும் பெரிய தாவர இயல் செடிகளடங்கிய தோட்டத்தை சுற்றிப்பார்த்தோம். சுமார் 200 ஏக்கர் வீஸ்தீரணத்தில் பலப்பல வகையான மரங்கள், செடிகள், கொடிகள் பயிர் செய்யப்பட்டிருக்கிறது.

கண்டி யுனிவர்சிட்டி என்கிற சர்வகலாசாலையை பார்த்தோம். இங்குதான் நமது ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு " டாக்டர்" என்ற கௌரவப் பட்டம் அளித்தார்களாம். இந்நாட்டிலுள்ள கார், பஸ் வசதியைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். பொடி மட்டை வைத்திருப்பவர்கள் மூக்குப்பொடி

போடும் போதெல்லாம் பக்கத்திலிருப்பவர்கள் கைநீட்டினால் எல்லோருக்கும் ஒரு சிட்டிகை பொடி எடுத்துக்கொடுப்பது போல் இலங்கை தேசத்தில் கொழும்பு நகரில் கார்களை அவ்வளவு அலட்சியமாய் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வார்களாம்.

நம் நாட்டிலோ ஒருவரிடமிருந்து ஒரு நாள் தேவைக்கு கார் வாங்க வேண்டியிருந்தால் பிரமாதமான விஷயமாய் கருதப்படுகிறது என்று கிருபானந்த வாரியார் அடிக்கடி கூட்டங்களில் ஹாஸ்யமாய் பேசுவாராம். அது எவ்வளவு உண்மை என்பது இங்கு நேரில் பார்த்த பின்புதான் தெரியவந்தது. பார்த்த பக்கமெல்லாம் கார்தான். எந்த வீதியில் போனாலும் கார் நிறுத்த இடமில்லை. உலகத்திலே எத்தனை வகையான கார்கள் உண்டோ அவ்வளவும் இங்கு இருக்கின்றன. இந்த நாட்டின் ஜனத்தொகை 81 லட்சம்தான். ஆனால் கார் மாட்டும் மூன்று லட்சத்துக்கு மேலிருக்கிறது. 27 பேர்களுக்கு ஒரு கார் வீதம் ஆகிறது. விலையெல்லாம் இந்தியாவை விட மலிவு.

பஸ் ஏராளம். எல்லாம் சர்க்காரேதான் நடத்துகிறது. சொந்த பஸ் முதலாளிகள் யாரும் கிடையாது. எல்லா பஸ்களிலும் இ.போ.ச. என்று மட்டும் எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது இலங்கை போக்குவரத்து சங்கம் என்பதை குறிக்கும்.

7.8.59 ம் தேதி காலையில் " 12 ஏக்கர் எஸ்டேட்" என்ற தனி தோட்ட பங்களாவுக்கு சுமார் 7 மைல் பிரயாணம் செய்து போய் வந்தோம். இங்கு கலெக்டர் என்பதற்கு பதிலாக " கவர்ன்மெண்ட் ஏஜெண்டு" அதாவது சுருக்கமாக G.A, என்கிறார்கள். கண்டியிலுள்ள G.A. ஆபீசுக்கும் செஷன்ஸ் கோர்ட்டுக்கும் சென்று பார்த்தோம். நேற்று பார்த்ததில் முக்கியமான ஒன்றை எழுதாமல் விட்டுவிட்டேன். அதாவது நேற்று மாலை ஆரத்தி செய்யும் நேரம். கண்டியிலுள்ள புத்தர் கோவிலுக்குச் சென்றோம். " மாலிகா" என்பது அக்கோவிலுக்கு பெயர். 10 ம் தேதி முதல் 10 நாளைக்கு உற்சவமாம். ஏக தடபுடலாய் சீரியல்செட், லைட் எல்லாம் போட்டு ஆடம்பரமான அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் புத்தர் பெருமானின் தத்துவத்தை இலட்சியத்தை கடைபிடிப்பார் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. ஜீவ காருண்யத்தை நிலைநாட்டவே புத்தர்பிரான் தோன்றினார். ஆடுகளுக்காகவும், மான்களுக்காகவும் தன்னை பலிகொடுக்க முன்வந்தார். ஆனால் இன்று புத்தமதம் பரவியுள்ள இலங்கையில் புத்த பிட்சுக்கள் ஊனைத்தின்று ஊனைப் பெருக்கி வருகின்றார்கள். இதற்கு அவர்களுடைய மனசாட்சி எப்படித்தான் இடங் கொடுக்கிறதோ? அந்த பகவான் புத்தருக்கே வெளிச்சம். துறவிகளே அவ்வாறு இருக்கும்போது ஏனைய புத்தமத ஜனங்களைப்பற்றி கேட்பானேன். சிலோன் பிரதேசத்தில் எப்பக்கம் போனாலும் மரக்கறி உணவு பார்த்துச் சாப்பிடுவதே ஒரு பெரிய காரியமாக இருக்கிறது.

எவ்வளவு கெட்டதிலும் சில நல்லதும் இருக்குமல்லவா... 12 வயது சிறுவர்கள் முதல் பலப்பல வயதுள்ளவர்களும் இல்லற வாழ்வைத் துறந்து துறவறம் ஏற்று, பௌத்த மடத்தின் ஐதீகப்படி காவிஉடையணிந்து தலை மழுக்கம் (மொட்டை) செய்து கொள்ளுகிறார்கள். இம்மாதிரி நூற்றுக்கணக்கிலிருப்பது வரவேற்கத்தக்கது. ஏனெனில் துறவிஆவது என்பது சாமான்யமல்லவே.

இன்று கண்டியிலுள்ள மியூசியம் சென்று பார்த்தோம். அங்கு வெள்ளிக்கிழமை விடுமுறையாம். ஆகையால் மூடிக்கிடந்தது. வந்தவர்கள் இன்னாரென்று தெரிந்ததின் பேரில் விதிவிலக்கு அளித்து அதிகாரிகள் எல்லாவற்றையும் திறந்து காட்டினார்கள். அங்கு இருப்பதெல்லாம் கடைசி கண்டிராஜன் விக்கிரம ராஜ சிம்மனுடைய காலத்திலிருந்த சாமான்கள் பூராவும் கண்ணாடி பீரோக்களில் வைத்து காப்பாற்றப்பட்டு வருகின்றன.

நாங்கள் சிலோனுக்கு வந்தது உல்லாசயாத்திரைக்கு அல்ல. ஆங்காங்கு போகுமிடங்களில் உள்ள காட்சிகளை யதேச்சையாக காணும் வாய்ப்பு தானாக கிட்டி வருகின்றன. அவைகளை புறக்கணிக்காது பயன்படுத்திக் கொள்ளுகிறோம். நான் வந்ததிலிருந்து ஒவ்வொரு நாள் விஷயத்தையும் தேதிவாரியாக உங்களுக்கு எழுதி வருவதால் நான் வந்தபின் சொல்ல வேண்டிய விஷயங்கள் அதிகம் இருக்காது. அவரவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை மட்டும் அது சமயம் கேட்டால் போதுமானது.

உங்ளன்புள்ள
சுவாமி

10.8.59 முகாம் : கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

8.8.59 அன்று நாங்கள் கண்டி நகருக்குள் சென்று முனிசிபல் தோட்டிகளுடைய காலனிக்கு சென்று அவர்களுடைய வீடுவாசல்களை பார்த்து நிலைமை அறிந்து கொள்ள கலெக்டர் ஐயா விரும்பினார்கள். கலெக்டர் ஐயா விஷயம்தான் உங்களுக்குத்தெரியுமே... அவர் எங்கு சென்றாலும் ஏழை எளியமக்களின் மேல் அவருக்கிருக்கும் ஆர்வமும் அவர் எடுத்துக் கொண்ட சிரத்தையும் சரீர சுகத்தையும் பொருட்படுத்தாமல் எம்முடன் சேர்ந்து காரில் அலைவதையும் என்னென்று புகழ்வது? கலெக்டர் உத்தியோகம் பார்த்த இன்னொரு மனிதரிடம் இதைப்போன்ற சேவையை எளிதில் எதிர்பார்க்க இயலுமா?

தோட்டிகளின் சேரிக்குள் நுழைந்தோம் ஒரு வீட்டிற்குள் நுழைந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை பார்த்தோம். கும்பல் கூடிவிட்டது. அவர்களிடம் பலப்பல கேள்விகளை கேட்டு ஆர்வமுடன் கலெக்டர் ஐயா

உரையாடினார். அம்மக்களுக்கு எல்லாம் ஏக குஷி. கலெக்டர் அந்தஸ்தில் இருக்கும் பெரிய மனிதர்கள் எல்லாம் அவர்களின் வீட்டுப்பக்கம் எட்டிப்பார்க்க மாட்டார்களாம். நம் ஐயாவை கலெக்டர் என்று தெரிந்ததும் அவர்களுக்கு ஒரே ஆனந்தம். ஏழை எளிய மக்களிடம் தொடர்பு கொள்ள ஆர்வம் காட்டும் மனிதர்கள் பாக்யசாலிகள். அகங்காரமும் ஆடம்பரமும் கொண்ட ஜனங்கள் இதை அறியமாட்டார்கள். இனம் இனத்தோடுதான் சேரும். இல்லையெனில் அவருக்கு குடிலோடு பிணைப்பு கொள்ளும் தொடர்பு ஏற்பட்டிருக்க முடியாதல்லவா?

சேரியைப் பார்த்தபின் அம்மக்களிடம் பிரியாவிடை பெற்று, கண்டியிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கும் போனோம். திருச்சியை விட பெரியதாக இருந்தது. பணம் கொடுத்து தங்கும் ஸ்பெஷல் வார்டையும் பார்த்தோம். ஏழை எளியவர்கள் தங்கும் இலவச வார்டையும் பார்த்தோம். குழந்தைகள் வார்டை பார்க்கும் போது, நம் குழந்தை ராமச்சந்திரனுடைய ஞாபகம் வந்துவிட்டது. அவன்தான் இது மாதிரி ஆஸ்பத்திரியில் எத்தனைமாதம் தான் தங்கியிருப்பதோ?

9.8.59

சுமார் 40 மைல் தூரத்திலுள்ள 'லம்போடை' என்னும் பிரதேசத்திற்கு சென்று தனிப்பட்ட தோட்டபங்களாவில் வாசம் செய்யும் பிரமுகர்கள் பலரை பார்த்தோம். சிலோன் பிரதேச காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டைமான் அவர்களைப் பார்த்தோம். பகல் உணவை அங்கு முடித்தோம். இப்பகுதி " நூவரேலியா" என்னும் உயர்ந்த பகுதியின் அடிவாரமாகும். நாலா பக்கமும் டீ எஸ்டேட். உயர்ந்த மலை உச்சியிலிருந்து வெண்புகை பறக்க விழுந்தோடிவரும் நீர் அருவிகள் கண்ணைக்கவரும் காட்சியாகும். கார் ஓடிக்கொண்டிருக்க, கண் இயற்கை காட்சிகளை காண, கைகள் தாமாகவே உல்லன் மப்ளரை எடுத்து தலையில் சுற்றிக்கட்டுகிறது. அவ்வளவு குளிர். வெய்யில் வாடையே கிடையாது.கருமேகம் சூழ்ந்த மலை. இருண்ட சூழ்நிலை. இதைக் கேட்கும்போதே உங்களில் சிலருக்கு குளிர் அடிக்கிறது போல் தெரிகிறதல்லவா?

எனது அன்பிற்குரிய குழந்தைகளே!

ரேடியோ நிகழ்ச்சிக்கு திருச்சி ஆல் இண்டியா வானொலி நிலையத்திற்கு 15 ம் தேதி நடைபெறப்போகும் நிகழ்ச்சிக்கு செல்லப்போகிறீர்களல்லவா? அப்போது நானும் கலெக்டர் ஐயாவும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை எங்கிருந்தாலும் ரேடியோ முன்னால் உட்கார்ந்திருப்போம். ரேடியோ தவிடுபொடியாக வேண்டும். என்ன அப்படிச் சிரிக்கிறீர்கள். அதாவது கலகலவென்று உற்சாகமாய் நடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிக் கூறினேன்.

அன்புமிக்க குழந்தைகளே!

பொதுவேலை மாணவன், பண்டகசாலை மாணவன், வைத்திய பகுதி மாணவன் இதர முதல் தர, இரண்டாம் தர, மூன்றாம்தர, நான்காம்தர மாணவர்கள் எல்லோரும் அவரவர்களின் கடமைகளை செவ்வனே முடித்து ஆனந்தமாய் வாழ்ந்து வருகிறார்கள் என்ற தபால் செய்திகேட்டு மிகமிக மகிழ்ச்சி. இந்த சூழ்நிலை கெடாமல் ஒவ்வொரு நாளும் உங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளுங்கள். இவைகளுக்கிடையில் படிப்பில் கவனம் செலுத்த மறந்து விடாதீர்கள். குருமகராஜ் அருள்பாலிப்பார்.

அடடா ஐந்தாம் தரக்குழந்தைகளைப் பற்றி மறந்தே போய்விட்டதே... இல்லையப்பா..... இல்லை. உங்களை எவ்வாறு மறக்க முடியும்? நீங்கள் தானே சச்சிதானந்த சொரூபிகளாயிற்றே. எங்கே ஒரு சிரிப்பு சிரியுங்கள். ஹ... ஹ...ஹா... சிரித்தாய் விட்டதா... சரி மீண்டும் பின்னால் சந்திப்போம்.

உங்களன்புள்ள

சுவாமி.

12.8.59 முகாம்: கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

என்ன .... இன்றைய கடமைகள் எல்லாம் ஒழுங்காய் முடிந்தனவா? சரி முடிந்திருக்கும். எல்லோரும் சரியாய் உட்காருங்கள். சத்தம் போட மாட்டீர்களே... அப்படியானால் சரி... தொடர்ந்து பேசட்டுமா..?

9.8.59 வரை நடந்ததை சொல்லிவிட்டேன். 10.8.59 காலை நேரம் பூராவும் பலபேருடன் டெலிபோனில் பேசி தகவல் அறிந்து கொள்ள சரியாய் போயிற்று. மாலையில் புறப்பட்டு கண்டி நகர் சென்று இந்திய விசா ஆபீசரை கண்டு பலவிதமான திட்டங்களை வகுத்துக் கொண்டோம்.

11.8.59 ம் தேதி காலையில் எங்கும் வெளியில் செல்லும் திட்டம் உருவாகாததால் கலெக்டர் ஐயாவும் நானும் இயற்கை சூழ்ந்த மலைகளுக்கிடையே சுமார் 2 மைல் தூரம் நடந்து வந்தோம். பிற்பகல் சுமார் 25 மைல் தூரமுள்ள 'கலகா' பிரதேசத்து " மவுண்ட் ஹவானா" என்ற டீ எஸ்டேட்டுக்கு சென்றோம். அங்கு டீ பாக்டரியில் டீத்தூள் தயார் செய்வதை கண்டோம். அதை விளக்கட்டுமா? தெரிந்து கொள்ள விருப்பம்தானே... சரி கேளுங்கள்.

டீ செடியானது கிட்டத்தட்ட நந்தியாவட்ட புஷ்பச் செடி மாதிரி இருக்கிறது. இலை மட்டும் கொஞ்சம் சிறியது. அச்செடியை வருஷம் ஒருமுறை கத்தரித்து விடுவார்கள். அதாவது அடிக்கடி நாம் ஆஸ்ரமத்தில் தேன் காய்ச்சி மாமரத்தினடியில் உள்ள நந்தியாவட்ட செடியை உருண்டை வடிவமாய் கத்தரித்து விடுகிறோமல்லவா.... அது மாதிரிதான் என்று

வைத்துக் கொள்ளுங்கள். கத்தரித்துவிட்ட சில வாரங்களில் துளிர்க்க ஆரம்பிக்குமல்லவா... அந்த துளிர்களைத்தான் கிள்ளி சேகரிக்க இங்கு சுமார் 8 ½ லட்சம் இந்திய கூலித்தொழிலாளிகள் உள்ளனர். இவர்களைத்தானப்பா " தேயிலைத்தோட்டத்திலே" என்ற பாட்டை முசிறி சுப்பிரமணிய ஐயர் பாடி வைத்தார். சரி. அப்புறம் என்ன நடக்கிறது கேளுங்கள். துளிர்களை கிள்ளிச் சேகரித்து தோட்ட முதலாளிகளிடம் பவுண்ட்கணக்கில் நிறுத்திக் கொடுத்து அதற்குரிய கூலியை பெற்றுக்கொள்ளுகிறார்கள். அந்தத் துளிர்களை முதலில் சில நாட்கள் நிழலில் உலர்த்தி வாடவிடுகிறார்கள். அப்புறம் அவைகளை யந்திரத்தால் சுற்றும் இரும்பு சக்கியிலிட்டு அரைத்து (நம் நெல்அரைக்கும் சக்கி போல்தான்) பொடியாக்குகிறார்கள். டீத்தூள்களை யந்திர முறத்தால் சலித்து எடுத்து அத்தூள்களை யந்திர அடுப்பில் வறுத்து எடுக்கிறார்கள். வறுத்த தூள்களை 5 வகையான சல்லடையிலிட்டு இயந்திரத்தால் சலிக்கும்போது வகை வகையாக பிரிகிறது. அவைகளுக்கு முதல் தரம், இரண்டாம் தரம் என்று ஐந்து வகையாக பிரித்து விலைக்கு தக்கபடி பெட்டியிலிட்டு பேக் செய்கிறார்கள். டீ கேஸ் என்பது இதுதான்.

" புருக் பாண்ட்" , "கண்ணன் தேவன்" தேயிலை என்று எல்லாக் கடைகளிலும் விற்பனை ஆகிறது. அதாவது இந்த தோட்ட முதலாளிகளிடமிருந்து அந்தந்த பெயருள்ள கம்பெனிகள் மொத்தமாக விலைக்கு வாங்கி தங்கள் கம்பெனி பெயரை விலாசமிட்டு கொள்ளுகிறார்கள். இது தானப்பா தேயிலையின் வரலாறு. இதனால் தானப்பா இன்று மூலை முடுக்குகளில் எல்லாம் டீக்கடை ஏற்பட்டிருக்கிறது தெரிந்து கொண்டீர்களா... என்ன பலபேர் வாயிலே " தேயிலைத் தோட்டத்திலே " என்கிற பாட்டு வருகிறது போலிருக்கிறதே. சரி. இன்றைக்கு இது போதும். எல்லோரும் உண்டு இறைவனைப்பாடி ஆனந்தமாய் உறங்கச் செல்லுங்கள். இறைவணக்கம் பாடினால்தான் ஆனந்தமாய் உறங்கமுடியும். இல்லையேல் கெட்ட கனவுகள் வரும். " மனிதன் இறக்கும் போது எந்த நினைவு கடைசியில் இருக்கிறதோ அதற்கேற்ப மறு பிறவியடைகிறான்." என்பது சாஸ்திர விதி. ஆகையால்தான் உண்மையறிவு பெற்ற பெரியவர்கள் எல்லாம் நித்திய வாழ்க்கை வாழ்ந்து வரும் போதே கடவுள் ஞாபகத்தை சதா வைத்துக் கொள்ள பாடுபடுகிறார்கள். ஏனெனில் சாகிற காலத்தில் சங்கரா... சங்கரா என்ற ஞாபகம் திடீரென்று ஒருபோதும் வந்துவிடாது. சதா பழக்கத்தில் இருந்தால்தான் சாகின்ற காலத்தில் அது வரும். ஆகையால் நாள் முழுவதும் நல்ல மனதுடனேயே எச்செய்கையிலும் ஈடுபடுங்கள். இரவு படுக்குமுன்னும் ஒரு நிமிஷம் ஆழ்ந்து கடவுளை தியானித்து படுங்கள். உங்கள் எல்லோரையும் ஆண்டவன் ஆசீர்வதிப்பார். நாளை தொடரும்.

உங்கள் அன்புள்ள

சுவாமி

14. 8. 59 முகாம் கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

11.8.59 தபாலைத் தொடர்ந்து சொல்லுகிறேன். கேளுங்கள். 12.8.59 தேதி காலையில் புறப்பட்ட சுமார் 40 மைல் தூரத்திலுள்ள ஜாதிக்காய் எஸ்டேட் ஆரஞ்சு எஸ்டேட்களுக்கு போய் பலரை பார்த்து திரும்பினோம். சிலோனில் ஜாதிக்காயும் ஆரஞ்சும் பெயரளவுக்குத்தான் விவசாயம் செய்யப்படுகிறது. டீ தான் முக்கிய விவசாயமாக இருக்கிறது.

மாலை நேரம். கண்டி நகர் சென்று புத்தர்கோவிலில் நடைபெறும் "ப்ராகரா" என்னும் 10 நாள் உற்சவத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள "கார்னிவெல்" பொருட்காட்சியை பார்வையிட்டோம். பிரமாதமாய் ஏதுமில்லை. ஒன்று மட்டும் நம் நாட்டுப் பக்கம் வராத புது மாதிரியாக இருக்கிறது. அதாவது நம்மூர்த் தேர்திருவிழாவில் சிறுவர்கள் மரக்குதிரைகளிலும், பெட்டிகளிலும் ஏறிக்கொண்டு ராட்டினம் சுற்றுவார்களல்லவா? அதையேதான் இங்கு நாகரீகமாகவும் அழகுபெறவும் அமைத்து மின்சார மோட்டார் மூலம் இயக்கப்படுகிறது. ஒரு பெரிய வட்டத்தில் தண்டவாளம் பதிக்கப்பட்டுள்ளது. அதில் பல சக்கரங்கள் சுற்றிவரும். அதைச்சுற்றுவதற்கு மின்சாரம் மூலம் இயங்கும் ஒரு மிஷினை வைத்திருக்கிறார்கள். சக்கரங்களோடு இணைக்கப்பட்ட வண்ணவண்ண பெட்டிகள் சுற்றிசுற்றி வரும். பலவித வாத்யங்கள் வாசிக்கப்படுகின்றன. நம்நாட்டுக்கு வரும்போது நீங்கள் அதில் ஏறிச் சுற்றலாம். உங்களுக்கு இல்லாதது வேறு யாருக்கு?

13.8.59 இன்று வெளிப்பிரயாணம் யாதுமில்லை. கண்டி நகர் சென்று பலபேருடன் டெலிபோன் தொடர்பு கொள்ளவும், தந்தியடிக்கவும் சரியாய் போயிற்று.புத்தகக் கடைக்குச் சென்று 'இலங்கை வரலாறு' புத்தகம் உங்களுக்காக வாங்கி வருகிறேன். வரும்போது கொண்டு வருகிறேன். இரவு 71/2 மணி "வேய்ஸ்ட் பார்க்" என்னும் உச்சியிலுள்ள பூஞ்சோலை முகப்பிற்கு சென்று கண்டி நகரின் இரவுத் தோற்றத்தை கண்டோம். பல மைல் சுற்றளவுள்ள ஆயிரமாயிரம் மின் விளக்குகளால் பிரகாசிக்கும் நகரை அவ்விடத்திலிருந்து பார்த்தோம். மிகமிக பிரமாதமாயிருந்தது. சென்ற கடிதத்தில் தேயிலை தயாரிப்பு பற்றி எழுதியிருந்தேன். அதையடுத்து ரப்பரும் கொக்கோவும், மிளகும் இங்கு பயிராகிறது. தென்னையும் மிகுதி. யாழ்ப்பாணப் பகுதியில் பனையும் அதிகம். தென்னையும், பனையும் பற்றி நீங்கள் அறிந்ததே. தெரியாததைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். நேரில் பார்த்து அறிந்த அனுபவத்தில் எழுதுகிறேன்.

ரப்பர்மரம் :

இது நம் நாட்டில் பீனாரிமரம் நீண்டுவளருமே அதுமாதிரியிருக்கிறது. அடிமரத்தில் வளையம்போல் கணக்காக வெட்டி, வெட்டுக்காயத்தின் இறுதியில்

ஒரு தேங்காய்தொட்டியை, மரத்தில் அடித்த ஒரு தகரத்தின் பிடிப்பால் தொங்க விடுகின்றனர். சில மணி நேரத்திற்குள் வெட்டுக் காயத்தின்மேல் பகுதியிலிருந்து வெண்மைநிறமான பால்வடிந்து கொட்டாங்குச்சியில் விழுகிறது. அதையெல்லாம் மொத்தமாக சேகரித்து இரண்டு பாகம் தண்ணீரைக் கலந்து, பாக்டரியிலுள்ள யந்திர அடுப்பில் காய்ச்சி சதுரம் சதுரமாய் அச்சில் ஊற்றிவிட்டால் மறுநாள் கெட்டியான ரப்பராகிவிடுகிறது. அதை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். அதிலிருந்து வகைவகையான ரப்பர் சாமான்கள் செய்து மார்க்கட்டில் விற்பனைக்கு வருகிறது.

கொக்கோ :

இது டீ, காபி போல் பானம் தயாரித்து சாப்பிடும் பொருள். விலையும் அதிகம். இந்த மரம் கல்லாமணி மாமரம் போல் இருக்கிறது. காய்கள் இலவம் பஞ்சுகாய்கள் போலிருக்கிறது. காய்கள் பழுத்ததும் பிடுங்கி அதிலுள்ள கொட்டைகளை தனியே எடுத்துவிடுகிறார்கள். அவ்விதைகள் உலர்த்தப்பட்டு ஏற்றுமதியாகிறது. விதையை பொடி செய்து டப்பியில் அடைத்து மார்க்கட்டிற்கு அனுப்பிவிடுகின்றனர்.

மிளகு:

பொங்கலும், ரசமும் நினைவிற்கு வருகிறதல்லவா? இதன் இலைக்கும் வெற்றிலைக்கும் வித்யாசமில்லை. ஒரே மாதிரி இருக்கிறது. வாயில் மென்றால்தான் இது வெற்றிலை அல்ல எனத்தெரிகிறது. பலாமரத்தின் மேலும், இதர மரங்களின் மேலும் மிளகுக்கொடி ஏறிப்படர்கிறது. கொத்து கொத்தாய்க் காய்க்கிறது. காய் முற்றியதும் ஆய்ந்தெடுத்து காலால் மிதித்து காய வைத்து புடைத்து மிளகை தனியாக எடுக்கிறார்கள். இதுதான் கறுப்பு மிளகு. தோலை எடுத்துவிட்டால் வெண்மிளகு. மற்றது நாளை தொடரும்.

உங்கள் அன்புள்ள

சுவாமி

16.8.59 முகாம் : கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

14.8.59 தேதி முழுவதும் கண்டி நகரிலேயே டெலிபோன் செய்து பலருடன் பதில் அறிய நேரம் சரியாய் போயிற்று. இங்கு ஒருவரைப் பார்க்க வேண்டுமானால் முன்னறிவிப்பாக போனில் பேசி அறிவித்து விட்டுத்தான் போக வேண்டும். இங்கு போன் இல்லாத பங்களாக்களே இல்லை. முன்னறிவிப்பு செய்யாமல் திடீர் என்று போனால் மரியாதைக் குறைவாம். அத்துடன் அனேகமாக பங்களாவில் இருக்கவும் மாட்டார்களாம். இந்த நாட்டு வழக்கம் இது மாதிரியாம்.

15.8.59 : இன்று இந்திய நாட்டின் சுதந்திர தினமல்லவா? நீங்களெல்லாம் முன்பே வகுத்திருந்த திட்டப்படி காலை 9.00 முதல் 10.30 க்குள் நிகழ்ச்சியை முடித்து இனிப்பு சாப்பிட்டிருப்பீர்கள். ரேடியோ நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட மாணவர்கள் 11 மணி ரயிலில் திருச்சி போயிருப்பார்கள். ஆனந்தமாக ரேடியோவில் நடித்தும் இருப்பீர்கள். ஆனால் இங்கு ஏமாற்றம். ஆம் நேரம் 4 ½ மணியாயிற்றே என்று ரேடியோவை அணுகினோம். ஆனால் ரேடியோவிலிருந்து கரகரவென்ற ஒலிவந்ததே தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. உடனே காரை எடுத்துக்கொண்டு கண்டி நகர பங்களாக்கள் பலவற்றையும் முற்றுகையிட்டோம். எல்லா பங்களா ரேடியோக்களும் மௌனம் சாதித்தன. அப்புறம்தான் விஷயம் இன்னதென்று புரிந்தது. கண்டி என்பது நான்கு பக்கமும் உயரமான மலைகள் சூழ்ந்த நடுவில் பள்ளமாயுள்ள பகுதி. ஆகையால் திருச்சியும், சென்னையும் எப்போதும் கேட்பதில்லையாம். அது இன்றைக்குத்தான் நாங்கள் தங்கியிருந்த பங்களா பிரமுகருக்கும் தெரிய வந்தது. ஆகையால் உங்களுடைய ரேடியோ நிகழ்ச்சியை கேட்கும் வாய்ப்பு கிட்டாது போய்விட்டது.

சரி. சுதந்திர தினத்திற்கு உங்களுக்கு ஒரு செய்தி. இவ்விழாவானது ஒரு சடங்கு மட்டுமல்ல. நாடு அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து விட்டது. வாஸ்தவம் தான். ஆனால் மனிதர்கள் அற்பத்தனமான ஆசாபாசங்களின் ஆட்சியில் அடிமைப்பட்டிருக்கும் வரை சுதந்திரம் பெற்றவர்களாக மாட்டார்கள். ஆகையால் முழுமனதுடன் பகவானிடம் நம்பிக்கை வைத்து உங்கள் மனதிலுள்ள தோஷங்கள் நீங்க பிரார்த்தியுங்கள். முயலுங்கள். உங்களுடைய நன்மைக்காக என்னுடைய பிரார்த்தனையும் எப்போதும் கூடவேயிருக்கிறது. எங்கே ஒரு நிமிஷம் எல்லோரும் கண்ணைமூடி அமைதியாக அவரவர்களுடைய மனதை சோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று காலை சுமார் 35 மைல்தூரத்திலுள்ள புப்புராசி என்ற எஸ்டேட்க்கு போய் அங்கு பகலுணவு அருந்திவிட்டு மாலை உங்களது நிகழ்ச்சியை கேட்பதற்காகவே விரைவில் கண்டி நகருக்கு திரும்பிவிட்டோம். ஆனால் உங்களது நிகழ்ச்சியை கேட்க முடியவில்லை. ஏமாற்றம்தான் என்று முதலிலேயே எழுதியிருக்கிறேன்.

இங்கு கண்டியில் ஒரு பெரியவிழா. 10 ம் தேதியிலிருந்து நடந்து வருகிறது. இது இலங்கை நாட்டின் தேசீயத் திருவிழாவாம். இதுவரை நாங்கள் பார்க்கவில்லை. அவ்விழாவை காண ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பார்த்துவிட்டு அப்புறம் அதைப்பற்றி எழுதுகிறேன். சரி.... என்ன.... பௌர்ணமி வருகிறதே ஒரு சமயம் இக்கடிதம் கிடைப்பதற்குள் பௌர்ணமி விருந்து முடிந்திருக்கலாம். நல்லது, ஆனந்தமாய் தேவையானவற்றை திட்டம் போட்டு செய்து சாப்பிடுங்கள்.

16.8.59 இன்று கார் சர்வீசுக்கு போயிருப்பதால் வெளிப்பிரயாணம் எங்கும் செல்லவில்லை. மாலையில் கலெக்டர் ஐயா அவர்கள் சிங்களபாஷையில் நடைபெறும் சினிமாவை பார்க்க விரும்பியதால் அவர் மற்ற பிரமுகர்களுடன் சென்று விட்டார். நான் ஒரு சிறுவனை வழிகாட்ட அழைத்துக் கொண்டு தங்கியிருக்கும் பங்களாவுக்குச் சேர்ந்த கோகோ எஸ்டேட் உச்சிமலை வரை சென்று விட்டு இறங்கி வந்தோம். அம்மலையின் சிகரமானது பங்களாவின் தரைமட்டத்திலிருந்து சுமார் 10, 12 தென்னை மர உயரமிருக்கும். இம்மலை உச்சிக்கு சென்றதும் வடக்கே திரும்பி பார்த்தேன். அப்போது மாலை 5 ¾ மணியிருக்கும். நீங்களெல்லாம் மாலை பூஜைக்கு சுறுசுறுப்பாக தயாராகிக் கொண்டிருந்தீர்கள்.ஏன் சந்தேகமா? ஆச்சரியப்படுகிறீர்களா? சுவாமியாவது நம்மை எல்லாம் பார்ப்பதாவது... என்பதுதானே உங்களின் சந்தேகம். உண்மைதானப்பா. உங்களையெல்லாம் தெள்ளத்தெளிவாக என் மனக்கண்ணில் கண்டேன். இப்போது புரிந்ததா?

நாளை தொடரும்
உங்கள் அன்புள்ள
சுவாமி

19.8.59

அன்பார்ந்த குழந்தைகளே!

17.8.59 முழுவதும் கண்டி நகரில் உள்ள பலபிரமுகர்களை மட்டுமே சென்று பார்த்து வந்தோம்.

குழந்தைகளே! சிலோனில் யானைகள் அதிகம். எனவே யானைகளைப் பற்றி உங்களுக்கு சொல்லுகிறேன்.நம்ம பக்கங்களில் ஒரு யானை தெருவில் போனால் எவ்வளவு கூட்டம் கூடுகிறது. மாட்டுவண்டி போனால் கவனிப்பார் யாருமில்லை. ஆனால் இங்கு நாங்கள் காரில் எங்கு சென்றாலும் யானைகள் மாட்டுவண்டி செய்யும் வேலையை செய்து கொண்டிருப்பதைக் கண்டோம்.மரங்களை அடுக்குவது மரங்களை தூக்குவது, கற்களை தூக்குவது எல்லாம் யானைகள்தான்.

சரி ... அந்த விழாவைப்பற்றி எழுதுகிறேன். கண்டியிலுள்ள பெரிய கோவிலுக்குப் பெயர் ' தளதாமாளிகை' கண்டி நகரில் ' குவீன்ஸ்' ' கிங்ஸ்' என்ற இரு பெரிய ஒட்டல்கள் உள்ளன. அதாவது ராணி ஒட்டல், ராஜா ஒட்டலாகும். இதில் ராணி ஒட்டல் மிகப்பெரியது. ஒரு வேளை சாப்பாடு ரூ 12.50. விழாவைப் பார்க்க அங்கு நாற்காலி போட்டு ஸ்பெஷலாக ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு நாற்காலிக்கு ரூ 5,= ஏராளமான பெரிய பெரிய அதிகாரிகளும், வெள்ளைக்காரர்களும், சைனாக்காரர்களும் அந்த ஒட்டலில் வந்து கூடுகிறார்கள்.

17.8.59ந் தேதி இரவு ராணி ஓட்டலில் எங்கள் இருவருக்கும் இரண்டு சீட்கள் ரிசர்வ் செய்து வைத்தார்கள். சரியாக இரவு 9.00 மணிக்கு பொஹாரா விழா ஆரம்பமாயிற்று. நாம் கோவில் சுற்றி வருவதை பிரகாரம் சுற்றுதல் என்று சொல்லுகிறோமல்லவா? அதுதான் இங்கே மொஹரா ஆயிற்று போலும்.

முதலில் சுமார் 10 பேர்கள் அதிர்வெடி வெடித்தாற் போல் சாட்டையால் அடித்துக் கொண்டு வருகிறார்கள். அதையடுத்து ஏராளமான வாத்தியக்கருவிகளும் அவைகளின் இசையில் நடிக்கும் ஏராளமான கண்டி நடனக் கோஷ்டியும் வருகிறது. அதையடுத்து நாடகத்தில் வரும் பழைய ராஜாக்களுடைய உடை, ஆபரணங்கள் அணியப்பட்ட கோவில் டிரஸ்டி ராஜநடைபோட்டு ஊர்ந்து வருகிறார். அதையடுத்து பட்டத்து யானை ஒன்று முகபடாம், அம்பாரி தாங்கி வருகிறது. அந்த யானையை மட்டும் " சீரியல்' மின்கலர் பல்புகளால் தேஜோமயமாய் மின்ன அலங்கரித்துள்ளார்கள். அந்த பட்டத்து யானையைத்தொடர்ந்து பலவிதமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு யானைக்கூட்டம் வருகிறது. அதே மாதிரி நான்கு கோயில்களின் பரிவாரங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கின்றன.

புத்தர், மகாவிஷ்ணு, சுப்பிரமணியர், பத்தினியம்மன் ஆகிய 4 கோவில்களின் உற்சவமூர்த்திகளும் தொடர்ந்து வருகின்றன. கண்ணகியை பத்தினியம்மன் என்று இந்நாட்டில் கோவில்கட்டி வழிபடுகின்றனர். ஆக இந்த இடத்திலும் புத்தர், விஷ்ணு, சிவம், சக்தி ஆகியயாவும் ஒன்றுபடுவதைக் கவனியுங்கள்.

'தளதா' என்றால் சிங்கள மொழியில் 'பல்' என்று பொருள். புத்தருடைய ஒரு பல்லை பெட்டியிலிட்டு ஒரு அறையில் பூட்டி வைத்து பாதுகாக்கப்படுகிறது. இந்த கோவிலில் வருடம் ஒரு முறை 10 நாள் உற்சவம் நடக்கிறது. அதை இந்த நாட்டின் தேசீயத் திருவிழாவாக மக்கள் கருதுகின்றனர். நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள லட்சக்கணக்கான மக்கள் தினம் தினம் வந்து பார்த்துச் செல்லுகின்றனர். இரவு 10 மணிக்கு வரும் ஊர்வலத்தை பார்க்க பகல் 3 மணியிலிருந்தே ஜனங்கள் தெருவில் இடம் பிடித்து உட்கார்ந்துவிடுகின்றனர்.ஏராளமான போலீஸ், ராணுவம் ஜனங்களை ஒழுங்குபடுத்துகிறது. நம் நாட்டில் சாதாரண விழாக்களில் கூட ஆயிரக்கணக்கான மக்கள் ஒருவரை ஒருவர் முட்டி, நெறுக்கி தள்ளி, மிதிபடுவார்கள். அம்மாதிரியெல்லாம் இங்கு கிடையாது. லட்சக்கணக்கான மக்கள் அவரவர்கள் இடத்தில் மணிக்கணக்காக பொறுமையாக உட்கார்ந்திருந்து விழா பவனியை பார்க்கின்றனர். விழா முடிந்த பின் அமைதியாக எழுந்திருந்து கலைந்து செல்கின்றனர். இந்நாட்டில் சைக்கிள் அதிகம் கிடையாது. கார்கள்தான் அதிகம்... எந்த ரோட்டில் பார்த்தாலும் ஆயிரக்கணக்கான கார்கள் ரோடு ஓரங்களில் மைல்கணக்கில் " பார்க்" பண்ணி நிற்கின்றன.

விழா முடிந்தபின் ஏககாலத்தில் ஒருமணி நேரத்திற்குள் மக்கள் கலைந்து சென்றுவிடுகின்றார்கள். அதற்கேற்ப அகலமான ரோடுகள் மின்சார விளக்குகள் ஏராளமாக இருந்தாலும், ஆங்காங்கேயுள்ள இரும்பு வலைத்தொட்டிகளில் கொட்டாங்குச்சிகளை போட்டு சீமெண்ணை ஊற்றி தகதகவென எரிய விடுகின்றனர். மூட்டை மூட்டையாக கொட்டாங்குச்சிகள் கூடவே போகின்றன. விழா இறுதியில் பல்லக்குகள் வருகின்றன. அதில் சென்ற வருட திருவிழாவின் மறுநாள் எடுத்த வைத்த கங்கை நீர் நிறைகுடமாக இருக்குமாம். அதை " நீர் வெட்டு விழா" என்கிறார்கள். அதாவது விழாவின் கடைசிநாள் எல்லா கடவுளகளும் தீர்த்தாடனம் செய்ய அருகிலுள்ள மகாபலிகங்கைக்கு போகுமாம். அங்கு வாளால் கங்கையை வெட்டுவார்களாம். அவ்வெட்டு மறைவதற்குள் நிறைகுடமாய் தீர்த்தம் மொண்டு விடுவார்களாம். அதை அடுத்த வருஷ விழாவரை பாதுகாப்பார்களாம். சிறிதும் நீர் குறையாமல் நிறைகுடமாய் இருக்குமாம். இத்துடன் இவ்விழா முடிகிறது.

சரி உங்களுக்கு இவ்விழாவை கதை மாதிரி சொல்லிவிட்டேன். உங்களுக்கு அந்த நடனத்தையும், வேஷத்தையும், யானை அலங்காரத்தையும் 'தளதா' மாளிகை கோவில்களையும் பார்க்கலாம் என்று தோன்றுகிறதல்லவா. சரி... எல்லோரும் அவசரப்படாமல் ஒவ்வொருவராக இத்துடன் அனுப்பியுள்ள 5 கலர் போட்டோ படங்களை பார்த்து மகிழுங்கள்.

18.8.59 ந்தேதி சுமார் 150 மைல் பிரயாணம் செய்து , " நக்கின்ஸ்", " ரிகாட்செலா", " கெட்டவாலா" " பனிரெண்ட்டேக்கர்" எஸ்டேட் முதலான இடங்களுக்கு சென்று வந்தோம். ராமமூர்த்தி இத்துடன் உங்களுக்கு தனித் தபால் உள்ளது. நாளை தொடரும்.

தங்களன்புள்ள

சுவாமி.

19.8.59 முகாம் : கண்டி

அன்பார்ந்த ராமமூர்த்தி!

14.8.59 ம் தேதிய உங்களின் தபாலும் மற்றவர்கள் எழுதிய தபாலும் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி கடிதம் எழுதிய அனைவர்க்கும் அன்பு உரித்தாகுக.

குழந்தைகளுக்கு எந்த நோய் அதிகரித்தாலும் அவ்விஷயத்தை அன்பர் டாக்டர் விஸ்வநாதம் அவர்களிடம் விட்டுவிடுவது தானே நம்திட்டம். அப்புறம் வேறு யோசனை எதற்கு? நீங்கள் குழந்தை கிருஷ்ணமூர்த்திக்கு செய்த ஏற்பாடு சரிதான். இனி மேலும் அப்படியே..

அரிசி வேகாத குறையை சமையல்கார பெருமாளிடம் சொல்லி சரிசெய்து கொள்ளுங்கள். வேப்பம் பழ *சீசன்* வந்து விட்டதா? சரி ... சரி.. அதற்கு ஒரு திட்டம் வேண்டுமானாலும் வைத்து விடுங்களேன். தினம் ஒரு இரண்டாம் தர மாணவனை பிரித்துவிட்டு தென்னை விளக்குமாறும் சட்டியும் எடுத்து

வேப்பமரத்தடியில் ஒரு பழமும் இல்லாமல் உடனுக்குடன் கூட்டிப் பொறுக்கி சேகரம் செய்து குப்பைக்குழியில் மூடச்சொன்னால் வேலை முடிந்தது. ஐந்தாம் தரக் குழந்தைகள் சாப்பிடுவதும் நின்று விடும்.

தறி வேலை ஏன் தாமதப்படுகிறது? யார் காரணம்? தறிக்குத் தேவையான எல்லா பாகங்களும், உபரி சாமான்களும் வாங்கியாய்விட்டதல்லவா? ஏதாவது சாமான் கிடைக்கவில்லையா? அதனால்தான் தறி வேலைநின்று விட்டதா? அன்பர் தயாநிதியிடம் விபரம் கூறி கேளுங்கள்.

காமாட்சி கட்டட வேலையை உசிதம்போல் முடிக்கட்டும். கெராய் வெட்டி எடுக்க ஒரு நல்ல ஏற்பாட்டை செய்ய இயலுமா? என வெள்ளைச்சாமியிடம் கேளுங்கள். மற்றவை அடுத்ததில்

அன்புள்ள

சுவாமி

21.8.59 முகாம் கண்டி

அன்பார்ந் குழந்தைகளே!

முன் தபால் 18.8.59 முடிய கிடைத்திருக்கும். 19.8.59 ந்தேதி சுமார் 12 மைல் தூரத்திலுள்ள 'கே காலை' என்னுமிடத்துக்கு ஒரு அன்பருடைய வேண்டுகோளுக்கிணங்கி பகல் உணவுக்காக போய் வந்தோம். மாலையில் கண்டி மேல் பகுதியிலுள்ள ஒரு பிரபல ஆடிட்டரை கண்டு பேசி திட்டம் வகுத்தோம்.

20.8.59 தேதி காலை கண்டி நகருக்குள் சென்று வந்தோம். கார் சர்வீசுக்கு விட்டிருந்ததால் வெளிப்பிரயாணம் செய்யவில்லை. இன்றிலிருந்து எங்கள் முகாம் மாறுகிறது. ஒரு வாரத்திற்குப்பின் தான் மீண்டும் கண்டி வந்து சேருவோம். " அப் கண்ட்ரி" அதாவது மேல்நாட்டுப் பகுதிக்கு செல்லுகிறோம். எங்கிருந்தாலும் உங்களுக்கு இரண்டு நாளைக்கொருமுறை தபால் எழுதிக் கொண்டிருப்பேன். அங்கிருந்து வரக்கூடிய தபால்களும் மாமூல்படி வந்து கொண்டிருக்கலாம்.

அன்பார்ந்த பொதுவேலை மாணவர்களே! முதல் தரமாணவர்களே! என்ன... கெராய் வைக்கும் வேலையைத் தவிர மற்றவையெல்லாம் சரிதானே. தண்ணீர் டேங்க் வழுவழுப்பில்லாமல் வாராவாரம் சுத்தமாய் தேய்க்கப்படுகிறதா? டேங்க் மேடை, வாய்க்கால் தினசரியும், பாசம் பிடிக்காமல் நன்றாய் தேய்க்கப்படுகிறதா? சாக்கடை நீர்த்தொட்டிகள் வாடை வராமலிருக்க தினமும் தேய்க்கப்படுகிறதா? வாராந்திர ஒட்டடைஅடித்தல் வேலை சரியாய்த் தானே நடக்கிறது? டைனிங் ஹால், தயிர் கடையும் அறை, ஊறுகாய் நறுக்கும் வெராண்டா ஆகிய பகுதிகள் வழுவழுப்பில்லாமல் சுத்தம்தானே... கக்கூஸ் பகுதிகள் தினம் தினம் திட்டப்படி சுத்தமாக இருக்கிறதல்லவா..? எப்போதும் போல் இவைகளை கச்சிதமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

அன்பார்ந்த பண்டகசாலை மாணவன்! என்னப்பா குழந்தை சௌக்கியமா? நீ நன்றாய்த்தான் பார்த்து வருவாய். கச்சிதமாய் தொடர்ந்து பார்த்து வா. அன்பார்ந்த ஐந்தாம் தர குழந்தைகளே எல்லோரும் எங்கே தூங்காமல் கேளுங்கள். என்னப்பா உங்கள் பேரில் இப்படி புகார் வந்திருக்கிறதே. நீங்களெல்லாம் ஆஸ்ரமத்தின் தெய்வீகக் குழந்தைகள் அல்லவா. அற்பத்தனமான காரியங்கள் செய்யலாமா? வேப்பம் பழம் பித்தத்தையும் பல கோளாறுகளையும் உண்டாக்கும். வேண்டாமப்பா... வேண்டாம். எங்கே இனிமேல் யாரும் சாப்பிட மாட்டீர்களே. அதையெல்லாம் சாப்பிடாதீர்கள். நான் வரும் போது நிறைய சாக்லேட்டும், மிட்டாய்களும் வாங்கி வருகிறேன். உங்களுக்கு தேவையானதை, ஆசைப்படுவதை அண்ணாவிடம் ஆஸ்மரத்திலே தயார் செய்தோ,விலைக்கு வாங்கியோ கொடுக்கச் சொல்லுங்களேன்.

அன்பார்ந்த ராமமூர்த்தி! குழந்தைகள் கேட்பதை செய்தோ, வாங்கியோ கொடுங்கள். ஆனால் உடம்பு கெடாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வருட தீபாவளிப்பண்டிகைக்கு காக்கியிலேயே ஒவ்வொரு ஜோடி தைத்து நெம்பர் போட்டு தனியாக அலமாரியில் அடுக்கி வையுங்கள். வருஷாவருஷம் தீபாவளிக்கு எல்லாப்பிள்ளைகளும் புதுத்துணி அணிய வேண்டும். டைலரிடம் கூறி விடுங்கள்.

கறவை பசுவை விரைவில் வாங்கி வரச்சொல்லுங்கள். கார்ஷெட் கட்டட வேலை முறையாக செய்து வரட்டும். அவசரமும் கூடாது. சுணக்கமும் கூடாது. கார் ஷெட்டிற்கு பெயிண்ட் அடிக்கும் போது தயிர் கடையும் ரூம் தடுப்புக்கும் பெயிண்ட் அடித்துக் கொள்ளலாம். மற்றபடி குழந்தைகளின் குறைபாட்டிற்கு அவரவர்களுடைய வயதுக்கும், பொறுப்புக்கும் தக்கபடி புத்திமதி கூறுங்கள். நானும் எழுதியிருக்கிறேன். வாசித்துக்காட்டுங்கள். எல்லாம் ஒழுங்காய்விடுவார்கள்.

உங்கள் அன்புள்ள
சுவாமி

21.8.59 முகாம் கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

18.8.59 ம் தேதி மாலை நடந்த ஒரு நிகழ்ச்சியை குறிப்பிடுவது உங்களது சிந்தனைக்குரியதாகும்.

மாலை மணி சுமார் 4 ½ இருக்கும். வெகுதூரத்தில் சுற்றி விட்டு எங்களுடைய கார் ' கிங்ஸ்' ஒட்டலுக்கு முன் நின்றது. சுமார் 100 அடி தூரத்தில் ஒரு காட்சி. ரோடு ஓரத்தில் ஒரு பீர்க்கடையின் முன்னால் ஒரு நடுத்தர வயதுடைய சிங்கள பிச்சைக்காரன் உயிர் போகும் அவஸ்தையுடன் கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்க கண்களில் நீர் ஒழுக அனத்திக்கொண்டிருந்தான்.

எதிர்பாராது அவன் பார்வை எங்களின் மேல் விழுந்தது. அதைக் கலெக்டர் ஐயாவிடம் சுட்டிக்காட்டி எங்கும் ஏழைகள் நிலை ஒரே மாதிரியாகத் தானிருக்கிறது. அவனை ஆஸ்பத்திரியில் சேர்ப்பார் கூட இங்கு யாருமில்லையா? என்றேன். உடனே ஐயா அவர்கள் காரிலிருந்து இறங்கி விடுவிடுவென்று அந்நோயாளியிடம் சென்று அவனிருந்த ஆபாச நிலையையும் பார்க்காமல் பக்கத்தில் உட்கார்ந்து தமிழில் பல கேள்விகள் கேட்டார். இவர் போய் உட்கார்ந்ததும் சிறு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த ஒருவர் சிங்களத்தில் அந்நோயாளியை விசாரித்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார். அதிலிருந்து, " அவன் ஒரு பிச்சைக்காரன் என்றும் காலை 10 மணியிலிருந்து வயிற்றுவலியால் கஷ்டப்படுவதாகவும் கூறினான்." எனத்தெரிய வந்தது. ஆனால் யாரும் அவனை கண்ணெடுத்தும் பார்க்காமல் வழியில் போவோர் வருவோர் எல்லோரும் தம்தம் போக்கில் போய்க் கொண்டிருப்பதாகவும் தெரியவந்தது. உடனே கலெக்டர் ஐயா 50 சதம் நாணயத்தை அவனது மடியில் போட்டு விட்டு, " அவனை நம் காரில் எடுத்துப் போய் ஆஸ்பத்திரியில் சேர்க்கலாம்." என்று என்னைக் கலந்தார். நான் என்ன சொல்லியிருப்பேன் என்பது உங்களுக்கு தெரியும். சரியான ஜோடியை நமக்கு குருமகராஜ் சேர்த்துவிட்டார் என்று மனதிற்குள் நினைத்தேன். காரில் நோயாளியை தூக்கி வைக்க நாங்கள் தயாரானோம். அது சமயம் ஒரு தடை ஏற்பட்டது. " கொஞ்சம் பொறுங்கள்" சிலோனின் தற்கால நிலையைப் பாருங்கள். அவனோ சிங்களவன் நாமோ தமிழர். மிக மோசமான நிலையில் அவன் இருக்கிறான். காரில் போகும் போதே ஏதாவது மரணம் நேரிட்டு விட்டால் நம் கதி அதோகதிதான். தமிழன் ஒரு சிங்களவனைக் கொன்றுவிட்டான் என்ற பட்டம் கட்டி நடவடிக்கைக்கு சிறிதும் தயங்க மாட்டார்கள்." என்று எங்களைக் கவனித்துக் கொள்ளும் பிரமுகர் கூறினார். இனி என்ன செய்வது? அவனை எப்படியாவது ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும். அதுதான் எங்களின் குறிக்கோள். " இத்தனை பேர் இங்கிருக்கிறீர்களே யாராவது முனிசிபாலிட்டிக்கு போன் செய்தால் ஆம்புலன்ஸ் கார் வந்து எடுத்துக் கொண்டு போய்விடுவார்களே. யாரும் கவனிப்பதில்லையா" என்று கலெக்டர் ஐயா சிறிது சத்தம் போட்டு பேச ஆரம்பித்தார். உடனே எதிர்வீட்டிலிருந்த ஒரு வெள்ளைக்காரர் போன் செய்ததின் பேரில் கொஞ்சநேரத்திற்குள் ஆம்புலன்ஸ் கார்வந்து சேர்ந்தது. அத்துடன் 5, 6 ஆட்கள் வந்து சேர்ந்தார்கள். அந்நோயாளி இருக்கும் ஆபாச நிலையில், வந்த ஆட்கள் அவனைத்தொட்டு தூக்கி வைக்க பின்வாங்கினார்கள். இதையறிந்த நம் ஐயா அவர்கள் உடனே குனிந்து அவனைத் தொட்டுத்தூக்க எல்லா ஆட்களும் அப்புறம் பிடித்துத்தூக்கி ஆம்புலன்ஸ் காரில் வைத்தார்கள். காரும் போய்விட்டது.

மேற்படி சம்பவம் சுவாமி விவேகானந்தர் பேலூர் மடத்திலிருந்து கல்கத்தா தெருவழியே நடந்து போய்க்கொண்டிருந்த போது காலரா நோயால் வருந்தி வீதியில் படுத்துக்கிடந்த நோயாளியை தம் தோளில் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டதை ஞாபகத்திற்கு வந்தது.

“ மலையப்பா உம்மைப்போல் எத்தனை கலெக்டர்கள் இம்மாநிலத்தில் உள்ளனர். ஆனால் ஏழைபங்காளன் சேவைக்கு ஒரு மலையப்பன் தானே முன் வந்துள்ளார்.” என மனதில் எண்ணி வியந்தேன். இம்மாதிரி தனக்கென வாழா பிறர்க்கென வாழும் தியாக மூர்த்திகள் எத்தனை பேரை ஸ்ரீராமகிருஷ்ண குடில் உற்பத்தி செய்யும்? இக்கேள்விக்கு உங்களுடைய எதிர்கால வாழ்க்கை பதில் அளிக்கும்.

பொதுவேலை மாணவன் சொற்படி அனைத்து மாணவர்களும் அவரவர்களின் கடமைகளை ஒரு சிறிதும் குறைவின்றி செய்து வருவீர்கள் என்று எனக்குத்தெரியும். சரி... சரி... இத்துடன் இன்றைக்கு போதும். நாளைக்கு பார்ப்போம்.

நாளை தொடரும்
உங்கள் அன்புள்ள
சுவாமி

25.8.59 முகாம் : டிக்கோயா

அன்பார்ந்த குழந்தைகளே!

20.8.59 வரை எழுதப்பட்ட கடிதம் கிடைத்திருக்கும்.

21.8.59 தேதியன்று கண்டிக்கு மேல்புரத்திலுள்ள ‘ மேரின்பாக்’ என்னும் பங்களாவில் ஒரு பிரமுகர் பகல் உணவுக்கு அழைத்திருந்தார். அங்கு போனதில் இரண்டு விசேஷம். ஒன்று அந்த பங்களாவை ஒட்டியிருந்த ‘ டார்வின்’ மாளிகையில்தான் 1928 ல் மகாத்மாஜி இலங்கைக்கு வந்த போது தங்கியிருந்தாராம். அம்மாளிகை பார்க்கப்பட்டது. மற்றொன்று நம் நாட்டில் இல்லாத அதிகவிலை பொருந்திய ‘ பாண்டியாக்’ என்னும் கார். இதன் விலை ரூ 49,000/= என்று கூறினார்கள். அது இலங்கை சுகாதார மந்திரி திருமதி. விஜயவர்த்தனாவுடையது. எங்களை அக்காரில் ஏறச்சொல்லி சுமார் 4, 5 மைல் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்தார்கள்.

இன்று முதல் எங்களுடைய முகாம் மாறுகிறது. ஆகையால் மூட்டை முடிச்சுகளை காரில் தூக்கிப்போட்டுக் கொண்டு ஏறி மாலை 6.15 மணிக்கு கண்டியை விட்டு புறப்பட்டோம். சுமார் 85 மைல் தூரத்திலுள்ள “ ரம்போடை” பங்களாவில் இரவில் தங்கினோம்.

22.8.59 அன்று காலை 7.45 க்கு புறப்பட்டு சுமார் 18 மைல் தூரத்திலுள்ள ‘தேவன்குரூப்’ பங்களாவையும் பார்த்துவிட்டு அங்கிருந்து சுமார் 20 மைல் தூரத்திலுள்ள ‘ ஹட்டன்’ ‘நிக்கோயா’ என்னும் பகுதிகளுக்கு போய்ச்

சேர்ந்தோம். அங்கு ஒரு அன்பர் வீட்டில் பகல் உணவு சாப்பிட்டு பிற்பகல் சுமார் 15 மைல் தூரத்திலுள்ள 'மெக்காலியா' என்னும் பகுதிக்கு போய்விட்டு மீண்டும் திரும்பி வந்து, 'நிக்கோயாவில்' தங்கினோம். இன்று பிரயாணம் செய்யும் போது ஒரு சிறு நதியில் சுமார் 120 அடி நீளத்தில் இலங்கை சர்க்காரால் போடப்பட்ட ஆடும் பாலத்தை பார்த்தோம். அவசியமானால் நமது ஆஸ்ரம வாய்க்காலுக்கு பள்ளிக்கட்டடம் நேராக மேற்படி பாலம் மாதிரி போட யோசிக்கலாம். சுமார் 200 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் நீரைத் தேக்கி இலங்கை சர்க்கார் மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர் நிலையை பார்த்தோம். அன்று தங்கியிருக்கும் இடம் சுமார் 4600 அடி உயரமுள்ள மலை சூழ்ந்த பாகம். நாள் பூராவும் மழை. ஆனால் நாங்கள் பிரயாணத்தை நிறுத்தவில்லை. தொடர்ந்தோம். மிகக்குளிராக இருந்தது.

சென்ற தபாலில் ' தளதாமானிகா' பொஹறா திருவிழாவைப் பற்றியும் அப்போது அங்கு எடுக்கப்பட்டுள்ள போட்டோ படங்களையும் நீங்கள் பார்ப்பதற்காக அனுப்பியிருந்தேனே. பார்த்தீர்களா? அதைப் பார்த்து நீங்கள் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பீர்கள். சிறிய குழந்தைகளுக்கு பெரிய குழந்தைகள் படத்தை காட்டி விவரமாக கூறுங்கள். அவர்களும் சிறிது புரிந்து கொள்ளட்டும். ஆனால் இன்று எதிர்மறையான ஒரு சோகக்கதையை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

பொஹறா திருவிழாவின் கடைசிநாளான 19.8.59 தேதி இரவு நூற்றுக்கணக்கான யானைகள் ஊர்வலம் வந்து கொண்டிருக்கும் போது ஒரு யானைக்கு மதம் பிடித்து அட்டகாசம் செய்ததில் பத்து பேர்களுக்கு மேல் அந்த இடத்திலேயே இறந்து போய்விட்டார்கள். நூறுபேருக்கு மேல் அதிக காயம். கவலைக்கிடமான நிலையில் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளார்கள். ஆயிரம் பேருக்கு மேல் சாதாரண காயம். இடையூறுகள் ஏற்பட்டன. அந்த யானையை போலீசார் அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றனர். இப்படி உலகில், இன்று களிப்பும், நாளை துக்கமும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். இதுதான் உலகம். அவைகளை தாங்கிக் கொள்ளும் சக்தியை பிரார்த்தனை மூலம் பெறுவதற்கு நாம் முயலவேண்டும். சரியப்பா நாளை மீண்டும் சந்திக்கலாம். வருகிறேன். தொடரும்

உங்கள் அன்புள்ள

சுவாமி

25.8.59 முகாம் : நுவாரிஸ்டா

அன்பார்ந்த குழந்தைகளே!

22.8.59 வரை எழுதப்பட்ட கடிதம் கிடைத்திருக்கலாம்.

23.8.59 தேதி காலை 'நிக்கோயா' விலிருந்து புறப்பட்டு 'தேவன்குரூப்' 'நுவரேலியா' 'பண்டாரவளை' 'அப்புத்தலை' 'பணிகா குரூப்' ' கொத்தலாந்தை'

முதலான இடங்களுக்கு சுமார் 120 மைல் தூரப்பிரயாணம் செய்தோம். பகல் உணவு 'அப்புத்தலை' 'வாடிவீட்டில்.இரவு தங்கல் 'கொத்தலாந்தை வாடி வீட்டில். வாடி வீடு என்றால் 'நாடி வருவோர் களைப்பாறும் விடுதி' என்று பொருள். டிராவலர்ஸ் பங்களா ரெஸ்ட் ஹவுஸ் என்பதைத்தான் யாழ்ப்பாணத் தமிழில் வாடி வீடு என்கின்றார்கள். இங்கு நுவரேலியா என்பதுதான் சிலோனில் உயரமான மலையாம். அனேகமாய் ஊட்டி மாதிரி சுமார் 8500 அடி உயரமிருக்கும். குளிர் மிக அதிகம். மழையும் பெய்தது. அந்த உச்சியிலிருந்து இறங்கி வரும் போது, சீதையை ராவணன் சிறையில் வைத்த அசோகவனத்தையும், ஹனுமன் எரித்த புல் முளையாத, மரங்களே இல்லாத பகுதியையும், சீதையம்மன் கோயிலையும், சீதை குளித்த தீர்த்தவாரியையும் காட்டினார்கள்.

24.8.59 தேதி அதிகாலை புறப்பட்டு சுமார் 70 மைல் தூரமுள்ள பெயர்பெற்ற முருகன் க்ஷேத்திரமான கதிர்காமம் சென்றோம். வழியில் 628 அடி உயரத்திலிருந்து விழும் நீர்வீழ்ச்சியை கண்டோம். இப்பகுதியில் மாணிக்க கங்கை இருக்கிறது. நம்ம வாய்க்காலை போன்றிருக்கும். நீர் அதிகம் இல்லை. சிலுசிலுவென்றிருக்கிறது. கோயில் மிகச்சிறியது. சிலையாதுமில்லை. திரையில் உருவம் எழுதி தொங்குகிறது. கோயில் தரிசனத்துக்குப்பின் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் பகல் உணவு உண்டோம். பணம் கொடுத்து சாப்பிடும் அந்தஸ்து உள்ளவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட இங்கு மடம் ஏற்பட்டிருக்கிறது. மாலை புறப்பட்டு சுமார் 80 மைல் தூரமுள்ள அப்புத்தலை வந்து 'பூனாவிஸ்டா' என்ற ஒட்டலில் தங்கினோம். இரவு தங்கல் இங்குதான்.

சரி அனேகமாய் அடுத்தவாரம் திரும்பிவிடுவோம். ஏதாவது அசந்தர்ப்பம் ஏற்பட்டால் மேலும் சில தினங்கள் தங்க வேண்டி வரும். எல்லோரும் கடமைகளை சரி வர நிறைவேற்றி, படித்து, உண்டு, உறங்கி சந்தோஷமாய் ஆனந்தமாய் இருங்கள். விரைவில் வந்து சேருகிறேன். தொடரும்.

உங்கள் அன்புள்ள

சுவாமி

27.8.59 முகாம் : கண்டி

அன்பார்ந்த குழந்தைகளே!

24.8.59 தேதிவரை எழுதப்பட்ட கடிதம் கிடைத்திருக்கும். 25.8.59 அன்று 'அப்புத்தலை' யிலிருந்து புறப்பட்டு 'பண்டாரவளை' ஜவஹர்லால் நேரு எஸ்டேட், 'ரோஸ் லேண்ட்' 'பதுளை' ஆகிய இடங்களுக்கு பயணம் செய்தோம். 'பதுளை'யில் 'ஏளிவியாமிண்டி', குரூப் எஸ்டேட் பங்களாவில், இரவு தங்கினோம். 26.8.59 அன்று காலையில் 'பதுளையிலிருந்த புறப்பட்டு பண்டாரவளை, அப்புத்தலை, நுவரேலியா, ரம்போடை வழியாக கண்டி வந்து சேர்ந்தோம்.

ஏனப்பா குழந்தைகளே! நேருஜி உங்களுக்கு அவருடைய அன்பு நன்கொடையை அனுப்பியிருக்கிறார். யோகம்தான். நீங்கள் எல்லாம் அதிர்ஷ்டசாலிகள்தானப்பா. குருமகராஜ் குழந்தைகள் அல்லவா நீங்கள். இதுவும் நடக்கும். இன்னும் எதுவும் நடக்கும். அதை இன்றைக்கு நான் வெறும் வாய்வார்த்தையாக உங்களுக்கோ, உலகத்துக்கோ சொல்லவில்லையப்பா. இதையெல்லாம் நீங்கள் ஒருவருமேயில்லாத காலத்தில் ஆறுவருஷத்திற்கு முன்பே குருமகராஜ் பாதத்தடியில் வீற்றிருந்து அழுது அழுது கண்ணீர் உகுத்து முதல் அறிக்கையின் 60 வது பக்கத்திலும் 65 வது பக்க முடிவுரையிலும் எழுதி வைத்தேனப்பா. இன்றைக்கும் என்றைக்கும் அவரது பாதத் திருவடியில் எம்முடைய கண்ணீர் மழை பொழிந்து அவருடைய திருவடியை கழுவிக்கொண்டேயிருக்கிறதப்பா. இதை யாரும் அறியார். அறியவும் முடியாதப்பா. இந்த சரீரம் இருக்கும் போதோ மறைந்த பின்போ ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் ஏற்படும் அற்புதங்களை பிற்கால சந்ததியினர்கள் பார்க்கத்தான் போகிறார்கள். ஆகையால் நிகழ்வது நிகழப்போவது எல்லாம் அவருக்கே அர்ப்பணம்.

திருச்சியில் நடக்கும் சர்க்கஸ் அடுத்த மாதம் முதல்வாரம் வரை நடப்பதாயிருந்தால் நான் வந்த பின் வைத்துக்கொள்ளலாம். இம்மாதம் 31 ம் தேதிக்குள் முடிவடையும் என்றால் அன்பர் தயாநிதி அவர்களிடம் கலந்து பேசி சூழ்நிலைக்கேற்ப உசிதம்போல செய்யலாம்.

அன்புக்குழந்தைகளே! நீங்களும் உங்கள் வாழ்க்கையை அவருக்கே அர்ப்பணம் செய்யுங்கள். அவருக்காக உண்ணுங்கள். அவருக்காக உறங்குங்கள். அவருக்காக வாழுங்கள். சரியப்பா.. வரட்டுமா. உங்களையெல்லாம் விட்டு எத்தனை நாளைக்குத்தான் இந்த சரீரம் பிரிந்திருப்பது? இதோ 31.8.59 ம் தேதி பிற்பகலே பறந்து வந்துவிடுகிறேன். சரியப்பா. சிலோன் ஸ்டாம்ப்புகள், கத்தரிகோல் போன்ற சட்டவிரோதமில்லாத சாமான்களை வாங்கிவர முயற்சிக்கிறேன்.

உங்கள் அன்புள்ள
சுவாமி

குறிப்பிட்ட நாளில் சுவாமிஜியும் கலெக்டர் ஐயாவும் திருச்சி வந்து சேருகின்றனர். சுவாமிஜி அவர்கள் மாலையில் 5.30 மணி சுமாருக்கு ஆஸ்ரமம் வந்து சேர்ந்தார். சுவாமிஜியின் வருகையை எதிர்நோக்கி குழந்தைகள் அணி வகுத்து நின்று ஆவலோடு காத்திருந்தனர். சுவாமிஜி அவர்கள் காரைவிட்டு வந்ததும் மலர்ந்த முகத்தோடு கூடியிருந்த அனைவரையும் நோக்கி புன்முறுவலுடன் இருகை கூப்பி நமஸ்கரித்தார். ஒவ்வொரு குழந்தையாக

பார்த்துவிட்டு ஆஸ்ரமம் சென்று அறையில் அமர்ந்தார். குழந்தைகளுக்கு ஒரே ஆனந்தம்.

"அப்பா குழந்தைகளா... இது நாள்வரை என் உடல் இலங்கையிலும் உயிர் ஆஸ்ரமத்திலும் இருந்தது. இன்று உடலோடு உயிர் கலந்து இரண்டும் ஒன்றுக்குள்ளே ஒன்றாக இணைந்து விட்டதப்பா. குருமகராஜ் கருணையில் எல்லாம் நல்லபடியாக நடந்தது. போயிருங்கள். உங்களுக்கு கொண்டு வந்த சாக்லேட், பிஸ்கட்,மிட்டாய்களை நானே தருகிறேன். கலெக்டர் ஐயாவும் டின் டின்னாக மிட்டாய்கள் வாங்கி கொடுத்துள்ளார். இன்னும் பத்து நாளைக்கு மாலைதோறும் மிட்டாய் பிரசாதம்தான். மகிழ்ச்சிதானே. இலங்கை பிரயாணக் கதையை தொடர்ந்து எழுதிய கடிதங்கள் மூலம் ராமமூர்த்தி வாசிக்க கேட்டிருப்பீர்கள். இன்று மாலை பூஜை முடிந்ததும் இரவு வகுப்பு இல்லை. சுவாமிஜியின் கூட்டம் இன்று உண்டு. எனது இலங்கை பயணத்தைப் பற்றி நீங்கள் என்ன கேட்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ கேளுங்கள். இரவு பார்க்கலாம். போய் வாருங்கள்.

மாணவர்கள் கலைந்து அவரவர் பணிக்குச் செல்கின்றனர்.

நமக்கெல்லாம் ஒருமனம்தான் உண்டு. ஆனால் சுவாமிஜி அவர்களுக்கு "இரு மனங்கள்" உண்டு. நாம் எதைப் பார்க்கின்றோமோ கேட்கின்றோமோ அதன் நினைவிலேயே மனம் லயித்து விடும். வேறு ஒன்றை நினைக்கவோ சிந்திக்கவோ நம்மால் இயலாது.

இலங்கை பயணத்தின்போது சுவாமிஜி அவர்கள் பார்த்தவைகளையும், கேட்டவைகளையும், அவைகளின் சாராம்சங்களையும் அவரது ஒரு மனம் கிரகித்துக் கொள்ளும்.

அவரது அடுத்த மனம் பரமஹம்ஸரையும் அவரது தூய ஆலயமாகிய குடிலையும், அதில் வாழும் "உடல் போர்த்த நாராயணர்" களையும் சதா நினைத்து கொண்டேயிருக்கும். இதை அவரது ஒவ்வொரு கடிதத்திலும் காணலாம்.

ஸ்ரீராமதூதனாகிய ஆஞ்சநேயனின் ஒவ்வொரு ரோமக்கால்களிலும் ராமப்பிரபுவின் திருஉருவமே நிறைந்திருக்கும். அவரது நெஞ்சிலே சதா ராமனின் நினைவு குடிகொண்டிருக்குமாம். அனுமனின் மனதிலே ஸ்ரீராமனைத் தவிர எதுவுமேயில்லை. அவரின் சிந்தனையிலும் ராமர் இருப்பார். அவரின் சொல்லிலும் ராமர் இருப்பார். அவரின் நினைப்பிலும் ராமர் இருப்பார்.

ஸ்ரீராம மஹாபிரபுவுக்கும், ஆஞ்சநேயனுக்கும் இடையேயுள்ள தொடர்பைப் போன்றதுதான் சுவாமிஜிக்கும் குடிலுக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரால் ஆட்கொள்ளப்பட்ட வட்டத்தொடர்பு இதுவேயாம். முடிவில்லாதது. ஒன்றைவிட்டு ஒன்றில்லை. எல்லாம் ஒன்றுக்குள் அடக்கம்.

மலேயா, பினாங்கு, சிங்கப்பூர் பயணக்கட்டுரை

5.5.61 முகாம் : சிங்கப்பூர்

அன்பார்ந்த குழந்தைகளே!

சுவாமி புறப்பட்டுப்போய் சுமார் ' ஒரு வாரமாகிறதே' கடிதம் வரவில்லையே என்று அனேகம் பேர் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். சென்னையிலிருந்து தொலை தூர பிரயாணம். ஆதலால் முதல் கடிதம் கொஞ்சம் தாமதமாகத்தான் வரும். இனி தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்.

சரி. எல்லாம் ஆனந்தம்தானே. சித்ரா பௌர்ணமி மாடியில் ஆனந்தமாய் நடந்திருக்கும். மறுநாள் இரவு காவேரிக்கரையில் விளையாட்டு எல்லாம் முறைப்படி நடந்திருக்கும். திருச்சி விமான நிலையத்திலிருந்து நாங்கள் புறப்பட்டதைப் பற்றி உங்கள் சகோதரர் இருவரும் சொல்லியிருப்பார்கள். அந்த போட்டோவும் பார்த்திருப்பீர்கள். நாங்கள் திருச்சியிலிருந்து காலை 8.15 மணிக்கு புறப்பட்டு இரவு சென்னையை அடைந்தோம். மறுநாள் 1.5.61 ம் தேதி மதியம் 12 மணிக்கு புறப்பட்டு இரவு 8.30 மணிக்கு சிங்கப்பூர் சேர்ந்தோம். அது இந்தியாவில் மாலை 6.30 ஆகும். சிங்கப்பூர் விமான நிலையத்தில் போட்டோ கிராபர் பூமாலை சகிதம் அன்பர்கள் கூட்டம் வரவேற்று உபசரித்து பின் விருந்து மயம்தான். வசதியான ஜாகையில் இரவு தங்கல். மறுநாள் 2.5.61 பிற்பகல் 2.15 க்கு சிங்கப்பூரில் விமானம் ஏறி மாலை 4.15 க்கு கோலாம்பூர் சேர்ந்தோம். போட்டோ, பூமாலை சகிதம் அன்பர்கள் வரவேற்பு. கோலாலம்பூரிலிருந்து கிள்ளான் 21 மைல் தூரம். இங்குதான் நம்மை வரவேற்கும் முருகன் கம்பெனியின் தலைமை ஆபீஸ் இருக்கிறது.

இங்குதான் தற்சமயம் தங்கியுள்ளோம். ஆஸ்ரமத்திலிருந்து சென்னை சுமார் 200 மைல். சென்னையிலிருந்து சிங்கப்பூர் சுமார் 1900 மைல். சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் சுமார் 300 மைல். ஆக மொத்தம் சுமார் 2400 மைல்கள். சுமார் 9.30 மணி நேர விமானபயணம். அதில் திருச்சியிலிருந்து சென்னையும், சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் வரையும் பறந்த விமானம் சாதாரணமானது. அதாவது நம்ம ஊர் D.S.M. பழைய பஸ் மாதிரி. ஆனால் சென்னையிலிருந்து சிங்கப்பூர் வந்த விமானம் உயர்ந்த ரகம். அது எங்களை சிங்கப்பூரில் இறக்கிவிட்டு நேரே சிட்னி வழியாக ஆஸ்திரேலியா போகிறது. புதிதாக வந்திருக்கும் 'கெடிலாக்' கார் மாதிரி என்று வைத்துக் கொள்ளலாம். அது போவதே தெரியவில்லை. ஆஸ்ரமத்தில் சேரில் உட்கார்ந்திருக்கிற மாதிரி இருந்தது. உட்காரலாம். படுக்கலாம். முன்னால் உள்ள பலகையை இழுக்கலாம். எழுதலாம். படிக்கலாம். சாப்பிடலாம். பிளஷ்அவுட் கக்கூஸ் ஆகிய எல்லா வசதிகளும் உண்டு.

அன்புச்சிறுவர்களே! இதெல்லாம் ஒருவிதமாய் தூரத்திலிருந்தே மானசீகமாய் நீங்களெல்லாம் நினைத்து பார்த்து அறிந்து கொள்வதற்காக

குறிப்பிட்டேன். சரீரம்தான் தூரத்திலிருக்கும். ஆனால் மனதிற்கு தூரம் சமீபம் என்ற வித்தியாசமில்லை. மனம் நினைத்த மாத்திரத்தில் உங்களையெல்லாம் தெளிவாக பார்க்க முடிகிறது. எங்கே.... நீங்களும் புன்னகை தவழும் ஆனந்த முகத்துடன் ஒரு நிமிஷம் என்னை உற்று நோக்குங்கள். உம். ... எல்லோரும் பார்த்தீர்களா? ரொம்ப சந்தோசம். இரவு உறுதிமொழி முடிந்து துணி சரிபார்த்தவுடன் எல்லோரும் முறைப்பிரகாரம் படிக்கப் போக வேண்டும் அல்லவா.. ஆம் கடமையை சரியாகத்தானே தவறாது செய்ய வேண்டும்?. ஆமாமப்பா எல்லோரும் புறப்படுங்கள் படிப்பதற்கு. நாளை மீண்டும் உங்களை சந்திக்கிறேன். வரட்டுமா? சரி... சரி... வருகிறேன்.

உங்கள் அன்புள்ள

சுவாமி

5.5.61 முகாம் : கிள்ளான்

அன்பார்ந்த குழந்தைகளே!

உறுதிமொழி முடிந்ததா. எல்லோரும் அமைதியாக குதூகலமாக நின்று கேளுங்கள்... கேளுங்கள்.

2.5.61 தேதிய கடிதம் கிடைத்திருக்கும். 3.5.61 தேதி எங்கும் வெளியில் செல்லவில்லை. நாம் பார்க்க வேண்டிய மலேயா அன்பர் பலருக்கும் நாம் அறிக்கையுடன் கடிதங்கள் எழுதி தபாலில் அனுப்பப்பட்டன. சென்ற வருஷம் நம் ஆஸ்ரமத்திற்கு மலேயா மந்திரி சம்மந்தன் அவர்கள் வந்திருந்தாரல்லவா? அவரைத்தான் உங்களுக்கு தெரியுமே ரொம்ப உயரமான ஆளப்பா. மண்டியிட்டு நம் குழந்தை கோபாலிடமிருந்து கதர்மாலையை கழுத்தில் வாங்கிக் கொண்டாரல்லவா? அவருடன் போனில் பேசினோம். 4.5.61 மதியம் சாப்பாட்டிற்கு தம் பங்களாவுக்கு வந்துவிடும்படி கேட்டுக்கொண்டார். கிள்ளானிலிருந்து கோலாலம்பூருக்கு 21 மைல்தூரம் காரில் மந்திரியின் பங்ளாவுக்கு சென்றோம். மலேயா நாட்டு மந்திரியின் பங்களா எப்படியிருக்கும்? மந்திரி வீட்டு விருந்தல்லவா? அவரது வீடும் ஜோர்தான். விருந்தும் ஜோர்தான். ஆனால் அந்த விருந்தினால் எனக்கு என்ன பிரயோஜனம்? அவர் நாளை முதல் 1 வாரம் வடமலேயா சுற்றுப்பிரயாணம் போகிறவர். அப்புறம் மீண்டும் சந்திப்பதாக ஏற்பாடு.

மலேயாவிலிருந்து குடிலுக்கு இருமுறை வந்த சுவாமி சத்யானந்தா என்பவரை உங்களில் பலருக்கு தெரிந்திருக்கலாம். இங்கு அவர் நம்ம ஸ்தாபனத்தை போல் நடத்தி வருகிறார். அதைப்பார்க்கச் சென்றோம். சுமார் 50 பேர் சிறுவர்களும் சிறுமிகளும் இருக்கிறார்கள். 'சுத்த சமாஜம்' என்று அந்த ஸ்தாபனத்திற்கு பெயர். அங்கு சென்ற மாதம்தான் ஒரு விபரீதம் ஏற்பட்டுவிட்டதப்பா. மிகவும் பரிதாபம். அந்த சுவாமி அங்குள்ள பெரிய

பிள்ளைகளுக்கு மோட்டார் மெக்கானிக், மோட்டார் ஓட்டுதலில் பயிற்சியளித்து வந்தார். அதில் 2 மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றனர். அவர்களிடம் கார் ஓட்டச் சொல்லி பக்கத்து ஊருக்கு சென்றார். அவ்வளவுதானப்பா. பரிதாபம். மாணவர் ஓட்டிச்சென்ற கார் ஒரு மடுவில் விழுந்துவிட்டது. சுவாமிஜி உயிர் நீத்தார். மாணவர்களுக்கு பலத்த அடி. ஆஸ்பத்திரியில் படுக்கை. இப்போதுஅவர் இல்லாததால் அந்த ஸ்தாபனத்தின் எதிர்காலம் எப்படி என்பது பிரச்சனையாக உள்ளது.

நாங்கள் மலேயா விஜயம் செய்ததைப் பற்றி பத்திரிக்கையில் போட்டோ படத்துடன் வரும்படி யார் யாரோ ஏற்பாடு செய்துவிட்டார்கள். உலகப் போக்கு மனிதனிடம் மறைந்துள்ள பொய்யான கௌரவத்தை கிளர்ந்தெழச் செய்யும். நடப்பதெல்லாம் குருமகராஜின் லீலைகள். சரியப்பா இன்று இதுவரை போதும். மற்றவை நாளை.

நான் சொல்லி வந்ததை எல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் அப்பா.

உங்கள் அன்புள்ள
சுவாமி

நேசன் பத்திரிக்கையில் வந்த செய்தி

கோலாலம்பூர். மே.3

திருச்சி ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தின் தலைவர் பிரம்மசாரி ராமசுவாமியும், திருச்சி ஜில்லாவின் பதவி ஒய்வு பெற்ற கலெக்டர் திரு. R.S.மலையப்பனும் மலேயாவைச் சுற்றிப் பார்க்க நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை கோலாலம்பூர் வந்து சேர்ந்தனர். தமிழகத்தின் இருபிரமுகர்களையும் கோலாலம்பூர் விமான நிலையத்தில் பல நண்பர்கள் வரவேற்றனர்.

சுமார் 2 மாதங்கள் மலேயாவில் தங்கி பல பகுதிகளை சுற்றிப் பார்க்கவிருக்கும் பிரம்மசாரி ராமசுவாமி பொது மராமத்து தபால்தந்திதுறை அமைச்சர் டத்தோ சம்மந்தன் அவர்களையும் காணவும் திட்டமிட்டுள்ளார். டத்தோ சம்மந்தன் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது திருச்சி ராமகிருஷ்ண ஆஸ்ரமத்திற்கும் விஜயம் செய்து திரு.ராமசுவாமியை சந்தித்தார்.. மேலே உள்ள நேசன் படத்தில் கோலாலம்பூர் விமானநிலையம் வந்து சேர்ந்த பிரம்மசாரி ராமசுவாமி திரு. மலையப்பன் ஆகியோரையும் வரவேற்க விமானநிலையம் வந்திருந்த கிள்ளான் முருகன் கம்பெனி நிர்வாகி திரு. ஆர். கோவிந்தசாமி பிள்ளை. ம.இ.கா. பிரமுகர் திரு.' பி.எல். லெட்சுமணன் செட்டியார், வீ.ஓ.கே. கம்பெனி உரிமையாளர் திரு.சுப்பிரமணியம் திரு. ஆர். ராஜம் ஆகியோரை காணலாம்.

6.5.61 முகாம் : ஈப்போ- மலேயா

அன்பார்ந்த குழந்தைகளே!

என்ன... எல்லாம் .... ஆனந்தம்தானே. இன்றுடன் சரியாக ஒரு வாரம் ஆகிறதல்லவா. ஆஸ்ரமத்தின் நம் திட்டங்கள் சரியாகத்தானே நடந்து வரும் என்ற நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையை நீங்கள் எல்லோரும் சேர்ந்து பலப்படுத்துவீர்கள் அல்லவா?

5.5.61 தேதி கிள்ளானிலிருந்து புறப்பட்டு சுமார் 160 மைல் தூரத்திலுள்ள ' தெலுக்கன்சான்' என்னும் ஊருக்கு வந்து அன்பர் சிதம்பரம் பிள்ளை என்பவரின் பங்களாவில் தங்கினோம். இரவு விருந்துக்கு மந்திரி சம்மந்தன் அவர்களும் எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார். 6.5.61 தேதி காலையும் மதியமும் ஒவ்வொரு செட்டி நாட்டு அன்பர்கள் வீட்டில் விருந்து. நான் விருந்து என்று சொல்வதை என்னைப்பொறுத்த மட்டில் மருந்தாகும். இன்று வெளியுலகம் எப்படி இருக்கிறதென்றால் கண்ணியமுள்ள பெரிய மனிதர்கள் பிரயாணம் புறப்பட்டால் போகுமிடமெல்லாம் காபி, டீ, பிஸ்கட், சோடா, பலகாரம், பழவகை ஆகியவை தயாராக இருக்கும். காலை சிற்றுண்டிக்கு இனிப்பு காரம் என நாலுவகை பலகாரங்கள். சாப்பாட்டிற்கு இலை போட்டால் இலையில் பத்துவகை. இதையெல்லாம் மனிதன் வற்புறுத்தும் இடங்களில் எல்லாம் சாப்பிட்டுக் கொண்டே போனால் வயிறும் சரீரமும் என்ன ஆகும்? ஆகையால்தான் நான் மருந்து சாப்பிடும் நோயாளியை போல்விருந்தை பாவித்து அவ்வளவையும் ஒதுக்கிவிட்டு சாம்பார் ரசம், காய்கறி, கீரை அத்துடன் சரி. இனிப்பு, காரம் போன்ற எந்த பலகாரத்திற்கும் இடமில்லை. மலேயா வந்ததிலிருந்து மோரும் உபயோகிக்கவில்லை. கலெக்டர் ஐயாசாப்பிடும் விஷயத்தில் சற்று தாராளம்தானே. நான் அடிக்கடி அவரை சிறிது இழுத்துப் பிடித்து சமிக்ஞை காட்டுவேன். அவரும் அப்புறம் சரியாய் விடுவார். ஏன் சிரிக்கிறீர்கள்? சிரியுங்கள்... நன்றாக சிரியுங்கள்.

அன்புச்சிறுவர்களே! நான் ஏன் இந்த சாப்பாட்டு விஷயமாய் ஒரு பக்கம் எழுதுகிறேன் என்றால் சற்று சிந்தியுங்கள். நீங்கள் இளம் மாணவர்கள். எதை சாப்பிட்டாலும் எவ்வளவு சாப்பிட்டாலும் ஜீரணிக்க முடியும். ஒன்றும் கெடுதல் செய்யாமலும் இருக்கலாம். ஆனால் சிறு வயதிலிருந்தே ஒரு நல்ல பயிற்சி பெற வேண்டும். மிதமிஞ்சி சாப்பிடுவதில் விருப்பம் கொள்ளக்கூடாது. வயிற்றுக்கு அடிமையாகக்கூடாது. உயிருக்காக உணவே தவிர உணவுக்காக உயிர் அல்ல. நாக்கின் நப்பாசையை நிறைவேற்ற பொய், புளுகு, திருடு ஆகியவற்றை கைக்கொண்டு நம் ஒழுக்கத்தை கெடுத்துக் கொள்ளக்கூடாது. இக்கருத்தை நீங்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். 6.5.61 அன்று மதிய உணவு முடிந்ததும் சுமார் 30 மைல் தூரத்திலுள்ள ' ஈப்போ'' என்னும் ஊருக்கு தெலுக்கன் காவிலிருந்து வந்து சேர்ந்தோம். அங்கு மலைமகள் என்னும் பத்திரிக்கை அலுவலகத்தில் தங்கியிருந்தோம்.

இந்த நாட்டு வளத்தைப் பற்றி சில தகவல். இலங்கை நாட்டை பொதுவாக ஒத்திருக்கிறது. சிற்சில வித்யாசங்கள். அவ்வளவுதான். சிறிய சிறிய மலைகள், சீதோஷ்ண நிலை, மழை, வெய்யில் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. அதனால், எங்கும் பசுமை. இந் நாட்டில் விமானம், கப்பல், ரயில், கார் வசதி ஏராளம். ரப்பர், டின், ஈயம், தேங்காய், விமான ஆயில், இந்நாட்டின் ஏராளமான செல்வத்திற்கு மூலகாரணமாகும். உலகம் பூராவிற்கும் இவைகள் ஏற்றுமதியாவதால் உலகப்பொருட்கள் இந்நாட்டில் இறக்குமதியாகின்றன. அதனால் எந்தப்பொருளும் இங்கு விலை மிகக்குறைவு. உணவுப்பொருட்கள், ரூம் வாடகை, சலவை கூலி, முடிதிருத்தக்கட்டணம் போன்ற சில அயிட்டங்கள் விதிவிலக்காக கட்டணம் மிக அதிகம்.

எந்தப்பொருளையும் யாரும் வாங்கிக்கொண்டு போவதைப்பற்றி மலேயா சர்க்கார் தடுக்கவில்லை. ஆனால் சென்னை சர்க்கார் அனுமதிப்பதில்லையாம். ஒரு முருகன் கோயிலுக்குப் போய் பார்த்தோம். ஒரு பள்ளியை பார்த்தோம். இந்த நாட்டுக்கு தகுந்த மாதிரி அமைந்திருக்கிறது. மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள்., சுமார் 60 லட்சம் பேர்கள்தான் இந்நாட்டின் ஜனத்தொகை. எல்லாவகையிலும் சீனர்கள் கை ஓங்கியிருக்கிறது. ஜாதி வித்யாசம், ஆண், பெண் வித்யாசம், தெரியவில்லை. எல்லாவேலையும் எல்லோரும் செய்கிறார்கள். பெண்களும் ஆண் உடை அணிகின்றனர். இங்கு வெளியிலிருந்து எந்த தினசரியும் வருவதில்லை. ஆகையால் 1 ம் தேதியிலிருந்து ' தினமணியை தேதி வாரியாக சேர்த்து வையுங்கள். அங்கு வந்த பின் பார்த்துக் கொள்ளுகிறேன். வந்த தபால்களை முறைப்படி கவனித்து வைத்திருங்கள். நான் வந்த பின் எல்லாவற்றையும் பார்த்து விடுகிறேன். மற்றவை நாளை

உங்கள் அன்புள்ள

சுவாமி

10.5.61 முகாம் : கிள்ளானி

அன்பார்ந்த குழந்தைகளே!

8.5.61 தேதி வெளியூர் எங்கும் செல்லவில்லை. கிள்ளானிலேயே காரியங்களைப் பார்த்தோம். 9.5.61 தேதி கோலாலம்பூர் சென்று காரியங்களைப் பார்த்தோம். அங்குள்ள முருகன் கோயிலுக்கு சென்றோம். நீங்கள் தெரிந்து கொள்வதற்காக சில தகவல்களை எழுதுகிறேன். இங்கு பள்ளிக்கூடம் இருவிதம். காலைப்பள்ளி, மாலைப்பள்ளி என இருவிதமாக நடக்கிறது. காலையில் பள்ளிக்கு போகிற மாணவர்கள் மாலை செல்வதில்லை. மாலையில் போகிற மாணவர்கள் காலையில் போவதில்லை. அதாவது ஒரு நேரம்தான் பள்ளிக்கு செல்கிறார்கள். இந்த வருஷம் காலையில் பள்ளிக்கு போகும்

மாணவர் அடுத்த வருடம் மாலைப்பள்ளிக்கு போக வேண்டும். அதே மாதிரி இந்த வருஷம் மாலைப்பள்ளிக்கு சென்றவர்கள் அடுத்த வருடம் காலைப்பள்ளிக்கு போக வேண்டும். ஆனால் ஒரு நேரத்தில் பள்ளி தொடர்ந்து 6 மணி நேரம் நடைபெறுகிறது. ஆக ஒரு நாளைக்கு இரண்டு நேரமும் சேர்ந்து 12 மணி நேரம் பள்ளி நடக்கிறது. ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதி பற்றாக்குறை ஆகிய காரணங்களினால் சர்க்கார் இப்படி சட்டம் போட்டிருக்கிறது.

ஏக காலத்தில் ஒவ்வொரு குழந்தையும் மூன்று மொழிகளை கற்க வேண்டும். அவரவர்கள் தாய்மொழியுடன் மலேயா மொழியும், ஆங்கிலமும் கற்க வேண்டும். தாய்மொழி வீட்டில் பேசப்படுகிறது. மலேயாமொழி நாட்டு பொதுமொழி, ஆங்கிலம் உலகமொழி. எனவே யாருடைய கட்டாயமும் இன்றி 3 மொழிகளை மக்கள் கற்கின்றனர். அடுத்து ஒவ்வொருவரும் கட்டாயமாக உழைப்பில் ஈடுபடவேண்டிய சூழ்நிலையை இந்நாடு உண்டாக்கியிருக்கிறது. 7 வயது சிறுவனும் சரி 70 வயது கிழவனும் சரி சுறுசுறுப்பாக காரியம் செய்து கொண்டிருக்கின்றனர். சிறுவர்களும் பள்ளிநேரம் போக ரப்பர் தோட்டத்திலோ, கடைகள் தொழிற்சாலைகளில் ஏதாவது ஒரு வேலையை செய்கின்றனர். வயதானவர்களும் மூட்டை சுமந்தோ, காய்கறிகள், பழங்கள் விற்றோ காலம் கழிக்கின்றனர். முதலாளிகளும், அதிகாரிகளும் இங்கு குறைவு. உழைப்பாளிகள் மிகுந்த தேசம் இது. ஒரு கூலிக்காரனும் கூட மாதம் சுமார் 120 டாலரிலிருந்து 200 டாலர் வரை சம்பாதிக்கிறான். யாருக்கும் வேலை இல்லை என்ற பேச்சே இங்கு இல்லை. டாலர் என்பதும் வெள்ளி என்பதும் இந்நாட்டில் புழங்கும் நாணயங்கள் ஆகும். ஒரு டாலர் என்பது நம் நாட்டு நாணயத்திற்கு ஒரு ரூபாய் ஒன்பதணா ஆகும். இந்நாட்டின் பல்வேறு நாணயங்களையும், ஸ்டாம்புகளையும் கொண்டு வருகிறேன். இங்கு ஒரு குடும்பத்திலுள்ள உழைக்கும் திறன் பெற்ற அனைவரும் உழைத்தால்தான் இந்நாட்டில் வாழ முடியும். காரணம் வீட்டு வாடகையும் உணவுப்பொருட்கள் விலையும் மிகமிக அதிகம். மேல்நாட்டு ஆடம்பரப்பொருட்களின் இறக்குமதி விலைதான் குறைவே தவிர உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்களின் விலை இங்கு மிகமிக அதிகம்.

அன்புக்குழந்தைகளே ஆனந்த ஸ்வரூபிகளே எல்லோரும் சந்தோஷமாய் இருங்களப்பா.

மற்ற விபரங்கள் அடுத்ததில்
உங்கள் அன்புள்ள சுவாமி

12.5.61

அன்புக்குழந்தைகளே!

10,11 தேதிகளில் கிள்ளானுக்கும் கோலாலம்பூருக்கும் அடிக்கடி போய் காரியங்களை கவனித்து வந்தோம். இன்றுதான் வெளியூர் புறப்படுகின்றோம்.

இங்கிருந்து ஆங்கில, தமிழ் டைப்ரைட்டர்கள், சினிமா புரொஜக்டர்கள், டேப்ரிக்கார்டர், மைக் செட் ஆகிய பொருள்களை சென்னை துறைமுகத்திலிருந்து எந்த ஆட்சேபணை இல்லாமலும், அதிக வரி இல்லாமலும் கொண்டு வர இங்கிருந்தே சென்னை சர்க்கார் அனுமதி கோரி எழுதியிருக்கிறேன். இந்தியா விலையில் இவைகளின் விலை இங்கு பாதிதான். ஆனால் இந்திய சர்க்காரின் சட்ட திட்டம் வரியில்லாமல் இறக்குமதி செய்ய அனுமதிப்பதில்லையாம்.

ஆகையால் நியாயமான முறையில் எந்த சாமான்களையும் கொண்டு வர முடியாமலிருக்கிறது. எதற்கும் பார்ப்போம் அப்பா... நாம்தான் எதற்கும் சளைப்பதில்லையே. எப்போதும் உங்களுடைய நியாயமான கோரிக்கைகள் எல்லாம் பூர்த்தியடைய முயற்சிப்போம். இந்நாட்டில் நான் பார்த்த வரையில் எந்த மிருகங்களும் விசேசமாய் தென்படவில்லை. பசுமாடுகளைக்கூட பார்க்க முடியவில்லை. குதிரைகள் மருந்துக்கும் கிடையாது. மாட்டுவண்டிகளும் மிகமிக அரிது. எங்கு பார்த்தாலும் ஏராளமான கார், பஸ், லாரி, டிராக்டர், மோட்டார் பைக், சைக்கிள் மயம்தான். ரோடுகள் மிகமிக அருமை. உலகில் உற்பத்தியாகும் எந்த நவீன பொருட்களையும் இந்த நாட்டில்தான் முதலில் பார்க்கலாம். உலகில் எத்தனை விதமான பால்பவுடர்கள் உண்டோ அவ்வளவும் இங்கு உண்டு. பசும்பால் என்பது அரிதிலும் அரிது. எங்கு சென்றாலும் எல்லாம் பால் பவுடர் கலந்த பானம்தான் கிடைக்கும். அது சகஜமாக பழக்கத்தில் வந்துவிட்டது. இதையே எல்லோரும் இங்கு விரும்பித்தான் உபயோகிக்கின்றனர். இங்கு வீடுகள் எப்படி இருக்கின்றது தெரியுமா? பெரும்பாலும் பலகை வீடுகள்தான். அதிலேயே மாடிவீடுகளும் உண்டு. கீழே கடை, தொழில், வியாபாரம் நடக்கும். மேலே குடியிருப்பு. இந்த நாட்டில் வெப்பம், மழை, காற்று, குளிர், பனி ஆகிய அனைத்தும் எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. ஒன்று அதிகம். ஒன்று குறைவு என்பதில்லை. மாதத்திற்கு பத்து மழை சாதாரணமாகப் பெய்யுமாம். இங்கு வந்ததிலிருந்து எனக்கும் ஐயாவுக்கும் உடம்பிற்கு எந்தவித தொந்தரவும் இல்லை. அன்புக்குழந்தைகளே திருப்தியுடன் நேரத்தை போக்குங்கள். வருகிறேன். மீண்டும் சந்திப்போம்.

உங்கள் அன்புள்ள
சுவாமி

15.5.61 முகாம் கிள்ளானி

அன்பார்ந்த குழந்தைகளே!

வாருங்களப்பா.. வாருங்கள். கேளுங்கள். எங்கே எல்லோரும் ஒரு சிரிப்பு சிரியுங்கள்.

12.5.61 ம் தேதி காலை கிள்ளானிலிருந்து புறப்பட்டு சுமார் 115 மைல் தூரமுள்ள 'மலேக்கா' என்னும் ஊருக்கு போனோம். அவ்வூர் கடற்கரை ஓரமாக

இருக்கிறது. மாலை நேரத்தில் கடற்கரை பீச் பார்க்கில் உலவி வந்தோம். கப்பலிலிருந்தே சாமான்கள் இறக்கப்பட்டு ஸ்டீம் படகுகளில் ஏற்றி கரையில் கொண்டு வந்து சேர்க்கப்படுகிறது. இவ்வூரில் விமான நிலையமும் உண்டு. இரவு தங்கல் இவ்வூரில்.

13.5.61 காலை இங்கிருந்து 25 மைல் தூரமுள்ள 'மூவாறு' என்னும் ஊருக்கு சென்றோம். ஊருக்கு நடுவில் இந்த ஆறு இருக்கிறது. இந்த ஊரை ஒட்டியே கடலும் இருக்கிறது.இந்த கடல் தண்ணீர்தான் சில மைல் தூரம் நதியாக ஒடி மீண்டும் கடலில் சேர்ந்து விடுகிறது. நதியின் அகலம் சுமார் 1 பர்லாங்கு இருக்கும்.மிக ஆழம். நீராவிப் படகில்தான் மனிதர், வண்டிகள், கார்கள் எல்லாம் அக்கரைக்கு போகவேண்டும். வரவேண்டும். நாங்கள் காரில் உட்கார்ந்த படியே படகில் ஏற்றி அக்கரை சென்றோம். அங்கிருந்து காரில் பயணம். சுமார் 140 மைல் தூரமுள்ள கிள்ளான் வந்து இரவு சேர்ந்தோம். வரும் வழியில் 'சிரம்பான்' என்னும் ஊரில் இறங்கி பார்க்க வேண்டியவர்களை பார்த்து வந்தோம்.

மூவா – குறையாத ஆறு– நதி. என்றும் வற்றாமல் நீருள்ள ஆறு என்பதால் இங்குள்ள நதிக்கு 'மூவாறு' எனப் பெயர் வந்ததாம். மலேயா என்பது மலைகள் நிறைந்த பகுதி என்பதால் இப்பெயர் உண்டாயிற்று. ஒரு காலத்தில் சிங்கங்கள் மிகுந்த காடாக இருந்ததால் சிங்கப்பூர் என்ற பெயரும் உண்டாயிற்றாம். சிங்கப்பூருக்கு சிங்கை என்றும் சிங்கபுரி என்ற பெயர்களும் உண்டாம். சிங்கப்பூரில் அடையாளத்திற்கு கூட ஒரு சிங்கம் கிடையாது. காடும் கிடையாது. காடெல்லாம் திருத்தப்பட்ட ரப்பர் தோட்டங்களாக மாறிவிட்டன. பினாங் என்ற சொல்லுக்கு மலேயா பாஷையில் பாக்கு என்று பொருளாம். இங்கு பாக்குத்தோப்புகள் அதிகமாதலால் இப்பெயர் வந்தது. மலேயாவை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம். தென்பகுதி சிங்கப்பூர். வடபகுதி பினாங்கு. நடுப்பகுதி மலேயா. சிங்கப்பூரும் பினாங்கும் நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த தீவுகள். சிங்கப்பூருக்கும் மலேயா பெடரேஷனுக்கும் இடையில் நீண்ட பாலம் கட்டிவிட்டதால் கார்கள் எல்லாம் கடல் வழியே செல்லவேண்டியதில்லை. ஆனால் பினாங்கிற்கு ஸ்டீம் போட் மூலமாகத்தான் கார்கள் போக வேண்டும்.

அன்புக்குழந்தைகளே! ஆனந்த ஸ்வரூபிகளே நேசமாயும் அன்பாயும் திருப்தியாயும் சந்தோசமாயும் தினசரி வாழ்க்கையை நடத்துங்கள்.

மற்ற விபரம் நாளை

உங்கள் அன்புள்ள

சுவாமி

18.5.61 முகாம் : பினாங்கு

அன்பார்ந்த குழந்தைகளே!

இங்கிருந்து எழுதப்பட்ட கடிதங்கள் எல்லாம் ஒழுங்காய் உங்களுக்கு

கிடைத்து வருமென்று கருதுகிறேன்.

15.5.61 தேதி கிள்ளானிலிருந்து கோலாலம்பூர் சென்று சேவையின் காரியங்களைப் பார்த்ததுடன் வெந்நீர் ஊற்று, லேக் கார்டன் (ஏரிக்கரை தோட்டம்) ஸ்டேடியம் கிரவுண்ட் (கால்பந்து மைதானம்) ஆகியவைகள் பார்த்தோம்.

16.5.61 காலை கிள்ளானிலிருந்து புறப்பட்ட சுமார் 175 மைல் தூரமுள்ள ஈப்போ வந்து பல அன்பர்களை சந்தித்த பின் 18 மைல் தூரமுள்ள ' சுங்கை சிப்புட்' வந்து மந்திரி சம்மந்தன் அவர்கள் வீட்டில் தங்கினோம். சம்மந்தன் அவர்கள் கோலாலம்பூரிலிருந்து தமது ஊருக்கு வந்து சேர்ந்தார்.

17.5.61 காலையில் ஈப்போ வந்து பார்க்க வேண்டியவர்களை பார்த்தபின் சீனர்களுடைய இரண்டு புத்தர் மலைக்குகைகளை பார்த்தோம். ஒரு உயரமான மலையில் மூன்றடுக்கு மாடியாக குகைக்கோயில் அமைந்திருக்கிறது. அதனுடைய போட்டோக்கள் எல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன். வரும்போது கொண்டு வருகிறேன். மற்றொரு புத்தர் கோவிலுக்கும் சென்றோம். அங்குள்ள புத்தர் உருவம் 70 அடி நீளமும் 15 அடி அகலமும் உள்ள படுத்திருக்கும் புத்தராய் காட்சி தருகிறார்.(ஸ்ரீரங்கம் ரங்கநாதரைப் போல) அந்த மாபெரும் சிலையின் அடிப்பாகத்தில் அங்கு வருபவர் புகுந்து செல்கின்றனர். புத்தருடைய 81 சிஷ்யர்களுடைய உருவங்களும் அக்கோவிலில் புதிதாய் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மலேயா சர்க்காரிடமிருந்து ஜப்பான் சர்க்கார் ' இரும்பு மண்' எடுத்துக் கொள்ளும் திட்டம் வேலை செய்து வருகிறது. அந்த சுரங்கத்திற்கு போய் அடியிலிருந்து முடிவரையில் நடைபெறும் வேலைகளை பார்த்து வந்தோம். இரவு மந்திரி அவர்கள் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு தங்கினோம்.

18.5.61 காலையில் மந்திரியுடைய ரப்பர் எஸ்டேட்க்கு போய் மரத்திலிருந்து ரப்பர் பால் எடுப்பதிலிருந்து ரப்பர் ஏடு உருவாகும் வரை பாக்டரியில் பார்த்தோம்.

சுங்கை சிப்புட்டிலிருந்து சுமார் 80 மைல் தூரமுள்ள பினாங்கு வரும் வழியில் ' கோலிக்கன்சார்' ' தைப்பிங்' ஆகிய ஊர்களில் காரியத்தை பார்த்து விட்டு பினாங்கு துறைமுகம் வந்து சேர்ந்தோம். நான்கு பக்கமும் கடல். நடுவில் பினாங்கு நகர். ஆகையால் கப்பலில் காரையும் ஏற்றிக் கொண்டு சுமார் 1½மைல் தூரம் கடல் கடந்து கரையில் இறங்கினோம். பினாங்கிலும் முருகன் கம்பெனியின் கிளை இருக்கிறது. இங்குதான் தங்கியிருக்கிறோம். நாளை முதல்தான் இத்தீவில் பார்க்க வேண்டியவர்களை பார்க்கப் போகிறோம். இன்று வாட்டர்டாங்கி ரிசர்வாயர், மவுண்ட் பிளஷர் உச்சி ஆகியவைகளை பார்க்கப்புறப்பட்டோம். காரில் மவுண்ட் பிளஷர் உச்சிக்கு சென்றோம்.

மைதானம், நீச்சல் குளம், கண்டோம். அங்கிருந்து பார்த்தால் பினாங்கு நகரமும் சமுத்திரக் காட்சியும் தெரியவந்தது. கடற்கரை பீச், பார்லிமெண்ட் கட்டடம் போன்றவைகளையும் பார்த்தோம்.

அன்புக்குழந்தைகளே! ஆனந்த மயமான உங்களிடம் நான் என்ன சொல்லி வந்தேன்? ஞாபகம் இருக்கா? அறுபது மணிநேரத்தில் வந்து விடுவேன் என்று சொல்லி வந்தேனா? ஆனால் அவ்வளவு நேரம் கூட ஆகாதப்பா... சுமார் 40 மணி நேரத்திலேயே வந்துவிடுவேன். 8.6.61 தேதி சிங்கப்பூரில் இரவு விமானம் ஏறி 9.6.61 தேதி காலை சென்னை வந்து அன்று அங்குள்ள அலுவல்களை பார்த்துவிட்டு, 10.6.61 தேதி சென்னையிலிருந்து விமானம் ஏறி திருச்சி வந்து இறங்கி நேரே குடிலுக்கு வந்து உங்கள் முன் குதிப்பேனப்பா... ஏன் எல்லோரும் சிரிக்கிறீர்கள்? ஆம் ஆஸ்ரமத்திற்கு வருவதின் ஆனந்தத்தை விட நான் உலகில் எங்கும் ஒருவித ஆனந்தத்தையும் அடையவில்லையப்பா... சரி மற்றவை நாளை

உங்கள் அன்புள்ள

சுவாமி

24.5.61 முகாம் கிள்ளான் - மலேயா

அன்பார்ந்த குழந்தைகளே! ஆனந்த ஸ்வரூபிகளே!! அனைவரும் சுகமாக இருப்பீர்கள். ஆஸ்ரமத்தின் ஆனந்தமான சூழ்நிலைக்கும் தூய்மை நெறிக்கும் இழுக்கு நேரிடாமல் எல்லோரும் ஒருமித்த மனதாய் குடிலின் காப்பாளர்களாக இருந்து, வருவீர்கள் என நம்புகிறேன்.

நேற்றுதான் பினாங்கிலிருந்து வந்து சேர்ந்தோம். கப்பலில் ஏறி சுமார் பத்து மைல்தூரம் போனோம். கப்பல் பிரயாண அனுபவத்தை கண்டோம். அடுத்த பௌர்ணமி வரப்போகிறதே. அதையடுத்து பள்ளிகளும் ஆரம்பமாகும். எல்லோரும் முடியெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யுங்கள். எல்லோருடைய படுக்கைகளையும் (பாய் தவிர) சோப்பு போட்டு சுத்தம் செய்திருப்பீர்கள். பாய்களையெல்லாம் மாடியில் விரித்துப்போட்டு காய வையுங்கள். முன்கூட்டியே எல்லோருக்கும் தேவையான நோட்டுகள், பாடபுத்தகங்கள் ஆகியவற்றிற்கு அச்சாபீசில் சொல்லி ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்.
அன்புக்குழந்தைகளே! தீபாவளித் துணிகளை டைலர் மும்முரமாக இப்போதிருந்தே தைத்து வருவது உங்களுக்கே தெரியும். சீக்கிரம் தீபாவளியும் வந்து விடுமல்லவா.. பலவகை பட்டாசுகளும், திண்பண்டங்களும் உண்டு அப்பா. அடடே... நம்ம சுந்தரம்கூட தலையாட்டுகிறானே. சரி.. சரி.. கேளுங்கள்.

மலேயா நாட்டைப்பற்றிய சில தகவல்கள் பினாங்கு தீவு முழுவதும் வட்ட வடிவமாய் அமைந்திருக்கிறது. அதைச் சுற்றி நல்ல ரோடு போடப்பட்டுள்ளது. அதன் சுற்றளவு 46 மைல். தீவைச் சுற்றி வந்து அதன் இயற்கை காட்சிகளை

பார்த்தோம். மெதுவாக காரில் சுற்றிவர 1¾ மணி நேரம் பிடித்தது. கடற்கரையோரம் எங்கு பார்த்தாலும் பல லட்சக்கணக்கான தென்னை மரங்கள் பயிராக்கப்பட்டுள்ளன. தென்னை கொப்பரைகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு தென்னையின் எந்த பாகத்தையும் பயன்படுத்துவது இல்லை. தென்னையின் காய்ப்பு நின்றதும் அதை வெட்டி நெருப்பு வைத்துவிடுகிறார்கள். கிராமங்களுக்கு இங்கு கம்பம் என்கிறார்கள்.

இங்கு வீடுகள் மரத்தால் பரண்மேல் கட்டப்படுகின்றன. கூரைகள் ' அத்தாப்' என்னும் ஓலையினால் பின்னப்பட்ட கீத்துக்களால் வேயப்பட்டிருக்கிறது. தென்னங்கீற்றுக்கும் அத்தாப் கீற்றுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. மரமும் அப்படியே. அத்தாப்பில் காய்கள் காய்ப்பதில்லை. இதுவே வித்யாசம். வீடு வாசல் கட்டுவதற்கு வெகு நைசாக ஒருவிதமான புல்லால் செய்யப்பட்ட பிரஷ் எங்கும் விற்கப்படுகிறது. பங்களா கதவு, ஜன்னல்கம்பி, மேஜை, நாற்காலி துடைப்பதற்கு கோழி இறகு போல் நைசான பிரஸ்கள் பயன்படுகின்றன. சரியப்பா... இன்றைக்கு இது போதும். நாளை தொடரும்

உங்கள் அன்புள்ள
சுவாமி

27.5.61 முகாம் : கிள்ளான் - மலேயா

அன்புள்ள குழந்தைகளே! 22.5.61 தேதி கடிதங்கள் வந்து சேர்ந்தன. நாங்கள் பினாங்கிலிருந்து கிள்ளான் வந்த பிறகு விசேஷமாக எங்கும் பிரயாணம் போகவில்லை. 25 மைல் தூரமுள்ள கோலாலம்பூருக்கும் 65 மைல் தூரமுள்ள ' சிரம்பானு'க்கும் அடிக்கடி சென்று வந்தோம்.

நம் ஆஸ்ரமத்திற்கு 58 ம் ஆண்டில் வந்திருந்த சோமாஸ்கந்தர் என்பவரை கோலாலம்பூரில் பார்த்தோம். நாளை இரவு ஆகாரத்திற்கு வருமாறு அழைத்திருக்கிறார். ஒரு நாட்டிற்கு வந்தபின் தான் அந்த நாட்டின் சட்டதிட்டங்களின் உண்மை நிலை நன்கு தெரியவருகிறது. நீங்கள் விருப்பப்படும் சாமான்களின் பட்டியல் எல்லாம் என்வசம் தயாராக உள்ளன. ஆனால் இந்நாட்டின் விதிகளின்படி நேரான வழியில் ஐந்து ரூபாய் சாமான் கூட வாங்கிச் செல்ல முடியாது. தவறான வழியில் வேண்டுமானால் எதை வேண்டுமானாலும் வாங்கி வரலாம். நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை உங்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பரிசுத்த வாழ்வை கடைப்பிடிப்போம். அதனால் நியாயமான முறையில் சாமான்கள் வாங்கிவர இயலுமா? என்பதற்கு முயற்சிப்போம். இல்லையேல் ஏமாற்றம் அடையவேண்டியதில்லை. மேலும் இங்கு புதுமையான சாமான்கள்

எதுவுமில்லை. அவ்வளவும் சென்னையில் கிடைக்கும் பொருள்களே! பணத்தில் மட்டும்தான் வித்யாசம். இங்கு ஆயிரம் என்பது அங்கு இரண்டாயிரம். அவ்வளவுதான். முடிந்தால் நியாயமான முறையில் பார்ப்பது. இல்லையேல் விலை அதிகமாய் இருந்தாலும் சென்னையிலேயே அவசியமானதை எல்லாம் வாங்கி விடலாம்.

பினாங்கிலிருந்த சமயம் ஸ்ரீராமகிருஷ்ண அனாதை விடுதியை பார்த்த சம்பவத்தை அது சமயம் எழுதவிட்டுவிட்டேன். அதில் சுமார் 50 ஆண் பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அது ஒரு ஆஸ்ரமம். ஸ்தாபனமல்ல. ஊருக்குள் இருக்கும் பிரமுகர்கள் சிலர் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். அதை ஒரு சம்பள வார்டன் கண்காணித்து வருகிறார். 7 வது வரைக்கும் தமிழ் பள்ளிக்கூடம் இருக்கிறது. ஊர்ப்பிள்ளைகளும் வந்து படிக்கிறார்கள். மலேயாவில் இது வரை இரண்டு விடுதிகளை பார்த்தாகி விட்டது. சிங்கப்பூரில் ஒன்று இருக்கிறதாம். அதை ஜூன் முதல் வாரத்தில் பார்க்க முடியும்.

கோலாலம்பூரில் விவேகானந்த ஆஸ்ரமம் இருக்கிறது. அதையும் ஊர் மக்கள்தான் நடத்துகிறார்கள். அதன் சார்பாக தமிழ் பள்ளிக்கூடம் ஒன்று நடந்து வருகிறது. சரியப்பா நல்லது. கடமையை செய்ய ஆயத்தமாகுங்கள். மற்றவை அடுத்த கடிதத்தில்

உங்கள் அன்புள்ள

சுவாமி

30.5.61 முகாம் : கிள்ளான் மலேயா

அன்பார்ந்த குழந்தைகளே! ஆனந்த சொரூபிகளே!! ஆண்டவனின் குழந்தைகளே!!! ஆசி... ஆசி... ஆசிகள்.

மேற்கண்ட அத்தனை அடைமொழிகளுக்கும் அருகதையான வாழ்க்கையை வாழ்ந்து வருவீர்களாக! வாழ முயற்சிப்பீர்களாக.

28.5.61 தேதி கோலாலம்பூர் சென்று அங்கிருந்து 8 மைல் தூரத்திலுள்ள 'பத்துகேவ்" (கல்குகை) என்னும் மலைக்கு சென்றோம். சுமார் 350 படிகள் வரை இருக்கும். உள்ளே மலை சுமார் இரண்டு தென்னை மர உயரத்திற்கு கூடாரமாக குகை அமைந்திருக்கிறது. சுமார் பத்தாயிரம் பேர் அடியில் தங்கலாம். அங்கு சுப்பிரமணிய சுவாமி கோயில் இருக்கிறது. அதையடுத்து இன்னொரு சிறு குகை. நீண்ட தூரம் போய்க் கொண்டேயிருக்கிறது. சுமார் 2, 3 மைல் தூரம் வரை போகுமாம். ஒரே இருட்டு யாரும் அவ்வளவு தூரம் உள்ளே சென்று பார்ப்பதில்லை.

29.5.61 தேதி கோலாலம்பூரிலிருந்து பத்து மைல் தூரமுள்ள நீர்த்தேக்க அணைக்கட்டுக்கு சென்று பார்த்தோம். மூன்று பக்கமும் மலை கவிழ்ந்தாற்போல் சூழப்பட்டிருக்கிறது. மலைக்கும் மலைக்கும் தடுத்துஅணைச் சுவர் கட்டி உயர்த்தி நீரை தேக்கி வைத்து, குழாய் மூலம் நகரத்திற்கு நீர் சப்ளை செய்கிறார்கள்.

நாளைக் காலை சிங்கப்பூரின் தென்கோடிக்கு செல்லுகிறோம். அங்கேயே ஒரு வாரம் தங்கியிருந்து 8.6.61 தேதி விமானம் ஏறுகிறோம். அதற்கு முன்பே புறப்பட விமான சீட் கிடைக்கவில்லை. நாள் குறுகியதாக இருக்கிறது. இனிமேல் தபால் அனுப்பாதீர்கள். வழக்கம் போல் முதல் தேதி பள்ளிகள் திறக்கட்டும். பட்வாடா நடைபெறட்டும். மாதச் சாமான்கள் வாங்கி வரட்டும். நாற்பது நாட்களுக்கு பிறகு ஆஸ்ரமத்திற்கு வந்து பார்த்தால் குழந்தைகளும் செடிகொடிகளும் வளர்ந்திருக்கும் மாறுதல் தெரிய வேண்டுமே தவிர வேறு எவ்வித மாறுதல்களும் தெரியாமல் ஸ்தாபனத்தின் அமைப்பின் சூழ்நிலை, நிர்வாக முறை, அந்தந்த வேலைத்திட்டங்களின் நடைமுறை எல்லாம் நடந்தது நடந்து வந்திருக்கின்றன என்கிற அறிகுறி தென்படவேண்டும்.

ஆஸ்ரமக்கோவில், ஆஸ்ரம ஆபீஸ் அறை, ஆஸ்ரம சமையலறை எல்லாம் பரிசுத்தமாக இருக்கட்டும். 10.6.61 தேதி இரவு ஆகாரத்திலிருந்து சமையல் நடக்கும்படியான தகுதியில் ஆஸ்ரம சமையலறை, அதற்குரிய மாணவன் தயாராக இருக்க வேண்டும்.

குருகுலம், வித்யாலயம், உணவு விடுதி கட்டடங்கள் உள்ளேயும் வெளியேயும் ஒட்டடைகள் இல்லாமலும் அவரவர்கள் வசமுள்ள அலமாரிகள், மாணவர்களின் சாமான் அறை எல்லாம் சுத்தமாக இருக்கட்டும். சரியப்பா... இன்று புத்தர் பிறந்த வைசாக பவுர்ணமி. நான் இங்கு முடி எடுத்துக் கொண்டேன். நீங்களும் எடுத்திருப்பீர்கள். பௌர்ணமி விருந்து நடந்திருக்கும். சரியாக நான் வந்து முப்பது நாள் ... இல்லை ... இல்லை 30 மணி நேரமாய் விட்டதல்லவா.. இன்னும் ஒரு பத்து மணி நேரம் தானப்பா. 10.6.61 தேதி திருச்சி விமான நிலையத்திற்கு விமானம் வரும் நேரம் தெரிந்து கார் வரவேண்டும்.

உங்கள் அன்புள்ள

சுவாமி

1.6.61 **முகாம் : சிங்கப்பூர்**

அன்பார்ந்த குழந்தைகளே!

நேற்று அதிகாலை கிள்ளானிலிருந்து காரில் புறப்பட்டு சுமார் 300 மைல் தூரமுள்ள சிங்கப்பூருக்கு இரவு வந்து சேர்ந்தோம். வரும் வழியில் போர்ட்டிக்ஷன் என்னும் கடற்கரை பகுதிக்கு வந்து மதிய உணவுக்காக கையில் எடுத்து வந்த சித்ரான்னங்களை கடற்கரை மரநிழலில் தங்கி உட்கொண்டோம். சுமார் 10 மைல் அளவிற்கு இங்கு கடற்கரை பீச் இருக்கிறது. பல பங்களாக்களை கொண்டதாய் இப்பகுதி அமைந்திருக்கிறது. வசதிகள் படைத்த ஓய்வும் உல்லாசமும் விரும்புகிற பல பேர் இங்கு வந்து வாரக்கணக்கில் மாதக்கணக்கில் வாடகை பங்களாக்களை எடுத்துக்கொண்டு கடல் நீராடுகிறார்கள் 1937 ல் நேருஜி 14 நாட்கள் மலேயா சுற்றுப்பிரயாணம் செய்த சமயம் இங்குமட்டும் 7 நாட்கள் தங்கி விட்டாராம் கடலில் நீராடுவதற்காக.

8.6.61 தேதி விமானம் இங்குதான் ஏறுகிறோம். 2,3,4 தேதிகளில் இங்கு சுதந்திர தினவிழா கொண்டாட்டம் நடைபெறுகிறது. சிங்கப்பூர் அரசாங்கம் வேறு. மலேயா அரசாங்கம் வேறு. அங்கு மந்திரி சபை வேறு. இங்கு மந்திரி சபை வேறு. மூன்று நாட்களும் பள்ளி ஆபீஸ்களெல்லாம் விடுமுறை. நகரெங்கும் கொடிகள் கட்டி வண்ணவண்ண மின் அலங்காரம் எங்கும் காணப்படும். சொர்க்கலோகம் இது தானோ என்கிற மாதிரி அளவுக்கு மீறின ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். இப்படி ஒருபக்கம் காட்சியளிக்கிறது.

இதே நகரத்தில் இன்னொருபுறம் கோரமான சம்பவம் நடந்துள்ளது. சுமார் 15 மைல் தூரத்திற்கு நெருப்பு பிடித்து அவ்வளவும் நாசம். சுமார் 40 ஆயிரம் மக்கள் இருக்க இடமின்றி தவித்து கண்ணீர்விடுகின்றனர். எல்லா பள்ளிகளும் மூடப்பட்டு சர்க்கார் ஜனங்களை தாற்காலிகமாய் இங்கு இருக்க வைத்து கஞ்சி ஊற்றி வருகின்றார்கள். இன்று நானும் கலெக்டர் ஐயாவும் அப்பகுதியை சுற்றிப்பார்த்தோம். அம்மக்களுக்கு நேர்ந்த விபரீதத்தை வார்த்தைகளால் கூற இயலாது. நேரில் பார்த்தால்தான் புரியும். நெஞ்சம் குமுறுகிறது. இப்படி ஒரு துயரக்காட்சி.

பாருங்களப்பா உலக சுகதுக்கங்களை ஒரே ஊரில் பல்லாயிரம் மக்கள் கூடிக் களித்து விழா கொண்டாடுகிறார்கள். மற்றொரு பக்கம் பல்லாயிர மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். இது தான் உலக நியதி. நலமும் பொலமும் மாறி மாறி வாழ்க்கையில் வந்து கொண்டே இருக்கும். சிறு செடிகள் ஆடிக்காற்றில் ஆடி ஆடி பெரிய மரமாகி எந்தக்காற்றையும் சமாளிக்கும் வலிமை பெற்று அசைவற்று நிற்பது போல் சிறுவயதில் ஏற்படும் பலவித சோதனைகளையும் சமாளித்து நாளடைவில் வயது வந்ததும் உலகில் பெருங்காரியங்கள் சாதிக்கும் திறனை பெறவேண்டும். வாழ்க்கை என்பதே நமக்கொரு படிப்பினையாக, படிக்கும் பயிற்சிக்கூடமாக கருதவேண்டும். அதில் பெற்ற அனுபவங்களை மறக்கவே கூடாது. இன்று முதல் தேதி. பள்ளிகள் திறந்திருக்கும். தறி ஆசிரியர்கள் இருவர் தவிர மற்ற ஆசிரியர்கள் எல்லோரும் வந்திருப்பார்கள். அதிகப்படியான புது ஆசிரியர்களுக்கு மனுக்கள் வந்திருக்கலாம். நான் வந்த பின் எல்லாம் முடிவு செய்வோம். டிரைவர் மணி காலாகாலத்தில் வந்திருக்கலாம். 10.6.61 ந்தேதி திருச்சி விமான நிலையத்திற்கு கார் வரவேண்டுமென்று முன் கடிதத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். சரியப்பா மற்றபடி நாளை.


உங்கள் அன்புள்ள
சுவாமி

சுவாமி அவர்களின் மலேயா, சிங்கப்பூர் நாடுகளின் பிரயாணத்தின் போது அந்நாடுகளின் மக்கள் வாழ்க்கை, மக்களின் உழைப்புத்திறன், அனாதை விடுதிகள், பள்ளிகள் செயல்படும் விதம், நாட்டின் இயற்கைவளம் வாணிபம், நாட்டின் பொருளாதார நிலை, ஏற்றுமதி இறக்குமதி, சட்டதிட்டங்கள்,




குடிலின் எதிர்ப்புறம் குருதேவர்





"குடில் தொழில் சேவா மையம்"
பேட்டைவாய்த்தலை





குடில் முன்னாள் மாணவர் சு. காந்தி, சுவாமிஜி அவர்கள் நினைவாகக் காரமடையில் அமைத்துள்ள "குடில் நினைவு குரு இல்லம்" (16.03.2000) குடில் சுவாமிஜியால் திறப்பு விழா செய்யப்பட்டது.



16.03.2000 அன்று காரமடையில் குரு இல்லத்தை திறப்புவிழா செய்து உரையாற்றுகிறார் சுவாமிஜி. உடன் திரு. சி.என்.ஆர். அவர்களும் பேராசிரியர் சொ. அரியநாயகம் அவர்களும்.



கெம்பநாயக்கன்பாளையம் ஆஸ்ரமக் குழந்தைகள் – அன்பர்கள் – ஆஸ்ரமவாசி – பிரமசாரி – பார்த்திபன் அவர்கள்



தமிழக முன்னாள் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன் சுவாமிஜி.

போக்குவரத்து வசதிகள், நாட்டின் தொழில்வளம், மின்விநியோகம், ஆகியவைகளைப் பற்றி எல்லாம் ஆங்காங்கே விவரித்துள்ளார்.

சில. இடங்களில் பொதுமக்களின் அவலநிலை கண்டு மனம் வெதும்பி வருத்தத்தோடு கூறியவைகளை பற்றியும் அவரது கடிதத்தில் காணலாம்.

புல்லுக்கும் இரங்கிய பரமன் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பொன்னடிகளைப் போற்றி வாழ்வை நடாத்தி வரும் சுவாமிஜியின் உள்ளம் ஏழைகள் பால் இரங்கும் அன்பைப் பெற்றதில் வியப்பேதுமில்லை.

கருணையின் முழுவடிவமாகவே ராமகிருஷ்ணர் வாழ்ந்தார். ஒரு நாள் ராமகிருஷ்ணர் ஓரிடத்தில் புல்வெளியில் நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென்று திரும்பிப் பார்த்தார். அப்போது, தான் நடந்து வந்த பாதையில் தன் காலின் கீழ் மிதிபட்டு புற்கள் மிகுந்த சிரமத்துடன் தலையை நிமிர்த்த முயற்சி செய்வதைக் கண்டார். இந்தக்காட்சி அவரை அழ வைத்தது. இதனால் மனம் கலங்கிய அவர் ' அடடா, இவைகளிடமும் உணர்ச்சி இருக்கின்றன. அதனால் அல்லவா இவைகள் மிகவும் துன்பப்படுகின்றன' என்று கூறினார். அன்று முதல் அவரால் புல்வெளிகளில் நடக்க முடியவில்லை.

இத்தகைய அருளாளரின் பரம பக்தராகிய சுவாமிஜியின் மனம் அந்நாடுகளில் கண்ட துயரக்காட்சிகள் சிலவற்றை கண்டு வெதும்பியது.

மேலும் தனது கடிதத்தில் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகள் படிப்பில் கவனம், கடமையில் தவறாமை, ஆகிய நற்பண்புகளையும் பலவற்றையும் சுவாமிஜி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவரது இலங்கை பிரயாணக் கட்டுரை கடிதங்களும், மலேயா, சிங்கப்பூர் கட்டுரை கடிதங்களும் ஒரு பெரும் கிடைத்தற்கரிய பொக்கிஷங்களாகும்.

1. துக்கத்தில் பிறந்த வியாழக்கிழமை

என்றும் போல் அந்த நாளும் வந்தது. குடிலின் வரலாற்றிலே அந்த நாள், என்றைக்குமே மறக்க முடியாத நாளாக இறைவன் படைத்துவிட்டான். அந்த நாளில்தான் குடிலின் அன்புத் தெய்வமான சுவாமிஜி அவர்கள், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரின் திருவடிகளில் ஐக்கியமாகிவிட்டார். தமது அருமை பக்தன் தம்மிடம் வருவதைக் குறித்து குருதேவர் மனம் ஆனந்த பரவசத்தை முற்றிலுமாக அடைந்தது. ஆனால் குடிலைச் சார்ந்த சகல அன்பர்களும் ஆறாத் துயரத்தில் பரிதவித்துக் கொண்டிருக்கிறோம். அந்த நாள்தான் வியாழக்கிழமை. 4.3.1999 என்ற அந்த நாளை நினைக்கும் போதெல்லாம் அந்த பரமஞானியின் அருள் தோற்றம் நம் கண் முன் வருகின்றது.

பூமியில் தோன்றிய அனைவரும் நிச்சயம் ஒருநாள் மறையத்தான் வேண்டும். மாற்றம் காண முடியாத இயற்கையின் நியதி இது. இதை நினைத்துத்தான் மனதை சமாதானப்படுத்த வேண்டியுள்ளது. அவரது மறைவு தினம் நிழற்படம் போல் உள்ளத்தில் ஓட ஆரம்பித்தது.

இன்று தான் தமது மறைவு நிகழப்போகிறது என்பதை சற்றும் அறிந்தவர் அல்லர் சுவாமிஜி. அன்று அதிகாலையில் வழக்கம் போல் 4 மணிக்கே எழுந்து காலைக்கடன்களை முடித்தும், குளித்து முடித்தும், நெற்றியில் பளீரிடும் சந்தனப் பொட்டு வைத்தும், ஆன்மீகக் காரியங்களை எல்லாம் பக்தி உணர்வோடு செய்து முடித்தும், தூய்மையான வெண்ணிற கதராடையும் உடுத்தி முடித்து, காலையுணவு அருந்தி சற்று ஓய்விலிருந்தார். பகல் மணி 12 ஆனதும் தமது அறைக் கதவை திறந்து வெளி வந்தார். அங்கு போடப்பட்டிருந்த மிதியடி வாசலுக்கு நேராக இல்லாமல் சற்று அப்பாலிருந்தது. அதை அந்த மாணவன் சரியாகப் போடவில்லை. உடனே அவர்கள் விரைந்து சென்று தமது காலால் அம்மிதியடியை நகர்த்தி சரி செய்ய முயன்றார். அவரது ஆன்மாவை அன்று கவர்ந்து செல்ல வந்திருக்கும் காலன் மிதியடியில் ஒளிந்திருந்து தனது வேலையைக் காட்டி விட்டான். மிதியடி தடுக்கியது. சாய்ந்தார் சுவாமிஜி. பிடித்துக் கொள்ள எதுவுமில்லை. தடாலென தரையில் வீழ்ந்தார். விழுந்த சப்தம் கேட்டு ஆஸ்ரமவாசிகளும் அங்கிருந்த மாணவர் சிலரும் ஓடிவந்து, சுவாமிஜியை தூக்கிச் சென்று அவரது படுக்கையில் படுக்க வைத்தனர். ஆஸ்ரம டாக்டர் ஜெயபால் அவர்களுக்கு தொலைபேசி மூலம் சுவாமிஜியின் 'நிலை' பற்றி தெரிவிக்கப்பட்டது.

திருச்சியிலிருந்து டாக்டர் ஜெயபால் அவர்களும் டாக்டர் கனகராஜ் அவர்களும் ஆஸ்ரமத்திற்கு விரைந்து வந்தனர். சுவாமிஜியை பரிசோதித்தனர்.

“ சுவாமி தொடை எலும்பு முறிந்து விட்டது. தாமதமின்றி ஆபரேஷன் செய்ய வேண்டும். திருச்சி மருத்துவமனைக்கு காலதாமதம் செய்யாமல் புறப்பட வேண்டும்.” என சுவாமிஜியிடம் கூறினர். அதை கேட்டதும் டாக்டர்களைப் பார்த்து, “ஆஸ்ரமத்தை விட்டு எக்காரணங் கொண்டும் வெளியில் செல்வதில்லை என திட சங்கல்பம் செய்து விட்டேன். ஆபரேஷனை ஆஸ்ரமத்திலேயே வைத்துக் கொள்ளுங்கள்” என்றார்.

தமது உடல் சிகிச்சைக்காக பலமுறை திருச்சி மருத்துவமனைக்கு சென்றிருக்கிறார். கோவை வாரியாரின் மலையாள இயற்கை வைத்திய சாலையில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு மாதம் தங்கி சிகிச்சை பெற்று வந்துள்ளார். “ஆஸ்ரம சேவைக்கு உடல் ஆரோக்யம் நன்றாக இருக்க வேண்டும்”என அடிக்கடி கூறி வரும் சுவாமிஜி அவர்களா தற்போதைய சிகிச்சைக்கு திருச்சி மருத்துவமனைக்கு செல்ல மறுத்துவிட்டார். ஏதேனும் காரணம் இருக்குமோ?

பகவான் ரமணர் தம் இறுதிக் காலத்தில் உடல்நலம் மிகக்குன்றியவராக இருந்தார். கைதேர்ந்த மருத்துவக்குழு ஒன்று மாற்றி மாற்றி பரிசோதித்தும் சிகிச்சை அளித்தும் வரப்பட்டது. இதையெல்லாம் கண்டு ரமணர் உடல் வேதனைக்கிடையிலும் சிரிப்பாராம். “எனக்கென விதிக்கப்பட்டிருக்கும் நாள் வரை நான் கண்டிப்பாக உயிரோடு இருப்பேன். அக்கால கெடுவின் இறுதிநாள் வந்து விட்டால் எந்த வைத்தியத்தாலும் என்னைக் காப்பாற்ற முடியாது. என்னை அலைக்கழிக்கும் முயற்சியை விட்டு விடுங்கள். எனது நிலையை நான் அறிவேன்” என்றாராம்.

அது போன்று ரமணரின் நிலைக்கு, அதாவது “ தன்னையே தான் அறிதல்” என்ற ஞானிகளின் பரிபக்குவ நிலைக்கு சுவாமிஜி வந்துவிட்டாரா? தம் இறுதிக்கட்ட நிகழ்வுகள் ஆஸ்ரமத்திலேயே நடைபெறட்டும் என நினைத்துத்தானோ என்னவோ சிகிச்சைக்கு வெளியில் செல்ல அவர் ஒப்பவில்லை.

ஆஸ்ரமவாசிகளும் மாணவர்களும் ஆறாத்துயரத்தோடு நின்றிருந்தனர். ஆங்காங்கே சிலை என நின்றிருந்த அவர்களின் உள்ளத்தில் “சுவாமிஜியை காப்பாற்று” என பிரார்த்தனை செய்த வண்ணம் நின்றிருந்தனர்.

‘ அமைதி இல்லத்தில்’ படுக்கையில் அமைதியாக படுத்திருக்கும் சுவாமிஜியை பார்த்துப் பார்த்து மனவேதனையில் அனைவரும் துடித்த வண்ணமிருந்தனர். ஆஸ்ரமவாசிகள் சுவாமிஜியின் கட்டிலுக்கு அருகில் சோகமே உருவானவர்களாக அமர்ந்திருந்தனர். சுவாமிஜியின் அருமைக் குழந்தைகளோ ஆங்காங்கே கண்கள் கலங்க நின்று கொண்டிருந்தனர்.

25 ஆண்டுகளுக்கு முன்பே சுவாமிஜி அவர்கள் குடிலின் ஆண்டுவிழா மலரில் தம் இறுதி நாளை குறித்து கோடி காட்டியுள்ளார். “ தமிழ் நாட்டின் எப்பகுதியிலிருந்தும் ஏழை அனாதைக் குழந்தைகள் எவ்வளவு பேர் வந்த

போதிலும் அவர்களுக்கு அடைக்கலம் தந்து ஆதரிக்க வேண்டியது என்பதுவே நமது அவா. அவர்கள் நல்வாழ்வு வாழ்வதை பார்த்து பரவசமடைந்த மனம் பரமஹம்ஸரின் திருவடிகளை நாட சரீரம் காவிரி தீர்த்தத்தில் சாம்பலாக வேண்டும் என்பதே எமது தெய்வீகப் பேரவா" எனக்குறிப்பிட்டுள்ளார்.

நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறுகிறது. தாம் கட்டிக்காத்த குருதேவரின் ஆலயத்திலேயே தமது ஆன்மா ஐக்கியமாக வேண்டும் என விரும்பிய மெய்ஞானி அவர்.

ஒருவேளை அவ்வாறு நடந்து விட்டால் ... அவ்வாறு நடந்து விடுமோ?

"ஸ்ரீராமகிருஷ்ண தேவா.... எல்லாம் உனக்குத் தெரியும். உனது இச்சை எதுவோ அது நடக்கட்டும். அதைத் தாங்கும் சக்தியை எங்களுக்குத் தந்துவிட்டு அதைச் செய்."

2. காலன் வென்று விட்டான்

அமைதி இல்லத்தில் கண் மூடி படுத்திருக்கிறார் சுவாமிஜி. சில சமயங்களில் கண் விழித்து, மெல்லிய குரலில் ஆஸ்ரமவாசிகளிடம் பேசுகிறார். டாக்டர்களும் எந்த கட்டடத்தில் ஆபரேஷனை வைத்துக் கொள்ளலாம் என இறுதியாக கலைக்கூடத்தை தேர்ந்தெடுத்து சுவாமிஜியிடம் கூறிச் சென்றார்கள்.

வெகு வேகமாக மாலை மங்கியது. இரவு வந்தது. இரவு மணி 10 ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறது. சுவாமிஜி அவர்கள் ஒரு டம்ளர் தீர்த்தம் கேட்டு வாங்கிக் குடித்தார். அதன்பின் அவரிடம் மௌனமே காட்சியளித்தது. "ஒரு டம்ளர் தீர்த்தம் தாருங்கள்" என அவர் கேட்டதுதான் அவர் பேசிய கடைசி பேச்சாகும். கடைசியாக அருந்திய பானமும் காவிரித்தீர்த்தம் தான். பின்னர் சுவாமிஜியிடமிருந்து பேச்சு எதுவும் வரவில்லை. கண் மூடியநிலை. அமைதி இல்லமே அமைதியில் மூழ்கிவிட்டது. அனைவரின் பார்வையும் சுவாமிஜியின் மீதே பதிந்திருந்தன. ஒரு நொடி நகர்வது ஒரு யுகமாக காணப்பட்டது. இரவு மணி 11. சுவாமிஜி அவர்களின் சுவாசம் சிறிது சிறிதாக அடங்குவது போல் தோன்றியது.

எதையும் தாங்கும் அந்த இதயம் வெகுவேகமாக மேலும் கீழுமாக இயங்கிக் கொண்டே வந்து மெல்ல மெல்ல அடங்கி இரவு 11.40 க்கு முற்றிலுமாக அடங்கிவிட்டது. சிவம் சிவத்துடன் ஒன்றிவிட்டது.

சுவாமிஜி என அனைவராலும் அழைக்கப்பட்ட தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமி அடிகள் பகவான் பரமஹம்ஸரின் இதய கமலத்தில் ஐக்கியமாகிவிட்டார்.

நடுநிசிவேளை. ஒலிகள் அனைத்தும் அடங்கிய நிசப்தமான இரவு நேரம்.

புற உலகின் சப்தங்களால் அந்த தவச்சீலரின் மென்மையான உணர்வுகள் பாதிக்கப்படக் கூடாது என்றோ என்னவோ அனைத்து ஒலிகளும் மறைந்த வேளையில் காலன் தனது வேலையை கச்சிதமாக முடித்துக் கொண்டு சென்றுவிட்டான்.

அப்பழுக்கற்ற ஒரு தூயஞானியின், மெய்ஞானத்துறவியின், தரித்திர நாராயண சேவையே பிறந்த பிறப்பின் கடமையென மதித்த ஒப்பற்ற மகாப்பிரபு ஒருவரின் "உயிர்ப்பறவை" யைக் கைப்பற்றிவிட்டான். அதை தனக்கு கிடைத்த பெரும்பாக்கியம் எனக்கருதிய காலன் சத்திய லோகத்தை நோக்கி அந்த உயரிய ஆத்மாவை சுமந்து கொண்டு சென்று கொண்டிருந்தான்.

காலனுக்கும் டாக்டர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் காலன் வென்று விட்டான். பரமஞானியின் சித்தத்தை காலன் உணர்ந்து கொண்டான். அவரது எண்ணம் ஈடேற தன்னிடமிருந்த அவரது உயிர்ப்பறவையை விடுவித்துவிட்டான்.

வெகுவேகமாக சிறகடித்துப் பறந்த அடிகளாரின் உயிர்ப்பறவை பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் விரித்த இரு கரங்களுக்கு இடையில் புயலென நுழைந்து, குருதேவரின் இதயத்தை இறுகப்பற்றிக் கொண்டது. முடிவே இல்லாத சச்சித் ஆனந்தத்தில் சுவாமிஜியின் உயிர்ப்பறவை அவரோடு ஐக்கியமாகிவிட்டது. இனி எப்போதும் அவருக்கு ஆனந்தம்... ஆனந்தம்.... ஆனந்தம்தான்.

இனி நாம் சுவாமிஜியின் ஸ்தூல சரீரத்தை பார்க்க முடியாது. அவரது புனித ஆத்மாவின் அளப்பறிய சக்தியின் ஒரு பகுதி குடில் வான எல்லையில் என்றும் வலம் வந்து கொண்டிருக்கும். அது நம்மை காக்கும். ஹரி ஓம் தத்சத்.

5. உயிர் பரமனுக்கு! உடல் அக்னிதேவனுக்கு!

நான்முகனின் படைப்பிலே எந்த ஒரு ஜீவனும் காரணமின்றி படைக்கப்படுவதில்லை.

நட்சத்திர உருவில் வானத்தில் என்றும் துலங்க " துருவன்" படைக்கப்பட்டான்.

இரணியவதம் நடைபெற "பிரகலாதன்" படைக்கப்பட்டான்

அத்வைத வேதாந்தம் பரவிட " ஆதிசங்கரர்" படைக்கப்பட்டார்.

இந்துமத சாராம்சம் உலகிலே பரவிட " சுவாமி விவேகானந்தர்" படைக்கப்பட்டார்.

தரித்திர நாராயணர்களின் சேவைக்காக " ஸ்ரீராமகிருஷ்ணர்" படைக்கப்பட்டார்

சிவானுபூதி பாரிலே மிளிர்ந்திட "மார்க்கண்டேயன்" படைக்கப்பட்டான்.

" ஆத்ம ஜோதியே அருமருந்து" என உலகினுக்கு காட்ட " ராமலிங்க அடிகளார்" படைக்கப்பட்டார்.

இராமகாதை மலர்ந்திட " வால்மீகி" படைக்கப்பட்டான்.

பக்திநெறி மக்கள் மனதிலே மலர்ந்திட " வாரியார் சுவாமிகள்" படைக்கப்பட்டார்.

அனாதைகளுக்கு செய்யும் தொண்டே ஆண்டவனுக்கு செய்யும் தொண்டு என உணர்த்திட " பிரம்மசாரி ராமசுவாமி" அடிகளார் படைக்கப்பட்டார்.

"They alone Live
Who live for others
The rest are dead
Than alive"

பிறர்க்காக தம்மை தியாகம் செய்து வாழ்பவர்கள் எவர்களோ, அவர்களே வாழ்பவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் வாழ்ந்திருந்தாலும் இறந்தவர்களே ஆவார்கள்.

சுவாமி விவேகானந்தரின் இவ்வாக்கியத்திற்கிணங்க குடில்சுவாமிஜி அவர்கள் தன்னை பரித்தியாகம் செய்து தரித்திர நாராயணர்களின் சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அபூர்வ மனிதர். பிரம்மதேவனின் நியதியின்படி அவரது பணியின் காலம் பூமியில் நிறைவு பெற்றது. எனவே அவர் பரமனடிக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்.

மறுநாள் காலையில் அதாவது 5.3.1999 வெள்ளிக்கிழமையன்று 8 மணியளவில் அவரது பூத உடல் காவிரிகரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தாம் மறைந்தால் எவ்வாறு தகனக்கிரியை நடக்க வேண்டும் என பல்லாண்டுகளுக்கு முன்பே 1.1.1985ம் வருடம் கற்பதரு நாளன்று தமது கைப்பட சுவாமிஜி அவர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அதன் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

" காவிரிக் கரையை ஒட்டியுள்ள கிழபுறமுள்ள குடில் தென்னந்தோப்பில், புனிதமான அப்புண்ணிய பூமியில் சரீரம் எரிக்கப்படவேண்டும். உடலின் மேல் போர்த்த 2 மீட்டர் கதர் துணி போதும். நெற்றியில் நீறு இருத்தல் வேண்டும். வாயில் துளசி தீர்த்தம் மட்டுமே விடவேண்டும். பூமாலைகள் அறவே கூடாது. எரியூட்ட சந்தனகட்டைகள் தேவையில்லை. சாதாரணக் கட்டைகளே போதும். கிரியையில் கலந்து கொள்ள யாரும் வரவேண்டும் எனக் காத்திருக்கக்கூடாது. அரைமணி ஒருமணிக்குள் தகனம் செய்துவிடவேண்டும்"

சுவாமிஜியினுடைய தகனம் அவரது விருப்பப்படியே செய்து முடிக்கப்பெற்றது. பளிச்சிடும் நீறணிந்த நெற்றியுடன், தூய வெண்மையான கதர்த்துணி போர்த்தப்பட்ட உடலை ஆஸ்ரமவாசிகளும் மாணவர்களும் அன்பர்கள் சிலருமாக தாங்கிவர பகவான் கோவிலிலிருந்து ராமநாமம் முழங்கிட, சுவாமிஜியின் இறுதியாத்திரை காவிரிக்கரை தென்னந்தோப்பை நோக்கி சென்றது. ஆஸ்ரம தோப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட சாதாரண

மரக்கட்டைகளால் ஆன சிதையில் அவரது பூதஉடல் கிடத்தப்பட்டது.

கட்டைகளின் இடைவெளியில் ஆங்காங்கே தலையிலிருந்து கால்வரை கற்பூரக் கட்டிகள் வைக்கப்பட்டன. குருகுலமாணவர்களால் ராம நாமம் எழுதப்பட்ட பல நோட்டுகளின் காகிதங்கள் இடையிடையே வைக்கப்பட்டன. மாணவர்களின் ராமநாம கோஷமும், பஜனைப் பாடல்களும் தொடர்ந்து நடைபெற்றன. குடிலின் மூத்த பிரம்மசாரி துரை அவர்கள் சுவாமிஜியின் பூத உடலுக்கு மும்முறை வலமாக வந்தபின் எரியூட்டினார். திகுதிகுவென எரிந்த கற்பூர ஜுவாலையில் சுவாமிஜியின் உடல் நம் கண் முன்னே சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. எரிந்து சாம்பலாகியது.

ஒரு உத்தம மனிதரை விரைவில் சத்திய லோகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற அவசரத்தில் அக்கினிதேவன் வெகு விரைவில் சுவாமிஜியின் உடலை வெண்ணீராக்கிவிட்டான்.

கனத்த இதயத்தோடு ஒவ்வொருவராக கலைய ஆரம்பித்தனர்.

குடிலின் ஒரு மாபெரும் சகாப்தம் முடிந்தது. உலக நன்மை கருதி உத்தம ஜீவாத்மாக்கள் நூறாண்டுகளுக்கு ஒரு முறை ஜனிப்பார்கள் என்ற ஞானிகளின் வாக்கு நினைவிற்கு வந்தது.

4. அஞ்சலி

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவனே! உலகில் நலிவுற்ற உள்ளங்களுக்காக அவதரித்த மஹாத்மாவே! கருணையின் இருப்பிடமே! உம்மிடம் வந்துவிட்ட அமரரான எமது தலைவருக்கு, இதுவரை எமக்கு வழிகாட்டிச்சென்ற அந்த உத்தம புருஷனுக்கு அஞ்சலி செலுத்தப் போகும் நேரத்தில் நிலை தடுமாறி திக்குத்திசை தெரியாமல் தவிக்கின்றோம். அவருக்கான அஞ்சலியை செலுத்த இதயத்தில் வல்லமை தந்தருள்வாய் தேவனே!

கண்ணீர் மல்க நாங்கள் அவருக்கு செலுத்தவிருக்கும் அஞ்சலியை ஏற்பாயாக!

குடிலின் ஞானத்தலைவா போற்றி போற்றி
அனாதைகளின் அருளாளா ,, ,,
தெய்வீகத்தின் திருஉருவே ,, ,,
சத்தியத்தின் சொரூபமே ,, ,,
தூய்மையின் ஒளியே ,, ,,
வாய்மையின் விளக்கே ,, ,,
கருணையின் வடிவமே ,, ,,
தாயும் தந்தையும் ஆனவனே ,, ,,
திக்கற்றோரின் தீனபந்துவே ,, ,,

சாந்த மூர்த்தியே	போற்றி போற்றி
நேர்மையின் சிகரமே	,, ,,
உழைப்பின் திலகமே	,, ,,
பிரம்மச்சரியத்தின் மகாசக்தியே	,, ,,
தனித்தவம் இயற்றியவா	,, ,,
பரமஹம்ஸரின் திருக்குமாரா	,, ,,

சத்தியலோகத்தின் தலைவாயிலில் ஜோதி ஸ்வரூபமாய் வீற்றிருக்கும் எங்களின் அருளாளா! தங்களது மலர்முகத்தை மனதிலிருத்தி வணங்குகிறோம்.

எம்மால் முடிந்தது இது ஒன்றுதான். அதை ஏற்று ஆசிதந்து எமைக் காத்தருள்வாய்.

ஆன்மா அழியாது என்பதற்கேற்ப தங்களது ஆன்மா எங்களுக்கெல்லாம் உற்ற துணையாக என்றும் துணை நிற்கும் என்ற மனநிறைவோடு எங்களது அஞ்சலியை முடித்துக் கொள்ளுகின்றோம்.

குரு மகராஜிகீ ஜெய்
சுவாமிஜி மகராஜிகீ ஜெய்
சாரதா மாதாகீ ஜெய்

ஓம்ஸ்தாபகாய சதர்மஸ்ய
ஸர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய
ஸ்ரீராம கிருஷ்ணாயதே நம:
ஹரி ஓம் தத் சத்

5. சுக்கான் முறிந்த கப்பல் கரை சேருமா?

சுவாமிஜி அவர்களின் திடீர் மரணம் குடில் ஸ்தாபனத்தை உலுக்கிவிட்டது. ஒரே நாளில் நிகழ்ந்த சுவாமிஜியின் மரணம் பலரையும் திகைப்படைய செய்துவிட்டது. குடிலின் நலனில் பெரும் அக்கரையும் அன்பும் கொண்டிருந்த அன்பர்கள் பலரின் உள்ளத்தில் தோன்றிய ஒரே கேள்வி " இனி குடில் நிர்வாகத்தை ஏற்பது யார்? தொடர்ந்து குடில் சேவை நிலைத்து நடைபெறுமா? குடிலுக்கு பெரும் சோதனை நிகழ்ந்துவிட்டதே. இதை நிவர்த்திப்பது எப்படி? என்றெல்லாம் அன்பர்கள் ஒருவர்க்கொருவர் வினவியபடி துயரத்தில் ஆழ்ந்தனர்.

இக்கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டதே என அச்சமோ, மனச்சோர்வோ, தயக்கமோ கொள்ளவேண்டியதில்லை. உலகத்திலே நடைபெறும் இயற்கை நிகழ்வுதான் இது. சிறப்பான நிர்வாகத்தால் ஸ்தாபனத்தைக் கட்டி காத்து உச்சநிலைக்கு கொண்டு வந்த மூலகாரணகர்த்தா இருந்துவரும் வரையில் எவருக்கும் எந்த நினைவும் எழாது. எதிர்பாராவகையில் ஸ்தாபனத்தின் ஸ்தாபகரின் மறைவு ஏற்பட்ட பின்தான் பற்பல சந்தேகங்களும் கேள்விகளும் விஸ்வரூபம் எடுத்து பயமுறுத்தும் மயக்கம் தயக்கம் எல்லாம் தோன்றும்.

சுவாமிஜி அவர்கள் இருக்கும்போதே பல அன்பர்கள், "சுவாமி என்றைக்கும் குடில் நிர்வாகம் சிறப்புற நடைபெற வேண்டும். அதற்கான திட்டங்கள் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா?" என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். வரவர இத்தகைய கேள்விகள் அதிகமாகவே அன்பர்களிடமிருந்து வரலாயின. இக்கேள்விக் கணைகள் வளர்ச்சியடைவது சரியல்ல ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என சுவாமிஜி தீர்மானித்தார்.

"மனித திரேகம் நிலையற்றது. நின்று உலாவும் ஆண்டுகள் எத்தனை? சரீரம் வீழும் நாள் எதுவென்றோ கணிக்க இயலாது. அனைத்தும் இயற்கை நியதிப்படிதான் நடக்கும். அனைத்தையும் நாம் அறிவோம். நீங்கள் சந்தேகப்படும்படியான நிலை என்றும் ஏற்படாது. குருமகராஜின் திருவருளால் குடில் இன்று மட்டுமல்ல என்றைக்கும் சிறப்பாகவே நடைபெறும். அவரது ஆசியால் நிமிர்ந்த குடில் என்றென்றைக்கும் நிமிர்ந்த வண்ணமாகவே காட்சிதரும் . அவரே ஏற்படுத்திக் கொண்ட குடில் அதை அவரே பார்த்துக் கொள்வார்."

குற்றம் குறையற்ற பரிசுத்தமான ஆத்மாவே நாங்கள் என்ற தூய்மையான சங்கல்பத்தில் குடில் குழந்தைகள் வளர்ந்து வருகின்றனர். ஸ்தாபனத்தின் தொண்டிற்கு துறவு மனப்பான்மையுள்ள இளம் துறவிகள் அவசியம் தேவை. ஸ்தாபனத்தின் எதிர்கால நிர்வாகிகள் இந்த ஸ்தாபனத்தில் படித்து பல்லாண்டுகள் இருந்து ஸ்தாபன நடைமுறைகளில் நன்கு பயிற்சி பெற்று அதன்பின் அவர்களின் விருப்பப்படி பிரம்மசர்ய தீட்சை பெற்றவர்கள்தான் குடிலின் தலைவராக வரவேண்டும் என்பதாக குடில் ஸ்தாபனத்தை அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள சட்டதிட்டங்களில் கண்டுள்ளது. எதிர்காலத்தில் ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்வதற்கு விவேக வைராக்யமுள்ள குடிலின் மூத்த பிரம்ம சாரி எவரோ அவர்தான் குடிலின் தலைவர் ஆவார் என தமது கைப்பட 1.1.1985 ஆம் ஆண்டில் கற்பதரு நாளான அன்று எழுதி வைத்துள்ளார்.

இவ்வாறாக மிக விரிவாக சுவாமிஜி அவர்கள் அன்பர்களின் ஐயங்களை நீக்கமற தீர்த்து வைத்தார். சுவாமிஜி அவர்கள் அமரரான பின்பு 5.3.1999 முதல் குடிலின் மூத்த பிரம்மசாரி 54 வயதான பிரம்மசாரி துரை அவர்கள் குடிலின் நிர்வாகியாகவும் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். சரியான

வழிகாட்டி ஒருவரை பின்தொடர்ந்து செல்பவர் எவ்வித இடையூறுமின்றி இலக்கை அடைவரன்றோ!. அதுபோல சுவாமிஜி அவர்களின் தலைமையின் கீழ் கட்டுப்பாடான நிர்வாகப்பயிற்சியை பல்லாண்டுகள் பெற்ற இன்றைய குடில் தலைவர் குடிலை செம்மையாக நடத்திச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

தலைமை சுவாமிகளின் நிர்வாகத்தின் கீழ் அடுத்துள்ள பிரம்மசாரிகளின் முழு ஒத்துழைப்புடன் குடிலின் அனுதின வேலைத்திட்டங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு சிறப்பாக குடில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாளும் தலைமை சுவாமிகளுடன் இதர பிரம்மசாரிகள் கலந்து பேசி, கருத்து பரிமாற்றங்களும், ஆலோசனைகளும் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை கையாளுகின்றனர்.

இவ்வேளையில் 5.3.1999 ல் குடில் தலைமைப்பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள பிரம்மசாரி துரை அவர்களின் சுருக்கமான வரலாற்றினை நினைவு கூர்வது அவசியமாக இருக்கிறது.

பிரம்மசாரி துரை அவர்கள் ஆஸ்ரமத்தில் 7 வயது சிறுவனாக 1–6–1954ம் தேதி முதல் வகுப்பு மாணவனாக சேர்ந்தார். குடிலில் அப்போது ஆரம்பப்பள்ளி துவக்கப்படாததால் அருகிலுள்ள பெருகமணியில் நடைபெற்று வந்த ஜில்லாபோர்டு பள்ளிக்கு சென்று வந்தார். அதே தேதியில் அவருடன் சேர்த்து ஐந்து மாணவர்கள் பெருகமணி பாடசாலைக்கு சென்று வந்தனர். இந்த ஐவருள் இவரே இளையவர். இரண்டாம் வகுப்பிலிருந்து பள்ளியிறுதி வகுப்பு வரை குடிலில் ஏற்படுத்தப்பட்ட பள்ளியில் பயின்றார். படிப்பு முடிந்ததும் ஆஸ்ரம சேவை செய்வதே தமது லட்சியம் எனக்கூறி குடிலை விட்டுச் செல்லாமல் அங்கேயே தங்கி குடில் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

1968 ம் ஆண்டில் தமது 21 ம் வயதில் சுவாமிஜி அவர்களால் தீட்சை தரப்பட்டு பிரம்மசாரியானார். சுமார் 31 ஆண்டுகள் பிரம்மசர்ய வாழ்க்கை நடத்தி வந்தார். விவசாயத்திலும், தென்னை வளர்ப்பிலும், பசுமடம் பராமரிப்பிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். குருகுல மாணவர்களைக் கொண்டு காவிரிபடுகை நிலங்களின் மேடுபள்ளங்களை திருத்தி சமன் செய்து தென்னை நடுவதற்கேற்ற நிலமாக மாற்றியமைத்தார். சுவாமிஜி அவர்கள் வெளிப்பிரயாணம் போகும் போதெல்லாம் தேவையான தென்னங்கன்றுகளை கொண்டுவரச் சொல்வார். இவ்வாறாக 30 ஆண்டுகாலத்திற்குள் குடிலில் சிறிது சிறிதாக 5000 தென்னங்கன்றுகள் நடப்பட்டன.

விவசாய வேலைகளிலும் தோட்ட வேலைகளிலும், தென்னந்தோப்பு வேலைகளிலும் மாணவர்களோடு இவரும் சேர்ந்து கொள்வார். மாபெரும் தென்னந்தோப்பு உருவாயிற்று. இவைகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் பத்துலட்சம் வருமானம் வந்தது.

" பெத்த பிள்ளை சோறு போடாவிட்டாலும்
வைத்த பிள்ளை சோறு போடும்" என்பது தென்னையைக் குறித்த பழமொழி.

முன்ஏர் சீராகச் சென்றால் பின்ஏர் சீராகப் பின்தொடரும் என்பதற்கேற்ப அமரரான சுவாமிஜி அவர்கள் போட்டுத் தந்த சீரான நிர்வாகப்பாதையில் அடிவைத்து செல்லும் இன்றைய குடில் நிர்வாகம் என்றும் சீரும் சிறப்புடன் விளங்கும்.

6. காவிரிக்கரையில் நினைவு மண்டபம்

மாபெரும் லக்ஷியங்களைக் கைக்கொண்டு மனித சமுதாயத்திற்கு தன்னலமற்ற சேவை செய்து, வாழ்க்கையை அர்ப்பணித்த புனித ஆத்மாக்களை மனித சமுதாயம் என்றுமே மறப்பதில்லை. அவர்களின் நினைவாக சிலைகள் வைத்தும், சித்திரங்கள் வரைந்தும், மண்டபங்கள் கட்டியும், ஊருக்கும் தெருவிற்கும் அவர்களது பெயரை வைத்தும் அவரது நினைவை கொண்டாடிவருகின்றனர்.

அனாதை மக்களை ஈஸ்வராம்சமாகக் கொண்டு அவர்களுக்காகவே காலம் முழுவதும் தொண்டாற்றி, தமது இன்னுயிரை ஈந்த குடில் சுவாமிஜி அவர்களை நினைக்கும் போதே நம்முள் விஸ்வரூபமாக காட்சி தருகின்றார்.

" நான் 97 ஆண்டுகள் உயிர் வாழ்வேன். குடிலின் வெள்ளிவிழாவை பார்த்தாகிவிட்டது. 2000 த்தில் வரும் பொன்விழாவையும் நடத்தி விட்டு, ஸ்தாபனப் பொறுப்புக்கள் அனைத்தையும் ஆஸ்ரம பிரம்மசாரிகளிடம் பிரித்துவிட்டு பரமஹம்ஸரை ஆராதித்த வண்ணம் ஒய்வில் இருப்பேன்." எனக்கூறியவர் சுவாமிஜி அவர்கள். அவ்வளவு திடநம்பிக்கை. ஆனால் மனிதர்களின் கணக்கும் காலனின் கணக்கும் ஒத்துப்போனதாக சரித்திரம் இல்லையே.

காலன் சுவாமிஜியின் நம்பிக்கையை தகர்த்து பொய்யாக்கி வென்று விட்டான்.

இதுவரை தமது வாழ்விலே எதிலுமே வெற்றியைக் கண்ட சுவாமிஜி அவர்கள் இந்த ஒரு விஷயத்தில் தோல்வி கண்டார். தமது 88 ம் வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார். தமக்கு பின்னால் இப்படி நடக்கலாம் என எண்ணித்தானோ சுவாமிஜி அவர்கள் " குடில் பகவானின் ஆலயம். திரும்பிய பக்கமெல்லாம் ராம நாமமும் பரமஹம்ஸர் அருளிய அமுதமொழிகளும் கண்களிலே காணப்படவேண்டும். கட்டடங்களில் குருதேவர், அன்னையார், விவேகானந்தசுவாமிகளின் படங்கள் மட்டுமே இருத்தல் வேண்டும்." எனக்கூறியுள்ளார். மேலும் அவர் தெரிவித்திருப்பவதாவது, " இந்த தெய்வ

சந்நிதியில் மனிதர்களின் பெயரோ, உருவப்படமோ, உருவச்சிலையோ அறவே இடம் பெறுதல் கூடாது." என்பதாகும்.

சுவாமிஜி அவர்கள் மனிதசேவை ஒன்றையே மனதில் கொண்டு பணியாற்றிய மாசிலா மாபெரும் ஞானி அவர். அவர் என்றும் பெயரையும் புகழையும் நாடினவர் அல்லர். அவரது காலத்திற்கு பின்னர் இம்மாபெரும் அறப்பணியின் மூலகர்த்தர் யார்? இக்குடிலின் ஜீவாத்மா எது? என எதிர்கால சந்ததியினர் கேட்டால் சுவாமிஜியின் பெயரை மட்டும் சொன்னால் போதுமா? அவரது திருஉருவத்தை கண்டால்தானே மனதிலே பக்தி பிரவாகம் ஓடும். இம்மாபெரும் சேவையை தோற்றுவித்த பரமஞானி இவர்தானா என எண்ணித் தலை வணங்குவார்கள். அதற்காகவாவது சுவாமிஜியின் முழுஉருவ திருஉருவம் வேண்டுமே என அன்பர்கள் பலரும் மனமாற ஆதங்கப்பட்டதுண்டு. அவரைப்பற்றிய சுவடு எதுவும் குடிலில் இல்லாமலிருப்பது எதிர்காலத்திற்கு உகந்ததாக இருக்குமா? உயர்ந்த தொண்டிற்கும் உதாரணத்திற்கும் இலக்கணமாக விளங்கியவர் இவரே என இளையதலைமுறையினர் பெருமை கொள்ளும் வண்ணம் எடுத்துக்காட்டி அவர்களுக்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்த சுவாமிஜி அவர்களின் நினைவாக ஏதாவது இருப்பது அவசியமல்லவா?

பலநாள் சிந்தனைக்குப்பின், சுவாமிஜி அவர்களின் எண்ணத்திற்கு மாறாக இருப்பினும் மக்கள் நலனிற்காக அவர்கள் மனம் பரிபக்குவம் அடைய சுவாமிஜியின் நினைவு மண்டபம் ஒன்றை ஏற்படுத்தி அதில் அவரது அஸ்திக் கலசத்தை வைப்பதெனவும் முடிவாயிற்று. மேலும் சுவாமிஜியின் ஆளுயர திருஉருவப்படம் பெயிண்டில் சித்திரமாக தக்க இடத்தில் வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்காரியங்களை நிறைவேற்ற தக்க நபர் யார் என யோசிக்க வேண்டிய நிலை உருவாயிற்று. தற்போதைய ஆஸ்ரமத் தலைவர் பிரம்மசாரி துரை அவர்களே இதற்கும் வழிகாட்டிவிட்டார்.

ஆஸ்ரம பிரம்மசாரி வீரசந்திரன் அவர்கள் பலவருடங்களாக ஆஸ்ரம கட்டடங்களின் பொதுமராமத்து பணிகளை கவனித்து வருபவர். எனவே சுவாமிஜியின் நினைவு மண்டபம் கட்டும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுவாமிஜியின் முழு உருவப்படம் வரையும் பொறுப்பை ஏற்றிருப்பவர் விபரம் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாமிஜியை தகனம் செய்த இடத்தில் தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் மொசைக் வெள்ளை ஒடுகள் பதிக்கப்பட்டு நாற்கோண மேடை அழகுற அமைக்கப்பட்டது. நான்கு மூலைகளிலும் நான்கு அழகுத்தூண்கள் பொருத்தப்பட்டன. அதன்மீது கிண்ணம் ஒன்று கவிழ்த்து வைத்தாற் போல் வண்ணங்கள் பூசப்பட்டு அழகான கோபுரம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. மண்டபத்தில் மத்தியில் இதழ்விரித்த தாமரைபீடம் ஒன்றும் பாங்குற அமைக்கப்பட்டது. இதன் உட்புறத்தில்தான் சுவாமிஜி அவர்களின் மகா அஸ்திக்

கலசம் வைத்து பூசப்பட்டது. மண்டபத்தின் எதிரே கலைநயம் மிக்க அழகுடன் கூடிய வளைவான தோரண வாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சுற்றிலும் குரோட்டன்ஸ் செடிகள். பின்னணியில் காவிரிஆறு சலசலத்த வண்ணம் ஓடுகிறது.

மண்டபத்தின் நாற்புறமும் சிமெண்ட் நடைபாதை, அதை ஒட்டி பச்சை பசேலென மரகதப்பச்சை கம்பளம் போர்த்தாற்போல பசும்புல்தரை உருவாக்கப்பட்டுள்ளது. தென்னந்தோப்பிலிருந்து வீசும் காற்று, பலவித பறவைகளின் இனிய ஒலிகள் சூழ்ந்த அமைதியான பகுதி அது.

தினமும் விடியற்காலையில் ஒரு குருகுல மாணவன் மண்டபத்தை தூய்மை செய்து செம்பருத்தி பூக்களால் அலங்கரிக்கின்றான். சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்யுமாறு அந்தச் சூழல் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

மண்டபத்தின் முன் பகுதி முகப்பில் பதிக்கப்பட்டுள்ள பலகையில் காணப்படும் வாசகங்கள்

ராம் ராம்
ஸ்ரீராமகிருஷ்ண குடில்
ஸ்தாபகர்
ஸ்ரீமத் பிரம்மசாரி ராமசுவாமி
18.10.1911 – 4.3.1999
நினைவு மண்டபம்
4.3.2000

சுவாமிஜி அவர்களின் நினைவுகள் மனதிலே அலைமோதுகின்றன. மண்டபத்தை வலம் வந்து வணங்குகின்றோம். சில்லென்ற காற்று நம்மை அணைத்துச் செல்லுகிறது. மேனி சிலிர்க்க அம்மகானை நினைத்த வண்ணம் வெளி வருகின்றோம்..

7. அமரர் சுவாமிஜியின் திருஉருவப்படம் ஸ்தாபிதம்

பண்டைய நாளில் கலையரசியின் அருள் பெற்ற கலைஞர்களையும், நாட்டிற்கு நல்லது செய்த அறிவுசால் ஆன்றோர் பெருமக்களையும், மக்கள் உள்ளத்திலே நீங்கா இடம் பெற்ற செங்கோலோச்சிய மாமன்னர்களையும், பகைவர்களிடமிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றிய திண்தோள் வீரமறவர்களையும், எதிர்கால சந்ததியினர் பார்த்து மகிழவும் பாராட்டி மகிழும் முகத்தான், அவர்களது அருமை பெருமைகளை விவரித்து செம்புப் பட்டயங்கள், வெண்கலப்பட்டயங்கள், பாறைகளில் பொறித்து வைத்த நடுகற்கள் ஆகியவைகள் மூலமாகவும் சிலைகள் செதுக்கி வைப்பதின் மூலமாகவும் தமிழின மக்கள் அத்தகைய நல்லோர்களின் நினைவுகளை

பலவிதங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். பண்டைய நாளின் வழக்கமும் இதுவே.

ஆனால் இன்றைய நாளில் மேலே கண்ட நினைவுச் சின்னங்களை பெரும்பாடுபட்டு ஸ்தாபிக்க தேவையில்லை. பலவிதமான நவீன உத்திகள் இந்நாளில் வந்துவிட்டன. மனிதர்களை நேரில் பார்த்து மகிழும் வண்ணம் புகைப்பட கலையின் ஆக்கம் வெகுவாக முன்னேறியுள்ளது. கண்ணிமைக்கும் நேரத்தில் ஒருவரின் உருவப்படத்தை தயாரித்து விடலாம். ஆளுயர " மனித பிம்பங்கள்" ஆயில் பெயிண்ட் உபயோகப்படுத்தி தத்ரூபமாக இன்று வரையப்படுகின்றன. இவற்றிற்கான பல்வகையான நவீன சாதனங்களும் நவீன உத்திகளும் வந்துவிட்டன.

குடில் சுவாமிஜி அவர்களின் ஆளுயர திருஉருவத்தை வரைய வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்த நேரமது. 18.10.2000 அன்று குடிலில் சுவாமிஜி அவர்களின் ஜெயந்திவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள சென்னையிலிருந்து குடிலின் முன்னாள் மாணவரும் தலைசிறந்த ஆர்ட்டிஸ்ட்டான திரு. மருதை என்பவர் வந்திருந்தார். சுவாமிஜியின் முழுஉருவத் தோற்றத்தை குடிலிலேயே தங்கி தாம் வரைந்து தருவதாக மகிழ்வோடு ஒப்புக்கொண்டார்.

நின்ற நிலையில் 5 அடி உயரத்திற்கு சுவாமிஜியின் திருஉருவம் வரைவதென தீர்மானமாயிற்று. கூறியபடியே மருதை அவர்கள் குடிலில் தங்கி வேலையை முடித்தார்.

நின்ற நிலையில் சற்றே முகம் திரும்பி தாம் முதன்முதலில் கால்பதித்த திருப்பராய்த்துறையில் குடிகொண்ட பராய்த்துறை நாதரை பார்ப்பது போல அவரது தோற்றம் அமைந்தது. பலரும் பாராட்டினர்.

இத்திரு உருவம் சுவாமிஜி அவர்கள் தனித்தவம் இயற்றிய காலத்தில் மாந்தோப்பில் பகவான் பரமஹம்ஸருக்காக கட்டிய ஆலயத்தின் ஒரு புறத்தே தாம் தங்க கட்டிய ஆஸ்ரமஅறையில் வைக்கப்பட்டுள்ளது. சற்று தூரத்திலிருந்து பார்த்தால் சித்திரம் என நம்பமாட்டார்கள். சுவாமிஜியே தம் அறையில் நின்று கொண்டிருப்பது போலவே தோற்றமளிக்கும்.

குடிலைப்பார்க்க வரும் அன்பர்களும் பொதுமக்களும் தெய்வ சன்னிதானத்திற்கு சென்று ஆங்கே எழுந்தருளியிருக்கும் ஈசனை வணங்கிச் செல்வதைப் போல் ஆஸ்ரமத்து படிகளில் ஏறி சுவாமிஜியை நோக்கி கைகூப்பி வணங்கி மனநிறைவோடு செல்கின்றனர்.

8. அமைதி இல்லத்தில் சுவாமிஜியின் நினைவுப் பொருட்கள்

அமைதி இல்லம் ஒரு மாடியை கொண்ட கட்டடம். முன்னால் வெராண்டா உள்ளது. அதனை ஒட்டியுள்ளது முன்புற அறை அதையடுத்து உட்புறம் ஒரு

அறை உண்டு. மாடியில் பெரிய ஹால் உண்டு.

சுவாமிஜி அவர்கள் முன்புற அறையை தமது அலுவலக அறையாக பயன்படுத்தி வந்தார். இந்த அறையில்தான் ஆசிரியர்கள், குடில் அலுவலர்கள், ஆஸ்ரமவாசிகள், அன்பர்கள் ஆகியோர் சந்தித்து அவரிடம் நிர்வாகம் சம்மந்தப்பட்ட விஷயங்களை பேசி முடிவெடுப்பார்கள். இங்கிருந்து கொண்டுதான் சுவாமிஜி அவர்கள் நிர்வாகம் சம்மந்தப்பட்ட முடிவுகளை வெளியிடுவார். உத்திரவுகளை பிறப்பிப்பார்.

மகாத்மாஜியின் சபர்மதி ஆஸ்ரமத்திற்கும் குடிலுக்கும் ஒற்றுமைகள் சிலவுண்டு. இவ்விரு ஸ்தாபனங்களும் " ஆஸ்ரமம்" என்ற புனித நாமத்தை பெற்றுள்ளன. மகாத்மாஜி அகிம்சாக் கொள்கையில் தீவிரமான ஈடுபாடு கொண்டவர். சபர்மதி ஆஸ்ரமத்திற்கு அருகில் சபர்மதி ஆறு ஓடுகிறது. குடிலுக்கு அருகில் காவிரி நதி ஓடுகிறது. மஹாத்மாஜியின் நூற்பு அறையை அடுத்து மெத்தை, திண்டுகள், சாய்வு மேஜைகளுடன் கூடிய அலுவலக அறை உள்ளது. அதைப் போல சுவாமிஜியின் அலுவலக அறையிலும் நாற்காலிகள் பென்ச்சுகள் போடப்பட்டு வரவேற்பு அறையாகவும் அது விளங்கி வருகிறது. மஹாத்மாஜியின் அறையில் நாட்டிற்குழைத்த நல்லோர்களின் படங்கள் காட்சிதரும். சுவாமிஜியின் அறையில் பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் படங்கள் சுவற்றை அலங்கரிக்கும். சபர்மதி ஆஸ்ரமம் இயற்கையில் சூழலில் அருமையாக அமைந்துள்ளது. குடில் ஆஸ்ரமமும் இயற்கை சூழலில் பாங்குற காட்சி தருகின்றன.

அங்கிருந்தவாறு முன்னவர் பாரதநாட்டு மக்களின் சுதந்திரத்திற்காக தமது சேவையைத் தொடர்ந்தார். பின்னவர் இங்கிருந்து கொண்டுதான் அனாதை மக்கள் சேவையைத் தொடர்ந்தார். குடில் சுவாமிஜி அமரரான பின் அவரது அலுவலகம் அவரது நினைவு அறையாக மாற்றப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளில் குடில்விழாக்களில் கலந்து கொண்ட அன்பர்கள் போட்டோக்கள், சுவாமிஜி மறைந்த நேரம் 11.40 என்பதைக்காட்டும் கடிகாரம். அவர் மறைந்த நாள் 4.3.1999 வியாழன் என்பதைக்காட்டும் நாள்காட்டி, அவர் அமர்ந்த சாய்வு மேஜை, கட்டில், மெத்தை தலையணை பாதரட்சை, மூக்குக்கண்ணாடி, அவர் அணிந்த ஆடைகள் சுவாமிஜி அவர்கள் படித்த புத்தகங்கள், எழுதிய டைரிகள் ஆகிய அனைத்தும் பாங்குற ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் அஃறிணைப் பொருட்கள். நடந்ததை உணரும் ஆற்றல் அவைகளுக்கு இல்லை. அவைகள் எவ்விதமான அசைவுமின்றி இருப்பதைப் பார்த்தால் சுவாமிஜி தங்களை துடைப்பார், தொடுவார், பிரிப்பார், எழுதுவார், படிப்பார்.... என்றாவது ஒருநாள் இது நடக்கும் என ஏங்கிய வண்ணம் காத்திருப்பதாக நமது மனதில் நினைக்கத் தோன்றுகிறது.

சுவாமிஜி மறைந்துவிட்டார். நாம் இனி அவரை காண முடியாது என

உணர்ந்து கொண்டு உலக நியதிப்படி அனைத்தையும் செய்துவிட்டு நம் கடமையை நன்கு முடித்துக் கொண்டோம் என்ற நம்பிக்கைக்கு நமது மனித மனம் வந்துவிடுகிறது. ஆனால் அந்த அறையில் காணப்படும் அஃறிணைப் பொருட்கள், சுவாமிஜிக்காக காத்திருக்கின்றன.

நமக்கு துக்கம். ஆனால் அவைகளிடத்தில் துக்கமில்லை. எதிர்பார்ப்பு இருக்கிறது. அஃறிணைப் பொருட்களிடமும் எதிர்பார்ப்பு உள்ளதா? ஆச்சரியமாக உள்ளதா?

தமிழ்நாட்டின் மஹாகவி கூறுகின்றான்
“காக்கை குருவி எங்கள் ஜாதி”
வான் முகடும் மலையும் அலைகடலும் எங்கள் தோழன்

என உயிருள்ளவைகளையும், உயிரற்றவைகளையும் ஒரே தராசிலிட்டு சமமான மதிப்பு கொடுத்து மகிழ்ந்தான் பாரதி. அஃறிணை பொருட்களிலும் தோழமையைக் கண்டான் பாரதி. அஃறிணைப் பொருட்களை நாமும் நேசிக்கக் கற்று கொள்வோம். பக்தி உணர்வோடு ஆலயத்தின் கதவுகளையும், சுவர்களையும், படிகளையும் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்வதில்லையா? அதுபோலத்தான் இதுவும்.

அறையின் மையத்திலுள்ள ஒரு ஸ்டூலில் மோகனப்புன்னகையுடன் சிரிக்கும் சுவாமிஜியின் மார்பளவு உருவப்படத்தை கண்டவுடன், நம்முள்ளே மறைந்திருக்கும் கண்ணீர் குபுக்கென வெளிவருகிறது. அவர் சாய்வாக அமர்ந்திருக்கும் ஆசனம் கதர் துணி போர்த்தப்பட்டு ஒரு பக்கம் காணப்படுகிறது. அதற்கருகில் ஆஸ்ரமக்கொடி, நாற்பத்தைந்து ஆண்டுகளாக தம் கைகளால் தொட்டு கொடிமரத்தில் ஏற்றப்பட்ட அந்தக்கொடி ஒரு பக்கத்தில் விரித்த வண்ணம் காணப்படுகிறது.

வாழ்வின் இறுதிநாளில் அவரை காவிரிக்கரை புண்ணிய பூமிக்கு சுமந்து செல்லும் பெரும்பாக்கியம் கிடைக்கப்பெற்ற அந்த நாற்காலி ஒரு பக்கம் மோனநிலையில் நிற்கிறது. அறையில், செம்பருத்திப்பூக்களால் சுவாமிஜியின் படம் அலங்கரிக்கப்பட்டு, அதன் எதிரில் ஜோதியை காண்பிக்கும் குத்துவிளக்குகள் காணப்படுகின்றன. உள்ளே சென்று வெளியில் வந்தால் சுவாமிஜியை பார்த்த நிறைவு இதயத்திலே தோன்றுகிறது.

9. குருதேவரின் தொண்டருக்கு ஜெயந்திவிழா

குடில் ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்தே பகவான் பரமஹம்ஸ தேவர் ஜெயந்தி, சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி, அன்னை சாரதா தேவியார் ஜெயந்தி என முப்பெரும் ஜெயந்திகள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த ஜெயந்தி விழாக்கள் அவரவர்கள் உலகில் ஜனித்த திதி, நட்சத்திரத்தை

அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் பல விழாக்கள் கொண்டாடப்பட்ட போதிலும், இம்மூன்று ஜெயந்திகளும் மனோ, வாக்கு, காய சித்த சுத்தியுடன் வெகு விமரிசையாக பக்திபூர்வமான உணர்வுடன் கொண்டாடப்படும்.

குடிலின் ஆதார தெய்வமான பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் கோயிலில் சிறப்பாக வந்தனை வழிபாடுகள், பகவானின் நூற்றெட்டு நாமாவளிகள் ஓதப்பட்டு கண்டாமணி ஓசையுடன், கற்பூர ஆரத்தி காண்பிக்கப்பட்டு பூஜை நிறைவு பெறும். திருநீறும் சந்தனமும் துளசி தீர்த்தமும் வழங்கப்படும்.

மாணவர்களால் ஒரு மணிநேர பஜனை நடைபெறும். மதியம் அனைவருக்கும் குருதேவரின் பிரசாதமாக விருந்தளிக்கப்படும்.

சுவாமிஜி அவர்கள் அமரர் ஆகிவிட்டபடியால் குடிலில் நடைபெறும் முப்பெரும் ஜெயந்தி விழாக்களுடன், சுவாமிஜி அவதரித்த தினத்தையும் சேர்த்து கொண்டாடப்பட்டு வருகின்றது.

சுவாமிஜி அவர்களின் **89** வது ஜெயந்தி விழா **18.10.1999** அன்று நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் இறையருள் கூடிவரவில்லை. காரணம் சுவாமிஜி அவர்கள் அவதரித்த நாள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. சுவாமிஜியின் பிறந்த நாள் எதுவென அவரிடம் அன்பர்கள் கேட்ட போதெல்லாம் விடையாக ஒரு புன்சிரிப்புதான் கிடைக்கும். ஆஸ்ரம பிரம்மச்சாரிகள் சமயம் கிடைத்த போதெல்லாம், சுவாமிஜியிடம் அவரது பிறந்த நாள் எதுவென வற்புறுத்திக் கேட்பார்கள். குழந்தைகளின் ஆவலை தட்டிக்கழிக்கும் தந்தை எங்காவது உண்டா?

முகத்தில் மந்தஹாசம் தோன்ற "எல்லாம் பதினொன்றுதான்" நீங்களே புரிந்து கொள்ளுங்கள் எனக் கூறுவார்கள். "சுவாமி அப்படி என்றால் தாங்கள் பிறந்தது **11.11.11** தானே" எனக் கேட்பார்கள். அதை அவர் மறுக்கவும் இல்லை.ஏற்கவும் இல்லை. " கட்டைதானா முக்கியம்" காரியம் அல்லவா முக்கியம்" என முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்.

ஆனாலும் அந்த தேதியில், ஆஸ்ரம பிரம்மசாரிகள் சுவாமிஜிக்கு பாத நமஸ்காரம் செய்து நீறு பெற்று ஆசியும் பெறுவார்கள். ஆனால் அன்பர்கள் பலருக்கும் இந்தத் தேதியில் ஐயம் இருந்தது. சுவாமிஜி அவர்கள் அமரர் ஆனபின் அவர் அவதரித்த சரியான நாளை எவ்வாறேனும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகம் விஸ்வரூபம் எடுத்தது.

சுவாமிஜி அவர்களின் மறைவிற்குப்பின் அவர் அவதரித்த நாளை ஆதாரபூர்வமாக கண்டு பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆஸ்ரம அன்பரும் சுவாமிஜியின் உற்ற தோழருமான சிக்காரம்பாளையம் திரு.C.N. ராமசாமி அவர்களால் பிறப்பு, இறப்பு பதிவகத்திலிருந்து பெரும் முயற்சிகள்

மேற்கொண்டு சுவாமிஜி அவர்கள் பிறந்த தேதி 18.10.1911 தான் என அலுவலக அத்தாட்சி பெற்று குடிலுக்கு அனுப்பினார். எல்லாம் ஒன்றுதான் என்பது இத்தேதியிலும் உள்ளதல்லவா?

தேதி கண்டுபிடிப்பதில் ஏற்பட்ட தாமதம் தான் 89 வது ஜெயந்தியை 18.10.99 அன்று கொண்டாட இயலாமற் போயிற்று.

சுவாமிஜி அவர்களின் 90 வது ஜெயந்தி முதல் இனி வருடாவருடம் தவறாமல் பத்தாம் மாதம் பதினெட்டாம் நாள் கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

முதன்முதலாக சுவாமிஜி அவர்களின் 90 வது ஜெயந்தி 18.10.2000 த்தில் கொண்டாட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுவாமிஜியின் ஜெயந்தி விழாவில் குடில் குழந்தைகள் அனைவரும் கலந்து கொள்ளலாம் என இன்றைய குடில் தலைவர் பிரம்மசாரி துரை அவர்கள் அறிவிப்பு தந்துள்ளார்கள்.

18.10.2000 அன்று அமரர் சுவாமிஜி அவர்களின் ஜெயந்திவிழா முதன்முதலாக வெகு சிறப்பாக நடந்தது. ஏராளமான முன்னாள் மாணவர்களும், அன்பர்களும் கலந்து கொண்டனர். சுவாமிஜி அவர்களைப்பற்றி பலரும் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின் வந்திருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டு விழா இனிதே முடிந்தது.

10. அனாதை மக்களின் ஆண்டவன்

(கவிதை மலர்)

குடிலின் முன்னாள் மாணவரும் தற்போது புதுடெல்லியில் சிண்டிகேட் பாங்கில் உதவி மேலாளராக பணியாற்றி வரும் திரு. கருப்பையா பாரதி இக்கவிதை மலரை சுவாமிஜிக்கு அஞ்சலியாக அனுப்பியுள்ளார்.

1. என்றும் எங்கள் உள்ளம் நிறைந்த
எல்லாம் வல்ல பெருமானே!
ஏழைக்கெல்லாம் வாழ்வு கொடுத்த
எங்களின் ஆண்டவன் நீ தானே

2. ஆதரவற்ற அனாதைக் கெல்லாம்
அடைக்கலம் கொடுத்திட குடில் அமைத்தாய்!
அன்பு கருணை இரக்கம் கொண்டு
அய்யா எங்களுக்கு உயிரளித்தாய்

3. தோளில் சுமந்து எங்களை அரவணைத்தாய்
துன்பமெல்லாம் அனுபவித்தாய்
தொல்லை இல்லா உலகைக் காட்டிட
தெய்வமாய் இருந்து உன்னை அர்ப்பணித்தாய்

4. தாயே இல்லாத அனாதைக் கெல்லாம்
தாயாய் தந்தையாய் நீ இருந்தாய்
தரித்திரமில்லா வாழ்வு கொடுத்து
சரித்திரமாகி நீ உயர்ந்தாய்

5. அவனியில் ஆண்டவன் உந்தன் வடிவாய்
அனாதை மக்கட்கு அவதரித்தான்
ஆலமரம் போல் எங்களுக் கெல்லாம்
அய்யா உன்னால் நிழல் கொடுத்தாய்

6. வெள்ளை உடையை நீ தரித்து – புது
விளக்கத்தை துறவுக்கு நீ தந்தாய்
வானம்பாடியாய் நாங்களிருந்து
வாழ்வில் உன்நெறி பரப்பிடுவோம்.

7. வானம் வையகம் உள்ள வரைக்கும்
வாழும் உங்களின் தெய்வீகம்!
பிள்ளைகள் நாங்கள் வணங்குகின்றோம்
எம் பிதாவே எங்களை காத்தருள்வாய்!!

8. என்றும் எங்களை காத்தருள்வாய்
எங்களை வளர்த்த பெருமானே!
என்றும் உந்தன் பிள்ளைகளுடனே
இருந்து குடிலில் வாழ்வாயே!

11. சுவாமிஜியின் நாமம் போற்றி

குடிலின் முன்னாள் மாணவரும் தற்போது கோவை மாவட்டம் காரமடையில் ஆசிரியப் பணிபுரிந்து வருபவருமான திரு. S காந்தி M.A.,B.Ed அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண குடில் போற்றி என்னும் தலைப்பில் சுவாமிஜியின் அர்ச்சனைக்கு உகந்ததாக 108 நாமாவளியை இயற்றியுள்ளார்.

இந்தச் சிறிய புத்தகத் தொகுப்பை N.R. இங்க் கம்பெனியின் உரிமையாளரும் குடிலின் மற்றொரு முன்னாள் மாணவருமான திரு N. ராமானுஜம் அச்சிட்டு வழங்கியுள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ண குடில் போற்றி
ஓம் அரிநாமம் பெற்றவா ,,
ஓம் அரிநாமம் உவந்தவா ,,
ஓம் சாரதா அன்னையின் புதல்வா ,,
ஓம் அன்பின் ஊற்றே ,,
ஓம் அன்பர்க்கு அன்பனே ,,
ஓம் அம்மையப்பனே ,,
ஓம் அண்டர் நாயகனே ,,
ஓம் அறிவின் ஆற்றலே ,,
ஓம் அஞ்ஞானம் நீக்குவாய் ,, 10

ஓம் அருளின் அருளே ,,
ஓம் அருட் குணக்குன்றே ,,
ஓம் அனந்த கோடியே ,,
ஓம் அருள் ஞானகுருவே ,,
ஓம் அருள் ஞானகடலே ,,
ஓம் அருள் பாலித்து காப்பாய் ,,
ஓம் ஆண்டகையாளனே ,,
ஓம் ஆட்கொண்டு அருள்வாய் ,,
ஓம் ஆளுடையப்பனே ,,
ஓம் ஆன்மீகப் பேரொளியே ,, –20

ஓம் ஆனந்த வாரிதியே ,,
ஓம் ஆக்கமும் ஆனாய் ,,
ஓம் ஆக்கம் அளவிலா பெம்மானே ,,
ஓம் ஆக்கம் அளிப்பவனே ,,
ஓம் ஆணவம் அற்றவா ,,
ஓம் ஆணவம் நீக்குவாய் ,,
ஓம் ஆண்மை அளிப்பவனே ,,
ஓம் ஆண்மையின் திருவே ,,
ஓம் ஆலயத்து அமர்ந்தவா ,,
ஓம் ஆளுயரமாலை வேண்டாவெற்பே ,, –30

ஓம் இறைவா ,,
ஓம் இன்னுயிர் ஆனாய் ,,
ஓம் இன்முகப் பொழிவே ,,
ஓம் இசை ஞானப் பிரியனே ,,
ஓம் இசை இன்ப ஒளியே ,,
ஓம் இச்சை அறுத்தவனே ,,
ஓம் இச்சை களைபவனே ,,

ஓம் இராம் இராம் எனமுழங்கியவா ,,
ஓம் இராம நாமப்பிரியனே ,,
ஓம் இலங்கை சென்றவனே ,, – 40

ஓம் இல்லை எனாதவனே ,,
ஓம் இன்றும் உள்ள குணாளனே ,,
ஓம் ஈசன் மைந்தா ,,
ஓம் ஈகைப் பெரியோனே ,,
ஓம் ஈசனாய் எமைக்காப்பவனே ,,
ஓம் ஈஸ்வரப் பிரியா ,,
ஓம் ஈசனாய் எங்கும் நிறைந்தவா ,,
ஓம் ஈயிற்கும் தீங்கிழையா பெரியோனே ,,
ஓம் ஈங்கோயில் மலைவாசனே ,,
ஓம் ஈஸ்வர ஒளியே ,, – 50

ஓம் உண்மை ஒளியே ,,
ஓம் உன்னத நாயகா ,,
ஓம் உள்ளத்தின் ஒளியே ,,
ஓம் உலகெலாம் நிறைந்தவா ,,
ஓம் உன்னதப் பொருளே ,,
ஓம் உன்னருள் பெற அருள்வாய் ,,
ஓம் உண்மைப் பொருள் உணர்ந்தவா ,,
ஓம் உலகுய்ய வாழ்ந்தவா ,,
ஓம் ஊர்த்துவ மூர்த்தியே ,,
ஓம் ஊரெல்லாம் உவந்தவா ,, – 60

ஓம் ஊழ்வினை அழித்தவா போற்றி
ஓம் ஊழினை வென்றவா ,,
ஓம் ஊண் மிகவிரும்பாய் ,,
ஓம் ஊரெலாம் உறைந்தவா ,,
ஓம் எங்கும் நிறைந்தவா ,,
ஓம் எல்லாம் அறிந்தவா ,,
ஓம் எமை என்றும் காப்பாய் ,,
ஓம் எத்துணையும் பேதமில்லாதவா ,,
ஓம் எண்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்த பெருவாழ்வே ,,
ஓம் எதையும் தாங்கும் இதயமே ,, – 70

ஓம் என்றென்றும் எமைக் காப்பவனே போற்றி
ஓம் எல்லார்க்கும் இனியவா ,,
ஓம் ஏற்றம் மிக்காய் ,,

ஓம் ஏறுபோல் நடையினாய் ,,
ஓம் ஏதும் விழையானே ,,
ஓம் ஏற்றம் அளித்தவா ,,
ஓம் ஏதும் இலானே ,,
ஓம் ஏழ்பிறவி அறுத்தவனே ,,
ஓம் ஏழ் பிறவி அறுவிப்பாய் ,,
ஓம் ஏழைப் பங்காளா ,, – 80

ஓம் ஏழைக்கு இரங்கினாய் போற்றி
ஓம் ஏழைக்கு உழைத்த எளியவா ,,
ஓம் ஏழுலகம் கடந்த ஞானப்பெருக்கே ,,
ஓம் ஐங்கரன் புதல்வா ,,
ஓம் ஐம்பொறி அடக்கினாய் ,,
ஓம் ஐம்பொறி ஆள்பவனே ,,
ஓம் ஐம் பூதம் ஆனாய் ,,
ஓம் ஐயாறில் தவம் புரிந்தவா ,,
ஓம் ஐந்தொழில் அரசே ,,
ஓம் ஐயம் கடந்தவா ,, – 90

ஓம் ஐயம் நீக்குவாய் போற்றி
ஓம் ஐயமிலா வாழ்வளிப்பாய் ,,
ஓம் ஒன்றில் ஒன்றானவா ,,
ஓம் ஒன்பது வாயிலை வென்றவா ,,
ஓம் ஒற்றுமை விரும்பினாய் ,,
ஓம் ஒருருவம் இல்லாய் ,,
ஓம் ஒங்காரப் பொருளே ,,
ஓம் ஒதல் ஒளியானே ,,
ஓம் உரு அரு ஆனவா ,,
ஓம் நங்கவரம் பண்ணை ரங்கநாதப்பிரியா ,, 100


ஓம் வாரியார் புகழ் விரும்பினாய் போற்றி
ஓம் பெரியவர் நஞ்சப்பசுவாமிகள் நண்பா ,,
ஓம் மலையப்பன் புகழ் விழைந்தவா ,,
ஓம் மகராஜப் பிரியனே ,,
ஓம் மா மருந்தே ,,
ஓம் ஸ்ரீராமகிருஷ்ண பகவானே ,,
ஓம் ஸ்ரீநரேந்திர தேவனே ,,
ஓம் ஸ்ரீசாரதா தேவி அன்னையே .. –108
ஹரி ஓம் தத் சத்



"அன்பர்கள் இல்லத்தில்"
சுவாமிஜியிடம் ஆசிபெறுகிறார்
தமிழக முன்னாள் முதல்வர்
பேரறிஞர் அண்ணா அவர்கள்



புதுவை ஆருநரை விழா மேடைக்கு அழைத்து வருகிறார் சுவாமிஜி.



காகிதத் தொழிற்சாலைத் திறப்புவிழாவில் பெருந்தலைவர் முன்னாள் முதல்வர் கு. காமராஜ் அவர்களுடன் சுவாமிஜி



காவிரித்தோப்பில் அடிகளாரின் நினைவாலயம்

காரிருள் விலகி பேரருள் ஒளியைக் கண்டேன்

5.1.2001

குடில் பிரம்மசாரி கருப்பையா அவர்கள்

ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் அடியேன் 1980 ம் ஆண்டில் சேர்க்கப்பட்டேன். தற்சமயம் சுவாமிஜியின் வாழ்க்கை வரலாற்றினை எழுதிவரும் ஆரம்பப்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியராக பணிபுரிந்த திரு. V.V. ரமணன் அவர்கள் தான் அப்பொழுது எல்லாம். மாணவர்களின் அட்மிஷன் பொறுப்பையும் அவரே கவனித்து வந்தார். என்னை அவர்தான் சுவாமிஜியிடம் அழைத்துப் போனார். " தம்பீ... சுவாமியை பார்த்தவுடன் முதலில் நீ அவருக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும். முதலில் நீ உன் பெயரை கூறவேண்டும்." என்றெல்லாம் அவர் எனக்கு பலமுறை சொல்லிக் கொடுத்தார். சுவாமிஜியை பார்த்து வணங்கினேன். என் பெயர் கேட்டார். சொன்னேன். இங்கிருந்து கொண்டு படிக்கிறாயா? என்று கேட்டார். படிக்கிறேன் என்று கூறினேன். முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். திரு. ரமணன் அவர்கள் எனக்கு முறையாக எழுத்துக்களை கற்பித்தார். அவர் பாடங்கள் இடையே நல்ல நல்ல சிறுசிறு கதைகளை எங்களுக்கு புரியுமாறு கூறுவார். பாடங்களையும் அருமையாக நடத்துவார். இவ்வாறாக 5 ஆண்டு காலம் ஆரம்பப் பள்ளி வாழ்க்கை இனிமையாகக் கழிந்தது.

நாங்கள் சிறுவர்கள் ஆனதால் சுவாமிஜி அவர்களைப் பார்க்கவும் முடியாது. அவருடன் பேசவும் முடியாது. தோட்டம் தோப்புகளில் நாங்கள் வேலை செய்யும் போது சுவாமிஜி அவர்கள் வருவார்கள். எங்களிடம் மிகவும் அன்பாக பேசுவார்கள். " நன்றாகப் படிக்கிறீர்களா?" எனக் கேட்பார். அவர்களைப் பார்த்தவுடன் எங்களுக்கு துக்கம் வரும். சுவாமிஜி எங்களை தட்டிக் கொடுப்பார். அறிவுரை கூறுவார். " உங்களுக்கு அப்பா குருமகராஜ். அம்மா சாரதாமணி. அண்ணன் விவேகானந்தர். அவர்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருங்கள். எல்லாம் சரியாய்விடும். என்று ஆறுதல் சொல்லிவிட்டு போவார்கள். நாங்களும் மகிழ்ச்சியடைவோம்.

ஆரம்பப்பள்ளி படிப்பை முடித்து உயர்நிலைப்பள்ளி படிப்பைத் தொடர்ந்தேன். என் பள்ளி வாழ்க்கை ஆனந்தமாக சென்று கொண்டிருந்தது. படிக்கும் காலத்தில் எனக்கு எந்தவித சிரமமும் தோன்றவில்லை. ஆசிரியர்கள் நன்கு பாடம் சொல்லித்தந்தனர். நன்கு படித்து 10 ஆம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றேன். பத்தாம் வகுப்பு படித்த பின் ஆஸ்ரம வாழ்க்கை பயிற்சியில் ஓராண்டு பணியாற்றினேன். இவ்வேளையில் தான் சுவாமிஜி அவர்களை அடிக்கடி

சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னைப் பற்றி ஆவலோடு விசாரிப்பார்கள். "சரியப்பா ... பயிற்சி வாழ்க்கையை ஒழுங்காக முடித்து, பின் திருச்சியில் ஐ.டி.ஐ தொழிற்பயிற்சியையும் முடித்து நல்ல மாணவனாக வரவேண்டும்" என்பார்கள்.

ஒரு வருட பயிற்சி வாழ்க்கை முடிந்தது. குடிலின் நிர்வாகப் பொறுப்பில் பணியாற்றினேன். ஓராண்டு முடிந்ததும் ஐ.டி.ஐ. பயிற்சியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். 11 ஆண்டுகள் குடிலின் தூய வாழ்க்கையில் இருந்துவிட்டு 1½ ஆண்டு காலம் தொழிற்பயிற்சியின் நிமித்தம் வெளிஉலகத் தொடர்பு ஏற்பட்டது. ஆஸ்ரமத்தில் வாழ்ந்த வாழ்க்கை எனக்கு ராஜ வாழ்க்கையாக மனதில் பட்டது. மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றின. ஒவ்வொரு நாளும் திருச்சியில் ஐ.டி.ஐ பயிற்சிக்குச் சென்று விட்டு குடிலுக்கு வருவது நரக வேதனையாக இருந்தது. வெளியுலக வாழ்க்கையை எனது உள்ளம் வெறுத்தது. விவரம் தெரிந்த வாலிபனாக மாறிவிட்டபடியால் பலவற்றையும் சிந்திக்க ஆரம்பித்தேன். " நானோ ஒரு அனாதை. இன்றைக்கு இந்த நிலையில் நானிருக்க காரணமே பகவான் குருமகராஜும், சுவாமிஜியுமே ஆவார்கள். சுவாமிஜியின் தூய தொண்டும், தன்னலமற்ற வாழ்க்கையும் அவர் எங்களுக்காக படும் கஷ்டங்களையும் பார்த்து வந்த என்மனதிற்கு பிடித்தமானவையாக இருந்தது ஆஸ்ரம வாழ்க்கை மட்டுமே. வெளி உலக களியாட்டங்களும் மக்களின் மனோபாவங்களும் என்னை பெரிதும் சிந்திக்க வைத்தன.

எனது பயிற்சி முடிந்து வெளியுலக வாழ்வில் காலடி வைத்து என்ன பயன்? அறவே பிடிக்காத அந்த வாழ்க்கையில் நான் எதைத் தேடப்போகிறேன்? நான் எப்போதும் அதிகமாக நேசிப்பது விவேகானந்தரை. அவரது வாக்கும் வாழ்வும் என்னை ஈர்த்தன. குருமகராஜின் தொண்டனாக இருந்து, அவரது லட்சியத்திற்காகவே வாழ்ந்த விவேகானந்தரையே ஏன் நான் முன் மாதிரியாகக் கொள்ளக்கூடாது? என்றெல்லாம் எண்ணங்கள் என் மனதில் எழும்.

திருச்சிக்கு பஸ்ஸில் சென்று வருவேன். ஒரு நாள் என் அருகில் திருப்பராய்த்துறை தபோவன ஆரம்பப்பள்ளியின் தலைமை ஆசிரியரான திரு. அண்ணாப்பிள்ளை வந்தமர்ந்தார். குடில் பிள்ளைகள் என்றால் அவருக்கு அவர்களிடம் அலாதி பிரியம். பேசிக் கொண்டே வருவார். காந்தீய பக்தர். கல்விப்பணியை உயர்வாக எண்ணி சேவை செய்து வருபவர். என் மன ஓட்டத்தை அவர் புரிந்து கொண்டார். " தம்பி! நீ வெளியுலக வாழ்க்கையை நம்பாதே. அது உன்னைப் போன்ற ஆஸ்ரமத்தில் வாழ்ந்து வரும் வாலிபர்களுக்கு உதவாது. உன் எண்ணத்தை தெரிந்து கொண்டேன். உங்கள் சுவாமிஜி ஒரு மிகப்பெரிய மனிதர். அவரது தொண்டிற்கு கை கொடுக்க உன்னைப் போன்ற இளைஞர்கள் முன் வரவேண்டும்." என்று பலவாறாக

கூறுவார். அவரை பஸ்ஸில் சந்திக்கும் போதெல்லாம் எண்ணங்களின் பரிமாற்றம் நடைபெறும்.

அவரது அறிவுரை " கருப்பையா, குடில் சுவாமிஜியிடம் ஆசீர்வாதம் பெற்று ஆஸ்ரம வாசியாகிவிடு. குரு மகராஜின் பாதம் உனக்கு பரிபூரணமான வாழ்க்கையைக் கொடுக்கும்" என்பார். எனது நெஞ்சத்தின் ஆழத்தில் அழிக்க முடியாதபடிக்கு அவரது அறிவுரை பதிந்து விட்டது. உலகத்தின் மேலான தர்மம் அனாதைகளுக்கு சேவை புரிவதுதான் எனத்தீர்மானித்து விட்டேன். சுவாமிஜியிடம் இதைத் தெரிவிக்க தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்திருந்தேன்.

1993 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ம் தேதி இரவு பூஜை முடிந்ததும் சுவாமிஜி தனியாக இருக்கும் போது அவர் பாதத்தை தொட்டு நமஸ்கரித்து எழுந்தேன். அவரது தீர்க்கமான பார்வை என்மீது நிலைத்திருந்தது. என் நெஞ்சத்தை யெல்லாம் அவரது பார்வை ஊடுருவி செல்வதை உணர்ந்தேன். நான் எனது உறுதியான முடிவை அவரிடம் கூறினேன். " அப்படியாப்பா. மிகவும் சந்தோஷம். நன்றாக சிந்தித்து முடிவு செய்தாயா? " எனக் கேட்டார்.

" ஆமாம் சாமி " என்றேன்.

" சரி... ஆஸ்ரமவாசி துரையிடம் சென்று உன் எண்ணத்தை தெரிவி" என்றார்.

" சரி சாமி" என்று கூறிவிட்டு ஆஸ்ரமவாசி துரை அவர்களிடம் சாமி சொன்னதாகக் கூறி எனது எண்ணத்தை தெரிவித்தேன். அவரும் எனது எண்ணத்துக்கு முழு மனதுடன் ஒப்புதல் அளித்து மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். ஆஸ்ரம வாழ்க்கை பிரம்மசரிய வாழ்க்கை ஆகிய அனைத்து விஷயங்களையும் என்னிடம் நெடுநேரம் எடுத்துக் கூறினார். சுவாமிஜியிடம் சென்று கூறினேன். அவரும் என்னிடம் "உனது ஐ.டி.ஐ படிப்பை முடித்து விடு" என்றார்.

அதற்கு நான் " எனக்கு அதில் கொஞ்சம் கூட இஷ்டம் இல்லை" என்றேன். சுவாமிஜியும் " சரி.. உன்னிஷ்டம்" நாளைய தினம் ஐ.டி.ஐ சென்று ஒப்படைக்க வேண்டியவைகளை ஒப்படைத்து விட்டு ஆசிரியர்களிடமும் சொல்லிவிட்டு வந்து விடு" என்றார்.

1993 ஜனவரி 16 ம் தேதி பிரம்மசாரியாவது என்ற முடிவை எடுத்தேன். 18 ம் தேதி சுவாமிஜி அவர்களின் ஆசியோடு ஆஸ்ரம வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு விட்டேன். சுவாமி அவர்களும், " கருப்பையா, நீ இப்படியே இருந்து வா. உனக்கு தீட்சை கொடுக்க இன்னும் ஒரு வருடம் உள்ளது. அடுத்த வருடம் பிப்ரவரி 26 அன்று குருமகராஜ் ஜெயந்தியன்று உனக்கு தீட்சை அளிக்கப்படும். முறையான ஆஸ்ரமவாசியாகி விடுவாய்" என்றார்.

அனுதினமும் மந்திரங்கள், கீதா உபதேசம், ராமாயண விரிவுரை,

ஆழ்வார்கள், நாயன்மார்கள் வரலாறு எல்லாவற்றையும் சுவாமிஜி அவர்கள் தினசரி சொல்லித் தந்தார்கள். சமஸ்கிருத பாடம் எழுத்து முதல் ஆரம்பிக்கப்பட்டது.கீதையின் சுலோகக் கருத்துக்களை மிகவும் எளிமையாக நன்கு புரியும் வண்ணம் எடுத்துக் கூறுவார்கள். இவ்வாறாக 7 ஆண்டு காலம் கீதை நடத்தினார். 13 அத்தியாயம் வரை நடத்தினார். உடல் நலம் சீராக இல்லாத காரணத்தால் தொடர்ந்து கீதை வகுப்பை நடத்த முடியவில்லை. பாக்கியுள்ள 5 அத்தியாயங்களை நீங்களே படித்துக் கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டார். மற்றவர்களுக்கு கீதையின் சாரத்தை சொல்லுமளவுக்கு எங்களுக்கு கற்பித்தார்கள்.

வாழ்க்கை என்றால் என்ன? எப்படி வாழ வேண்டும்? அதற்கான பயிற்சிகள் எவை? எவ்வாறு படிக்க வேண்டும்? கர்ம வாழ்வின் நெறிமுறைகள், உணவருந்தும் முறைகள், எத்தகைய உணவை ஆஸ்ரமவாசிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஆஸ்ரம அன்பர்களிடம் எப்படிப் பழக வேண்டும், எப்படி பேச வேண்டும் என பல்வேறான அறிவுரைகளையும் சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

ஆஸ்ரமத்தில் நடைபெறும் பணிகள் அது சிறியதோ அல்லது பெரியதோ அவற்றை எவ்வாறு ஆரம்பித்து எவ்வாறு முடிக்க வேண்டும் என்றும் விவரித்து கூறியுள்ளார்கள். ஆஸ்ரமவாசிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்றெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து கூறியுள்ளார்கள். திங்கள் கிழமை தோறும் அமைதி இல்லத்தின் கதவுகளையும் ஜன்னல்களையும் சாத்திவிட்டு சுவாமி அவர்கள் தவநிலையில் இருப்பார்கள். இரவு 10.30 மணிக்குத்தான் கதவைத் திறப்பார்கள்.

ஒரு திங்கட் கிழமையன்று 10.30 மணிக்கு கதவு திறந்தது. அன்றைய கணக்கு வரவு செலவு நோட்டை சுவாமிஜியிடம் காட்ட வேண்டும். ஆனால் எனது அறையில் நான் அயர்ந்து தூங்கி விட்டேன். பலமுறை காலிங் பெல்லை அடித்திருக்கிறார். எனக்கு விழிப்பு ஏற்படவில்லை. அமைதி இல்லத்திலிருந்து என் அறைக்கு முன்னால் வந்து நின்ற சுவாமிஜி அவர்கள் "கருப்பையா என்ன பலமான தூக்கமோ?" எனக் கேட்டார். திடுக்கிட்டு எழுந்தேன். கணக்கு நோட்டுகளை எடுத்துக் கொண்டு சென்றேன்.

"என்னப்பா இப்படித் தூங்கலாமா? ஆஸ்ரமவாசிகள் தம்மையே மறந்து தூங்கக் கூடாது. ராமகிருஷ்ண மடங்களில் எல்லாம் இரவு 11 மணி வரை பிரம்மசாரிகளும் சந்நியாசிகளும் ஆன்மீக நூல்களையும் பகவானின் நாமாவளிகளையும் படிப்பார்கள். அப்பா மறந்து விடாதே. ஞாபகத்தில் வைத்துக் கொள். இன்றைய எனது தவவாழ்வின் போது பாதிநேரம் உனக்காகத்தான் செலவழித்தேன். நீ நன்றாக இருக்க வேண்டும். இதுவரை எத்தனை எத்தனையோ ஆஸ்ரமவாசிகள் எப்படி எப்படியெல்லாமோ இருந்து விட்டு

சென்று விட்டார்கள். உனக்கு பகவான் நல்ல வாழ்க்கையை கொடுக்க பிரார்த்திக்கின்றேன்.'' எனக் கூறி முடித்தார். அவர் முன்பாக அழுதுவிட்டேன். அன்றிலிருந்து விரைவில் தூங்கப்போகும் பழக்கம் என்னை விட்டு மறைந்தது. அவர் இன்றைக்கு இல்லாவிட்டாலும் அவரது நினைவை என் நெஞ்சினிலே சுமந்து வருகின்றேன். அவரது நினைவு ஒன்றே என் வாழ்வின் வழிகாட்டி.

(ஓ–ம்) பிரம்மசாரி கருப்பையா
5.1.2002

இறுதிநாளில் இறுதியாக ஒலித்த சுவாமிஜியின் குரல்

குடில் பிரம்மசாரி கருப்பையா

"பொன்னிற மேனி கொண்டவரும், கருணை பொழியும் நல்லிதயம் கொண்டவரும், மென்னுடலில் வெண்ணிற கதராடை அணிபவரும், மலரின் மென்மையை ஒத்த பாதங்களை உடையவரும் குடிலின் கண்கண்ட தெய்வமாய் தோன்றி, பின்னர் மறைந்தவருமான அமரர் சுவாமிஜி அவர்களுக்கு ஆயிரமாயிரம் நமஸ்காரங்கள்.''

சுவாமிஜி அவர்கள் பரமன் பதம் நாடி பரலோகத்திற்கு செல்லுமுன்பாக, அமைதி இல்லத்தில் படுக்கையில் படுத்தவாறு பேசியவற்றை இங்கு குறிப்பிடுவதை, கிடைத்தற்கரிய பெரும்பேறு எனக் கருதுகின்றேன்.

சுவாமிஜி அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டவுடனே முதலில் டாக்டருக்கு தகவல் கூறச் சொன்னார். டாக்டரிடம் போனில் பேசப்பட்டது. முதலில் டாக்டரின் கம்பவுண்டரும் குடிலின் முன்னாள் மாணவருமான திரு. நாகராஜன் உடன் வந்து சேர்ந்தார். சுவாமிஜி அவர்கள் நாகராஜனுடன் பேசினார். சுவாமிஜியின் உடல் நிலையை உணர்ந்த நாகராஜன் தாமதமின்றி டாக்டர் கனகராஜ் அவர்களிடம் உடனே ஆஸ்ரமத்திற்கு வருமாறு போனில் பேசி முடித்தார். அவரும் டாக்டர் ஜெயபாலும் வந்தனர். சுவாமிஜி அவர்கள் அவர்களிடம்

" ஐயாக்களே.. பகவானின் அருளால் இயற்கையாய் இந்த சரீரத்திற்கு இப்படி ஒரு பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த உடலிற்கு எதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அந்த சிகிச்சையை இங்கேயே செய்யுங்கள். திருச்சி ஆஸ்பத்திரிக்கு செல்வது என்பது வேண்டாம். ஆபரேஷன் செய்வதாக இருந்தாலும், எக்ஸ்ரே எடுப்பதாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் சிகிச்சையை ஆஸ்ரமத்திலே செய்யுங்கள். இந்த சரீரத்தை வெளியே கொண்டு செல்லக்கூடாது. இது எமது உறுதியான முடிவு'' என்றார்.

டாக்டர் ஜெயபாலும் கனகராஜும் " சாமி ஆஸ்பத்திரிக்குத்தான் போக வேண்டும். ஆபரேஷனை இங்கு செய்வது என்பது மிகவும் சிரமம். எங்களுக்கும் நிம்மதியோ மனத்திருப்தியோ இருக்காது. யோசித்துப் பாருங்கள் சாமி".

அதற்கு சுவாமிஜி அவர்கள், " ஐயா நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்தச் சரீரம் ஆஸ்பத்திரிக்கு சென்று உடல் நிலை சரியாகி நான்கு வருடங்கள் நன்றாக இருப்பதை விட, இப்போதே இவ்வுடல் போய்விடுவது ரொம்ப ரொம்ப மேலானது. இந்த சரீரத்தால் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தும் செய்தாகிவிட்டது. எதற்காக இந்தப்பிறவி எடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. இனி இந்த சரீரத்துக்கு பணத்தாசையோ, பொருளாசையோ கிடையாது. ஆகையால் இந்த உடலை ஆஸ்ரமத்தை விட்டு எங்குமே எடுத்துச் செல்லக்கூடாது. ஐயா.. உலக காரியங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு எல்லையுண்டு. ஒரு முடிவும் உண்டு. அதை மீற முடியுமா?. உங்களால் முடிந்த அளவு பாருங்கள். முடியவில்லை என்றால் விட்டுவிடலாம். அதனால் வருத்தமோ துக்கமோ கூடவே கூடாது. இந்த உடல் இருக்கும் வரை இருக்கட்டும். போவது என்று முடிவாகி விட்டால் (சுவற்றில் மாட்டப்பட்டுள்ள பகவானின் போட்டோவை தம் விரல்களால் சுட்டிக்காட்டி) பகவானின் பாதத்தில் இந்த ஆத்மா ஐக்யமாகிவிடும்.

டாக்டர்களால் எதுவுமே பேச முடியவில்லை. " சாமி... அறுவை சிகிச்சை ஏற்பாட்டை இங்கேயே செய்து கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகளை செய்கிறோம்." என்று சொன்னார்கள். சுவாமிஜி அவர்களும் " சரிங்கய்யா.. ஆஸ்ரமவாசி கருப்பையாவை அழைத்துச் சென்று எல்லா இடங்களையும் பாருங்கள். கருப்பையா.. நீயும் அவர்களோடு சென்று எல்லா இடங்களையும் காட்டு"

ஆஸ்ரமவாசி கருப்பையாவுடன் சென்ற டாக்டர்கள் அமைதி இல்ல வெராண்டா கலைக்கூடம் பள்ளிக்கூடம், மருந்தகம் ஆகிய எல்லா இடங்களையும் பார்த்தனர். கடைசியாக கலைக்கூடத்தை தீர்மானித்தார்கள். " இங்கு ஆபரேஷனை வைத்துக் கொள்ளலாம்." என்ற தகவல் சுவாமிஜி அவர்களிடம் கூறப்பட்டது.

சுவாமிஜி அவர்கள் " எதைச் செய்தாலும் பரவாயில்லை. விரைவில் சென்று வாருங்கள்." என்றார். டாக்டர்களும் திருச்சி புறப்பட ஆயத்தமானார்கள். அப்போது சுவாமிஜி அவர்கள் அவர்களிடம் " ஐயா, ஆஸ்ரமத்து பணிகள் எல்லாம் குருமகராஜுக்கு பின்னால் சுவாமி விவேகானந்தர் ஏற்றுக் கொண்டு அப்பணியை உலகம் முழுவதும் பரப்பினார்களோ அது போல தற்போது இருக்கும் ஆஸ்ரமவாசிகளால் இந்த சேவை குருமகராஜ் அருளால் சிறப்பாக நடைபெறும் என்பதில் கடுகளவு சந்தேகம் கூட வேண்டாம்."

" ஐயாக்களே,... இந்த சரீரம் எடுத்ததின் ஒரு நோக்கம் மறுபிறவி எடுக்கக்கூடாது என்பதுதான். அதற்காகத்தான் இந்த உடலை ஆஸ்ரமத்தை விட்டு வெளியே எடுத்துச் சென்றும் பயனில்லாமல், ஆத்மா வேறு இடத்தில் பிரிந்தால் உடல் மட்டுமே ஆஸ்ரமத்துக்கு வரும். அதனால் மறுபிறவி வரும். அதனால்தான் இச்சரீரத்தை வெளியே கொண்டு செல்லாதீர்கள் எனக் கூறினேன்" என்றார்.

உலகத்தின் பேரமைதியெல்லாம் அமைதி இல்லத்தின் வாசலுக்கு வந்து விட்டது. பறவைகள் பறப்பது நின்றது. மரங்கள் அசைவது நின்றது. எங்கும் சிறிது நேரம் அமைதி. அமைதி. அமைதி. மனம் நெகிழ்ந்து போன டாக்டர்கள் " சரிங்க சாமி. ஒன்று கேட்க விரும்புகிறோம். தாய் தந்தை இருவரும் இல்லாத சிறுவர்களை மட்டுமே சேர்த்துக் கொள்வதால் குடிலில் போதுமான மாணவர் எண்ணிக்கை இல்லையென்பதால் யாராவது ஒருவர் இல்லாத குழந்தைகளை எடுத்துக் கொள்ளலாமே" என்றனர்.

அதற்கு சுவாமிஜி அவர்கள் இரு டாக்டர்களையும் அருகில் உட்கார வைத்து பின் பேசுகிறார். " ஐயா, நீங்கள் இருவரும் நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். இந்த ஆஸ்ரமம் ஏற்பட்டதின் நோக்கம், இலட்சியம் இரண்டு பேருமேயில்லாத குழந்தைகளைத்தான் சேர்க்க வேண்டும். பிள்ளைகள் குறைவாக சேர்ந்தாலும், கூடுதலாக சேர்ந்தாலும் ஆஸ்ரமம் உள்ள வரை இங்கு இருவருமேயில்லாதவர்களைத் தான் சேர்த்துக் கொள்ளப்படும். ஸ்ரீராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் சொன்னது " தாயுமிலி, தந்தையுமிலி" என்று இரண்டு பேரும் இல்லாத குழந்தைகளுக்கு செய்வதுதான் சேவை எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஐயா, குடில் உள்ளவரை அப்படித்தான் நடக்கும். ஆனால் நீங்கள் கேட்ட கேள்விக்கு சாமி ஒரு திட்டம் வைத்துள்ளார். சென்ற வருட ஆண்டு விழாவின் போது இது பற்றி பொன்விழாக் கூட்டத்தில் விரிவாகப் படிக்கப்பட்டது. மீண்டும் உங்களுக்கு கூறுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள சிறப்பாக செயல்படும் ஆதீனங்கள் நான்கு உள்ளன. அவைகளுடன் தொடர்பு கொண்டு, அங்கு இருவரில் ஒருவர் உள்ள குழந்தைகளை அனுப்பப்படும். முதலில் நான்கு ஆதீனங்களுக்கும் தலா 5 லட்சம் வீதம் குடில் நன்கொடை அளிக்கும். பின் அவர்களாகவே பொதுமக்களிடமிருந்து ரூபாய் ஒரு கோடி வசூல் செய்து நிரந்தர நிதியாக வங்கியில் டெபாசிட் செய்து அதன் மூலம் வரும் வட்டியைக் கொண்டு, இத்தகைய குழந்தைகளுக்கான பள்ளி, ஹாஸ்டல் வசதிகள் செய்ய பயன்படுத்திக் கொள்ளலாம். இனிமேல் குடிலுக்கு தானாக வரும் நன்கொடைகளையும் மேற்படி ஆதீனங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். குடிலுக்கே இது மாதிரி குழந்தைகள் வந்தாலும், ஆதீனங்களுக்கு அனுப்பப்படுவார்கள். இப்படியெல்லாம் திட்டம் உள்ளதய்யா. இந்த சேவைக்கு

நீங்களும் உதவ வேண்டும்" எனக் கூறி டாக்டர்களை அனுப்பி வைத்தார். " ஐயா, சீக்கிரம் வந்து சுவாமிஜி அவர்களை குணப்படுத்துங்கள்" எனக் கேட்டுக் கொண்டு அனுப்பி வைத்தேன். இரவு வரத்தொடங்கியது. ஆஸ்ரமவாசிகள் மூவரும் சுவாமிஜி அருகிலேயே இருந்தோம். ஒருவாறாக மாணவர்களின் இரவு போஜனம் முடிந்தது.

மதியம் சாப்பிட்ட கீரை உணவு வாந்தியாக வந்து விட்டது. அவரை பார்த்த வாறே உட்கார்ந்திருந்தோம். ஒரு டம்ளர் தீர்த்தம் கேட்டார்கள். கொடுத்தோம். வாங்கிக் குடித்தார். அப்போது மணி இரவு ஒன்பது. அவரிடமிருந்து ஒரு சத்தம் வர ஆரம்பித்தது. நிற்கவேயில்லை. டாக்டருக்கு போன் செய்தோம். கார் இல்லாததால் குடில் காரை அனுப்பச் சொன்னார். கார் அனுப்பப்பட்டது. இரு டாக்டர்களும் ஊசி மருந்துகள் சில கருவிகளுடன் வந்தனர். ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டன. சுவாமிஜியால் பேச முடியவில்லை. கெடிகாரத்தில் மணி முள் நகர்ந்து கொண்டே இருந்தது. ஒன்பதிலிருந்து பத்தாயிற்று. பத்திலிருந்து பதினொன்றாயிற்று. உடலெங்கும் பிராணவாயு சீராக பரவ டாக்டர்கள் இதயத்தை பிசைந்து கொடுத்தனர். ஆபரேஷன் செய்யலாம் என்பது கனவாகிவிட்டது. இரவு 11.40 க்கு சுவாமிஜியின் உயிர் உடலைவிட்டு பிரிந்து, நிலையான பரம்பொருளில் ஐக்யமாகிவிட்டது.

சுவர்க்கபுரியில் இருந்து கொண்டு நம்மையெல்லாம் மேலிருந்து பார்த்த வண்ணம் ஆஸ்ரமத்து பணிகளின் இயக்கத்தை நடத்தி வருகின்றார் என்பதில் குடில் நிர்வாகத்திற்கு சிறிது கூட சந்தேகமில்லை. நாங்கள் பம்பரம். அவரது கையில் சாட்டையுள்ளது. நம்மை ஆட்டுவிக்கிறார்.

அவரது புகழ் ஓங்கவும், குடிலின் அறப்பணி தொடரவும் பாடுபடுவோம். அனைத்தையும் குருமகராஜ் பாதத்தில் சமர்ப்பணம் செய்துவிட்டோம். இனி அவரே பார்த்துக் கொள்வார்.

ஹரி ஓம் தத் ஸத்

ஓ–ம் குடில் பிரம்மசாரி கருப்பையா
5.1.2002

புவியில் வந்துதித்த மனித தெய்வம்

வி. வெங்கடரமணன்
குடிலின் ஆரம்பப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர்

1956 ம் ஆண்டில் முதன் முறையாக திருப்பராய்த் துறையில் காவிரிக்கரையை ஒட்டியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் அடி எடுத்து வைத்தேன். அன்றிலிருந்து குடில் சுவாமிஜி அவர்கள், இயற்கையின் நியதிப்படி இறைவனின் திருப்பாதங்களை அடைந்த நாள்வரை கிட்டத்தட்ட 43

ஆண்டு காலத்தில் நடந்த நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கின்றேன். ஒன்றா? இரண்டா? கணக்கிட்டு சொல்ல மனம் துடிக்கின்றது. ஆனால் முடியவில்லையே. அவரது மறைவினால் என் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை அவரது வரலாற்று நூலில் எழுத்து உருவின் வாயிலாக கொட்டித் தீர்க்க முடிவு செய்துள்ளேன். எதிலிருந்து ஆரம்பிப்பது? எப்படி ஆர்ம்பிப்பது? என மனதிற்குள்ளேயே கருத்து மோதல்கள், பல நாள் சிந்தனைக்குப்பின் தெளிவுற்ற மனதில் தோன்றியவைகளை கூறியுள்ளேன்.

1956 ஏப்ரலில் மதுரை மாவட்டம் காந்திகிராமத்தில் இரண்டாண்டு ஆதாரக்கல்வி ஆசிரியப் பயிற்சியை முடித்தேன். பயிற்சியாளர்களின் ஏப்ரல் மாத உணவுக்கட்டண பட்டியலை தயாரிக்குமாறு எனக்கும் உடன் பயின்ற நண்பர் வெள்ளைச்சாமி என்பவருக்கும் தலைமை ஆசிரியர் ஆணையிட்டார். தேர்வை முடித்து மற்ற பயிற்சி மாணவர்கள் அவரவர் ஊர்களுக்கு சென்று விட்டனர். நாங்களிருவரும் விடுதியிலேயே தங்கியிருந்து சில நாட்களில் ஏப்ரல் மாத உணவுக்கட்டண பட்டியலை தயார் செய்து, தலைமை ஆசிரியர் திரு. பாலநேத்ரம் என்பவரிடம் கொடுத்தோம்.

அவ்வேளையில்தான் தமது ஆரம்பப் பள்ளிக்கு (ஜூனியர் பேஸிக் பள்ளி) ஒரு தலைமை ஆசிரியரும் ஒரு உதவி ஆசிரியரும் ஆக இரு ஆசிரியர்கள் தேவை. "உமது பயிற்சி பள்ளியிலிருந்து இரு ஆசிரியர்களை அனுப்ப இயலுமா? என கேட்டிருந்த குடில் சுவாமிகளின் கடிதம் வந்தது. நாங்கள் இருவர் மட்டுமே இருப்பதால் எங்களிடமிருந்து விண்ணப்பம் பெற்றுக்கொண்டு, அதில் எங்கள் இருவருக்கும் பரிந்துரை செய்து தலைமை ஆசிரியர் குடில் சுவாமிகளுக்கு தபாலில் அனுப்பிவிட்டார். நாங்களும் அவரிடம் விடை பெற்று அவரவர் ஊருக்கு சென்று விட்டோம்.

எங்கள் இருவருக்கும், நேர்முகத்தேர்விற்கு வருமாறு குடிலிருந்து கடிதம் வந்தது.இருவரும் மகிழ்ந்தோம். இருவரும், செய்து கொண்ட முன்னேற்பாட்டின் படி திருச்சி ரயில் நிலையத்தில் சந்தித்தோம். பேருந்தில் விசாரித்து குடிலை வந்தடைந்தோம்.

ஒரு மாணவன் வந்து எங்கள் இருவரையும் குடில் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான். அங்குள்ள எழுத்தர் திரு. ஸ்ரீனிவாசன் என்பவரிடம் எங்களது சான்றிதழை அதற்கான நகல்களுடன் கொடுத்தோம். பின் சுவாமி அவர்களை பார்ப்பதற்காக அவரது அறையின் முன் காத்திருந்தோம்.

சுவாமி அவர்கள் ராமகிருஷ்ணர் கோவிலினுள் சென்று வணங்கி சிறிது நேரம் கழித்து தமது அறைக்கு திரும்பினார். ஆசனத்தில் அமருவது எங்களுக்கு தெரிந்தது. ஒரு பள்ளியின் தாளாளர் என்றால் அவர் இப்படித்தான் இருப்பார் என்ற ஒரு சித்திரம் மனதிலே இருந்தது. எனது பயிற்சிப் பள்ளி தலைமை ஆசிரியரும் "சுவாமிகள் நடத்தி வரும் பள்ளியில் பணிபுரிவது மிகவும் பெருமைக்குரியது" என்றும் கூறியுள்ளார். சுவாமிகள் என்றால் தலை

முண்டிதம் செய்திருப்பார். காவி உடை அணிந்திருப்பார். துறவி போல் காட்சியளிப்பார் என்றெல்லாம் கேள்விப்பட்ட எனது உள்ளத்தில் ஒரு திரைப்படமே ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் நினைத்ததற்கு நேர்மாறாக அவர் காட்சி தந்தார்.

ஒரு மாணவன் வந்து சுவாமி அழைப்பதாக அழைத்துச் சென்றான். சென்றோம். சிறிது நேரம் அவரையே பார்த்த வண்ணம் நின்றிருந்தோம். அவரை வணங்க வேண்டும் என்ற எண்ணம் கூட எழவில்லை. ஆனால் அவரோ நாற்காலியிலிருந்து சற்றே முன் வந்து கைகூப்பி "நமஸ்காரம் வாருங்கள்" என்றார். அதிர்ந்து விட்டேன். அவரை முதலில் வணங்காமல் இருந்தது பெரும் தவறு என உணர்ந்தோம். இருவரும் கைகூப்பி நமஸ்கரித்தோம். மெதுவாக சிரித்தார். எங்களைப் பற்றி விசாரித்தார். சொன்னோம். அவரைப் பற்றிய சித்திரம் மறைந்தது. அவரும் ஒரு சாதாரண மனிதர் என எங்களுக்கு பட்டது. எங்களிடம் அவர் பேசிய போது ஒன்றை கவனித்தோம். எங்களிடம் பரிவையும் அன்பையும் காட்டி பேசினார். இது ஒன்றே அவர் ஒரு மாபெரும் மனிதர் என எங்களுக்கு கோடி காட்டியது.

" எங்கள் இருவரையுமே நியமனம் செய்தால் ஒருவர்க்கொருவர் துணையாக இருந்து நற்பணியாற்றுவோம். நாங்கள் பிறந்த ஊரை விட்டு வெளியே சென்றதில்லை. எனவே எங்களுக்கு சந்தர்ப்பம் தருமாறு வேண்டினோம்". இதைக் கேட்டதும் அவர் சிரித்தார், " பகவான் பரமஹம்ஸரின் ஆசி எவர் மீது படுமோ அவர்களுக்கு இங்கு பணிபுரியும் வாய்ப்பும் கிடைக்கும். முசிறி பயிற்சிப் பள்ளியிலிருந்தும் மாயனூர் பயிற்சிப்பள்ளியிலிருந்தும் ஆசிரியர்கள் நேர்காணலுக்கு வரவேண்டும். எல்லோரையும் பார்த்த பின் ஒரு நல்ல முடிவை எடுப்போம். மதிய உணவை ஆஸ்ரமத்தில் அருந்திவிட்டு கவலையின்றிச் செல்லுங்கள்." என்றார். அலுவலகம் சென்று அமர்ந்தோம். சுவாமிகளைப் பற்றிய நினைவு மனதிற்குள்ளே திரைப்படமாக ஓடியது.

"ஒல்லியான உடல்வாகு. சந்தன நிறம். நல்ல உயரம். அதற்கேற்ற பருமன். கதராடை அணிந்திருந்தார். இவரது தோற்றம் வள்ளலாரின் தோற்றத்தை ஒத்திருந்தது. இவரைப் பார்த்தவுடன் வள்ளலாரின் நினைவுதான் மனதிலே ஏற்பட்டது. இத்தகைய சாமான்ய மனிதரா இவர்? ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் என்ற பெருமித உணர்வு சிறிதுகூட இவரிடம் காணப்படவில்லையே"

ஆஸ்ரமத்தில் மதிய ஆகாரம் அருந்திவிட்டு திரும்பினோம். வெகுவிரைவில் என்னை தலைமை ஆசிரியராகவும், நண்பர் வெள்ளைச்சாமியை உதவி ஆசிரியராகவும் நியமனம் செய்து 1956 ஜூன் முதல் வாரத்திற்குள் வந்து பணியை ஏற்குமாறு நியமன உத்தரவு கிடைக்கப்பெற்றோம். அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

குடிலை அடைந்தோம். சுவாமிஜியைக் கண்டோம். வணங்கினோம். " வாருங்கள். முசிறியிலிருந்தும், மாயனூரிலிருந்தும் எந்த ஆசிரியரும் வராததால் உங்கள் இருவரையுமே நியமனம் செய்துள்ளோம்" என்றார்.

எங்களின் மகிழ்ச்சியை அவரிடம் தெரிவித்தோம். " அலுவலகம் செல்லுங்கள்" எனப் பணித்தார். அலுவலர் திரு. ஸ்ரீனிவாசன் அவர்களும் எங்களை அன்போடு வரவேற்றார். இருவரும் 5.6.1956 முதல் பணியாற்றுவதாக எழுதிக் கொடுத்தோம்.

ஆனால் ஓராண்டு முடிந்தவுடன் நண்பர் வெள்ளைச்சாமி சொந்த ஊரில் வேலை பார்க்கப் போவதாகக் கூறி குடில் ஆசிரியப்பணியை ராஜினாமா செய்துவிட்டுச் சென்றார். நான் தனியனானேன். என்னுள்ளும் ஒரு எண்ணம் இதயத்தின் ஒரு மூலையிலிருந்து தலைகாட்டியது. " நானும் எனது ஊருக்கே சென்றுவிட்டால் என்ன?" என்ற எண்ணம் ஏற்பட்டது. வெகுவிரைவில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியானது குடிலிலேயே தொடர்ந்து பணியாற்ற என்னை உறுதி கொள்ளச் செய்தது.

கனத்த மழை காரணமாக வீடு இழந்து பெற்றோர் இருவரும் மரணமடைந்து விட்டனர். பால் மணம் மாறாத அந்தப் பச்சிளம் பாலகனுக்கு வயது 4. அவனது உறவினர்கள் அந்தச் சிறுவனை குடிலில் சேர்த்துவிட்டுச் சென்றனர். ஒரு நாள் பள்ளி விளையாட்டு நேரத்தில் மாணவர்கள் விளையாடச் சென்று விட்டனர். நான் அலுவலக வெராண்டாவில் பள்ளிப்பணிகள் சிலவற்றை செய்து கொண்டிருந்தேன். ஏதோ நிழலாடிற்று. அச்சிறுவன் கோபால் நின்று கொண்டிருந்தான். " என்ன கோபால் நீ விளையாடப் போகவில்லையா?" எனக் கேட்டதற்கு போகவில்லை என்பதற்கு அடையாளமாக தலையை மட்டும் ஆட்டினான். என்னிடம் நெருங்கி வந்து நின்றான். அவனது முகத்தைப் பார்த்தேன். அதில் ஒரு சோகம் இருப்பதாக என் மனதிற்குப் பட்டது. அவனை அணைத்துக் கொண்டேன். " என்ன கோபால்?" என்றேன். அந்த இளம் வயதிலே இன்னும் மழலை கூட மாறாத அந்த பிஞ்சு மொட்டின் பெற்றோர்களை காலன் கவர்ந்து சென்று விட்டானே என மனதிலே கலக்கமும் சோகமும் எழுந்தன. அந்த பிஞ்சு வாய் திறந்து பேசியது. " உன் மடியிலே தலைவெச்சு படுக்கட்டுமா?" என மழலையில் கேட்டான்.

அதிர்ந்து விட்டேன். உருகிப்போனேன். என்னையும் அறியாமல் கண்ணீர் வழிந்தது. ஆரத்தழுவி கோபாலைத்தூக்கி என் மடியிலே போட்டுக் கொண்டேன். விளையாட்டு நேரம் முடியும் வரையில் தட்டிக் கொடுத்தேன்.தூங்கி விட்டான். தன்னை சீராட்டி உணவு கொடுத்து மடியில் படுக்க வைத்து தூங்கச் செய்யும் அன்னையின் நினைவு அவனுக்கு வந்து விட்டது போலும். தாயாகவும் தந்தையாகவும் இருந்து இத்தகைய

பெற்றோர்களை இழந்த சிறார்களுக்கு ஆதரவு தந்து வளர்த்து ஆளாக்குவதே தமது கடமையென வாழ்வை தியாகம் செய்து சேவை செய்து வரும் சுவாமிஜி அவர்களின் உயரிய தோற்றம் விண்ணுக்கும் மண்ணுக்குமாக உயர்ந்து நிற்பதை என் மனம் உணர்ந்தது. அன்றே என் மன சஞ்சலத்தை உதறி எறிந்தேன். சுவாமிஜி அவர்கள் செய்துவரும் மாபெரும் " அனாதைகளைக் காக்கும் வேள்வியில்" நானும் என்னை கரைத்துக் கொள்ள முடிவெடுத்தேன். இதைவிட எனது வாழ்வில் வேறென்ன வேண்டும்? என் கண் முன்னே கோபால் சிறுகச் சிறுக வளர்ந்தான். என்னைப் பார்க்கும் போதெல்லாம் "அண்ணா" எனக் கூப்பிட்டு பேசுவான். ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்து உயர்நிலைப் பள்ளிப் படிப்பை தொடர்ந்தான். மருந்தகத்தின் பொறுப்பை சுவாமிஜி அவர்கள் அவனுக்கு கொடுத்தார். அதில் அவனுக்கு மிகவும் ஈடுபாடு ஏற்பட்டது. நோயுற்ற மாணவர்களை கவனிப்பது. மருந்து மாத்திரைகள் கொடுப்பது,தேவையானால், இன்ஜெக்சன் போடுவது ஆகிய அனைத்திலும் வல்லவனான். திருச்சி வைத்தியர் விஸ்வநாதன் அவர்கள் குடில் மாணவர்களைபார்க்க வாரம் ஒருமுறை வருவார். அவரே சுவாமிகளிடம் வைத்தியப் படிப்பு படிக்காத அனுபவ வைத்தியர் கோபால் எனக் குறிப்பிடுவார். உயர்நிலைப்பள்ளி படிப்பை முடித்துச் சென்ற அந்த கோபால் இன்று எங்கிருக்கிறானோ? எங்கிருந்தாலும் அவன் நலமோடு வாழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இவனை போன்றே நூற்றுக்கணக்கான மாணவர்களின் சரித்திரம் குடிலிலே மாற்றப்பட்டு உத்தம நாயகர்களாக வெளியேறி இருக்கின்றனர்.

அனாதைகள் என்ற பெயரை மாற்றி அவர்களும் நாட்டின் நல்ல குடிமக்களே என மாற்றிக்காட்டிவரும் சுவாமிஜி அவர்களின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். பரமஹம்ஸரின் பூரண ஆசிபெற்றவரும் தரித்திர நாராயணர்களின் சேவையை மேற்கொள்ளுவதே பிறவி எடுத்ததின் பயன் எனக்கருதி அத்தகையோரை தெய்வாம்ஸமாகக் கருதி வந்த உத்தமஞானி சுவாமிஜி அவர்களை நான் சாதாரண ஒரு மனிதராக காணவில்லை. நடமாடும் தெய்வமாகவே மனதிலே போற்றி மகிழ்கின்றேன்.

அவரது சேவையின் மகத்துவம், தன்னலமற்ற வாழ்க்கை பிரம்மசர்யத்தில் தீவிரமான முழுமையான ஈடுபாடு, அனாதைகளை முன்னேறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவரது பேச்சிலும், கனவிலும், நனவிலும் நிறைந்திருந்தன. இத்தகைய ஓர் ஒப்பற்ற மகானுக்கொப்பான உயரிய மனிதரின் ஸ்தாபனத்திலே பணி செய்து வருகின்றோம் என்ற மனநிறைவு என்னுள்ளே உருவாயிற்று.

இத்தகைய மாபெரும் மகானைப்பற்றியும் அவர் ஸ்தாபித்த குடிலைப்பற்றியும், ஸ்தலவரலாறு பற்றியும் அறிய வாய்ப்பில்லாத நேயர்களுக்கு அவைகளைத் தந்துள்ளேன்.

திருச்சி – கரூர் முக்கிய சாலையில் திருச்சியிலிருந்து 16 வது கி.மீ. தூரத்தில் திருப்பராய்த்துறை என்னும் நீர்வளம், நிலவளம் கூடிய பசுமையான அழகிய கிராமம் உள்ளது. மூவராலும் பாடல் பெற்ற ஸ்தலமாகும் இது. தபோதனர் அருணகிரிநாதரும் இத்தலத்து ஈசன் பராய்த்துறை நாதரையும், அம்மை பசும்பொன் மயிலாம்பிகையையும் உள்ளம் உருக சந்தம் களி நடனம் ஆட அழகு தமிழில் பாடியுள்ளார். மேலும் தவசிரேஷ்டர்களான தாருகாவன முனிவர்களும், இத்தலத்திலே மனித குல மேம்பாட்டிற்காக வேள்விகள் பலவற்றை செய்து முடித்துள்ளார்கள். ஆகவே புனிதமான பூமி இது. இப்புனித பூமியில் ஒரு புனிதமான இயக்கம் தோன்றி வளர்ந்து நிலைத்து நிற்பதென்பது ஆச்சரியமல்ல. ஈசனின் அருள் விளையாட்டு ஒன்று இங்கே நடந்தேறியுள்ளது. அந்த விளையாட்டின் நாயகர்தான் தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமி அடிகளார் ஆவார்.

இத்தகைய உயர்வான மாண்பினைப் பெற்ற திருப்பராய்த்துறை கிராமத்திற்கு மேலும் ஓர் சிறப்புண்டு. கன்னட மாநிலத்தை தாயகமாகக் கொண்டு கைப்பிடித்த கணவனின் பின்னே தலை குனிந்து செல்லும் மணப்பெண் போன்று தமிழகத்திற்குள் நுழைகிறாள் காவிரி. பிறந்த நாட்டையும் புகுந்த நாட்டையும் வளமாக்கிச் செல்லும் இவள் இத்தலத்திலே பல்கிப் பெருகி பரந்த அளவில் அகண்டாகாரமாய் பாய்ந்து ஓடுவதால் ' அகண்ட காவிரி' எனப் பெயர் பெறுகின்றாள்.

திருப்பராய்த்துறையின் மேற்கே சிறிது தூரத்தில் உள்ள ஒரு வளமிக்க மாந்தோப்பிலிருந்து சின்னஞ்சிறு பாலகர்களின் ஆனந்தக் கூக்குரல் கேட்கிறதல்லவா? ஆமாம். அதுதான் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்னும் தாய் தந்தையரை இழந்த அனாதை சிறார்களுக்கு ஆதரவளித்து காக்கும் ஸ்வர்க்க பூமியாகும்.பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ சாரதாமணி அன்னை ஆகியோரின் திருவருள் நோக்கினால், தெய்வாம்சம் பெற்ற குழந்தைகளாக இவர்களே இங்கு ஓடியாடி விளையாடுகின்றனர். இவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு அணில் கூட்டங்களும், கீரிப்பிள்ளைகளும், பறவைக்கூட்டங்களும் ஓசையெழுப்பி விளையாடுகின்றன. இதுமட்டுமா? முக்கண்ணனின் திருவாபரணமான நாகநாதனும் அவ்வப்போது தலைகாட்டுவதுண்டு. நெஞ்சை அள்ளும் இயற்கைச் சூழலை இங்கு காணலாம்.

குடிலின் மெய்யன்பரும், புரவலருமான திருமுருக. கிருபானந்த வாரியாரைப் பற்றி தமிழகம் நன்கறியும். உபன்யாச சக்கரவர்த்தி, அழகு தமிழ் வித்தகர், முருகனடிமை, பக்த சிரோன்மணி எனப் பலவாறாக புகழப்படுகிற இவர் கூறுகிறார்.

" முக்தி தரும் ஸ்தலமாம் திருவயலூரிலே, கற்சிலைக்குள் கட்டுண்ட அழகன் முருகன் தன்னை நாடிவரும் பக்தர்களையெல்லாம் தனது கடைக்கண்

பார்வையால் திருஷ்டி தீட்சை கொடுத்து ஆட்கொண்ட வண்ணமிருக்கின்றான். தன் பக்தர்களால் சிலையிலே சிறைப்படுத்தப்பட்ட அவனே உயிர்பெற்று 300 பாலசுப்பிரமணியர்களாக உருவெடுத்து குடிலில் ஓடியாடி தனது பாலபருவத்தின் விளையாட்டு இச்சையை தீர்த்துக் கொள்கிறான். உலகைக் காக்கும் ஈசன் உறையும் திருக்கோயில்களுக்கு செல்வதற்கு ஒப்பானது, ஒரு அனாதைக்கு உணவளித்து ஆடைதந்து கல்விக்கண் திறப்பதாகும்." என உடலும் உள்ளமும் குளிர தாம் போகுமிடமெல்லாம் உபன்யாசங்களிடையே குடிலைக்குறிப்பிட்டு மகிழ்வார் வாரியார் சுவாமிகள். உன் முகம் ஒருதரம் கண்டாலே விளையும் நன்வினைகள் ஏராளம்." என அருணகிரியார் பாடியுள்ளார். அப்படியிருக்க வாரியார் சுவாமிகள் கூற்றுப்படி குடிலில் வசிக்கும் 300 முருகன்களை காண்பவர்க்கு எதுதான் கிட்டாது? அத்தகைய குடிலுக்கு செல்வோம். வாருங்கள்.

ஆஸ்ரமச் சுவாமிகள் என்றாலே காவியுடை தரித்த துறவி ஒருவரின் திருஉருவம்தான் நம் கண்முன்னே தோன்றும். உலகநடைமுறை கணிப்பும் இதுவாகத் தானே இருக்க முடியும்? ஆனால் அவரைப் பார்த்ததும் நம் கணிப்பெல்லாம் தவறாகிவிட்டதே. நேர்மாறானவராகத் திகழ்கிறார். எவ்வித ஆரவாரமுமின்றி மிகமிக எளிமையான முறையில் கதராடைக்குள் காட்சிதரும் இவர்தான் குடில் சுவாமிகள் என்றால் நம்மால் சிறிது நேரம் நம்ப முடியவில்லை. அன்போடு நம்மிடம் அளவளாவுகின்றார். மிகக் குறைந்த நேரத்திற்குள் குடிலைப்பற்றியும் அங்கு நடைபெறும் சேவையைக் குறித்தும் அன்பர்களுடன் எடுத்துக் கூறும் அவரது சொல்வன்மை போற்றுதற்குரியதாகும். வந்தவர்கள் அவர்களைப் பார்த்த பெருமிதத்தில் உள்ளம் மலர விடை பெற்றுச் செல்லுகின்றனர்.

இராம காதையிலே கம்பன் வர்ணித்த ஒரு காட்சி நினைவிற்கு வருகின்றது. பறவை வேந்தன் ஜடாயு பட்சி கூறியபடி ராமலட்சுமணர்கள் சீதையைத் தேட சுக்ரீவன் உதவியை கேட்டுப்பெற கானிடை வந்து கொண்டிருக்கின்றனர். இவர்களைக் காண்கிறான் சுக்ரீவன். தன்னை அழிக்க வாலியால் அனுப்பப்பட்டவர்களாக இவர்கள் இருக்கலாமோ என ஐயப்படுகின்றான். அவர்களிடம் சென்று விசாரித்து வருமாறு அனுமனை அனுப்புகிறான். அனுமன் மதிநுட்பம் வாய்ந்தவன். நடை உடை பாவனைகள், முகத்தோற்றம், உருவ அமைப்பு ஆகியவற்றைக் கண்டே அவர்கள் எத்தகையவர்கள் எனக்கண்டு கொள்ளும் வல்லமை வாய்க்கப் பெற்றவன் அனுமன். வருகின்றவர்களை கூர்ந்து கவனிக்கின்றான். " குற்றமறத் தோன்றும் குளிர்பார்வையும், செம்மையுற அமையப்பெற்ற அங்க அவயங்களும், சந்திரனை ஒத்த முக மண்டலமும் மேனியெங்கும் வீசும் காந்தியும், அமைதியான தோற்றமும் உடைய இவர்கள் மேலோர்" என்ற

முடிவிற்கு வருகிறான் அனுமான். அனுமன் வர்ணித்த மேலோன் ஒருவரின் திருஉருவத்தைத்தான் இங்கு காண்கிறோமா என்ற பிரமை மனதிலே ஒருகணம் பளிச்சிடுகிறது.

நான் பணியில் சேர்ந்த ஆரம்பகாலத்தில் ஆஸ்ரம வளர்ச்சியின் பொருட்டு நிதிவசூல் செய்ய சுவாமிஜி அவர்கள் தினமும் காலையில் புறப்பட்டுச் சென்று இரவில் ஆஸ்ரமம் வந்து சேருவார்கள். அப்போது நாங்கள் தங்க வெளியில் இடம் கிடைக்காததால், குடில் வளாகத்திற்குள்ளேயே குருகுல கட்டடத்தின் முன்பகுதியில் உள்ள ஓர் அறையை எங்களுக்காக ஒதுக்கித்தந்தார். எப்போதாவது பிரயாணம் இல்லாத சமயங்களில், எங்களது ஆசிரியப்பணி முடிந்ததும் மாலையில் சுவாமிஜி அவர்களை சந்திப்போம். அவரது அறையின் பக்கவாட்டு தாழ்வாரத்தில் உட்காருவோம். சுவாமிஜி அவர்களும் எங்கள் முன்பாக அமர்வார். பலப்பல விஷயங்களைப்பற்றி கூறுவார். அவர் கூறிய இரு விஷயங்கள் இன்னமும் என் நினைவிலே பசுமையாக உள்ளன. ஒரு விஷயம் ஆசிரியர்களின் கடமையை குறிப்பதாகும்.

“ இங்கு வந்து சேரும் குழந்தைகள் எத்தகைய நிலையிலிருந்து வந்தவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். கல்வி என்றால் என்ன என்பதையறியாத மிகமிக கீழ்மட்டத்திலுள்ள பெற்றோர்களின் குழந்தைகள் இவர்கள். பரம்பரை பரம்பரையாக காலம் காலமாக கல்வி ஞானம் என்பது அறவே இல்லாத சூழ்நிலையிலிருந்து இவர்கள் இங்கு வாழ வந்திருக்கின்றனர். இவர்களுக்கு கல்வியை விட உணவிலேதான் நாட்டம் அதிகம். இவர்களுக்கு வயிறார உணவு கிடைத்துவிட்டால் இவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. எந்தக் கல்வியும் தரஇயலாத ஆனந்தத்தை உணவு அவர்களுக்கு தந்துவிடுகிறது. எனவேதான் இவர்களைப் பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். “இவர்களின் முதல்தேவை உணவு. மற்றதெல்லாம் அதற்கடுத்ததுதான். நீங்கள் முதலில் இவர்களுக்கு உணவு தாருங்கள். பின்னர் நீங்கள் நினைப்பதை அவர்களிடம் பக்குவமாகக் கூறுங்கள்”

“ இவர்கள் பச்சை மண்ணுக்கு ஒப்பாவார்கள். நீங்கள் நினைத்தால் இவர்களை நல்ல பாத்திரங்களாக மாற்ற முடியும். இவர்களின் தலைவிதி உங்கள் வசம் உள்ளது. நீங்கள் முதலில் அவர்களுக்கு கல்வியில் விருப்பத்தை உண்டாக்குங்கள். பின்னர் முறையே போதனை செய்யுங்கள். இதை ஊதியம் பெறும் பணி எனக் கருதாமல் தன்னலமற்ற சேவை. ஈசனுக்குச் செய்யும் சேவை எனக் கருதி செயல்படுங்கள். இத்தகையோர்களைக் கொண்ட ஒரு நல்ல சமுதாயத்தை நீங்கள் உருவாக்கித் தந்தால் நாட்டு மக்கள் உங்களைப் போற்றுவர்.”

“பள்ளத்தில் விழுந்த ஒரு யானையை எவ்வளவு முயற்சி செய்தாலும் சிறு முயலால் யானையைக் காப்பாற்ற இயலுமா? அதை மீட்க இன்னொரு யானைதான் வரவேண்டும். அதுபோல அறியாமை, கல்வியின்மை என்ற பள்ளங்களிலிருந்து

இம்மாணவர்களை மீட்கும் பொறுப்பு உங்களுடையது. உங்கள் சக்தி அனைத்தையும் நீங்கள் பிரயோகிக்க வேண்டும். சதா விழிப்புடனும், சுறுசுறுப்புடனும், சோம்பலின்றி கடமையில் ஈடுபடவேண்டும். உங்களது திறமைகளையும் அறிவாற்றலையும் தினம் தினம் பெருக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் பிரகாசமாக எரியும் விளக்கைப் போன்றவர்களாக இருந்தாலன்றி மற்ற விளக்குகளை ஏற்ற இயலாது. மாணவர்களுக்கான கல்வித்தேவைகள் அனைத்தையும் குறைவற ஆஸ்ரமம் செய்து தரும். அது போல நீங்கள் உங்கள் பணியை முழுமையாக குறைவின்றி செய்து வாருங்கள்.'' என உள்ளத்திலே நன்கு பதியுமாறு கூறியிருக்கிறார்.

மாணவர் முன்னேற்றத்திற்காக சுவாமிஜி அவர்கள் கூறிய கருத்துக்களை ஒவ்வொரு ஆசிரியரும் தங்களது நெஞ்சத்திலே பதித்துக் கொண்டால், தலைசிறந்த மாணாக்கர்களை உருவாக்க இயலும் என்பதில் சிறிதளவு கூட ஐயமில்லை.

இரண்டாவதாக மாணவர்களுக்குத் தரும் தண்டனை குறித்ததாகும். எப்போதுமே சுவாமிஜி அவர்களுக்கு மாணவர்கள் படிப்பதில்லை என்ற காரணத்திற்காக தரப்படும் தண்டனையில் உடன்பாடில்லை. அன்பால் மாணவர்களை திருத்த வேண்டும் என்பார். அவனை அடிப்பதால் நாம் எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு என்பார். ஒரு அடங்காத் தன்மை அவனிடம் உருவாகக் காரணமே அவனை அடிப்பதால் ஏற்படும் விளைவின் எதிரொலிதான். ஆசிரியர்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும். படிப்பில் மாணவர்கள் கவனம் செலுத்தாததற்கு என்ன காரணம் எனக்கண்டு பிடிக்க வேண்டும். தண்டித்தே ஆக வேண்டும் என்ற நிலை உருவாகும் போது, மனதில் கோபமோ, வெறியோ இன்றி அவனை திருத்துவதற்காக தண்டனை தருகின்றோம் என்ற நினைவுடன் முழங்காலுக்கு கீழ் சிறுபிரம்பால் அடிக்க வேண்டும். கூடியவரை தண்டனைகளை தவிர்த்தல் வேண்டும். அவனது நலனில் மிகவும் அக்கரை கொண்டுள்ளோம் என்ற நிலையில் அவனை அணுகினால் நிச்சயம் நல்லபயன் உண்டாகும். தண்டனை விஷயத்தில் இதுவே சுவாமிஜியின் அபிப்ராயம்.

பகவான் ஸ்ரீஹரி யுகங்கள் தோறும் அவதாரம் செய்து பற்பல உருவங்களில் தோன்றி தமது பக்தர்களை ரட்சிக்கின்றார் என்று பலவாறாக நமது புராணங்கள் கூறுகின்றன. மாபெரும் குடில் ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் போது சுவாமிஜி அவர்களின் பற்பல தோற்றங்களைக் கண்டிருக்கிறேன். ஒரு தோற்றத்தில் அன்பு மிகுந்து காணப்படும். இன்னொன்றில் கடமை உணர்வோடு கூடிய கண்டிப்பு காணப்படும். பிறிதொன்றில் தெய்வீக ஆன்மீகக் கருத்துக்கள் முத்தென பளிச்சிடும். வேறொரு சமயத்தில் அவரது நெஞ்சத்திலிருந்து கருணை வெள்ளமாகப் பாய்வதை காணலாம்.

ஆஸ்ரமக் குழந்தைகள் மத்தியில் அவர்களின் காப்பாளராக காட்சி தருவார்.

அவர்களின் தாயாகவும் தந்தையாகவும் மாறி மாறி அரவணைத்து ஆனந்தம் தருவார்.

பார்க்க வரும் அரசு அதிகாரிகளுக்கு குடிலின் தலைவராக காட்சி தருவார்.

கல்வியதிகாரிகளுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் தன்னிகரில்லா பள்ளித் தாளாளராக இருப்பார்.

பற்பல ஆஸ்ரமங்களிலிருந்து வரும் சாதுக்களுக்கு காவியுடை தரிக்காத உத்தமத் துறவியாக காணப்படுவார்.

குடில் பிரம்மசாரிகளுக்கு சத் விஷயங்களோடு ஆஸ்ரம நிர்வாக நெறி முறைகளை போதிக்கும் ஆசானும் இவரே.

ஞான மார்க்கத்தின் கதவைத்திறக்கும் திறவுகோல் தத்துவத்தை அவர்களுக்கு விளக்குபவரும் இவரே.

ஆஸ்ரம நலனில் அக்கரை கொண்ட அன்பர்களுக்கு உற்ற நண்பராகவும், உலக வாழ்க்கையின் சீரிய தத்துவங்களை விளக்கி அவர்களை அதில் ஈடுபட வைக்கும் சிறந்த ஆலோசகராக இருப்பவரும் இவரேயாவார். இவை அனைத்தையும் ஒருங்கே தன்னுள் கொண்டவரும் சதாவதானியாக பற்பல தருணங்களில் பல்வேறு முகபாவங்களுடன் குடிலை தமிழ்நாட்டின் அனாதைச் சிறார்களின் கேந்திரமாக மாற்றிக் காட்டிய தவத்திரு சுவாமிஜி அவர்களுடன் 43 ஆண்டுகாலம் தொடர்பு கொண்டு பணியாற்றும் பெரும் பாக்கியத்தை எனக்களித்த ஆண்டவனது திருப்பாதங்களுக்கு எனது நமஸ்காரத்தை சமர்ப்பிக்கின்றேன்.

மரணமில்லாப் பெருவாழ்வை எய்திட்ட சுவாமிஜி அவர்களை என்றென்றும் மனதிலே இருத்தி வழிபடுவோமாக.

ஓ–ம் வி. வெங்கடரமணன்
18.7.2001

ஓர் தவசீலரைக் கண்டேன்

சுவாமி அகிலானந்தா, ஸ்ரீசுவாமி விவேகானந்த ஆஸ்ரமம்,
திருக்குற்றாலம், நெல்லை மாவட்டம்

இறைவன் திருவருளால் நான் 1977 இறுதிவாக்கில் ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அது சமயம் நான் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தில் பிரம்மசாரியாக சேர்ந்திருந்தேன். காவிரிக்கரையின்

தென்பாகத்தில் பாடல் பெற்ற ஸ்தலம் திருப்பராய்த்துறை. அங்கு இரு பெரிய ஆஸ்ரமங்கள். கிழக்கெல்லையில் ஒரு ஸ்தாபனம். மேற்கெல்லையில் ஒரு ஸ்தாபனம். ஆன்மீகப்பணி, சமுதாயப்பணியில் சிறந்த முறையில் பணி செய்து வந்தன. வருகின்றன.

அந்த அற்புதமான சூழ்நிலையில் சுத்தமே வடிவெடுத்த அருமையான சோலையிலுள்ள குடிலுக்கு சென்ற போது எனக்கு அவைகளைக் காண ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் வாழ்வில் ஒளியிழந்து, வாழ வகையற்ற திக்கற்ற தாய்தந்தையரை இழந்த சிறுவர்கள் சுறுசுறுப்பே வடிவெடுத்தவர்களாய், தங்களின் ஆஸ்ரம வளாகத்தில் விளையாட்டுப் போக்கில் தூய்மை செய்து கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் பிரமிப்புடன் கண்டு களித்துவிட்டு அதன் ஸ்தாபகரைக் காண விழைந்தேன். முதல் சந்திப்பு.

புறத்தில் தூய்மை, அழகு, பச்சைப்பசேல் என மரங்கள் அடர்ந்த தோப்புகள் கண்ணுக்கு விருந்தாக அமைந்தது. ஸ்தாபகரைக் கண்டதும் நமஸ்காரம் செய்தேன். வேண்டாம் என தடுத்தார்கள். ஆனால் அதற்குள் நான் எனது தர்மத்தை செய்து முடித்துவிட்டேன்.

தூய வெள்ளாடை, எளிமையே வடிவெடுத்த ஆடம்பரமில்லாத எளிய வாழ்க்கை அமைந்த அறை. இனிமையான வரவேற்பு, உபசரிப்பு கண்டு ஆச்சரியம் அடைந்த நான் அகவாழ்வில் அதன் ஸ்தாபகரின் வாழ்வைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன். சிறிது நேரம் பேசிவிட்டு பிரசாதம் பெற்றுக்கொண்டு வெளியில் வந்தேன். மற்ற ஆஸ்ரம பிரம்மசாரிகளையும் கண்டேன். அதில் ஒரு பிரம்மசாரிதான் இன்று அந்த ஸ்தாபனத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள். அவரது பெயர் பிரம்மசாரி துரை.

பின்னர் பலமுறை சென்றுவரும் வழக்கம் ஏற்பட்டது. பல சாதுக்களையும், பிரம்மசாரிகளையும், என்னுடன் தபோவனத்திலிருந்து அவ்வப்போது அழைத்துச் செல்வேன். பின்னர் இது சகஜவாழ்வுக்கு வந்தது. குடில் சுவாமி அவர்களும் எங்களை ஆனந்தம் ததும்பிய அன்பான மொழியால், " வாங்க வாங்க" என்பார்கள். அவர்களுடன் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. அதன்பின்னர் குடிலின் ஆரம்பகால வளர்ச்சி முதல் அதன் விபரங்களை கூறவேண்டும் என்றேன்.

" தபோவனத்திலிருந்து வந்தபின் தோப்பின் உட்பகுதியில் 5 ஆண்டுகள் தவம் இயற்றுவது, பின் குருதேவரின் இச்சை இருப்பின் யாது செய்ய பணிக்கின்றாரோ அப்படி செயல்படுவது என்ற முடிவுடன் ஒரு சிறு குடிசை அமைத்து என் ஆன்மீக வாழ்க்கையை தொடர்ந்தேன். அன்பர்கள் உணவுக்கு ஏற்பாடு செய்தனர். பலமுறை காவிரியின் வெள்ளப்பெருக்கால் தங்க இடவசதியின்றி சிரமப்பட்டதுண்டு. அது சமயம் கரையின் மேல்பகுதியில் அமர்ந்து கொள்வதுண்டு. தவவாழ்க்கையின்போது எத்தனையோ

இடையூறுகள். ஆனால் அவைகள் யாவும் மூன்று அருளாளர்களின் அருளால் துடைக்கப்பட்டன. சோதனை செய்தார்கள். சோதனையில் வெற்றியடையும் சத்தியையும் அவர்களே தந்தார்கள்'' என்றார்கள்.

அன்னாரின் தவவாழ்வைக் கேட்டதும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் முழு சரணாகதியடைந்த ஓர் தவசீலரையே கண்டேன். ஒரே கிராமத்தில் இரு தவசீலர்கள். என் குருதேவர் ஸ்ரீமத் சித்பவானந்தர், பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள் ஆகிய இருவரின் ஆசியும் அருளும் இடைவிடாது எனக்குக் கிட்டியது நான் செய்த பாக்கியம்.

பின்னர் அடுத்துச் சென்றபோது பழைய தொடர்கதையை கேட்டேன். குருதேவரின் இச்சைப்படி தாய்தந்தையர் இல்லாத மாணவர்களை சேர்க்கும் பணி ஆரம்பமாயிற்று. அவர்களை காவிரியில் ஸ்நானம் செய்விப்பது, உணவு கொடுத்து பள்ளிக்கு அனுப்புவது வரை தாயும் தந்தையுமாக இருந்துள்ளார்கள். மாணவர்களுக்கு மதிய உணவு சைக்கிளில் அனுப்புவது. இது எளிதாக உள்ளது எழுதுவதற்கு. அந்த காலகட்டத்தில் எவ்வளவு சிரமத்திற்கு இடையில் செய்தார்கள் என்பதை என்னால் விவரிக்க முடியவில்லை. கேட்டதெல்லாம் எழுத பக்கம் போதாது. இப்படியாக தனது ஆரம்ப கால ஆன்மீக வாழ்வில் தொடங்கியவற்றை விவரித்துள்ளார்.

ஸ்ரீமத் சித்பவானந்தர் அவர்களிடம் பிரம்மசாரி சேர்ந்தது முதற்கொண்டு தானே செங்கல் சூளை வைத்து கட்டடப்பணி செய்தது வரை மிக உன்னதமான, மனதிற்கு கஷ்டமான நிகழ்ச்சிகளையெல்லாம் கூறியதுண்டு. அவர்கள் வாழ்வு தவத்தால் மென்மேலும் மிளிர்வதைக்கண்டேன். தன்னை ஒரு கருவிமட்டும்தான் என்பார்கள். நம்ம கையில் என்ன இருக்கு என மிக எளிமையாக தன்னை வெளிக்காட்டாது தன் ஆன்மீக ஆற்றலை வெளிக்காட்டாது வாழ்ந்தார்கள்.

" என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள் சுவாமி'' என்பேன். " ஸ்ரீராமகிருஷ்ணரின் காலடிக்கு வந்துவிட்டீர்கள். பின் எதற்காக என் ஆசீர்வாதம்? அவர் பார்த்துக் கொள்வார்'' என அந்த முழுப்பொறுப்பை அங்கு சுமத்தி விடுவார்கள்.

ஒரு சமயம் நான் சுவாமிஜியிடம் ஆஸ்ரமத்தில் பிரம்மசாரிகளாக சேர வெளியிலிருந்து வரும் இளைஞர்களையும் சேர்க்கலாமே என்றேன். அதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. " இங்கேயே படித்துவிட்டு இந்த மாணவர்களில் யார் இங்கு பிரம்மசாரிகளாக சேர விரும்புகிறார்களோ அவர்களை மட்டுமே சேர்ப்பது, அவர்களே நிர்வாகப் பொறுப்பும் செய்ய வேண்டும். இதுதான் என் திட்டம். அதில் மாற்றம் செய்வது என்பதில்லை. மேலும் அது பொருந்தாது. ஒரே ஒருவர் இருப்பினும் சரி, அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. அது குருதேவரின் விருப்பம்.'' என ஆணித்தரமாக கூறிவிட்டு மகிழ்வோடு என்னை நோக்கினார்கள். இதற்கு மேல் நான் யாது பேசுவது?.

பின்னர் ஒருநாள் ஆரம்பகால நன்கொடை வசூல்பற்றிக் கேட்டேன். “அதையேன் கேட்கிறீர்கள்? கிராமம் கிராமமாக சென்று சில சமயம் உணவும் கையில் எடுத்துக் கொண்டு செல்வேன். மிக சில ரூபாய்கள்தான் வசூலாகும். ரூபாய் ஐந்தோ பத்தோ கிடைத்தால் அது பல ஆயிரத்துக்கு நிகராக எண்ணியதுண்டு. கால்நடையாக சென்றதும் உண்டு. பஸ்ஸுக்கு செலவு அதிகம் என்று ரயிலில் சென்று வருவதுண்டு. ஆனால் இரவு வரும் லோக்கல் ரயில் வசதி மிகக்குறைவு. அதனால் நடு இரவுக்கு பின்வரும் ரயிலுக்கு காத்திருந்து பலமுறை வந்ததுண்டு. அது சமயம் ஆரம்ப கால மாணவர்கள் மண்ணென்னெய் விளக்கை வைத்துக்கொண்டு ரயில் நிலையத்தில் காத்திருந்து அழைத்து வருவதுண்டு.”

இரவு 2 மணி 3 மணி என வந்தாலும் மறுநாள் தனது பணியை அதிகாலையில் தொடங்கிவிடுவார்கள். இதையெல்லாம் கேட்டு மிக ஆச்சரியப்படுவேன். ஆக வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் ஏற்பட்ட அனுபவங்கள், குருதேவரின் அருள் அதன் மூலம் வாரியார், மாவட்ட ஆட்சித்தலைவர் மலையப்பன் ஆகியோரின் பணிகளை பெரிதும் கூறி மகிழ்வார்கள். சிறந்த காந்தியவாதி. பணத்தை செலவு செய்வதில் மிகக்கண்டிப்பானவர்கள். இறுக்கமானவர் என்றுகூட கூறலாம். காரணம் அதன் அருமையை உணர்ந்தவர்கள். அத்துடன் அக்குழந்தைகளின் முழு உழைப்பின் மூலம் பொருளாதாரம் சேர்க்கப்படுவதால் அதை முறையாக செய்யாவிட்டால் பெருங்குற்றம் வரும் என்பார்கள்.

மற்றொரு நிகழ்ச்சி. குடிலின் முக்கிய வருமானம் தென்னையின் மூலம்தான். சில லட்சம் காய்கள் மாதந்தோறும் வரும். சுவாமி அவர்கள் யாரையும் நம்பிவிடுவார்கள். தேங்காய் வியாபாரி பல முறை வெளிமார்க்கெட்டை விட காய் ஒன்றுக்கு 50 காசு முதல் 1 ரூபாய் வரை பொய் சொல்லி ஏமாற்றி வந்திருக்கிறார். அதே வியாபாரிதான் தபோவன தோப்பின் தேங்காய்களையும் வாங்குவார். இங்கு ஏமாற்ற இயலாது. நான் விவசாயத்துறையை கவனித்து வந்தேன். என்றுமே பணத்தையும் விவசாய வருமானத்தையும் பேசாத சுவாமிகள் பேச்சின் திசை மாறி தென்னைக்கு உரம் வைப்பது, அதை பாதுகாப்பது, காய் விலை குறித்தும் பேச ஆரம்பித்தோம்.

அந்த வாரம் இரு ஸ்தாபனங்களிலும் தேங்காய் வெட்டி விற்ற சமயம். அதே வியாபாரி தபோவனத்தில் வாங்கியதை விட 75 பைசா குறைவாக குடிலில் சொல்லியிருக்கிறார். என்ன சுவாமி சொல்லுகிறீர்கள்? குடில் காயின் விலை இன்னதென்று கூறினேன். யார்? எந்த ஊர் வியாபாரி என்றார்கள். நான் அந்த வியாபாரியின் பெயரைக்கூறியதும் அதே வியாபாரிதானே இங்கு பல வருடங்களாக் வாங்கினார். ஏன் இந்த வித்தியாசம்? உங்களுக்கு நன்றாகத் தெரியுமா தேங்காயின் விலை? என்றார்கள். நான் தெளிவாகக் கூறினேன். பொறுப்பை ஏற்றுள்ள பிரம்மசாரியைக் கூப்பிட்டார்கள். நான்

காயின் விலை குறித்து விளக்கினேன்.

அந்த வியாபாரி ஏமாற்றியுள்ளார் என நன்கு தெரிந்தது. சுவாமிகள் மிகவும் வேதனைப்பட்டார்கள். நம்பியதால் ஏமாற்றிவிட்டானே. இந்தக் குழந்தைகளின் உழைப்பில் வருவதையும் இப்படிச் செய்வதா? என மிகச் சங்கடப்பட்டார்கள். பலமுறை தெளிவாக கேட்டறிந்த பின்தான் அந்த வியாபாரியின் செயல் மீது வருத்தப்பட்டார்கள். அதற்கு முன் அவசரப்பட்டு வருத்தப்படவில்லை. இது சாதனையின் விளைவு. பின்னர் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு " நீங்க குடிலுக்கு ஓர் பணி செய்து தரமுடியுமா?" என்றார்கள். "என்னால் முடிந்ததை செய்கிறேன் சுவாமி" என்றேன். "குடில் தேங்காய்களை ஒவ்வொரு முறையும் விலைபேசி விற்றுத் தந்தால் நல்லது. செய்து தாருங்கள்." என்றார்கள். நானும் எந்த ஆலோசனையும் செய்யாது சம்மதம் தந்தேன். உடனே அவர்கள் முகத்தில் ஓர் ஆனந்தச்சிரிப்பு. வியாபாரி செய்த நம்பிக்கை துரோகம் எங்கோ மறைந்துவிட்டது. நன்றாக சிரித்து, " இதுதான் உலகம் போலும். இதையெல்லாம் நானறியேன். சரி. குருதேவர் பார்த்துக் கொள்வார்." என்றார்கள். பின்னர் விடைபெற்றுச் சென்றேன். செல்லும் போது எனக்கு சில யோசனைகள். இதை முறையாகச் செய்ய வேண்டுமே. தபோவன நிர்வாகம் இதற்கு சம்மதம் தரவேண்டுமே. சரி பார்ப்போம் என்று எண்ணியவாறு தபோவன காரியதரிசி சுவாமி சதானந்தர் அவர்களிடம், குடிலில் நடந்த விவரங்களை சுருக்கமாகக் கூறினேன். அந்த வியாபாரி செய்த செயலை கண்டித்து பேசி, " குருதேவரின் சொத்தை கொள்ளையடித்துள்ளானே. சரி அதுவும் குருதேவரின் சொத்து. அதில் ஒரு பைசா நஷ்டம் என்றாலும் விடக்கூடாது. தாங்கள் குடில் சுவாமி விரும்பியபடி நன்றாக செய்து தாருங்கள்." என்றார். பின்பு என் குருநாதரிடம் சென்று மிகச் சுருக்கமாக குடில் விஷயத்தை கூறினேன். நான் செய்ய எண்ணிய பணியையும் கூறினேன். " நீ செய்த முடிவு மிக்க நல்லது. நன்றாகச் செய். குருதேவரின் ஸ்தாபனம் அது என ரத்தினச்சுருக்கமாக ஆணித்தரமாக அனுமதி வழங்கினார்.

பின் நான் பொறுப்பேற்றுள்ள விவசாயத்துறையில் மூத்தவரான சுவாமி சங்கரானந்தா அவர்களிடம் கூறினேன். நன்றாக செய்து தருவோம். என்றார்கள். எல்லாம் அந்த குருதேவரின் அருளால் நிறைவேறியது. ஒவ்வொரு முறையும் குடிலில் தேங்காய் வெட்டியதும் போனில் அல்லது அது சமயம் நேரில் சென்றிருந்தால் தகவலறிந்து அப்பணியை நன்றாக செய்து தந்தோம். பல லட்ச ரூபாய் வியாபாரத்தில் ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை எங்கள் மீது இருந்தது. இது முறையாக நடந்தபின் சுவாமிஜி அவர்களை நான் சந்திக்க போகும் போதெல்லாம் பேசி மகிழ்வார். அந்த ஆனந்தமே அலாதியானது. பல ஆண்டுகள் இப்பணி தொடர்ந்தது.

அடுத்த நிகழ்ச்சி. குடில் நிர்வாகத்தில் ஒரு பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

பின்னர் அந்த பஸ்ஸை விற்க முடிவு செய்து பலரிடமிருந்து விலைப்பட்டியலும் வந்தன. அது பற்றிய விவரமும் குடில் சுவாமிகள் கூறினார்கள். அது சமயம் எங்கள் தபோவனக்கிளை ஆஸ்ரமம் கரூரில் பல பள்ளிகளை நடத்தி வந்தது.பள்ளிக்கு பஸ் தேவையானதால் விளம்பரத்தைக்கண்டு அங்கு நிர்வாகம் செய்து வந்த சுவாமி ஆத்மானந்தா தபோவனம் வந்து அதை நாம் நம் ஆஸ்ரமத்துக்கு வாங்கலாம்" என்றார்கள். என்னையும் அழைத்துக் கொண்டு குடிலுக்குச் சென்று பஸ்ஸை பார்த்தார்கள். சுவாமிகளை பார்க்கச் சென்றோம். அப்போது காலை நேரமானதால் காலை கடமைகள் காரணமாக சுவாமிகளை பார்க்க இயலவில்லை. வந்து விட்டோம். பின்னர் சில மணி நேரம் கழித்து நான் மட்டும் சென்று பேசினால் போதும் என்று என்னை அனுப்பினார்கள். குடில் சென்று சுவாமிஜியிடம் விபரம் கூறினேன். "நன்றாக எடுத்துக் கொள்ளுங்கள். குருதேவரின் சொத்து குருதேவரின் பணிக்கு மாறுகிறது. மிக்க மகிழ்ச்சி." என்றார்கள். விலையைப் பற்றியறிய தயக்கம் கொண்டு கேட்டேன். "என்ன சாமி ... இப்படிக் கேட்கறீங்க. உங்கள் விருப்பம். நான் அது பற்றி பேச மாட்டேன். இரு ஸ்தாபனமும் குருதேவருடையது. அங்கு நம் பஸ் போவதில் எனக்கு மகிழ்ச்சியே" என்றார்கள். அதன் பின் அங்கு நிர்வாகம் செய்பவர்கள் எவ்வளவு தொகை தருகிறார்களோ வாங்கிக் கொண்டு பஸ் சாவியை தந்துவிடுங்கள்" என்றார். மேலே நடந்த நிகழ்ச்சியினை உள்ளன்போடு உணர்ச்சிபூர்வமாக கூறிமுடித்தார்கள்.

மற்றது. " குடிலின் நிர்வாகத்தை பிற்காலத்தில் எப்படி செய்ய உள்ளீர்கள்? அல்லது ஸ்ரீராமகிருஷ்ண மிஷனோடு சேர்க்கலாமா" எனக்கேட்டேன். அதில் சுவாமிகளுக்கு உடன்பாடில்லை. பலவாறாக எனக்கு பலவிளக்கங்களை கூறி மழுப்பலாக, மறைமுகமாக விருப்பம் இல்லாததை விளக்கினார்கள். நானும் நீண்டநேரம் பல நிர்வாகப்பணிகளை கூறி விளக்கினேன். நீண்டநேரம் நீடித்தது. சுவாமிஜி அவர்கள் கூறிய கருத்துக்கள் சில எனக்கு ஏற்புடையதாக இல்லை. பலதும் சரியெனப்பட்டது. அமைதியாக இருந்தேன். " என்ன நான் கூறியது சரிதானே உங்களுக்கு திருப்தியா?" என்றார்கள். பெரியவர்கள் தாங்கள் கூறுவது சரிதான். பின்னரும் யோசியுங்கள்" என்றேன். " எல்லாம் குருதேவர் பார்த்துக் கொள்வார். கவலைப்படாதீர்கள்" என்றார்கள்.

அவர்களைக் காணும் போதெல்லாம் அவர்களின் உடல்நிலையைப் பற்றிக் கேட்பேன். " அது அப்படித்தான் இருக்கும். அதற்கிடையில் நம் பணியை செய்ய வேண்டியது தான்." என்பார்கள். " செய்ய வேண்டிய பணிகளை செய்து முடித்தாகிவிட்டது. திருப்தியாக செல்ல வேண்டியது தானே" என்பார்கள். அவரிடம் அது சமயம் ஓர் மனநிறைவைக் கண்டேன். ஒரு அற்புதமான புன்னகையைக் காண்பேன். அதுவே அலாதியான அன்பின் சிரிப்பு. சாதனையின் விளைவால் ஏற்பட்ட மனநிறைவு.

குடிலில் நடந்து வந்த சிறுதொழில் சம்மந்தமாக பேச்சு ஒரு நாள் எழுந்தது. " குடிலுக்கும் இண்டஸ்ட்ரியலுக்கும் பொருத்தமில்லை என குருதேவர் கருதுகிறார். அதனால்தான் எது செய்தாலும் தோல்வி. அது வேண்டாம்" என்பது குருதேவரின் கட்டளை. ஆனால் அதை ஏற்றுக் கொண்டோம். குடில் வளாகத்தில் தொழிற்கூடம், பஸ், பேட்டவாய்த்தலை தொழிற்கூடம் ஆகிய அனைத்தும் சரியாக நடைபெறவில்லை". இதைக்கூறி விட்டு மனம் விட்டு சிரித்தார்கள். ஆக குடிலுக்கு தென்னை ஒன்றே போதும் என்பது குருதேவரின் இச்சை. பெரும் சுமை வேண்டாம் என்பது குருதேவரின் ஆணை போலும். ஏற்று மகிழ்வோடு இருப்போம்" என்றார்கள்.

குடில் சுவாமிஜி அவர்கள் ஒரு சிறந்த காந்தியவாதி. தவச்சீலர். ஆடம்பரமில்லா எளிய வாழ்வு வாழ்பவர். குருதேவரிடம் முற்றிலுமாக சரணாகதியடைந்தவர். இதையே எனக்கும் கூறுவார்கள். " நம் கையில் எதுவுமில்லை. காரியத்தை செய்து கொண்டே போங்கள். எதுவரையில் அனுமதியோ அதற்கப்பால் போகவிடமாட்டார். ஒரு நியதி இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் கடமைகளை செய்பவர் சுவாமிஜி அவர்கள். வாரம் ஒரு நாள் திங்கட்கிழமை தோறும் மௌனவிரதம் கைக்கொண்டவர். சில நாட்களில் நான் அவரைக் காண செல்லும்போது தகவல் தர தாமதமாகி காத்திருப்பேன். அதன்பின் சந்திக்கும் போது வருத்தப்படுவார்கள். " வந்த செய்தியை தெரிவித்திருந்தால் சிறிது முன்னரே பார்த்திருக்கலாமே" என்று கூறுவார்.

திங்கட்கிழமை சுவாமிகள் மௌனவிரதம் என்பதை மறந்து ஒரு திங்கள் இரவு குடிலுக்கு சென்றேன். அது சமயம் திருக்குற்றாலத்தில் நான் தனியாக ஆஸ்ரமம் அமைத்திருந்தேன். தன் வாழ்நாளிலே செய்யாத மாற்றம் செய்து என்னுடன் அரை மணிக்கு மேல் இரவு 11 மணிவரை பேசிக் கொண்டிருந்தார்.அது அவரின் தாய்மையின் உள்ளத்தை காட்டியது. என்னிடம் பரிவோடு பேசி பல நல்ல கருத்துக்களை கூறி ஆசீர்வாதம் செய்தார்கள்.

என் குருநாதர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரின் அந்திம காலம். அது சமயம் குடிலுக்கு சென்றேன். " சுவாமி அவர்கள் ஒரு முறையேனும் வந்து அவரை பார்க்கலாமே" என எவ்வளவோ வற்புறுத்தி வாக்குவாதம் செய்தேன். சுவாமிகள் எவ்வளவோ விஷயங்களை கூறி என்னை சமாதானம் செய்ய முயற்சித்தார்கள். இருப்பினும் என் வற்புறுத்தல் நிற்கவில்லை. அதற்கு பின்தான் சுவாமி அவர்கள் இறுதியாக நடந்த நிகழ்ச்சியை கூறி இதன்பின்னரும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டார். நான் அவர்களின் குருபக்தி, அதே சமயம் காப்பாற்றப்பட வேண்டிய சத்தியத்தின் கடமையை அறிந்த பின் அமைதியாக இருந்தேன். " சரிதானா" என்றார்கள். " சரிதான் சுவாமி" என்றேன்.

சுவாமி அவர்கள் உடல் நலம் காரணமாக கோவை சென்று குளியல்

சிகிச்சை பெறும் அவஸ்யம் ஏற்பட்டது. குடில் வளாகத்தை விட்டு வெளியே செல்வதில்லை. வெளிப்பயணம் ஏற்பதில்லை என முடிவு செய்திருந்ததால் கோவை செல்ல மறுத்தார்கள். 'சுவாமி இது பயணமில்லை. உடல்நிலைக்கான சிகிச்சை செய்யும் பணி.'' என்றேன். டாக்டர் விஸ்வநாதம் அவர்களின் புதல்வர்களுடைய கருத்தும், பிற நெருங்கிய அன்பர்களின் கருத்தும் இதாகவே இருந்தது. பின் சுவாமிகள் கோவை சென்றார்கள்.

அங்கும் சென்று பார்த்தேன். உடல் முழுவதும் எண்ணெய், " இந்த சரீரத்துக்கு செய்ய வேண்டியதை செய்கிறார்கள். செய்யட்டும்" என தான் அகப்பட்டுக் கொள்ளாது சரீர உணர்விலிருந்து விலகிப் பேசினார். அவரது சாதனையின் விளைவு. "வீண் அலைச்சல். ஏன் இவ்வளவு தூரம் வந்தீர்கள்" என்றார்கள். தன்னைக் காண வருவதை முன்னிட்டு பிறர் சிரமப்படக்கூடாது என்ற கருத்தில் கூறினார்கள். இன்றைய உலகியல் வாழ்வில் தன்னை பலரும் வந்து காணவேண்டும்.. ஏன் இன்னார் வரவில்லை... என்ற ஏக்கம் இருக்கும். இங்கே அது இல்லை. இது ஆன்மீக வாழ்வு தந்த பலன். திருப்தி. இதுதான் கைகண்ட பலன்.

என் குருநாதர் சுவாமி சித்பவானந்தா அவர்கள் சரீரத்தை உகுக்கும் காலகட்டத்தில், குடில் சுவாமிக்கு அவர் மஹா சமாதி அடைந்துவிட்டார் என்று தவறான செய்தி எவ்வாறோ சென்று விட்டது. தனது குருநாதர் மகாசமாதி அடைந்துவிட்டார் எனக்கேட்ட உடனே இரு நாட்கள் மௌனவிரதம் காக்க தியான இல்லத்திற்கு சென்றுவிட்டார்கள். இது பின்னர் எனக்குத் தெரிய வந்தது. மௌனவிரதம் அனுஷ்டிக்கச் சென்ற சுவாமிகள் சிறிது நேரத்தில் அது தவறான செய்தி என அறிந்து குடில் வளாகத்திற்கு திரும்பிவிட்டார்கள். அதன்பின் ஓரிரு நாட்களில் என் குருநாதர் மஹாசமாதி அடைந்தார்கள். ஓரிரு நாட்கள் கழித்து குடில் சுவாமியைக் காணச்சென்றேன்.

குடில் சுவாமி அவர்கள் " என் குருநாதருக்கு நான் என்ன செய்ய வேண்டுமோ அதை இங்கிருந்து மானசீகமாகச் செய்தேன். பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது. மௌனவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. குருநாதரிடம் அவருக்குள்ள ஆழ்ந்த மானசீகமான பக்தியை கண்டேன்.

நான் தபோவனத்திலிருந்து விலகியதும் என் குருஸ்தானத்திற்கு சென்று சாதுக்களிடம் விடைபெற்று ஆசிகள் பெற்றேன். அன்று குடிலுக்கும் சென்று என் முடிவைக் கூறினேன், "குருதேவரின் இச்சைப்படி நடக்கிறது. அவரையே சார்ந்திருந்து பணி செய்யுங்கள்" எனக்கூறி ஆசி வழங்கினார்.

ஸ்தாபனம் ஆரம்பித்த பின் பொருளாதார நெருக்கடியை சரி செய்ய நிரந்தர நிதி சேர்க்க குடிலுக்கு மடல் எழுதி, நன்கொடை கேட்டேன். அதற்கு சுவாமிஜி அவர்கள், " இது முழுக்க முழுக்க இக்குழந்தைகளின் உழைப்பால் வளர்ந்தது. அது முற்றிலும் அவர்களுக்கே பயன்படவேண்டும் எனக் கருதுகிறேன். உங்கள் எண்ணத்தை பூர்த்தி செய்ய இயலவில்லையே என

தனது கொள்கையை வலியுறுத்தி மடல் எழுதினார்கள். பின்னர் வருடம் ஆயிரம் ரூபாய் அனுப்புவது என்று முடிவு செய்து இன்றளவும் வந்து கொண்டிருக்கிறது.

சுவாமி அவர்கள் உடல் நலம் குன்றி சரீரத்தை விடவில்லை. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சிறு தடங்கல், காரணமாக இரண்டே நாட்களில் மஹா சமாதியடைந்தார்கள். தனது காலம் முடிவதை எண்ணி மகிழ்ந்தாரே தவிர வேறு மாற்று சிந்தனையை அவரிடத்திலே காணவில்லை. செய்தி எனக்கு தாமதமாகக் கிட்டியது. உடனே புறப்பட்டு மாலையில் சென்று அந்த தவசீலரின் சிதையை எரியூட்டிய இடத்தை வலம் வந்து மலர் அஞ்சலி செய்து முடித்தேன்.

இதன் பின்னரும் பலமுறை குடிலுக்குச் சென்று சுவாமிஜி இருந்த காலத்தில் எப்படி என் தொடர்பு இருந்ததோ அதே போல் அந்த ஸ்தாபனத்தோடும் தலைவர் பிரம்மசாரி துரை அவர்களுடனும் மற்ற பிரம்மசாரிகளோடும் நிர்வாகத்தினரோடும் தொடர்பு கொண்டு ஆனந்தம் அடைந்து வருகிறேன்.

குருதேவரின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாக விளங்கிய உத்தமமான ஒரு தவசீலரின் ஆசிபெற்றதும், அவருடன் நெருங்கி பழகியதும் என் பாக்கியம் எனக்கருதி, இரு தவசீலர்களின் வாழ்க்கையின் தன்மை எனக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

"ஜெய் ஸ்ரீ குருமகராஜ் கீ ஜெய்"

சாந்தி

ஓ–ம் சுவாமி அகிலானந்தா

9.2.2001

ஆழ்மனத்திலிருந்து எழுந்த எண்ண மலர்கள்

(கவிதைகள்)

பெ. துரைசாமி ஐ.ஏ.எஸ் (ஓய்வு)

ராஜாராம் நகர், சேலம்

குடில் நிறுவனர்

1. திருச்சியை அடுத்த திருப்பராய்த் துறையில்
தேர்ந்தநல் காவிரி கரையோ ரத்தில்
அருந்தவ முனிவர் இராம கிருஷ்ண
பரம ஹம்ஸர் பெயரை இணைத்து
திருப்பெருந் துறையெனும் தலத்தைப் போல
ஸ்ரீராம கிருஷ்ண குடிலை நிறுவி
பெரும்பெயர் எடுத்திட வைத்தவர் நமது
பிரம்மசாரி இராம சாமியா ரன்றோ?

குடில் செய்யும் பணியும் அதன்நிறுவனர் கடமை உணர்வும்

2. பெற்றோர் இருவரும் இல்லா நிலையில்
பேணுவார் ஒழிந்த சிறார்களை எடுத்து
உற்றநல் முறையில் கல்வி புகட்டியும்
உதவிடும் தொழிலில் பயிற்சி அளித்தும்
பெற்றதம் குழந்தையைப் பேணிடும் தாய்போல்
பிறர்புகழ் உண்டியும் உறையுளும் வழங்கியும்
நற்றவம் புரியும் இராம சாமியார்
நாளும் ஆற்றும் திருத்தொண் டன்றோ

3. ஓதும் கல்வியும் உழைக்கும் முறையும்
ஒன்றோ டொன்று இணைக்கும் பான்மையும்
பேத மற்ற வாழ்க்கை நெறியும்
பிறர்பால் ஆற்றும் தொண்டு உள்ளமும்
ஏத மில்லா வாழ்வை அமைக்க'
இறைவழி நின்றிடும் முறைமை முழுதும்
நாதப் பெரும்பறை முழங்குதல் போல
நற்றவக் குடிலும் விளங்கிடு மன்றோ?

வேறு சந்தம்

4. காலையிலும் மாலையிலும் தொழுகைதனை நடத்தி
கடவுளையே நினைத்திருப்பார் அவர் போற்றும் நெறியாம்
வேலை செயும் போதினிலே செய்யும் பணி நினைந்து
வேறெதையும் எண்ணாமல் அதில் மூழ்கி இருப்பார்'
சோலைபல சூழ்ந்திட்ட காவேரி குடிலைச்
சோர்வற்ற முறையிலே நாளும் வலம் வருவார்!
வேலைமேல் வந்தோர்கள் செய்கின்ற பணியில்
விருப்போடு ஈடுபட வேண்டியன செய்வார்!

5. பரமஹம்ஸர் வாய்மலர்ந்த பொன்மொழியைச் சொல்வார்!
பாரதத்தாய் ஈன்றெடுத்தத் தவப்புதல்வன் என்பார்
கர்மயோகி ஒருவரெனில் விவேகானந்த ரென்பார்!
கற்றவர்கள் குழுவினிடை தனி மனிதரென்பார்!
இருவருமே பாரதத்தை உய்விக்க வந்த
இனியநல் ஆசான்கள் போற்றிடுவோம் என்பார்!
தருமத்தைப் பாரதத்தில் தழைத்தோங்கச் செய்ய
தவமுனிகள் சொன்னபடி நடந்திடுவோம் என்பார்!

6. ஆன்மீக நிகழ்ச்சியெலாம் குடில் நாளில் நடக்கும்
ஆண்டுவிழா காண்பதற்கு மக்களெலாம் வருவர்!
தேன்போன்று இனிக்கின்ற கருத்துக்களைச் சிறுவர்
திரட்டியே தருகின்ற நாடகமும் நடக்கும்!
வான்வந்து தேவர்களும் வாழ்த்துச் சொல்லிப் போவர்!
வந்தத்தமிழ் பாவலரும் புகழ்ந்துமிக மகிழ்வர்!
பான் மறந்த குழவிகளும் தாயாரை மறந்து
பார்வையினைப் பரவவிட்டு பரவசத்தில் மிதப்பார்!

கிருபானந்த வாரியார் சுவாமிகளும் குடில் நிறுவனரும்

7. திருமுருகன் அருள்பெற்ற வாரியார் சுவாமிகளும்
திருக்குடிலில் ஆற்றுகின்ற சேவையினை நினைந்து!
அரும்பணிக்குத் தாம்செய்யும் கடமையென எண்ணி
ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருவார்!
பெருமுனிவர் நம்முடைய ராமசாமி யாரும்
பெரியவரை வரவேற்று பேசச்சொல்லி மகிழ்வார்!
இருவருமே குடிலுக்கு இணைந்தாற்றும் பணிகள்
ஈடில்லாத் தொண்டன்றோ? எவ்வாறு புகல்வேன்!

குடில் ஆற்றும் ஈடுஇணையற்ற பணி

8. இராம கிருஷ்ண பரமஹம் சமுனிவரையும் அவரால்
இரட்சிக்கப் பட்டசாமி விவேகானந் தரையும்
குருவாக ஏற்று அவர்கள் கொள்கைகளைப் பரப்ப
குருகுலத்தைப் போன்றதோர் குடில்தன்னை நிறுவி
பரமஹம்சர் மறுபிறவி என்னும்படி யாகப்
பார்தன்னில் அடிகளார் செய்கின்ற பணியோ
பெருமைமிகு பணியென்று பேசாதார் இல்லை
பெரியவரை நினைந்து மனம் போற்றாதார் இல்லை!

குடிலுக்கு வந்த நன்கொடைகள் போதுமெனச் சொன்ன மேதை

9. வந்தவரை நன்கொடைகள் போதுமென எண்ணி
வருங்கொடையை வேண்டாமெனச் சொல்வாரும் உண்டோ?
இந்தியாவில் உலகத்தில் போதுமென்ற மனது
இருப்பவரைக் கண்டதுண்டோ? நாம் பார்த்ததில்லை!

பந்தமொன்றும் இல்லாத துறவிகளைப் போன்று
பரமஹம்ஸர் பாதைவழி வாழ்க்கையினை அமைத்து
அந்தரமே திரிந்து வாழும் உலகத்தில் இன்று
அருந்தொண்டு ஆற்றுகின்ற பிரம்மசாரி உண்டோ?

அரசாங்கம் செய்ய வேண்டிய கடமைகள்

10. குடில் செய்யும் நற்பணிகள் போன்றின்று நாட்டில்
குன்றிலிட்ட விளக்கே போல் பரவிடுதல் வேண்டும்!
விடுதிகளைப் பலவிடத்தும் திறந்துவைத்து ஆங்கே
விதியற்ற குழந்தைகளை அதில்பேண வேண்டும்
குடிமகனாய் ஆகும்வரை விடுதிகளில் உறைந்து
குடிசைத் தொழில் முதலான பலதொழிலும் கற்க
வடிவமைக்கும் செயல் முறையை அரசாங்கம் செய்து
வறுமையிலே வாழ்வோரைப் புரந்திடுதல் வேண்டும்.

ஓ–ம் பெ. துரைசாமி
13.2.2001

வாழ்க
திரு. பிரம்மசாரி இராமசாமி அடிகளார்
வளர்க
அவர்கள் தொண்டுள்ளத்தோடு
நிறுவிய
திருக்குடில்

ஸ்ரீராமகிருஷ்ண குடிலோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு

பெ. துரைசாமி ஐ.ஏ.எஸ் (ஓய்வு)
ராஜாராம்நகர், சேலம்

நான் 1971–72 ம் ஆண்டுகளில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வந்தேன். அப்போது எனது நண்பர் ஒருவர் மூலமாக ஸ்ரீராமகிருஷ்ண குடிலோடு எனக்கு தொடர்பு ஏற்பட்டது.

குடில் நிறுவனர் பிரம்மசாரி ராமசுவாமி அவர்களை அடிக்கடி சந்தித்து உரையாற்றி வருவேன். திருப்பராய்த்துறையில் காவிரி கரையோரத்தில் அமைந்த குடில் திருச்சிக்கு வெகு அண்மையில் இருந்தமையால் எனக்கு

அடிகளாரை சந்தித்து பேசிவருவதில் எந்தவிதமான பிரச்னையும் ஏற்பட்டதில்லை. அடிகளாரோடு நான் குடிலுக்கு போகும் நாட்களில் எல்லாம் குடிலை சுற்றிப் பார்த்து வருவேன். அங்கு நடக்கும் அன்றாடப் பணிகளை ஊன்றிக் கவனிப்பேன்.

தாய் தந்தையரற்ற சிறுவர்களை குடில் தத்து எடுத்து பராமரித்து அவர்களுக்கு குடிலில் உண்டியும் உறையுளும் அளித்து, ஏட்டுக்கல்வியுடன் தொழிற்கல்வியும் பயிற்றுவித்து அவர்கள் அனைவரும் தனித்துப் பிழைப்பதற்குள்ள வயது வரும் வரையில் குடிலில் தங்கி வெளிஉலகில் ஏதாவது ஒரு தொழிலில் அமர்ந்து சுலபமாக சம்பாதிக்கும் வரையிலும் வாழ்வளித்து பராமரிக்கப்படுவதை நேரில் கண்டிருக்கிறேன்.

அடிகளார் அவர்கள் எந்தவிதமான விளம்பரமும் தேடாமல் மேற்கண்ட பணிகளை செய்வதில் கண்ணுங்கருத்துமாய் ஈடுபட்டு வந்ததையும் அதுவே இறைவனுக்கு ஆற்றும் திருப்பணி என்று அடிகளார் எண்ணுவதையும் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

குடிலுக்கு சென்று அடிகளார் செய்யும் சேவைகளை காணும் போதெல்லாம், வள்ளல்பெருமான் இராமலிங்க அடிகளார் பாடிய கீழ்கண்ட பாசுரங்கள் என் நினைவுக்கு வரும்

“ எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய இறைவனே! உலகில்
பட்டினி யுற்றார் பசித்தனர் களையால்
பரிதவிக் கின்றனர் என்றே
ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்
உளம்பகீ ரெனநடுக் குற்றே
இட்டஇவ் வுலகில் பசியெனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே!

மண்ணுல கதியே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை யெந்தாய்!

மேற்கண்ட பாசுரங்களை மனதில் கொண்டுதான் என்னவோ திரு. இராமசுவாமி அடிகளார் அவர்கள் சமுதாயத் தொண்டாற்றி வருகின்றார் போலும் என நினைப்பேன்.

அடிகளார் உள்ளம் போன்று மக்களெல்லாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தால் உலகம் எவ்வளவு சிறப்புற்றிருக்கும் என என் மனதில் தோன்றுவதுண்டு.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிறந்த நாளையும் குடில் நிறுவன ஆண்டையும் ஒன்றிணைத்து ஆண்டுதோறும் குடிலில் ஆண்டுவிழா நடைபெறும். அதைக் காணவும் பங்கேற்கவும் குடிலைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் பெருந்திரளாக வருவார்கள். அவர்கள் அனைவருக்கும் பகலுணவு இலவசமாக வழங்கப்படும்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் சொற்பொழிவுகள் நடைபெறும். குடில் மாணவர்கள் நாடகம் மூலம் ஆன்மீகக் கருத்துக்களை சிந்தனையைக் கிளறும் வகையில் எடுத்துக்கூறி நாடகத்தை மிக நல்ல முறையில் நிறைவு செய்வார்கள். இவை அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் குடிலில் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்.

குடில் ஆற்றும் திருப்பணிகளுக்கு இந்தியாவின் பலபகுதிகளிலிருந்தும் நன்கொடைகள் வந்து குவியும். நன்கொடைகள் அனைத்தும் மிகச்சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு கணக்கு காட்டப்படும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கு ஆய்வரால் தணிக்கை செய்யப்பட்டு வரவு செலவு கணக்குகள் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டப்பெறும்.

நான் திருச்சியைவிட்டு மாற்றலாகி 1973 ம் வருடம் சென்னைக்கு வந்தேன். அன்றிலிருந்து இன்றுவரை குடிலோடு தொடர்பு வைத்துக் கொண்டு வருகின்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளச் செல்வேன்.

குடில் இதுவரை பெற்ற நன்கொடைகள் போதுமென்றும், அதைக் கொண்டு குடிலை நிரந்தரமாக பராமரிக்க முடியுமென்றும் மேலும் நன்கொடைகளை அளிக்க வேண்டாமென்றும் செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்து நன்கொடைகள் பெறுவதை நிறுத்தியவர் அடிகளாரைத் தவிர இவ்வுலகில் வேறு எந்த நிறுவனத்தையும், தனிநபரையும் நான் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. இது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட மகானாக வாழ்ந்து வாழ்க்கையில் பெருமையைச் சேர்த்தவர் திரு. இராமசுவாமி அடிகளார் ஆவார்கள்.

அடிகளார் அவர்களது பிரம்மசர்ய நோன்பு மிகமிக புனிதத் தன்மை வாய்ந்தது. யாராலும் எக்காலத்திலும் எந்தவிதமான பழிச்சொல்லுக்கும் ஆளாகாமல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் வழியிலும், சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த நெறிமுறைகளிலும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு கடைசி

வரையிலும் வாழ்ந்தவர் அடிகளாராகும். ஏழை எளியவர்கள் பால் இரக்கம் கொண்டு அதற்கென குடிலை நிறுவி சுயக்கட்டுப்பாடுடன் தனி மனிதராக நின்று அமரத்வம் எய்தும் வரையிலும் தொண்டாற்றியவர் நமது இராமசாமி அடிகளார் என்பதை யாரும் எக்காலத்திற்கும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

நான் அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வு பெற்று 1983 ஜூன் மாதம் என்னுடைய சொந்த ஊரான சேலம் வந்து சேர்ந்து நிரந்தரமாக வசிக்கும் நிலையைப் பெற்றேன். அப்பழுக்கில்லாமல் என்னுடைய பணிக்காலத்தில் பணியை நிறைவு செய்து ஓய்வு பெற்றவன் என்பதை கேள்விப்பட்டு அடிகளாருக்கு என்மீது தனிப்பிணைப்பு ஏற்பட்டது.

அடிகளார் ஆற்றும் தொண்டுகளை நினைந்து எனது ஆழ்மனதிலிருந்து எழுந்த எண்ணங்களை கவிதைகளாக வடித்து அதை வெளியிட, அடிகளார் அவர்களின் ஒப்புதலைக் கேட்டேன். இது தமக்கு விளம்பரத்தை தேடும் முயற்சியாக மக்கள் கருதுவார்கள் என நினைத்து அடிகளார் அவர்கள் மிக நன்றி உணர்வோடு அதை வேண்டாமென்று மறுத்துவிட்டார்கள். விளம்பரம் தேடுவதில் எந்தவிதமான குறியுமின்றி “ என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் மூதுரைப்படி கடைசிவரையிலும் வாழ்ந்தவர் அடிகளார் என்பதற்கு இது ஒன்றே சான்றாகும். அன்று நான் வடித்த கவிதைகள்தான் மேலே தந்துள்ள கவிதைகளாகும்.

பிரம்மசாரி திரு. ராமசாமி அடிகளார் எந்த நோக்கத்தோடு குடிலை நிறுவி தொண்டாற்றி வந்தாரோ அந்த நோக்கம் என்றும் தொடர்ந்து தொய்வின்றி நடைபெற்று வர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென்று என் வாழ்நாள் முழுதும் வேண்டிக் கொண்டிருப்பேன். பிரம்மசாரி ராமசுவாமி அடிகளார் நம்மைவிட்டு மறைந்தாலும் அவர் என்றென்றும் விண்ணிலிருந்து கொண்டே குடில் சிறந்து நடைபெற்றுவர தமது ஆசிகளை வழங்கிக் கொண்டிருப்பார் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. அப்பணி சிறப்பாக நடைபெற நாம் அனைவரும் குடிலுக்கு வாழ்த்துச் சொல்வோம்.

ஓ–ம் பெ. துரைசாமி
13.2.2001

ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலைப்பற்றி...

திரு. வ. திருவேங்கடநாதன், தென்னக ரயில்வே பொறியாளர் மதுரை
குடிலின் அனைத்து கட்டங்களினி பொறியாளரும்
குடிலின் அணுக்கத்தொண்டரும், அன்பரும் ஆவார்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், அன்னை ஸ்ரீசாரதா தேவி, ஸ்ரீசுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அருளுரைகளை அப்படியே பின்பற்றி அனைவருக்கும் போதித்து வந்த பூஜ்யர். சமரச, சமத்துவ, சன்மார்க்கம் பரப்பிய ஒரு மகாபுருஷர். தேசப்பிதா மஹாத்மா காந்தியின் வழியில் அறம், அஹிம்சை, சுயசார்பு, சேவை இவைகளை கொள்கையாகக் கொண்டு வாழ்ந்த தியாகச் செம்மல். ஆஸ்ரம நிர்வாகத்திலும், கல்வி நிறுவன நிர்வாகத்திலும் மேலாண்மையிலும் கைதேர்ந்த மேதை. வெளியுலகத் தொடர்பின்றி ஆஸ்ரமத்துக் குள்ளேயே வாழ்ந்தாலும், தொழில்நுட்பங்களும், சந்தை நெறிகளும் கைவந்த வித்தகர். ஸ்ரீமத் பகவத் கீதையை கற்றுணர்ந்து கடைபிடித்த கர்மயோகி. அன்பும் அடக்கமும், சாந்தமும், எளிமையும் அன்றி வேறு அறியாத குணசீலர். அனாதைச் சிறுவர்களின் சிரிப்பிலே ஆண்டவனைக் கண்ட சேவை சித்தர்.

முக்தியடைந்த குடில் சுவாமிகள் பிரம்மசாரி ராமசுவாமி அவர்களைப்பற்றி இப்படித்தான் வர்ணிக்க முடியும்.

ஒளிபடைத்த கண்களும், உறுதிகொண்ட நெஞ்சமும் கொண்டசுவாமிகளின் தரிசனமும் அறிமுகமும், குடில் செய்து வரும் அனாதை ரட்சகம்" எனும் பெரும் வேள்வியில் உதவும் ஒரு சிறு பங்கும் கிடைக்கப்பெற்றேன். வெறும் பார்வையாளனாக வந்தவன். குடிலின் சேவனாக உருவானேன்.ஸ்ரீஇராமபிரானுக்கு சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்கும் பணியில் உதவ வந்த அணில் போல் ஆனேன். ஸ்ரீஇராமபிரான் அந்த அணிலுக்கு காட்டிய அன்பும் பரிவும், அருளும் குடில் சுவாமிகளிடமிருந்து எனக்கும் கிடைத்தன.

உறுதிமொழிக்கல்வெட்டு மண்டபத்தில் தொடங்கிய எனது கட்டுமான தொழில்நுட்ப சேவை, குடிலில் உள்ள தற்காலிக ஓட்டுக்கூரை கட்டடங்கள் அனைத்தையும் நிரந்தர கான்கிரீட் கட்டடங்களாக்கும் வரை நீண்டது. இவற்றில் சமையல்கூடம் உணவுக்கூடம், சமையல் பொருள் சேமிப்பு அறைகள், பிரம்மசாரிகளின் சமையல் உணவுக்கூடங்கள், அன்பர்கள் இல்ல மேல்மாடி பள்ளிக்கட்டடம் ஆகியவை அடங்கும். பள்ளி மேல்மாடி, சுவாமிகளுக்கான அமைதி இல்லம், பிரம்மசாரிகள் அறைகள் ஆகியவை புதிதாக அமைக்கப்பட்டன. சுவாமிகளின் விருப்பப்படி ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ விவேகானந்தரது பெரிய சிலா ரூபங்களுக்கு மேலாக இரண்டு தூண்கள் மீது மட்டும் நிற்கும் உயர்ந்த வளைவான கூரைகொண்ட விதானங்கள் வடிவமைக்கப்பட்டன. அன்பர் இல்லத்தில் வந்து தங்கிய முக்கொம்பு அணையின் மேற்பார்வை பொறியாளர் அப்பணிக்காக எழுப்பப்பட்டு வந்த தூண்களையும் வரைபடத்தையும் பார்த்து விட்டு அந்த மண்டபத்தின் உறுதி,

பத்திரதன்மை, பற்றி பெரும் சந்தேகத்தை எழுப்பிவிட்டு சென்றுவிட்டார். அவரது யோசனை வளைவான கான்கிரீட் கூரைக்கு பதிலாக சாதாரணமான கூரை போட வேண்டுமென்பதே.

சுவாமிகளிடம் அந்த மண்டபங்கள், வளைவான கூரை தொடர்பாக எனது உத்தேச செய்முறைகளை விளக்கியபின் வரைபடப்படியே பணியை முடிக்க அனுமதித்தார்கள். " இப்பணி தொடர்பாக இன்ஜினியர் ஐயா வேண்டும் அனைத்துப்பொருட்கள், தளவாடச்சாமான்கள், தச்சர், கொல்லர் ஏற்பாடு செய்யுங்கள்." என ஆஸ்ரமவாசிகளைப் பணித்தார்கள். உள்ளூர் கிராமக்கட்டட கலைஞர்கள், தொழிலாளர்கள், தச்சர், கொல்லர், குடில் மாணவர்களை மட்டும் கொண்டு ஒரு பொதுப்பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் எண்ணிப்பார்க்கவும் தயங்கிய சிக்கல் நிறைந்த ஒரு கட்டுமானப்பணி எவ்வித இடைஞ்சல், குறைபாடின்றி வெற்றிகரமாக முடிக்கப்பட்டு நெடிதுயர்ந்து நின்று சாலையில் செல்வோரின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. இது பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர், ஸ்ரீவிவேகானந்தர் அனுகிரகத்தாலேயே முடிந்தது.

ஆசிரம வளாகத்திலும் சிறந்த முறையில் ஒரு பிரார்த்தனா தியான மண்டபம் கட்ட சுவாமிகள் விரும்பினார்கள். இதற்காக தமிழகமெங்கும் பல கோவில்கள் தியானமண்டபங்களை பார்வையிட்டு நேர்த்தியான ஒரு வரைபடம் தயாரிக்க பணித்தார்கள். இதற்காக சுற்றுலாவாகச் செல்ல ஒரு காரையும் ஏற்பாடு செய்து கொடுத்து குடில் மேலாளராக இருந்த ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி உயர்திரு. எஸ்.வி. சங்கரநாரயணா அவர்களையும் உடன் அனுப்பி வைத்தார்கள். சக பொறியாளர் நண்பர் திரு. கேசவராமனுடன் தமிழ்நாடு முழுவதையும் சுற்றி பற்பல கலைநுணுக்கம் வாய்ந்த கட்டடங்கள், கோவில்கள், மண்டபங்களைப் பார்வையிட்டு அதன் சிறப்புக்களை உள்வாங்கிக் கொண்டு திரும்பினோம்.

குடிலின் எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இந்து முகலாய கிருஸ்துவ சமயக்கட்டடங்களின் அம்சங்களை இணைத்து ஒரு வரைபடம் தயாரித்து அளித்தேன். இரண்டு அடுக்கு கட்டடத்தின் முகப்பில் இந்து கட்டட முறையில் நுழைவு மண்டபம், கோபுரம், மாடிப்படி, பெரியகூடம் பின்புறம் எண்கோண வடிவில் ஒரு பெரிய அறையில் சுழற்படிகள். இத்தளம் கூட்ட மண்டபமாக அமையும். இதன் பக்கவாட்டு திறப்புக்களில் முகலாயக் கட்டட முறையில் வளைவுகள், முதல் மாடியில் தியான மண்டபம், பெரிய எண்கோண அறையே கர்ப்பகிரகம். அதன்மீது கிருஸ்துவ முறையில் மற்ற இரு சிறு எண்கோண அறையிலும் எண்பட்டை கொண்ட "கோதிக் டூம்கள்". இந்த டூம்கள் வெறும் செங்கல் கட்டடமே. சுவாமிகள் மகிழ்வுடன் வரைபடத்திற்கு ஒப்புதல் அளித்தார்கள்.

இதே சமயத்தில் ஆஸ்ரம கீழ்புற தென்னந்தோப்பில் இருந்த ஒரு வட்டக்கட்டடத்தில் முதல் மாடி எழுப்பி அதை ஆஸ்ரம வாசிகளின் தனித்தவ நிலையமாக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இந்த வட்டக்கட்டடத்தின் கூரையை பழைய பாணியில், அரைக்கோளமாக அமைத்தால் குடில் கட்டடத் தொழிலாளர்கள் பிரார்த்தனை மண்டப டூம் அமைப்பதற்கு ஓர் பயிற்சியாக அமையும் என்ற ஆலோசனைகளையும் சுவாமிகளால் ஏற்கப்பட்டது. இதில் அனுபவம் பெற்ற கிராமக் கட்டட கலைஞர்கள் பிரார்த்தனா தியான மண்டபத்தை சிறப்பாக கட்டி முடித்தனர். இன்று அதை பார்க்கும் அனைவரையும் கவர்ந்து வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

சுவாமிகள் கட்டுமானம் மட்டுமல்லாது குடில் மாணவர் முன்னேற்றம், குடிலின் எதிர்காலத்திட்டங்கள் குறித்தும்கூட என்னுடன் விவாதிப்பது உண்டு. குடிலின் மெய்யன்பர்கள் குறிப்பாக வாரியார் சுவாமிகள், டாக்டர் ஐயா, மானேஜர் ஐயா ஆகியோர்கள் ஆலோசனை கேட்பார்கள். இதன் காரணமாக வெகு நாட்களாக ஏற்காமல் ஒதுக்கி வைத்திருந்த பல விஷயங்களில் மாற்றம் கொண்டு வர சுவாமிகள் தயங்கவில்லை. உதாரணமாக ஆசிரமத்துள் நீராவி சமையல் சாதனங்கள் மின்விசிறிகள், மாணவர் உணவுத்திட்டத்தில் அதிக சத்துணவு, காய்கறிகளை வெளிமார்க்கெட்டில் வாங்குதல் ஆகியவை.

குடில் படிப்பை முடித்து வெளியேறும் மாணவர்கள் நிலைபற்றி ஒருநாள் கவலையுடன் விவாதித்தார்கள். கட்டுப்பாடான ஆஸ்ரம வாழ்க்கையிலிருந்து, கட்டுபாடற்ற வெளிஉலகத்தில் மாணவர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொள்ள முடியாமல் திணறுவதை குறிப்பிட்டார்கள். மாணவர்கள் ஏதாவது ஒரு தொழிற்பயிற்சியுடன் வெளியேறினால் வேலை வாய்ப்பு கிடைக்கும். சுயதொழிலிலும் ஈடுபடலாம். பிழைத்துக் கொள்வான் என்ற எனது ஆலோசனையை தெரிவித்தேன். குடிலே ஒரு தொழிற்பயிற்சி பள்ளியையும் துவக்கலாமே? எனவும் யோசனை தெரிவித்தேன். அது இயலாதது என்று கூறிய சுவாமிகள், அதே லட்சியத்தை அடைய வேறு மாற்று யோசனைகள் என்ன என்று கேட்டார்கள். அப்போது பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தனி ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்ட நேரம். அதையே குறிப்பிட்டு குடில் மாணவர்களுக்கு ஐ.டி.ஐ பாலிடெக்னிக்கில் சிறப்பிடங்கள் ஒதுக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறினேன். இந்த யோசனையை சுவாமிகள் உடனே ஏற்றுக் கொண்டார்கள். உரிய கோரிக்கைக் கடிதங்கள் அரசின் தொழிற்கல்வித்துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குடிலின் மெய்யன்பரும் தற்போது நினைவில் வாழ்பவருமான ஜட்ஜ் ஐயா உயர்திரு. மஹாராஜன் அவர்களுக்கும் இந்தக்கோரிக்கை பற்றி அரசு அதிகாரிகளுடன் பேச வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஜட்ஜ் ஐயா அவர்கள், " இது நடக்க முடியாத காரியம். தவறுதலான முன்னுதாரணம். மற்ற மதக் குழுக்குகளும் இதே உரிமையைக்கோரும் என்று காரணம் கூறி அரசு மறுத்துவிடும். இந்த யோசனையை கைவிடுங்கள்." எனக் கூறிவிட்டார்கள். ஜட்ஜ் ஐயாவின் யூகம் பலித்தது. கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை அனைத்து அதிகாரிகளும் திட்டத்திற்கு மறுப்பு தெரிவிக்கவே அரசிடமிருந்து " வாய்ப்பில்லை, முடியாது" என்ற பதில் கிடைத்தது.

குடில் மாணவர்கள் நன்மைக்கான ஒரு விஷயத்தை சுவாமிகள் சுலபத்தில் விட்டு விடுவதாக இல்லை. குடில் சுவாமிகள் வேண்டுகோளின்படி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் குடில் மாணவர்களுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் முனைவர் திரு. எம்.ஜி. ஆரிடம் தூது சென்றார்கள். திரு. எம். ஜி. ஆர் குடிலின் அன்பர். குடில் வளர்ச்சி நிதிக்காக நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தவர். அந்நிகழ்ச்சியிலேயே வாரியார் சுவாமிகளால் " பொன்மனச் செம்மல்" என்ற பட்டம் அளிக்கப்பட்டார்.

முதல்வர் தமது பார்வைக்கு வராமல் போன கோப்புகளை வரவழைத்துப் படித்தார். திருச்சி துவாக்குடி அரசு ஐ.டி.ஐ. , அரசு பாலிடெக்னிக்கிலே இடங்கள் வழங்க உத்தரவிட்டார். வழக்கமான மதிப்பெண்களை தளர்த்தி குடில் அனுப்பும் 10 ம் வகுப்பில் தேறிய மாணவர்களை வேறு கேள்விகள் எதுவுமின்றி அனுமதிக்க உத்திரவிட்டார்.குடில் சுவாமிகளின் விடாமுயற்சியால் வருடந்தோறும் 10 மாணவர்கள் தொழிற்கல்வி பெற்று வெளிஉலகில் நுழைகின்றனர். தொழிற்பயிற்சி பெற்று வரும் மாணவர்களும் அக்காலத்தில் குடில் ஆதரவில் குடிலிலேயே உள்ளார்கள் என்பது சிறப்பான ஏற்பாடு.

தொழிற்பயிற்சி பெற்று பட்டயமும் பெற்ற பழைய மாணவர்கள் பலர் சரியான வேலை வாய்ப்பின்றி மீண்டும் சுவாமிகளிடமே வந்தனர். தொழிற்பயிற்சி பெற்ற பழைய மாணவர்களின் வேலை வாய்ப்பிற்காகவே சுவாமிகள் தொடங்கிய குடில் திட்டம் " குடில் சேவை மையம்". இந்த பெரும் மையத்தை இடம் தேர்வு செய்வது முதல் பல லட்ச ரூபாய்கள் செலவில் கட்டி முடிப்பது வரையில் தொழில்நுட்ப சேவை செய்யும் வாய்ப்பும் எனக்கு கிட்டியது. துரதிஷ்டவசமாக இந்த மையம் வெற்றிகரமாக இயங்க முடியாமற் போயிற்று. மூடப்பட்டுவிட்டது.

குடில் கொள்கைகளுக்கு முரண்பாடு காரணமாக சில பிரிவுகளை மூடிவிடும் அவசியங்கள் தோன்றியதால் சுவாமிகள் உடனடியாக முடிவுகள் எடுக்கத் தயங்கியதில்லை. லாபத்துடன் இயங்கிக் கொண்டிருந்த குடில் பயணப் பேருந்து நிறுத்தப்பட்டது. இரும்புத் தொழிற்சாலை மூடப்பட்டது. இவைகளை உதாரணங்களாகக் கூறலாம். பட்டயப் பொறியியல் முடித்தோரை விட ஐ.டி.ஐ பயிற்சி முடித்தோருக்கு எளிதில் வேலை கிடைக்கிறது என்ற

காரணத்தால் பட்டயப்படிப்பு இடங்களை ஒதுக்கிவிட்டு அதே அளவிற்கு ஐ.டி.ஐ இடங்களை அதிகரிக்கச் செய்து அரசிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். அனாதைச் சிறுவர்களின் நிகழ்காலமும் எதிர்காலமும் சுவாமிகளின் சிந்தனையில் எப்போதும் இருந்து வந்தன.

விழுப்புரத்தையடுத்த ஒரு குக்கிராமத்தில் நான்கு நாட்கள் நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமில் ஆசிரியனாக நான் தங்கியிருந்த காலத்தில் சுவாமிகளின் மறைவுச்செய்தி உடன் எட்டாமல் போயிற்று. ஆயினும் இயல்பாக சுவாமிகள் மறைந்த 3 ம் நாளில் திருச்சி வந்து செய்தியறிந்து, கனத்த இதயத்துடன் குடிலுக்கு சென்று அஞ்சலி செலுத்தினேன். சுவாமிகளின் பூத உடல் அக்னியில் சமர்ப்பிக்கப்ட்ட இடத்தில் அவருக்கு ஒரு சிறிய நினைவாலயம் எழுப்பவும் உதவினேன்.

குடில் சேவையில் ஈடுபட்டிருந்த நேரங்களே எனது வாழ்வில் பயனுள்ள நேரங்கள். ஒவ்வொரு தடவையும் குடிலைவிட்டு திரும்புமுன் சுவாமிகளின் திருக்கரங்களினால் குடில் சேவைக்கு மதிப்பூதியமாக குடில் பூஜை பிரசாதம் பெற்றுக்கொண்ட கணங்களே என் வாழ்வில் பொன்னான கணங்கள்.

இராமவாய்த்தலை, கிருஷ்ணவாய்த்தலை, கால்வாய்கள் ஊடே சின்னஞ்சிறு ஓலைக்குடிசையில் தோன்றிய குடில் இன்று ஆலவிருக்ஷமாக வளர்ந்து, பலநூறு அனாதைச்சிறுவர்களுக்கு புகலிடம் அளித்து, கல்விக்கண்களைத் திறந்து அவர்களின் எதிர்கால வாழ்விற்கு, வழிகாட்டி வருகிறது. அதன் நிழல் இன்னும் ஆயிரக்கணக்கான அனாதைச் சிறுவர்களை வவேற்கக் காத்து நிற்கிறது.

குடில் சுவாமிகள் இந்த தர்மஸ்தாபனத்திற்கு வகுத்து வைத்துள்ள பாதையில் அவர் வகுத்துள்ள நெறிகள் படியே அவர் பெருக்கி வைத்துள்ள வளத்தைக் கொண்டு அவர் வழியில் பயிற்றுவிக்கப்பட்ட புதிய குடில் சுவாமிகள் தலைமையில் ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் நிலையான சேவை நிரந்தரமாகத் தொடரும் என்பது திண்ணம்.

ஓ—ம். வ. திருவேங்கடநாதன்
18.2.2001

எனக்கு எழுதிய ஒரே கடிதம்

பிரம்மசாரி ராமமூர்த்தி
ஸ்ரீசுவாமி சித்பவானந்த ஆஸ்ரமம், வேதபுரி, தேனி, மதுரை மாவட்டம்

யான் சுவாமிஜி அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் ஏகாந்த வாழ்க்கை வாழும் சமயம் ஒருநாள் தங்கினேன். இருவரும் பேசிக் கொண்டிருந்த சமயம்,

யான் குடிலில் சேருவது பற்றி சுவாமிஜியிடம் கூறினேன். அதற்கு அவர்கள் தாம் பொதுசேவை ஏற்கும் போது சேர்த்துக்கொள்வதாய்க் கூறினார். எனது விலாசமும் கொடுத்தேன். இது நிகழ்ந்தது 1951 ம் ஆண்டு.

1952 ம் ஆண்டில் தேதி ஞாபகமில்லை. சுவாமிஜி அவர்கள் என்னை ஸ்ரீராமகிருஷ்ண குடில் சேவைக்காக எடுத்துக் கொள்வதாய் எழுதிய கடிதத்தின் சாராம்சம்.

" அன்புள்ள ராமமூர்த்தி!

உங்களுக்கு ஓர் இடம் கிடைத்து அதில் திருப்தி ஏற்பட்டிருந்தால் மாற்ற வேண்டியதில்லை. இல்லையேல் உங்களிடம் நேரில் கூறியபடி குடிலில் சேர முதல் சந்தர்ப்பம் உங்களுக்கு அளிக்கப்படுகிறது. இங்கு வருமுன் கடிதத்திலுள்ள விஷயங்களை கவனிக்கவும்.

இங்கு ஆண்டான் அடிமை இல்லை. சகோதரபாவம் தான். குரு சிஷ்ய முறை இல்லை. குருவும் (ஸ்ரீராமகிருஷ்ணர்) தெய்வமும் அவரேதான். ஆரம்பத்தில் சமையல் வேலை. பொதுவேலை ஏற்கும்போது சமையலுக்கென்று ஒரு நபர் நியமிக்கப்படுவார்.

யாரோ மனிதருக்கு சமைக்கிறோம் என்ற எண்ணமின்றி பிரம்மத்துக்கு அர்ப்பணம் செய்யும் நைவேத்தியம் என்று எண்ண வேண்டும். கூட்டுதல், மெழுகுதல் எல்லாவேலைகளையும் ஆண்டவன் பணி என எண்ண வேண்டும்.ஆரம்பத்தில் ஏற்படும் சோம்பல், அகங்காரம் ஆகியவைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும். குருமகராஜ் அவர்களுக்கு அர்ப்பணம் செய்த வாழ்வாக அமையவேண்டும்.

முடிவான ஒன்றாவது ஆன்மீக வாழ்க்கை என்பது கூரிய கத்தி முனையின் மேல் நடப்பதற்கு ஒப்பாகும்.

நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள்:

1. ஒரு நாள் காலையில் கூட்டும்போது கையில் வைத்திருந்த விளக்கின் கண்ணாடி சுவரில் பட்டு உடைந்தது. தயக்கத்துடன் சுவாமிஜி அவர்களிடம் கூறினேன்.சுவாமிஜி அவர்கள் " உங்களுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லையே? " என்று பரிவுடன் கேட்டார்.

2. " 40, 60 நபர்கள் இருந்தாலும், இரு நபர்கள் மட்டும் இருந்தாலும் காரியங்கள் ஒரே மாதிரி தான் நிகழ வேண்டும். பெரும் கூட்டங்களில் நிகழ்ச்சிகள் சுறுசுறுப்புடன் ஒழுங்கு கிரமமாக நிகழ்வது போன்றே நம் இருவர் வாழ்க்கை முறையும் காலை துயில் எழுதல் முதல் இரவு துயிலும் வரையிலும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுடன் நிகழ வேண்டும்." என அறிவுறுத்துவார்கள்.

3. " பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்' என்பது போல சுவாமிஜி அவர்களுடன் சேர்ந்த கூட்டுறவால் 1952 மே மாதம் முதல் 2 வருடம் 9 மாதங்கள் குடிலில் வாழ்ந்தேன். தினசரி அதிகாலை 3.45 மணிக்கு சோம்பலின்றி சுறுசுறுப்புடன் எவ்வித தயக்கமோ சுணக்கமோயின்றி தவறாமல் துயில் எழுந்து விடுவேன். இந்த 2 ¾வருடங்களில் அதிகாலை 3.45 மணிக்கு துயில் எழாத நாட்கள் 4 அல்லது 5 நாட்கள் மட்டுமே இருக்கும். அதுவும் அந்த நாட்களில் சாப்பிட்ட அபரிமித உணவினால்தான்.

4. என் விவேக வைராக்யக் குறைவால் 1955 ல் மனமின்றி நானாகவே குடிலினின்று வெளியேறினேன். பின் 1957 டிசம்பரில் மீண்டும் குடிலில் வந்து சேர்ந்தேன்.இப்போது ஆஸ்ரம பிரம்மசாரியாகவும்,பள்ளி ஆசிரியராகவும் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் ஆரம்பப்பள்ளியில் பணிபுரிந்தேன்.

5. முதல்முறை ஆஸ்ரம வாழ்க்கையிலிருந்து விலகி, இரண்டாம் முறை சேர்ந்த வாழ்விலே யான் செய்துவரும் வேலைகள் அதிகமாக உள்ளதே என்று (ஆனால் உண்மையில் அதிகமேயில்லை) தயங்கி சுவாமிகளிடம் கூறியது உண்டு. அப்போது சுவாமிகள் " உங்களை வேலைகளை செய்யவே அழைக்கவில்லை. உங்கள் உடல் வாழ்க்கை சம்பந்தப்பட்ட உடற்கழிவு அகற்றல், பல் விளக்குதல், துணி துவைத்தல், குளித்தல், சாப்பிடுதல், தூங்குதல் போக மற்ற நேரங்களில் பூஜை ஜபம், தியானம், சாஸ்திரம் படித்தல் மட்டும் செய்யுங்களேன். ஆனால் அவ்வாறு ஆன்மீக சாதனைகளை செய்ய அவ்வளவு நேரம் முடியாமையால்தான் சிறுசிறு வேலைகளை செய்தல் வேண்டும்." என்று அன்புடன் கூறுவார்.

6. ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தில் ஆசிரியராய் பணிபுரிந்து வருகையில், குடில் மாணவர் சம்மந்தமான இதர பணிகளையும் செய்வேன். அதில் தயக்கம் காட்டும் போது சுவாமிஜி அவர்கள், ' 5 மணி நேரம் ஆசிரியர் பணி புரிந்து விட்டு மீதி 19 மணி நேரம் உங்கள் முழு இஷ்டப்படி சர்வ சுதந்திரமாய் நீங்களே திட்டமிட்டு வாழுங்கள்" எனக் கூறுவார்.

7. சில வேளைகளில் தவறு செய்த மாணவர்களை கண்டித்து அடிப்பதுண்டு.அப்போதெல்லாம் சுவாமிஜி அவர்கள், " கோபங் கொண்டு மாணவர்களை அடிக்காதீர்கள். அது சரியல்ல. மாணவன் திருந்த வேண்டுமென்ற எண்ணத்தில் கோபத்தை விலக்கி சலனமின்றி தண்டனை தரவேண்டும்." என மனதில் பதியுமாறு நிதானமாகக் கூறுவார்கள்.

8. என்னுள்ளே எழும்பலவித ஆசாபாசங்களால் மனவெறுப்பு ஏற்பட்டு, விவேக வைராக்கியமின்றி, குடிலை விட்டு விலக வேண்டும் என்று எனது எண்ணத்தை சுவாமிகளுடன் கூறும்போது, நட்டமரம் அசைந்து அசைந்து தான் உறுதிபெற வேண்டும். நம் போன்றவர்களுக்கு எவ்வித ஆத்மபந்தம்

வேண்டும். இல்லையேல் ஒன்று விட்டு ஒரு கஷ்டம் வந்து கொண்டேதான் இருக்கும் என்று விளக்கி புத்திமதிகள் கூறுவார்.

9. சுவாமிஜியும் யானும் மட்டும் குடிலில் இருந்து வரும் போது யான் சமையல் பணி செய்து வந்தேன். சுவாமிஜி அவர்கள் நித்திய மதிய பூஜை புரிந்து வந்தார். ஆத்ம கடமை முதலில், பின்தான் பணம் என்பது சுவாமிஜியின் கொள்கை.

10. நானும் சுவாமிஜியும் தனித்திருந்த போது ஒரு பையன் சமையல் வேலை செய்து வந்தான். அவனும் விலகி விட்டான். திருப்பராய்த்துறை பாலகிருஷ்ணன் செட்டியார் அவர்கள் வீட்டிலிருந்து எங்களுக்கு உணவு வந்துவிடும். இதைக்குறித்து சுவாமிஜி அவர்கள்," இதைவிட உயர்ந்தது பிரம்மசாரி ஒருவர் சமைத்ததை சாப்பிடுவது தான் சிறந்தது. அதுவே நியதி என என்னிடம் கூறியுள்ளார்கள்.

11. சுவாமிஜி அவர்கள் நிதிவசூலுக்காக இலங்கைக்கு சென்றார்கள். அங்கிருந்து கடிதம் எழுதும் போது குடில் குழந்தைகள் சச்சிதானந்த சொரூபம் என குறிப்பிடுவார்கள். தாம் அங்கு உணவு உண்ணும் முறையைப்பற்றி, அரைவயிறு உணவு, கால் வயிறு தண்ணீர். மீதி கால் வயிறு காலியாகவும் இருக்க வேண்டும் என கூறியுள்ளார்கள்.

12. மடத்தைச் சார்ந்த துறவிகள் வெளியே சென்று திரும்பி வரும் வரையில் மேற்கொள்ளும் பிரயாணம் ஓர் ஒழுங்கான திட்டமிட்டதாக இருக்க வேண்டும் என்பார்கள் சுவாமிஜி அவர்கள். விழாக்களில் 100 பேர்களுக்கு தேவையான வசதிகள் இருந்து 101 வது நபர் வந்தால் அந்த ஒரு நபருக்காகவே உபரிவசதிகளை முறையாக செய்ய வேண்டும் என்பார்.

13. தபால் அலுவலகத்திலிருந்து வரும் அனைத்து தபால்கள், M.O. க்களை நான் கையொப்பமிட்டு பெறலாம் என்ற அனுமதியை எனக்கு கொடுத்திருந்தார். பிரம்மசாரிக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.

14. ¼ , ½ , முழு ஆண்டு விடுமுறையின் போது மதுரை பாரதி ஆஸ்ரமம் சென்று சுப்பு என்ற பிரம்மசாரியை நான் பார்த்து வருவதற்கும் எனக்கு சுவாமிஜி அவர்கள் சலுகை கொடுத்தார். எனது பாழ்மனம் குடிலில் இருக்க என்னை விடவில்லை. 1959 ல் யான் குடிலைவிட்டு வெளியேறினேன். ஆனால் இன்றும் என்றும் அவரது நினைவு என் மனதில் பசுமையாக இருக்கும்.

ஓ–ம் பிரம்மசாரி ராமமூர்த்தி
21.2.2001

குடில் சுவாமிகள் திரு. இராமசாமி அடிகளார்

திரு. மு. கிருட்டிணன் ஐ.ஏ.எஸ்(ஓய்வு)
தலைவர், தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம், குன்றத்தூர், சென்னை

வணக்கம் பல. வாழ்க நலமுடன்

நமது குடில் சுவாமிகள் திரு. இராமசாமி அடிகளாரை முதன் முதலில் 1962 ல் நமது அருள்திரு. டாக்டர் கிருபானந்த வாரியார் சுவாமிகளுடன் ஆரணியில் அடியேன் தாசில்தாராக இருந்த போது 1962 ல் சந்தித்தேன்.

அவருடைய எளிமையான தோற்றமும் வெண்மையான தூய கதராடையும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. அடியேன் வடலூர் வள்ளல் அருட்பிரகாச வள்ளலாரை பார்க்கவில்லை. அவர் படத்தைத்தான் பார்த்திருந்தேன். அவரை நம் அடிகளாராகப் பார்த்தேன்.

பிறகு அடியேன் நாகப்பட்டினத்தில் துணை மாவட்ட ஆட்சியாளராகப் பணிபுரிந்த போது கிருபானந்த வாரியார் சுவாமிகளுடன் பார்த்தேன். அடிகளார் அரசு ஆணை பெற்று பஞ்சாயத்துக்களிலிருந்தும்,பஞ்சாயத்து ஒன்றியங்களிலிருந்தும் நன்கொடை தொகைகளை வசூல் செய்ய வந்திருந்தார். நமது இல்லத்தில் ஓரிரு நாட்கள் தங்கியிருந்தார்.

குடில் ஆண்டு விழாக்களில் சில ஆண்டுகள் வந்து கலந்து கொண்டேன். வாரியார் சுவாமிகளும் கலந்து கொண்டார்கள். எனது பணி அலுவல் காரணமாக குடில் எதிரிலுள்ள விருந்தினர் இல்லத்தில் தங்கியிருக்கிறேன். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டுள்ளேன். ஒரு முறை தலயாத்திரையின் போது யாத்திரை அன்பர்களுடன் குடில் சுவாமிகள் காட்டிய பரிவும் உபசரிப்பும் விவரிக்க இயலாது. வாரியார் சுவாமிகள் மறைந்த பிறகும் ஓரிரு ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். குடிலின் விருந்தினர் இல்லத்தில் வாரியார் சுவாமிகளுடன் நானும் தங்கியிருந்தேன். வாரியார் சுவாமிகளுடன் அவர் காட்டிய அன்பும் பக்தியும் நன்றியுணர்ச்சியும் விவரிக்க இயலாதது. வாரியார் சுவாமிகளும் நம் அடிகளாரிடம் காட்டிய பரிவும் மரியாதையும் தெய்வத்தன்மை மிகுந்தது.

அடியேன் குடிலில் தங்கியிருந்த போது, அவரது நிர்வாகத் திறமையையும் குடிலின் வளர்ச்சிக்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சியையும், குடிலின் கல்வித் துறையில் காணப்பட்ட மேம்பாட்டையும், மாணவர்களின் ஒழுங்கு முறையும், அவர்கள் காட்டிய பண்பும் பணிவும் அடிகளாரிடம் விடுதி மாணவர்கள் காட்டிய பணிவும் அன்பும் பக்தியும் கொண்டு வாழ்ந்து முறையும் போற்றுதலுக்கு உரியதாயிருந்தது. குடிலில் படித்து முடித்தவர்களுக்கு (சில பேர்) குடிலிலே பல பணிகளையும் தொழில்களையும் உண்டாக்கி அவர்களுடைய வாழ்க்கைக்கும் உதவிய அடிகளாரின் செயல் திறமையை பாராட்ட வார்த்தைகள் போதாது.

ஒரு முறை ஒரு தல யாத்திரையின் போது அடியார்களுடன் அங்கு

வந்தபோது, சுவாமிகள் அடியேனை ஆலிங்கனம் செய்து வாழ்த்தினார்கள். உடன் வந்திருந்தவர்கள் ஆச்சரியத்துடன் மெய் மறந்து பார்த்து அடிகளாரை வணங்கினார்கள். அடியேனையும் வெகுவாகப் பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சி இன்று வரை என் மனதில் பசுமையாக உள்ளது. என்றும் நிலைபெற்று அவருடைய நினைவை மறக்காமல் இருக்கச் செய்துள்ளது.

குடிலும் கல்வி நிறுவனங்களும் அவர் தொண்டினை பல்லாண்டுகள் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்

ஓ–ம் மு. கிருட்டிணன்
23.2.2001

எனது எண்ணத்தை மாற்றிய சுவாமிஜியின் ஏற்றமிகு கடிதம்

எம். சிதம்பரம், சார்டர்டு அக்கவுண்டண்டு
விஜயராகவாச்சாரி ரோடு, தி.நகர், சென்னை

அன்பார்ந்த பிரம்மசாரி துரை அவர்களுக்கு! நமஸ்காரம். பகவானின் பேரருளால் குடில் குழந்தைகள் மற்றும் குடில்வாசிகள் அனைவரும் நலமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

குடில் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை ஒரு புத்தகமாக வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். குடிலுடன் கடந்த 45 ஆண்டுகளாக தொடர்புடையது எங்கள் குடும்பம்.அந்த இனிய நாட்களை எண்ணிப்பார்ப்பதே பேரானந்தமாக இருக்கிறது. எத்தனையோ சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள். எண்ண அலைகளில் மிதந்து வருகின்றன.

அவற்றில் ஒன்றை மட்டும் இங்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன். இந் நிகழ்ச்சியிலிருந்து சுவாமிகள் எந்த அளவிற்கு தன்னலம் கருதாமல் சேவை செய்தார்கள் என்பதோடு எந்த அளவிற்கு விளம்பரத்தை தவிர்த்தார்கள் என்பதும் தெரியவரும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய எளிமையை இந்நிகழ்ச்சி வலியுறுத்துகிறது.

எனது தந்தையார் நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள் குடிலின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்தவர்கள். குடிலின் வளர்ச்சியில் பெரிதும் அக்கரை கொண்டவர்கள். தந்தையார் காலமானபின் அவருடைய திருஉருவப்படம் ஒன்று சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. அது போன்ற படம் ஒன்றை குடிலிலும் திறந்து வைத்தால் பொருத்தமாக இருக்குமே என்று சாதாரணமாக எல்லோரும் நினைப்பது போல நானும் நினைத்து அவ்வாசையை ஒரு கடிதம் வாயிலாக சுவாமிகளுக்கு எழுதியிருந்தேன்,

கடிதம் எழுதி சுமார் ஒரு மாதம் கழித்து சுவாமிகள் எனக்கு பதில் போட்டிருந்தார்கள். அப்பதிலில் வாழ்க்கை என்றால் என்ன? கிடைப்பதற்கரிய

இம்மனித பிறவியை எப்படி நாம் விளம்பரத்திற்காக வீணடிக்கக்கூடாது. குடிலின் கோட்பாடுகள் என்ன? என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, தந்தையின் படத்தை குடிலில் வைப்பதற்கு அவசியம் இல்லை என்பதை நயம்பட உறுதியாக மனம் புண்படாதபடி எழுதியிருந்தார்கள்.

ஒரு பேருண்மையை எங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டிய சுவாமிகளின் கடிதத்தை இத்துடன் இணைத்திருக்கிறேன். இக்கடிதம் எங்களுக்கு மட்டுமல்லாது குடிலை தற்பொழுதும் மேலும் எதிர்காலத்திலும் நிர்வாகம் செய்யக்கூடிய பேறுபெற்ற தங்களைப் போன்ற துறவிகளுக்கும் ஒரு வழிகாட்டியாக திகழும் என்பது திண்ணம்.

அன்புடன்
ஓ–ம் எம். சிதம்பரம்
24.2.2001

ஸ்ரீராமகிருஷ்ண குடில்
திருப்பராய்த்துறை

அன்பார்ந்த சிதம்பரம்!

உங்கள் 8.4.93 தேதிய கடிதம் காலத்தில் வந்து சேர்ந்தது. மகிழ்ச்சி!

குடில் குழந்தைகள் நலம். அங்கும் அனைவரும் நலமாக இருப்பீர்கள்.

அம்மா அவர்களுடைய அனுமதியுடன் குடும்பம் கூட்டாக சேர்ந்து எழுதப் பெற்றது அக்கடிதம் என்பது தெரிய வருகிறது. இரண்டொரு வரிகளில் பதில் எழுதினால் அது திருப்திகரமாய் அமையாது. ஆகையால் சிறிது விவரமாகவே இக்கடிதம் அமைந்திருக்கிறது.

குடில் உலகுக்கு அறிமுகமில்லாத ஆரம்ப காலத்தில் முதல் முதல் ஆண்டவனால் தவச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பெற்றவர் நங்கவரம் ஜமீன்தார். தம் காரில் தம்மை போன்ற ஜமீன்தார், பிரமுகர்கள், மைசூர், கொல்லங்கோடு, திருவனந்தபுரம் ராஜாக்களிடமெல்லாம் அழைத்துச் சென்று நன்கொடை வசூல் செய்து, நிலம் வாங்கி ஆரம்பக் கட்டடம் குருகுலத்தை கட்டி முடிக்கப்பெற்றது அவர் மூலம் தான். குடிலுக்கு கார் வாங்கும் வரை சில வருடங்கள் தமது காரை தமது பெட்ரோல் செலவுடன் பல இடங்களுக்கு அடிக்கடி போய் வருவதற்கு வழங்கியவர்.

குடில் சுவாமியின் வெங்கல உருவச்சிலை ஒன்றை தமது பொருட்செலவில் தயாரித்து குடிலின் இரு பாலத்திற்கு இடையேயுள்ள கிழபுற பூங்காவில் வைக்க வேண்டும் என்று அவர் விருப்பப்பட, அதற்கு நயம்பட மறுப்புக் கூற எவ்வளவு சொல்லியும் திருப்தியடையாமல் சுமார் 6 மாத காலம் கோபித்துக் கொண்டு குடில்பக்கம் வருவதையே நிறுத்தி விட்டார். அவர்தான் ஆண்டவனால்அனுப்பி வைக்கப்பெற்ற இரண்டாமவர் கலெக்டர் ஐயாவை ஆஸ்ரமத்திற்கு அழைத்து வந்து அறிமுகப் படுத்தி வைத்தார்.

ஜமீன்தார் காலமானவுடன் அவருடைய குடும்பத்தினர் குடிலில் அவருடைய படத்தை பெரிய அளவில் வைக்கவேண்டும் என்று கூறினர். அதற்கு அவர்களுக்கு என்ன பதில் கிடைத்திருக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

கலெக்டர் ஐயா காலமானபின் குடும்பத்தினர் அவரது வரலாற்று நூல் ஒன்று வெளியிட்டு பெரிய படத்திறப்பு விழாவும் தஞ்சையில் செய்தார்கள். அவர்களும் குடிலில் படம் வைக்க பேச்செடுத்தார்கள். அவர்களுக்கும் என்ன பதில் கிடைத்திருக்கும்?

சரி.. இதென்ன உலக நடைமுறைக்கு ஒத்ததாக தெரியவில்லையே! ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியில் பெரியஅளவில் ஈடுபட்ட ஒரு பிரமுகரின் படத்தை அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு விழா வைத்து திறந்து வைப்பது தான் சாதாரண உலக நடைமுறையாக இருந்து வருகிறது. ஆனால் குடில் நடைமுறை மாறாக இருக்கிறதே.

ஆன்மீக நெறிமுறைகள் வெறும் பேச்சளவில் நில்லாது சூட்சும உணர்வுடன் கலந்து அனுபவிக்க வேண்டும். இவ்வுலகில் ஒருவர் செய்யும் நற்காரியத்திற்கு அதற்குரிய பரிசை இங்கேயே பெற்றுவிட்டால் வரவு செலவு நேராய் விட்டது. அருளுலகத்திற்கு மிச்சம் ஒன்றுமில்லை. இத்தகைய கோட்பாட்டில் நம்பிக்கையுடையது மட்டுமல்ல குடில்! திடமான உறுதி கொண்டிருப்பது குடில்!

ஐயா அவர்களுடன் அம்மா அவர்களும் குடிலுக்கு வரும்பொழுது சில சமயம் " குடிலில் எல்லாக்கட்டடங்களுக்கும் எழுத்துக்கள் பதிந்திருக்கிறது. அதில் எங்கு பார்த்தாலும் கவர்னர்கள், மந்திரிகள் மற்றவர்கள் பெயர் இருக்கிறதே தவிர சுவாமியினுடைய பெயரை ஒரு இடத்திலும் கூடக்காணவில்லையே! என்று கேட்பார்கள். எதிர்காலத்தில் பெயர், உருவம் எல்லாமே மறைந்து விடும்.. மறந்து விடும். குடிலை நோக்கி வெளியில் அமைந்துள்ள பகவான் சிலையே சாட்சியாக காட்சி தரும்.

நவரத்தினக்கற்களால் அடுப்பமைத்து தங்கப்பாத்திரத்தில் பன்னீர் விட்டு, அடுப்பேற்றி சந்தனக்கட்டைகளால் நெருப்பு மூட்டி அதில் சமைத்ததோ கேழ்வரகுக் கூழ்!.

பெறுதற்கரிய மானுடப்பிறவியை பெற்று அதை அற்ப மகிழ்ச்சிக்காக செலவழிக்கக்கூடாது.

குடிலுக்கு தொண்டாற்றிய மெய்யன்பர்களுக்கும் " மரணமிலாப் பெருவாழ்வு" கிட்ட வேண்டும் என்பதே குடிலின் அருளார்ந்த பெருநோக்கம்!

அம்மா அவர்களுக்கு அன்பு. நமஸ்காரம்

அனைவருக்கும் அன்பு.

திருவருள் துணை

அன்புள்ள

ஓ–ம் பிரம்மசாரி ராமசுவாமி

நான் சந்தித்த பெரிய மகான்

திரு. பெ. அங்கமுத்து, சிறுகமணி பஞ்சாயத்தின் முன்னாள் உபதலைவரும், பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலையில் கரும்பு ஆய்வாளராகவும், கரும்பு கணக்கராகவும் பணிபுரிந்த குடில் அன்பர்.

நமஸ்காரம்!

தாங்கள் எழுதிய 7.2.2001 தேதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். அதில் சுவாமிகளிடம் நெருங்கிப் பழகியவர் என்ற முறையிலும் அவரிடம் நான் ஈடுபாடு கொண்டிருந்தவர் என்ற முறையில் ஏதாவது சுவையான நிகழ்ச்சிகள் இருந்தால் எழுதியனுப்புமாறு தாங்கள் கேட்டிருந்தீர்கள். அவை எனக்கு கிடைத்த மாபெரும் பேறாக நான் கருதுகிறேன்.

சுவாமிஜியைப் பற்றி ஓரிரு விஷயங்களை, தாங்கள் வெளியிட உள்ள சுவாமிஜியின் வாழ்க்கை வரலாற்று நூலில் பிரசுரிக்க அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நமது நாடு 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் தேதி சுதந்திரம் அடைந்தது. பொதுத்தேர்தல் நடந்தது. அதில் தமிழ்நாட்டுக்கு பெருந்தலைவர் கு. காமராஜர் அவர்கள் முதன்மந்திரியாக பதவியேற்றார்.

திரு. சுவாமிஜி அவர்களும், திரு. கிருபானந்த வாரியாரும், திரு. கு. காமராஜை சந்தித்து, குடிலின் அனாதை ஆஸ்ரமம் தன்மை பற்றி கூறினார்கள். அதனால் முதல் மந்திரி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள கிராம பஞ்சாயத்து, மேஜர் பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி, கார்ப்பரேசன் ஆகியவைகள் குடிலுக்கு நன்கொடை வழங்கலாம் என்று ஒரு அரசாணையை வெளியிட்டார்கள்.

அது சமயம் நான் சிறுகமணி பஞ்சாயத்தின் உபதலைவராகவும் திரு. பெ. மருதப்பிள்ளை அவர்கள் தலைவராகவும் பதவி வகித்து வந்தோம். ஒரு நாள் சுவாமிஜியும் நங்கவரம் பண்ணை திரு. என்.ஏ. ரங்கநாதய்யரும் எங்கள் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு வந்தார்கள். அப்போது தான் சுவாமிஜி அவர்களை முதன்முறையாக நேரில் நான் சந்தித்து, பழக ஒரு வாய்ப்பு கிடைத்தது.

அவர்கள் சொன்னார்கள் " நாங்கள் குடில் அனாதை ஆஸ்ரமத்திலிருந்து வருகிறோம். முதன்மந்திரி அவர்கள் கொடுத்திருந்த ஆணை சுற்றறிக்கை ஒன்றை எங்களிடம் கொடுத்தார்கள். அதில் மேலே குறிப்பிட்டவாறு கிராமப் பஞ்சாயத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு வருடமும் ரூ 50/= குடிலுக்கு நிதி வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நாங்கள் G.O. நெம்பரின் அடிப்படையில் உடனே காசோலை சுவாமிஜியிடம் கொடுத்துவிட்டு இனிமேல் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட மாதத்தில் காசோலையை அனுப்பி விடுகிறோம் என்று கூறினோம். நாளடைவில் குடில் மூன்று குழந்தைகளிலிருந்து முன்னூறு குழந்தைகளின்

காப்பகமாக இன்று வளர்ந்திருப்பது பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதன் பிறகு ஆண்டு விழா ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாத கடைசி ஞாயிற்றுக்கிழமை கொண்டாட சுவாமிஜி முடிவு செய்து, டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் என்னைப் போன்றவர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தி இன்னின்ன வகையில் விழாவை கொண்டாட வேண்டும் என்று பேசி முடிவு செய்ததாக தீர்மானிக்கப்பட்டது. அதன்படி விழா நடைபெறும்.

அதன் பிரகாரம் நடைபெற்ற சமயம் சர்க்காரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை சுவாமிஜிக்கு வந்ததாகவும் அதில் நிர்வாகத்திற்கு ஆயுள் மெம்பர்கள் 25 பேர்கள் சேர்க்க வேண்டும். ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ 25 உறுப்பினர் சந்தாவாக வசூலிக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆகவே உங்களை எல்லாம் ஆயுள் உறுப்பினர்களாக சேர்க்க விரும்புகிறேன். என்றார்கள் சுவாமிஜி. அதற்கு நாங்கள் எல்லோரும் ஆமோதித்து இன்று முதல் ஆயுள் உறுப்பினராக இருந்து வருகிறோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

குடில் சுவாமிஜி அவர்கள் கொள்கையிலும் பெருந்தன்மையும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அவருக்கிருந்த பக்தியையும் கண்டு நாம் அவரை ஒரு பெரிய மகானாகவே காண்கிறோம். இவைகளை விளக்க ஓரிரு உதாரணங்களை மட்டும் கூறி இக்கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

குடிலின் முன்னேற்றத்திற்காக தாப்பா ரெட்டியார் என்ற ஒரு பெரியவர் பேருந்து ஒன்றை நன்கொடையாக வழங்கியிருந்தார். அப்பேருந்திற்கு திருச்சி மத்திய பேருந்து நிலையத்துக்கும் பஞ்சபட்டிக்கும் இடையே ஓடுவதற்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பேருந்தில் ஒரு குறிப்பிட்ட நபர்கள்தான் (எண்ணிக்கையில்) பிரயாணம் செய்யலாம் என்ற விதி இருந்து வந்தது.

அன்றையிலிருந்து குடில் பேருந்தில் அதிகப்படி டிக்கட் ஏற்றுவதில்லை என்று முடிவு செய்தார்கள். ஓட்டுனருக்கும் நடத்துனருக்கும் தெரிவித்து விட்டார்கள். மேற்படி பேருந்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இது ஒரு பிரசார வாகனமாகவும் பயன்பட்டது. இதற்கிடையில் நான் பஞ்சாயத்திலிருந்து விலகி பின்னர் காவேரி சர்க்கரை ஆலையில் கரும்பு உதவி ஆய்வாளராகவும் பின் ஆலை காரியாலயத்தில் கரும்பு கணக்கராகவும் பணிபுரிந்து வந்தேன்.

ஒரு நாள் மாலை 4 மணி அளவில் தற்சமயம் குடிலில் ஓட்டுனராக பணிபுரியும் ரெங்கராஜ் அவர்களும், மானேஜராக இருக்கும் திரு. சங்கர நாராயணன் அவர்களும் ஆலையில் நான் பணிபுரியும் இடத்திற்கு வந்தார்கள். நான் அவர்களை வரவேற்று விவரம் கேட்டேன். அதற்கு அவர்கள் வள்ளுவர் நகர் அருகில் நம் பேருந்தில் ஒரு ஆடு அடிபட்டுவிட்டது. அதனால் உங்களை அழைத்துக் கொண்டு போய் சம்மந்தப்பட்டவர்களுடன் பேசி அவர்கள் கேட்கும் நஷ்ட ஈடு தொகையை கொடுத்துவிட்டு செல்லலாம் எனக் கூறினார்கள்.

அதற்கு நான் சொன்னேன்,“ பொது ரஸ்தாவில் ஆடு மாடுகள் சேதப்பட்டாலோ அடிபட்டாலோ பேருந்துக்காரர்கள் ஒன்றும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டாமே” என்றேன். அதற்கு அவர்கள் சுவாமிஜிக்கு அது பிடிக்கவில்லை. “ஆட்டின் சொந்தக்காரர் ஏழையாக இருக்கலாம். அதைக் கொண்டு அவர் ஜீவனம் செய்பவர்களாக இருக்கலாம். ஆகவே நாம் அதற்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது” என்று சொன்னார்கள் என்றார்கள்.

உடன் நான் என் பணி மேலாளாரிடம் அனுமதி பெற்று அவர்களுடன் மேலே குறிப்பிட்ட ஆடு அடிபட்ட இடத்தில் வந்து பார்த்தோம். அடிபட்டு இறந்து கிடந்த ஆடும் அதன் உரிமையாளரும் இருந்தார்கள். நான் அதன் உரிமையாளரை பார்த்து விசாரித்து பார்க்கும்போது எனக்கு அறிமுகமானவராக இருந்தார். நான் கேட்டதற்கு நீங்கள் பார்த்து கொடுங்கள் என்றார். பிறகு குடில் மானேஜரும் நானும் பேசி ஒரு தொகையை முடிவு செய்து அந்த ஆட்டின் உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு சென்றோம்.

மேலும் ஒரு மறக்க முடியாத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அது குடில் பேருந்து பஞ்சப்பட்டியிலிருந்து திருச்சிக்கு போய்க் கொண்டிருந்த போது நிறைமாத கர்ப்பிணியும் அவருடைய தாயாரும் மருத்துவ மனைக்குப் போக பேருந்தை நிறுத்தினார்கள். அது சமயம் பேருந்தில் குறிப்பிட்ட டிக்கட் எல்லாம் பூர்த்தியாகியிருந்தது. ஓவர்லோடு ஏற்றக்கூடாது என்பது சுவாமிஜியின் கட்டளை. என்ன செய்வது? ஆபத்துக்கு பாவமில்லை என்பதால் சுவாமிஜியிடம் கூறிக் கொள்ளலாம் என்று அவர்களை பேருந்தில் ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வழியில் மண்டல போக்குவரத்து அதிகாரி பேருந்தை நிறுத்தி சோதனையிட்டதில் இரண்டு டிக்கட் அதிகமாக இருப்பதாகவும் விதி முறையை மீறிவிட்டதாகவும் கூறி பேருந்து ஓட்டுநர் நடத்துனர் இருவரின் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். இந்த விவரத்தை சுவாமிஜியிடம் நடத்துனர், ஓட்டுனர் இருவரும் கூறியிருக்கிறார்கள்.

மறுநாள் சுவாமிஜி அவர்கள் மேற்படி அதிகாரியை போய் பார்த்திருக்கிறார்கள். அந்த அதிகாரி “உங்கள் வண்டியில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் இரண்டு டிக்கட் ஏற்றப்பட்டிருந்தது. அதனால்தான் நடவடிக்கை எடுத்தேன். அதற்குண்டான அபராதத்தை கட்டி விடுங்கள்” என்று கூறியிருக்கிறார்.

அதற்கு சுவாமிகள் இந்த குடில் பேருந்து ஒரு அனாதை ஆஸ்ரமத்தின் சொத்து. ஏழைகளுக்காகவும் அனாதைகளுக்காகவும் செயல்பட்டு வருகிறது. எங்கள் பணியாளர்கள் நல்ல நேர்மையானவர்கள். நல்ல மனிதாபிமானத்துடன் செயல்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த நிறைமாத கர்ப்பிணியையும் அவருடைய தாயாரையும் அழைத்துக் கொண்டு போயிராவிட்டால்

அவர்களுடைய கதி என்னவாகியிருக்கும் என்பதை சற்று சிந்தித்து பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் அந்த அதிகாரி உடன்படவோ போட்ட கேஸை வாபஸ் வாங்கவோ சம்மதிக்கவில்லை.

ஆகவே சுவாமிகள் மிக மனவேதனையுடன் சரி அபராதத்தை கட்டி விடுகிறேன். அத்துடன் ஆஸ்ரமத்தின் குடில் பேருந்து போக்குவரத்து உரிமையையும் விட்டு விடுகிறேன் என்று கூறிவிட்டு வந்து விட்டார்கள்.

இவை நடந்து இரண்டொரு நாளில் குடில் பேருந்து இயக்கப்படாததால் நான் குடிலுக்கு சென்று சுவாமிஜி அவர்களை சந்தித்தேன். இது பற்றிய விவரம் கேட்டதற்கு மேலே கண்ட விவரங்களைக் கூறினார்.

எனக்கு அவரைப் பற்றி ஏற்கெனவே இருந்த மதிப்பை விட பன்மடங்கு மதிப்பும் பக்தியும் கொண்ட பலமடங்கு உயர்ந்தவராகவே தோன்றினார். வாழ்க அவர் நாமம். வளர்க அவர் ஸ்தாபித்த ஸ்தாபனம்.

ஓம் ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

ஒ–ம் பெ. அங்கமுத்து
காவல்காரபாளையம்
24–2–2001

மக்கள் தலைவர் காமராஜரின் மனதைத் தொட்ட குடில் சுவாமிகள்

சி. சரவணபெருமாள்,
முன்னாள் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலும்
குடிலின் நீண்ட நாளைய நண்பரும், மெய்யன்பரும் ஆவார்

நான் 1967 – 69 ம் ஆண்டுகளில் திருச்சி ரூரல் காவல்துறை உதவி கண்காணிப்பாளராக பணியாற்றி வந்தேன். அந்த சரகத்தில் திருப்பராய்த்துறை கிராமத்தில் திருச்சி – கரூர் நெடுஞ்சாலைக்கு வடக்கேயும், காவிரிநதிக்கு தென்புறமும் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண குடிலின் அமைப்பிலும், அதன் உயர்ந்த பணியிலும் ஈர்க்கப்பட்டேன்.

ஐம்பத்தோரு ஆண்டுகளுக்கு முன்னால் தனது கையில் ஒரு பைசாவோ, ஒரு சதுர அடி நிலமோ கூட இல்லாத பிரம்மசாரி திரு. ராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஆல்போல் தழைத்து, 300க்கும் மேற்பட்ட திக்கற்ற குழந்தைகளைத் தத்தெடுத்து, தங்க இடம், உணவு, உடை, கல்வி மற்றும் வாழ்க்கைக்கு உழைப்பு இன்றியமையாதது என்பதற்கேற்ப பயிற்சியையும் கொடுத்து அவர்கள் பத்தாம் வகுப்பு (S.S.L.C) தேறியவுடன், அவர்களுக்கு குடில் செலவிலேயே ஐ.டி.ஐ தொழிற்கல்வியும் தந்து, பின் அவர்களின்

வாழ்க்கையை தங்கள் சொந்த காலிலே நின்று ஆரம்பிக்க பணி செய்து வரும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் சிறப்பையும், அதனை தியாக உள்ளத்துடன் ஆரம்பித்து, ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் எளிமையுடனும் அதே சமயம் மன உறுதியுடனும் நிர்வகித்து, இன்று 7000 தென்னை மற்றும் மாமரங்கள் சூழ தொழிற்கூடம், கல்விக்கூடம், மாணவர்விடுதி, உணவுக்கூடம், பிரார்த்தனை மண்டபம் (பல லட்சக்கணக்கான ரூபாய் கொண்டுகட்டப்பட்டது) எல்லாம் அமைத்து தியாக மனமும், நேர்மையும், தொலைநோக்கு எண்ணமும் உழைப்பும் இருந்தால் இவ்வுலகில் வறுமையையும், திக்கற்ற குழந்தைகள் உள்ள நிலையையும் அறவே ஒழிக்க முடியும் என வழிகாட்டிய உத்தமர்தான் குடில் சுவாமிகள்.

நான் திருச்சியில் பல நிலைகளில் பணிபுரிந்த சமயம் குடிலுக்கு சுவாமிகளை பார்க்கச் சென்ற சமயங்களிலும் குடிலின் ஆரம்ப காலத்தையும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் அதற்கு துணை நின்றவர்களைப் பற்றியும் குடில் சுவாமிகள் என்னுடன் அளவளாவிப் பேசுவதுண்டு. அம்மாதிரி சந்தர்ப்பம் ஒன்றில் குடிலுக்கு எவ்வாறு காமராஜர் அவர்கள் உதவினார்கள் என்பதைத்தான் கீழே விவரித்துள்ளேன்.

1955 ம் ஆண்டு தமிழக முதல்வர் மாண்புமிகு காமராஜர் அவர்கள் கார் மூலம் திருச்சியிலிருந்து கரூர் நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் கார் திருப்பராய்த்துறை வந்த பொழுது காமராஜர் அருகிலிருந்த பழம்பெரும் காங்கிரஸ் தலைவர் தாப்பா ரெட்டியார் அவர்கள் முதல்வரிடம் “நாம் இந்த ஊரின் மேற்குபுறம் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு விஜயம் செய்யலாம். அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட திக்கற்ற குழந்தைகளுக்கு உணவு, உடை கொடுத்து கல்வி வழங்கி வருகிறார்கள். இயற்கை சூழலில் அமைந்துள்ள அந்தக் குழந்தைகளின் குடில் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சி தரும்” என்று கூற முதல்வரும் புன்முறுவலோடு அதை ஏற்றுக் கொண்டார்கள்.

தமிழக முதல்வர் தனது குழுவினருடன் எதிர்பாராத வகையில் ஸ்ரீஇராமகிருஷ்ண குடிலுக்கு வந்தவுடன் அதை நிறுவி பாதுகாத்து வந்த பிரம்மசாரி ஸ்ரீராமசாமி அவர்களுக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் பெரும் ஆச்சரியமான மகிழ்ச்சியை தந்தது. காவிரி ஆற்றுக்கும் ஒரு வாய்க்காலுக்கும் இடையே அமையப்பெற்ற, மரங்களாலும் மலர்களைத் தாங்கிய செடிகளாலும் உள்ள சூழ்நிலை காமராஜரை வியக்க வைத்தது. அவர் பொறுமையுடன் பள்ளிக்கட்டடம், மாணவர்கள் தங்குமிடம், மாணவர்களே சமைத்து உண்ணும் கட்டடம், மாணவர்களே பாதுகாத்து வளர்க்கப்பட்ட விவசாயம், மாட்டுத்தொழுவம் யாவற்றையும் சுற்றிப்பார்த்த பின் தனது குழுவினரிடம் “நாம் இங்கு சிறிது நேரம் தங்கி களைப்பாறி செல்லலாம்” என்று கூறியவாறு ஒரு நீண்ட பெஞ்சில் படுத்து ஓய்வெடுத்தார்கள்.

பின்னர் பிரம்மசாரி ராமசாமியிடம், " சுவாமி இந்த மாணவர்களின் உணவிற்கும் படிப்பிற்கும் ஆகும் செலவை எப்படி சமாளிக்கிறீர்கள்? எனக் கேட்டார். அதற்கு சுவாமி அவர்கள் "ஐயா, வருடா வருடம் மாவட்ட ஆட்சியாளர் மலையப்ப ஐயா, நீதிபதி மஹராஜ பிள்ளை, அவர்கள் உதவியுடன் மாநிலம் முழுவதும் ஊர் ஊராக வசூல் செய்துதான் செலவை சமாளிக்கிறோம். அரசாங்கத்தின் " மானியம் ஓரளவு கிடைக்கின்றது" என்றார்கள்.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த காமராஜர் " சுவாமி தாங்கள் நடத்தி வரும் இந்த உயர்ந்த செயலுக்கு ஏதாவது உதவி வேண்டுமெனில் பட்டணத்திற்கு வந்து என்னை பாருங்கள்" என்று கூறினார்கள். அருகிலிருந்த தாப்பா ரெட்டியார் மற்றும் மூத்த அதிகாரிகள் யாவருக்கும் ஒரே ஆச்சரியம். ஏனெனில் காமராஜர் அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்ற பின் யாராவது உதவி கேட்டால் " ஆகட்டும் பார்க்கலாம்" என்றுதான் சொல்வார்கள். ஆனால் குடில் சுவாமிகளின் எளிமையான தோற்றமும் அவர்களின் தியாக நோக்குள்ள பணியையும் காமராஜரை கவர்ந்து விட்டதால் தானாகவே "உங்களுக்கு உதவி வேண்டுமெனில் பட்டிணத்தில் வந்து பாருங்கள்" என்று கூறினார்கள் என்று வியந்தனர்.

ஒரு சில வாரங்களுக்கு பின் பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள் சென்னை சென்று, பஸ் பிடித்து முதல்வர் காமராஜரின் வீடு சென்றார்கள். சுவாமியை முகமலர்ந்து வரவேற்று " சுவாமி நான் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?" எனக் கேட்டார்கள்.

அதற்கு சுவாமிகள் " ஐயா, தற்சமயம் பொதுமக்கள்தான் குடிலுக்கு உதவுகிறார்கள். அரசு அறநிலையத்துறையின் கீழ் வரும் கோவில்கள் இதே மாதிரி ஸ்தல ஸ்தாபனத்திற்குட்பட்ட நகர மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவையும் குடிலுக்கு விரும்பினால் நன்கொடை தரலாம் என்று ஆணையிட்டால் உதவியாக இருக்கும்" என்று கூறினார்கள்.

ஒரு சில விநாடிகள் சிந்தித்த முதல்வர் " சரி சுவாமி நீங்கள் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. இராமசாமி படையாட்சி அவர்களைப் பாருங்கள். நான் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கிறேன்" என்று கூறி வழியனுப்பி வைத்தார்கள்.

மீண்டும் பஸ் பிடித்து சுவாமி அவர்கள் அமைச்சர் திரு. இராமசாமி அவர்களின் வீட்டை அடைந்த போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுவாமிகளை வாசலிலேயே காத்திருந்து வரவேற்றார்கள். சுவாமி அவர்கள் முதல்வருடன் பேசிய விவரங்களை அமைச்சரிடம் சொல்ல, அமைச்சர் அவர்கள், " நான் ஆவன செய்கிறேன். நீங்கள் திருப்தியுடன் ஊர் செல்லலாம்" என்று வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்கள்.

சுவாமி குடிலுக்கு திரும்பிய ஒரு வாரத்தில் அரசின் அரசாணை

அவர்களுக்கு வந்தது. அதில் திருச்சி மாவட்டத்திலுள்ள திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு கோவில்கள் ஸ்தல ஸ்தாபன அமைப்புகள், தாராள நிதியுதவி செய்யலாம் என்று அரசாணை கொடுக்கப்பட்டிருந்தது.

இது சுவாமி அவர்களை சந்தித்த நேரத்தில் என்னிடம் நேராக கூறி காமராஜரின் பண்பான உள்ளத்தை நெகிழ்ந்து பேசிய ஒரு சம்பவம்.

ஒ–ம் சி. சரவணப்பெருமாள்
24.2.2001

திருப்பராய்த்துறை குடில் நிறுவனர் சுவாமி அவர்கள்

எம்.எம். சந்திரகாசன் இ.ஆ.ப . (ஒய்வு)
அசோக் நகர், சென்னை – 83

இளம் பிராயத்திலேயே தாய் தந்தையரை இழந்து அனாதைக் குழந்தைகளாக, ஆதரவற்ற குழந்தைகளாக எண்ணற்றோர் தமிழ்நாட்டில் இருப்பதை உணர்ந்தார் நம் சுவாமி பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள்.

இத்தகையோரின் இன்னல்களைப் போக்கி அவர்களும் வையத்து வாழ்வாங்கு வாழச் செய்ய வேண்டும் என்ற ஒரு பெரு நோக்குடன், திருப்பராய்த்துறை காவிரிப்படுகையில் ஒரு பெரும் நிலப்பகுதியை தமிழக அரசிடமிருந்து பராதீனம் பெற்று (அலியனேஷன்) ஒரு குருகுலத்தை சுவாமி அவர்கள் நிறுவினார்கள். அந்த குருகுலத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்ற பெயரையும் சூட்டினார்கள். இதில் தாய் தந்தையரை இழந்த அனாதைக் குழந்தைகளை சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, உறைவிட வசதிகள் அளித்ததோடு, குருகுல வளாகத்திலேயே ஆரம்பப்பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றை நிறுவி இப்பிள்ளைகளுக்கு பள்ளியிறுதி வகுப்பு வரை கல்வி பெறுவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

சுவாமி அவர்கள் தனிமரமாகத்தான் குடிலை ஆரம்பித்தார்கள். அப்போது அவர்களிடம் எவ்வித பொருளாதார வசதியும் கிடையாது. தனிமரம் தோப்பாகாது என்பார்கள். ஆனால் அத்தனிமரத்தை சரிவரப் பாதுகாத்து வளர்த்தால் பின்பு அதனை தோப்பாகவும் மாற்றி அமைக்க முடியும் என்று தன் வாழ்நாளிலே நிரூபித்துக் காண்பித்தவர்கள் தான் நம் குடில் சுவாமி அவர்கள். அது போழ்து சுவாமி அவர்களின் அயராத உழைப்பிற்கும், சீரிய முயற்சிக்கும் உறுதுணையாக இரண்டு கண்கள் போலிருந்தவர்கள் இருவர். ஒருவர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். மற்றொருவர் மக்கள் கலெக்டர் திரு. ஆர். எஸ். மலையப்பன் என்ற மாமனிதர் ஆவார். இவர்கள் தன்னலமற்ற பொதுத் தொண்டில் அக்கரை கொண்ட, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி

பிறக்க தேவையான அனைத்தையும் செய்து கொடுப்பதில் ஆர்வம் கொண்ட இருபெரும் தவப்புதல்வர்கள் ஆவார்கள். இவ்விருவரும்

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க குடிலின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து பொருளாதார வசதிகளையும் தொடர்ந்து செய்து கொடுத்து வந்தனர். இப்பெரியோர்கள் அளித்து வந்த ஆக்கமும் ஊக்கமும் அன்றோ குடில் சுவாமி அவர்கள் குடில் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்து, குடிலின் சேவையை எல்லோரும் பாராட்டும் வண்ணம் சீரும் சிறப்போடும் நடத்த சாத்தியமாயிற்று.

பெருமதிப்பிற்குரிய திரு. ஆர். எஸ். மலையப்பன் அவர்கள் திருச்சி மாவட்ட ஆட்சியாளராக பணிபுரிந்த போது நான் குளித்தலை, மணப்பாறை ஆகிய ஊர்களில் உதவித் தாசில்தாராக பணிபுரியும் வாய்ப்பினை பெற்றிருந்தேன். பின் அரிமளம், அரவாக்குறிச்சி ஆகிய ஊர்களில் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையராக பணியாற்றி 1964 ம் ஆண்டு திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெற்று, திருநெல்வேலியில் பணியாற்றி வந்தேன்.

குடிலின் ஆரம்ப காலத்தில், அதனை சீராக நடத்துவதில் பொருளாதார நெருக்கடி இருந்து வந்தது. 1958 ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டு ஊரக வளர்ச்சித்திட்டங்கள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்ட காலகட்டத்தில் குடிலின் மகத்தான சேவையை ஊக்குவிக்கும் பொருட்டு பஞ்சாயத்துகளின் உபரிநிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையை குடிலுக்கு நன்கொடையாக தரலாம் என்ற தமிழக அரசு ஆணை பிறப்பித்திருந்தது. அந்த ஆணையை சிறப்புற செயல்படுத்த ஆர்வம் கொண்டிருந்த அப்போது அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த திரு. ஆர். எஸ். மலையப்பன் அவர்கள் குடில் சுவாமி அவர்களுடன் குடில் காரிலேயே மாவட்டங்கள் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பஞ்சாயத்துக்கள் நன்கொடை அளிக்க ஆண்டுதோறும் ஏற்பாடு செய்வதுண்டு.

அதன்படி 1964 ம் ஆண்டு நான் திருநெல்வேலி கோட்ட ஆட்சியாளராக பணிபுரிந்த போது, திரு ஆர். எஸ். மலையப்பன் அவர்கள் குடில் சுவாமி அவர்களுடன் என்னை திருநெல்வேலியில் சந்தித்தார்கள். நானும் மாவட்டங்கள் முழுவதிலும் நன்கொடை பெற தக்க ஏற்பாடுகள் செய்து கொடுத்தேன். அதிலிருந்து எனக்கும் குடில் சுவாமி அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

"பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர் கைவிடல்"

என்ற குறட்பாவின் கருத்தினை நன்குணர்ந்தவன் என்ற வகையில் நானும் குடில் சுவாமி அவர்களின் தொடர்பினை கைவிடாது தொடர்ந்து குடில்சேவையில் என்னையும் குடில் அன்பன் என்ற முறையில் ஈடுபடுத்திக் கொண்டேன்.

நான் குடும்பத்துடன் செல்லும் போதெல்லாம் குடிலுக்கு சென்று சுவாமி அவர்களைப் பார்த்து அன்னாரது ஆசியைப் பெறாமல் செல்வதில்லை. அது போல் சுவாமி அவர்கள் சென்னை வரும் போதெல்லாம் என் இல்லத்திற்கு வருகை தராமல் செல்ல மாட்டார்கள். ஒரு முறை கிருபானந்த வாரியார் சுவாமி அவர்களை என் இல்லத்திற்கு முன் அறிவிப்பின்றி அழைத்து வந்தார்கள். முதலில் திகைத்துப் போனோம். பின் ஒருவாறாக சமாளித்து நல்ல முறையில் உபசரிக்கும் வாய்ப்பையும் பெற்றேன். வாரியார் சுவாமி அவர்களும் எனது குடும்பத்தாருக்கு விபூதி அளித்து ஆசியையும் நல்கினார்கள். இம்மாதிரியாக குடில் சுவாமி அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மென்மேலும் வளர்ந்து கொண்டே வந்தது பற்றி அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்ச்சியடைவது உண்டு.

நானே சுவாமி அவர்களுடன் நெருங்கிப் பழகியதால் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டவர்கள் ஆனோம். ஆகையால் எந்தக் காரியமானாலும் மனம் விட்டுப் பேசும் வாய்ப்பு கிட்டியது. 1970 ம் ஆண்டு தஞ்சையில் மாவட்ட உணவுப்பொருள் வழங்கு அலுவலராக நான் பணிபுரிந்தேன். அப்போது தஞ்சையிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுமதிச்சீட்டு பெறாமல் நெல் எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை. சுவாமி அவர்கள் குடிலுக்கு தேவையான நெல்லை தஞ்சையில் வாங்கி லாரி மூலம் குடிலுக்கு எடுத்துச் செல்ல விண்ணப்பம் செய்திருந்தார்கள். சுவாமி அவர்கள் என்னிடம் நேரில் சொல்ல தயங்கினார்கள் எனக் கேள்விப்பட்டேன். உடனே நான் குடிலுக்குத் தேவையான தரமான நெல்லை அரசு நிர்ணயித்த விலையிலும், அதற்கு குறைந்த விலையிலும், நன்கொடையாகவும் பெறச் செய்து குடிலுக்கு அனுப்பி வைத்தேன். இதையறிந்த சுவாமி அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். நானும் மனநிறைவு கொண்டேன்.

நான் தஞ்சையில் மாவட்ட உணவுப்பொருள் வழங்கு அலுவலராக பணிபுரிந்த போதே திரு. ஆர். எஸ். மலையப்பன் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னாரது மறைவு குடிலுக்கு பேரிழப்பாயிற்று. குடில் சுவாமி அவர்கள் மனம் தளர்ந்து விட்டார்கள் போல எனக்குத் தோன்றியது. அன்னாரது குடில் பணியை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொன்ன பின்னர்தான் சுவாமி அவர்களுக்கு ஒரு தனித்தெம்பு ஏற்பட்டது. நான் 1971 ம் ஆண்டு சென்னைக்கு புரவலர் அன்பில் அமைச்சராக பதவி ஏற்றபின்

அன்னாருக்கு பதவி பெற்ற நேர்முக உதவியாளராக நியமிக்கப்பட்டேன். அது போழ்து நான் தாற்காலிகமாக இரண்டு மாதங்கள் விடுப்பில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு நான் குடில் சுவாமி அவர்களுடன் திரு. ஆர். எஸ். மலையப்பன் செய்து வந்தது போன்று எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். குடிலுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையை பெற்றுக் கொடுக்க முடிந்தது. அப்போது திரு. அன்பில் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பதவி வகித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஆண்டு முதல் பஞ்சாயத்து நிதியிலிருந்து நன்கொடை பெறும் வழக்கத்தை சுவாமி அவர்கள் நிறுத்திக் கொண்டார்கள். சுவாமி அவர்கள் முன்யோசனையுடன் குடிலின் காவிரிபடுகை பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளை நட்டு நன்கு பராமரித்து வந்தார்கள். அக்கன்றுகள் மரமாக வளர்ந்து இக்காலகட்டத்தில் காய்க்க ஆரம்பித்து விட்டன. அம்மரங்களிலிருந்து கிடைத்த தேங்காய்களை விற்பனை செய்வதின் மூலம் கிடைக்கும் வருமானம் குடில் செலவிற்கு போதுமானதாகிவிட்டது. இது சுவாமி அவர்களுக்கு நிலையான நிம்மதியையும் பெரும் மனநிறைவையும் அளித்தது.

இறுதியாக ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து இக்கட்டுரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். சுவாமி அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது குடில் காரிலேயே காலையில் புறப்பட்டு எந்நேரமாயினும் அன்றிரவே குடிலுக்குத் திரும்புவதை ஒரு நெறிமுறையாக கடைப்பிடித்து வந்தார்கள். ஆகவே அதிவேகமாக நூறு மைலுக்கு குறையாமல் காரை ஒட்டும்படி ஒட்டுனருக்கு கூறுவார்கள். நானும் சுவாமி அவர்களும் ஒரே நாளில் காலையில் குடிலில் இருந்து புறப்பட்டு திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, கோவில்பட்டி,திருநெல்வேலி, தென்காசி, பெரியகுளம், திண்டுக்கல் ஆகிய ஊர்களுக்கு சென்று கரூர், குளித்தலை வழியாக குடிலுக்கு விடியற்காலையில் திரும்பியிருக்கிறோம். இது போலவே சென்னைக்கும் சென்றிருக்கிறோம்.

கார் ஒட்டுனர் 100 மைல் வேகத்தில் காரை ஒட்டும் போது எனக்கு உள்ளூர பயமாகத்தானிருக்கும். ஆனால் சுவாமி அவர்களிடம் எப்படிச் சொல்வது என்ற அச்சம் எனக்கிருந்தது. ஒரு முறை கார் 100 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்த போது, சுவாமி அவர்களிடம் வேடிக்கையான முறையில் சொல்லிவிடலாம், ஒன்றும் சொல்ல மாட்டார்கள் என்று முடிவு செய்து, "சுவாமி நான் குடும்பஸ்தன். காரை 80 மைல் வேகத்தில் ஒட்டினால் போதும்" என்று சொல்லி விட்டேன். அதனைக் கேட்டவுடன் சுவாமி அவர்கள் சஞ்சலமடைந்தார்களா? இல்லையே! மாறாக அவருக்கே உரித்தான

புன்முறுவலுடன் "அப்படியா, ஐயா.. நெடுந்தொலைவு போக வேண்டுமல்லவா.. எல்லாவற்றிற்கும் திருவருள் துணை நிற்கும். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று மட்டும் சொல்லி என்னை சமாதானப்படுத்தி விட்டார்கள். நானும் சரியென்று சொன்னேனேயொழிய என்மனம் முழுமையாக சமாதானம் அடையவில்லை. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? எப்படியோ சுவாமி அவர்களும் என் முகபாவனையிலிருந்து நான் சமாதானமாகவில்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள். சற்று நேரம் கழித்து அவர்களே கார் ஓட்டுனரிடம் 80 மைல் வேகத்திற்கு மேல் காரை ஓட்ட வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சுவாமி அவர்களின் பெருந்தன்மையைப் பற்றி எண்ணி எண்ணி நான் வியப்பதுண்டு.

சுவாமி அவர்கள் அகத்தான் அமர்ந்து இனிது நோக்கி இன்சொல் இயம்பியும், அவர்கட்கே உரித்தான, மென்மைக் குரலில் புன்முறுவல் பூத்த முகத்துடன் இனிய கொங்குநாட்டுத் தமிழ்நடையைக் கையாண்டும் என்னுடன் மணிக்கணக்கில் உரையாடுவது உண்டு. எவ்வளவு நேரம் உரையாடியானாலும் சலிப்பே தோன்றாது. உரையாடும் போது அடிக்கடி 'ஐயா' என்ற சொல்லை சுவைதரும்படியான வகையில் உபயோகிப்பது அவர்கட்கு கைவந்த கலை. அத்துடன் அவர் தலை சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார்கள். குடில் முழுவதும் மா, தென்னை போன்ற மரங்கள் நிறைந்த தோப்பாகும். ஆயின் மரங்களிலிருந்து இலை, சருகுகள் அல்லவா தரையில் விழுந்து காட்சி அளிக்க வேண்டும். ஆனால் ஒரு சருகு கூட குடில் தரைப்பகுதியில் காண முடியாது. குடில் மாணவர்கள் மூலம் அன்றாடம் அப்போதைக்கப்போது சருகுகள் அகற்றப்பட்டு எந்த நேரத்திலும் சுத்தமாக காட்சியளிக்கும்.

குடிலுக்கு வருகை தரும் அன்பர்கள் அனைவரும் இதனைக்கண்டு வியந்து பாராட்டாமல் இருப்பதில்லை. இப்போது சுவாமி அவர்கள் அமரத்வம் அடைந்த நிலையிலும்கூட, அவரிடம் பயிற்சி பெற்ற பிரம்மசாரி துரை போன்ற இந்நாள் நிர்வாகிகளும் சுவாமி அவர்கள் உயிருடன் இருந்த போது, எந்த உன்னத நிலையில் குடில் நிர்வாகம் இருந்ததோ அந்நிலையிலிருந்து சிறிதளவுகூட நிர்வாகத்திறன் குறைவுபடவில்லை. குடில் ஆண்டு விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளை இன்றும் சிறப்புடன் நடத்தி வருவதே சுவாமி அவர்களின் நிர்வாகத்திறமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. சுவாமி அவர்கள் இன்று நம்மோடு இல்லையென்றாலும் அவர் புகழ் இந்நிலவுலகில் விண்ணும் மண்ணும் உள்ளவரை நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சுவாமி அவர்களுடன் நான் தொடர்பு கொண்டிருந்த பொன்னான நாட்களையும், அந்நாட்களில் நிகழ்ந்த நல்ல நிகழ்ச்சிகளையும், அன்னாரின் தன்னலமற்ற சேவையையும் என்னால் என்றும் மறக்க இயலாது. அதனினும் மேலாக உரையாடலின் போது அன்னாராது உள்ளத்திலிருந்து பிறந்த தூய்மையான வாய்மொழிச் சொற்களே எனது செவிகளில் என்றென்றும்

ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

வாழ்க குடில் நிர்வாகம்!

வளர்க குடிலின் சீரிய தொண்டு!

நிலைத்து நிற்க குடில் நிறுவனரின் புகழ்!

ஒ—ம் எம்.எம். சந்திரகாசன்
குடிலன்பன்
28.2.2001

வாழ்த்துக்களின் வாழ்த்துக்குரிய வானச் செல்வர்

பொறியாளர் அய்யூர் இ. அப்பாஸ் மந்திரி

"மேருவைச் சேர்ந்த காக்கையும் பொன்னிறமாம்" என்ற மூதுரைக்கிணங்க ஆன்மீகச் செல்வர்களது மேனி தங்க நிறத்தைப் பெறுகிறது என்ற உண்மையை உலகம் காந்தியடிகளிடம் கண்டது. அத்தகைய பொற்காட்சியை திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண குடிலின் நிறுவனர் தவப்பெருந்திரு பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாரிடம் நேரடியாக கண்ட நற்பேறு எனக்குக் கிடைத்தது.

திருப்பராய்த்துறையருகில் காவிரிப்பாசன அமைப்புப் பணியொன்றில் 1974 ம் ஆண்டுவாக்கில் ஈடுபட்டிருந்தபோது எனக்கும் என்னுடனிருந்த இளம் பொறியாளர்கள் திரு. மதியழகன் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் வீடு கிடைக்கவில்லை. நாங்கள் மட்டும் தங்குவதற்கு மூவருக்கும் சேர்த்து ஓர் அறை கூட அமையவில்லை. தங்குமிடம் வாய்க்காத அனாதைகள்!. இயல்பாகவே குடில் அடிகளாரிடம் ஏன் நாம் அடைக்கலம் ஆகக்கூடாது என்ற எண்ணம் எங்களிடம் பளிச்சிட்டது.

காவிரிக்குத் தெற்கேயுள்ள குடில் அலுவலகத்திற்குச் சென்றோம். அலுவலகம் மட்டுமா அது, பூங்கா! அதிலிருந்து சற்றுத் தொலைவில் ஒரு பொன் மின்னல் எங்கள் உள்ளங்களை பறித்தது. அந்த மின்னலுக்குரிய மலர்முகம் தெரிந்தது. அடிகளார் என்று உணர்ந்து கொண்டோம். நெருங்கி வந்ததும் நேரே வணக்கம் செலுத்தி அறிமுகம் செய்யலாம் என்று நாங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்த கணத்திற்குள், அப்பெருந்தகையாளர் எங்களுக்கு முந்தி வணக்கம் செலுத்திவிட்டார்கள் அடிகளார். இப்படி எங்களை ஆட்கொண்ட விதத்தில் திணறிப் போனோம். ஒருவாறு விடுபட்டு நன்றியுடன் கைகூப்பி எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். எங்கள் தேவையை சுருக்கமாகத் தெரிவித்தோம். புன்னகையுடன் ' இங்கேயே தனியாக அறை ஒன்று இருக்கிறது. தங்கிக் கொள்ளுங்கள். ஒரு தடை. வாடகை

கிடையாது." என்று அடிகளார் அறிவித்தார்கள். அப்பொழுதே குடிலின் குடும்பத்தில் உறுப்பினர்களாகிவிட்டது போல உணர்ந்து உருக்க மடைந்தோம். அன்றாடம் அந்திக்குப்பிறகு அடிகளாரிடம் பழகும் வாய்ப்பு கிடைத்தது. ஒவ்வொரு முறையும் முந்திச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கவனமுடன் ஆயத்தமாகி இருந்தாலும், முகமன் கூறுவதில் அவர்களே முந்திக் கொண்டு விடுவார்கள்.' எங்களுக்கு வெட்கமாய் இருக்கும்.

எங்களை இன்ப வியப்படையச் செய்த எத்தனையோ நிகழ்ச்சிகள்! நாங்கள் மூவரும் அடிகளாருடன் அமர்ந்து அவரது உரையமிர்தத்தை பருகிக் கொண்டிருந்த ஒரு நாள் பெருஞ்செல்வர்களும் பெயர் வாய்ந்தவர்களும் அடிகளாரை சந்திக்க வந்திருந்தினர். அடிகளாருக்கு முன்னால் பணிவுடன் நின்றனர். நாங்களோ மிரண்டுபோய் எழுந்திருக்க முயன்றோம். ஆனால் எங்களை அவ்வாறு செய்யவிடாமல் அடிகளார் அமர்த்தி விட்டார்கள். வந்த வள்ளல்கள் கணிசமான நன்கொடைகளை வழங்கிவிட்டு அடிகளாரிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள்.

" சுவாமிஜி அப்படி எங்களை அமர்த்திவிட்டீர்களே! நாங்களோ நன்கொடை வழங்குகிற நிலையில் இல்லாதவர்கள்" என்று எழுந்து நின்று தழுதழுத்தோம். அடிகளாரோ மீண்டும் எங்களை அமர்த்தி விட்டு " எல்லோரும் நமக்கு ஒன்றே" என்றார்கள்.

" பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்ற புறநானூற்று வரிகளின் மணம் அப்போது எங்களின் உள்ளுக்குள் கமழ்ந்தது.

வேறொரு நாள் நான் அடிகளாரிடம் "தங்களுக்குச் சொந்த ஊர், பிறந்த குடும்பம் என்பவற்றை தெரிந்து கொள்ளலாமா?" என்று சிறுபிள்ளைத் தனமாக கேட்டு விட்டேன். " துறவியின் பூர்வோத்தரத்தை கேட்க கூடாது" என்று மென்மையாகப் புன்னகையுடன் அறிவுறுத்திவிட்டு " இந்த குடிலின் வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் அப்படிக் கேட்டு விட்டீர்கள். சொல்லுகிறேன். முதன் முதலில் இங்கேயே ஒரு குடிசையில் சில பிள்ளைகளுடன் இந்தக் குடில் தொடங்கியது. நானே சமைத்துப் போட்டேன். துணி துவைத்துவிட்டு குழந்தைகளுக்கு உடுத்திவிட்டேன். பாடம் நடத்தினேன். படுக்க வைத்தேன். அப்பாவும் நானே. அம்மாவும் நானே. பிறகு ஒவ்வொரு வசதியும் இறையருளால் வந்தது. வளர்ந்தது. ஒரு முறை திருச்சிக்கு போய்வர வேண்டியிருந்தது. பஸ் டிக்கட்டிற்கு 6 அணாக்கூட கையில் இல்லை. குடையை பிடித்து நடையைக் கட்டினேன். இப்போது பார்க்கிறீர்களே குடிலின் பெயரில் பஸ் சர்வீஸ் நடக்கிறது. இறைவனின் திருவிளையாடல்" என்று குடிலின் வரலாற்றை அடிகளார் சொல்லச் சொல்ல எங்கள் மனம் விம்மியது.

விம்மிதமும் ஏற்பட்டது.

குடிலின் முக்கிய கட்டுமானம் ஒன்றுக்காக எங்கள் பங்கில் வரைபடம் முதலானவற்றை செய்து கொடுத்து மேற்பார்வையையும் அவ்வப்போது கவனித்தோம். அடிகளார் அவர்கள் இடையிடையே கண்டு எங்களை பாராட்டி ஊக்குவித்தார்கள். மேற்படி கட்டுமானத்தின் இறுதியாய் இருந்த கனமான வேலை ஒன்றை முடிப்பதற்காக நன்கொடையாளர்களில் ஒருவர் சிறப்புப்பணியாளர் குழுவினரை ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு நாளாகியும் வேலை முடிந்ததாக இல்லை. மூன்றாம் நாள் அடிகளார் கோவைக்கு போக வேண்டியிருந்தது. அன்றிரவு தூங்கிக் கொண்டிருந்த மூவராகிய எங்களை ஒரு குரல் எழுப்பியது. " கோவையிலிருந்து போன் மூலமாக சுவாமிஜி பேசினார்கள். நம் இன்ஜினியர்களை அழைத்து வேலையை முடிக்கச் செய்யுங்கள்" என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று குடிலின் பொறுப்பாளர்களில் ஒருவர் பரபரத்தார். சென்றோம். இறையருளால் வேலை நிறைவேறியது. தொலைபேசியிலேயே இதை தெரிந்து கொண்ட பிறகே அடிகளார் தூங்கினார்களாம். எங்கள் பெரிய அதிகாரிகளிடம் எல்லாம் எங்களைப் பற்றி பெருமையாக பேசி வந்ததை அந்த அதிகாரிகள் எங்களிடம் தெரிவித்தார்கள். தினைத்துணை செய்தாலும் பனைத்துணையாகக் கருதிய பண்பாளரே அடிகளார்.

குடிலைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மட்டுமே உயர்நிலைப்பள்ளியை அடிகளார் நடத்தினார்கள். மாணவர்கள் தங்கும் அமைப்பை வீடு என்றே குறிப்பிட்டார்கள். அடிக்கடி மாணவர்களுக்கு விருந்து நடத்தப்படுவது வழக்கம். அடிகளார் எங்களை ஒருநாள் அதற்கு அழைத்திருந்தார்கள். எங்களது தயக்கத்தை உணர்ந்த அடிகள், " உங்கள் வீட்டிற்கு வந்திருப்பவர்களுக்கு நீங்கள் விருந்து கொடுப்பதில்லையா? எங்கள் வீட்டுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். நாங்கள் விருந்து தருகிறோம். தயக்கம் வேண்டாம்" என்று உறவு கொண்டாடினார்கள்.

" எந்த வீட்டில் அனாதை வளர்க்கப்படுகிறதோ அந்த வீட்டுக்குரியவர் சுவர்க்கத்தில் என்னுடன் இணைந்திருப்பார் " என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு புகலிடம் தந்து ஆளாக்கிய குடில் நிறுவனர் அடிகளார் அவர்கள் வாழ்த்துக்களின் வாழ்த்துக்குரிய வானச் செல்வரே.

ஒ–ம் அப்பாஸ் மந்திரி
3.3.2001

எனக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவங்கள்

ராமேஸ்வரத்திலுள்ள சுவாமி விவேகானந்தா குடில் ஸ்தாபகர்
சுவாமி பிரணவானந்தா அவர்கள்
குடில் ஸ்தாபகர் தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாருடன்
தமக்கு ஏற்பட்ட தெய்வீக அனுபவங்களை வெளியிட்டுள்ளார்கள்.

நான் முதன்முதலாக 1977 ம் ஆண்டில் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தா காலடியில் பிரம்மசாரியாக இருந்த போது ஸ்ரீராமகிருஷ்ண குடிலையும் தவத்திரு அடிகளாரையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. நான் 1969 ம் வருடத்தில் ஊட்டியில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் பிரம்மசாரியாக சேர்ந்தேன். அதன் பின்பு 1975, 1976 வருடங்களில் கல்கத்தா பேலூர் மடத்திலிருந்தேன்.

அதன் பின்பு பரிவிராஜக (WANDERING LIFE) வாழ்க்கையில் ஈடுபட்டு 1977 ம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தில் சேர்ந்தேன். நான் சென்னை மடத்தில் இருக்கும் போது ஸ்ரீராமகிருஷ்ண குடிலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.ஆனால் அந்த தெய்வீகக்குடிலை நேரில் காணும் வாய்ப்பு இந்த சமயத்தில்தான் கிட்டியது.

ஸ்ரீராமகிருஷ்ண குடிலை துவக்கிய அந்த தெய்வீக புருஷரை முதன்முறையாக சந்தித்த பொழுது, மகாத்மாகாந்தியை நேரடியாக சந்தித்த ஒரு உள்ளுணர்வு ஏற்பட்டது. அந்த தெய்வீக சூழ்நிலையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நான் சுவாமிஜி அவர்களைப் பார்த்து, “ சுவாமி விவேகானந்தரின் லட்சியக்கனவுகளை நனவாக்கும் இந்த சிறந்த ஸ்தாபனத்தை எப்படி உருவாக்கினீர்கள் என்று கேட்டேன்”

அதற்கு சுவாமிஜி அவர்கள் எதுவுமே பேசாமல் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் படங்களை காண்பித்து (சுவரில் மாட்டியிருந்த) செய்கை மூலமாக எதுவும் என்னிடத்தில் இல்லை, எல்லாம் அந்த மூன்று தெய்வங்களின் திருவருள்தான் என்பதை தெரிவித்தார்.

அதன்பின்பு பலமுறை சுவாமிஜி அவர்களை சந்தித்திருக்கிறேன். இவ்வாறு ஒரு சந்திப்பின் போது , “ இங்கு குடிலிலுள்ள மாணவர்களை எவ்வாறு நேசிக்கிறீர்கள்,?” என்று கேட்டேன். அதற்கு சுவாமிஜி அவர்கள் இம்மாணவர்களிடத்திலே நான் இதயப்பூர்வமாக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை பூஜிக்கிறேன்” என்று கூறினார்.மேலும் நான் “ இவர்களை நீங்கள் கண்டிக்கும் போது ஸ்ரீராமகிருஷ்ணராக நினைப்பீர்களா?” எனக் கேட்டேன்.

சுவாமிஜி அவர்கள், “ அவர்களை கண்டிப்பதைக்கூட அர்ச்சனையாக நினைப்பேன் ” எனக் கூறினார். இது என் இதயத்தில் ஆழப்பதிந்தது.

வேறொரு சந்தர்ப்பத்தில் சுவாமிஜி அவர்களிடம் " நீங்கள் காசி, ராமேஸ்வரம், பத்ரி, கேதார் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லவில்லையா? "என்று கேட்டேன்.

அதற்கு சுவாமிஜி அவர்கள், " பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் நடமாடும் இந்தக் குடிலில் எல்லா க்ஷேத்திரங்களையும் தீர்த்த ஸ்தலங்களையும் நான் காண்கிறேன்" எனக் கூறினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் " நீங்கள் இங்கு குடிலில் விசேச பூஜை, வழிபாடுகளை செய்வதில்லையா?" என்று கேட்டேன். அதற்கு சுவாமிஜி அவர்கள், "பூஜை, வழிபாடு என்றால் என்ன? நீங்கள் இந்துக் கோவில்களுக்கு செல்லுகிறீர்கள். அங்கு அவர்கள் சில வழிபாட்டு முறைகளை பின்பற்றுகிறார்கள். அதை அவர்கள் பூஜை என்று சொல்கிறார்கள். அதே போல கிருஸ்துவ தேவாலயங்களுக்கு செல்கிறோம். அங்கு அவர்கள் சில வழிபாட்டு முறைகளை பின்பற்றுகிறார்கள். அது போல இஸ்லாமிய மசூதிகளுக்கு செல்கிறோம். அங்கு அவர்கள் சில வழிபாட்டு முறைகளை பின்பற்றுகிறார்கள். இந்த ஆலயங்களில் செய்யக்கூடிய வழிபாடுகளை மாற்றிச் செய்தால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? ஆகவே வழிபாட்டு முறைகள் நம்மால் உருவாக்கப்பட்டன. இங்கு குடிலை பொறுத்தவரை இங்குள்ள அனாதைச் சிறுவர்களுக்கு செய்யும் சேவையே பூஜையாகும்" என்று என் அறிவுக்கண்களை திறந்து வைத்தார்.

இந்த சுவாமி விவேகானந்தா குடில் தொடங்கிய 20 ஆண்டுகாலமாக, தவத்திரு அடிகளாரின் எண்ணங்களை இதயங்களில் கொண்டு ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பணியாற்றி வருகிறோம். தொடர்ந்து பணியாற்ற இந்த பூவுலகை விட்டு மறைந்தாலும் அருள் உலகத்தில் ஆட்சி செய்யும் அன்னாரின் ஆசியை வேண்டுகிறோம்.

ஓ-ம்

ஸ்ரீகுருதேவரின் தொண்டன்

சுவாமி பிரணவானந்தா

8.3.2001

நமது குடிலின் சுவாமிஜி

என். ராமானுஜம், குடில் முன்னாள் மாணவர்

என். ஆர். இங்க் கம்பெனி (விவேகா இங்க் மேக்கர்ஸ்) உரிமையாளர்

ஸ்ரீரங்கபுரம், மதுரை மாவட்டம்

1963 ம் வருடம் மாதம் தேதி நினைவில் இல்லை. ஒரு நாள் காலைப்பொழுதில் காய்ச்சல், வாந்தி, மயக்கம் என்று வித்யாலயத்திற்கு கீழ் சுமார் 30 மாணவர்கள் உடல் நலமின்றி படுத்திருந்தனர். சுவாமிஜி அவர்கள் இம் மாணவர்களை பார்க்க வந்தார்கள்.

சுவாமிஜி அவர்களுடன் பொது மாணவன் என்ற முறையில் நான் குடிலை சுற்றிப்பார்த்து விட்டு வந்தபோது தான் மாணவர்கள் உடல்நலமின்றி இருப்பது தெரிய வந்தது. உடல்நிலை பாதிக்கப்பட்ட மாணவர்களின் இருப்பிடத்திற்கு விரைந்து வந்தார் சுவாமிகள். நானும் அவருடன் வந்தேன். சுகாதாரத்துறையில் பொறுப்பு வகித்த 55 ம் எண் மாணவர் வாசுதேவன் என்பவர் அங்கிருந்தார். தற்போது இவர் சென்னையில் ஹவுசிங் போர்டு கணக்கராக இருந்து வருகின்றார்.

வாசுதேவனைக் கண்ட சுவாமிஜி அவர்கள் மாணவர் உடல்நலத்தில் அக்கரைஇன்றி இருந்ததாக கூறி கடுங்கோபத்துடன் வாசுதேவனின் காதைப்பிடித்து திருகுவதற்காக கையை விரைந்து கொண்டு வந்தார். "அடே பயலே" என்று மட்டும் சொல்லிவிட்டு, காதைப்பிடித்து திருகாமல் நின்று விட்டார். இனி எந்தக் காலத்திலும் எந்த மாணவனது காதையும் பிடித்து திருகுவதில்லை என்று கூறினார். அன்றிலிருந்து எவரது காதையும் திருகாமல் தான் எடுத்த முடிவிலிருந்து மாறுபடாமல் இருந்து வந்தார்.

எடுத்த முடிவில் மாறுபடாத வகையில் நடந்து கொள்ளும் நமது சுவாமிஜி அவர்களின் முன்னால் தெய்வம் கூடத்தோற்றுப்போகும். கொண்ட கொள்கையிலும், ஒரு விஷயத்தில் திடமான முடிவெடுப்பதில் மனஉறுதியையும் வைராக்கியமும் நம் சுவாமிஜியைப் போல வேறு எவருக்கும் வராது என்பது நான் கண்ட காட்சி.

ஒ—ம் என். ராமானுஜன்
13.3.2001

கலியுகக்கண்ணன்

ரமேஷ்,
குடிலின் முன்னாள் மாணவர்
கதர் இலாகா அலுவலர்
ஸ்ரீராமஜெயம்

என்னை எடுத்து வளர்த்தது குடில். அன்னையின் அரவணைப்புக்கு ஒப்பாக சுவாமிஜி காட்டிய பேரன்பு நான் மட்டுமல்ல என்னைப்போன்ற நூற்றுக்கணக்கான சிறார்களை அறிவைப் புகட்டி மனிதர்களாக இவ்வுலகில் உலவவிட்டிருக்கிறது. அவரை தெய்வமாக எண்ணி மனதிலே இருத்தி, ஒவ்வொரு நாளும் மனதால் வணங்கி வருவது குடிலில் படித்து வெளியேறிய மாணவர்களின் நன்றிக்கடனாகும்.

குடில் சுவாமிஜியை கலியுகக்கண்ணன் என்றே போற்றுகின்றேன்.

பாரதத்தின் கண்ணன், தாழ்வுற்று, நாடிழந்து கானிலே அலைந்த பாண்டவர்களுக்கு உற்ற நண்பனாய், நல்லாசிரியனாய், அறிவுசால் அமைச்சனாக இருந்து அவர்களை காப்பாற்றினான் என பாரதக் கதை கூறுகிறது. அதைப்போல பெற்றோர்களை இழந்து இருளில் மூழ்கி இனி வாழ எங்கு செல்வோம் எங்களை ஆதரிக்க யார் இருக்கிறார்கள் என பரிதாபப்பட்ட நிலையில், " எங்கிருந்தோ வந்தேன் உங்களை காக்க நான் இருக்கிறேன்" என வாழ்வை தியாகம் செய்து அனாதைச் சிறார்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சேவை செய்த குடில் சுவாமிஜி நாம் கண்டிராத கண்ணனை விட மேலானவரன்றோ என நினைக்கலாமல்லவா?

நான் பூஜை மாணவனாக இருந்த போது நடந்த ஒரு நிகழ்ச்சியை கூற விரும்புகிறேன். நான் கோயில் உள்ளே சுத்தம் செய்து கொண்டிருந்தேன். சுவாமிஜி பேசிய குரல் கேட்டது. "ஏ பயலே இங்கிருந்து போய்விடு. பையன்கள் பார்த்து விட்டால் உன்னை துவம்சம் செய்து விடுவார்கள்" யாரிடம் பேசுகிறார் என நான் வெளியே வந்து பார்த்தேன்.

ஆஸ்ரமத்துக்கருகே மண்டலம் போட்டு தலையை உயர்த்தி படமெடுத்து நாகப் பாம்பு ஒன்று அப்படியும் இப்படியுமாக தலையை அசைத்து பார்த்துக் கொண்டிருந்தது. குழந்தைகளிடம் பேசுவது போல பாம்பிடமும் சுவாமிஜி பேசியிருக்கிறார். போய்விடு போய்விடு எனச் சிலமுறைகள் சொன்னார். நாகமும் மெதுவாக சென்று பூச்செடிகளுக்கிடையே மறைந்தது. இதைப்போலவே கீரிப்பிள்ளைகளிடமும் சுவாமிஜி பேசுவார். அவைகளும் கூட்டமாக ஆஸ்ரமத்துக்கு முன் அசையாமல் நின்று கொண்டு சென்று விடும். ஆஸ்ரம பாலம் பழுது பார்க்கும் போது கீரிகள் குடும்பம் தங்கியிருக்க நீண்டவாக்கில் பொந்து வைக்கச் சொன்னார். பிராணிகளிடமும் அன்பு கொண்டவர் சுவாமிஜி. நான் பண்டக சாலை மாணவனாக பணியாற்றிக் கொண்டிருந்தேன். இருந்த அரிசி காலை உணவுக்கே போதவில்லை. ஒருவாறாக சாப்பிட்டு விட்டு மாணவர்கள் பள்ளிக்கூடம் சென்றுவிட்டனர். நான் சுவாமிஜியிடம் சென்று, " சுவாமி .. மதிய சாப்பாட்டிற்கு அரிசி இல்லை" என்றேன். அதற்கு சுவாமிஜி, " கவலைப்படாமல் போப்பா. குரு மகராஜ் கொடுத்தனுப்புவார்" என்பார். நானும் பள்ளி சென்று விடுவேன். சிறிது நேரத்திற்குள் ' கேட்' பார்த்துக் கொள்ளும் மாணவன் வந்து சாமி கூப்பிடுவதாக கூறினான். நானும் சென்றேன். ஆஸ்ரமத் திண்ணையில் நெல் மூட்டை இருந்தது. சுட்டிக் காண்பித்தார். யாரோ கொடுத்தனுப்பி இருக்கிறார்கள். ஒரு முறை நெல் இல்லாத போது எதிர்பாராத விதமாக நங்கவரம் பண்ணையிலிருந்து 12 மூட்டைகள் நெல் வந்திறங்கியது. அன்று இந்நிகழ்ச்சிகள் எவ்வித மனோநிலையையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால் இன்று இவைகளை நினைக்கும்போது தனது பக்தர்களை

ஆண்டவன் கைவிடமாட்டான் என்றே நினைக்கத் தோன்றுகிறது. அனாதைகளை காப்பவராக இருந்து கொண்டு சுவாமிஜி அவர்கள், பகவான் பரமஹம்ஸரின் துணையால் குடிலை நடத்தி வந்திருக்கிறார். இன்றைக்கு அவர் அமரராகிவிட்டாலும் அவரது ஆசி என்றும் இருந்து குடில் சிறார்களை காத்து வரும் என்பது சத்தியம்.
ஹரி ஓம் தத் சத்

ஓ–ம் ரமேஷ்
13.3.2001

சுவாமிஜி அவர்களின் கடிதம்

எம். பச்சமுத்து
லிட்டில் பிளவர் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்
செட்டிகுளம், பெரம்பலூர்

தேதி: 20.3.2001

பெறுதல்
திரு. பிரம்மசாரி துரை அவர்கள்
குடில் நிர்வாகி
திருப்பராய்த்துறை

ஐயா,
நமஸ்காரம். தங்களுடைய கடிதம் கிடைத்தது. ராமகிருஷ்ண குடில் சம்மந்தமாக என்னிடம் இருந்த தபால் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன்.
நன்றி. நமஸ்காரம்.
இப்படிக்கு
ஓ–ம். எம். பச்சமுத்து

Sri Ramakrishna Kudil
Thirupparaithurai (P.O)
Tiruchirappalli District
Date : 3.4.1965

அன்பார்ந்த ஐயா, நமஸ்காரம்
வியாழக்கிழமை இரவு துறையூர் போய்விட்டு மீண்டும் செட்டிகுளம் வந்து, அவர்களை விட்டு விட்டு அதிகாலை நான்கு மணிக்குத்தான் ஆஸ்ரமம் வந்து சேர்ந்தேன்.

மூன்று நாட்களாக எங்களை அன்புடன் உபசரித்த தங்களுக்கும், தங்களது தந்தையாருக்கும் அன்புக்குழந்தைகளுக்கும் எனது அன்பார்ந்த ஆசியையும் மகிழ்ச்சியையும் ஆஸ்ரமத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேரில் சொன்னபடி எப்பொழுது வேண்டுமானாலும் குடும்பத்துடன் ஆஸ்ரமத்தை வந்து பார்த்துச் செல்லவும். குடிலின் அறப்பணியில் தொடர்பு கொண்ட தங்களுக்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திருவருள் என்றுமிருக்கும்.

திருவருள் துணை

அன்புள்ள
(ஒ-ம்) பிரதர் ரத்தினம்
(பிரம்மசாரி ரத்தினம்)

தங்களை சந்தாதாரராகப் பதிவு செய்து கொண்டு ரூ 301 க்கு ரசீது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

SRI RAMAKRISHNA KUDIL
THIRUPPA RAI THURAI TIRUCHIRAPPALLI (P.O)
28.10.1966

NO.2

Received with thanks from Shri திரு. M. பச்சமுத்து அவர்கள் செட்டிகுளம், பெரம்பலூர் Tk. திருச்சி (DT) the sum of Rupees பத்தாயிரம் மட்டும் only as donation to the great cause for which Kudil has dedicated itself.

Rs. 10,000/- For Sri Ramakrishna Kudil
பிரம்மசாரி ராமசுவாமி
President

SRI RAMAKRISHNA KUDIL
THIRUPPARAITHURAI
TIRUCHIRAPPALLI
8.11.1966

திரு. அன்புடையீர்! நமஸ்காரம்

தாங்கள் அன்புடன் வழங்கிய பெரும் காணிக்கை – ஆம் பெரிய மனம்: அதனால் அது பெரும் காணிக்கை.

ஆஸ்ரமத்திற்கேற்ற அப்பழுக்கற்ற , ஆசையற்ற தியாக மனம்! இத்தகைய மனதை மனிதன் பெறவே பல ஜன்மங்கள் தோறும் தவவேள்வி செய்து வரப்படுகிறது.

இத்தகைய வேள்வி நாட்டில் வளரட்டும். தார்மீக தர்மம் தங்களை உதாரணமாக, மறைமுகமாக கொள்ளட்டும்.

ஆஸ்ரமத்தின் அருளார்ந்த ஆசியும் அன்பார்ந்த மகிழ்ச்சியும் தங்கள் இல்லத்தார் அனைவருக்கும் உரியதாகட்டும். இறையருளால் உடலும் உளமும் பூரண நலமுற்று மகிழ்வுடன் ஆஸ்ரமம் வருவீர்களாக.

திருவருள் துணை

அன்புள்ள

ஒ—ம் பிரம்மசாரி ராமசுவாமி

SRI RAMAKRISHNA KUDIL
THIRUPPARAITHURAI
TIRUCHIRAPPALLI
8.11.1966

திரு. பச்சமுத்து அவர்கள்
செட்டிகுளம்

அன்பார்ந்த ஐயா,

நமஸ்காரம்.

தங்களின் அன்புக்காணிக்கைக்கு ஸ்டாம்பு ரசீதும் சுவாமிஜி அவர்களின் தபாலும் இன்றுதான் அனுப்பிவைக்கப்படுகிறது. கோவையிலிருந்து நேற்று முதல்நாள் தான் வந்தேன். தற்போதைக்கு தேவையான ஆரம்ப இயந்திரங்கள் வந்து விட்டன. வேலையும் ஆரம்பமாகிவிட்டது. ஐம்பது பம்புகள் ரப் காஸ்டிங் கோவையிலேயே ஊற்றப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. முதலில் இவைகளை மிஷின் ஷாப்பில் வேலை செய்து பூட்டப்பட இருக்கிறது. பிறகு நாமே காஸ்டிங் (இரும்பு உருக்குதல்) எடுக்கப் போகிறோம். கோவையிலிருந்து மெக்கானிக் வந்திருக்கிறார். பயிற்சி முடிந்து மாணவர்களும் வந்து விட்டார்கள். ஆண்டுவிழாவின் போது குடில் பம்ப்செட் வேலை செய்வதை மக்கள் காண்பார்கள். அதற்கு காரணமான தங்கள் அருளுள்ளத்தை இறைவன் காண்பார். இது காலம் வரை 3 லட்ச ரூபாய் வரை தொழிற்பேட்டைக்காக செலவு செய்யப்பட்டிருந்தும், இனிமேலும் பல லட்சம் தேவையிருந்தும் உற்பத்தி என்று துவங்குகிற காலத்தில் பயன்பட்ட பொருளானது தங்களது அன்புக் காணிக்கையே என்று நான் மனமகிழ்ந்து கூறுவது மிகையாகாது.

தாங்கள் ஆஸ்ரமத்துக்கு வந்து அமைதியாக சில நாட்கள் தங்குவதாகக் கூறினீர்கள். அந்த வாக்கை இயலுமானால் நிறைவேற்றுங்கள். ஆஸ்ரமம் மகிழ்ச்சி கொள்ளும். விபரத்திற்கு அன்பு கூர்ந்து தபால் எழுத கோருகிறேன். தங்களின் அன்பு உள்ளத்தையும் அருள் இதயத்தையும் ஆத்மார்த்தமாக உணர்ந்து அனுபவித்திருக்கும் நான் வெறும் வார்த்தைகளால் அவற்றை அழகு படுத்த நான் விரும்பவில்லை. உடல்நலம் நல்ல நிலைக்கு வந்து தெம்புடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கூடிய விரைவில் சந்திப்போம். பேங்கிலிருந்து ரூபாய் பதின்மூன்றாயிரம் எடுக்கப்பட்டது. ரூபாய் பத்தாயிரம் போக மீதியை தங்கள் பேரால் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

அன்புக்கும் ஆசிக்கும் உரிய குழந்தைகள் வணக்கத்திற்குரிய தந்தையார், பெருமைக்குரிய அம்மா மற்றும் தங்களது நலன் நாடும் அனைவர்க்கும் அன்பும் நமஸ்காரமும்.

திருவருள் துணை

ஓ—ம் பிரதர் ரத்தினம்

(பிரம்மசாரி ரத்னம்)

குறிப்பு : செட்டிகுளம் அன்பர் பச்சமுத்து அவர்கள் குடிலுக்கு வழங்கிய பெரும் காணிக்கை குறித்த கட்டுரையை சுவாமிஜி அவர்களே எழுதியதை இத்தொகுப்பு மலரின் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குடில் ஸ்தாபகர் சுவாமிகள்

சி.என். ராமசாமி, சிக்காரம்பாளையம் பெருநிலக்கிழார்

குடிலுடன் 50 ஆண்டுகள் தொடர்பு உடையவர்

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கெம்பநாயக்கன்பாளையம் (கெம்நாயக்கன்பட்டி என்றும் கூறுவார்கள்) என்ற கிராமத்தில் தான், நாம் அனைவரும் போற்றி வணங்கும் மஹான் பிரம்மசாரி ராமசாமி சுவாமிகள் அவதரித்தார்கள்.

தொண்டு உள்ளம் கொண்ட நமது சுவாமிகள் சிறிய வயது முதற்கொண்டே மக்கள் சேவையிலும் தேச சேவையிலும் ஈடுபட்டார். ஜாதி மத பேதமின்றி எல்லாமக்களுக்கும் தொண்டாற்றி வந்தார். குறிப்பாக ஹரிஜன மக்களின் முன்னேற்றத்துக்காகவும் நலனுக்காகவும் விடாமுயற்சியுடன் தொண்டாற்றி வந்தார்கள்.

தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகள், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணி தேவியார் ஆகியோர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி அவர்களது கொள்கைகளை வாழ்வில் கடைப்பிடித்து வந்தார். தேசீய காங்கிரஸ் பிரச்சாரத்திற்காக பல ஊர்களுக்கும் சென்று

வருவார்கள்.

1941 ம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் எங்களூரான சிக்காரம்பாளையத்திற்கு வந்தார்கள். எனது தகப்பனார் பிரம்மஸ்ரீ சி.யூ. நஞ்சப்பா அவர்களுடன் நாட்டு நலன் பற்றியும் தேச சேவை பற்றியும் உரையாடினார்கள். அப்போது என் தந்தையார் சுவாமிகளிடம் திருப்பராய்த்துறையில் சுவாமி சித்பவானந்த மகராஜ் தலைமையில், இயங்கிவரும் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். சுவாமிகளின் மனோநிலைக்கும், செயல்பாட்டுக்கும் மேற்படி ஸ்தாபனம் உகந்ததாயிருக்கும் என எடுத்துச்சொல்லி மேற்படி ஸ்தாபனத்தில் சேர்ந்து செயலாற்றுமாறு என் தந்தையார் தெரிவித்தார்கள். பிரம்மசாரி ராமசுவாமிகளும் அதை ஏற்றுக் கொண்டார்கள். 1941 ம் ஆண்டு ஜுலை மாத மத்தியில் திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனம் சென்று அங்கு பணியாற்றி வந்தார்கள்.

அப்போது தபோவனத்தில் ஆஸ்ரமக் கட்டட வேலைகளும் நிதிவசூலும், நடைபெற்று வந்தன. எனது தந்தையாரும் மாதக் கணக்கில் தபோவனத்தில் தங்கியிருந்து பணியாற்றி வந்தார்கள். நான் பிரம்மசாரி சுவாமிகளை 1942 ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருப்பராய்த்துறை தபோவனம் சென்று சந்தித்தேன். அவருடன் 5 நாட்கள் உடன் இருந்தேன். அவர் பகலில் நிதி வசூலுக்கு செல்வார்கள். இரவில் தபோவனம் வருவார்கள். அந்த சந்திப்பானது எங்களுக்குள் பெரும் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்க ஏதுவாயிருந்தது. அதன் பிறகு நான் 3 மாதங்களுக்கு ஒரு முறை நான் தபோவனம் சென்று வருவேன். ஒவ்வொரு தடவையும் 3, 4 நாட்களுக்கு மேல் தங்குவேன். பிரம்மசாரி சுவாமிகளிடம் மிக்க நெருக்கமான தொடர்பு ஏற்பட வாய்ப்பாயிருந்தது. அப்போது நான் தபோவனத்தின் பொதுக்குழு உறுப்பினராக இருந்து வந்தேன்.

பிரம்மசாரி சுவாமிகள் 1941 ம் வருடம் மத்தியிலிருந்து 1949 ம் ஆண்டு வரை தபோவனத்தில் தங்கியிருந்து பணியாற்றி வந்தார்கள். ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகளுக்கும் பிரம்மசாரி சுவாமிகளுக்கும் பள்ளி மாணவர்களை சேர்க்கும் விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் ஹாஸ்டலில் பூரா செலவுகளையும் ஏற்கும் மாணவர்களை மட்டுமே சேர்ப்பது என்றும், ஏழைக்குழந்தைகள், அனாதைக் குழந்தைகள் சேர்க்கும் வாய்ப்பில்லை என்று சொல்லி விட்டார்கள். இது பிரம்மசாரி சுவாமிகளுக்கு ஏற்புடையதாக இல்லை.

பிரம்மசாரி சுவாமிகள் தபோவனம் சவுக்குத் தோப்பில் சிறந்த முறையில் ஒரு குடில் ஏற்படுத்தி தங்கியிருந்தார்கள். கருத்து வேறுபாட்டின் காரணமாக 1949 ல் அங்கிருந்து வெளியேறினார்கள். அங்கிருந்து புறப்பட்ட சுவாமிகள் திருப்பராய்த்துறைக்கு மேற்கே வந்தார்கள். மேற்படி ஊர் அன்பர்கள் சிலர்

சுவாமிகளிடம் அன்பு கொண்டு வரவேற்று பக்கத்தில் இடம் கொடுத்து "சிறுகுடில்" அமைக்க உதவினார்கள்.

ஒவ்வொரு செயல் ஏற்படுவதும் ஏதாவதொரு நன்மைக்குத்தான். பிரம்மசாரி சுவாமிகள் தபோவனத்தை விட்டு வெளியேறாமலிருந்தால், இங்கு இவ்வளவு பெரிய ஸ்தாபனம் ஏற்பட வாய்ப்பு இருந்திருக்காது. சுவாமிகள் குடிலில் தங்கியிருந்து செய்து வந்த தவத்தின் காரணத்தால் பல இன்னல்களுக்கிடையே, குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரே எழுந்தருளி பெரிய ஸ்தாபனம் உருவாக அருள்புரிந்துள்ளார்கள். குருதேவர் திருவருளை குடில் வளாகத்தில் பிரவேசித்த உடனே உணர முடிகிறது. அங்குள்ள ஒவ்வொரு மரமும் குருதேவரின் உபதேசங்களை ஓயாது போதித்து கொண்டே இருக்கின்றன. எனது தந்தையார் அவர்கள் அதிகமாக தபோவனத்தில் தங்கியிருந்து அங்கு கட்டட வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தார்கள். நான் அப்போது அடிக்கடி தபோவனம் வருவேன். தபோவனம் வரும் போதெல்லாம் நானும் எனது தந்தையாரும் குடிலுக்கு வந்து பிரம்மசாரி சுவாமிகளை சந்திப்போம்.

குடிலுக்குச் சேர்ந்த காவேரிப்படுகையில் சுவாமிகள் சவுக்கு மரம் வளர்த்து வந்தார்கள். நாங்கள் ஒரு சமயம் குடிலுக்கு வந்திருந்த போது சுவாமிகள் சவுக்குத் தோப்பை சுற்றிக் காட்டினார்கள். அப்போது சுவாமிகளிடம் "இந்த சவுக்கு மரங்களை எல்லாம் தோண்டியெடுத்து விட்டு அங்கு தென்னை மரம் சாகுபடி செய்யுங்கள். பலனுக்கு வந்ததும் அந்த தென்னை மரங்களே குழந்தைகளை காப்பாற்றும்" என்று சொன்னோம். பிரம்மசாரி சுவாமிகளும் அதன்படியே ஒரு அழகான தென்னந்தோப்பை உருவாக்கிவிட்டார்கள். அந்த தென்னந்தோப்பு இன்று சிறப்பான முறையில் பலன் அளித்து வருகிறது.

1960 ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் குடில் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் பள்ளியில், போஸ்ட் பேசிக் வகுப்புகள் துவங்க விண்ணப்பிக்கப்பட்டு அனுமதிபெற முயற்சிக்கப்பட்டது. 1960 மே 15 தேதி வரை அனுமதி வரவில்லை. அதனால் தமிழ்நாடு அரசு கல்வியமைச்சரை நேரில் சந்திக்க வேண்டுமென சுவாமிகள் தெரிவித்திருந்தார்கள். 1960 மே மாதம் 3 வது வாரத்தில் தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் உதகை கவர்னர் மாளிகையில் தங்கியிருந்தார்கள். இதை அறிந்த சுவாமிகள் 1960 மே மாதம் 22 ம் தேதி காலை உதகை வருவதாகத் தந்திகொடுத்து விட்டு அன்றைய தினம் வந்தார்கள். உதகையில் கவர்னர் மாளிகையில் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களை நானும் டாக்டர் சி. நஞ்சப்பா (பாராளுமன்ற உறுப்பினர்) சுவாமிகளுடன் சந்தித்து பேசினோம். அவரும் அனுமதி கொடுப்பதாக ஒப்புக் கொண்டு உடனடியாக அங்கீகாரம் வழங்கிவிட்டார்கள்.

அங்கீகாரம் கிடைத்தது குறித்து சுவாமிகளும் 13.6.1960 தேதிய கடிதம்

மூலம் தெரிவித்து விட்டார்கள். அடுத்த ஆண்டிலே சுற்றுப்புற வட்டார ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர சுமார் 500 பேருக்கு மேற்பட்ட தொழிலாளிகள் வேலை செய்யக்கூடியவாறு ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்க வேண்டுமென முயற்சி எடுத்துக் கொண்டு அதைத் தொடங்கினார்கள். அது சம்மந்தமான பணிகளை கவனிக்கும் பொறுப்பும் எனக்குக் கொடுத்திருந்தார்கள். பெரு முயற்சி எடுத்தும் அதை முறையாக செயல்படுத்த முடியவில்லை. பிற்பாடு மாணவர்களுக்காக ஒரு சிறு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது. சுவாமிகள் நமது காலத்தில் வாழ்ந்த ஒரு பெரிய மஹான். அவர்கள் குருதேவரிடம் பெற்ற திருவருளால் சாதித்த காரியங்கள் என்றென்றும் நிலைத்து நிற்கும். எங்கள் குடும்பத்தார் பால் சுவாமிகள் வைத்திருந்த தெய்வீக அன்பு ஈடு இணையற்றது.

வாழ்க அவர் நாமம்! வளர்க குடிலின் செயல்பாடுகள்!

ஓ–ம் சி.என்.ராமசாமி
20.3.2001

மாபெரும் சமுதாயத் தொண்டின் நாயகர்

திரு. சா. வேதாரண்யம்,
செம்மங்குடி, தொழுவூர்

மதிப்பிற்குரிய அய்யா!

ஸ்ரீராமகிருஷ்ண குடில் ஸ்தாபகர் நமது சுவாமிஜி அவர்களின் வாழ்க்கை வரலாறை புத்தகமாக வெளியிட வேண்டியது மிகமிக அவசியமாகும்.

சுயநலம் ஒன்றே பலரின் வாழ்க்கையாக இன்று அமைந்து விட்டது. நமது இளைஞர்கள் இந்நாளில் எவ்வித குறிக்கோளும் இல்லாது படித்து பட்டம் பெற்று, வேலை இல்லாமல் சினிமா நடிகர், நடிகைகளை வழிகாட்டியாக எண்ணிக் கொண்டிருக்கும் நிலையைக் காண்கிறோம்.

இந்நாளில் மகாத்மா காந்தி, வள்ளலார் போன்று ஒரு மாபெரும் சமுதாயத் தொண்டு புரிந்து வருகின்றார் குடில் சுவாமிஜி அவர்கள். பெற்றோர்களற்ற ஏழை அனாதை சிறுவர்கள் வாழ்வில் வழிதவறி விடக் கூடாதே என்ற உயரிய நோக்கத்தில் அவர்களை தத்து எடுத்து நல்ல வீரமிக்க திறமை மிக்க இளைஞர்களாக ஆக்கும் பணியில் சுவாமிஜி அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விவேகானந்தர் கூறியபடி நூறு திறமை மிக்க இளைஞர்களைக் கொண்டு புதிய இந்தியாவை நிர்மாணிப்போம் என்ற கூற்றின்படி பல்லாயிரம் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றார். நாம் பின்பற்ற வேண்டிய உயர்ந்த கொள்கையுடைய மாமனிதர் அவர்.

காலம் சென்ற இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு 1964 ல் சென்னைக்கு

வந்து திரும்பும் போது புத்துணர்ச்சி பெற்று திரும்புவதாக சொன்னது போல குடிலுக்கு வந்து சுவாமிஜி அவர்களைப் பார்த்து திரும்பும் போது புத்துணர்ச்சி பெற்றே திரும்புவேன்.

1971,1972,1973 ஆண்டுகளில் குடந்தை கோட்ட பஞ்சாயத்து அலுவலராக பணியாற்றிய பொழுது மதிப்பிற்குரிய ஐயா திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களும் சுவாமிஜி அவர்களும் குடந்தை வந்தார்கள். பல அன்பர்களை சந்தித்தோம். அவர்கள் விரும்பிய படி பஞ்சாயத்துக்களின் நிதி உதவி பெற்று குடில் வளர்ச்சிக்கு உதவிய பாக்யத்தை பெற்றோம்.

திருச்சி கோட்ட வளர்ச்சி அலுவலராக பணிபுரியும் நாளில் அடிக்கடி சுவாமிஜியை சந்திக்கும் பாக்கியம் பெற்றேன். அன்று மாவட்ட ஆட்சித்தலைவராக பணியாற்றியவர் செல்வி. சாந்தா ஷீலா நாயர் அவர்கள். அவர் கரூருக்கு செல்லும் வழியில் குடிலின் அமைதி, சுற்றுப்புறத் தூய்மை பள்ளிச் சிறுவர்களின் பராமரிப்பைப் பார்த்து குடிலுக்குச் சென்று சுவாமிஜியை பார்த்துப் பேசி மகிழ்ந்தார்கள். அன்று சுவாமிஜி விரும்பியபடி குடில் பிள்ளைகள் தேவை அறிந்து குடில் வளர்ச்சிக்கு ஒரு பாலம் கட்ட காரணமாக இருந்தார்கள்.

மிகப் பெரிய அதிக வருமானம் உள்ள ஒரு பெரும் தொண்டு நிறுவனத்தைத் தான் பயிற்சி அளித்த முதல் நான்கு மாணாக்கர்களை, அன்பு பொழியும் சகோதரர்களாக ஆக்கி, அவர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைக்கும் அளவிற்கு சிஷ்யர்களிடம் அவர் வைத்துள்ள ஆழ்ந்த நம்பிக்கையே காரணம்.

குடிலில் உள்ள சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு எவ்வித கஷ்டமும் நேரக்கூடாது என்பதற்காகவே தாம் மரணமடைந்த சில மணி நேரத்திற்குள் எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி சுவாமிஜி அவர்களின் அடக்கம் அமைதியாக நடைபெற்றது. இதுவே அக்குழந்தைகளிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பைக் காட்டுகிறது.

வள்ளலாரின் வாக்குபோல ஆண்டவர் கருணை மிக்கவர். நடப்பதெல்லாம் நன்மைக்கே என எண்ணி எல்லாமே நடக்கும் என்று நம்மை தெளிவு படுத்தி, உண்மையாவையும் முன் கூட்டியே நிர்ணயித்து கவலைப்படாமல் நடப்பது நன்மையென எண்ணி வாழ்வில் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்ற பெரிய குறிக்கோளை நமக்கு அளித்துச் சென்ற சுவாமிஜி அவர்கள் புகழ் உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும். அவரது அன்பையும் பண்பையும், தன்னலமற்ற சேவையையும் மனதிலே கொண்டு அவருக்கு நம் அஞ்சலியை செலுத்தி அவரது வழியில் நாமும் நடப்போம்.

ஓ—ம்

சா. வேதாரண்யம்

25.4.2001

குடில் சாமி

திரு. ஆர். மகாலிங்கம்
ஜி.விஸ்வநாதன் மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி

நான் குடிலுக்கு மருத்துவ ஆய்வுக்கூட பணிக்காக சகோதர டாக்டர் கனகராஜ் அவர்களோடு செல்வதுண்டு. அப்போது சாமி அவர்களோடு உரையாட சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. குடிலை மேம்படுத்த அவர் பலருடைய ஆலோசனைகளையும் கேட்பார். ஆனால் அவருடைய மனதிற்கும் அனுபவத்திற்கும் எது சரி என்று படுகிறதோ அதைத்தான் செய்வார். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்றெல்லாம் கவலைப்படமாட்டார்.

குடில் குழந்தைகளுக்கு அடிக்கடி தோல்வியாதிகளும், இரத்த சோகையும் வருவதுண்டு. ஒரு முறை அவரோடு பேசும்போது, " சாமீ குழந்தைகளுக்கு கொடுக்கின்ற உணவில் வெறும் உழைக்கக்கூடிய மாவுச்சத்து மட்டும்தான் இருக்கின்றது. நல்ல சத்துக்களை கொடுக்கக்கூடியவைகளை உணவோடு சேர்த்தால் உழைக்கின்ற சக்தியோடு அறிவாற்றலும் நோய் எதிர்ப்பு சக்தியும் உண்டாகும். அதனால் குழந்தைகள் திடகாத்திரமாகவும், திட சித்தம் உள்ளவர்களாகவும் மாறுவார்கள் என்று கூறினேன்.

ஆனால் அவரோ சத்துள்ள உணவு என்று உணவுத்திட்டத்தை மாற்றிக் கொடுத்தால் வேறு விதமான பாதிப்புகள் ஏற்படுமென்று முழுதும் நம்பி அதை ஏற்க மறுத்து விட்டார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உண்மையை உணர்ந்து உணவில் மாற்றம் கொண்டு வந்தார். அது போற்றுதற்குரியது. நானும் சகோதரர் டாக்டர் கேசவராஜும் முதியோர் இல்லம் அமைத்து, இயலாத முதியோர்களை வாழ வைக்க வழிகாட்டுங்கள் என்று அவரிடம் கூறிய போது, " சிறு பிள்ளைகளை வைத்து நிர்வகிப்பது அவ்வளவு கஷ்டமல்ல. ஆனால் அனுபவம் நிறைந்த வாழ்க்கையில் இன்பம், துன்பம் ஏற்ற தாழ்வுகளை அனுபவித்த முதியோர்களை வைத்து நிர்வகிப்பது அவ்வளவு சுலபமல்ல" என்று கூறினார். " அதுவுமின்றி முதியோருக்கு உதவி செய்ய வேண்டும்" என்று ஆர்வமுள்ளவர்கள் தாங்களே முழுநேரத்தையும் அந்த இல்லத்திற்கு செலவு செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் நோக்கம் நிறைவேறுமே தவிர மற்றவர்களை வைத்து நிர்வகித்தால் அவ்வளவு சிறப்பாக இராது." என்றார்கள். " பணியாற்றுகின்றவர்களுக்கு உங்கள் உணர்வு வருவதற்கு வழியே இல்லை. அதனால் முதியோர் இல்லம் ஏனோதானோ என்றுதான் நடைபெறுமே தவிர சிறப்பாக நடைபெறும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது என்றார்கள்.

அதை பின்னாளில் நாங்கள் பங்கு கொண்ட முதியோர் இல்லமே சாட்சியாக இருக்கின்றன. புகழுக்காகவோ, பொருளுக்காகவோ ஆசைப்படாமல்

தன் கருத்துக்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு எளிமையாக இனிமையாக கட்டுப்பாடோடு வாழ்ந்த தியாக சீலரோடு தொடர்பு கொண்டிருந்தமைக்கு நான் பெரிதும் மகிழ்கின்றேன். அவர் விட்டுச் சென்ற பணிக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்யத் தயங்கமாட்டேன் என்று உறுதி கூறி கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

ஒ—ம். ஆர். மகாலிங்கம்
4.5.2001

தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமிகள்

திரு. ராமு. அருணாசலம்
பெருகமணி

--- தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமிகள் பற்றி நான் அறிந்த விஷயங்கள்.

நான் இளைஞனாக இருக்கும் போது, சுவாமிகள் திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீசித்பவானந்த சுவாமிகள் தலைமையில் இயங்கி வந்த மடத்தில் சேர்ந்து பொறுப்பான வேலைகளை கவனித்து வந்தார். கட்டட வேலை சம்மந்தமாக பேட்டவாய்த்தலைக்கு செங்கல் வாங்குவதற்கு ஒரு ஒத்தை மாட்டுவண்டியில் எளிமையாக சென்றுவருவார்கள். அப்போது தேசபக்தர்களால் பெருகமணியில் ஜவஹர் வாலிபர் சங்கம் நடைபெற்று வந்தது.

அச் சங்கத்தை ஸ்ரீசித்பவானந்த சுவாமிகள் திறந்து வைத்தார்கள். தபோவன விழாவில் சங்கத்தார்கள் கலந்து கொள்வோம். மடத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். நம் குடில் சுவாமிகள் அங்கு கட்டட நிர்மாணம், மற்ற முக்கிய பொறுப்புகளை நிர்வகித்து வந்தார்கள்.

சில காலத்திற்கு பிறகு தபோவனத்திலிருந்து பிரம்மசாரி சுவாமிகள் விலகி, தனியாக எலமனூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் காவேரிக்கரையின் இறக்கத்தில் ஒரு சிறு குடில் அமைத்து தங்கி வாழ்ந்து வந்தார்கள். தபோவன மடத்திற்கு வருபவர்கள் நம் சுவாமிகளையும் பார்த்துச் செல்வார்கள். அங்கிருந்தும் நம் சுவாமிகள் இப்போது குடில் இருக்கும் இடத்தில் சிறு நிலம் வாங்கி சாதாரண முறையில் மழையில் ஒழுகாத ஒரு இடம் அமைத்துக் கொண்டார். அங்கு தவ வாழ்வை மேற் கொண்டார். திருப்பராய்த்துறை அன்பர்கள் உதவியாக இருந்தார்கள். பலவருடம் தவவாழ்க்கை வாழ்ந்து சில குழந்தைகளுடன் ஸ்தாபனத்தை துவக்கினார்கள். அக்காலத்தில் நங்கவரம் பண்ணையார், பெருகமணி மாணிக்கம் பிள்ளை நன்செய்நிலம் வழங்கினார்கள். சித்திரைபுத்திரன் என்ற பஞ்சாயத்து அதிகாரி அவர்கள்

சுவாமிகளுக்கு துணையாக இருந்து பஞ்சாயத்துக்கான பண உதவி செய்ய உதவிவந்தார்.

சுவாமிகள் நிதி திரட்டுவதில் அக்காலத்தில்பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. எந்தத் தனிமனிதரும் செய்ய முடியாத வேலையை சுவாமிகள் செய்து முடித்தார்கள் என்றே சொல்லலாம். பின்பு கலெக்டர் மலையப்பன், வாரியார் சுவாமிகள் போன்றோர் உதவிய பிறகு சுவாமிகளுக்கு நிதிப்பிரச்சனை குறைந்தது. குடில் கடின உழைப்பால் சிறப்படைந்த பிறகு வினோபா முதல் எத்தனையோ தலைவர்கள் வியந்து பாராட்டினார்கள்.

சுவாமிகளின் வாழ்க்கை எளிமையானது. அவரது தோற்றம் எளிமையானது. செயல் வலிமையானது. திட்டமிடுதல் தூய்மையானது.அழகுற அமைத்தல், இனிமையாக பேசுதல், எடுத்த காரியத்தை முடித்தல், தீர்க்க தரிசனமான திட்டம் இவைகள் அனைத்தும் சுவாமிகளுக்கு பிறவியிலேயே அமைந்து விட்டது. உழைப்பால் உயர்ந்த மனிதர்களில் சுவாமிகள் இமயம் போன்றவர். சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைக்கலாம்.

ஒருமுறை நாங்கள் சுவாமிகளிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, ஒரு விஷயம் வந்தது. அப்போது சுவாமிகள் சொன்னார்கள். பிரம்மசர்யம் என்பது கூரிய வாளின் மீது நடப்பது போல என பிரம்மசர்ய வாழ்க்கைக்கு உதாரணம் தந்தார்கள். இந்த விளக்கம் எங்களை விட்டு அகலாத ஒன்று.

மகாத்மா காந்திஜி பழனிக்கு வந்தபோது நான் அவரை அருகிலிருந்து பார்த்தேன். அவர் நிறம் தங்கமயமானது. சுவாமிகள் சித்தியடைந்து சமாதியில் வைக்கும் போது பார்த்தேன். சுவாமிகள் நிறமும் தங்கமயமாக இருந்தது. காரணம் இருவரும் உண்மையான பிரம்மசர்ய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.

சுவாமிகளின் திருநாமம் வாழ்க!

ஒ—ம் ரா.மு. அருணாசலம்
பெருகமணி

வாழி நீ எம்மான்

(வி. வெங்கடரமணன்,
குடில் ஆரம்பப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர்)

ஓர் ஐந்து ஆண்டுகள் தனித்தவம்
இயற்றிய குடிலின் தவத்திருவே நீ வாழி!
அன்பையே அறமாகக் கொண்ட
மனித தெய்வமே என்றென்றும் நீ வாழி!

அருள் உள்ளம் அமையப் பெற்ற
ஆன்மீகத் திருவுருவே நித்தம் நீ வாழி!
ஆதரவற்ற குழந்தைகளின் அணையா
அற்புத ஜோதியே என்றும் நீ வாழி!
கண்களில் கருணை பொங்கும்
அருள் அன்னையின் மறுஉருவமே நீ வாழி!
எளியோர் துயர்கண்டு மனம்கசிந்த
மாதவப் பெருமானே அருளாளா நீ வாழி!
மனித சேவை மகேசன் சேவையே
என வாழ்ந்திட்ட ஞானியே நீ வாழி!
கண்ணன் போதித்த கர்மயோகம்
உள்ளத்தில் கலந்திட்ட உத்தமனே நீ வாழி!
ஸ்ரீராமனின் சத்தியத் திருவுருவை
உன்னிலே கொண்ட சாந்தனே நீ வாழி!
அனுமனின் பிரம்மசர்ய வீர்யம்
மேனியிலே பளிச்சிட்ட உயர்ந்தவா நீ வாழி!
புனிதன் புத்தனின் ஆன்ம நேயத்தை
அருளாகப் பெற்று மகிழ்ந்தவா நீ வாழி!
எல்லையற்ற ஏசுவின் கருணையை
ஏற்றமுடன் ஏற்றுக் காட்டியவா நீ வாழி!
நபிகளின் நல்லருள் வாழ்வை
முற்றிலுமாக உணர்ந்த சொரூபனே நீ வாழி!
குருமகராஜின் குறைவற்ற ஆசியால்
குன்றென நிமிர்ந்து நின்றவா நீ வாழி!
வீரன் விவேகானந்தனின் வீரஉரையால்
வீறு கொண்டு எழுந்திட்ட சிரேஷ்டனே நீ வாழி!
மாதர்குல மாணிக்கம் அன்னை சாரதாவின்
அருள் உபதேசத்தால் அருள்பெற்றவாநீ வாழி!
ஆதி முதல்வனின் அருட்கிருபையால்
ஓங்கிவளர்ந்த ஓங்கார நாயகனே நீ வாழி!
உயிர்மூச்சாம் சேவையை உலகிற்கு
உணர்த்திட்ட உத்தம ஜீவாத்மா நீ வாழி!
குடில் எனும் அறத்தின் ஆலயத்தை
பாங்குற வளர்த்திட்ட பண்பாளா நீ வாழி!
தூய்மையே தெய்வம் எனப்பகர்ந்திட்ட
தவத்திரு பிரம்மசாரி அடிகளே நீ வாழி!

ஏழைகளை தெய்வமாகக் காணுங்கள்
என ஒங்கி முழங்கிய அச்சுதனே நீ வாழி!
வல்லமையை மறைத்து வஞ்சனை செய்யாதீர்
என போதித்த சத்குருவே நீ வாழி!
காவிரிக்கரை குடிலில் இரண்டறக் கலந்த
பரமஹம்ஸரின் பரம பக்தனே நீ வாழி!
மரணமிலாப் பெருவாழ்வில் கலந்திட்ட
மாந்தருள் தெய்வமே தூயவனே நீ வாழி!
அமரர் ஆசனத்தில் பாங்குற அமர்ந்து
அருளைப் பொழிவாய் அருளாளா நீ வாழி!

ஒ–ம் வி. வெங்கடரமணன்.

எனது இதயதெய்வம்
ஸ்ரீமத் சுவாமி ராமசுவாமி அடிகள்

குடில் பிரம்மசாரி வீரசந்திரன் அவர்கள்

தவத்திரு சுவாமிகள் திக்கற்ற ஏழை அனாதை சிறுவர்கள் வாழ்வில் ஒளிவீசச் செய்த ஞான சூரியன். அவர் ஒரு அவதார புருஷர். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அனுப்பிய தூதுவர். குடிலின் குழந்தைகளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்தவர் இவரே. வாழ்க்கையின் மூலம் விளக்கம் தந்த மாமனிதர் இவரே.

இறைவனின் திருநாமத்தை எந்த இடத்தில் உச்சரிக்கின்றோமோ அந்த இடம் தூயதாய் விடும் என்பது ஆன்றோர் வாக்கு. அத்தகைய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நாமத்தை உச்சரித்த வண்ணம் இருந்த மகான் இடத்திலே நாம் எத்தகைய பக்தி வைக்க வேண்டுமென்று சொல்லாமலே விளங்கும். பிரதிபலன் எதையும் எதிர்பாராத கருணைக் கடலாக விளங்கினார் சுவாமிஜி. துறவும் தூயதொண்டினையும் தமது வாழ்வின் லட்சியமாக கொண்டிருந்தார்.

1949 ம் ஆண்டிலே மகத்தான ஓர் ஆன்மீகப்பணிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என சுவாமிஜி சமுதாயத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த ஏழை அனாதை சிறுவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் கல்வி, மருத்துவம் மற்றும் அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக செய்து நிரந்தரமாக நல்வாழ்க்கை வாழ வழி வகுத்துக் கொடுத்தார். நாயன்மார்கள் வந்து ஈசனைப்பற்றிப் பாடிச்சென்ற தலங்களில் திருப்பராய்த்துறையும் ஒன்று. ஈஸ்வரன் குடிகொண்டு அருள் பாலிக்கும் தளம் அமைந்துள்ள பராய்த்துறை மண்தான் தமது தொண்டிற்கு

ஏற்ற இடம் எனத்தீர்மானித்த சுவாமிகள் இங்கு ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்ற ஸ்தாபனத்தை உருவாக்கினார். பகவானின் தூதர் அல்லவா இவர். எனவே அவரது பெயரையே ஸ்தாபனத்திற்கும் வைத்தார். அகத்திலும் புறத்திலும் தூய்மையே வடிவாக இருந்தவர் சுவாமிகள். அல்லதைத் துறந்து நல்லதை ஏற்பது அன்னப்பறவையின் குணம். இப்பறவையை மையமாகக் கொண்டும், உலகமாந்தரின் பசிப்பிணி போக்கும் நெற்கதிரை அதையடுத்தும், ஞானத்தை தரும் சூரிய பகவானின் ஒளிர்க்கற்றைகளை அதற்கடுத்தும் வைத்து, மகத்தான உண்மைகளை விளக்கும் ஒரு சின்னத்தை தேர்ந்தெடுத்தார்.

அகத்திய முனிவர் பரந்த காவிரியை தம் தவவலிமையால் சிறு கமண்டலத்துள் அடக்கியது போல, சுவாமிகள் அவர்கள் தமது பரந்த எண்ணங்களை, பரந்த தொண்டினை குடில் என்னும் இச்சிறு மடாலயத்தின் மூலம் உள்ளடக்கி, உரிய காலத்தில் வெளியிட்டார். அகத்தே அமைதியும், புறத்தே இயக்கத் துடிப்பும் மிக்கவர். ஊசிகள் சிதறிய இடத்தில் காந்தத் துண்டு ஒன்றை வைத்தால், ஊசிகள் அதனிடத்தே ஒட்டிக் கொள்ளுவது போன்றே இம் மகான் மக்களுடைய மனதைகவரும் தெய்வீக இயல்பு கொண்டு மிளிர்ந்தார். அசாதாரணமான நிகழ்வுகள் சில இவரது ஜீவிதத்துள் நிகழ்ந்துள்ளன. இவர் கூறுகின்ற ஒவ்வொரு சொல்லும் அறத்தின் விளக்கமாகத்தான் திகழும். இவைகளைக் கண்டுணர்ந்த பக்தர்கள் குடிலின் அன்பர்களானார்கள். பக்தி என்னும் நீர் வார்த்து தவம் என்னும் வேலி அமைத்து 5 ஆண்டுகளில் வைராக்யம் என்ற மாபெரும் மரம் இவருள்ளே உருவாயிற்று. அதன் காரணமாக மகத்தான செயல்கள் குடிலிலே நடந்தன. இதன் பலன் 1954 ம் ஆண்டில் அவரது கனவு நினைவாகத் தொடங்கியது. முதன்முதலில் பஞ்சபாண்டவர்கள் போன்று 5 மாணவர்கள் சேர்ந்தார்கள். சுவாமிகளின் அருள் அணைப்பில் நல்வாழ்வு வாழ தக்க மாணவர்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தனர். இதனைக்கண்ட சுவாமிகள் சிலகாலம் கங்கையைப் போல பிரவாகித்தும் சில காலம் வைகையைப் போல் சுருங்கியும் போன்றதொரு நிலை சேவையில் ஏற்படாமலிருக்க என்றும் ஒரே மாதிரியாக குடில் பணி நடக்க வேண்டும் என்று, இதுவரை தானாக வந்த நன்கொடைகளை ஏற்று, ஸ்தாபனம் நடத்தி வந்த சுவாமிகள், நிரந்தர நிதி தேவை என உணர்ந்தார். நலிந்தோர்களின் நலனை உத்தேசித்து தமது உயிரையும் பரித்தியாகம் செய்து அலைகடல் கடந்தும், வானில் பறந்தும் மலேயா, சிங்கப்பூர், பினாங்கு, இலங்கை என வெளிதேசங்களுக்கு எல்லாம் விஜயம் செய்து, குடிலுக்காக பொருளீட்டினார்கள்.

தானம் கொடுக்கும் சக்தியுள்ள மனிதர்களை இனம் கண்டு பொருளாதார நிலையை உயர்த்தப்பாடுபட்டார்கள். தேனீக்கள் தேனை சேகரிப்பது போல சிறுகச்சிறுக தனம் சேகரித்தார். காலம் சுழன்றது.

பகவானின் பேரருள் குடிலை வளர்த்தது. இன்று நீங்கள் காணும் குடில் அவரது பேரருளின் மறுவடிவமே ஆகும்.

யாருடைய நிழலில் வாழ்ந்தே னோ
யாருடைய நிழலில் வளர்ந்தேனோ
யாருடைய ஆசியால் இந்நிலை பெற்றேனோ
அந்த மகாத்மாவின் பொற் பாதங்களுக்கு
தொண்டனின் மனமார்ந்த நமஸ்காரம்

தொண்டன்
ஒ—ம் குடில் பிரம்மசாரி வீரசந்திரன்

நான் பார்த்த சுவாமிஜி

குடில் பிரம்மசாரி வீரசந்திரன் அவர்கள்

குடில் என்றாலே பகவான் குருமகராஜின் நினைவு மனதிலே தோன்றும். பசுமை நிறைந்த தோப்புகள், தூய்மை நிறைந்த ஆஸ்ரமம் என்ற நினைவுகள்தான் தோன்றும். எனது ஐந்தாவது வயதில் உலகமே தெரியாத நிலையில் ஆஸ்ரமத்தில் சேர்ந்தேன். தாயும் தந்தையுமாக அவரது அரவணைப்பில் வளர்ந்தேன். படித்தேன். வாலிபப்பருவம் எய்தினேன். பல்லாண்டுகளாக சுவாமிஜியை பார்த்து வந்த என்னுள், எங்களுக்காக அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் ஒன்றே பசுமரத்தாணி போல் பதிந்தது.சேவை ஒன்றையே நோக்கமாகக் கொண்டேன். நாற்பது ஆண்டுகளாக குடிலின் பணி ஒன்றையே கவனத்தில் கொண்டு சேவை செய்து வருகின்றேன். ஒரு நாள் சுவாமிஜி அவர்கள் என்னைக் கூப்பிடுவதாகத் தெரிந்தது. அப்போது இரவு மணி 11. சுவாமிஜியை சந்தித்துவிட்டு படுக்கைக்கு வந்து விட்டேன். சுவாமிஜியிடமிருந்து அழைப்பு. சென்றேன். "வீர சந்திரா... உன்னை பார்த்து வருகின்றேன். கட்டட நிர்மாணப்பணியில் உனக்குள்ள ஆர்வம் அதிகமாக இருக்கிறது. மாதாமாதம் உணவு விடுதிப் பொறுப்பை மாற்றி மாற்றி கொடுப்பதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இனிமேல் நீ தான் தொடர்ந்து உணவு விடுதிப்பொறுப்பை ஏற்க வேண்டும். இடையிடையே உனக்கு மிகவும் பிடித்தமான கட்டடப்பணிகளையும் செய்துவா" என்றார். "சரி சாமி" என்று சொல்லி மகிழ்வோடு ஏற்றேன். இன்று வரை கிட்டத்தட்ட 11 ஆண்டுகளாக உணவு விடுதி பொறுப்பை பார்த்து வருகின்றேன். அவரது போதனையால் சமையல் கலைகளையும் நன்கு கற்றுக் கொண்டேன். நேரம் கிடைத்த போதெல்லாம் கட்டடப்பணிகளையும் கவனித்து வந்தேன். கட்டடம் கட்டுவதிலும் தேர்ச்சி பெற்றேன். குடிலில் " பயிற்சியாளர் விடுதி" என்ற பெயரில் கட்டடம் கட்டி முடிக்கும் படி சுவாமிஜி எனக்கு கட்டளை இட்டார்கள்.

' தொழில் கொத்தனார்கள் யாருமின்றி நானே ஒரு கட்டடத்தை உருவாக்கப் போகிறேன்" என நினைத்து நினைத்து மகிழ்ந்தேன். பள்ளி மாணவர்களை உதவிக்கு வைத்துக் கொண்டு 20 க்கு 32 என்ற அளவுள்ள கட்டடத்தை மூன்றே மாதத்தில் கட்டி முடித்தேன். சுவாமிஜி அவர்களே இக்கட்டடத்தை திறந்து வைத்தார்கள். இதற்கெல்லாம் காரணம் சுவாமிஜி அவர்கள் தந்த ஊக்கம்தான். எப்பேர்ப்பட்ட வேலையையும் சிறு மாணவர்களுக்குக் கூட புரியும்படியாக வெகு அழகாக கூறுவார்கள்.

" இந்த கட்டடத்தை பார்க்கும் போதெல்லாம் குடில் மாணவன் ஒருவனால் கட்டப்பட்டது என்று சொல்லும் அளவிற்கு அழியாத ஒரு சின்னமாக அமைந்து விட்டது." என சுவாமிஜி கூறியிருக்கிறார்கள். எனது சேவைக்கு பெருமை சேர்க்கும் பணியாக இது அமைந்து விட்டது.

நான் சிறுவனாக இருந்த போது குடில் சுவாமிகள் எப்படி எங்கள் கூட்டத்தை நடத்தினார் என எனது இளம் பருவத்தை சிறிது திரும்பிப் பார்க்க ஆசைப்படுகின்றேன்.

சிறுவர்களின் சுவாமிஜி:

1961 ம் ஆண்டு, குடிலில் சேர்ந்தேன். அப்போது குடிலில் 350 மாணவர்கள் இருந்தார்கள். அதிலும் " கால்தரம்" என்று சுவாமிஜியால் அழைக்கப்பட்ட என்னைப்போன்ற மிகச்சிறிய மாணவர்கள் சுமார் 25 முதல் 30 பேர் வரை இருப்போம். அப்போதெல்லாம் சுவாமிஜியை பார்த்துச் செல்ல அன்பர்கள் பலரும் வருவார்கள். அவர்கள் பழங்களையோ, இனிப்புகளையோ கொண்டு வருவார்கள். சுவாமிஜியிடம் கொடுத்து ஆசி பெற்றுச் செல்வார்கள். அப்படி வந்த பிரசாதங்களை எங்களுக்கு பெரிய மாணவர்கள் மூலம் வழங்க சுவாமிஜி அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். நாங்கள் அவற்றை சாப்பிடும் போது எங்களை சுற்றி சுற்றி வந்து புன்னகை பூத்த வண்ணமாக இருப்பார்.

அப்போதெல்லாம் சுவாமிஜியை ஆஸ்ரமத்தில் பார்ப்பது கடினம். குறிப்பிட்ட நேரத்திலும் குறிப்பிட்ட நாட்களிலும் தான் பார்க்க முடியும். பெரும்பாலும் பிரயாணம் சென்று விடுவார்கள். அவர் ஆஸ்ரமத்தில் இருக்கும் போது ஒரு தாய் தனது சேயினிடத்தில் காட்டும் அன்பை விட அதிகமாகவே அன்பு செலுத்துவார்கள்.

திங்கட்கிழமை தோறும் மாணவர்களுக்கு வெள்ளை சட்டையும் நீலநிற டிராயரும் அணிவித்து எங்களை திருப்பராய்த்துறை சிவன் கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். வழிபாடு செய்து திரும்புவோம். மாதம் ஒரு முறை மாணவர்களை கூட்டமாக கூட்டுவார்கள். அதற்கு ' சாமி வகுப்பு" என்று பெயர். இவ்வகுப்பு இரண்டு வகையாக இருக்கும். சிறு குழந்தைகளுக்குத் தனியாகவும், பெரிய மாணவர்களுக்குத் தனியாகவும் நடக்கும். குழந்தைகள் கூட்டத்தில் பல் தேய்ப்பது, சுத்தமாக அழுக்குப்போக குளிப்பது, ஈரம் இல்லாமல்

தலையையும் உடம்பையும் துடைப்பது, சுத்தமான உடைகளை உடுத்துவது போன்ற விஷயங்களில் சலிக்காமல் ஒவ்வொரு தடவையும் அறிவுரை கூறுவார்கள். தலை, கால்களுக்கு எண்ணெய் தேய்ப்பது, நெற்றியில் சந்தனப்பொட்டு வைப்பது என ஒவ்வொன்றாகச் சொல்லுவார்கள். சாப்பிடும் போது கைகளை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும். நன்கு பற்களால் மென்று சாப்பிட வேண்டும் எனக் கூறுவார்கள். எல்லாவற்றையும் கூறிவிட்டு, " சாமி சொல்ல வேண்டியது எல்லாம் சொல்லியாச்சு. நீங்கள் ஏதாவது சொல்ல நினைத்தால் சொல்லலாம்." என சுவாமி கூறுவார்கள். நாங்கள் " சாமீ, பெரிய மாணவர்கள் எங்களை அடிக்கின்றனர். இன்னும் அதிகமாக உணவு வேண்டும். வேலையை குறைக்க வேண்டும்' என சொல்வோம். அதற்கு சுவாமிஜி " குழந்தைகளே! நீங்கள் சொன்ன பிரச்னை அனைத்தையும் தீர்த்து விடலாம். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்" எனக் கூறி அனைவருக்கும் மிட்டாய் கொடுப்பார்கள். கூட்டம் முடியும். மறுநாள் பெரிய மாணவர்கள் கூட்டம் நடக்கும். அதில் சிறு குழந்தைகளை எவ்வாறு நடத்த வேண்டும் என அறிவுரை கூறுவார்கள். சமையல், பரிமாறுதல், துணிகள் சுத்தம், சுற்றுப்புற சுத்தம் செய்வது, செடிகளை பராமரிப்பது, பசுமடத்தை பராமரிப்பது, பூஜை செய்வது, தியானம் செய்வது, பெரியவர்களிடம் மரியாதையாக பேசுவது என்பவைகளை குறித்து அறிவுரை கூறுவார்கள். மாணவர்களின் நிலைக்கு ஏற்ப அவர்கள் மனதில் பதியுமாறு விளக்கமாக கூறுவார்கள். குழந்தையும் தெய்வமும் மனத்தால் ஒன்று என்பது போல குடில் குழந்தைகளும் சுவாமிஜியும் ஒன்றி இருப்பார்கள்.

சுவாமிஜி அடிக்கடி மாணவர்களிடத்திலே கூறுவது " நமக்கெல்லாம் தந்தை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தாய் அன்னை சாரதா தேவியார், சகோதரன் சுவாமி விவேகானந்தர் என்று சொல்லிச் சொல்லி தாய், தந்தை இல்லாக்குறையை தீர்த்து வைப்பார்.

சிறிய மாணவர்கள் எப்போதாவது டூர் போக வேண்டும் என்றால் குடில் டிராக்டரை வரச் செய்து ட்ரெயிலரை அதில் இணைத்து அனைத்துச் சிறுவர்களையும் ஏற்றிவிட்டு தானும் ஏறிக்கொள்வார்.விளையாட்டு மைதானத்தை 3 வட்டம் மெதுவாக ஒட்டச் சொல்லுவார். முடிந்ததும் " டூர் எப்படியிருந்தது" என்று கேட்பார். " நல்லாயிருந்தது சாமி" என்போம். வருடத்தில் இரண்டு மூன்று முறை இப்படி நடக்கும். விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்காகவே குடை ராட்டினம், பெட்டிராட்டினம், சறுக்கு மேடை, ஊஞ்சல் சீசா, பார் போன்ற விளையாட்டு சாதனங்களை அமைத்தார்கள். தானே முன் நின்று மாணவர்களை அமரச் செய்து, விளையாட வைப்பார்கள். மாணவர்களோடு சேர்ந்து தாமும் மகிழ்வார்.

சில நினைவுகள்:

பல சமயங்களில் சுவாமிஜியுடன் தனிமையில் பலவிஷயங்களைப் பற்றி பேசுவதுண்டு. நினைவில் உள்ளவற்றை கூறுகிறேன். சுவாமிகள் தங்கியிருந்த கட்டடத்திற்கு பெயர் " அமைதி இல்லம் ". அங்கு சென்று சாமான்களை சரி பார்ப்பேன். ஒரு சமயம் அங்கு சென்றபோது அங்கு இரண்டு காவிநிற துணிப்பைகள் இருந்தன. அவைகளை சுவாமிஜியிடம் காட்டி " இந்தப் பையெல்லாம் எதற்கு சாமீ" என்று கேட்டேன். சுவாமிஜி அவர்கள் ' அப்பா, சாமி பிரயாணம் செல்லும் காலத்தில் கையில் எடுத்துச் செல்லும் பை. எல்லாமே இந்தப் பையில்தான் இருக்கும்" என்றார்கள். அதோடு கர்ம வீரர் காமராஜரை நினைவு கூர்ந்தார்கள். காமராஜர் முதன்மந்திரியாக இருந்த காலத்தில், சுவாமியை தமது அருகில் வைத்துக்கொண்டு போன் மூலம் சுவாமிகள் பார்க்க வேண்டிய பிரமுகர் இடம் " குடில் சுவாமிகள் வருவார்கள். அவர் கையில் காவி நிறப் பை வைத்திருப்பார். அவர் வந்தால் எதைக் கேட்டாலும் செய்து தாருங்கள்" என்று காமராஜர் சொன்னதை சொல்லி இந்தப் பை அப்படிப்பட்ட பையப்பா" என்றார்கள்.

இதைப் போலவே மற்றொரு சமயம் குடிலின் சின்னம் பொருந்திய 4 சிறு கொடிகள் இருந்ததைப் பார்த்து சுவாமிகளிடம் "சாமி இந்தக் கொடிகளை எப்போது எங்கு கட்டுவது" என்று கேட்டேன். அதற்கு சுவாமிஜி அவர்கள் " அப்பா ஆரம்பகாலத்தில் எல்லாம் குடில் காரில் 4 பக்கமும் இந்த ஆஸ்ரமக் கொடி கட்டப்பட்டிருக்கும். ஒருமுறை மைசூர் மகாராஜாவை பார்க்க நங்கவரம் பண்ணையாருடன் சாமியும் சென்றிருந்த போது அங்கு ஒரு பெரிய கலவரம் நடந்து கொண்டிருந்தது. அதனால் அங்கு உள்ள காவலர்கள் " எந்த வகையான கொடியையும் எந்த வாகனத்திலும் கட்டாதீர்கள். இல்லாவிட்டால் கலவரத்தில் காரை நொறுக்கி விடுவார்கள்." என்றனர். அப்போது கழட்டிய கொடிதான். மகாராஜா அவர்கள் அருகிலுள்ள மலையில் ஏறி மறைந்து கொண்டார். 3 நாட்கள் கழித்து கலவரம் ஓய்ந்ததும் மன்னரவர்கள் திரும்பி வந்தனர். பின்பு அவரைப் பார்த்து பேசிவிட்டு திரும்பினோம். " அன்றையிலிருந்து காரில் கொடி கட்டுவது நிறுத்தப்பட்டது." என்று கூறி முடித்தார்.

மற்றொரு சமயம் " சாமி சிவன் ராத்திரிக்கும் வைகுண்ட ஏகாதசிக்கும் மட்டும் ஏன் சாமி உப்பில்லாமல் சாப்பிடுகிறோம்" எனக் கேட்டேன். அதற்கு சுவாமிஜி அவர்கள் " அந்தக் காலத்தில் ரிஷிகளும், மகான்களும், முனிவர்களும் காட்டில் தவம்செய்து வந்தார்கள். அவர்கள் காய் கனிகளை உண்டு வந்தார்கள். உப்பும், காரமும் தான் மனிதனின் ஆசைகளையும் ஆணவத்தையும் அகங்காரங்களையும் உண்டு பண்ணக்கூடியது. எனவே

தான் இவைகளை கட்டுப்படுத்தவேதான் வருடத்தில் இரண்டு நாட்கள் உப்பு இல்லாமல் சாப்பிடுகின்றோம்" என்று எனது ஐயத்தை போக்கினார்.

ஒரு தடவை நான் ஒரு தவறு செய்து விட்டேன். என மனசாட்சி உறுத்தியது. சுவாமிஜியிடம் சென்று என் தவறைக் கூறினேன். அதற்கு சுவாமிஜி கூறியது, " அப்படியாப்பா தவறு செய்துவிட்டாயா. நல்லது மனிதனாகப் பிறந்தவர் தவறு செய்யாமல் இருக்க முடியாது. அவ்வப்போது சில ஆசைகள் வரத்தான் செய்யும். மனதைக் கட்டுப்படுத்த பழகிக் கொள் என்றார்கள். அன்று முதல் தவறு செய்யும் எண்ணம் என்னை விட்டு அகன்றது. அவரது அன்பால் என்னை தவறுகள் செய்யாத மனிதனாக மாற்றி விட்டார்.

சுவாமிஜி அவர்களின் திருவடிகளில் சரணடைவோம். அவர் வாழ்ந்து காட்டிய நெறியில் சென்று சிறப்படைவோம்.

தொண்டன்

ஒ-ம் குடில் பிரம்மசாரி வீரசந்திரன்.

குடில் ஸ்தாபகர் பிரம்மசாரி ராமசுவாமி

திருப்பராய்த்துறை எல். பாலகிருஷ்ணன் செட்டியார்

சுவாமிகளின் ஆரம்பகால நண்பர். அவரது பேச்சு பதியப்பட்டுள்ளது

1940ல் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் திருப்பராய்த்துறைக்கு வந்தார்கள். தபோவனம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்தன. கட்டட நிதிவசூல் செய்ய சித்பவானந்தா அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார்கள். அவர் இல்லாத போது கட்டட வேலை மேற்பார்வைக்கும் ஆஸ்ரமத்திற்கு வருபவர்களுக்கு பதில் சொல்லவும் ஒரு ஆள் அவருக்கு தேவைப்பட்டது. அப்போது நஞ்சப்பா அவர்கள் சுதந்திரப் போராட்டத்திலும், கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டு வந்தார். அவருக்கும் சித்பவானந்தருக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. அவரிடம் சித்பவானந்தர் தமது உதவிக்கு ஒரு நல்ல பிரம்மசாரி இளைஞர் தேவை எனக்கூறினார். அவரும் பிரம்மசாரி ராமசுவாமியை அனுப்பி வைத்தார். ராமசாமி அவர்களும் தபோவனம் வந்து சேர்ந்தார். பிரம்மசாரி அவர்களும் கட்டடவேலைகளை கவனித்து வந்தார்கள்.

தபோவனம் வரும் அன்பர்கள் பிரம்மசாரி அவர்களையும் சந்திப்பார்கள். நல்ல பழக்கம் ஏற்பட்டது. தபோவனக்கட்டடம் முடிந்து திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு வந்திருப்பவர்களுக்கு மாலை 5 மணிவரை உணவு வழங்கப்பட்டது. பிரம்மசாரியும் தபோவனத்தில் எல்லாபணிகளிலும் முக்கிய பங்கு வகித்தார். சிலகாலத்திற்கு பின் வெளியாத்திரை போக விரும்பினார். சுவாமி மலையில் கொஞ்சநாள் இருந்தார்கள். சுவாமிமலையில் ஒரு

லாரி ஷெட்டில் தங்க இடம் கிடைத்தது. அமைதியாக அங்கு இருந்து வந்தார். காலையில் ஸ்நானம் செய்து சுப்பிரமணிய சுவாமி சன்னிதியில் அமர்ந்து நெடுநேரம் தியானம், பிரார்த்தனை செய்வார். மதியம் கோவிலில் கிடைக்கும் பிரசாதத்தை சாப்பிடுவார்.

சுவாமிமலையில் பிரம்மசாரி எப்படியிருக்கிறார் எனப்பார்த்து வர ஒரு நபரை அனுப்பினேன். அவர் பிரம்மசாரியுடன் ஒரு நாள் இருந்து விட்டு வந்தார். " காலை குளியல்" முடிந்த பின் கோவிலில் தியானம். கோவில் பிரசாதம் தான் அவருக்கு மதிய ஆகாரம். இரவில் அவல் பேரீச்சம்பழம், வாழைப்பழம் சாப்பிடுகிறார் என என்னிடம் கூறினார். கொஞ்ச நாள் அங்கு இருந்து விட்டு தபோவனத்திற்கு திரும்பினார். தொடர்ந்து ஆஸ்ரம வேலைகளை கவனித்து வந்தார். சில காலம் சென்றபின் ஒருநாள் என்னிடம் "நான் தனியாக இருக்க விரும்புகிறேன்" என தனது விருப்பத்தை தெரிவித்தார். காவிரிக்கரை ஓரமாக ஒரு சிறு குடில் அமைத்து தங்கலாம் என இருக்கிறேன்" என்றார். சுவாமி சித்பவானந்தரிடம் பிரம்மசாரி தனது எண்ணத்தை தெரிவித்தார். சித்பவானந்த சுவாமிகளும், "சரி. உன் இஷ்டம் போல் செய்" என்று சொல்லி விட்டார். அதன் பின் பிரம்மசாரி எலமனூர் ரயில்வே ஸ்டேசனுக்கு எதிரில் காவேரி நதிக்கு போகும் வழியில் மேல்புறமாக சிறு கீற்றுக் கொட்டகை அமைக்கப்பட்டது. சுற்றிலும் மலர்ச்செடிகள் நட்டு வைத்தார். சிறு கிணறு ஒன்றும் தோன்றப்பட்டது. குருதேவருக்கு தனியாக ஒரு பூஜை அறை அமைக்கப்பட்டது.சமையலுக்கு தேவையான பொருட்களும் பாத்திரங்களும் வாங்கித்தந்தேன். இந்த குடிலில் பிரம்மசாரி வாசம் செய்து வந்தார்.

சில காலத்திற்கு பின் பிரம்மசாரிக்கும் சுவாமி சித்பவானந்தர் அவர்களுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இது எல்லா இடங்களிலும் இருப்பது சகஜம் என நினைத்து அவரிடம் எதையும் பேசவில்லை. பிரம்மசாரியும் வேறெங்காவது தனியே தங்கியிருக்க விரும்பினார். திருப்பராய்த்துறைக்கும் பெருகமணிக்கும் இடையில் இப்போது குடில் இருக்கும் மாந்தோப்பு பொருத்தமானது என தேர்ந்தெடுக்கப்பட்டது. "இந்த இடம் அருகில் ரயில்வே ஸ்டேஷனும் பக்கத்தில் சிவன் கோவிலும், இடம் ஒரு ஒதுக்குப்புறமாகவும் அமைந்தது நல்லதே" என பிரம்மசாரி அபிப்ராயம் தெரிவித்தார்.

அந்தத் தோப்பில் வெகுவிரைவில் ஆஸ்ரமம் கட்ட பிரம்மசாரி விருப்பம் தெரிவித்தார். தாம் அடுத்த தோப்பில் தங்கியிருக்க சிறிது இடம் கேட்டு துணிக் கொட்டகை போட்டு அதில் தங்கினார். உணவு, பிரார்த்தனை, படுக்கை எல்லாம் அங்குதான். வெகு விரைவில் அந்த தோப்பில் பகவான் பரமஹம்ஸருக்கு கோவில் கட்டப்பட்டது. ஒரு நல்ல நாளில் பிரம்மசாரி அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணி ஆகியோரின் படங்களை பிரதிஷ்டை செய்தார். பக்கத்து தோப்பு வாசம் முடிந்து புதிதாக கட்டப்பட்ட ஆஸ்ரமத்துக்கு இடம் பெயர்ந்தார். ஆஸ்ரமத்தில் சும்மா இருப்பதைவிட ஏதாவது தொண்டு செய்ய எண்ணினார். அவருக்கு ஹரிஜன மக்களிடம் எப்போதுமே விருப்பம்

அதிகம். சில ஹரிஜன மாணவர்களை ஆஸ்ரமத்தில் பராமரிக்க எண்ணினார். அவர்களுக்கு காவேரி குளியல் சுத்தமான ஆடை தந்து, பூஜையில் ஈடுபடுத்தி கல்வியை கற்றுக் கொடுப்பது எனவும் முடிவு செய்தார் பிரம்மசாரி. 10 ஹரிஜன மாணவர்கள் பிரம்மசாரி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அந்த ஹரிஜன மாணவர்களை காவிரியில் குளிக்க வைத்து, பூஜையில் ஈடுபடுத்தினார். அவர்களுக்கு தக்கவாறு கல்வியை போதித்தார். அம்மாணவர்கள் பகலில் உணவு சாப்பிட்டு ஆஸ்ரமத்தில் தங்கியிருப்பார்கள். இரவானாதும் அவரவர் வீட்டிற்கு சென்று விடுவார்கள். இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருந்தது. இது பற்றி அவர்களிடம் விசாரித்ததில் அவர்கள் ' சாமி தினமும் முருங்கைக்காய் சாம்பார் வாழைக்காய் கறி, பருப்பு ரசம் மட்டுமே போடுகின்றனர். எங்கள் நாக்கு செத்து விட்டது. நாங்கள் மட்டன் (மாமிசம்) மீன் கருவாடு சாப்பிட்டு பழக்கம். இங்கு அது இல்லாததால் நாங்கள் வீட்டிற்கு சென்று விடுகிறோம்." என்றார்கள். அத்தோடு இந்த ஹரிஜன மாணவர்கள் திட்டம் கைவிடப்பட்டது.

தமிழக முதலமைச்சர் காமராஜ் அவர்கள் பிரம்மசாரியின் அனாதை மக்கள் சேவையை பெரிதும் போற்றி தேவையான நிதி கிடைக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார். பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள், தேவஸ்தானங்கள் குடிலுக்கு நன்கொடை தரலாம் என அந்த உத்திரவில் கண்டிருந்தது. சிறிது சிறிதாக குடிலின் பொருளாதாரம் உயர்ந்து கொண்டே வந்தது. முதலில் திக்கற்ற 5 சிறுவர்கள் குடிலில் சேர்க்கப்பட்டனர். அப்போது குடிலில் பள்ளிக்கூடம் இல்லாததால் அந்த சிறுவர்கள் பெருகமணியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். பின்னால் குடிலிலே பள்ளிக்கூடமும் மாணவர்கள் தங்க குருகுல கட்டடமும் உணவு விடுதி கட்டடமும் கட்டப்பட்டன. பரமஹம்ஸர் பேரருளால் படிப்படியாக குடில் வளர்ச்சி பெற்றது. நிறைய அனாதை குழந்தைகள் சேர்ந்தனர். தமிழ்நாட்டின் அனாதை சிறுவர்களை ஆதரிக்கும் இல்லமாக இந்தக் குடில் பலராலும் போற்றப்பட்டது. இதற்கெல்லாம் காரணம் கலெக்டர் மலையப்பனும், ஜஸ்டிஸ் மகராஜனும், வாரியார் சுவாமிகளும் ஆகிய அன்பர்கள் பெரும்பாடு பட்டு குடில் வளர்ச்சியில் அக்கறை கொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக குருமகராஜின் ஆசிகள்தான் முக்கிய காரணமாக அமைந்தது. பிரம்மசாரி ராமசுவாமி அவர்களின் தன்னம்பிக்கை, தளராத உழைப்பு, சுயநலமற்ற தொண்டு ஆகியவைகளே ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்ற ஆஸ்ரமம் தோன்றக் காரணமாக இருந்ததை அனைவரும் அறிவர். ஓம் சாந்தி. பிரம்மசாரி அவர்களின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறேன்.

பேச்சு பதிவு செய்யப்பட்டது.
திரு. பாலகிருஷ்ணன் செட்டியார்
திருப்பராய்த்துறை
25.6.2001

என்னை ஆட்க்கொண்ட அருள் தெய்வம்

குடில் பிரம்மசாரி செந்தில்

இருபத்தி இரண்டு வயது இளைஞனாக இன்று நான் அமரரான குடில் சுவாமிஜி அவர்களின் அருளாசிகளை துணையாகக் கொண்டு குடில் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றேன்.

மனிதனுடைய ஒவ்வொரு நொடியின் வாழ்வும் ஈஸ்வரனால் நிர்ணயிக்கப்படுகின்றன என ஆன்றோர்கள் கூறுகின்றனர். அவ்வாறே எனது 5 ம் வயதில் குடிலில் சேர்க்கப்பட்டேன். 10 ம் வகுப்பை படித்து முடித்தேன். பின் திருச்சி அரசினர் ஐ.டி.ஐ. தொழிற்கல்வி படிப்பையும் முடித்தேன். எனக்கு நானே சிந்தித்து செயலாற்றும் பக்குவத்தை சிறிது சிறிதாகப் பெற்றேன். சுவாமிஜி அவர்களின் நேரிடையான பார்வையில் ஒரு ஆண்டு பணிபுரிந்தேன். பலப்பல அனுபவங்கள் ஏற்பட்டன. இனி வாழ்வில் செய்வதென்ன? என்ற கேள்வி என்னுள் எழுந்தது. இனி நீ என்ன செய்யப் போகிறாய்,? என்ற எனது மனதின் குரலுக்கு பதில் சொல்ல வேண்டிய தருணம் வந்து விட்டது.

அனாதை மக்களின் சேவைக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சுவாமிஜி அவர்களின் தன்லைமற்ற சேவை என் மனதில் ஆழப்பதிந்தது. கோடானுகோடி மக்களில் ஒருவனாக நானும் வெளியே சென்று வாழ்ந்து வருவதில் பயன்தான் என்ன? வாழ்ந்தால் லட்சியத்தோடு வாழவேண்டும் என்ற வீரத்துறவி விவேகானந்தரின் வீரஉரை என்னுள் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியது.

குடிலில் கல்விப்பயிற்சி முடிந்து வெளியேறும் மாணவர்களில் நானும் ஒருவனாக இருக்கவிரும்பவில்லை. நெடு நாள் சிந்தித்தேன். சுவாமிஜி அவர்களின் தொண்டில் அவருக்கு உதவியாக கடைநிலை தொண்டனாக இருக்க நானும் விரும்பினேன். ஆஸ்ரமவாசியாக ஒரு பிரம்மசாரியாக என் வாழ்க்கையை குடிலில் தொடங்க முடிவெடுத்தேன்.

தற்போது குடில் தலைவரும் சுவாமியுமான பிரம்மசாரி துரை அவர்களின் ஆசிகளோடு இப்போது ஆஸ்ரமவாசியாக பணிபுரிந்து வருகின்றேன். என் ஆத்மா உள்ள வரையில் என்னை ஆட்கொண்ட அருள் தெய்வம் அமரர் சுவாமிஜி அவர்களின் ஆசியோடு சேவை செய்வதிலேயே என் வாழ்நாளை கழிப்பேன்.

வாழ்க சுவாமிஜியின் நாமம். வாழ்க அவர் புகழ்

ஓ–ம் பிரம்மசாரி செந்தில்

குடிலின் சுயதேவைப் பூர்த்தி

திரு. சி. சுப்பிரமணியம் B.E
குட்ஷெட் ரோடு, திருச்சி

ஸ்ரீராமகிருஷ்ண குடிலில் பாரத மிகு மின்நிலையத்திலிருந்து உதிரி பாகங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை ஆய்வு செய்யும் பொறியாளராக குடிலுக்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழக அனாதைச் சிறார்களுக்கு குடில் ஆற்றிவரும் மகத்தான சேவையை அனைவரும் நன்கு அறிவார்கள். குடிலுக்கு வரும்போதெல்லாம் சுவாமிஜி அவர்களை தரிசிக்காமல் செல்வதில்லை.

எனக்கு அரபு நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒவ்வொரு தடவை வெளிநாடு செல்லும் போதெல்லாம் குடிலுக்கு வந்து சுவாமிஜி அவர்களை தரிசித்து ஆசி பெற்று செல்வேன்.

குடிலில் அனைத்து தேவைகளும் சுயதேவை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பது சுவாமிஜி அவர்களின் லட்சியம்.

இங்குள்ள சுமார் 300 மாணவர்களுக்கும் மாதத்திற்கு ஒருமுறை முடிவெட்டுதல் நடைபெறும். இத்தொழிலை குடில் ஆரம்ப கால முதல் ஒருவர் செய்து வந்தார். அவர் காலத்தில் வராததோடு அனைத்து மாணவர்களுக்கும் முடிவெட்டை முடிக்க சுமார் 20 நாட்களுக்கு மேலாகிவிடும். பல சமயத்தில் மாணவர்கள் பள்ளிக்கு செல்வதும் பாதிப்பு ஏற்பட்டது.

இதற்கு விரைவாகவும் நல்லமுறையிலும் குறைந்த நாட்களுக்குள் இப்பணியை செய்து முடிக்க மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்தேயாகவேண்டும் என்று சுவாமிஜி தீர்மானித்தார்கள். வெளிநாட்டில் கண்டிப்பாக இதற்கு ஏதேனும் 'மிஷின்' கண்டு பிடித்திருப்பர். நம்ம சி.எஸ். இடம் சொல்லி விசாரித்து வரும்படி தகவல் தெரிவித்தார்கள். அவ்வாறே சி.எஸ் இடம் இவ்விவரம் கூறப்பட்டது.

நான் இதற்கு முன் இம்மாதிரியான மிஷினை பார்த்ததில்லை. சுவாமிஜி அவர்கள் எனக்கு கட்டளையிட்டபடியால் எனக்கு கிடைக்கும் லீவ் நாட்களில்

அபுதாபி, துபாயில் சுமார் 300 மைல்கள் வரை சுற்றியலைந்து பல கடைகளில் விசாரித்து கடைசியாக "த்ரைவ்" என்ற ஜப்பானிய கம்பெனி தயாரித்துள்ள முடிவெட்டும் மிஷினை பயன்படுத்தி முடிவெட்டும் இடத்தைக் கண்டுபிடித்து அது விற்பனை செய்யும் கடை துபாயில் இருப்பது தெரிய வந்தது.

உடனடியாக ஒரு மிஷினை வாங்கி குடிலுக்கு கொண்டு வந்து ஆஸ்ரமவாசி ஒருவருக்கு முடிவெட்டுவது எப்படி என்பதையும் சொல்லிக் கொடுத்தேன். கையில் முடிவெட்டினால் ஒரு மாணவனுக்கு 30 நிமிடங்கள் ஆகும். இந்த மிஷினில் முடிவெட்டினால் 2 நிமிடத்தில் ஒரு மாணவனுக்கு முடிவெட்டி விடலாம். அவ்வளவு எளிதான டார்ச் லைட் மாதிரி உருவ அமைப்பு. மின்சாரத்தில் இயங்கக் கூடியது. இது மிகவும் உபயோகமாக இருந்ததினால் மேலும் ஐந்து மிஷின்கள் வாங்கி தற்போது உபயோகத்தில் உள்ளது.

இந்த மிஷினால் மாதக்கணக்கில் முடிவெட்டிய நாள் போய் ஒரே வாரத்தில் அனைவருக்கும் முடிவெட்ட முடிகிறது. நாவிதர் முடிவெட்டும் நிலை மாறி குடில் முறைப்படி பையன்களே எளிதாக முடிவெட்டிக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. மாணவர்களின் படிப்பு கெடாமல் காலை, மாலையில் முடிவெட்டும் நிலையுள்ளது. அனைவரும் சீராக முடிவெட்ட முடிகிறது. 2 நிமிடத்தில் முடிவெட்டி முடிகிறதேயென அனைத்து மாணவர்களுக்கும் மகிழ்ச்சி. முடிவெட்டும் பணியில் இந்த மிஷின் ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

குடில் வெள்ளி விழா 1975 ம் ஆண்டில் நடைபெற்றது. அதற்குப்பின் வெளியுலகத் தொடர்பேயில்லாமல் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக குடிலிலேயே தங்கியிருந்த சுவாமிஜி அவர்களுக்கு வெளிநாட்டில் கண்டிப்பாக இது போன்ற ஒரு மிஷின் இருக்கும் என்ற அவரது தீர்க்க தரிசனம் கொண்ட எண்ணத்தை ஏற்படுத்தியது எது? பகவான் பரமஹம்ஸரிடம் கொண்ட ஆழ்ந்த பக்தியும் தாம் மேற்கொண்ட துறவு வாழ்க்கையில் அப்பழுக்கற்ற தன்மையும்தான் அவரிடத்திலே இம்முடிவைத் தோற்றுவித்தது எனலாம். மேலும் சுவாமிஜி அவர்கள் குடிலில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்துள்ளார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஓ–ம் சி. சுப்பிரமணியம்

17.8.2001

செயற்கரிய செயல் புரிந்த சிறப்பு மகானே

திரு டி. பழனிச்சாமி (முருகன் அடிமை)

கெம்பநாயக்கன்பாளையம்

திருச்சிற்றம்பலம் வெற்றிவேலுற்ற துணை

பலநூற்றாண்டுகளுக்கு ஒரு முறை இப்பாரத மண்ணில் மகான்கள் பிறந்து வளர்ந்து மனித சமுதாயத்துக்கு சேவையும், வழிகாட்டும் செயல்களும் நடப்பது வழக்கம். செயற்கரிய செயல்புரிந்த சிறப்புமகனார் சுவாமிஜி அவர்கள் கடவுளின் அவதாரம் என்றே கூறலாம். மகாத்மா காந்தியின் வழித்தோன்றலாய் திகழ்ந்தவர் குடில் சுவாமிஜி ஆவார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீவிவேகானந்த சுவாமிகள் போன்ற மகாபுருஷர்களின் மறுஅவதாரமாக வாழ்ந்து காட்டியவர் நமது சுவாமிஜி அவர்கள். இது மிகையல்ல உண்மை.

காந்திஜி கூறுவார், "இந்தியாவின் ஜீவன் கிராமங்களில்தான் உள்ளது." என்று அவரது வாக்கின்படி ஒரு சாதாரணமான கிராமத்தில் பிறந்து இளமைக் காலத்தில் சொல்ல முடியாத இன்னல்களுக்கு ஆளாகி, வளர்ந்து வாலிபனாகி தனது உடல், பொருள் ஆவி ஆகிய அனைத்தையும் சிறார்களுக்கும், தனது வாழ்க்கையை அர்ப்பணித்த பெருமகன் நமது அடிகளார் ஆவார்.

கடவுளின் பிள்ளையாம் அடிகளார் தொடங்கிய செயல்கள் காலம் காலத்திற்கும் பலன் தரும் செயல்கள். அடிகளார் இளமைக் காலத்தில் எங்கள் கிராமத்தில் அவர் திருக்கரத்தால் தொடங்கிய செயல்கள் யாவும் இன்று வளர்ந்து செழித்து மக்களுக்கு பயன்படுவதை எங்களூருக்கு வந்தால் இன்றும் கண்டு மகிழலாம்.

1. பள்ளிப்படிப்பே காணாத எங்கள் ஊரில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பித்து ஒவ்வொரு தெருவாகச் சென்று கல்வியின் பெருமை பற்றி பெற்றோர்களிடம் எடுத்துச் சொல்லி பிள்ளைகளை சேர்த்து பள்ளியை வளர்ச்சி பெறச் செய்தார். இன்று அப்பள்ளி பத்தாம் வகுப்பு வரை வளர்ந்து அரசு உயர்நிலைப் பள்ளியாக சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

2. மக்கள் மரணத்தின் பிடியில் சிக்கி தவித்தாலும் மருத்துவம் என்பதே எங்கள் ஊரில் கிடையாது. அந்த நிலையை மாற்றி டாக்டரோடு கூடிய மருத்துவமனை வர ஏற்பாடு செய்தார். இன்று ஆரம்ப சுகாதார மருத்துவ மனையாக வளர்ந்து பிரசவ கேஸ்கள் முதல் எல்லா நோய்களுக்கும் சிகிச்சை தரும் டாக்டர்களும் நர்சுகளும் நிறைந்து வளர்ந்துள்ளது.

3. வறட்சியால் வாடிய பயிர்களைக் கண்டும், தண்ணீரின்றி தவிக்கும் கால்நடைகளை கண்டும் மனம் பதைபதைத்து கால்நடைகள் தண்ணீர் குடிக்க நடை கிணறு தோண்டி தண்ணீர் பஞ்சம் தீர்த்தார். அதோடு நிற்காமல் எதிர்காலத்தில் நிரந்தரமாக பஞ்சம் வராது தடுக்கும் நோக்கில் சிறப்பான திட்டமாக பெரும்பள்ளம் அணைத்திட்டம் தீட்டி அரசுக்கு அனுப்பி வைத்து அனுமதியும் வாங்கினார். நீண்ட இடைவெளிக்கு பிறகு அணை கட்டி, இன்று அப்பகுதி விவசாயிகளின் துயர் தீர்ந்து தண்ணீர் பஞ்சம் தீர்ந்துள்ளது.

4. கிராம பஞ்சாயத்து போர்டு முதன்முதலாக ஆரம்பித்ததும்

அடிகளார்கள்தான். முதல் தலைவராக பாலசாமி செட்டியார் என்பவரை நியமித்தார். இன்று பேரூராட்சியாக வளர்ந்துள்ளது.

5. விவசாயிகளின் நன்மைக்காகவும் அவர்களின் கடன் சுமையைத் தீர்க்கவும் முதன்முதலாக விவசாய கூட்டுறவு சங்கம் ஆரம்பித்து அதிலும் பாலசாமி செட்டியாரை தலைவராக்கினார். இன்று அந்த சங்கம் வளர்ச்சி பெற்று கோடிக்கணக்கில் வரவு செலவு நடைபெறுகிறது. புதிய பொலிவான கட்டடத்தில் மேற்படி விவசாய சங்கம் செயல்பட்டு வருகின்றது. மேற்படி சங்க கட்டடம் ஊரின் நுழைவாயிலிலேயே காட்சி தருகிறது.

6. பாதை வசதியில்லாத இடங்களுக்கு எல்லாம் பாதை வசதி செய்து தந்திருக்கிறார்.

7. அவர் வசித்து வந்த வீடு இன்று பெரும் திருமண மண்டபமாயும், வாசவி கன்னிகா பரமேஸ்வரி ஆலயமாகவும் மாறி உள்ளது.

8. நேரம் கிடைத்த போதெல்லாம் சுவாமி அடிக்கடி சென்று வணங்கிய முருகன் கோவில் இன்று அப்பகுதி மக்களால் கவரப்பட்டு வருடத்திற்கு மூன்று முறை அன்னதானமும், ஒவ்வொரு வைகாசி மாதம் 26 ம் தேதியன்றும் திருமணம் தடைபட்டுக் கொண்டிருக்கும் ஆண்கள் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறவேண்டுமென்று சுயம்வரா பார்வதி யாகம் சிறப்பாகவும் அன்னதானத்துடன் நடைபெறுகிறது. யாகத்தில் கலந்து கொண்ட ஆண்கள் பெண்களுக்கு வெகுவிரைவில் திருமணம் நடைபெற்றுவிடுகிறது. இந்த நிகழ்ச்சிகளுக்கு கட்டணம் ஏதுமில்லை. கோவில் சார்பில் இலவசமாக நடத்துகிறார்கள். கோவில் மிகவும் அழகான இடத்தில் அமைந்துள்ளது அருமையாகும்.

9. ஜீவகாருண்யம் மதுவிலக்கு, நூல்நூற்றல் கதராடைநெசவு போன்ற காந்திய நிர்மாணத்திட்டங்களை தானே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினார் சுவாமி அவர்கள்.

10. ஹரிஜனசேரிக்கு சென்று ஹரிஜனக்குழந்தைகளை குளிக்க வைத்து தலைக்கு எண்ணெய் தேய்த்து தலைவாரி பள்ளிக்கு அனுப்பி வைப்பார்.

11. நாட்டின் விடுதலைக்காக காந்திஜியின் கட்டளையை ஏற்று கிராமங்கள் தோறும் கால்நடையாகச் சென்று பிரச்சாரம் செய்து தேச விடுதலைக்காக பாடுபட்டார். அவரது நினைவாக அவரது கைப்பட எழுதிய டைரி ஒன்று தெய்வாதீனமாக என் கைக்கு கிடைத்துள்ளது. அதில் எங்கள் பெரியப்பா குப்பணன் கடையில் தினசரி இரண்டு வேளை சாப்பிட்டதாக எழுதியுள்ளார். டைரியில் அவர் எழுதியுள்ள வார்த்தைகளை அப்படியே தருகிறேன். “ இன்று முதல் குப்பணன் ஒட்டலில் தினம் 2 வேளை சாப்பாடு 3 அணா வீதம் பேசி உணவு அருந்தினேன்.” 3 அணாவின் இன்றைய மதிப்பு 18 பைசாவாகும். அந்த ஒட்டல் கடையை இன்றும் காணலாம்.

நீண்ட நாட்களுக்கு முன்பு அடிகளார் செய்த சாதனைகளை எங்கள் ஊர் பெரியவர்கள் மூலம் கேள்விப்பட்டு குடிலுக்கு ஏதாவது உதவி தேவையா என்று எழுதினேன். அதற்கு அவர் பதில் எழுதினார்.

" குடிலுக்கு பொருள் உதவி வேண்டாம். உங்கள் பகுதியிலுள்ள தாய் தந்தையரற்ற ஆண் குழந்தைகளை கொண்டு வந்து சேர்த்து விடுங்கள். அதற்காக போக்குவரத்து செலவையும் குடிலே தந்து விடும்" என்று எழுதினார்.

எவ்வளவு மகத்தான சேவை இது. அதன் பிறகு நீண்ட இடைவெளிக்கு பிறகு அவருடைய நினைவாலயம் கட்டும் முயற்சியில் நானும் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்ததை மகா பாக்யமாகக் கருதுகிறேன்.தெய்வமாக வாழ்ந்து காட்டி மறைந்த அந்த திருமகனின் பாதமலரடிகளுக்கு ஆயிரம் கோடி வணக்கங்களை செலுத்தி அவர் ஆரம்பித்த குடிலின் வளர்ச்சியில் பங்காற்றும் இளைய சுவாமிகளுக்கும், ஆஸ்ரம நிர்வாகிகளுக்கும் ஆசிரிய பெருந்தகைகளுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் சுவாமிஜி வணங்கிய முருகன் கோவில் ஸ்ரீபால தண்டாயுதபாணியின் திருவருள் என்றும் காக்கும் என்று கூறி இந்த சிறியவனின் எழுத்தும் சுவாமிஜியின் வரலாற்று நூலில் இடம் பெற்றதை எண்ணி மீண்டும் ஒருமுறை வணக்கம் கூறி முடிக்கின்றேன். நன்றி.

அன்புடன்
ஓ—ம் டி. பழனிசாமி
கெம்பநாயக்கன்பாளையம்
1.9.2001

எனது குருகுல வாழ்க்கை

திரு. கே. மருதை
ஆர்ட்டிஸ்ட், சென்னை.
குடில் முன்னாள் மாணவர். கெம்பநாயக்கன்பாளையத்தில் உருவாக இருக்கும் சுவாமிஜியின் நினைவு மண்டப குழுத்தலைவர்
3.9.2001

கோடிக்கணக்கில் பணம் படைத்த பெரும் செல்வந்தர்கள் கூட, இத்தகைய குருகுல வாழ்க்கையை அனுபவித்திருக்க முடியாது என்பது இந்த வாழ்க்கையை அனுபவித்த என் போன்றவர்களுக்கு மட்டுமே தெரியும்.

இந்த குடிலைப்பற்றி நன்கறிந்த எத்தனையோ செல்வந்தர்கள் முயன்று தோற்றுப்போனதும் உண்டு. தங்களது பிள்ளைகளையாவது இக்குருகுலத்தில் படிக்க வைக்க வேண்டும் என்று, குடில் சுவாமிஜி அவர்களிடம் வேண்டுகோள் வைத்ததோடு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

அப்போதைய குடில் சூழ்நிலை மிகவும் கஷ்டமானதாக இருந்தது. நாள்தோறும் சுவாமிஜி அவர்கள் நன்கொடை நிமித்தம் அங்குமிங்கும் அலைந்து திரிந்து மிக்க கஷ்டப்பட்டு நன்கொடை வசூலித்து வந்த ஆரம்பகாலம் அது. ஆயினும் கிடைப்பதைக் கொண்டு எல்லோரும் திருப்தி அடைந்த காலமும் அதுவே.

இத்தகைய கஷ்டமான சூழ்நிலையிலும் பணத்திற்காக தனது குறிக்கோளை ஒருபோதும் மாற்றிக் கொண்டதில்லை. ஆஸ்ரம விதி முறைகளை அவர்களுக்கு நன்கு புரியும்படி எடுத்துச்சொல்லி நன்கொடையை ஏற்றுக் கொள்ளாது அனுப்பி வைப்பார்கள். மனம் நோகாது பேசி வந்த அன்பர்களை அனுப்புவதில் கண்ணும் கருத்துமாக செயல்படுவார்கள். இதைக் கண்ட பிஞ்சு உள்ளங்களின் மனதில் அப்போது ஒன்றும் தோன்றாவிட்டாலும் காலப்போக்கில் அதைப்புரிந்து கொண்டு பெருமிதம் அடைந்ததுண்டு. கோடிகோடியாக கொட்டிக் கொடுத்தாலும் தாய் தந்தையரற்ற என் போன்றோர்களுக்கு மட்டுமே இங்கே புகலிடம் என்பதை நன்கு அறிந்து கொண்ட பொழுது நான் அத்தகைய பாக்கியவான் என்பதை உணர்ந்தேன்.

என் தாயும் தந்தையும் என்னைவிட்டுப் போனதே எனக்கு நன்மை என்று தோன்றியது. அவர்கள் இருந்திருந்தால் கூட எனக்கு இத்தகைய வாழ்க்கை கிடைத்திருக்குமா? என்பது கேள்விக்குரிய விஷயம்தான்.

எனது வாழ்க்கையின் ஒரு பகுதியை இந்த மனித தெய்வத்தின் அரவணைப்பு நிழலில் கழித்திருக்கிறேன் என்று எண்ணும் போது, அதை பெரும் பாக்யமாகக் கருதுகிறேன். சுவாமிஜி அவர்கள் எங்களுக்காக பட்ட கஷ்டங்கள் ஏராளம். அவற்றையெல்லாம் இங்கு எழுதித் தீர்த்துவிட முடியாது.சிலவற்றை மட்டும் நினைவு கூற விரும்புகிறேன்.

ஒரு நாள் சுவாமிஜி அவர்கள் தியானத்தில் அமர்ந்திருந்தார். நாங்கள் வழக்கம்போல் படித்துக் கொண்டிருந்தோம். ஆஸ்ரமத்திற்கு பின்புறம் இருந்த ஓடு போட்ட சிறிய கட்டடம்தான் அப்போது எங்களுக்கு எல்லாமே. ஒரே ஒரு அரிக்கேன் லைட்டில்தான். நாங்கள் 12 பேரும் படித்துக் கொண்டிருந்தோம். எல்லோருமே 10 வயதுக்கு உட்பட்டவர்கள்தான். நான்காம் எண்ணுள்ள துரை என்னும் எங்களில் மிகச்சிறிய சிறுவன் பதட்டத்துடன் ஓடி வந்தான். "அண்ணா, சுவாமி அழுவுறாங்க" என்று கண்கள் கலங்க வந்து சொன்னான்.

எல்லோரும் பதறியடித்துக் கொண்டு ஓடி சுவர் ஓரமாக ஒளிந்து கொண்டு சுவாமியை பார்த்தோம். சுவாமிஜி தியானத்தில் இருந்தார். ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தார். இரு கண்களும் மூடியிருந்தன. மூடிய கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சிறுவர்களாகிய எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. சில பேர் அழத்தொடங்கி விட்டார்கள். சிறிது நேரத்தில் சுவாமிஜியின் தியானம் கலைந்தது.

கோவிலிலிருந்து வெளியே வரும் வரை நாங்கள் அங்கேயே நின்றிருந்தோம்.

சுவாமிஜி வெளியே வந்தவுடன் நாங்கள் சுற்றி நின்று கொண்டிருந்த விதத்தைப் பார்த்தே புரிந்து கொண்டார். எங்களை எதையும் பேச விடாமல் அவரே எதைஎதையோ பேசி சிரிக்க வைத்து அனுப்பிவிட்டார். சுவாமிஜி அவர்கள் மிகவும் கண்டிப்பானவர் என்பது மட்டுமே எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனால் மிகவும் அன்பு கொண்டவர் என்பதை சில சமயங்களில் அவர் நடந்து கொண்டவிதம், அவருடன் நெருங்கிப் பழகிய சிலருக்குத் தெரியும். சுவாமிஜி அவர்கள் யாரையும் மரியாதைக் குறைவாக பேசியது கிடையாது. மற்றவர்கள் மரியாதை குறைவாக பேசுவதையும் அவர் ஒருபோதும் விரும்ப மாட்டார்.

சுவாமிஜியின் சிந்தனை செயல் எல்லாமே ஒரே இலக்கை நோக்கித்தான் சென்று கொண்டிருந்தது. அந்த இலக்கையும் அவர் அடைந்தார். எல்லாமே அவரது எண்ணப்படியே முடிந்தது. அனாதை சிறுவர்களின் தன்னிகரில்லா சேவை ஒன்றே அவரது இலக்காக இருந்தது. இதற்கு உறுதுணையாக கலெக்டர் மலையப்பன் அய்யா அவர்களும், சீப் ஜஸ்டிஸ் மகராஜன் அய்யா அவர்களும் வாரியார் சுவாமிகள் அவர்களும் உடனிருந்து முடித்து வைத்தார்கள். சுவாமிஜி அவர்கள் தனக்குப்பின் ஆஸ்ரமத்தை கட்டிக்காக்க தான்வளர்த்த குழந்தைகளையே ஆஸ்ரமவாசிகளாக்கி அவர்களுக்கு சகல நிர்வாகத்திலும் பயிற்சிகளை அளித்து அவர்களிடம் நிர்வாகத்தை கொடுத்து அவர்கள் செவ்வனே செயல்படுவதைப் பார்த்து திருப்தியடைந்திருக்கிறார்கள்.

தற்போது துரை சாமி அவர்கள், கருப்பையா பிரதர் அவர்கள், வீரசந்திரன் பிரதர் அவர்கள் ஸ்தாபனத்தை நிர்வகித்து வருகிறார்கள். சுவாமிஜி அவர்களின் மறைவுக்குப்பின் முழுப்பொறுப்புடன் தலைமை ஏற்று துரைசாமி அவர்கள் எல்லாம் வல்ல குருமகராஜின் துணையுடன், சுவாமிஜியின் கொள்கைகளில் அவர் வழிநடத்த, எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஒ–ம். கே. மருதை (மருது)
எண்.6
3.9.2001

இறைநெறியில் இறவாத் துறவி

டாக்டர் திரு. சி. கேசவராஜ் திருச்சி

குடில் சாமி அவர்களோடு என் தந்தையார் டாக்டர் ஜி. சிற்றம்பலம் அவர்களும் என் பெரிய தந்தையார் டாக்டர் ஜி. விசுவநாதம் பிள்ளை அவர்களும் ஆரம்ப காலம் முதல் தொடர்புடையவர்கள். சாமியின் சமுதாயப்

பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். சாமி அவர்களுடன் நெருக்கமான தொடர்புடன் இருந்தார்கள். அந்த வழியில் சாமி அவர்களுடன் நெருங்கி தொடர்பு கொள்ளும் பாக்கியத்தை பெற்றவர்களில் நானும் ஒருவன்.

பல்வேறு சமயங்களில் சாமியின் பேச்சில் ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகானந்தர் ஆகியோரின் அறிவுரைகள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை கேட்கும் வாய்ப்பினை பெற்றிருக்கிறோம். சாமி நினைவு கூறும் நிகழ்ச்சிகளில் குரு பகவான் ராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

தட்சிணேஸ்வரத்தில் காளிகோயிலைக் கட்டியவர் ராணி, ராஜாமணி அம்மையாரின் மருமகன் மதுரபாபு என்பவர். மதுருவும் அவரது மனைவியும் வடஇந்தியாவில் உள்ள புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செல்ல ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரையும் உடன்வருமாறு அழைத்தார்கள். அன்பான வற்புறுத்தலுக்கு இணங்கி குருதேவரும் உடன் செல்ல இசைந்தார் ரயிலில் ஓர் இரண்டவாது வகுப்பு பெட்டியும் மூன்று மூன்றாவது வகுப்பு பெட்டிகளும் அவர்களுக்கென்றே தனியாக பதிவு செய்யப்பட்டது. ஹௌராவுக்கும் மொகல் சராயுக்கும் இடையே அவர்கள் எந்த ரயில் நிலையத்தில் விரும்புகிறார்களோ அங்கே அதனை ரயிலிலிருந்து பிரிக்கவும் வேண்டிய நேரம் இணைக்கவும் செய்யலாம்.

1868 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் தேதி அவர்கள் புறப்பட்டார்கள். வைத்திய நாதர் கோயிலை பார்ப்பதற்காக அவர்கள் தியோகரில் மூன்று நாட்கள் தங்கினார்கள். அங்கு ஒரு நாள் கிராமத்தின் வழியாக போய்க் கொண்டிருந்த போது அப்போது அங்கு ஏற்பட்டிருந்த பஞ்சத்தின் காரணமாக, கிராம மக்கள் எல்லாம் பசியால் நலிந்தும் அழுக்கு ஆடையும் பரட்டைத் தலையுமாய் இருக்கும் வேதனையான காட்சியை ஸ்ரீராமகிருஷ்ணர் கண்டார். மிகவும் மனவேதனை கொண்ட குருதேவர் மதுரிடம் “ நீ அன்னை காளியின் சொத்துக்கு மேற்பார்வையாளன். இந்த ஏழை மக்களுக்கு வயிறார ஒரு வேளை உணவும் உடையும் கொடு” என்றார். பயணத்தின் சுமை கருதி மதுர் தயங்கினார். பயணத்திற்கு அதிக பணம் தேவைப்படும். மக்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். “ ஒரு வேளை உணவும், உடையும் அளித்தால் செலவிற்கு பணமில்லாமல் போய்விடும்” என்றார்.

மதுரின் பதில் குருபகவான் மனதை பாதித்தது. அந்த ஏழைகளின் வேதனையைக் கண்டு கண்ணீர் வடித்தார். “ சீ.. நீ எவ்வளவு மோசமானவனாக இருக்கிறாய். நான் உன்னோடு காசிக்கு வரவில்லை. நாதியற்ற ஏழை மக்களுடன் இருந்து விடுகிறேன்.” என்று அம்மக்களிடையே உட்கார்ந்து கொண்டார். குருபகவான் ஏழை மக்களிடையே காட்டிய அனுதாபம் மதுரின் மனதை தொட்டது. உடனே கல்கத்தாவிலிருந்து மூட்டை மூட்டையாய் உணவுப்

பொருட்களும் உடைகளும் வரச் செய்து எல்லோருக்கும் வயிறார உணவளித்து, ஆடைகளும் வழங்கினார். பிறகு உற்சாகத்தோடு குருதேவர் காசிக்கு புறப்பட்டார்.

சாமி குறிப்பிட்ட இன்னொரு சம்பவமும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. சுவாமி விவேகானந்தர் ஒரு முறை மடத்தில் ரிக்வேதம் வாசித்துக் கொண்டிருந்தார். அங்கு ஒரு அன்பர் " உங்கள் வேதம் அனாதைகளுக்கு என்ன சொல்லுகிறது?" என்று கேட்டார். இதைக் கேட்ட சுவாமிகள் மனம் வருந்தினார். வேத நூலை மூடிவிட்டு மறைவிடம் சென்று அழத்தொடங்கினார்.

இந்நிலையில்தான் ஓர் அனாதை விடுதியை தொடங்கினார். சுவாமி அகண்டானந்தா என்பவரை அனுப்பி வைத்து இரண்டு அனாதைக் குழந்தைகளை அழைத்து வருமாறு கூறினார். மேலும் பல அனாதைக் குழந்தைகள் சேர்ந்தனர்.

இவர்களுக்கு நவீன முறையில் கல்வியும், தன்னம்பிக்கை வளரக்கூடிய வகையில் தொழில்நுட்பக் கல்வியும் போதிக்கப்பட்டன. ஆங்கிலேய ஜில்லாக் கலெக்டரும் அனாதை விடுதிக்கு ஆதரவு தந்தார். இந்த நிகழ்ச்சிகளை சாமி அவர்கள் எத்தனை முறை கூறக்கேட்டாலும் ஒவ்வொரு முறையும் சொல்லும் போதும் அதே உணர்வும் ஈடுபாடும் நம்மால் உணர முடிந்தது. இதுவும் சாமி அவர்களின் குறிக்கோள் உருவாவதற்கு அடித்தளமாக அமைந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

ஆன்மீகத்தோடு கலந்த சமுதாய சேவையை, குறிப்பாக அனாதைச் சிறுவர்களுக்காக உழைப்பதை தமது வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டு செயலாற்றியதை நாம் பார்க்க முடிகிறது. இந்தச் சேவை எந்த இடையூறும் இல்லாமல் சிறப்பாக வளர்ந்து பலன் அளிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சாமி அவர்களின் சேவையும் நிர்வாகத்திறனும் நாம் அனைவரும் அறிந்த விஷயம். இவற்றிற்கெல்லாம் மேலாக அவரிடம் பெற்ற பாடங்களும் அறிவுரைகளும் ஏராளம்.

ஒரு முறை சாமி அவர்களிடம் " முதியோர் இல்லம்" ஒன்று தொடங்கி நடத்த ஆர்வமாய் இருக்கிறோம் என்று எங்களின் கருத்தை வெளியிட்ட போது அவர், " நீ உன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட முடியுமா?" என்று கேட்டார்கள். "பல வேலைகளுக்கும் நடுவில் நீ இதை ஏற்றுக் கொண்டு மற்றோரை நம்பி செயல்படுத்த நினைத்தால் நமது எண்ணமும் கொள்கையும் முழுமையாக நிறைவேற்ற முடியாது." என்பதை ஆணித்தரமாகக் கூறினார்கள்.

எவ்வளவு ஆழமானது இந்த உண்மை என்பதை அனுபவபூர்வமாக பின்னர் உணர முடிந்தது. " நல்ல காரியம் ஒன்றினை செய்ய முடிவு செய்தால் முழுமனதுடன் தீவிரமாக அதனைப் பற்றியே எந்நேரமும் சிந்தியுங்கள்.உங்கள் எண்ணங்களுக்கு வழிபிறக்கும். நிறைவேறும்." என்பதை வள்ளுவரின்

எண்ணிய எண்ணி யாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்னும் வாக்கை விளக்குவார்கள். இதுவும் அனுபவபூர்வமாக நான் உணர்ந்த ஒன்று. எந்தக் காரியமும் தீவிர சிந்தனையும் தீவிர செயற்பாட்டுணர்வும் இருந்தால் உறுதியாக நிறைவேறும் என்பதை எனக்கு அறிவுறுத்தினார்கள். அதே போன்று நமது வரையறைகளை உணர்ந்து செயல்படவேண்டும் என்பதில் தன் வாழ்க்கை நிகழ்ச்சியை குறிப்பிட்டுள்ளார்கள்.

பாண்டிச்சேரி அரசும் அமைச்சர்களும் இவரது சேவையை பார்த்து இது போன்ற ஒரு அமைப்பினை பாண்டிச்சேரியில் ஏற்படுத்தி பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்றும் அதற்கான எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டினார்கள். ஆனால் சாமி அவர்கள், " இந்த நிர்வாகத்தை கவனிப்பதற்கு மட்டுமே இப்போது அவகாசமிருக்கிறது. வேறு ஒரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டு முழுமையாக என்னால் செய்ய முடியாது." என்று உறுதியாக கூறிவிட்டார்கள்.

சாமியின் இவ்வழிகாட்டுதலை ஆய்ந்து பார்க்கும் போது பல்வேறு பொறுப்பினை ஆர்வத்தில் நிர்ப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முடியாத நிலையினை அனுபவபூர்வமாக உணர முடியும். சாமியின் இந்த அறிவுரையும் எனக்கு ஒரு வழிகாட்டுதலாக அமைந்ததை உணர முடிகிறது. எல்லாப்பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை விட்டு விட்டு ஏற்றுக்கொண்ட பொறுப்பினை திறம்படச் செய்வதுதான் சிறப்பு. ஒவ்வொருவரும் தம் செயல் வரம்பினை அறிந்து செயல்படுதல் அவசியமான பொன்னான ஒன்று.

அவரும் தனது வாழ்க்கையின் செயற்பாடுகளை பெருக்கிக்கொள்ள வாய்ப்பு இருந்தாலும் தம் பணியை குறிப்பிட்ட எல்லைக்குள் சிறப்புடன் வகுத்துக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். ஆகவே தன்வரம்புக்கு உட்பட்ட பணிகளுக்கு இனிமேல் தேவை இல்லை என்ற முடிவோடு " இனி எங்களுக்கு நன்கொடை தேவையில்லை" என்று அறிவித்துவிட்டார். இப்படி அறிவிக்கக்கூடிய நிறுவனம் மற்றொன்று இருப்பதாக தெரியவில்லை.

ஆனால் இந்த நேரத்தில் இதே போன்று பொதுச்சேவையில் நாட்டமுள்ள எனது தந்தையார் டாக்டர் ஜி. சிற்றம்பலம் அவர்கள் எனக்கு " அதிகப்பணம் தேவையில்லை" என்று கூறி தொழில் செய்து வாழ்ந்ததை எண்ணி பெருமைப்படுகின்றேன்.

அதுபோலவே கர்மயோகிகளும், கர்மவீரர்களும் ஆடம்பரமும், விளம்பரமும் எந்த விதத்திலும் இல்லாது வாழ்ந்து காட்டியது, வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள வேண்டியவை. அவர்கள் போதித்த பல்வேறு நற்பண்புகள் கடுமையான உழைப்பு தேவைக்கு ஏற்ற உணவு, சுயதேவை பூர்த்தி,

தன்னம்பிக்கை இவை இங்கு குடிலில் பயன்பெறுகிறவர்கள் மட்டும் கற்றுக் கொள்வதில்லை. தொடர்பு கொள்ளும் நாமும் கற்றுக் கொள்கிறோம் என்பதில் ஐயமில்லை.

காலம் தவறாமை, நேர நிர்வாகம் அவரின் தனிச்சிறப்பாகும். இவை நாம் அறிந்து பின்பற்ற வேண்டியவை. உடல் நலம் பாதிக்கப்பட்ட நேரங்களில் அவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையைக் கேட்டுக் கொள்ளும் பாங்கு, சலித்துக் கொள்ளாது பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் தன்மை, மனத் தளர்ச்சியடையாத உறுதி நாம் ஏற்று போற்றப்பட வேண்டியவை.

தனி மனிதனாகிய நான் அடைந்த பலன்கள் எண்ணிலடங்காதவை. எத்தனையோ பிரச்னைகளுக்கு தீர்வுகாண அணுகும் முறை சிந்தனையை முறைப்படுத்தி அவர் காட்டும் வழிமுறை ஆகியவற்றை அனுபவித்தவர்களால் மட்டுமே உணர முடியும். என்னைப் போல் பெரும்பாலானோர் பயன் அடைந்துள்ளனர் என்பது உறுதி.

இவர், “இறைநெறியில் வாழ்ந்த இறவாத்துறவி” என்பதைத் தவிர வேறு என்ன கூற இயலும்?

குடிலின் ஆரம்ப மாணவனாக வாழ்க்கை தொடங்கியவர் சாமியின் நிர்வாகத்திறமையையும் அறிவுபூர்வமான அணுகு முறையையும் கண்டிப்பான நெறியினையும் கொண்டு சிந்தனையும் செயலும் வாழ்வும் “ குடிலே” என வாழ்பவர்தான் இன்றைய சாமி அவர்கள். அவரது பணி சிறக்கட்டும். கல்விப்பணியும் ஆன்மீகப்பணியும் தொடரட்டும்

ஓ-ம் சி. கேசவராஜ்
3.9.2001

சங்கமம்

டாக்டர் வி. ஜெயபால்
விஸ்வநாதம்பிள்ளை மருந்தகம்
திருச்சிராப்பள்ளி

முன்னுரை:

தமிழ்மொழியில் ‘ சங்கமம்’ என்ற சொல் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. ஒன்று சேரல், கலத்தல், ஐக்யமாகுதல் என ஆழமான பொருள் தரும் சொல் இதுவாகும்.

ஆண்டவனிடத்திலே தளராத பக்திகொண்டு ஊண் உடல் மறந்து அவன் பாதம் பற்றிய அடியார்களை ஆண்டவனுடன் சங்கமமானவர்கள் எனப் பாராட்டி பெருமை வழங்குகின்றோம். மனித வாழ்க்கையை நோக்கும் போது ஒரே தொழில் துறையில் உள்ளவர்கள் ஒருவர்க்கொருவர் எண்ணத்தாலும் செயலாலும் சங்கமித்துவிடுகின்றனர். தொழிலால் ஏற்பட்ட பிணைப்பு இது.

செல்வ நிலையாலும் அறிவு ஆற்றல்களினாலும் மேம்பாடடைந்து ஒன்றாக சங்கமித்தவர்களையும் இந்நிலவுலகில் கண்டு வருகிறோம்.

ஆயினும் இவைகள் அனைத்தைக் காட்டிலும் மனதால் ஒன்றுபட்டு சங்கமிக்கும் நிலையே உயர்வானதாகும். இத்தகைய உயர்நிலையை எட்டியவர்தான் டாக்டர் விஸ்வநாதம் பிள்ளை அவர்கள். இவர் பாமர மக்களின் ஏகோபித்த அன்பையும், பாராட்டுதல்களையும் பெற்றவராவார். தொழிலின் மூலம் வருவாய் என்ற நோக்கத்திற்கு முதலிடம்தராமல், ஏழை மக்களின் பிணியைப் போக்குவதே தமது கடமை என எண்ணி, தமது டாக்டர் தொழிலை பணியாகக் கருதாமல், ஏழை எளியவர்களுக்கு செய்யும் தொண்டு என்ற சேவா மனப்பான்மையோடு வாழ்ந்து மறைந்த அமரர் அவர். குடிலின் ஆரம்ப நாட்களிலிருந்து குடிலுடன் தொடர்பு கொண்டவர். எவ்வித பிரதிபலனையும் கருதாது அனாதை மக்கட்சேவை ஆண்டவனுக்கு செய்யும் சேவை என்ற மனப்பக்குவத்தில், அக்குழந்தைகளின் பிணி அகற்றும் பணியில் ஈடுபட்டவர். அத்தகைய பெருமகனாரின் புதல்வர்தான் வி. ஜெயபால் ஆவார்.

தமது தகப்பனாரின் மறைவுக்குப்பின் அவர் குடிலுக்கு ஆற்றிய பணியை அவர் வழியிலேயே சென்று குடில் குழந்தைகளுக்கு பணியாற்றி வருகின்றார் திரு. ஜெயபால் அவர்கள். இவருடன் இவரது குடும்பத்தாரும் டாக்டர் திரு. சிற்றம்பலம் அவர்களின் குமாரர்கள் சி. கேசவராஜ், சி. கருணாநிதி ஆகியோரும் குடிலின் ஆன்மீகத்தில் மூழ்கி திளைத்த காரணத்தாலும் குடில் சுவாமிஜி அவர்களின் அருளாசிகளை முழுமையாக பெற்றதாலும் குடிலுடன் ஒன்றிவிட்ட, மனதால் சங்கமமாகிவிட்ட பெருமைக்குரிய ஜெயபால் அவர்கள் குடிலைப்பற்றியும் அவர் கூறியுள்ளதை இனிக் காண்போம். (ஆ—ர்)

இளம்பிராயம் முதலே நான் சுவாமியை நன்கு அறிவேன். என்னுடைய ஏழாவது வயது முதலே நான் அவர்களை நன்கு அறிவேன். அதற்குப்பிறகு சில வருடங்களில் அதாவது 1949 ல் சுவாமிஜி அவர்கள் குடிலை ஆரம்பித்தார். நான்கைந்து ஆண்டுகள் தனிமையிலிருந்தார்கள். அதன்பின் ஐந்து குழந்தைகளைக் கொண்ட அனாதை இல்லம் ஒன்றை ஆரம்பித்தார்கள். நான் எனது தந்தை டாக்டர் ஜி. விஸ்வநாதம் பிள்ளை அவர்களுடன் அந்த அனாதை இல்லத்திற்கு வழக்கமாக சென்று, அவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்று வந்தேன். எனது மருத்துவ கல்லூரி நாட்களில், எனது தந்தை உடல்நலமில்லாமல் இருந்த நாட்களில் நான் குடிலுக்கு சென்று எனது தந்தையின் சார்பில் குழந்தைகளை கவனித்து வந்தேன்.

குடில் சுவாமி அவர்களின் ஆசியை அந்நேரங்களில் பெறும் பாக்யம் கிடைத்தது. பின்பு மரத்தடி நிழலில் நலிவுற்றிருக்கும் குழந்தைகளை கவனித்தபின் திரும்பும் போது இளநீரும் பிரசாதமும் கொ்டுத்து அன்போடு அனுப்பி வைப்பார்கள். அடிக்கடி குடிலுக்கு வந்து குழந்தைகளோடு சிறிது

நேரம் இருந்துவிட்டு போகும்படி சொல்வார்கள். ஒவ்வொரு குழந்தையையும் சுவாமி அவர்கள் தனித்தனியாக கவனிப்பார். அன்போடு பேசி, அவர்கள் தேவையறிந்து செய்து தருவார். குழந்தைகளுடன் அவரும் சேர்ந்து விளையாடுவார்.

வருட முடிவில் குடிலின் ஆண்டு விழாவின் போது எல்லோரும் குடிலுக்கு வந்து குழந்தைகள் விளையாடுவதை கண்டு களிக்கவும், அவர்களோடு அமர்ந்து விருந்துண்ணவும் வருமாறு அழைப்பு அனுப்புவார்கள். ஒவ்வோர் பௌர்ணமி விருந்திலும், ஜெயந்தி விழா நாட்களில் நடக்கும் பூஜையிலும் விருந்திலும் எங்களை எதிர்பார்ப்பார்கள். சிவன்ராத்திரி பூஜையிலும் எங்கள் குடும்பத்தாருடன் கலந்து கொள்வோம். அவ்வேளைகளில் எங்கள் குடும்ப நண்பர்களுடன் குடிலுக்கு செல்வோம். மாணவர்களால் தயாரிக்கப்படும் விருந்துணவு ருசிகரமாகவும் ரசித்து சாப்பிடத் தக்கதாகவும் இருக்கும். உடல்நலம் நன்றாக இருக்கும் வரை நாங்கள் எங்கள் தந்தையோடு ஒவ்வொரு வாரமும் குடிலுக்கு செல்லுவதை தவிர்க்க மாட்டோம்.

குடில் மாணவர்களின் வைத்திய வசதிக்காக சுவாமி அவர்கள் குடிலில் 'மருந்தகம்' ஒன்றைக் கட்டி அதனை எனது தந்தை டாக்டர். ஜி. விஸ்வநாதன் திறந்து வைத்தார். கலெக்டர் மலையப்பன் அவர்களும், நீதிபதி மகராஜன் அவர்களும் அடிக்கடி குடிலுக்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அது சமயம் நானும் அவர்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்து வந்தது. டி.ஐ.ஜி சரவணப்பெருமாள் அவர்களும் அடிக்கடி குடிலுக்கு வருகை தருவார். நானும் அவரைப் பார்த்திருக்கிறேன். சுவாமிஜி அவர்களும் அனைவரையும் அன்புடன் வரவேற்று, உபசரித்து இருக்கையளித்து மகிழ்வதையும் கண்டிருக்கிறேன்.

குடிலின் பொருளாதாரத் தேவை தன்னிறைவு பெற்றுவிட்ட காரணத்தினால் சிறிது காலத்திற்கு பின் நன்கொடைகள் பெறுவதை நிறுத்திவிட்டார். சுவாமிஜி அவர்கள் மக்கள் குடிலுக்கு நன்கொடைகள் தரவேண்டாம் என்று தாய் தந்தையற்ற அனாதை குழந்தைகளை மட்டும் குடிலுக்கு அனுப்புங்கள் என்று கூறினார்கள்.

"சாந்திநிகேதனில்" கூடவேலைக்கு ஆட்கள் உண்டு. ஆனால் குடிலில் வேலைக்கென்று ஆட்கள் தனியாக இல்லாமல் அவரவர்களே வேலை செய்து தங்களையும் தங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும், ஒழுங்காகவும் அழகாகவும் வைக்க பயிற்றுவித்தார்கள். சிறு குடிலுக்கு மட்டுமன்றி இந்தியா முழுவதும் யாவரும் பின்பற்ற வேண்டிய நியதியாக இருந்தது. குழந்தைகள் பள்ளியிறுதி ஆண்டு முடிக்கும் வரை அவர்கள் முன்னேற்றத்தில் சுவாமிஜி அவர்கள் தனிக்கவனம் செலுத்தினார். அதன் பிறகு முன்னாள் முதன் மந்திரி டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் உதவியினால் ஒவ்வொரு வருடமும்

மாணவர்களை தொழில்நுட்பக் கல்விக்கு தேர்வு செய்யவும் அனுமதி பெற்றார். அத்துடன் குடிலை விட்டு வெளியேறும் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்புக்கான ஏற்பாடுகளையும் கவனித்து செய்தார். குடிலில் தொழிற்கூடம் ஒன்றையும் அமைத்தார். தனிமனிதனாக 350 மாணவர்களின் படிப்பு, உணவு, தங்குமிடம் அத்துடன் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார். அத்தோடு ஆன்மீகம், வேலை வாய்ப்பு ஆகியவற்றையும் கவனித்து வந்தார். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் சுவாமிஜி அவர்கள் தியானத்தில் ஆழ்ந்து விடுவார். தன்னொழுக்கத்தின் நிகரில்லாத இவர் எங்கள் குடும்பத்தின் சிறந்த அறிவுரையாளராகவும் இருந்தார்கள்.

எங்கள் தந்தை இறந்த போது, மறுநாள் எங்கள் வீட்டிற்கு சுவாமிஜி அவர்கள் வந்திருந்து எங்களுக்கு ஆறுதல் கூறி தந்தையின் கொள்கைகளை பின்பற்றுமாறு ஊக்குவித்தார்கள். எங்கள் வாழ்வின் ஒவ்வொரு அடியிலும் சுவாமிஜி அவர்களின் நல்லுரைகளைப் பின்பற்றி, அவரது ஆசிகளையும், எங்கள் பெற்றோரின் ஆசிகளையும் பெற்று வருகிறோம். சுவாமிஜியின் தொடர்பு எங்கள் தந்தையால் ஏற்பட்டதால் நாங்கள் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாகவும் கடமைப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம்.

நான் குடிலுக்கு செல்லும் போதெல்லாம் என்னுடன் என் மகளையும் அழைத்துச் செல்வது வழக்கம். அப்போது சுவாமிஜி அவர்கள் சந்தோஷமாக பேசி விளையாடுவார். குடில் சிறப்பான அனாதை மக்கட் சேவையை தமிழ்நாட்டு மக்களுக்கு செய்து வருவதோடு அனாதை மக்களின் எதிர்காலம் நல்ல முறையில் வடிவமைத்து சுவாமிஜி அவர்களால் கொடுக்கப்பட்டது.

மாணவர்களின் ஆன்மீகப் பயிற்சிக்காக தியானமண்டபமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயம் ஒன்றும் குடிலில் சுவாமிஜி அவர்களால் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டட வேலையில் குடில் மாணவர்களும் பெரும் பங்கை ஏற்றுள்ளார்கள். தனக்குப்பின் திரு. பிரதர் துரை அவர்களை சுவாமிஜியாக உருவாக்க பயிற்சியளித்துள்ளார்கள். அவரும் சுவாமிஜி அவர்களின் அடியொற்றி பின்பற்றி வரவும் தக்கதொரு பயிற்சியை அளித்துள்ளார்கள். சுவாமிஜி அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சகோதரர் துரை அவர்கள் குடிலை நல்ல முறையில் கவனித்து வருவதற்கு உகந்தவர் என்பதில் மிகையில்லை. சுவாமிகளைப் போலவே, சுவாமி துரை அவர்களும் குடிலை நன்கு கண்காணித்து வருகின்றார். அதன் பின் வாரிசுகள் தற்போது போலவே குடிலுடன் எப்போதும் தொடர்பு கொண்டிருக்க இறைவனை வேண்டுகிறோம். குடிலின் அந்தஸ்து, முன்மாதிரி நடவடிக்கை, ஒழுக்கங்கள் பின்வரும் வாரிசுகளாலும் பின்பற்றப்பட வேண்டும். ஏனெனில் சுவாமிஜியின் அறிவுரைகளால் நாங்கள் மிகவும் நன்மையடைந்துள்ளோம்.

உடல் நலம் குன்றிய போதும் சுவாமிஜி அவர்கள் சிகிச்சைக்காக

குடிலைவிட்டு தம்மை வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். உத்தேசமாக தமது இறுதி நாட்களை அறிந்திருந்தும் சிறிது கூட வசதியான வாழ்க்கையையோ, வியாதியின் உபாதைகளையோ அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரியாக இருந்தார். தமது இறுதி காலத்தில் மட்டும் உடம்பு வலிக்காமல் இருக்க சாய்வு நாற்காலி போன்ற அமைப்பில் சாய்ந்து படுக்க பஞ்சு மெத்தை ஒன்றை அதில் போட அனுமதித்தார். அந்த நாற்காலியின் மேலாக ஒரு போர்டில் "உடல் நலிவு காரணமாக இந்த மெத்தை போடப்பட்டுள்ளது" எனவும் எழுதப்பட்டது. மற்றவர்களுக்கு மட்டும் போதனை என்றில்லாமல்தான் நடந்து காண்பித்தார். எல்லோரும் அப்படி நடக்க வேண்டும் என்று உணர்த்தியவர்கள் சுவாமிஜி அவர்கள். இவ்வுலகு உள்ளளவும் சுவாமிஜியின் புகழ் நீடிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

ஓ–ம் வி. ஜெயபால்

4.9.2001

ஓர் மகானின் அற்புதமான அனாதாலயம்

திரு. கே. மாணிக்கம்,
ஓய்வு பெற்ற டிப்டி கலெக்டர்
வள்ளுவர் தெரு, காவேரிநகர், குளித்தலை

அடியேனின் பூர்வீக ஊர் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்திலுள்ள பஞ்சப்பட்டி கிராமம். எனது தந்தையார் திருவாளர் ஏ.எஸ்.கே. குழந்தைவேல் கவுண்டர் அவர்கள். ஆன்மீகப் பற்றுடையவர்கள்.

80 ஆண்டுகளுக்கு முன்பே என் தந்தையவர்கள் அய்யங்கார் குடும்பத்தில் பிறந்து குடும்பஸ்தராகி பின்னர் சந்நியாசம் பெற்ற (மதுரை மாவட்டம் தேவாரம் கிராமம்) சுவாமி விலக்ஷணானந்தா அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். இவருக்கு நிறைய பக்தர்கள் இருந்தனர். நான் திருச்சியில் படித்துக் கொண்டிருந்த போது, சுவாமி அவர்கள் சென்னைக்கு செல்லும் போது, திருச்சி ரயில் சந்திப்பில் எனது தந்தையுடன் சென்று விலக்ஷணானந்த சுவாமிகளை தரிசித்து ஆசிபெற்றேன். எனக்கு மந்திர தீட்சை அளித்தார்கள்.

நான் அரசுப்பணியில் முசிறியில் குற்றவியல் நீதிமன்றத்தில் எழுத்தராகவும், பெரம்பலூர் தாலூகா வாலிகண்டபுரத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்ட்ராகவும், திருச்சி தாலூகா அலுவலகத்தில் தலைமை இடத்து துணை தாசில்தாராகவும், திருச்சியிலேயே விவசாய வருமான அலுவலராகவும், பதவி உயர்வு காரணமாக சேலம், பவானிசாகரிலும், ஜெயங்கொண்டம்

தாசில்தாராகவும் பற்பல வருடங்களில் பணியாற்றி 31.7.1976 ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் என்னும் ஸ்தாபனத்தை சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். அங்கு பிரம்மசாரி ராமசுவாமி அவர்களும் இருந்து வந்தனர். எனது தந்தைக்கும் அவருக்கும் அப்போதே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

பிரம்மசாரி ராமசுவாமி அவர்களுக்கும் சுவாமி சித்பவானந்தருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டதின் காரணமாக பிரம்மசாரி அவர்கள் தபோவனத்தை விட்டு விலகி, திருப்பராய்த் துறைக்கு மேற்கே சிறிது தூரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். பிரம்மசாரியாக இருந்து கொண்டு நற்காரியங்களை செய்யலாம்: சந்நியாசம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை எனக் கருதினார்கள். எல்லாம் நன்மைக்கே எனக் கூறுவார்கள். பிரம்மச்சாரி ராமசுவாமி அவர்கள் தபோவனத்திலேயே இருந்திருந்தால், ஒரு அற்புதமான அனாதாலயம் உருவாகியிருக்க முடியாது.

திருச்சியில் நான் பணியாற்றிய போதுதான் குடில் சுவாமி அவர்களை அடிக்கடி சந்திக்கும் பேறு பெற்றேன். சுவாமி அவர்களின் ஆசியைப் பெறுவேன். அப்போதுதான் குடிலின் மானேஜராக ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர், திரு. எஸ். வி. சங்கர நாராயணா அவர்கள் இருந்தார்கள். அனைவரிடமும் அன்பாக பழகும் சுபாவமுடையவர். பிறர்க்கும் தேவையான உதவிகளை செய்வார்கள்.தனக்குள்ள கடமைகளை சிறப்பாக செய்து முடிப்பார்கள். இந்த ஸ்தாபன அபிவிருத்திக்கு சுவாமிகளுக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்தார்கள். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் அவர் காலமாகி விட்டார்.

இந்நிறுவனம் தன்னிறைவு பெறுவதற்கு உதவிய முக்யமானவர்கள். 1. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மகராஜன் அவர்கள். 2. திரு. ஆர்.எஸ். மலையப்பன், திருச்சி மாவட்ட முன்னாள் கலெக்டர் 3. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் மற்றும் பல பிரமுகர்களும் ஆவார்கள்.

குளித்தலை திரு. ஆர். நாராயணசாமி நாயுடு அவர்களும், குடில் மானேஜர் திரு.எஸ். வி. சங்கர நாராயணா அவர்களும் நானும் சேர்ந்து சிவாயம் ஐயர் மலையில் ஜல்லி உடைக்கும் தொழிலை ஆரம்பிக்கத் தீர்மானித்தோம். இதை குடில் சுவாமிகளுடன் தெரிவித்த போது அவர், " நீங்கள் எல்லோரும் வயதானவர்கள். இருப்பதை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழுங்கள். இத்தொழிலை செய்ய வேண்டாம்" என அறிவுரை வழங்கினார்கள். சுவாமிகள் கருதியது போலவே தொழில் சரிவர நடைபெறவில்லை. பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

குடில் சுவாமிஜி அவர்களின் வரவேற்பும் உபசரிப்பும் அலாதியானது.

சாப்பிட்டு ஒய்வெடுத்து செல்லுங்கள் என்பார்கள். வருடா வருடம் நடக்கும் ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி (ஆண்டு விழா) அன்று நானும் நாராயணசாமி நாயுடு அவர்களும் தவறாமல் செல்வோம். மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

பெற்றோர்களை இழந்த 300 அனாதை மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், அறிவு வளர்ச்சிக்கு கல்வி ஆகிய அனைத்தும் இலவசம். அவ்வளவு பேருக்கும் தேவையான கட்டட வசதி உள்ளது. தியான மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. சம்பள ஆட்கள் எவரும் கிடையாது. அனைத்து வேலைகளும் மாணவர்களால் செய்யப்படுகின்றன. சமைப்பதும் அவர்களே பரிமாறுவதும் அவர்களே. இங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் குறைந்த வாடகையில் குடியிருப்பு கட்டித்தரப் பட்டுள்ளது.

குடில் ஆண்டு விழா சமயத்தில் அனைத்துக் கட்டடங்களுக்கும் வெள்ளையடிக்கப்பட்டும் பெயிண்ட் அடிக்கப்பட்டும் புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன. இப்பணிகள் அனைத்தும் மாணவர்களால் செய்யப்படுகின்றன. விழாவன்று சுற்று வட்டார கிராம மக்கள் 5000 பேர்களுக்கு " அன்னதானம்" வழங்கப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் இன்று முழுப்பலனை தரும் நிலையில் இருக்கின்றன. பொருளாதார நிலை மிகவும் உயர்ந்துள்ள காரணத்தால் ஸ்தாபனம் தன்னிறைவு பெற்றுவிட்டது. எனவே யாரும் இனி குடிலுக்கு நன்கொடை வழங்க வேண்டாம் என்ற அறிவிப்பை சுவாமிகள் வெளியிட்டுள்ளார்கள். மேலும் பொன்னாடை போர்த்த வேண்டாம். பாத நமஸ்காரம் வேண்ட;ாம். மலர்மாலை சூட்டுதல் வேண்டாம். புகைப்படம் எடுப்பது வேண்டாம் எனவும் சுவாமிகள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

சுவாமி விவேகானந்தா அவர்கள் சொல்லியபடி தூய்மை, வாய்மை, காலந்தவறாமை, விடாமுயற்சி இவைகளைப் பின்பற்றினால் நன்கு வாழலாம் என்பதைக் கடைபிடித்து சுவாமிகள் வாழ்ந்து காட்டினார்கள். அது மட்டுமல்ல மற்றவர்களும் தம்மைப் போல் வாழவும், செயல்படவும் பயிற்சியளித்துள்ளார்கள். சுவாமி அவர்களின் மறைவிற்கு பின் இங்கு பயின்று பிரம்மசாரியாக உள்ளவர்களில் மூத்தவர் ஸ்தாபனத்தின் பொறுப்பேற்கவும் வழி செய்துள்ளார்கள். அதன்படி பிரம்மசாரி துரை அவர்கள் தலைவர் பொறுப்பேற்று சுவாமிகள் மாதிரியே ஸ்தாபனத்தை நன்கு நடத்தி வருகின்றார்கள். சுவாமிகளைப் போலவே இத்தலைவர் அவர்களும் என்னையும் மற்ற அன்பர்களையும் குடிலுக்க அடிக்கடி வரவேண்டுமென்றும் விரும்புகிறார். ஆசீர்வாதம் செய்கிறார்.

மற்ற பிரம்மசாரிகள் மூவரும் வழக்கம்போல் என்னிடமும் மற்ற அன்பர்களிடத்தும் அன்பாக இருக்கிறார்கள். நன்கு உபசரிக்கிறார்கள்.

நிர்வாகம் நன்கு நடைபெற மானேஜர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் அலுவலக பணியாளர் திரு. ஏ. சதாசிவமும் ஒத்துழைப்பு தருகின்றனர்.

மறைந்த சுவாமிகளை மஹான் என்றே சொல்ல வேண்டும். இந்த ஸ்தாபன வளாகத்துக்குள் அடியெடுத்து வைத்தவுடனே கவலைகள் எல்லாம் மறைந்து, சாந்தி ஏற்படுகிறது.உலகத்திலேயே இம்மாதிரி புனிதமான தொண்டு செய்யும் ஸ்தாபனம் இருக்குமா என்பது சந்தேகம். சுவாமி அவர்களின் வாழ்க்கையையும், செயலையும், அறிவுரைகளையும் பின்பற்றி பொதுத்தொண்டு செய்வதே சுவாமி அவர்களுக்கு செய்யும் நன்றிக்கடமையாகும்.

திருச்சிற்றம்பலம்

ஒ—ம் கே. மாணிக்கம்

குடில் குழந்தைகளின் இதயத்திலே வாழ்ந்து வருகிறார்

திரு. கே. ஆர். மாணிக்கம்
கெம்பநாயக்கன்பாளையம்
குடில் சுவாமிஜி அவர்களின் இளமைக்கால நண்பர்

ஸ்ரீராமகிருஷ்ண குடில் ஸ்தாபகர் ராமசாமி சுவாமிகள் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தாலூகா கெம்பநாயக்கன்பாளையம் என்ற எங்களது சிற்றூரில் எங்கள் வீட்டிற்கு எதிரில் உள்ள ஒரு சிறிய வீட்டில் பிறந்து வாழ்ந்து வசித்து வந்தார். சிறு வயது முதல் அவரிடத்திலே தெய்வ பக்தி குடிகொண்டிருந்தது. ஏழைகளின் மீது இரக்க குணம், ஜீவகாருண்யம் ஆகிய நற்பண்புகளையும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஸ்ரீவிவேகானந்தர் ஆகியோர் போதனைகளில் மிக்க ஈடுபாடும் கொண்டிருந்தார்.

1940 ம் வருடம் என நினைக்கிறேன். எங்கள் பள்ளியில் 'ஜீவ காருண்யம்' என்ற நாடகம் நடந்தது. அதில் ஸ்தாபகர் சுவாமிஜி முக்கிய கதாபாத்திரம் ஏற்றார். அவருக்கு தாயாராக நான் பெண் வேடத்தில் நடித்தேன். அப்போது எனக்கு சுமார் 11 வயது. சுவாமிகளுக்கு 29 அல்லது 30 வயதிருக்கும். நாடகத்தில் நான் பெரிய சேவல் ஒன்றை கையில் வைத்துக் கொண்டு அதன் கழுத்தை திருகி கொல்வது மாதிரி நடிக்க வேண்டும். அப்போது சுவாமிகள் ஓடிவந்து ' அம்மா சேவலை கொல்லாதே. எந்த ஜீவனையும் கொல்லக்கூடாது." என்று சொல்லி சேவலை கையிலிருந்து வாங்கி வெளியில் கொண்டு போய் விட்டு விடுவார். இது தான் நான் அவருடன் நடித்தது.

எனக்கு தற்போது 73 வயதாகிறது. அவருடன் பழகிய சிலபேர் எங்கள் ஊரில் இருக்கிறார்கள். சுவாமிகள் எங்களூரில் இருந்த போது பல நல்ல

காரியங்களை செய்திருக்கிறார். எங்களூரில் இருக்கும் கூட்டுறவு சங்கத்தைஆரம்பித்து வைத்தவர் அவரே. தற்போது எங்களூரில் கட்டியுள்ள பெரும்பள்ளம் அணைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பே சுவாமிகள் அதற்கான திட்டம் வரைந்தவர் ஆவார். தாய் தகப்பனை இழந்த ஏழை அனாதை சிறுவர்களுக்காக சாப்பாடு, உடை, உணவு, கல்வி ஆகிய அனைத்தையும் தந்து, ஸ்ரீராமகிருஷ்ண குடிலை ஸ்தாபிதம் செய்த ஸ்தாபகர் ராமசாமி சுவாமிகள் எங்கள் ஊரில் பிறந்து வளர்ந்தவர் என்று நினைக்கும் போது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சுவாமிகள் பிறந்த கெம்பநாயக்கன்பாளையத்தில் நானும் பிறந்தவன் என்று கூறிக் கொள்ளுவதில் மகிழ்ச்சியடைகிறேன். சுவாமிஜி அவர்கள் புகழ் உலகம் உள்ளவரை இருக்கும். அவர் இப்போதும் குடிலில் உள்ள சிறுவர்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

வணக்கம்

தங்கள் அன்புள்ள

ஒ–ம். கே. ஆர். மாணிக்கம்

12.10.2001

சுவாமிஜியின் நினைவாக 300 தென்னைகள்

டாக்டர். சி. கருணாநிதி

பல் மருத்துவர், திருச்சி

எனது பெரியப்பா டாக்டர் ஜி. விஸ்வநாதம் அவர்களும் எனது தந்தையார் டாக்டர் ஜி. சிற்றம்பலம் அவர்களும் ஸ்ரீராமகிருஷ்ண குடில் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஸ்வாமி அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். இருவரும் முறையே பொதுமருத்துவத்தையும் பல் மருத்துவத்தையும் குடில் குழந்தைகளுக்கு சேவையாக செய்து சுவாமிஜியின் இறுதிக்காலம் வரை தொடர்புடையவர்களாக இருந்தனர். இன்றும் இப்பொழுதும் ஸ்ரீராமகிருஷ்ண குடில் மாணவர்களுக்கு அந்த சேவை தொடர்ந்து எங்களால் செய்ய முடிகிறது என்று நினைக்கும் பொழுது அதை ஒரு அரிய வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறோம்.

எனது தந்தையார் பல் மருத்துவராக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினராகவும் பல கூட்டுறவு இயக்கங்களில் தலைமை பதவியில் இருந்தவர்கள். அந்த வகையில் சுவாமி அவர்களும் எனது தந்தை அவர்களும் நிர்வாகம் போன்ற பல விஷயங்களை பேசி விவாதித்து, கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்வார்கள். பிறரின் நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் சுவாமி அவர்கள், எப்பொழுதுமே தனக்கென்று ஒரு திட்டத்தை மனதில் வைத்துக்கொண்டு, தம்முடன் பழகியவர்களை அதன்படி நடக்க வைத்து விடுவார்கள்.

உதாரணத்திற்கு குடில் பையன்களுக்கு 10 ம் வகுப்பு வரை கல்வியை கொடுத்து வருகிறது ஸ்ரீராமகிருஷ்ண குடில். சுவாமி அவர்கள் நினைத்திருந்தால் மேல்நிலைக் கல்வியான +1 மற்றும் +2 வகுப்புகளையும் ஆரம்பித்திருக்கலாம். நாங்கள் எல்லாம் சுவாமியிடம் தனிப்பட்ட முறையில் அந்தக் கருத்தை கூறும் போது, " மாணவர்களுக்கு அடிப்படை கல்வியைத் தரவேண்டும். அது முடிந்தவுடன் அவன் தன் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக தொழிற்கல்வியையும் தரவேண்டும். அதற்காகவே திருச்சி ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி கூடத்தில் சேர்க்கப்படுகின்றனர் மாணவர்கள்" என்பார் சுவாமிகள். 10 ம் வகுப்பை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள் விரும்பினால் ஐ.டி.ஐ பயிற்சியிலும் சேர்ந்து படிக்கலாம்.

" எல்லோரையும் +1 +2 படிக்க வைத்து எத்தனை பேர் டாக்டராகவோ, பொறியாளராகவோ போகப்போகிறார்கள். மீதமுள்ளவர்கள் மற்றவர்களை சார்ந்து இருக்கக்கூடாது. அவரவர் உழைக்க வேண்டும். யாரையும் சாராமல் தொழில் ஒன்று கையில் இருக்க வேண்டும் என்பதற்காகவே அரசு அங்கீகாரம் பெற்ற ஐ.டி.ஐ. பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். " தொழிற் கல்வி பயின்று குடிலை விட்டுச் சென்று எதிர்கால வாழ்க்கையை தொடங்கும் மாணவர்கள் உண்மையிலேயே சுயதொழில் செய்து வாழ்வில் நல்ல நிலையில் இருப்பவர்கள் பலபேர் இருக்கிறார்கள்.

'உழைக்க பின்வாங்கினால் உண்ணத்தகுதியில்லை என்ற அருமையான வரிகளை சுவாமி அவர்கள் குடில் வளாகத்தில் எழுதி வைத்துள்ளார்கள். உழைப்பு – திருப்பராய்த்துறை என்று குறிப்பிட்டு விட்டால் போதும் தபால் நிலையத்திலிருந்து தந்திகள் குடிலுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு விடும். சுவாமி அவர்கள் குடிலுக்கு ' உழைப்பு' என்று மறுபெயரிட்டு, உழைப்பில் அவருக்குள்ள நம்பிக்கையையும், மரியாதையையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதுபோல பிறரின் நல்ல யோசனைகளை வரவேற்று ஏற்றுக் கொள்வதிலும் சுவாமி அவர்கள் யோசிக்க மாட்டார்கள்.

ஒரு சமயம் சுவாமி அவர்களும் என் தந்தை அவர்களும் குடில் ஆற்றுப்படுகையில் உள்ள தென்னந்தோப்பில் விவசாய சம்மந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது சுவாமி அவர்கள் இது போன்று ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை பராமரிப்பதில் உள்ள சிக்கல்களை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உதாரணமாக மரம் ஏறுபவர் எத்தனை மரம் ஏறினார்? அதற்கு கணக்கு சொல்வதில் கூடச்சொல்லிவிடுவது, ஒரு பருவத்தில் ஒரு மரத்தில் எத்தனை தேங்காய் பறித்தோம்? அல்லது ஒரு குறிப்பிட்ட மரத்தின் காய்ப்பு நிலை எப்படி? எருவிடுதல் என்பதையெல்லாம் குறிப்பாக வைத்துக் கொள்வதில் சிக்கல் இருந்தது. அந்த நடைமுறை சிக்கலை சுவாமி சொல்லிக் கொண்டு வருகையில் எனது தந்தை அவர்கள் உடனே எல்லா மரங்களுக்கும்

நெம்பர் போட்டு விடுங்கள் சுவாமி என்றார்கள். இதனால் இந்த நெம்பர் கொண்ட மரத்தில் எத்தனை காய் விழுந்தது? எத்தனை மட்டை விழுந்தது? மரம் ஏறுபவர் ஏறினாரா இல்லையா எருவிட்டோமா இல்லையா? என்பது போன்ற தனிப்பட்ட குறிப்புகளை பதிவு செய்ய வழி இருக்கிறது என்று சொல்லவும் குடிலில் உள்ள அனைத்து தென்னை மரங்களுக்கும் அடுத்த நாளே நெம்பர் போட ஏற்பாடு செய்து விட்டார்கள். இன்றைக்கும் அங்கு எல்லா தென்னை மரங்களுக்கும் நம்பர் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தென்னைக்கும், பிள்ளைகளுக்கு (Health Record) பராமரிப்பது போல் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சிண்டிகேட் பாங்கின் நிறுவனரும் கர்நாடகாவில் பல கல்வி நிறுவனங்களின் ஸ்தாபகரும் ஆன திரு. டி.எம்.ஏ. பாய் அவர்கள் குடிலுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள். மங்களூரில் மணிபாலில் கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பித்திருந்தேன். அப்பொழுது டி.எம்.ஏ. பாய் அவர்களை பார்ப்பதற்காக ஸ்ரீராமகிருஷ்ண குடில் மூலமாக சுவாமிஜி ஒரு அறிமுகக்கடிதம் எனக்கு பரிந்துரை செய்தார்கள். தனிப்பட்ட முறையில் சுவாமிஜி யாருக்கும் பரிந்துரை செய்யமாட்டார்கள். அந்த அளவிற்கு எங்கள் குடும்பத்துடன் ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தார்கள்.

1980 முதல் எங்கள் பல் மருத்துவமனையின் சார்பாக கிராமங்களில் பல இடங்களில் பல சிகிச்சை முகாம்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதைக் கேள்வியுற்ற சுவாமி அவர்கள் நான் ஒரு தடவை குடில் சென்றிருந்த போது இது போன்ற பல்சிகிச்சை முகாம்களை இலவசமாக நடத்துவதற்கு குடில் மூலமாக உங்களுக்கு ரூ 25000,= தருகிறோம். நீங்கள் அதை வைப்பு நிதியாக வைத்துக் கொண்டு அதன் மூலம் வரும்தொகையை முகாம் நடத்துவதற்கு பயன்படுத்துங்கள் என்று சொன்னார்கள். சேவை என்றென்றும் தொடர வேண்டும் சிறப்பாக நடைபெற வேண்டும், என்றும் நடக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சுவாமி அவர்கள் மனமுவந்து நிதி அளிக்க முன்வந்தார்கள்.

நாம் ஒரு தடவை நிதியை பெற்றுவிட்டால் எடுத்த காரியத்தை செவ்வனே செய்ய வேண்டுமே, சுவாமிக்கு கொடுத்த வாக்குறுதியில் நாம் தவறி விடக்கூடாதே என்று யோசித்து கொண்டு, அந்த நிதியுதவியை பெறத் தயங்கினேன். அந்த தயக்கமே அவரின் எண்ணம் ஈடேறாமலும் பலருக்கும் பயன்படாமல் போய்விட்டது. இப்போது நினைத்தாலும் ஒரு அரிய தொண்டு செய்யும் வாய்ப்பை நழுவ விட்டு விட்டோமே என்று மனதிற்குள் வேதனைதான் மிஞ்சுகிறது.

" எங்களது தோட்டத்தில் தென்னை மரம் வைக்க வேண்டும் எனக்கு தென்னங்கன்றுகள் வேண்டும் சுவாமி, கொடுங்கள்" என்று சொல்லியிருந்தேன். சொல்லிவிட்டு மறந்தும் விட்டேன். ஒரு நாள் சுவாமி

அவர்கள், " கருணாநிதிக்கு 300 தென்னங்கன்றுகள் அனுப்பி தோட்டத்திலே கொண்டு போய் இறக்கி வைத்து விடப்பா" என்று துரை பிரதர் அவர்களிடம் சொல்லிவிட்டார்கள். பிறகு சுவாமி அவர்களை நேரில் சந்தித்து அதற்கு பணம் கொடுப்பதற்கு சென்றிருந்தோம். எவ்வளவோ கேட்டுக்கொண்டும் சுவாமி அவர்கள் பணம் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். " இது உங்களுக்கு குடில் கொடுக்கின்ற பரிசு" என்று சொன்னார்கள்.

" இன்று 300 தென்னைகள் அவர் நினைவாக எங்களுடன் இருக்கின்றன."

வருடம் ஒருமுறை புதுமாணவர்கள் சேர்க்கை முடிந்தவுடன் அவர்களே அனைவருக்கும் பல்நோய் மற்றும் பல் சம்மந்தமான தொந்தரவுகள் ஏதும் இருந்தால் பரிசோதனை செய்து சரி செய்து விட வேண்டும். அதுபோல உடல் சம்மந்தமான நோய்களுக்கு வாரம் ஒருமுறை தற்சமயம் டாக்டர் கனகராஜ் அவர்கள் தவறாமல் குடிலுக்கு சென்று மாணவர்களை பாதுகாத்து வருகிறார்கள்.

சுவாமி அவர்கள் வருட ஆரம்பத்தில் குடில் மாணவர்களுக்கு பல் பரிசோதனை செய்து விடுவதில் குறிப்பாக இருப்பார்கள். ஆரோக்யமான உடலே வாழ்வின் மூலதனம் என்பதை மனதில் கொண்டு உணவு, உடை, தங்குமிடம் மருத்துவ வசதி இவை அனைத்தையும் கொடுத்ததோடு அல்லாமல் கல்விக் கண்களையும் திறந்து தொழிற்கல்வியையும் கொடுத்து யாரையும் சாராமல் உழைத்து உயர்ந்து கொள் என்று இந்த இளம் தளிர்களின் மனதில் தன்னம்பிக்கையை விதைத்து உலகில் உலவவிட்ட அவரின் பெரும் சிந்தனையில் நாமும் பங்கு கொள்ள இறை துணைபுரியட்டும்.

ஒ–ம் சி. கருணாநிதி

" *என் உள்ளத்தில் குடிகொண்ட சுவாமிகள்* "

திரு. நாகராஜன் (குடில் முன்னாள் மாணவர்)
மருத்துவமனை உதவியாளர், விஸ்வநாதம் ஆஸ்பத்திரி,திருச்சி

குடில் ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரைக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனாதை மாணவர்கள் படித்து முடித்து சென்றிருப்பார்கள். அதில் நானும் தாய் தந்தை இல்லாத ஒரு மாணவனாக 1964 ம் வருடம் முதல் 1975 ம் வருடம் வரை குடிலில் படித்து வந்தேன். குடில் திட்டப்படி ஆண்டிற்கு ஒரு முறை மாணவர்களை சேர்த்து விட்ட உறவினர்கள் முறைப்பிரகாரம் வந்து பார்த்துவிட்டு செல்வார்கள். ஆனால் என்னை குடிலில் சேர்த்து விட்டதோடு சரி எவரும் ஒரு முறை கூட என்னை பார்க்க வரவில்லை. அதற்குள் படிப்பை முடித்து வெளியே செல்லும் காலம் வந்தது. சுவாமி அவர்களிடம் " சுவாமி

எனக்கு உறவினர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் நான் இங்கேயே ஆஸ்ரமவாசி(பிரம்மசாரி) ஆகி விடுகிறேன்" என்று கூறினேன். அதற்கு சுவாமி அவர்கள் " ஆஸ்ரமவாசி ஆவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. நன்றாக நிதானமாக யோசித்து முடிவு செய்து பிறகு வா" என்று கூறிவிட்டார்கள். நானும் குடிலை விட்டு வெளியேறி திருச்சியில் உள்ள மக்களுக்கு சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்ட டாக்டர். விஸ்வநாதம் ஐயா அவர்களின் ஆஸ்பத்திரியில் வேலைக்கு சேர்ந்தேன். அன்றிலிருந்து இன்று வரை அங்கேயே பணிசெய்து வருகின்றேன்.

ஆஸ்ரமத்தில் நான் படித்துக் கொண்டிருந்த போது சுவாமி அவர்களுக்கு முதுகுத் தண்டில் வலி ஏற்பட்டதின் காரணமாக கோயமுத்தூரிலுள்ள கோட்டக்கல் வாரியார் ஆயுர்வேத மருத்துவமனையில் இரண்டு மாதம் வைத்தியம் செய்து கொள்ள சென்றார்கள். அங்கு சுவாமியை பார்த்துக் கொள்ள நானும் குடில் பிரம்மசாரியான வீரசந்திரனும் கோயமுத்தூருக்கு சுவாமி அவர்களுடன் புறப்பட்டு சென்றோம். அவருக்கு பணிவிடை செய்யும் பாக்யம் கிடைத்தது. எந்தக்காரியம் ஆனாலும் திட்டம் போட்டு அதன்படி செய்ய வேண்டும் என்பதில் சுவாமி அவர்கள் மிகவும் கவனமாகவும், கண்டிப்புடனும் இருப்பார்கள். ஆகையால் எங்கள் இருவருக்கும் காலை 5 மணியிலிருந்து இரவு 9.30 மணி வரையில் யார் யாருக்கு என்னென்ன நேரத்தில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்து கொடுத்தார்கள்.

அந்த ஆயுர்வேத மருத்துவ மனையில் சுவாமி அவர்கள் தங்கியிருந்த இடம் ஒரு தனி வீடாக எல்லா வசதிகளையும் கொண்டதாக இருந்தது. அந்த வீட்டை (காட்டேஜ்) சுற்றிலும் செடிகொடிகள் மண்டிக்கிடந்தது. ஏற்கனவே கோவை சென்று அவ்விடத்தை பார்த்து வந்ததினால் அவ்விடத்தை சுத்தம் செய்ய மண்வெட்டி, இரும்பு சட்டிகளை குடிலிலிருந்தே எடுத்துச் சென்றோம். அவ்விடத்தை சுத்தம் செய்ய தினமும் ஒரு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று சுவாமி அவர்கள் திட்டம் கொடுத்தார்கள். சுமார் 15 நாட்களில் அந்த இடம் சுத்தம் செய்யப்பட்டது. இதையெல்லாம் அறையில் இருந்தவாறே ஜன்னல் மூலமாக சுவாமி அவர்கள் கண்காணித்து வந்தனர். அந்த இடத்தில் சிறு சிறு பாத்திகள் கட்டி பூச்செடிகள் காய்கறிச் செடிகள் நட்டு நீர் ஊற்றி வந்தோம். இரண்டு மாதத்தில் சுவாமி அவர்கள் இருந்த காட்டேஜை சுற்றிலும் அழகான நந்தவனம் உருவாயிற்று.

தினமும் காலை 5.30 மணிக்கு சுவாமி அவர்களுக்கு எண்ணெய் வைத்தியம் செய்ய மருத்துவமனை ஆட்கள் வந்து விடுவார்கள். 1 மணி நேரம் வைத்தியம் நடக்கும். பிறகு சுவாமிஜி குளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வேன். சுவாமி அவர்கள் குளித்து விட்டு உடை மாற்றிக்கொண்டு நெற்றியில் திருநீறும் சந்தனப்பொட்டும் வைத்த பின் பூஜை செய்ய ஆரம்பிப்பார்கள். பூசையில்

நாங்களும் கலந்து கொள்வோம். அதன் பின் காலையுணவு முடித்துவிட்டு சுவாமி அவர்கள் சிறிது நேரம் புத்தகம் படிப்பார்கள். அதன் பின் ஓய்வெடுப்பார்கள். சுவாமி அவர்கள் கோவையில் வைத்தியம் பார்த்துக் கொள்வது யாருக்கும் தெரியாது. அதையும் மீறி சுவாமி கோவையிலிருக்கிறார் என்பதை தெரிந்து கொண்ட அன்பர்கள் சிலர் சுவாமி அவர்களை பார்த்து பேசிவிட்டுச் செல்வார்கள். தினமும் இரவு 9 மணியிலிருந்து 10 மணி வரைக்கும் அன்று நடந்த பணிகளைப் பற்றியும் எந்தெந்த அன்பர்கள் எந்தெந்த ஊரிலிருந்து வந்தார்கள் என்பதையும் அப்போது சுவாமி அவர்களிடம் கூறுவோம். அவர் சில வேளைகளில் எங்களுக்கு சிறுசிறு கதைகள் கூறுவார். அடுத்த நாள் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி சுவாமி அவர்கள் கூறுவார்கள். முதல் நாள் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் அந்தக்குறை மறுநாள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வோம். இரவு படுக்கப்போகும் முன்பாக இரண்டு நிமிடம் கண்மூடி தியானித்து விட்டு பின்பு உறங்கப் போவோம்.

ஒரு நாள் நான் என் சொந்த ஊரான பெரியநாயக்கன்பாளையத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்திலுள்ள கோவிலுக்குச் சென்று வருகிறேன் என சுவாமி அவர்களிடம் கேட்டேன். அதற்கு சுவாமி காலை 11 மணியளவில் சென்றுவிட்டு மாலை 5 மணிக்குள் வந்து விடுமாறு கூறினார்கள். “ நீ ஊருக்குச் சென்று விட்டு திரும்பும் போது யாரிடமும் சுவாமி இங்கிருப்பதாக கூறவேண்டாம்” என்றார். சுவாமி அவர்கள் ஏன் இவ்வாறு கூறுகிறார் என அப்போது எனக்குத் தெரியாது. பின்னால்தான் சுவாமி அவர்கள் பிறந்து வளர்ந்த ஊர் கெம்பநாயக்கன்பாளையம் என தெரிய வந்தது. சுவாமி அவர்கள் சொந்த ஊரில் இருக்கும் போது அவ்வூருக்கு பல நல்ல காரியங்களை செய்திருக்கிறார்.

அதன்பின் பற்பல இடையூறுகளுக்கு இடையே தாய் தந்தை இருவருமே இல்லாத திக்கற்ற சிறுவர்களுக்காக ஸ்ரீராமகிருஷ்ண குடிலை உருவாக்கிய காலம் முதல் அமரர் ஆன வரையில் அவரின் சொந்த ஊர் எது? என்பது யாருக்கும் தெரியாது. சுவாமி அவர்கள் ஏற்றுக் கொண்ட துறவு வாழ்க்கையில் அவரது லட்சியம் முழுமையாக நிறைவேறியுள்ளது.

ஓ–ம் நாகராஜன்
விஸ்வநாதம் ஆஸ்பத்திரி, திருச்சி
20.12.2001

ராமனும் லட்சுமணனும்

கோபி தியாகி. திரு. லக்ஷ்மண ஐயர்

தலைப்பை பார்த்தவுடன் மனதிலே மலரும் முதற் கேள்வி “ யார் இந்த ராமலட்சுமணர்கள்?” என்பதாகும். இதிகாச கால ராமனும் லட்சுமணனும்

அயோத்தி வேந்தன் தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்களாக பிறந்தனர். இவர்களின் பிறப்பின் ரகசியம் தீய அரக்கர்களை அழித்து, கானிலே தவ வேள்வி இயற்றும் முனி சிரேஷ்டர்களையும் தவசிகளையும் காப்பதாகும்.

இக்கால ராமலட்சுமணர்கள் மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து அடிமை பாரதத்தை, சுதந்திர பாரதமாக விடுவிக்கும் வேள்வியில் தங்களது உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அர்ப்பணித்த லட்சோபலட்சம் வீரத்தியாகிகளிடையே, தமிழகத்தில் கெம்பநாயக்கன்பாளையத்தில் ராமனும், கோபிசெட்டிபாளையத்தில் லட்சுமணனும் மகாத்மாகாந்திஜியின் தேசீய விடுதலை இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட தேச பக்தர்கள் ஆவார்கள்.

இன்றைய பாரதத்தின் இளைஞர்களுக்கு உலக அரங்கிலேயே சுதந்திரமான ஒரு நாடாக பாரத நாடு வீரநடை போட்டு வருகின்றது என்பது மட்டுமே தெரியும். பாரதத்தின் விடுதலை எளிதாகவா கிடைத்தது? சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை பணிய வைத்த பாரத மக்கள் கைக்கொண்ட தியாகத்தை அளவிட்டுத்தான் கூற இயலுமா? பாரத மக்களின்தியாக வரலாற்றை, இன்றைய இளைய தலைமுறை வாலிபர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தம் முன்னோர்கள் இந்நாட்டின் விடுதலைக்காக தந்த 'விலையை' இன்றைய சமுதாயத்தின் இளைஞர்கள் புரிந்து கொண்டால் தான் எதிர்கால இந்தியாவின் தீரமிக்க காப்பாளர்களாக விளங்க முடியும்.

இவர்களுக்காகவே, திருப்பராய்த்துறையில் அனாதை மக்கள் காப்பகமாக விளங்கும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலை உருவாக்கிய மனித தேவன் பிரம்மசாரி ராமசுவாமி அவர்களின் முந்தைய வாழ்க்கை வரலாறும் இன்று கோபி செட்டிபாளையத்தில் 85 வயது நிரம்பப் பெற்ற பழுத்த காங்கிரஸ் தியாகியும் ராமசுவாமி அவர்களின் நண்பருமான ஸ்தாபன காங்கிரஸ் தியாகியும் ராமசுவாமி அவர்களின் நண்பருமான லட்சுமண ஐயர் வாழ்க்கை வரலாறும் இங்கு தரப்பட்டுள்ளது.

1931 லிருந்து 1940 வரை கெம்பநாயக்கன்பாளையம் ராமசாமி அவர்கள் கோபி ஐயர் அவர்களுடன் இணைந்து மகாத்மாஜியின் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியது அவரது வாழ்வின் முதற்கட்டமாகும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டு, குடிலை நிர்மாணித்து சேவை செய்து அமரரான வரலாறு அவரது வாழ்வின் இரண்டாவது கட்டமாகும். இங்கு அவரது முதற்கட்ட வரலாறு காங்கிரஸ் இயக்கத்தின் விடிவெள்ளியாக காணும் எழுச்சி மிக்க சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

கோபி ஐயரின் வரலாறும் அற்புதமான கட்டங்களை கொண்டதாகும். காந்தியின் இயக்கத்தில் கலந்து கொண்டு பல போராட்டங்களை நடத்தி அதன் காரணமாக ஆங்கில அரசாட்சியில் பல்லாண்டுகள் சிறைச்சாலையில்

கழித்தார். இது ஐயர் அவர்களின் முதற்கட்ட வாழ்வாகும். நாட்டு விடுதலைக்குப் பின் இன்று அமைதியாக, தன்னை நாடி வரும் ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்து வருகின்றார். இது அவரது வாழ்வின் இரண்டாவது கட்டமாகும். இங்கு அவரது முதற்கட்ட வாழ்வின் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

சேவைக்கே சிகரமாகத் திகழும், திகழ்ந்த தமிழகத்தின் இரு உத்தமப் புதல்வர்களின் வாழ்க்கை வரலாற்றை எனக்கு கிடைத்த மாபெரும் சந்தர்ப்பம் என எண்ணி எழுதத் துவங்கி விட்டேன். இன்றைய குடில் சுவாமியின் அனுமதியோடு, மறைந்த குடில் சுவாமிஜியின் உற்ற நண்பரை கண்டு பேசிவர குடில் பிரம்மசாரி கருப்பையா அவர்களுடன் நானும் கோபிசெட்டிபாளையம் போய் வந்தோம். ஐயர் அவர்கள் தமது 50 ஆண்டுகால நிகழ்வுகளை நினைவிற்கு கொண்டு வந்து கூறியதை கீழே கொடுத்துள்ளேன்.

ஆண்டவனின் ஆதேசத்தால் பிறவியிலேயே தொண்டுள்ளம் கொண்டவராக திகழ்ந்த ராமசாமி அவர்கள் சிறு வயது முதல் மக்கள் சேவையிலும் தேச சேவையிலும் ஈடுபட்டார். தேசப்பிதாவால் வெளியிடப்பெற்ற காந்தீய இயக்கங்கள் பலவற்றிலும் பங்கு கொண்டார். கதர் இயக்கம், சுதேசி இயக்கம், ஹரிஜன முன்னேற்றம், தனிநபர் சத்யாகிரகம் ஆகியவற்றில் இருவரும் பங்கு பெற்றனர்.

ஐயர் அவர்கள் ஆங்கில அரசாட்சியை எதிர்ப்பதில் அதிகத் தீவிரம் காட்டினார். இதனால் அரசாங்க எதிர்ப்பாளர்கள் பட்டியலில் இவர் பெயரும் இடம் பெற்றது. இதனால் கணக்கற்ற தொல்லைகள் வரும் என்றாலும், பட்டியலில் இடம் பெற்றதை பெரும்பேறாக கருதினர் தேசத்தியாகிகள். ஆங்கில அரசாட்சியின் அடக்குமுறைகளை துச்சமாக மதித்தனர். சிறைவாசம் மேற்கொண்டனர். 1931 லிருந்து 1940 வரை ராமசாமி அவர்கள் அடிக்கடி கோபி சென்று ஐயர் அவர்களை சந்தித்து காங்கிரஸ் இயக்கம் பற்றி கலந்து பேசுவார். ராமசாமி அவர்கள் ஐயரை விட ஆறேழு வயது மூத்தவர். ஐயர் அவர்களின் தேசீய குழுவிற்கு ராமசாமி அவர்கள்தான் தலைவர், ஆலோசகர், வழிகாட்டி எல்லாம் போராட்ட திட்டங்களை தீட்டுபவரும், செயல்படுத்துபவரும் இவரே.

கிராமப் பிரசாரத்தின் போது இவர்கள் கையாண்ட வழிமுறைகள் பலப்பல. முதல் நாள் இரவே இருவரும் கூடி திட்டமிடுவார்கள். அதிகாலையிலேயே தொண்டர்கள் படு உற்சாகத்தோடு கிராமங்களுக்கு செல்ல காத்திருப்பார்கள். போரிடச் செல்லும் சைன்யத்திற்கு தலைவர் உத்தரவிடுவதைப் போல ராமசாமி அவர்கள் தொண்டர்களிடம் கிராமங்களுக்குச் சென்று செய்ய வேண்டிய காரியங்களை விவரிப்பார். பின் இரு தலைவர்களும் உற்சாகம் கரைபுரள கிராமம் நோக்கிப் புறப்படுவார்கள். மூவர்ண ராட்டைக் கொடிகளை தடிகளின் நுனியில் கட்டிக்கொண்டு நான்கு நான்கு பேர்களாக உள்ளத்தை உசுப்பிவிடும் கோஷங்களை எழுப்பிக் கொண்டு வீரநடை போட்டுக்கொண்டு

புறப்படுவார்கள். கேட்போரை குதிபோட்டுப் பாயச்சொல்லும் பாரதியின் எழுச்சி மிக்க பாடல்களான நெஞ்சுபொறுக்குதில்லையே, எந்தையும் தாயும், வந்தே மாதரம், சொந்த நாட்டிலே அடிமையா, சதையை துண்டு துண்டாக வெட்டினும் ஆகிய பாடல்களை பாடிச் செல்வார்கள். இவற்றை எங்களிடம் விளக்கமாக கூறி வந்த ஐயர் அவர்களுக்கு தாமும் ராமசாமியும் உரத்துப் பாடிச் சென்றது நினைவிற்கு வரவே, நாற்காலியிலிருந்து எழுந்து விட்டார். பாரதியின் மேற்படி பாடல்களை கையை உயர்த்தி பாடிக்காட்டினார். இந்த வயதிலும் அவரது குரல் கணீரென ஒலித்தது. அந்த முதியவரின், அல்ல அல்ல அந்த வீறு கொண்ட இளைஞரின் அன்றைய செயலாக்கத்தை அப்போது நாங்கள் நேரில் கண்டோம். மனம் நெகிழ்ந்து விடும்.

இவர்களது கிராமப் பிரச்சாரம் பற்றிய கூட்டம் கூடும் போஸ்டர்களை தொண்டர்கள் கையால் எழுதுவார்கள். எந்த அச்சகமும் ஆங்கிலஅரசுக்கு பயந்து தேசீயத் தலைவர்களுக்கு அச்சடித்து தர முன்வராது. போஸ்டர்கள் வாசகத்தை இரு தலைவர்களும் தீர்மானிப்பார்கள். தொண்டர்கள் கண் விழித்து இரவு முழுதும் கையால் பல பிரதிகளை தயாரிப்பார்கள். இவர்கள் குழுவில் பெரும் பங்கு வகித்தவர்கள் பொன்னம்பல கவுண்டர், நரசிம்மன் இன்னும் பல முக்கியஸ்தர்களும் ஆவார்கள். எழுதப்பட்ட போஸ்டர்களை விடிவதற்குள் வீடுகள், மரங்கள், சாவடிகள் கோயில் சுவர்களில் தொண்டர்கள் ஒட்டி விடுவார்கள். ஜனங்களும் உற்சாகமாகக் கலந்து கொள்ளுவார்கள்.

கோபி மிராசுதாரர்களிடம் அவதிப்பட்டு கிடந்த ஹரிஜனங்களின் அவல நிலை பற்றியும் அவர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவித்ததைப் பற்றியும் ஐயர் அவர்கள் நினைவு கூர்ந்தார். கோபி மிராசுதாரர்களிடம் நூற்றுக்கணக்கான ஹரிஜன மக்கள் கொத்தடிமைகளாக இருந்து வந்தனர். வேலைக்கேற்ற கூலி இல்லை. சரியான உணவும் கிடையாது. சுகாதார வசதிகள் என்பது அறவே கிடையாது. ஆயுள் தண்டனை பெற்ற சிறைக் கைதிகளை விட கேவலமான நிலையில் இவர்கள் புழுப்பூச்சிகளைவிட மோசமாக மிராசுதாரர்களிடம் அவதிப்பட்டு வந்தனர். இவர்களின் இந்நிலையைக்கண்ட ஐயர் அவர்களும், ராமசாமி அவர்களும் வெகுவாக மனவேதனை அடைந்தனர். எப்பாடுபட்டாயினும் இம் மக்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டும் என இரு தலைவர்களும் தீவிரமாக ஆலோசித்தனர். இவர்கள் தங்களது தேசீய இயக்க காரியங்களைப் பற்றி ஆலோசிக்கவும் கலந்து பேசவும் ஊருக்கு வெளியே மயானத்திற்கருகில் ஒரு வீட்டை ஏற்படுத்திக் கொண்டனர். அர்த்த ராத்திரி நேரத்தில் இவ்வீட்டில் கூடுவார்கள். இவர்களின் இவ்வீட்டை பொதுமக்கள் "பேய்வீடு" என அழைத்தார்கள். ஹரிஜன மக்களின் கொத்தடிமை நிலைமாற தலைவர்களின் ஆலோசனை இவ்வீட்டில் நடந்தது. தங்கள் பண்ணையில் வேலை செய்யும் ஹரிஜனங்களின் கொத்தடிமை நிலை மாற மிராசுதாரர்களுக்கு

குறிப்பிட்ட தொகையை கொடுத்து அம்மக்களை விடுவிப்பது என முடிவாயிற்று. தேசியவாதிகள் அனைவரும் தீவிரவசூலில் ஈடுபட்டனர்.

ஒரு நாள் இத்தியாகிகளின் கூட்டம் கூடியது. தொண்டர் படை சூழ ஐயரும் ராமசாமியும் மிராசுதாரர்களை சந்திக்க ஆயத்தமாயினர். மிராசுதாரர்களை சந்தித்தனர். தாங்கள் வந்திருப்பதின் நோக்கத்தை விரிவாகக் கூறினர். ஹரிஜனங்களை கொத்தடிமையிலிருந்து விடுவிப்பது தேசியக் கடமை என வலியுறுத்தினர். அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே என அறிவுறுத்தினர். மிராசுதாரர்களின் சொகுசான வாழ்வின் அச்சாணியே ஹரிஜன கூலிகள் என சுட்டிக்காண்பித்தனர். அவர்களின் அவல நிலையை போக்கியே தீரவேண்டும் என திடமான உறுதியுடன் ஐயர் அவர்களும் இராமசாமி அவர்களும் மிராசுதாரர்களிடம் பேசினார்கள். இவர்களின் வேண்டுகோள் மிராசுதாரர்களிடையே பெரும் மாற்றத்தை உண்டாக்கிற்று. அவர்களை விடுவிக்க தியாகிகள் தருவதாகக் கூறிய பணத்தையும் வாங்க மறுத்தனர். மனமகிழ்வோடு ஹரிஜனங்களின் கொத்தடிமை நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.தேசீய காங்கிரஸ் தலைவர்கள் ஹரிஜனங்களுக்காக மேற்கொண்ட இச்செயலை வெகுவாகப் பாராட்டினர். ராமசாமியையும் ஐயரையும் வெகுவாகப் புகழ்ந்தனர். ஹரிஜனங்களிடம் பற்றும் பாசமும் கொண்ட கோபி வட்டார தேசீய உணர்வு கொண்ட மக்கள் இவ்விரு தலைவர்களையும் வானளாவப் புகழ்ந்தனர்.

மக்கள் சேவையில் ஏற்பட்ட சில நிகழ்வுகளால் ராமசாமி அவர்களே சில வேளைகளில் சோர்ந்து போவார். “ ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? ” என்ற மனோபாவத்துடன் மக்களில் கணிசமான ஒரு சாரார் தேசீய இயக்கத்திற்கு எதிராகவும் ஆங்கில அரசுக்கு ஆதரவாகவும் உள்ள நிலையை மேற்கொண்டிருந்தனர். இதைக்கண்ட ராமசாமி அவர்கள் மிகவும் மனவேதனைப்பட்டார், “ இத்தகைய மக்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் உயிரைக் கொடுத்து பாடுபடுவதில் என்ன பயன்? அனைத்தும் வீண். என் மனம் வெறுத்துவிட்டது. சந்நியாசம் பூண்டு போய்விடலாம் என நினைக்கிறேன்.” எனக் கூறியுள்ளார். விவேகம் இல்லாத மக்கள். ஆங்கில அரசின் மீது மோகம் கொண்டவர்கள், அறியாமை காரணமாக இப்படி நடந்து கொள்வது சகஜம்தான். இதை நாம் பொருட்படுத்தக்கூடாது என பலவாறாகக் கூறி ராமசாமியை சமாதானப்படுத்துவார்கள்.

கூட்டங்களில் பேசும்போது ராமசாமி அவர்கள் மக்களிடம் வீட்டின் சுத்தம் சுற்றுப்புற சுத்தம், கிராம சுத்தம் ஆகியவற்றை அதிகமாக வலியுறுத்தி பேசுவார். துப்புரவை வலியுறுத்த ஒவ்வொரு கூட்டங்களிலும் “ பூனைக்கதை ” யை கூறுவார். பூனை மலம் கழித்தவுடன் தன் கால்களால் மண்ணைக்கிளறி மலத்தை மூடிவிடும். தனது நாக்கால் உடம்பு முழுதும் நக்கி நக்கியே

சுத்தப்படுத்திக் கொள்ளும். பூனைக்கு இருக்கும் இந்தப்பழக்கம் தூய்மைக்கு உதாரணம். எனவே அனைவரும் பூனையை பின்பற்றுங்கள் என அறிவுறுத்துவார்.

இவர் எப்போதாவது தனிமையில் அசையாது அமர்ந்திருந்தால் ஏதோ ஒரு திட்டம் அவர் மனதில் உருவாகி வருகிறது எனப்புரிந்து கொள்ளலாம். எடுத்தோம் போட்டோம் என்றில்லாமல் நிதானமாக ஒன்றுக்கு பல முறை சிந்திப்பார். அவர் மனதிற்கு தெளிவு ஏற்பட்ட பின்தான் அத்திட்டத்தை செயல்படுத்த முனைவார். திட்டமும் வெற்றிபெறும். மாநில எழுத்தறிவு இயக்கத்தை பொங்கர்பாளையத்தில் நடத்த இந்தக் குக்கிராமத்திற்கு நேருஜியையும் ராஜாஜியையும் வரவழைத்தார். நடந்த பொதுக் கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் எழுதிய " தம்பீ வா" "ஊருக்கு நல்லது" " இதையும் படி" ஆகிய மூன்று சிறு நூல்கள் வெளியிடப்பட்டன. ஐயர் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இவ்வாறு காங்கிரஸ் இயக்கத்திலே தீவிரமாக ஈடுபட்டிருந்த ராமசாமி அவர்களின் வாழ்விலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. 1941 ம் ஆண்டில் ராமசாமி அவர்கள் கோவை சென்றார். கோவையில் ஆன்மீகச் செம்மலும் தேசீயத்தில் மிக்க பற்று கொண்டவரும் இல்லறத்துறவியுமான பெருநிலக்கிழார் சி.யு. நஞ்சப்பா அவர்கள் ராமசாமியிடம், " திருப்பராய்த்துறையில் சுவாமி சித்பவானந்தா அவர்கள் தலைமையில் இயங்கி வரும் தபோவனத்திற்கு செல். அங்கு நடைபெறும் ஆன்மீகப்பணிகள், குருகுலமுறைப்படி நடக்கும் கல்விப்பணி ஆகியவற்றிற்கு நீ துணையாக இருக்க வேண்டும். அங்கு சென்றால் உன் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமையும்" எனப் பலவாறாகக் கூறினார். ராமசாமி அவர்களும் ஒத்துக்கொண்டார். தேசீய இயக்கம் அவரை வாழ்த்தி வழியனுப்பி வைத்தது. ஆன்மீக இயக்கம் இருகை விரித்து அவரை ஏற்றுக்கொண்டது. இதுவரை தேசிய இயக்கத்தின் தொண்டராக உலாவந்த ராமசாமி அவர்கள், பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாராக மாறினார். ஒரு சகாப்தம் முடிந்து மற்றொன்று ஆரம்பமாயிற்று.

கோபி ஐயர் அவர்கள் ராமசாமி அவர்களைப்பற்றி இறுதியாகக் கூறிய உரைகள், " ராமசாமி சாதாரண மனிதர் அல்லர். ஆண்டவன் அருள்பெற்ற ஞானி அவர். எங்களின் தலைவர் அவர். ஆலோசகரும் ஆவார். வெற்றி பெறும் திட்டங்களை வகுப்பதில் அவருக்கு ஈடு இணை அவரேதான். ஹரிஜனங்களை தனது உடன்பிறந்தவர்களாகவே கருதி வந்தார். அவர்கள் சேவையில் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. தூய்மை மிக்க தொண்டராக விளங்கி வந்தார். கடவுள் பக்தி மிக்கவர். ஒழுக்க சீலர். மிகமிக எளிய மனிதராகவே இருந்து வந்தார். சொல், செயல், நடத்தை, வாழ்வு ஆகிய அனைத்திலும் சத்திய உணர்வோடு தன்னலமற்று தூய்மையாக இருந்தால் ஆண்டவனைக் காணலாம்" என்பதில் தீவிர நம்பிக்கை உடையவர்.

கோபி ஐயரின் தன்னலமில்லா சேவையைப் பற்றி சிலவற்றை கூறி இக்கட்டுரையை நிறைவுக்கு கொண்டு வரலாம் என நினைக்கிறேன். 1943–1944 ம் ஆண்டில் தனிநபர் சத்தியாகிரகத்தை மகாத்மாஜி அவர்கள் நாடெங்கும் தொடங்க காங்கிரசின் தியாக சீலர்களுக்கு ஆணையிட்டார். இவ்வாணையை சிரமேற்கொண்டு ஐயர் அவர்கள் கோபியில் தனிநபர் சத்யாகிரகத்தை ஆரம்பித்தார். யுத்தநிதிக்கு இந்தியர்கள் ஆங்கில அரசுக்கு பணம் தரக்கூடாது என்றும் ராணுவத்தில் இந்தியர்களை சேர்க்கக்கூடாது என்றும் போராடினார்கள். ஆங்கில அரசு இவரை கைது செய்தது. சிறையிலடைக்கப்பட்டார். ஐயர் அவர்கள் மொத்தம் 4 வருடம் 9 மாதங்கள் சிறையில் இருந்தார். பெல்லாரி, அலிபுரம், வேலூர், கோவை ஆகிய இடங்களில் சிறைவாசம் அனுபவித்தார்.

இவரது சகோதரியின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. ஆனால் ஐயர் அவர்களோ சிறைச்சாலையில் இருந்தார். தமது சகோதரியின் திருமணத்தின்போது வயதான பெற்றோர்களுக்கு உதவியாக தன்னை ' பரோலில்'' சென்று வர அனுமதி அளிக்குமாறு ஆங்கில அரசுக்கு விண்ணப்பித்தார். ஆங்கில அரசும் இவரை பரோலில் கோபியை விட்டு எங்கும் செல்லக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அவரை விடுவித்தது. சகோதரியின் திருமணம் நடந்து முடிந்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி , பாரதத்தின் சுதந்திர இயக்கத்தின் தந்தையான மகாத்மா காந்தியை சந்திப்பது எனத் திட்டமிட்டார். சதா வீட்டை போலீஸ் கண்காணித்த போதிலும் எவ்வாறோ போலீசின் கண்களுக்கு மண் தூவி வார்தாவுக்குச் செல்ல புறப்பட்டுவிட்டார். இவர் வார்தாவை அடையும்போது மாலை மணி 6 ஆகிவிட்டது. 6 மணிக்கு வார்தா ஆஸ்ரம கேட் சாத்தப்பட்டது. கேட்டை பிடித்துக்கொண்டு நின்றிருந்தார் ஐயர் அவர்கள். வார்தாவிலிருந்த ஒரு தமிழ்நாட்டுக்காரர் அகஸ்மாத்தாக இவரை பார்த்துவிட்டு வந்தார். இவரிடம் ஐயர் முழுவிபரமும் கூறினார். அந்த அன்பர் “ தம்பீ காலையில் தான் கேட் திறக்கப்படும். அருகிலுள்ள தேசத்தியாகி தக்கர்பாபாவின் வித்யாலயத்தில் இரவு தங்கிவிட்டு காலையில் வா'' எனக்கூறிச் சென்றார்.

ஐயர் அவர்களும் காந்திஜி போகுமிடமெல்லாம் தொடர்ந்து 3 நாட்களாக சென்று கொண்டிருந்தார். யதேச்சையாக இவரை காந்திஜி அவர்கள் பார்த்துவிட்டார். தமிழ்நாட்டுக்காரர் என்பதைப்புரிந்து கொண்டார். அருகில் அழைத்து விசாரித்தார். ஐயர் அவர்களும் ஆதியோடந்தமாக தன்வரலாற்றை விவரித்தார்.அதைக்கேட்ட காந்திஜி, பரோலில் உள்ள நீ பெரும் தவறிழைத்துவிட்டாய். ஆங்கில ஆட்சியை நாம் எதிர்த்தாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு நாம் மதிப்பு தரவேண்டும். ஆகவே நீ உடனடியாக திரும்பி செல். வேலூர்

சிறையதிகாரிகளிடம் சரணடைந்து விடு" என அறிவுரை கூறி ஐயரை திருப்பியனுப்பினார். மகாத்மாவை தரிசித்தது தம் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சியென்று பெரும் பரவசத்துடன் எங்களிடம் இந்நிகழ்ச்சியை கூறி முடித்தார்.

தங்கள் இனத்தார்களால் நேர்ந்த இன்னல்களைப்பற்றி ஐயர் அவர்கள் கூறத்தொடங்கினார்கள். ஐயரின் தகப்பனார் சீனிவாச ஐயரும் பெரும் காங்கிரஸ் தியாகி. ஹரிஜன சேவையில் ஈடுபாடு கொண்டவர். இவர் தமது வீட்டிலே பல ஹரிஜனச் சிறுவர்களை பராமரித்து வந்தார். இவர் இனத்தாரின் எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுத்தது. ஆனால் சீனிவாசய்யர், அவர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தவில்லை. நிமிர்ந்து நின்றார். சற்றேனும் அஞ்சினாரில்லை. அதனால் அவர்கள் இவரது குடும்பத்தை "ஜாதிபிரஷ்டம்" செய்து தள்ளி வைத்தனர். இதனால் பல இன்னல்களுக்கு ஆளானார். தமது இனத்துக்குரிய வைதீக காரியங்களை செய்ய முடியவில்லை. அந்த வேளைகளில் எவருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக உயிர்த்தோழர்கள் சிலருடன் திருவரங்கம் சென்று அம்மாமண்டபத்துறையில் வைதிக காரியங்களை நடத்தி வந்திருக்கிறார். காந்தீயமும் காந்தீய தோழர்களும் எங்களுக்கு பக்கபலமாக இருந்தார்கள் என ஐயர் அவர்கள் கூறினார்கள்.

ஒரு சமயம் ஐயர் அவர்களின் மனைவியின் பெட்டியில் ஆங்கில அரசுக்கு எதிரான போஸ்டர்கள் இருந்த காரணத்தால் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். வெள்ளை நீதிபதி அம்மையாரின் இளவயதை கருத்தில் கொண்டு அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். ஐயரின் குடும்பத்தாருக்கு சொந்தமான 400 ஏக்கரா நிலத்தில் குடும்ப பராமரிப்பிற்காக 20 ஏக்கராவை மட்டும் வைத்துக் கொண்டு மீதி நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டார். தியாகத்திற்கு சிகரம் வைத்தது போலாயிற்று இந்நிகழ்ச்சி. இன்று ஐயர் அவர்கள் நடத்தி வரும் ஸ்தாபனங்கள் பின் வருமாறு:

1. ஹரிஜன சேவா சங்கம் நடத்தி வரும் தக்கர்பாபா வித்யாலயம்
2. சேரி குழந்தைகளின் காப்பகம்
3. ஒன்றரை வயது முதல் 3 வயது வரை உள்ள ஏழைத்தொழிலாளிகளின் குழந்தைகளுக்கான காப்பகம்.
4. ஸ்ரீராமகிருஷ்ண பரம்ஹம்ஸர் ட்ரஸ்டால் சுவாமி விவேகானந்தா தொழிற்பயிற்சிப் பள்ளி நடைபெறுகிறது.

நாட்டிலேயே முதன்முதலாக கோபி நகரத்தில் மனிதக்கழிவை மனிதன் அகற்றும் முறையை அறவே ஒழித்தார். இம்மாபெரும் பணியை மேற்கொண்டதற்காக ஐயர் அவர்களுக்கு பெரும் பாராட்டுக்கிடைத்தது.

அப்பாராட்டுப் பத்திரத்தின் நகலைக் காணலாம்.

Gandhiyan National Awards - 1995

Congratulations to Sri Lakshmanan. You are the Receiptent of Y.F.G.S for 1995 for dedication your thought, word and deed in the field of Human Excellence through Gandhiyan ideals.

This awards is for your special efforts in removing scavanging work in your area at first in the country.

(sd) P. Maruthi
Convenor
Youth Forum for Gandhiyan Studies
236, Avvai Shanmugam Salai
Gopalapuram
Madras

அமரரான குடில் சுவாமிஜியின் சீரிய நண்பரான ஐயர் அவர்களிடம் விடை பெற்றோம். தேனீர் அளித்து எங்களுடன் வெளியே வந்து "போய் வாருங்கள், என்று வேண்டுமானாலும் வரலாம்" என வழியனுப்பி வைத்தார். அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ போதிய நலத்தை அருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்தோம்.

இரு தியாகசீலர்களின் நினைவு நெஞ்சிலே நர்த்தனமாட, பேருந்து நிலையம் நோக்கி கால்கள் மெல்ல நடைபோட்டன.

பராய்த்துறை மேவிய திருவருட் பிரகாசம்

திரு வி. ரெங்கராஜன்,
ஒய்வு பெற்ற உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்,
பல்லாண்டுகள் குடில் சுவாமிஜியிடம் தோழமை பெற்றுத் திகழ்ந்த குடிலின் மெய்யன்பர்

கங்கையினும் புனிதமான காவிரித்தாய் உற்பத்தியாவது குடகு நாட்டிலே. பின்னர் கர்நாடக மாநிலத்தையும் கடந்து தமிழகத்தில் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் உள்ளிட்ட சோழ நாட்டினை தனது பொங்கும் புனல் பாய்ச்சி சோழ வள நாடு சோறுடைத்து என்ற பெருமைக்கு

வித்தாக விளங்குவது காவிரித்தாய். அஃது போன்று கொங்கு நாடாம் கோவை மாவட்டத்தில் கெம்பநாயக்கன் பாளையம் என்னும் சிற்றூரில் 18.10.1911ம் ஆண்டில் நிகழ்ந்தது தான் திரு. ராமசாமி அடிகளாரின் பிறப்பு. தகப்பனார் வெள்ளேகவுடர். தாயார் சென்னம்மாள். தமது தமக்கையர் மூவருக்குப்பின் நான்காவது திருமகனாக அவதரித்தவர்தான் திரு. ராமசாமி அடிகளார் ஆவார்.

கருவிலே திருவுடையவராக அவதரித்த திரு. ராமசாமி அவர்கள் இளமையிலே மகாத்மா காந்தி அடிகளின் அகிம்சை, சத்யம், ஹரிஜன சேவை என்ற நிர்மாணத்திட்டங்களின்பால் ஈர்க்கப்பட்டு அவற்றில் முழு நம்பிக்கை கொண்டு தமது இளம் வயதிலேயே முழுமையாக அத்திருத்தொண்டிற்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டு அரும்பணியாற்றி வந்தார். அவரது தன்னலமற்ற சேவை அவரது உள்ளத்தினை மேலும் தூய்மை செய்வதாயிற்று. அத்தூய்மையான உள்ளத்தில் ஆன்மீக மொட்டுகள் மலர்ந்தன. அவரது தூய உள்ளத்தில் தூய சிந்தனையில் அந்த நூற்றாண்டில் அவதரித்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் அமுத மொழிகளும், சுவாமி விவேகானந்தரின் வீரகர்சனையும், அன்னை சாரதா தேவியாரின் அன்பு உள்ளமும் அவரை பெரிதும் கவர்வனவாயிற்று. இந்த காலகட்டத்தில் அவரது வாழ்வினில் சமுதாய சேவை ஒரு கண்ணாகவும், ஆன்மீக தேடல் மற்றொரு கண்ணாகவும் அமைந்தது. இவரது வாழ்வில் சமூக சேவையும் ஆன்மீகத் தேடலும் கை கோர்த்து களிநடனம் புரிவதை அவரது அன்பர்கள் அனைவரும் கண்டு மகிழ்ந்தனர்.

இக்கால கட்டத்தில் பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாரின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது இவரது கொங்குநாட்டு சேவை சோழநாட்டிற்கு கிடைத்தது ஆகும். பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தை சார்ந்த தவத்திரு சித்பவானந்தர் திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறையில் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் என்ற ஆஸ்ரமத்தை நிறுவி ஆன்மீகத் தொண்டாற்றி வந்தார். அப்போது பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள் சுவாமி சித்பவானந்தரின் அணுகத் தொண்டராக பணியாற்றும் பேரினைப்பெற்றார். இக்கால கட்டத்தில் தாயுமிலா, தந்தையுமிலா ஆண்டவன் குழந்தைகளுக்கு பணியாற்றுவதில் தனது வாழ்நாளை செலவிட எண்ணினார். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் திருப்பராய்த்துறையில் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்ற ஓர் தொண்டு நிறுவனத்தை தொடங்கி அந்நிறுவனம் மூலமாக தமது சேவையைத் தொடங்கினார். அக்கால கட்டத்தில் இவருடைய அரும்பணிக்கு பேருதவி புரிந்த பெரியோர்களை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமுடையதாகும். நங்கவரம் பண்ணையார் திரு. என்.ஏ. ரங்கநாத ஐயர் அவர்கள், ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள், கலெக்டர் மலையப்பன் அவர்கள் ஆகியோருடைய தொண்டும், அதற்கும் மேலாக குடிலின் அருந்தொண்டினை ஆசீர்வதித்து

ஊக்குவித்த பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திராகாந்தி, பூஜ்யர் வினோபாவே அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்கள், பொன்மனச்செம்மல் எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோர்களின் உள்ளம் கனிந்த நல்லாசிகள் இந்த ஸ்தாபனத்திற்கு மேலும் மேலும் பொலிவையும் வலிமையும் சேர்த்ததை எண்ணி பெருமிதம் அடைகிறோம்.

இனி பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாரின் அருங்குணம் பற்றிய சில வார்த்தைகள்:

அவர் தூய்மையே வடிவெடுத்து விளங்கினார். எங்கும், எப்பொழுதும், எதிலும் தூய்மையேயன்றி வேறு மாசு அவர் பக்கத்திலும் அண்ட அஞ்சும். அவர் உடல் தூய்மைக்கு என்றே காலையில் சுமார் 3 மணி நேரம் செலவிடுவது வழக்க மென்று எண்ணும் போது அவருடைய புறத்தூய்மை எத்தகைய பாங்கானது என்று எளிதில் அறியலாம்.

சுற்றுப்புறத்திலும் சுற்றுச்சூழலிலும் அவர் எப்போதும் முழுத்தூய்மையை போற்றி பாதுகாத்து வந்தார். அவரது அகத்தூய்மை வள்ளல் பிரானின் வார்த்தைகளுக்கேற்ப ஒன்றுபட்ட உள்ளத்தோடு இறைவனை வணங்குதலிலும் வாய்மையிலும் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத பெருநெறியினை சிக்கெனப் பிடித்து வாழ்ந்து காட்டி அகத்தூய்மையையும் புறத்தூய்மையையும் ஓர் உருவெடுத்த அவதாரபுருஷர் என்று நிர்ணயிப்பதில் தவறேதுமில்லை. இப்பேர்ப்பட்ட ஆன்மீக புருஷரின் மறைவு 3.4.1999 ம் ஆண்டு நிகழ்ந்தது.

திருச்சி மலைக்கோட்டையில் உள்ள இறைவனுக்கு தாயுமானவர் என்ற காரணப்பெயர் ஒன்று உண்டு. ஒரு சமயம் திருச்சி மாநகரிலே ஒரு பெண்மணி தாய்மைப்பேறு பெற்று இருந்த போது, அப்பெண்ணின் தாயார், காவிரியில் வெள்ளப்பெருக்கெடுத்த காரணத்தால் மகளின் மகப்பேறு காலத்தில் உதவ முடியாது போயிற்று. அப்போது ஈசனே திருவுளம் கொண்டு தாயாக உருக்கொண்டு அப்பெண்மணிக்கு உதவிய காரணத்தால் அவ்வீசனுக்கு தாயுமானவர் என்ற பெயர் உண்டாயிற்று. தாயும் இலா தந்தையும் இலா ஆயிரமாயிரம் குழந்தைகளுக்கு உயர்நிலைக்கல்வியோடு தொழிற்கல்வியும் பெற வாய்ப்பளித்து, அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தானே முன்நின்று உதவும்பொழுது, ஒரு சீர்மிகு தந்தையாகவும் இப்பேரருளாளர் காட்சி தரும்போது ஓர் உருவிலே தாயாகவும் தந்தையாகவும் உமையொருபாகராகவும் வணக்கத்திற்குரிய ஒரு பேரருளாளராக திருவருட்பிரகாசம் உடையவராக நம் கண் முன்னே காட்சியளித்து நம்மையெல்லாம் தடுத்தாட்கொண்ட பாங்கினை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் வியப்பிலே நாம் ஆழ்ந்து விடுகிறோம் என்பது தான் உண்மை.

திருவருட் பிரகாச வள்ளலார் வடலூரிலே அறச்சாலை ஒன்று நிறுவி ஏழை எளியோர்க்கும், பிணியுற்றோர்க்கும், பசியுற்றோர்க்கும் இன்னல் தீர அரும்பணியாற்றும் செய்தி நாமனைவரும் அறிந்ததே. ஆதரவற்ற ஆயிரமாயிரம் அனாதை குழந்தைகளின் அனைத்துப் பொறுப்பினையும் ஒரு சேர தானே ஏற்று முற்றிலும் இலவசமாக சுமார் பதினைந்து ஆண்டுகாலம் அவர்கள் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நிலைகளையும் மேம்படுத்தி தகுதியான ஒரு இந்தியக்குடிமகனாகவும் தற்சார்புள்ள இளைஞனாகவும் ஒழுக்கமே வடிவாகவும், சமுதாயத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ வழிவகுப்பது ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் சேவையாதலினால், ஸ்தாபன நிறுவனர் பிரம்மசாரி ராமசுவாமி அவர்கள் அருட்பிரகாசராக திகழ்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அத்தகைய அருட்பிரகாசர் நிறுவிய ஸ்ரீராமகிருஷ்ண குடில் இன்று ஆல் போல் பரந்து விரிந்து அருகுபோல் வேர்விட்டு பரவி தமிழ்நாட்டிற்கு ஓர் அணிகலனாக திகழ்கிறது என்று கூறுவதுதான் உண்மை. எனவே தமிழகத்தின் எப்பகுதியில் தாய் தந்தையற்ற அனாதைச் சிறுவர்களை அன்பர்கள் கண்ணுற்றால் அவர்களை உடனடியாக திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு அழைத்து வந்து இங்கு சேர்ப்பித்து அவனது எதிர்காலத்தை நற்காலமாக ஆக்குவதற்கு அன்பர்கள் முயற்சி பெரிதும் வேண்டப்படுகிறது. இவ் வேண்டுகோளை ஈண்டு விடுப்பதில் பயன் பெரிதும் விளையும் என்பதை பெரிதும் நம்புகிறோம். இத்தகைய அனாதை குழந்தைகளை வரவேற்க ஆஸ்ரம நிர்வாகம் தனது இரு கரங்களை நீட்டி காத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் 24 மணி நேரமும் ஆண்டு முழுதும், 365 நாட்களிலும் ஆஸ்ரமக்கதவுகள் இவர்களுக்காக திறந்திருக்கின்றன. இதை மகிழ்வுடன் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறு அவ்வருட்பிரகாசர் விட்டுச்சென்ற பணியினை அவரால் உருவாக்கப்பட்ட அருந்தொண்டர்கள் அறுவர் சீரோடும் சிறப்போடும் நடத்தி வருவது மகிழ்விற்குரிய செயலாகும்.

எதிர்காலம்:

இந்த அருட்பிரகாசரின் நினைவினை போற்றும் வகையில் அவர் தோன்றிய சொந்தச் சிற்றூரில் ஓர் நினைவாலயத்தை நிறுவி, அவ்வாலயத்திலேயும், திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலின் சேவை ஆங்கு ஒரு சிறிய அளவிலே மேற்கொள்ள திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அவர் தோன்றிய இந்த நன்னாளில் ஆலாலசுந்தரர் ஈசனோடு தோழமை பெற்று மகிழ்ந்து அவரைப் போன்று 60 ஆண்டுகள் அன்னாரோடு தோழமை பெற்ற அடியேனுக்கும் அவர் அருளால் மனம், மொழி, மெய்யாலும் வணங்கி மகிழ்கிறேன்.

ஓ—ம். வி. ரெங்கராஜன்

25.10.2001

தந்தை ஆனவர்

திரு. கே. வெங்கடாசலம்
குடில் உயர்நிலைப்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர்

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
– பாரதியார்

"ஏழைமக்கள்தான் நான் வணங்கும் கடவுள்
கஞ்சியற்ற தந்தையற்ற கல்வியற்றுத் தவிக்கும்
அந்த ஏழை மக்களை கைதூக்கிவிட நீங்கள்
முன் வராவிடில் உங்களுக்கு முக்தி எவ்வாறு லபிக்கும்?"
– சுவாமி விவேகானந்தர்

"வயலூருக்கு சென்றால் ஒரு முருகனைக்காணலாம்
குடிலுக்கு சென்றால் முந்நூறு முருகனைக் காணலாம்"
– திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இவ்வாறு சுமார் முன்னூறு தாய் தந்தையரற்ற ஆதரவற்ற அனாதை சிறார்களுக்கு புகலிடம், உணவு, உடை இவற்றுடன் கல்வியும் தந்து ஆதரித்து வரும் ஸ்தாபனம்தான் திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடில். இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்ற ஸ்தாபனத்தை தனியொரு மனிதனாகவே இருந்து வளர்த்து விரிவாக்கியவர் நம் குடில் சுவாமிகள்தான்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், அண்ணல் காந்தி மகான் ஆகியோரின் கொள்கைகளைப் பின்பற்றி தவறாது நடந்து வந்தவர் நம் சுவாமிஜி அவர்கள். இங்குள்ள இத்தனை குழந்தைகளுக்கும் உணவு, உடை, இருப்பிடம் மட்டும் கொடுத்தால் போதாது என்பதுடன் சரியான ஆதார, சமூக வாழ்க்கைக் கல்வியும் அளித்தார். சுவாமிஜி அவர்களின் கொள்கைப்படி இங்கு ஓர் சிறுவன் சுமார் ஐந்து அல்லது ஆறாண்டுகள் இருப்பானேயானால், பிறகு குடிலை விட்டு செல்லும் போதுதான் இங்கு வந்து சேர்ந்தபொழுது இருந்த நிலை மாறி வெளியுலகில் சமூகத்தில் தானும் ஓர் நல்ல பிரஜையாக, திருடாமல், பொய்ப் பித்தலாட்டம்

போன்றவை இல்லாமல் தன் கை கால்களே தனக்குதவி என்ற நல்ல நிலையில் வாழ முடியும் என்ற எண்ணத்தையும் ஊட்டி வருகின்றார்.

புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ் அவர்களின் "ஆலிவர் டிவிஸ்ட்" நாவலில் வரும் Do The Boys Hall ஐப்படிக்கும் போது அடடா இந்தச் சிறுவர்களுக்கு இத்தனை வேலைகளா? என்று வியப்பவர்களும் பரிதாபப்படுபவர்களும் உண்டு. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஆதரவு அற்றுப்போன இச்சிறுவர்களுக்கு இந்த வேலை முறைதான் பிற்காலத்தில் அவர்களுக்கு Dignity of Labour புரிந்து கொள்ள எவ்வளவு தூரம் உதவும் என்பதை நாம் நிச்சயம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மகாத்மா காந்தியின் ஆதாரக்கல்வி (Basic Education) முறைப்படி தன் வாழ்க்கைக்குத் தேவையான பல தொழில்முறைகளையும் இங்கு இருக்கும் சில ஆண்டுகளில் படிப்படியாக வயது வரம்பிற்கேற்ப கற்றுக் கொள்கிறான். அக, புறச்சுத்தம், வாழ்க்கைக்கு தேவையான காரியங்களை கவனித்தல் மரம் செடி கொடிகளுக்கு நீர்வார்த்தல், பசுமடம் பேணல்,உணவு இல்லத்தில் காய்கறி நறுக்குதல், உணவு சமைத்தல், உணவு பரிமாறுதல் ஆகியவற்றை நேரிடையாக தனது சொந்த அனுபவத்தில் கற்றுக் கொள்ளுகிறான்.

கட்டடவேலை, தச்சுவேலை, மின்சார வேலை போன்றவற்றையும் படிப்படியாக தனது முறையான கல்வியோடு கற்றுக் கொள்கிறான். இவ்வாறு நேரடி அனுபவக் கல்வி பெற்றவன் குடிலைவிட்டு வெளியே சென்றால் நிச்சயமாக சிறப்பான நல்ல முறையில் வாழ முடியும் என்ற நம்பிக்கையையும் பெறுகிறான். இத்துடன் இல்லாது பத்தாவது வகுப்பை முடித்த பின் திருச்சி அரசினர் ஐ.டி.ஐ லும் தொழிற்கல்வி பெற்று சான்றிதழுடன் வெளி வருகிறான். இனி அவன் வாழ்க்கைக்கு தேவையானது தான் என்ன? நல்ல தொழில் செய்து பணஉதவியும் கிடைக்க சுவாமிகள் வழிவகைகள் செய்துள்ளார்.

இவ்வாறு ஆதரிப்பார் யாருமின்றி தாய் தந்தையற்ற இந்த அனாதைச் சிறுவர்களுக்கு தானே தந்தையாக இருந்து, பேணி வளர்த்து ஆளாக்கி விட்டிருக்கின்ற இவர்தான் சரியான உண்மையான தந்தை ஆவார்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

(ஒ–ம்) கே. வெங்கடாசலம்

1.1.2002

சேவையின் சிகரம்

திருச்சி டாக்டர் திரு. கனகராஜ்,
விஸ்வநாதம் ஆஸ்பத்திரி

குடில் சுவாமிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் மிகுந்த ஈடுபாடு என்றால்

அது மிகையாகாது.

1942 ல் குடில் சுவாமிஜி அவர்கள் திருப்பராய்த்துறை தபோவனத்தை பெரியசுவாமிகளுடன் சேர்ந்து வரலாறு படைக்கத் தக்கதாக ஆரம்பித்தார்கள். முதலில் தாருகாவனேஸ்வரர் சிவாலயத்தில், கோபுரத்தில் இரவு நேரங்களில் தங்கல். கோபுரத்தின் ஐந்தாவது மாடியில் பெரிய சாமியும் நான்காவது மாடியில் குடில் சுவாமியும் தங்கியிருந்தனர். ஆரம்பத்தில் அங்குள்ள குழந்தைகளுக்கு ஒரு சிறிய திண்ணை பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள். குடில் சுவாமியும் பெரிய சுவாமிகளும் அவர்களுக்கு மாறி மாறி கல்வி, ஆன்மீகம், நல்ல பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை போதித்தார்கள். பகவத் கீதையும், ராமாயணமும் இருவரும் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள்.

பெரிய சுவாமி பல ஊர்களுக்கு சென்று அந்தர்யோகம், சொற்பொழிவு ஆற்றி அங்கு கிடைக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு "ராமசாமி இதுதான் இன்றைக்கு கிடைத்த வருமானம். இதை வைத்துக்கொண்டு நமது நிர்வாகத்தை சமாளித்துக் கொள்ள வேண்டும்." என்று கூறுவார். சில சமயம் வருமானமே இருக்காது. அந்த சமயங்களில் கோவிலில் படைக்கும் பட்டை சாத பிரசாதத்தை பெற்றுக்கொண்டு பசியாற்றுவார்கள்.

பள்ளிக்கூடத்தை பக்கத்தில் உள்ள செட்டியார் சத்திரத்திற்கு மாற்றினார்கள். பிறகு தான் தற்போதுள்ள தபோவனம் ஆரம்பிக்கப்பட்டது. தபோவனக் கட்டடம் உருவாக்கி கட்டிக் கொடுத்தவர் இன்ஜினியர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் தபோவனத்தில் பெரிய சுவாமிக்கு உறுதுணையாக இருந்து இப்போதுள்ள தபோவனத்தை உருவாக்கி பிறகு குடிலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கு குடில் சுவாமி கிடைத்ததை வைத்துக்கொண்டு அந்த வாய்க்காலை தாண்டாமல் 5 வருடங்கள் கடும் தவம் செய்து இந்த குடிலினை ஆரம்பித்தார்கள். இதற்கு ஆரம்ப நிலையில் பெரும் உதவியாக இருந்தவர் நங்கவரம் பண்ணையார் அவர்கள் ஆவார்.

ஆரம்பத்தில் தாய்தந்தை அற்ற சிறார்களை சேர்த்து குடிலை உருவாக்கினார்கள். அப்போது முதன்மந்திரியாக இருந்த ராஜாஜி மூலமாக பல ஏக்கர் நிலங்கள் குடிலுக்கு கிடைத்தது. கலெக்டர் " மக்கள் தொண்டன் மலையப்பன், ஜஸ்டிஸ் மகராஜன், திருமுருக கிருபானந்த வாரியார் ஆகிய மூவரின் ஒத்துழைப்போடு பல ஊர்களுக்கு சென்று குடிலுக்கு வேண்டிய பொருளுதவி, மேலும் வேண்டியவைகளை தேடிக் கொடுத்த அந்த மூவரின் சேவையை யாராலும் மறக்க முடியாது.

திரு. கு. காமராஜர் அவர்கள் முதன்மந்திரியாக இருந்த போது எல்லா பஞ்சாயத்துக்கள், எல்லா முனிசிபாலிடிகள், குடிலுக்கு நன்கொடை வழங்க ஏற்பாடு செய்தனர். திரு. கருணாநிதி அவர்கள் தமிழக முதன்மந்திரியாக

இருந்த போது ஒரு பஸ்ஸை ஓட்ட குடிலுக்கு அனுமதி கொடுத்தார். அதில் வரும் வருமானத்தை முதலீடாக வைத்துக்கொண்டு குடில் நிர்வாகத்தை சரிசெய்து வைத்துக்கொண்டார் குடில் சுவாமிஜி. திரு. எம். ஜி. ஆர். அவர்கள் செல்வி ஜெயலலிதாவை வைத்து ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் பெரும் பொருளுதவி கொடுத்தார்கள். இப்போது ஐ.டி.ஐ யில் 10 வது முடித்த பிறகு ஒரு நிபந்தனையும் இல்லாமல் குடில் மாணவர் சேருவதற்கு முதன்மந்திரியாக இருந்த திரு. எம். ஜி. ஆர். ஏற்பாடு செய்தார்கள்.

திரு. அண்ணாத்துரை முதன்மந்திரியாக இருந்தபோது குடிலில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பேசியவர்கள் இந்தக் குடிலைப் போல நிறைய அனாதை இல்லங்கள் ஏற்பட வேண்டும் என்றனர். ஆனால் அண்ணாதுரையோ இதுபோன்ற அனாதை விடுதிகள் அதிகமாக வளரக்கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அவைகள் இந்தியாவில் இல்லாமல் போனால்தான் நமது நாடு செழிப்பான நாடாக இருக்கும் என்று கூறினார்.

குடிலின் வெளி நிர்வாகத்தை கவனிப்பதற்கு திருச்சி ஐயா சங்கர நாராயணன் பிள்ளை அவர்களையும் உள் நிர்வாகத்தை (பள்ளிக்கூடம், தொழில் மையம்) கவனிப்பதற்கு, மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களையும் குடில் சுவாமி நியமித்திருந்தார். சிறிது காலத்தில் சங்கர நாராயணன் பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார்கள். மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது உடல்நிலை கருதி ஓய்வெடுத்துக் கொண்டார்கள். தற்போது ஜெயபால் ஐயா அவர்கள் வெளிநிர்வாகத்திற்கு உதவியாக இருக்கிறார்.

எங்கள் குடும்பம் குடிலுடன், தபோவனத்துடன் மிகுந்த தொடர்பு கொண்ட குடும்பம் என்று கூறினால் அது மிகவும் பொருந்தும். எங்கள் தகப்பனார் டாக்டர் விஸ்வநாதன் 1942 முதல் இரண்டு சுவாமிகளும் ஒன்றாக இருந்த காலத்திலிருந்து தொடர்புடையவர் வாரம் ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை தோறும் ரயிலில் திருப்பராய்த்துறை செல்வோம். எலமனூர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்குவோம். குடில் சுவாமி ஸ்டேஷனுக்கு வந்து எங்களை அழைத்துச் செல்வார். ஒவ்வொரு ஞாயிறுதோறும் நானோ எனது தமயனார் டாக்டர் ஜெயபால் அவர்களோ எனது தகப்பனாருடன் செல்வோம்.

எங்களது தந்தை அங்குள்ள எல்லோருடைய உடம்பையும் சோதனை செய்து விட்டு வருவார். அப்போது நாங்கள் ஒரு திண்ணையில் உட்கார்ந்து அதையெல்லாம் வேடிக்கை பார்ப்போம். நாங்கள் புறப்படும்போது அவர்கள் செய்து வைத்திருக்கும் உணவு பதார்த்தங்களை பரிமாறி சாப்பிடச் சொல்வார்கள். அதை உண்டு விட்டு அவர்கள் கொடுக்கும் பால் அல்லது மால்ட் அருந்தி விட்டு பிறகு கொடுக்கும் பிரசாத உருண்டைகளை பெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு குடில் சுவாமியுடன் ரயில்நிலையத்திற்கு வருவோம். பிறகு ரயில் ஏறி திருச்சிக்கு செல்வோம்.

குடிலிலும் தபோவனத்திலும் ராமகிருஷ்ண ஜெயந்தி, வருடம் ஒரு முறை

கொண்டாடுவார்கள். அப்போது எங்கள் தந்தையாருடன் நாங்கள் இருவரும் செல்வோம். குடில் நிகழ்ச்சியில் கிருபானந்த வாரியார் சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள். அதன்பின் குடில் சுவாமிஜி ஆண்டறிக்கை வாசிப்பார்கள். அதைத் தொடர்ந்து கருத்துள்ள ஒரு இதிகாச வரலாற்று நாடகம் நடைபெறும். அந்த நாடகங்களை முழுமையாக பார்த்து விட்டு இரவு திரும்புவோம்.

1956 லிருந்து 1983 வரை எனது தகப்பனார் 27 வருடங்கள் இடையறாது குடில் சிறார்களின் உடல்நிலைக்காக தவறாது சென்று கொண்டிருந்தார்கள். தனது முதுமையின் காரணமாக அவர் செல்ல இயலாமல் போனதால் என்னை குடிலுக்கும் தபோவனத்திற்கும் சென்று வருமாறு சொன்னார். எனது தமையனாரை ஹோலிகிராஸ் கல்லூரி சென்று வருமாறு பணித்தார். அது முதல் கொண்டு வாரம் ஒரு முறை சனிக்கிழமை தோறும் குடிலுக்கும் தபோவனத்திற்கும் சென்று வருகிறேன்.

நான் குடிலுக்கு சென்றவுடன் முதலில் குடில் சுவாமியை பார்த்து அவருடன் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் பேசிவிட்டு அவருடைய அறிவுரைகளை கேட்டு பிறகு மதிய உணவை புசித்து விட்டு உடல்நிலை குன்றிய குடில் சிறார்களை பார்த்து பரிசோதனை செய்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை மருந்தக மாணவர்களிடம் சொல்லி கொடுத்து விட்டு விடைபெற்று தபோவனம் செல்வேன்.

இந்த பல வருடங்களில் குடில் சுவாமியிடம் நிறைய அனுபவமிக்க அறிவுரைகளை கேட்டு மகிழ்ந்துள்ளேன். எனக்கு குடிலுக்கு சென்று விட்டு வந்தாலே வாரத்துக்கு ஒரு முறை டானிக் சாப்பிட்டது போல் இருக்கும். இந்த பல ஆண்டுகளில் குடில் சுவாமியிடம் கேட்டு மகிழ்ந்த சில சம்பவங்களை குறிப்பிடுகிறேன்.

ஒரு முறை சுவாமியிடம் நான் கேட்டேன், “ சுவாமி நீங்கள் குடிலில் வேலைக்கு ஆள் இல்லாமல் வழிமுறைகளை வகுத்திருக்கிறீர்களே எப்படி? அதற்கு ஏதாவது காரணம் உண்டா?” என்று கேட்டேன். அதற்கு சுவாமி கூறினார்கள் “ ரவீந்திரநாத் தாகூர் ஏற்படுத்திய சாந்தி நிகேதனத்தில், ஐரோப்பாவிலிருந்து திரும்பிவந்த மகாத்மா காந்திஜி ஒரு வாரம் தங்கியிருந்தார். இரண்டு தினங்கள் காந்திஜி மிகவும் உற்சாகமாகவும் மகிழ்வோடும் இருந்தார்.

மூன்றாவது நாளன்று சிறிது மனச்சோர்வுடன் காணப்பட்டார். அங்கு குழுமியிருந்த எல்லோரும் “ என்ன பாபுஜி இப்படி இருக்கிறீர்கள்?” எனக் கேட்டார்கள். அதற்கு , “ ஒண்ணுமில்லை” என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த நாள் முன்பு இருந்ததை விட மிகவும் சோர்வாக இருந்தார். அங்கு குழுமியிருந்த எல்லோருக்கும் என்ன என்று புரியவில்லை. அதற்கு அடுத்த

நாள் யாரிடமும் பேசாமல் மிகுந்த சோர்வுடன் காணப்பட்டார்.

அனைவரும் பாபுவிடம் சென்றனர். "உங்களுக்கு என்ன குறை?" எனக் கேட்டார்கள். அதற்கு சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டு "நீங்கள் எல்லோரும் என்னை நன்றாக கவனிக்கிறீர்கள். ஒவ்வொரு வேலைக்கும் பல ஆட்களை நியமித்திருக்கிறீர்கள். அதைக்கண்டால் எனது மனம் மிகவும் வருத்தமடைந்து சோர்வடைகிறது. இங்கு குழுமியிருக்கும் ஒவ்வொருவரும் தனது வேலையை செய்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். எனது மனமும் கனிவடையும் சோர்வும் போய்விடும்" என்று கூறினார்.

இதைக் கேட்ட எல்லோரும் சிரித்து விட்டு " இதற்காகவா மனம் வருத்தப்படுகிறீர்கள். இந்த நிமிடத்திலிருந்து நாங்களே எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு நாங்களே அவரவர்கள் வேலைகளை செய்து கொள்ளுகிறோம்" என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். அன்று முதல் சாந்தி நிகேதனத்திற்கு எந்த வேலைக்கும் ஆட்கள் நியமிப்பதில்லை. அவரவர் வேலைகளை அவரவர்களே செய்து கொண்டார்கள். அதை மனதில் கொண்டுதான் நான் " குடிலில் உள்ள சிறார்களும் அவரவர் வேலைகளை அவரவர்களே செய்து கொள்ளும் வழிமுறையை வகுத்தேன்" என்று குடில் சுவாமி கூறினார்கள்.

வெகு நாட்கள் கழித்து சாந்தி நிகேதனத்திலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் சுவாமிஜியை பார்த்து விட்டுப் போவதற்காக வந்திருந்தார். அவரிடம் சுவாமிஜி " தற்போது சாந்தி நிகேதனத்தில் வேலையாட்கள் உள்ளனரா?" என்று கேட்டார். அதற்கு ஆசிரியர் " நாங்கள் வருடாவருடம் மகாத்மாஜி சாந்தி நிகேதனத்திற்கு வந்த நாளை விமரிசையாக கொண்டாடுகிறோம். ஆனால் வேலையாட்கள் இல்லாமல் நிர்வாகம் செய்ய முடியவில்லை. ஆகையால் வேலைக்கு ஓரிரண்டு வருடங்களில் நிறைய பேரை சேர்த்து விட்டோம். ஆனால் அந்த விழாவை விமரிசையாக கொண்டாடுகிறோம்" என்று கூறினார்கள்.

காலம் சென்ற முதன் மந்திரி வடலூர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் குடிலுக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவர் சுவாமிஜியிடம் , " உங்கள் குடிலைப் போல எங்கள் வடலூரில் ஒரு அனாதை இல்லத்தை உருவாக்கி தர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். " அதற்கு வேண்டிய இருநூறு ஏக்கரா நிலத்தையும், சுமார் இர்ண்டு லட்ச ரூபாய் பணத்தையும் கொடுப்பதாக சொன்னார். ஆனால் குடில் சுவாமி ஒருவரால் ஒரு நிர்வாகத்தை மட்டுமே பார்க்க முடியும். இரண்டு நிர்வாகத்தை பார்க்க முடியாது." என்று சொல்லி மறுப்புத் தெரிவித்து விட்டார்.

அதே போல் பாண்டிச்சேரியிலிருந்து முதன்மந்திரி, கவர்னர், முதன்மைச் செயலாளர், மந்திரிகள் எல்லோரும் குடிலுக்கு விஜயம் செய்து, " இந்தக்

குடிலைப்போல எங்கள் ஊரில் ஒரு நிறுவனத்தை நடத்தித் தர வேண்டும்.'' என்று கேட்டார்கள். அதற்கு முன்பு சொன்னதைப் போலவே " ஒருவர் ஒரு நிர்வாகத்தைத் தான் பார்க்க முடியும். இரண்டு நிர்வாகம் பார்த்துக் கொள்ள முடியாது. என்று கூறிவிட்டு மறுத்து விட்டார்.

குடிலின் பொருளாதார நிலைமை ஓரளவிற்கு நன்றாக அமைந்த பிறகு சுவாமி அவர்கள், " தமக்கு இதற்கு மேல் பண வசதி தேவையில்லை'' என்று கருதினார். தோப்பிலிருந்தும் மற்றவைகளிலிருந்தும் செலவிற்கு மேல் வருவாய் இருந்து விட்டது. ஆகையால் மதி நுட்பத்தால் உணர்ந்து இனிமேல் நாம் எவரிடமும் நன்கொடை பெறக்கூடாது என்று உறுதி கொண்டார். ஆஸ்ரம முகப்பிலுள்ள பலகையில் "குடிலுக்கு இனிமேல் நன்கொடை தேவையில்லை.'' என்ற வாசகத்தை எழுதிவிட்டார். இப்போது நிர்வாகம் ஏறத்தாழ 500 குழந்தைகளுக்கு போதுமான வசதியுடன் இருக்கிறது. இனிமேல் குடிலுக்கு தாய் தந்தையரற்ற குழந்தைகளை நன்கொடையாக தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தால் போதும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

ஒரு சமயம் நாங்கள் சுவாமியிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, " சுவாமி நீங்கள் ஒரு முதியோர் இல்லம் ஆரம்பித்தால் என்ன? என்று கேட்டோம். அதற்கு அவர் கூறினார். " சிறு பிள்ளைகளை வைத்து பராமரிப்பது அவ்வளவு கஷ்டமில்லை. ஆனால் வயது முதிர்ந்து உலகில் அடிபட்டு பலவகைகளிலும் அனுபவத்தில் தேர்ந்தவர்கள் அந்த முதியோர்கள். அவர்களை வைத்து ஒரு இல்லம் ஆரம்பிப்பது எப்படி என்பது மிகவும் கடினம். அதற்கு மேல் எவராவது ஆரம்பிக்க வேண்டுமென்றால் மிகுந்த ஈடுபாடுடன் அங்கேயே இருந்து கொண்டு 24 மணி நேரமும் அவர்களின் கஷ்டநஷ்டங்களை பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு மனக்குறைபாடு இல்லாமல் நடத்துவதற்கு எவரேனும் ஒருவர் முன்வந்தால் அந்த நிர்வாகம் நன்றாக அமையும். ஆனால் ஒருவர்கூட நம்மிடம் இல்லை.'' என்று முடித்தார்.

1990 ல் புற்று நோய் மருத்துவ மையத்தை அமைத்தோம். அப்போதே புற்றுநோய் தடுப்பு மையம் என்ற ஒரு அமைப்பையும் ஆரம்பித்தோம். அந்த தடுப்பு மையம் மூலமாக ஒவ்வொரு ஊருக்கும் சென்று மருத்துவ முகாம் ஏற்படுத்தி அங்குள்ளவர்களை பரிசோதனை செய்து அவர்களில் யாருக்கேனும் புற்று நோய் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதே அதன் நோக்கம். ஒரு முகாம் நடத்துவதற்கு ரூபாய் 10,000/= செலவாகிறது. ஆரம்பத்தில் 40, 50 முகாம்கள் பிறரின் உதவியோடு நன்றாக அமைந்தது. அதன் பிறகு பிறரின் உதவி கிடைப்பது கடினமாக இருந்தது.

நான் சுவாமியை அணுகி இதற்கு என்ன செய்வது என்று கேட்டேன். அதற்கு சுவாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒரு மாதத்திற்கு பிறகு என்னிடம் சொன்னார். " நீங்கள் முகாம் நடத்துவது கடினமாக இருக்கிறது

என்று சொன்னீர்கள். நான் ஒரு மாதமாக அதைப்பற்றி சிந்தனை செய்து ஒரு முடிவிற்கு வந்துள்ளேன். மாதாமாதம் ஒருவரை அணுகி பணம் பெறுவது என்பது கஷ்டம்தான். ஆனால் நம் தமிழ்நாட்டில் பரோபகார மனம் கொண்ட தனவந்தர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்களை அணுகி இந்த முகாமைப்பற்றி விளக்கி இதனால் எதிர்காலத்தில் புற்றுநோயை கணிசமாகக் குறைக்கலாம் என்று விளக்கிக்கூறினால் கண்டிப்பாக உதவி செய்வார்கள். இவ்வாறு நன்கொடையாக பெற்ற தொகையை சேர்த்து அதில் வரும் வட்டியைக் கொண்டு இந்த முகாமை சிரமப்படாமல் நடத்தி உங்கள் எண்ணத்தை பூர்த்தி செய்து கொள்ளலாம்.'' என்றார்.

"அதற்காக ஒரு மெமோராண்டம் வாசகத்தை எழுதி ஒவ்வொருவரிடமும் கிட்டத்தட்ட ரூ 10000/= லிருந்து ரூ 25,000/=வரை பெற்று ஒரு Carpus ரூ 10 லட்சம் வரை ஏற்படுத்தி அதில் வரும் வட்டியைக்கொண்டு இதை நன்றாக நடத்தலாம். ஒரு மெமோராண்டம் தயார்படுத்தி, பிரசில் கொடுத்து அச்சடித்துக் கொண்டு வாருங்கள்'' என்றார். அவர் சொன்ன மாதிரியே செய்து சுவாமிஜியிடம் கொடுத்தோம். குடில் குழந்தைகளின் நிர்வாகத்தின் மூலம் இதை ஆரம்பித்து ரூபாய் 25,000,= கொடுத்தார். இதை அபிவிருத்தி செய்து, பிற பரோபகார உள்ளம் படைத்த தனவந்தர்களிடம் அதை எடுத்துக் கூறி ரூ 10 லட்சத்திற்கு ஒரு Carpus ஏற்படுத்தினோம்.

சுவாமிஜி தனக்கு இடுப்பு வலி ஏற்பட்ட போது பல மருத்துவ நிபுணர்களை பார்த்து அவர்கள் அறிவுரைப்படி தனக்கு சாய்வாக உட்கார்ந்து கொள்வதற்கு ஒரு மெத்தை வைத்து தயார் செய்த இருக்கையில் அமர்ந்தார். தன்னை பார்க்க வரும் அன்பர்கள் தவறாக ஏதாவது எண்ணிவிடுவார்கள் என்று நினைத்து அந்த இருக்கை பற்றி, "சிகிச்சையின் நிமித்தம் ஏற்படுத்திய இருக்கை'' என எழுதி வைத்தார்கள்.

சுவாமிஜிக்கு ஏதேனும் உடல்நிலைக் குறைவு ஏற்பட்டால் ஆஸ்ரம பிரதர்களிடம் கூறுவார். அவர்கள் உடனே எனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிப்பார்கள். ஆனால் சுவாமி பிரதர்களிடம் " டாக்டர் சனிக்கிழமை வரும்போது காட்டிக்கொள்ளலாம். அவரை வரச்சொல்ல வேண்டாம். ஏதாவது மாத்திரை வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம். அவரை நாம் தொந்தரவு செய்யக்கூடாது.'' என்பார்.

சுவாமிஜியின் பிறந்த ஊர் கெம்பநாயக்கன்பாளையம். சுவாமி கிட்டத்தட்ட 30 வருடங்கள் அங்கேயே மணியகாரர் ஆகவும் கிராம முனிசீப் ஆகவும் வேலை பார்த்தவர். அவர் வேலை பார்க்கும் பொழுது சமூக சேவைகளில் ஈடுபட்டு பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். கிணறு வெட்டுவதும், ரோடு போடுவதும், மாடுகளுக்கு தண்ணீர் குடிக்க தொட்டிகள் கட்டுவதும் போன்ற பல சமூக சேவைகளை செய்திருக்கிறார்.

1939 ம் ஆண்டில் கெம்பநாயக்கன்பாளையத்தில் இரண்டு மலைகளுக்கு

நடுவில் ஒரு அணை கட்டிவிட வேண்டும் என ஒரு வரைபடத்தை போட்டு, அப்போதிருந்த பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு அனுப்பி வைத்தார். 1988 ல் எம். ஜி. ஆர் ஆட்சியில் அந்த வரைபடத்தை எடுத்துக்கொண்டு வந்து ராமசாமி யார்? எனக் கேட்டார்கள். அங்கு குழுமியிருந்த பொதுமக்கள் " அவர் திருப்பராய்த்துறையில் மிகப்பெரிய அனாதை இல்லத்தை கட்டி காப்பாற்றுகிறார்" என்று கூறினார்கள். எம். ஜி. ஆர் ஆட்சியில் அணை கட்டப்பட்டது. அங்குள்ள நிலங்கள் எல்லாம் விளைநிலமாகியது. ஒரு பசுமைப்புரட்சி ஏற்பட்டது.

திருப்பராய்த்துறையில் தபோவனம் உருவாகும் போது சுவாமி சனி, ஞாயிறு இரு நாட்கள் கிராமத்திலுள்ள முன்சீப் அவர்களிடம் மாட்டு வண்டியை கேட்டு வாங்கி, பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு சென்று ஆன்மீக சிந்தனையுள்ள பராபகார எண்ணமுடைய தனவந்தர்களிடமும் மற்றவர்களிடமும் ஊர்ப்பொதுமக்களிடமும் தபோவனத்தின் குறிக்கோளை கூறி அவர்களிடமும் பொருளுதவி பெற்றுக்கொள்வார். அங்கு ஒரு நாள் தங்கி மறுநாள் தபோவனம் திரும்புவார்.

தபோவனம் கட்டும் போது வேலைக்கு வரும் ஆட்களை கணக்கெடுப்பது, வேலையை மேற்பார்வை செய்வது, வேலை முடித்துப் போகுபவர்களுக்கு பணபட்டுவாடா செய்வது, வேலைக்கு செங்கல், மணல், சுண்ணாம்பு எல்லாம் வாங்குவது முதற்கொண்டு அவரே செய்வார். திருச்சியிலிருந்து வரும் திரு. சுப்ரமணிய பிள்ளை இன்ஜினியர் அவர்கள் கட்டடத்திற்கு பிளான் போடுவது மற்றும் மேற்பார்வை செய்வது போன்றவற்றை செய்வார்.

பெரிய சுவாமி தபோவனத்தில் இருக்கும் நாட்களில் இருவரும் சேர்ந்து மாலை நேரத்தில், காவிரிக்கரைக்கு சென்று அங்குள்ள படித்துறையில் உள்ள பலகை ஒன்றில் அமர்ந்து இருவரும் பலமணி நேரங்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பேசுவது ஆன்மீகத்தைப் பற்றியும் தபோவனத்தை எப்படி வளர்ச்சியடையச் செய்யலாம் என்பதைப்பற்றியே இருக்கும்.

சுவாமி கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் பெரியசுவாமிக்கு உறுதுணையாக இருந்தார். பிறகு குடிலுக்கு வந்தார். என் தந்தையார் குடிலுக்கு வரும் போதெல்லாம் ரயில் நிலையத்திற்கு சுவாமி வந்து அழைத்துச் செல்வார். அதை நாங்கள் சொல்லும் போது " வெள்ளை சாமி" வந்து கூட்டிப் போவார் என்று சொல்வோம். 1984 ல் எனது தகப்பனாருக்குப் பிறகு நான் செல்லும் போது வெளியிலுள்ள ' அமைதி இல்லத்தில்' பாய் விரித்து இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம்.

தினந்தோறும் அலுவலக வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு இரவு 11 மணி அளவில் எல்லோரையும் அழைத்து எல்லா துறையை சார்ந்தவர்களிடமும்

இன்று என்னென்ன நடந்தது என்று விசாரிப்பார். ஏதாவது குறைகள் இருந்தால் அதை எப்படி நிவர்த்தி செய்வது என்று அறிவுரை கூறுவார். அடுத்த நாள் எப்படி 'புரொகிராம்' நடத்த வேண்டும் என்றும் அதற்கு தகுந்தவாறு அறிவுரை கூறுவார்.

வருடம் ஒருமுறை எல்லோரும் கூடி குடிலின் எல்லாக் காரியங்களும் எப்படி நடக்க வேண்டும் என்று விதிமுறைகள் செய்து அதற்கு தகுந்தாற் போல ஒவ்வொரு பிரிவாக பிரித்து அதை நடைமுறைக்கு கொண்டு வருவார்கள். மொத்தம் 78 பிரிவுகள் பிரிப்பார்கள். அதில் சமையல் செய்தல், பிரார்த்தனை, மருந்தகம், தோப்பு, கழிவறை சுத்தம், காவல் ஆகிய அனைத்தும் அடங்கும்.

நிர்வாகத்தில் சுவாமிகள் மிகவும் கண்டிப்பானவர். இதற்கு உதாரணமாக சில சம்பவங்களை கூறலாம். வாரியார் சுவாமிகள் மூலமாக ஒரு அன்பருக்கு பல்லாயிரம் ரூபாய்கள் கடனாக தரப்பட்டது. குறிப்பிட்ட கெடு காலம் முடிந்தும் அந்த அன்பர் பணத்தைத் திருப்பித்தரவில்லை. பல காரணங்களை சொல்லி வந்தார். உடனே சுவாமி இந்தப்பணம் ஒரு தர்ம ஸ்தாபனத்தை சேர்ந்தது. அனாதை குழந்தைகளுக்கு சேரவேண்டிய பணம். அதை யாரும் தனது சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது எனச்சொல்லி கோர்ட்டில் போட்டு விட்டார். பல ஆண்டுகள் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. இறுதியில் குடிலுக்கே வழக்கு சாதகமாய் அமைந்தது. பணமும் அசலும் வட்டியுமாக கிடைத்தது.

குருகுல பாடசாலைக்கு தகுந்தாற் போல் குடிலில் விதிமுறைகள் உள்ளன. அங்கு வேலை செய்யும் ஆசிரியர் பெருமக்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். அதற்கு நேர்மாறாக யாராவது ஒத்துழைக்காவிட்டால், சுவாமிஜி ஸ்தாபனத்தின் நலன் கருதி, எவ்வளவோ தரம் அவர்கள் போக்கை மாற்றிக் கொள்ளும்படி சொல்வார். அதற்கு ஒத்துக் கொள்ளாதவர்கள் யாராக இருந்தாலும் குடிலின் பாடசாலை நிர்வாகத்திலிருந்து நீக்கிவிடுவார்.

இதையெல்லாம் பார்த்தால் தேவையான அளவு அவர் தரும் பெருந்தன்மையும் கண்டிப்பும் நமக்கு வெளிப்படையாக தெரிகிறது. குடிலுக்கு ஒத்துழைக்கும் அதற்காக பாடுபடும் அன்பர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரியாதை செலுத்தி பெரிய அந்தஸ்த்தை கொடுத்து அவர்களை விட்டு பல கட்டடங்களை திறந்து வைக்கச் செய்திருக்கிறார். இதிலிருந்து அவருக்கு பிறரிடம் எவ்வளவு மதிப்பு மரியாதை இருக்கிறது என்பது தெரிகிறது.

வாரம் ஒருமுறை சுவாமிகள் குடில் கிழபுறத்தோப்பில் உள்ள 'தனித்தவ' இல்லம் சென்று அன்று முழுவதும் ஆன்மீக சிந்தனையில் ஈடுபடுவார். பொரி, தண்ணீர்தான் அன்று அவருக்கு உணவு. இதைப் போன்றே மற்ற பிரம்மசாரிகளும் ஒவ்வொரு நாள் தனித்தவம் செய்வார்கள்.

சுவாமி தனக்கு வயது முதிர்ந்தவுடன் மாடிமேல் ஏற முடியாது எனக் கருதி தனது அலுவலக அறை, படுக்கும் அறை, கழிவறை முதலியவற்றை கீழேயே

அமைத்துக் கொண்டார். அவர் படுக்கைக்கு போகும்போது, காலைக் கழுவிவிட்டு படுக்கையில் உட்கார்ந்து துணியால் இரண்டு காலையும் துடைத்து விட்டு படுக்கையில் படுத்துக்கொள்வார். எப்போதும் படுக்கையில் தூசி, அசுத்தம் இருக்கக்கூடாது என்று நினைப்பார்.

குளித்து முடித்துவிட்டு எழுந்திருக்க முடியாத காரணத்தால், குளியலறையில் நான்கு பக்கங்களிலும் இரும்பு குழாய்களை பொறுத்தி அதைப்பிடித்து எழுந்திருப்பார். அவருக்கு 1990 ல் இடுப்பு வலி, முதுகு வலி ஏற்பட்டது. அதற்காக எக்ஸ்ரே, ரத்தப்பரிசோதனை, சி.டி.ஸ்கேன் எடுத்து அந்த துறையில் நிபுணர்களிடம் காண்பித்து அதற்கு பலன் கிடைக்காமல் போனதால் அவரை கோட்டைக்கல் வாரியாரின் கோவை மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்குள்ள டாக்டர்கள் அவரை நன்கு பரிசோதித்து அட்மிட் செய்து ஒருமாதகாலம் வைத்திருந்தார்கள். பின்பு ஓரளவிற்கு குணப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். அதன்பின் சுவாமிகள் குடிலில் தினந்தோறும் அவர்கள் கொடுத்த தைலத்தை தேய்த்துக் வெந்நீர் போட்டு குளிப்பதற்கு இரண்டு மணி நேரம் ஆகும்.

சுவாமி ஒருநாள் அமைதி இல்லத்தின் வெளியிலுள்ள முகப்பில் மிதியடி சரியாக போடப்படவில்லை என்று அதை தனது வலது காலால் சரி செய்து போட்டார்.அப்போது தடுமாறி கீழே விழுந்து விட்டார். பிடித்துக் கொள்ள அருகில் பிடிப்பு ஏதும் இல்லாததால் கீழே விழும் போது பின்மண்டையில் அடிபட்டு விட்டது. எல்லோரும் சுவாமியை தூக்கி இருக்கையில் அமர்த்தி வைத்தார்கள். சுவாமிக்கு வாந்தியும் காய்ச்சலும் ஏற்பட்டு விட்டது. உடனே எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் வந்து பார்த்து விட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது எனத் தெரியவந்தது. உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். திருச்சி மருத்துவமனைக்கு அழைத்துப் போவதாக கூறினேன். அதற்கு அவர், " இனி இந்த உடல் குடிலை விட்டுச் செல்லாது" எந்த வைத்தியம் என்றாலும் அதை இங்கேயே செய்யுங்கள்" எனக்கூறி விட்டார்.

பின்பு நாங்கள் சுவாமிக்கு எந்த இடத்தில் வைத்து சிகிச்சை செய்தால் நலமாக இருக்கும் என்று அறுவை சிகிச்சைக்கு ஏற்ற ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தோம். பிறகு வைத்திய முறையை சொல்லிவிட்டு நான் வந்து விட்டேன். இரவு சுவாமிக்கு கடுமையான வாந்தியும் காய்ச்சலும் ஏற்பட்டிருக்கிறது. டாக்டரை பார்க்க வேண்டும் என சுவாமிகள் கூறினார். எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் உடனே புறப்பட்டுச் சென்று சுவாமியைப் பார்த்தேன். " எனக்கு கடும் தலைவலியாக இருக்கிறது. பொறுத்துக் கொள்ள முடியவில்லை." என என்னிடம் கூறினார். என் கையை பிடித்துக் கொண்டு தன் நோயிற்கு சம்மந்தமில்லாத ஒரு விஷயத்தை என்னிடம் கூறினார்.

அவர் கூறியது. "எல்லா மடாதிபதிகளையும் அழைக்க வேண்டும். சேலம், மதுரை, திருநெல்வேலி போன்ற ஊர்களில் தாய், தந்தை யாராவது ஒருவர்

இருந்தாலும் அத்தகைய சிறுவர்களுக்காக அனாதை ஆஸ்ரமம் ஏற்படுத்த வேண்டும். திருவாவடுதுறை, திருப்பனந்தாள், குன்றக்குடி இவர்கள் பொறுப்பில் ஒரு அனாதை விடுதி அமைக்க வேண்டும். குடிலிலிருந்து ஒவ்வொரு மடத்திற்கும் 5 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டும்." என்று கூறினார். அதே போல் அங்குள்ள பிறரிடமும் என்னிடமும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். உடனே நினைவை இழந்து விட்டார். உடனடியாக சிகிச்சை அளித்தும் பலனில்லாமல் சுவாமிஜி நம்மைவிட்டு பிரிந்து விட்டார்.

சுவாமிஜியின் மறைவுக்கு பின் மீனாட்சி சுந்தரம் ஐயா,எனது தமையனார் டாக்டர் ஜெயபால் நான் மற்றும் அங்கிருந்த பெரியவர்கள், சுவாமிஜியின் நாட்குறிப்பை படித்தோம். சுவாமிஜி ஒவ்வொரு நாளும் தனது நாட்குறிப்பில் எது நடந்தாலும் எழுதி வைத்திருப்பார். அதே போல குடிலை பற்றிய விபரங்கள் அதில் எழுதியிருந்தார். குடிலில் உள்ள அனுபவப்பட்ட வயது முதிர்ந்தவர் வாரிசாக வரவேண்டும் என்று எழுதியிருந்தார். அதன்படியே வயதில் முதிர்ந்தவரும் அனுபவம் மிக்கவருமான பிரம்மசாரி துரை அவர்களை ஒருமனதாக தேர்ந்தெடுத்து குடிலுக்கு தலைவராக நியமித்தோம்.

சுவாமி எதிலுமே கண்டிப்பாகவும் நேர்மையாகவும் பிறர்மேல் பொறாமைப் படாமலும், பணத்தாசையில்லாமலும் யாரையும் குறை கூறாமலும், எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற ஒரே மனப்பான்மையுடன் செயல்படும் மனிதர் என்று கூறலாம். அவரைப்போல் ஒரு மனிதரை பார்க்க வேண்டும் என்றால் யாரையும் ஒப்பிட முடியாது. அவருக்கு நிகர் அவர்தான். இந்த உலகில் அவர் நமக்கு கிடைத்ததை ஒரு பாக்கியமாக கருத வேண்டும். சொன்ன சொல்லை காப்பாற்றுவார். முடிந்ததை சொல்வார். பிறர்க்கு செவிசாய்க்கும் மனப்பான்மை உள்ளவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
கல்வி கொடுத்தோர் கண் கொடுத்தோர்"

என்பதற்கேற்ப ஆயிரக்கணக்கான அனாதை சிறார்களுக்கு உணவும், கல்வியும் கொடுத்து இந்த உலகில் யாருமே அனாதை இல்லை என்று உணர வைத்தவர்.

உலகம் உள்ளளவும் அவர் புகழ் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம். எல்லாம் வல்ல இறைவனின் அருளால் குடில் நல்லபடியாக நடந்து வருகிறது. எல்லோரும் ஒற்றுமையாகவும், கருத்து வேறுபாடு இல்லாமலும் பிரச்னைகளை கலந்து ஆலோசனை செய்து முடிவெடுத்து ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன், பெரியவர்களின் அறிவுரைகளை கேட்டு நடந்தால் இன்னும் பல ஆண்டுகள் குடில் சிறப்பாக நடக்கும்.

(ஒ-ம்) கனகராஜ்
10.3.2002

எனை ஆட்கொண்ட அடிகளாரின் அன்பிலே

சுவாமிஜியின் நெடுநாளைய நண்பரும் தற்போது குடில் மானேஜராகவும் பணிபுரியும் திரு. ஜெயபால்

இறைவன் நிகழ்த்துகின்ற செயல்களின் காரண காரியங்கள் சாமான்யர்களுக்கு புரிவதில்லை. அதில் உள்ள சூட்சுமங்கள் இறைவனுக்கே வெளிச்சம்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1971 ம் ஆண்டு ஆணையராக நியமிக்கப்பட்டேன். திருப்பராய்த்துறை கிராமம் மேற்கண்ட ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்டது. அப்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை சந்தித்து, "அந்தநல்லூர் ஒன்றியத்தில் ஏற்கெனவே ஊராட்சி வளர்ச்சி அலுவலர் என்கிற துவக்கநிலை அலுவலராக பணியாற்றி இருக்கிறேன். அதே வட்டாரத்தில் உயர்நிலையில் ஆணையராக பணியாற்றுவதில் சற்று சங்கடம் இருக்குமே" என்று முறையிட்டேன். "அது தெரிந்து தான் போட்டிருக்கிறேன். காலக்கிரமத்தில் எல்லாம் சரியாகிவிடும். அது மட்டுமல்ல. அதுவே உங்களுக்கு அனுகூலமாகக் கூட அமையக்கூடும்." என்றார் அந்த அதிகாரி.

"எனது கோரிக்கை ஏற்கப்பட்டு வேறு ஒன்றியத்திற்கு மாறுதல் கிடைத்து சென்றிருந்தால் எவ்வளவு பெரிய வாய்ப்பை ஞானச்சுடரின் ஒளியை பெறும் பாக்கியத்தை இழந்திருப்பேன் என இப்போது எண்ணிப்பார்க்கிறேன். நீண்ட நெடிய பந்தத்திற்கு அது துவக்கமாக அமைந்தது. அரசுப்பணியில் 36 ஆண்டுகள் பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி இருந்த போதிலும் அருட்பார்வை கிடைத்த அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்ற கிடைத்த வாய்ப்பையே பெரும் பேறாக கருதுகிறேன்.

ஆர்.கே. புரத்தில் அரசு அலுவலருக்கு அனுமதி

சுவாமி அவர்களின் அன்பு கருணை அளப்பரியது. அவர்கள் நான் கேட்டதை எல்லாம் அளித்தார்கள். எனது அலுவலகத்தில் பணியாற்றிய அலுவலர் ஒருவர் ஓர் நாள் என்னிடம், " ஐயா, குடிலில் ஓர் குடியிருப்பு காலியாக உள்ளது. குடில் சுவாமிகளிடம் கேட்டு அதனை பெற்றுத் தாருங்கள்" என்றார். சுவாமிகளிடம் இந்த கோரிக்கையை வைக்க சற்று அச்சம். குடில் வீடுகள் அனைத்தும் குடிலில் பணியாற்றுபவர்களுக்காக கட்டப்பெற்றவை. இதில் பிறர் போய் தங்குவது முறையாக இருக்காது என அஞ்சினேன். இருப்பினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒரு நாள் மெல்ல பிரஸ்தாபித்தேன். சுவாமிகள் சற்றும் யோசிக்கவில்லை. யாரையும் கலந்து ஆலோசிக்கவில்லை. 'நல்லது. அவ்வாறே ஆகட்டும். " அந்த அலுவலர் நம் குடில் இல்லம் ஒன்றில் தங்கட்டும்' என உடனடியாக ஆணையிட்டார்கள். எனது அலுவலர் உட்பட அனைவருக்கும் ஆச்சரியம். கோரிக்கைகளில் நியாயம் இருந்தால் முடிவு எடுப்பதில் தாமதமோ தயக்கமோ சுவாமிகளிடம் இருந்ததில்லை.

கையது கொண்டு மெய்யது பொத்தி

அதைப்போன்று இன்னொரு நிகழ்ச்சி. கல்லணை ஒரு சிற்றூர். பின் தங்கிய கிராமம் அங்கிருந்த குழந்தைகள் காப்பகம். (பால்வாடி) ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்குட்பட்டது. அதில் படித்த இரு பால் குழந்தைகளில் பாதிப்பேர் மேல் சட்டை அணியாமலே பள்ளிக்கு வருவார்கள். அந்த அளவுக்கு ஏழ்மை. அரசினரால் சீருடை வழங்கப்படாத காலம் அது. அப்பள்ளியின் ஆசிரியை இந்தக் குழந்தைகளின் அவல நிலையை எனது கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். எப்படியாயினும் இப்பிள்ளைகளுக்கு உடையளிக்க வேண்டும் என விரும்பினேன்.

மறுநாள் சுவாமி அவர்களை சந்தித்து குழந்தைகளின் வறுமையின் காரணமாக ஏற்பட்டுள்ள அவலநிலையைப் பற்றி எடுத்துக்கூறினேன். அவர்களுக்கு உடை கிடைத்தால் அந்த ஏழைக்குழந்தைகள் பெரிதும் மகிழ்வார்கள் என்கிற வேண்டுகோளை சுவாமிகளின் திருமுன்னர் வைத்தேன்.

" ஐயா, குடிலில் இப்படி எந்த திட்டமும் இல்லையே! சரி. ஏழைக் குழந்தைகள் விஷயம் பரிசீலனை செய்யலாம்." என்று சுவாமிகள் கூறினார்கள். அத்துடன் இதனை நான் மறந்து விட்டேன். ஆனால் சுவாமிகள் மறக்கவில்லை. அப்பள்ளிக் குழந்தைகளின் அளவுகளை பெற்றுவரச் செய்து துணிவாங்கி ஆண் பெண் இருபால் சிறார்களுக்கும் மேல்சட்டை கீழ்சட்டை தைத்து தயார் செய்து விட்டு தகவல் அனுப்பினார்கள். " குழந்தைகளுக்கு உடை தயாராக உள்ளது. நீங்களும் முன்னாள் குடில் மானேஜர் (மறைந்த) திரு. வி. சங்கர நாராயணன், ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் நேரில் அக்கிராமத்திற்கு சென்று சீருடை குழந்தைகளுக்கு வழங்கி வாருங்கள்." என அன்புடன் கூறினார்கள்.

குடில் தவிரபிற பள்ளிக்குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் பழக்கம் முன்னமும் இல்லை. பின்னரும் இல்லை. இது தொடர்ந்தால் அனைத்து பள்ளிகளில் இருந்தும் கோரிக்கைகள் வரக்கூடும். பெருஞ்செலவினமாக உயர்ந்து விடும் எனக்கருதி சுவாமிகள் அந்தத்திட்டத்தை அந்த அளவில் நிறுத்தி விட்டார்கள்.

எங்கே குடிநீர்?

குடிலில் பணியாற்றுவோர் நலனை பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக சுவாமிகள் இருப்பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணபுரத்தில் (ஆர்.கே.புரம்) என்ற குடில் அலுவலர் குடியிருப்பு வளாகம் – இது மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது) நல்ல குடிநீர் இல்லை. திருச்சி – கோவை சாலையின் வடபுறம் இருப்பது ஆஸ்ரமம். தென்புறம் இருப்பது அலுவலர்

குடியிருப்பும் ஆகும். ஆஸ்ரமத்திற்குள் நல்ல குடிநீர் கிடைக்கும். சாலையை தாண்டினால் உப்புநீர்தான். நல்ல குடிநீர் தேடி ஆசிரியர்களும் அவர்தம் குடும்பத்தாரும் சொல்லொணா துன்பத்திற்கு ஆளாயினர். குடிநீர் வழங்குவது உள்ளாட்சி நிர்வாகத்தின் பொறுப்பு. எனவே இதுபற்றி திருப்பராய்த்துறை ஊராட்சி தலைவரிடம் பிரஸ்தாபித்தேன்.

ஊராட்சி பொறுப்பில் இருந்த மேல்நிலைநீர்தேக்கத்தொட்டி திருப்பராய்த்துறை கிராமத்தில் இருந்தது. அந்த இடத்திற்கும் குடில் வளாகத்திற்கும் சுமார் முக்கால் கிலோ மீட்டர் இருக்கக்கூடும். உள்ளூர் மக்களுக்கும் குடிநீர் போதுமான அளவில் கிடைக்கவில்லை என சாக்கு போக்கு கூறி தட்டிக்கழித்து வந்தார். அவ்வாண்டு ஊராட்சிகளின் நிர்வாகமும் ஆணையர் பொறுப்பிற்கு தனி அலுவலர் என்கிற நிலையில் வரப்பெற்றன. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ஊராட்சி மூலம் குடிநீர் வழங்க தீர்மானம் நிறைவேற்றினேன். ஒரே இரவில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் நெடுஞ்சாலையின் குறுக்காக குழாய் பதித்து குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப் பெற்றது. நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. குடியிருப்பில் உள்ளோர் மகிழ்ந்தனர். ஆஸ்ரமத்தில் பணிபுரிவோர் மன நிறைவுடன் பணிபுரிகிறார்களா? என சுவாமிகள் கண்காணித்துக் கொண்டேயிருப்பார்கள் என்பதற்கு இந்நிகழ்ச்சி மேலும் ஓர் எடுத்துக்காட்டு,

பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி மட்டும் போதுமா?

எந்த ஓர் செயலையும் செய்யும் முன்னர் சுவாமி அவர்கள் ஆழ்ந்து சிந்திப்பார்கள். அதன் பின்னரே முடிவு எடுப்பார்கள். எண்ணித்துணிக கருமம் என்பதற்கு இலக்கணமாக திகழ்ந்தார்கள். குடிலில் பள்ளிப்படிப்பு முடித்த பின்னர் அரசினர் ஐ.டி.ஐ.யில் படித்து வெளியேறும் மாணவர்கள் பலர் வேலையின்றி இருப்பதை கண்ணுற்ற சுவாமிகள் இவர்கள் வேலையில் அமர ஏதேனும் செய்ய வேண்டும் என எண்ணினார்கள். மாணவர்களும் பணியிடைப் பயிற்சியும் (On the job training) பின்னர் நிரந்தர பணியும் கிடைக்கும் வகையில் ஒரு தொழிற் சேவா மையம் துவக்க வேண்டும் என சிந்தித்து வந்தார்கள்.

1984 ம் ஆண்டில் ஓர் நாள் பேசிக்கொண்டிருக்கும்போது சுவாமி கூறினார்கள். "தொழிற்சேவா மையம் துவங்க குருமகராஜ் அனுமதி கிடைத்து விட்டது. குடிலில் இருந்து 5 கல் தொலைவில் குளித்தலை செல்லும் சாலையோரமாக நிலம் விலைக்கு கிடைக்குமா எனப்பாருங்கள்" ஆணையிட்டார் சுவாமிகள்.

பேட்டைவாய்த்தலையில் இருந்த திரு. ரத்தினகிரி என்கிற நிலச்சுவான்தாரரும் சிறுகமணி பேரூராட்சி தலைவரிடம் திட்டத்தை விளக்கினார். அவர், " இது ஓர் புனிதமான காரியம்: நீங்கள் வேறெங்கும்

செல்ல வேண்டாம். என்னிடமே இதற்குத் தகுதியான நிலம் இருக்கிறது. வந்து பாருங்கள்.' என்றார். உடனடியாக அழைத்துச் சென்றார். தேசீய நெடுஞ்சாலையில் உள்ள அந்த இடம் பொருத்தமானது என்று கருதி சுவாமிகளிடம் தெரிவித்தேன். சுவாமிகளும் பூமியை பாவையிட்டு வாங்க ஏற்பாடு செய்து விட்டார்கள்.

இப்பகுதி வாழ் இளைஞர்களும் பயிற்சி பெறத் தக்க வகையில் ஓர் பயிற்சி நிலையம் அமைக்க 25 லட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் உருவாக்கி மத்திய அரசின் நிதிஉதவிக்காக அனுப்பினார்கள். அது சமயம் கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குனராக இருந்த திரு. மீனாட்சி சுந்தரம் ஐயா அவர்கள் இது குறித்து புது டில்லி சென்றார்கள். இத்திட்டம் அனுப்பி ஓராண்டு ஆகியும் முறையான பதில் ஏதும் கிடைக்கவில்லை. சுவாமி அவர்களுக்கு எதிலும் கால நிர்ணயம் உண்டு. ஒவ்வொன்றும் அதனதன் காலத்தில் செம்மையாக செய்யப்பட வேண்டும் என்று விரும்புவார்கள். பொதுவாக ஆங்கிலேயர்கள் நேரந்தவறாமை குறித்து மிக விழிப்பாக இருப்பார்கள் என்கிற பெயருண்டு. ஆனால் சுவாமிகள் அவர்களையும் விஞ்சிவிடும் வகையில் செயல்பட்டார்கள் என்றால் அது மிகையாகாது. மதியம் சுவாமி அவர்களின் ஆஸ்ரம கதவு திறக்கப்பட்டால் நம் கடிகாரத்தில் மணி 12 என்று முள்ளை திருப்பி வைத்துக் கொள்ளலாம். அவ்வளவு துல்லியமாக செயல்படுவார்கள்.

நேர நிர்வாக விஷயத்தில் (Time Management) அவருக்கு நிகர் அவரே. ஓர் நாள் குடிலிலிருந்து புதுடில்லிக்கு தந்தி பறந்தது. அந்த தந்தி ஓர் கோரிக்கை போலல்லாமல் எச்சரிக்கை போல் இருந்தது. ஒரு தேதியை குறிப்பிட்டு இந்த தேதிக்குள் மான்யம் வழங்கப்பட வேண்டும். அங்ஙனம் வரபெறாவிடின் தமது கோரிக்கையை திரும்ப பெற வேண்டியிருக்கும் என்பது தான் அதன் சாராம்சம். எப்படியேனும் அரசின் நிதியுதவியை பெறத்தான் முயற்சிப்பார்கள். பணம் கொடுக்க இருப்பவர்களுக்கு, வாங்க இருப்பவர் காலக்கெடு விதிக்க மாட்டார்கள். நமது சுவாமிதான் எதிலும் வித்யாசமானவராயிற்றே. எல்லாமே முறையாக செம்மையாக நடைபெற வேண்டும் என்பதில் மிக மிகக் கண்டிப்பானவர். எனவே இதிலும் அந்தக்காலக்கெடுவை நிர்ணயித்தார். அந்தக்காலக் கெடுவிற்குள் நிதி வரவில்லை. சுவாமிகள் மீண்டும் சிந்தித்தார்கள். அரசு உதவி பெற்று பயிற்சி நிலையம் துவக்கினால் கிராமங்களிலிருந்து பிற இளைஞர்களும் வருவார்கள். குடிலின் ஒழுங்குமுறை பாதிக்கப்படக்கூடும் என எண்ணி குடிலின் நிதியிலிருந்து தொழிற்சேவா மையம் துவக்க முடிவு எடுத்தார்கள். வழக்கம் போல் மதுரை பொறியாளர் திரு. திருவேங்கடநாதன் அவர்கள் தயார் செய்த கட்டட வரைபடத்தின் படி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பெற்றன. வெல்டிங், மோட்டார் ரீவைண்டிங், சர்வீஸ் ஸ்டேஷன் என பல்வேறு பணிகள் துவக்கப் பெற்றன.

குடில் மாணவர்களுக்கு கரூர், திருப்பூர், மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் சிறப்பு பயிற்சி தரப்பட்டன. ஆனால் இவர்கள் குடில் சேவா மையத்தில் தொடர்ந்து பணியாற்றவில்லை. பயிற்சி பெற்ற பலர் தங்கள் தங்கள் ஊர்களுக்கு சென்று விட்டனர். பயிற்சி பெறாத மாணவர்கள் தொழிலில் திறமை குறைவாக இருந்தனர். இதனால் தொழில் சேவா மைய பணிகளில் தொய்வு ஏற்பட்டது. இறுதியாக நிலையம் மூடப்பட்டது. பதினான்கு ஆண்டுகளுக்கு பிறகு இவ்வாண்டில் (2002) மீண்டும் துவக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடில் அன்பர் திரு. குழந்தைசாமி அவர்கள் இம்முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

தொழிற் சேவா மையம் துவக்கின நோக்கம் அற்புதமானது. வாழ்வியல் நடைமுறை நியதிகளுக்கும் தொழில்சார் முறைகளுக்கும் குடிலின் அடிப்படை கொள்கைகளுக்கும் ஒத்து போக இயலாத சூழலில் பணிகள் நிறுத்தப்பட்டன. எதிர்காலத்தில் இந்த தொழிற் சேவா மையம் மீண்டும் செயல்படும் நாளை எதிர்பார்ப்போமாக!

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து

குடிலில் 10 ம் வகுப்பு முடிக்கும் மாணவர்களில் 10 பேருக்கு திருவெறும்பூரிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 10 இடங்கள் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் 10 மாணவர்கள் மார்க் அடிப்படையில்லாமல் 10 ம் வகுப்பு பாஸ் செய்தவர்கள் என்ற நிலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் 1997 ம் ஆண்டில் அரசினர் ஓர் ஆணை வெளியிட்டார்கள். இதன்படி பயிற்சியில் சேர குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் செய்யப்பெற்றது. இந்த ஆணை குடிலுக்கு பொருந்தாது என்றும், வழக்கம் போல் 10 இடங்கள் ஒதுக்கீடு செய்யக் கோரி ஐ.டி.ஐ க்கு விண்ணப்பம் செய்திருந்தோம். ஆனால் ஐ.டி.ஐ. நிர்வாகம் இதனை ஏற்காமல் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்த 8 மாணவர்களுக்கு இடம் அளித்துவிட்டு இரண்டு மாணவர்களுக்கு இடம் அளிக்க மறுத்துவிட்டது.

குடில் சுவாமி அவர்கள் என்னையும் திரு. மீனாட்சி சுந்தரம் ஐயா அவர்களையும் சென்னைக்கு சென்று வரப் பணித்தார்கள். சென்னை சென்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அவர்களை சந்தித்து கோரிக்கையை முன் வைத்தோம். அவர் கோரிக்கையின் நியாயங்களை புரிந்து கொண்டார்களே தவிர சாதகமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. அட்மிஷன் முடிய இன்னும் ஒரு வாரமே இருந்தது. சுவாமி அவர்கள் இருவரையும் அழைத்தார்கள். தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார்கள். " இடம் கிடைக்காத இரு மாணவர்களைப் பார்க்கிற பொழுது என் மனம் புண்ணாகிறது. இது இந்த இரு மாணவர்களுக்கும் இழைக்கப்பட்ட துரோகம். நீங்கள் இருவரும் மீண்டும் சென்னை சென்று ஆக

வேண்டியதை பாருங்கள்.'' என தாயுள்ளத்தோடு கூறினார்கள்.

இடம் கிடைக்காத மாணவர்கள் எப்பேர்ப்பட்ட ஏக்கத்தோடு இருப்பார்கள். அவர்கள் யாரிடம் முறையிடுவார்கள் என்பதை எல்லாம் தானே எண்ணி உணர்ந்து அவர்களது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய விரும்பினார்கள். சுவாமி அவர்களின் ஆணையை தட்டமுடியாதல்லவா? எனவே நம்பிக்கை சிறிதும் இன்றி சென்னை சென்று மீண்டும் சந்தித்தோம். அவர் நான் இதில் ஏதும் செய்வதற்கில்லை என்று முடிவாக கூறிவிட்டார். இனி என்ன செய்வது என்று கவலை தோய்ந்து நின்ற போது பளிச்சென்று ஓர் ஒளிக்கீற்று! துறையின் அரசு செயலரை சந்தித்தால் என்ன என்கிற எண்ணம் மனதில் நிழலாடியது. அரசு செயலரை சந்திக்க தகுதியான கடிதம் கைவசம் ஏதுமில்லை. இருப்பினும் சென்றோம். இயக்குநருக்கு எழுதி இருந்த கடிதத்தில் சிறு மாறுதல் செய்து செயலரிடம் கொடுத்து எங்கள் வேண்டுகோள் பற்றி கூறினோம். அவர் நாங்கள் வந்த காரியம் தவிர மற்ற விஷயங்கள் குறித்து பேசினார். குடில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை விரிவாக கேட்டறிந்தார். அவர் குடிலை ஏற்கனவே அறிந்தவர் என்பதால் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

நாங்கள் சற்றும் எதிர்பாராத அதிசயம் நிகழ்ந்தது!. “ ஆம் உங்கள் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது! செய்கிறேன்'' எனக் கூறினார். கீழ்மட்டத்திலிருந்து அவர் அறிக்கை கோரவில்லை. அப்படிக்கோர அவகாசமும் இல்லை. எந்த அலுவலரையும் அழைக்கவில்லை. தானே அனைத்து காரியங்களையும் செய்தார். நாங்கள் சென்ற நேரம் ஒரு ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள புது டில்லிக்கு புறப்படுகிற சமயம். இருப்பினும் அதைக்கூட பெரிதாகக் கருதாமல் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ஒரு வாரத்தில் அரசாணை கிடைக்கும். சென்று வாருங்கள்.''என்றார். அதே போல நிகழ்ந்தது. அவரை சந்தித்தது திங்கட்கிழமை. அரசாணை கிடைத்தது அவ்வார ஞாயிற்றுக்கிழமை. என்னே விந்தை!

எண்ணத்தின் வலிமை

இப்பேர்ப்பட்ட நிகழ்வுகளை எல்லாம் பார்க்கிற போது என்ன எண்ணம் தோன்றுகிறது? நெஞ்சத்தில் தூய எண்ணமும் செயல்பாடுகளில் முழு அர்ப்பணிப்பு உணர்வும் இருந்தால் நினைத்ததை சாதிக்கலாம் என்பது தானே. அப்பொழுதும் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். இதை நான் சாதித்தேன். இது என்னால் நிகழ்ந்தது என்கிற தன்முனைப்பு தோன்றலாகாது. நிகழ்வுகளை இறைவன் நிகழ்த்துகிறார். நாம் அதில் இயைந்து கொள்ளுகிறோம். அவ்வளவே.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பொழுது மகாத்மா காந்தியடிகளிடம், “ நாட்டு மக்களுக்கு தங்களின் செய்தி என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு மகாத்மா காந்தி அளித்த பதில், “எனது வாழ்க்கையே செய்திதான் (My life is the Message) என்றார்கள். சொல்லுக்கும் வாழ்க்கைக்கும்

வித்தியாசமின்றி, சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பவர்களால் மட்டுமே இது சாத்தியம். அப்படி வாழ்ந்தவர்கள் நம் சுவாமிஜி அவர்கள். ஆலமரம் போல பரந்து விரிந்து நிற்கிற இந்த ஆஸ்ரம வளர்ச்சியைக் கண்டு மகிழ்கிறோம். இதற்கும் மேலாக ஆச்சரியப்படுகிறோம். எப்படி இது சாத்தியமாயிற்று என்று வியந்து நிற்கின்றோம். ஆனால் நம் கண் முன்னால் சுவாமிஜி அவர்கள் இந்த அற்புதத்தை நிகழ்த்தி காட்டி இருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் சுவாமிஜி அவர்களின் தொலைநோக்கா? கடின உழைப்பா? அளப்பரிய தவவலிமையா? அல்லது இது அனைத்தின் கூட்டுச்சேர்க்கையா? ஒன்றை உறுதியாக நம்பலாம். அது எண்ணத்தின் வலிமை. "எண்ணியர் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்" என்பதற்கு வாழ்வியல் சான்றாக அடிகளார் திகழ்கிறார் என்பதில் ஐயமில்லை.

அடிகளாரின் விருப்பம்

அவர்களது விருப்பங்களில் மூன்று முக்கியமானவை. முதலாவது " ஒவ்வொரு பள்ளியும் ஓர் தோட்டம் பராமரிக்க வேண்டும். அத்தோட்டத்தில் அப்பள்ளி பிள்ளைகளே வேலை செய்ய வேண்டும். அப்பள்ளியின் தேவையை அத்தோட்டம் நிறைவு செய்ய வேண்டும். குடிலில் இது சாத்தியம் என்றால் எல்லா பள்ளிகளிலும் இதை நிகழ்த்த முடியும்தானே" என்று கேட்பார்கள்.

தமிழகத்திலே அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களும் குடிலை பார்த்து செல்ல வேண்டும். இதனை முன்மாதிரியாக வைத்து தங்கள் பள்ளிகளிலும் இதனை செயல்படுத்த வேண்டும் என்று சுவாமி கூறுவார்கள். குருகுல மாணவ வாழ்வியல் முறை இங்கு செயல்படுகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வு ஏற்பட வேண்டும். இது சாத்தியமா?

இரண்டாவது விருப்பம் இந்து மடாலயங்கள் தொடர்புடைய பணி. குடில் தாய் தந்தை இருவருமேயில்லாத சிறார்களுக்கு வாழ்வளிக்கிறது. தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் எவரேனும் ஒருவரை இழந்த பிள்ளைகட்கு புகலிடம் அளிக்க இந்து மத மடாலயங்கள் முன் வரவேண்டும். திசைக்கு ஒன்றாக நான்கு திசைகளிலும் நான்கு அனாதை சிறார் பாதுகாப்பு இல்லங்கள் ஒரு கோடி வைப்பு நிதியாக நிரந்தர நிதி ஏற்படுத்த வேண்டும். துவக்க முயற்சியாக குடில் தனது நிதியிலிருந்து ஐந்து லட்சம் வழங்கும் என அறிவித்தார்கள். எஞ்சியதை மடாலயம் அளிக்க முன்வரவேண்டும் என விரும்பினார்கள். இந்நிதி ஒருங்கிணைக்கப்பட்டு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு அதில் வரும் வட்டித்தொகையிலிருந்து இவ்விடுதிகள் நடத்தப்பட வேண்டும்.

அதற்காக மடாலயங்களை அணுகியபோது வியப்பான பதில் கிடைத்தது. " நிதி ஒரு பிரச்னை இல்லை. கொடுத்து விடலாம். ஆனால் அனாதை சிறார்

நிறுவனங்களை நடத்த தகுதி வாய்ந்த நபர்கள் எங்களிடம் இல்லை. இதற்கு தகுதி வாய்ந்த நபர்களை தர இயலுமா?" என்றார்கள். குடில் சட்ட திட்டத்தின் படி குடில் ஆஸ்ரமவாசிகள் வெளியில் செல்ல இயலாதே. அந்த முயற்சி அந்த நிலையிலேயே உள்ளது.

இப்புனிதப்பணியில் மடாலயங்கள் ஈடுபடும் என எதிர்பார்த்து இத்திட்டம் சுவாமிஜி அவதரித்த புண்ணிய பூமியாகிய ஈரோடு மாவட்டம் கெம்பநாயக்கன்பாளையத்தில் அனாதை சிறார்களுக்கான ஆஸ்ரமம் துவக்கப்பட்டுள்ளது. துவக்கமாக ஐந்து மாணவர்கள் சேர்ந்துள்ளனர். எதிர்காலத்தில் இது மேலும் விரிவடையும் என எதிர்பார்ப்போமாக!

சுவாமிஜி அவர்களின் மூன்றாவது விருப்பம் வாரியார் சுவாமிகளின் நூல்கள் அனைத்தின் பிரசுரிக்கும் உரிமையை தற்போது உரிமையுள்ளவர்களிடம் பெற்று மலிவு விலையில் அச்சிடவேண்டும் என்பதே.இதன் மூலம் தமிழக மக்கள் பெருமளவில் வாங்கி பயன் பெறுவார்கள் என்பதே. வாரியார் சுவாமிகள் குடிலோடு இரண்டற கலந்தவர்கள். உலகில் எந்தப் பகுதியில் வாரியார் சுவாமிகள் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தாலும் ஜனவரி முதல் ஞாயிறு குடிலில் நடைபெறும் ஆண்டு விழாவிற்கு தவறாது வருகை தருவார்கள். குடில் பொருளாதார தன்னிறைவு பெற, " திருவருள் திரு நிதி" திட்ட செயலாக்கத்திற்கு உந்து சக்தியாக திகழ்ந்தார்கள். குடிலின் செயல்பாடுகளில் முழு ஈடுபாடு கொண்ட அப்பெருமகனாரின் நூல்கள் அங்ஙனம் மலிவு பதிப்பாக விரைவில் வெளிவரும் என நம்புவோமாக.

(ஒ-ம்) ஜெயபால்
17.7.2002

மனிதருள் மாணிக்கம் - தவத்திரு பிரம்மச்சாரி ராமசுவாமி அவர்கள்

நமது சுவாமிஜீ அவர்கள் அவதரித்த புண்ணிய பூமியாம் கெம்பநாயக்கன்பாளையம் மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள எல்லா கிராம மக்களுடனும் அன்புடன் பழகி வந்தவர் ஆவார். தன் இளமைப் பருவத்திலேயே அறப்பணியிலும்; ஆன்மிகப்பணியிலும்; சமுதாயப் பணியிலும்; தேசப்பணியிலும் மிகவும் அக்கரை கொண்டவராகத் திகழ்ந்திருக்கிறார். சுதந்திரப் போராட்டங்களிலும் ஈடுபட்டிருக்கிறார். கிராமப் பகுதிகளில் தீண்டாமை ஒழிப்பு; மது விலக்கு போன்ற பிரச்சாரங்களை தலைமை ஏற்று நடத்தி; சிறுசிறு துண்டு பிரசுரங்கள் மூலமாகவும்; நாடகங்கள் வாயிலாகவும் பொது மக்களுக்குப் புரியும்படியாக விளக்கமளித்திருக்கிறார்.

சுவாமிஜி அவர்கள் தன் இளம் வயதிலேயே கல்வி; கேள்விகளில் சிறந்து

விளங்கியவர் ஆவார். அதற்கு மேலாக அவர் காந்தியப் பற்றும்; ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்; சுவாமி விவேகானந்தர் போதனைகளில் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டவராகத் திகழ்ந்தார். அதன் வாயிலாக இளமையிலேயே அவருடைய கவனம் அரிஜனக்குழந்தைகள் மீதும்; ஏழைகள் மீதும் வெகுவாக ஈர்க்கப்பட்டது. கிராமப்புறம் வளர்ச்சி அடைந்தால்தான் சமுதாயம் மேன்மை அடையும் என நம்பினார்.

"பெருஞ்செயல்களை பெருந்தியாகத்தால் மட்டும் செய்ய முடியும். உலகப் பொதுவான அந்த ஒரே ஒரு கருத்திற்காக அவசியமாயின் அனைத்தையும் தியாகம் செய்தல் வேண்டும்."

மேற்கண்ட சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய நமது சுவாமிஜீ அவர்கள் 1938 ம் ஆண்டு ஜூலை மாதம் 8ம் நாள் கெம்பநாயக்கன்பாளையத்தில் ஒரு கிராமியக் கூட்டுறவு பல்நோக்குச் சங்கத்தை கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து நிறுவினார். அதில் அவர் கௌரவச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1942 ம் ஆண்டு வரை தாம் செயலாளராக; சிறப்பாக பணியாற்றினார்.

அவர் ஆரம்பித்த கூட்டுறவுச்சங்கம், இன்று அருகுபோல் வேரூன்றி; ஆல் போல் தழைத்து; ஒரு கற்பக விருட்சமாக பொதுமக்களுக்கும்; குறிப்பாக விவசாயப் பெருமக்களுக்கும் முழுமையாகக் கடன்கள் வழங்கி மிகச்சிறந்த சேவை செய்து வருகிறது. இன்று மு.770 கெம்பநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி லிட்." என்ற பெயரில் இயங்கி வருகிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 9.27 கோடி ரூபாய் அளவிற்கு வரவு செலவு நடைபெற்று வளர்ந்துள்ளது.

சுவாமிஜி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வங்கியில் 17.01.1977 ம் தேதியில் கடைநிலை ஊழியராக பணியமர்த்தப்பட்டு எனது உள்ளப்பூர்வமான உழைப்பால் இன்று வங்கியில் உதவி செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளேன். அதற்கு மேலாக நமது சுவாமிஜி அவர்கள் அவதரித்த புண்ணிய பூமியாம் கெம்ப நாயக்கன்பாளையத்தில் அவருக்கு நினைவு மண்டபமும் அனாதைக் குழந்தைகள் ஆசிரமமும் அமைப்பதை கருத்தில் கொண்டு துவங்கப்பட்ட திருப்பராத்துறை ஸ்ரீ ராமகிருஷ்ணகுடில் ஸ்தாபகர் தவத்திரு. பிரம்மசாரி ராமசுவாமி நினைவு தர்ம காரிய அறக்கட்டளையிலும் எனக்கு துணைச் செயலாளராகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. நமது சுவாமிஜி அவர்களை வழிபட்டு; அவரது சேவையில் எள் அளவேனும் பணி செய்து பின் தொடர என்றென்றும் கடமைப்பட்டவன் ஆவேன்.

சுவாமிஜி அவர்கள் இளமைக்காலத்தில் எங்கள் ஊரில் இருந்த போது அவரால் ஆரம்பிக்கப்பட்ட பல நல்ல காரியங்கள் நீர்பாசன அணை,

மருத்துவமனை பள்ளிக்கூடம், பேரூராட்சி, தபால் நிலையம், கூட்டுறவு வங்கி, பாதை வசதிகள் இன்னும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நல்வாழ்வுக்கு வழிதேடிக் கொடுத்துள்ளது., அதில் அடியேனும் பயன்பட்ட ஒருவன் ஆவேன். அந்த நன்றியை சுவாமிஜியின் மலரடிகளில் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

இவண்

S.P. தேவணன்

அருள்மிகு பத்திரகாளி அம்மன் பக்தன்

ஊஞ்சவனம், செல்லிபாளையம்

C/o கலைமகள் திருமண மண்டபத்தோட்டம், தாசரிபாளையம்,

கொண்டப்பநாயக்கன்பாளையம் (அஞ்சல்) சத்தி (தாலூகா)

ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு

கெம்பநாயக்கன்பாளையத்தில் ஓர் நினைவாலயம்

குடில் சுவாமிஜி அவர்கள் கெம்பநாயக்கன்பாளையத்திலிருந்து வெளியேறி திருப்பராய்த்துறைக்கு வந்து சேர்ந்தார். அங்கு ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் என்னும் ஸ்தாபனத்தை 1949 ம் ஆண்டில் ஆரம்பித்தார். 1954 ம் ஆண்டு வரை தனித்தவ வாழ்க்கையில் ஈடுபட்டார்.

1.6.1954 ம் ஆண்டில் ஐந்து தாய் தந்தையரை இழந்த சிறுவர்களை சேர்த்துக் கொண்டு தமது லட்சிய வாழ்க்கையைத் தொடங்கினார். இப்போது ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

எதிர்பாராத விதமாக குடில் சுவாமிஜி அவர்கள் 4.3.1999 ல் மகாசமாதி அடைந்தார்கள். அவதரித்த ஊரான கெம்பநாயக்கன்பாளையத்தில் அவரது நினைவாக நினைவாலயம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்தோம். அந்த எமது எண்ணத்தை குடில் சுவாமிஜியின் 89 வது பிறந்த நாளான 18.10.2001 அன்று, குடிலில் நடைபெற்ற " சுவாமிஜி ஜெயந்தி" விழாவில் ஆஸ்ரம அன்பர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில் கூறினோம். மேலும் ஒரு தகவலும் அக்கூட்டத்தில் கூறப்பட்டது.

" குடிலின் பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்து சுவாமிஜியின் நினைவாலயம் கட்ட இயலாது. ஆனால் நிதிவசூல் செய்து கட்டலாம்" என குடில் ஆடிட்டர் அவர்கள் கூறிய தகவலையும் தெரிவித்தோம். அனைவரும் நிதிவசூல் செய்து தருவதாக ஒப்புக்கொண்டனர். இதில் முக்கியமாக புளியம்பட்டி திரு. குழந்தைசாமி அவர்கள் ஐந்து லட்ச ரூபாய் தருவதாக மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார்.

கெம்பநாயக்கன்பாளையம் கே. ஆர். மாணிக்கம் செட்டியார் அவர்கள் முன்னிலையில் " நினைவாலய அறக்கட்டளை" ஏற்படுத்தப்பட்டது. இதன்

பெயர் " திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடில் தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமி தர்ம காரிய அறக்கட்டளை" என்பதாகவும் இந்த அறக்கட்டளையின் பதிவு எண் 292 நாள் 28.11.2001 ஆகும்.

மேற்படி அறக்கட்டளை கெம்பநாயக்கன்பாளையம் கே. ஆர். மாணிக்கம் செட்டியார் அவர்களும் மற்றும் அவ்வூர் அன்பர்கள் மூன்று பேர், குடில் முன்னாள் மாணவர்கள் எட்டுப்பேர் ஆகிய குழு, முன்னாள் மாணவர் திரு. கே. மருது தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.

அதன் விபரம் :

திருவாளர்கள்

1.	கே. மருது	தலைவர்
2.	கே. ஆர். மாணிக்கம் செட்டியார்	துணைத்தலைவர்
3.	பி. குழந்தைசாமி	துணைத்தலைவர்
4.	மா. ரமேஷ்	பொருளாளர்
5.	டி. பழனிச்சாமி	செயலாளர்
6.	எஸ். பி.தேவணன்	துணைச்செயலாளர்
7.	பி. நடராஜன்	அறங்காவலர்
8.	எஸ். காந்தி	" "
9.	எம். ராமானுஜம்	" "
10.	கே. திருமலை	" "
11.	திருநாவுக்கரசு	" "
12.	ராமமூர்த்தி	" "

மேலே கண்ட அறக்கட்டளை நிறுவ மூலகாரணமாக விளங்கியவர் குடில் சுவாமிஜி அவர்களே ஆவார்கள். அவர் அமரராவதற்கு முன் இதைப்பற்றி கூறியிருப்பதாவது:

" குடிலில் தாய் தந்தை இருவரையும் இழந்த அனாதரவான நிலையில் உள்ள அனாதைக் குழந்தைகளை சேர்த்து முற்றிலும் இலவசமாக உணவு, உடை, கல்வி மருத்துவம் ஆகிய அனைத்தையும் அளித்து வருவதுதான் குடிலின் தலையாய மாற்ற முடியாத லட்சியமாகும். ஆனால் நாட்டில் பெற்றோர் இருவரில் யாராவது ஒருவரை இழந்து அனாதரவான நிலையில் உள்ள அனாதை மக்கள் கணக்கற்றவர் இருக்கின்றனர். அவர்களுக்காக தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் ஆஸ்ரமம் அமைத்து முற்றிலும் இலவசமாகவே அவர்களைப் பராமரிக்க வேண்டும். இதுவே எம் எண்ணம். உற்ற காலத்தில் தெய்வத் திருவருளினால் இது நடைபெற வேண்டும்." என்பதாகும்.

ஆனால் குடில் சுவாமிஜி அவர்கள் திடீரென சமாதியடைந்து விட்டார்கள். அவரது இறுதி விருப்பத்தை நிறைவேற்ற ஒரு இடத்திலாவது அத்தகைய சிறுவர்களுக்காக ஆஸ்ரமம் அமைக்கும் பணியில் ஈடுபட்டோம். சுவாமிஜி

அவர்கள் அவதரித்த ஊரிலேயே ஆஸ்ரமம் அமைக்க திட்டம் இடப்பட்டது. 9 தடவைகள் கெம்பநாயக்கன்பாளையத்திற்கு சென்றோம். தக்க இடத்திற்காக ஊரை பலமுறை வந்து சுற்றிப் பார்த்தோம்.

கெம்பநாயக்கன்பாளையத்தில் சுவாமிஜி அவர்கள் வாழ்ந்திருந்த போது விவசாயிகளின் பாசனவசதிக்காக ஒரு அணை கட்ட வேண்டும் என்று “ பிளான்” போட்டு அன்றைய ஆங்கில அரசுக்கு கொடுத்தார். அதன்பின் சுவாமிஜி அவர்கள் திருப்பராய்த்துறை போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிற்காலத்தில் அவரது பிளானின்படியே பெரும்பள்ளம் என்னுமிடத்தில் அணை கட்டப்பட்டது. அந்த அணைக்கு அருகில் ஒரு ஏக்கரா நிலம் வாங்கப்பட்டது. இப்பூமி ஊரிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

ஆஸ்ரமம் அமைக்க மேற்படி பூமியை புளியம்பட்டி அன்பர் திரு. பி குழந்தைசாமி அவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். 10.06.2002 அன்று ஆஸ்ரமத்தில் 5 தந்தை இல்லாத அனாதைக் குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். கெம்பநாயக்கன்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் இம்மாணவர்கள் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.

ஆஸ்ரம நிர்வாகத்தை பார்த்துக் கொள்ள குடிலிலிருந்து ஆஸ்ரமவாசி அவருக்கு துணையாக மூன்று பயிற்சி மாணவர்களும் இருந்து வருகின்றனர். உள்ளூர் அன்பர்கள் ஐவரும் அவ்வப்போது ஆஸ்ரமத்திற்கு வந்து கவனித்துக் கொள்ளுகின்றனர். அவர்களின் பணி பின்வருமாறு :

1. திரு. கே. ஆர். மாணிக்கம் செட்டியார் :

அறக்கட்டளையின் துணைத்தலைவராகவும் ஆஸ்ரம பிரம்மசாரியுடன் கலந்து தேவைப்பட்ட பணிகளை கவனித்து வருகிறார். வங்கிக் கணக்கையும் பார்த்து வருகின்றார்.

2. முருகனடிமை திரு. டி. பழனிச்சாமி:

அறக்கட்டளையின் செயலாளராகவும் துணைத்தலைவரோடு இணைந்தும் காரியங்களை கவனித்து வருகிறார்.

3. திரு. எஸ். பி. தேவணன் :

துணைத்தலைவரோடு இணைந்து அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குகளை கவனித்து வருகின்றார்.

4. திரு. எஸ். தங்கசாமி :

ஆஸ்ரம விவசாயத்திற்கு தேவையான அனைத்து வேலைகளையும் கவனித்து வருகின்றார்.

5. திரு. ஏ. ஆர். பழனிச்சாமி

ஆஸ்ரம நீர் பைப்புகள், மின்சாரம் அவ்வப்போது தேவை ஏற்படின் இதரவேலைகளையும் இத்தோடு கவனித்து வருகிறார்.

தற்போது கெம்பநாயக்கன்பாளையத்து ஆஸ்ரமத்தில் விவசாயமும், ஐந்து அனாதை மாணவர்களின் பராமரிப்பும் மட்டுமே நடைபெறுகின்றன.

அமரர்குடில் சுவாமிஜி அவர்கள் ஆசியாலும் கெம்பநாயக்கன்பாளையத்து

அன்பர்கள் முயற்சியாலும் உரிய காலத்தில் நினைவாலய கட்டடம் ஆஸ்ரமத்தில் கட்டப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவருள் துணை!

குடில் பணியில்
பிரம்மசாரி துரை

முடிவுரை

தெய்வத்திருமகனாம் தவத்திரு பிரம்மசாரி ராமசுவாமி அடிகளாரின் மகோன்னதமான வாழ்க்கை வரலாறு திருவருளின் துணை கொண்டு எழுதப்பட்டு நிறைவடைந்தது.

ஞானிகளையும் தபோதனர்களையும் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் அவர்கள் கூறிய மொழிகளையும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் பிறர் சொல்லக் கேட்டோ அல்லது அவர்களது வாழ்க்கை சரிதத்தை படித்தோ வந்தோமானால் நம் வாக்கும் மனமும் செம்மையுறும்.

மேலும் மகான்களின் சரித்திரம் அவர்களது மேன்மையை பறைசாற்றும் முகத்தான் மட்டும் எழுதப்படுவதில்லை. அந்த எழுத்துக்களுக்கு மாபெரும் சக்தியுண்டு. அச்சக்தி மனிதனை தேவனாக்கும் ரஸவாத வித்தையை உண்டு பண்ணும். அந்த எழுத்துக்கள் இடையே ஞான போதத்தின் பெரும் தாக்கம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அவற்றை படிக்க படிக்க நம்முள்ளே ஞானதாகம் பெருக்கெடுத்தோடும்.

அவைகள்
நம்மைக் காக்கும்
நம்மை புனிதப்படுத்தும்
நம்மை நெறிப்படுத்தும்
நம்மை தெய்வநிலைக்கு இட்டுச் செல்லும்
ஓம் சாந்தி
ஹரி ஓம் தத் ஸத்

வி. வெங்கடரமணன்
முன்னாள் தலைமை ஆசிரியர்.
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய ஆரம்பப்பள்ளி
ஸ்ரீராமகிருஷ்ண குடில், திருப்பராய்த்துறை.

நன்றி மலர்கள்!

கொங்கு மண்டல மாநகர் கோவை (பெரியார்)
கெம்ம நாயக்கன் பாளையத் துதித்த
உத்தம உன்னத தவப்புதல்வ – நின்
உறுபுகழ் காவியத்தை செந்தமிழ் மக்கள்
உணர்ந்திடும் வகையில் உரை செய்த
திருமால் திருநாமம் பெற்ற – திருவே
வெ. வெங்கட ரமணப் பெரியோய் – நின்
திருப்பாதம் போற்றி நுமக்கு நன்றி

பராய்த் துரைநாதரின் இன்னருளால்
பாரில் சிறந்த பள்ளியாம் – ராம
கிருட்டிண குடில் குருகுலத் தலைவ
நினது முத்தான முகவுரைக்கு
எம் மனமகிழ் நன்றியை நவில்கின்றோம்!

கொங்கு மண்டலச் செம்மல் சி. ஊ
" நஞ்சப்ப" சுவாமிகளின் புதலவரே
முறுவல் பூத்த முகத்தவரே மும்மைப்பயனாய்
"குடில்" சுவாமிகளின் நூலிற்கு
அணிந்துரை நல்கிய அண்ணலே!
நும் பணியைப் போற்றுதும்

செஞ்சொற் புனைமாலை புகழ்மாலை
புனைந்தே புகழ் பரவிடப் – பாரில்
புகழாரம் அளித்த அளவிலா ஆர்வலப்
பெரியோரே! நும் அனைவர்க்கும்
எம் இனிய நன்றியினைப் புகல்கின்றோ மினிதே!

அளவிடற் கரிய பெரியோனின் காதையை
அழகுற அச்சில் வடித்து, வழுவிலா
நூல் ஆக்கிய சி.என். ஆரின் அருந்தவப்
புதல்வ இராசேந்திரா! உமக்கும்
நின் பதிப்பத்தோழர் தமக்கும்
எம் சிரம் தாழ்ந்த நன்றி.

நூல் சிறக்க பல்லாற்றானும் உதவிய பல்லோர்க்கும்
எமை ஒருபொருட்டாய் இப்பணியாற்றிட – ஏவிய
குருவிற்கும் குடில்சுவாமிக்கும் எல்லார்க்கும்
மேலான குருமகராஜின் திருவருளின் கருணைக்கும்
நன்றி! நன்றி! நன்றி மலர்கள்!

என,
திரு. சு. காந்தி எம்.ஏ., பி.எட்., ஆசிரியர்
முன்னாள் குடில் மாணவர்
குடில்நினைவு குரு இல்லம்
காரமடை


5.10.2002

"முத்துச்சிப்பி போலிருங்கள் "


" சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது மழை பெய்து அதில் ஒரு துளி முத்துச்சிப்பியினுள் விழுந்தால் அது முத்தாகுமாம். முத்துச்சிப்பிகளுக்கு இது தெரியும். எனவே சுவாதி நட்சத்திரம் பிரகாசிக்கும் போது அவை நீரின் மேல் பரப்பிற்கு வந்து மழைநீரின் அபூர்வமான அந்தத் துளியைப் பெறுவதற்காக காத்துக் கொண்டிருக்கும். துளி விழுந்தவுடன் தங்கள் ஓடுகளை மூடிக்கொண்டு கடலின் அடித்தளத்திற்கு சென்று விடும். அங்கே பொறுமையாகக் காத்திருந்து அந்தத் துளியை முத்தாக்குமாம். நாமும் அப்படி இருக்க வேண்டும். முதலில் கேட்க வேண்டும். பிறகு புரிந்து கொள்ள வேண்டும். பின்னர் எல்லா சஞ்சலங்களையும் விட்டு புற ஆதிக்கங்கள் எதுவும் வராதவண்ணம் மனத்தை மூடி உங்களுள் உள்ள உண்மையை ஒளிரச் செய்வதில் ஈடுபடுங்கள்.

சுவாமி விவேகானந்தர்.
ஞானதீபம்

பக்கம்	பத்தி-வரி	பிழை	பிழைதிருத்தம்
24	3 - 6	உற்றம்	உற்ற
26	1 - 10	தாசம்	தாசரி
41	கடைசி வரி	எப்பணி	எப்பணியும்
45	4 - 4	ஆஸ்ரம்	ஆஸ்ரமம்
60	1 - 2	தீட்டை	தீட்சை
61	4 - 5	காவ்யத்தை	காவியத்தை
62	4 - கடைசி வரி	சிவவாக்கியர்	சிவவாக்கியார்
70	6 - 2	ஹரசூர்	ஹொசூர்
75	3 - 9	அணுதினமும்	அனுதினமும்
85	1 - 1	உலகு	உலக
117	2 - 1	அன்றை	அன்றைய
127	6 - 1	பட்டணத்து	பட்டினத்து
150	6 -கடைசி வரி	ஆனந்தமயமாயினர்	ஆனந்தமயமாயினார்
178	3 - 9	அதற்கு	அங்கு
197	6 - 1	ஆண்ட	ஆண்டு
206	கடைசி வரி	எண்னை	என்னை
216	4 - 5	கொத்த	கொத்துக்
220	2 - 5	காற்றுப்போக்கி	காற்றுப்போக்கிகள்
268	5 - 2	பிரமசர்ய	பிரமச்சரிய
280	1 - 4	ஏதும்	ஏதம்
309	7 - 1	மண்ணுலகதியே	மண்ணுலகதிலே
314	1 - 5	மண்டடும்	மண்டபமும்
403	கடைசிபத்தி வரி 3	ஒண்ணுமில்லை	ஒன்றுமில்லை
425	கடைசி வரி	உண்மைமணை	உண்மையை



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
குருமகராஜ் திருவுருவத்திற்கு தீபாராதனை



ஆண்டுவிழாவில் குத்து விளக்கேற்றுதல்



கோவை - திருச்சி சாலையில் உள்ள
முகப்பு தோரண வாயில்



சுவாமி நினைவாலயம்.